த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—345

இந்தியப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள்

(முதல் பகுதி)

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்
ச. அன்சர் அலி, எம்.ஏ.,
துணைப் பேராசிரியர், பொருளாதாரத் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—August, 1972

T.N.T.B.S. (C.P.) No. 345

Problems of Indian Economic Development—Part I

S. ANSAR ALI

Price Rs. 8-85

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
VENKATESAN PRESS,
2/65, Broadway, Madras-1.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி - உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக, இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள்–I' என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 345ஆவது வெளியீடாகும். இதுவரை 380 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பாகம் V
தொழிற் பிரச்சினைகள்

பாகம் I

இந்தியப் பொருளாதாரத்தின் அமைப்பு

1. வளர்ச்சி குறைந்த நாடுகளின் தன்மைகள்

பொருளாதார நிலையில் இன்றைய உலகம் வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டதாக விளங்குகிறது. வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளாகிய அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, கானடா போன்ற நாடுகள் எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு பெற்றுப் பொருளாதார வளர்ச்சியில் மேம்பட்டுத் தங்களுடைய வளர்ச்சிகளை நிலையாகப் பேணிக் காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றன. வளர்ச்சியுறு நாடுகளாகிய இந்தியா, பாகிஸ்தான், சிலோன், இந்தோனேஷியா, பர்மா, ஆஃப்ரிக்கா போன்ற நாடுகளில் பொருளாதார வளர்ச்சி தேவையானஅளவு ஏற்படாமல் பொருளாதாரப் பிரச்சினைகள் மேலோங்கி அவற்றை விரைவாகத் தீர்த்துவைக்க அரசு பாடுபட்டு வருகிறது. இந் நாடுகளில் பல பிரச்சினைகள் தோன்றிப் பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்வதால், இப் பிரச்சினைகளின் அளவு, தன்மை ஆகியவைகளை அறிந்து அதற்கேற்பச் சிறந்த கொள்கைகளை அமைத்து அவற்றை அமுல்படுத்துவது அரசின் பணியாக இருந்துவருகிறது. 'பின்தங்கிய,' 'வளர்ச்சி குறைந்த', 'ஏழ்மையான' என்ற சொற்களைஒரே கருத்துடன் கருதிவந்த நிலை மாறி வருகின்றது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு பின்தங்கிய நாடுகள், முன்னேற்றமடைய வேண்டும் என்ற உணர்வோடு பொருளாதாரத் திட்டங்களின் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேற்கொண்டதால், அவைகள் இன்று 'வளர்ச்சி குறைந்த' நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய நாடுகளில் மக்களின் தலா வருமானமும் வாழ்க்கைத் தரமும் மிகக் குறைந்து காணப்படுவதால் இந் நாடுகள் 'ஏழ்மை' நாடுகள் என்றும் அழைக்கப்படலாம். ஆனால், ஒரு வளர்ச்சி குறைந்த

நாட்டின் தெளிவான இலக்கணத்தைத் தீர்மானிப்பது அவ்வளவு எளிதன்று. சில நாடுகள் நிறைந்த இயற்கை வளங்களைப் பெற்றிருந்தும் ஏழ்மை நாடுகளாய் இருக்கலாம். மற்றும் சில நாடுகள் தேவையான அளவு இயற்கை வளங்களைப் பெறாமலும் வளர்ச்சியடைந்த நாடுகளாய் இருக்கின்றன. ஒரு நாடு எந்த அளவு இயற்கை வளத்திலும், மக்கள் தொகையிலும், மூலதனத்திலும் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றதோ அதைப் பொறுத்துத்தான் அதன் பொருளாதார வளர்ச்சியும் மாறும். ஒரு நாடு வளர்ச்சியடைந்த நாடா என்பதை அந் நாட்டு மக்களின் பொருளாதார வாழ்க்கை நிலையைக் குறிக்கும் தலா வருமானத்தைக்கொண்டு அறியலாம். மேலும், அந் நாட்டில் இயற்கை வளங்கள், மூலதனத்திரட்சி, உழைப்பாளர் உற்பத்தித்திறன் போன்றவைகள் எவ்வாறு, எந்த அளவு வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் கண்டறிய வேண்டும்.

விளக்கம்: ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்களின் கருத்துப்படி, 'ஒரு வளர்ச்சி குறைந்த நாடு என்பது, அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, ஆஸ்திரேலியா, மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளின் தலா மெய் வருமானங்களோடு ஒப்பிடும்போது, குறைந்த தலா மெய்வருமானத்தைக் கொண்ட நாடாகும்.'[1] ஆனால், இவ் விளக்கம் ஒரு வளர்ச்சியுறு நாட்டின் எல்லா வகைத் தன்மைகளையும் உள்ளடக்கி விளக்கவில்லை. ஒரு நாடு ஏன் குறைந்த தலா மெய் வருமானத்தைப் பெற்று விளங்குகிறது என்பதற்குத் தகுந்த விளக்கம் இங்குத் தரப்படவில்லை.

இந்தியத் திட்டக் குழுவின் விளக்கத்தின்படி ஒரு வளர்ச்சியுறு நாடு என்பது, 'ஒருபுறம் ஏறக்குறைய பயன்படுத்தப் படாத அல்லதுகுறைந்த அளவில் பயன்படுத்தப்பட்ட மனித சக்தியையும், மற்றொரு புறம் முழு அளவில் பயன்படுத்தப் படாத இயற்கை வளங்களையும்,' குறைந்த முதலாக்க வீதத்தின் காரணத்தால் ஒருமுகமாகப் பெற்றுள்ள நாடாகும். வளர்ச்சியுறு நாடுகளில் மூலதன வளங்களும், தொழிலதிபர்களின் திறமையும், தொழில் நுட்ப அறிவும், தேவையான அளவு இல்லாமையால் இயற்கை வளங்கள் ஓரளவு வீணாகப் பயனற்று இருக்கின்றன.

[1] ஐ. நா. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகள், 1951—பக்கம் 3.

திரு. ஜேகப் வைனர் (Jacob Viner) என்பவரின் கருத்துப் படி, 'பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினை என்பது ஒரு நாட்டின் தலா வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதாரச் செழிப்பையும் பெருக்கி ஏழ்மையை விரட்ட மேற்கொள்ளும் பிரச்சினையா யாகும்'.[2] ஒரு நாடு வளர்ச்சி பெற்று விளங்கு கின்றதா என்பதை அறிய அடிப்படை அளவு கோலாக விளங்குவது சிறப்பான உள்ளார்ந்த வலிமையும், அதிகரிக்கும் மக்கள்தொகையின் உயர்ந்த தலா வருமானத்தை நிலைநாட்டும் தகுதியுமே ஆகும். எனவே, வளர்ச்சியுறு நிலை என்பது குறைந்த தலா வருமானங்களால் ஏற்படக்கூடிய போதாத பொருளாதார நடவடிக்கையாகும்.

நாடுகளின் வகைகள் : பொதுவாக உலக நாடுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். தலா வருமானம் $ 1000-த்திற்கும் அதிகமாகப் பெற்றுள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, சுவிட்சர்லாந்து போன்ற அதிக வளர்ச்சியடைந்த நாடுகள் முதல்வகை நாடுகளாகும். தலா வருமானம் $ 500-க்கும் $ 1000-க்கும் இடைப்பட்டு இருக்கும் இங்கிலாந்து, சுவீடன், டென்மார்க், பெல்ஜியம், ஜெர்மனி, ஃபிரான்சு போன்றவை இரண்டாம் வகை நாடுகளாகும். தலா வருமானம் $ 500-க்கும் குறைந்திருக்கும் இந்தியா உட்பட்ட ஆசியா, ஆஃபிரிக்கா, லத்தீன்அமெரிக்கா போன்ற உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியாக விளங்கும் வளர்ச்சியுறு நாடுகள் மூன்றும் வகையைச் சார்ந்தவைகளாகும். கடைசி வகையைச் சேர்ந்த நாடுகளில் $ 250-க்கும் குறைந்த தலா வருமானமுடைய நாடுகளும் உள்ளன. இத்தகைய நாடுகள் பொருளாதார வளர்ச்சியின் தாழ்ந்த மட்டத்தில் அமைந்து, வறுமையால் அல்லலுற்று வருகின்றன. தலா வருமானம் $ 89-ஐப் பெற்று இந்தியா உலக வறுமை நாடுகளில் ஒன்றுகத் திகழ்கிறது. ஏழ்மை நாடுகள் வளர்ச்சியுறு நிலையில் இருப்பதற்குப் பல காரணங்கள் உள. அவற்றில் சிலவற்றை இனி ஆராய்வோம்.

பேராசிரியர் ஹார்வே லீபென்ஸ்டீன் (Harwey Leibenstein) என்பவர் வளர்ச்சியுறு நாடுகளின் தன்மைகளைப் பொருளாதார வேளாண்மை, மக்கள்தொகை, தொழில் நுட்ப, கலாசார, அரசியல் தன்மைகளின் அடிப்படையில் விளக்குகிறுர். ஆகையால், ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாய் விளங்கு

[2]ஜேகப் வைனர் : 'வளர்ச்சிப் பொருளாதாரம்', 'வளர்ச்சி குறைந்த பிரச்சினையை ஆராய்தல்' பதிப்பு : அகர்வாலும் சிங்கும். 1958 ப. 12.

பவை இக் காரணிகளாகும். எத்தகைய இயல்புகளால் ஒரு நாடு பிற்பட்ட நிலையில் இருக்கும் என்பதை இனி ஆராயலாம்.

1. பொருளாதார இயல்புகள்

வளர்ச்சியுரு நாடுகள் வேளாண்மையையே முக்கியத் தொழிலாகக் கொண்டு வேளாண்மைப் பொருள்களை மட்டும் உற்பத்திசெய்யும் சக்திபெற்றுள்ளன. இந் நாடுகளில் கச்சாப் பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகிய அடிப்படைப் பொருள்கள் உற்பத்தியில் பெரும் பங்கைப் பெற்று விளங்கு கின்றன. விவசாயத் துறையில் அதிக அளவு தொழிலாளர்கள் ஈடுபட்டு, தேசிய வருமானத்தில் பெரும்பகுதியானது வேளாண்மைத் துறையிலிருந்தே அளிக்கப்படுகிறது. ஆசியா, ஆஃபிரிக்கா, மத்தியக் கிழக்கு ஆசிய நாடுகளில் மொத்த மக்கள்தொகையில் 65 சத வீதத்திலிருந்து 80 சத வீத மக்கள் வேளாண்மைத் தொழிலில் இருந்தே வருமானத்தைப் பெற்று வாழ்கிருர்கள். சில வளர்ச்சியுரு நாடுகளில் விவசாயமல்லாத மற்ற முதல்நிலைத் தொழில் துறையை நம்பி வாழவேண்டிய நிலை உள்ளது. இத்தகைய நாடுகளில் உலகத்தின் பெரும் பகுதி கனிப் பொருள்களாகிய அலுமினியம், செம்பு, மங்கனீசியம், குரோமியம், பெட்ரோல் போன்றவைகள் இங்கு அதிகமாகக் கிடைக்கின்றன. பொதுவாக, சில தொழில்களே இருந்த போதிலும், அவைகள் விவசாய மூலப்பொருள்களைப் பயன்படுத்திப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. விவசாயக் கருவிகளையும், துணி வகைகளையுமே பெரும்பாலும் இத் தொழில்கள் உற்பத்தி செய்கின்றன. ஆகையால், வளர்ச்சியுரு நாடுகள் தொழில் துறையில் விரைவான முன்னேற்றம் அடையாமல் வேளாண்மை நாடுகளாகவே இருக்கின்றன. ஆனால், வளர்ச்சியடைந்த விவசாய நாடுகள் தொழில் துறையிலும் பெரிதும் முன்னேறி, தேசிய வருமானத்தைப் பெருக்கி இருக்கின்றன. இதற்கு உதாரணமாக, கானடா, அமெரிக்கா, ரஷ்யா போன்ற முன்னேறிய நாடுகளைக் கூறலாம். இரண்டாவதாக, வளர்ச்சியுரு நாடுகளில் இயற்கை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப் படுகின்றன. வளர்ந்து வரும் நாடுகள் தேவையான அளவு நிலவளம், நீர்வளம், கனிவளம்ஆகியவைகளைப் பெற்றுள்ளன. ஆனால், இப் பொருள்கள்முழுஅளவில் பயன்படுத்தப்படாமலே இருக்கின்றன. இந்நிலைக்குக் காரணங்கள் பல இருப்பினும், மூலதனத் தட்டுப்பாடு, பின்தங்கிய தொழில்நுட்பம், திறமையுடைய தொழிலதிபர்கள் இல்லாமை, விரிந்த அங்காடியின்மை

போன்றவைகளே அடிப்படையாய் அமைகின்றன. மூன்றாவதாக, வளர்ச்சி பெற்று வரும் நாடுகளில் நிரந்தரமான மூலதனப் பற்றுக்குறை இருப்பதால் வளர்ச்சி குறைந்துள்ளது. திரு. ராக்னர் நூர்க்ஸ் (Ragnar Nurkse) ஆராய்ச்சி நூலாகிய 'வளர்ச்சியுறு நாடுகளில் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்' என்ற நூலில் முதல் பற்றுக்குறையையே வளர்ச்சியுறு நிலைக்கு அடிப்படைக் காரணமாகக் கருதுகிறார். இந் நாடுகளில் தலா முதல் (capital percapita) குறைந்திருப்பதால் விவசாயம், தொழில் போன்ற துறைகளில் முதலீடு மிகவும் குறைந்துள்ளது. மூலதன அளவு குறைந்திருப்பதற்கு அடிப்படைக் காரணம் குறைந்த தலா வருவாயும் சேமிப்புமே ஆகும். மிகக் குறைந்த சேமிப்பு இருப்பதால் இந்நாடுகளில் முதலாக்க வீதம் (Rate of capital formation) வருந்தும் அளவுக்குக் குறைவாக உள்ளது. 1954-ல் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய ஏழ்மை நாடுகளில் மொத்த நாட்டு வருவாயில் (Gross National Income) மொத்த முதலீடு (Gross Investment) முறையே 6 சத வீதமும் 7 சத வீதமும் இருந்தது. ஆனால், வளர்ச்சியடைந்தஅமெரிக்கா, கானடா, மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் முதலீடு சுமார் 15 சத வீதத்திலிருந்து 18 சத வீதமாக இருந்தது. வளர்ச்சியுறு நாடுகளில் பொதுவாக முதலாக்க வீதம் சுமார் 5 சத வீதத்திலிருந்து 10 சத வீதம்தான் உள்ளது. ஆனால் வளர்ச்சியடைந்த செல்வ நாடுகளில் அது 15 சத வீதத்திலிருந்து 20 சத வீதம் வரை உள்ளது. சேமிப்பு - வருவாய் விகிதம் (Saving - income ratio) ஏழ்மை நாடுகளில் மிகவும் குறைந்துள்ளது. அது மொத்த நாட்டு வருவாயில் 5 சத வீதம்தான் என்பது வருந்தத்தக்கதாகும். இதன் காரணம், குறைந்த தலா வருவாய், செல்வ ஏற்றத்தாழ்வு, அதிக வரிகள், செல்வ நாட்டு மக்களின் நடை, உடை, பாவனைகளை ஏழ்மை நாட்டு மக்கள் பின்பற்றல் (Demonstration Effect) போன்றவைகளாகும்.

தலா வருவாய் குறைந்திருப்பதால் சேமிப்புக் குறைந்து முதலீடும் உற்பத்தியும் குறைகிறது. உற்பத்தியும் வேலைவாய்ப்பும் குறைவதால் தலா வருவாய் குறைகிறது. தலா வருவாய் குறைவதால் சேமிப்பு, முதலீடு, உற்பத்தி வருமானம் குறைகிறது. இதனால்தான், ஒரு நாடு ஏழ்மை நிலையிலேயே இருக்கிறது. இதைத்தான் ராக்னர் நூர்க்ஸ் 'வறுமை என்னும் நச்சு வளையம்' (Vicious Circle of Poverty) என்று அழைக்கிறார். அவர் கருத்துப்படி, 'சில சக்திகள் மாறி மாறிக் கூட்டாகச் சேர்ந்து ஒன்று மற்றொன்றை வேகப்

படுத்தும் அளவுக்கு செயலாற்றி ஒரு நாட்டை என்றும் ஏழ்மை நிலையிலேயே நிரந்தரமாக இருக்கச் செய்கின்றன.' 'ஒரு நாடு ஏழ்மை நிலையில் இருக்கிறது; ஏனென்றால், அது ஏழையாய் இருக்கிறது.' முதல் அளிப்பு (Supply of Capital), முதல் தேவை (Demand for Capital) ஆகியவற்றில் ஏற்படும் பற்றாக்குறையால், 'வறுமை என்னும் நச்சு வளையம்' ஏற்பட்டு ஏழ்மை நாடுகளை வலுவாகப் பிடித்துள்ளது. இப் பிடியிலிருந்து விடுபட உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும். முழு வேலை நிலை (Full employment) அடைவதற்காக வருமானத்தையும், சேமிப்பையும் முதலாக்க வீதத்தையும் முதலீட்டின் அளவையும் பெருக்க வேண்டும். நான்காவதாக, ஏழ்மை நாடுகள், இரட்டைப் பொருளாதார நாடுகள் (Dualistic Economy) எனலாம். இந் நாடுகளில் இரண்டு துறைகள் உள்ளன. அவைகளாவன: (i) சந்தை (Market Sector) (ii) பிழைப்பு (Subsistence - Sector) சந்தைத் துறை நகர்ப் புறங்களில் உள்ளது. பிழைப்புத் (Subsistence) துறை கிராமப் புறங்களில் இருக்கிறது. சந்தைகள் ஓரளவுக்கு விஞ்ஞான அடிப்படையில் அமைக்கப்பட்டும், நிர்வகிக்கப் பட்டும் வளர்ந்துள்ளன. ஆனால், பெரும்பாலோருக்கு வருமானம் அளிக்கும் பிழைப்புத் துறை இன்னும் வளர்ச்சி யுறாமலும் தகுந்த மாற்றமடையாமலும் பிற்பட்ட நிலையிலேயே இருந்துவருகிறது. ஏழ்மையான விவசாய நாடுகளில் வேளாண்மையே பிழைப்புத்துறையாக இருந்துவருகிறது. ஐந்தாவதாக, பழைமையான விவசாயப் பொருள்களையே பெரும் பாலான பிற்பட்ட நாடுகள் உற்பத்தி செய்வதால், நுகர்வு முதல் பொருள்களுக்கு அயல்நாடுகளையே நம்பி இருக்கும் நிலை உள்ளது. ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியில் தான் இந் நாடுகளின் பொருளாதார நிலை அமைந்துள்ளது இந் நாடுகளில் ஒரு பொருளோ அல்லது ஒருவகை அடிப் படைப் பொருளோ ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, சில கச்சாப் பொருள்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பெரும்பாலான நாடுகளில் ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியின் அளவு அதிகமாகவே உள்ளது. மேலும், இந் நாடுகளின் மொத்த நாட்டு வருவாயில் ஏற்றுமதி யால் பெற்ற வருவாய் அதிகமாகும். ஏற்றுமதி உற்பத்தித் துறையிலேயே அயல்நாட்டு மூலதனமும் சென்று சுழல்கிறது. அயல் நாட்டவர்கள் தங்கள் தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களைப் பெற, பிற்பட்ட நாடுகளின் வேளாண்மை போன்ற துறைகளில் முதலீடு செய்கின்றனர்.

இதனால், பிற்பட்ட நாடுகள் செய்பொருள்களை இறக்குமதி செய்து கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால், ஏழ்மை நாடு தொழில் மயமாக்கப்படுவது தடுக்கப்படுகிறது. வளர்ச்சியுறு நாடுகள் முதல் பொருள்கள், (Capital goods) துணி வகைகள், நுகர்வுப் பொருள்கள் உணவுப் பொருள்கள், நடுத்தர நிலைப் பொருட்கள் போன்ற வற்றை இறக்குமதி செய்துதான் உயிர் வாழ வேண்டிய நிலையில் உள்ளன. இதன் விளைவாக, இந் நாடுகளில் பாதக செலுத்து நிலை (Adverse Balance of Payments) நெடுங்கால மாகத் தொடர்ந்து இருந்துவருகிறது, ஆனால், ஏற்றுமதி செய்யும் முற்பட்ட நாடுகளுக்குச் சாதக வாணிப மாற்று வீதமும் (Terms of trade) பன்னாட்டு வாணிபத்தால் லாபமும் கிடைக்கிறது.

ஆறாவதாக, ஏழ்மை நாடுகளில் பணச் சந்தையானது (Money market) ஒருங்கமைக்கப்படாமலும் வளர்ச்சியடையாம லும் இருந்துவருகிறது. பொதுவாகப் பணச் சந்தை இரு வகை களாகப் பிரிந்துள்ளது. (i) மத்திய வங்கி, வணிக வங்கிகள், மற்ற நிதி நிறுவகங்களைக் கொண்டு சீராக்கப்பட்ட ஒருங்க மைந்த சந்தை (Organised market) முதல் வகையாகும். (ii) சுதேசி வங்கிகள், வட்டிக்கடன் கொடுப்போர் ஆகியோரைக் கொண்ட ஒருங்கமையாத சந்தை (Unorganised market) இரண்டாம் வகையாகும். மேலும், முதல் சந்தையும் (Capital market) பிற்பட்ட நாடுகளில் வளர்ச்சியுறு நிலையிலேயே இருந்து வருகிறது.

இறுதியாக, இந் நாடுகள் பிற்பட்ட பொருளாதார நிலையில் உள்ளன. பால் ஹாஃப்மேன் (Paul Hoffman) இந் நாடுகளின் ஏழ்மை நிலையைக் கீழ்க்கண்ட வரிகளில் படம் பிடித்துக் காட்டுகிறார். 'நகரங்களில் பிச்சைக்காரர்களைக் கொண்டும், கிராமங்களில் மிகக் குறைந்த வருமானத்தைப் பெறுபவர்களைக் கொண்டும் ஏழ்மையால் வாடும் தன்மை கொண்டவை வளர்ச்சியுறு நாடுகள். தேவையான அளவு மின்சக்தி இன்றி, தங்களுக்கென்று ஆலைகளும் இல்லாமல் இருக்கும் நாடுகள். பிற்பட்ட தொடர்புதுறை, குறைந்த அரசு பணிகள் ஆகியவற்றை அவைகள் பெற்றுள்ளன. இந் நாடுகளில் மிகக் குறைந்த வசதிகொண்ட மருத்துவ மனைகளும், உயர்கல்வி நிலையங்களும் உள்ளன. இந் நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு எழுதப் படிக்கத் தெரியாது.' பிற்பட்ட பொருளாதார, சமுதாய நிலை ஏற்படுவதற்குப் பல

காரணங்கள் உள்ளன. குறைந்த உற்பத்தித் திறன், பெயர்ச்சி விரும்பாக் காரணிகள், தொழில், வாணிபம் போன்றவற்றில் சிறப்புத் தேர்ச்சி (Specialisation) குறைந்திருத்தல், தொழில்களைச் சீரமைக்கும் திறனும் நவீனப்படுத்துதலும் குன்றியிருத்தல், பொருளாதார, தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறையில் மக்களின் அறியாமை போன்றவைகளில் பொருளாதார பிற்பட்ட நிலை பிரதிபலிக்கின்றது. இந் நாட்டு மக்கள் அறிவுத்தரம் குறைந்து, கல்வியறிவும் போதாத நிலையில் உள்ளனர். மக்கள் பழைமைக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர்களாயும், மாறு மத நம்பிக்கை கொண்டவர்களாயும் உள்ளனர். ஏழையாய்ப் பிறந்து ஏழையாகவே இருக்க வேண்டுமென்ற கொள்கைகளைக் கொண்ட 'கர்மாக் கோட்பாட்டில்' முழு நம்பிக்கை யுடையவர்களாயும் உள்ளனர். வீணாய்க் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்த வாய்ப்புகளைப் பெருக்கத் தெரியாத மக்களாய் உள்ளனர். பிற்பட்ட நாடுகளில் அமைந்துள்ள சமூக முறைகள் பெரும்பாலும் எந்தவிதப் பொருளாதார மாற்றத்திற்கும் பெருந்தடையாய் அமைந்துள்ளன. பொதுவாக, இந் நாடுகளில் தொழிலை அமைத்துத் திறமையுடன் நிர்வகிக்கும் ஆற்றலுடைய தொழிலதிபர்கள் குறைவு. பொருளாதாரக் குறிக்கோள்களைச் சாதிக்க அரசு அமுலாக்கும் பணவழி, வருமானவழி மற்றும் பொதுக்கொள்கைகள் பலனுள்ளவைகளாக இல்லை.

2. வேளாண்மை இயல்புகள்

வளர்ச்சி குறைந்த நாடுகளின் விவசாயத் தொழில்திறமை குறைந்துதேக்க நிலையில் உள்ளது. இந் நாடுகளில் விவசாயத்தில் பெரும்பான்மையானவர்கள் ஈடுபட்டுள்ளனர். உதாரணமாக, இந்தியாவில் 70சத வீத மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பிலிப்பைன்ஸ் நாட்டில் 69 சத வீத மக்களும், மலேசியாவில் 64 சத வீத மக்களும், சிலோனில் 53 சத வீத மக்களும், எகிப்தில் 65 சதவீத மக்களும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மொத்தத் தேசிய வருவாயில் தொழில், வாணிபம் போன்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருவாயைக் காட்டிலும் விவசாயத் துறையிலிருந்து கிடைக்கும் வருவாய் அதிகமாகவே இருக்கிறது. எடுத்துக் காட்டாக, இந்தியாவில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 50 சத வீதத்திற்கு மேல் விவசாயத் துறையிலிருந்துதான் வருமானம் கிடைக்கிறது. பிலிப்பைன்ஸ் நாட்டின் மொத்த வருவாயில் 42 சத வீதம் விவசாயத்திலிருந்துதான் கிடைக்

கிறது. இந்தோனேஷியாவின் மொத்த நாட்டு வருவாயில் 56 சத வீதம் விவசாய நடவடிக்கைகளால்தான் கிடைக்கிறது.

ஆனால், விவசாயத்தில்ஈடுபட்டுள்ளவர்களின்எண்ணிக்கையையும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் மதிப்பையும் கணக்கிட்டால் வேளாண்மைத்துறையின் அளிப்பு குறைவாகவே உள்ளது. இந்தியாவில் விவசாயத்தில் 70 சத வீத மக்கள் ஈடுபட்டிருந்தாலும் அதிலிருந்து கிடைக்கும் வருமானம் நாட்டின் மொத்த உற்பத்தியில் 50 சத வீதம்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். விவசாயத் துறையில் ஒரு விவசாயியின் உற்பத்தி மற்றத் துறைகளைவிடக் குறைவாக இருப்பதால் தான், வேளாண்மைத்துறையில் பெரும்பாலோர் ஈடுபட்டிருந்தும் குறைந்த வருவாய் கிடைக்கிறது. பிற்பட்ட நாடுகளின் பிரதான இயல்பு வேளாண்மைத்துறையில் மிகக் குறைந்த உற்பத்தித்திறனைக் கொண்டிருப்பதாகும். அதனால்தான், பேராசிரியர் J. K. கால்பிரெய்த் என்பவரும் ‘முற்றிலும் வேளாண்மையையே பிரதான தொழிலாகக்கொண்ட நாடு முன்னேற்றமே இன்றிப் போய்விடுகிறது’ என்று குறிப்பிடுகிறார். வேளாண்மைத்துறையே முக்கியத் தொழிலாக இருக்கும் நாடுகளால் தொழில்நுட்பச் சாதனங்களைப் பெருக்க இயலாது. ஆனால், தொழில்மய மேற்பட்டுள்ள நாடுகளில் தொழில்நுட்ப முறைகளையும் சாதனங்களையும் அதிகமாக உண்டாக்க முடியும் என்பதைப் பொருளியல் அறிஞர் குன்னர் மிர்டால் (Gunnar Myrdal) வலியுறுத்துகிறார். பிற்பட்ட நாடுகளில் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்வதிலும் மிகக் குறைந்த திறமைதான் உள்ளது. இதனால் உற்பத்திச் செலவு அதிகரித்து மூலப் பொருள்களின் விலையும் அதிகரிக்கிறது. எனவே, பிற்பட்ட நாடுகளின் விவசாயப் பொருள்கள்கூட முன்னேறிய நாடுகளின் விவசாயப் பொருள்களோடு போட்டியிடச் சக்தியின்றிப் போய் விடுகின்றன. இது பரிதாபத்துக்குரிய நிலையாகும்.

பிற்பட்ட நாடுகளில் விவசாயிகள் பொதுவாகக் கல்வியறிவு இன்றி, பழைமை நோக்குடையவர்களாய், பணி செய்யும் சக்தியின்றி, எதிர்கால நோக்கும் இன்றி, திறமை குறைந்து காணப்படுகின்றனர். தலைமுறைக்குத் தலைமுறை மக்கள்தொகைப் பெருக்கத்தால் கிணற்றிலிருந்து பூதம் கிளம்புவதுபோல நிலப் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. நிலம் பல பகுதிகளாகத் துண்டாகி, பல இடங்களில் அமைந்து விடுவதால் சிக்கனமற்ற நில உடைமைகள்(Uneconomic holdings) தோன்றி விஞ்ஞானத் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தியைத்

திறனுடன் அதிகரிக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. சீரான நீர்ப்பாசன வசதிகள், போக்குவரத்து வசதிகள், பல வேறு வகை உரங்கள், கிருமி நாசினிகள், பொறுக்கு விதைகள் நிதி வசதிகள், முதலீடு போன்றவைகளில் பற்ருக்குறை இருக்கின்ற காரணத்தால் பிற்பட்ட நாடுகளில் வேளாண்மை உற்பத்தி குறைவாக இருக்கிறது. இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் ஒரு குடும்பத்தின் நில உடைமை சுமார் ஓர் ஏக்கர் அளவில்தான் அமைந்துள்ளது. இந் நாடுகளில் பருவ கால மழை தவருமல் பெய்யும் காலங்களில் உற்பத்தியின் அளவு அதிகரிப்பது இயல்பாய் உள்ளது. நிதி வசதி போதுமானதாக இல்லாததால் பயிரிடத்தக்க நிலம் முழுவதும் பயன்படுத்தப் படாமல் வீணடிக்கப்படுகிறது. சில பிற்பட்ட நாடுகளில் 'உருமறைந்த வேலையின்மை' (Disguised unemployment) கிராமப்புறங்களில் காணப்படுகிறது. உருமறைந்த வேலையின்மை என்பது, வேளாண்மைத்துறையில் சிலர் வேலை செய்வதுபோல் காணப்பட்டாலும், உண்மையில் அவர்கள் வேலையின்றி மற்றவர்கள் உற்பத்தியினுல் வாழ்க்கை நடத்துவதைத்தான் உணர்த்துகிறது. ஏனெனில், அந்த ஒரு சிலரைச் சுலபமாய் வேளாண்மைத் துறையிலிருந்து நீக்கி வேறு தொழில்களில் ஈடுபடச் செய்தாலும் உணவுத் தானியங்களின் உற்பத்தி சிறிதும் குறைவதில்லை.

பேராசிரியர் லீபென்ஸ்டீன் (Leibenstein) வளர்ச்சியுரு நாடுகளில் வேளாண்மைத்துறையின் தனித்தன்மைகளைக் கீழ்க்கண்டவாறு வருணிக்கிருர்:

1. விவசாய நிலத்தில் குறைந்த முதல் முதலீடு செய்யப்படுகிறது.

2. ஏராளமான சிறிய நில உடைமைகள் இருப்பதால் சிக்கனமற்ற முறையில் முதல் பயன்படுத்தப்படுகிறது.

3. விவசாயக் கருவிகள், மற்றும் சாதனங்கள் குறைந்த அளவிலும் பிற்பட்ட நிலையிலும் இருப்பதால், வேளாண்மை உற்பத்தி முறை மிகவும் கீழ்த்தரமான நிலையிலேயே இருந்து வருகிறது.

4. வருமானக் குறைவால் உள்நாட்டிலேயே உறுதித் தேவை குறைந்திருப்பதாலும் போதிய போக்குவரத்து வசதிகள் இன்மையாலும் நவீன முறையில் வேளாண்மைப்

பொருள்கள் சந்தையில் சீராக விற்கப்படுவதில்லை. அயல்நாடுகளுக்கு உணவுப்பொருள்களை ஏற்றுமதி செய்வதற்காக மட்டும் சில பிற்பட்ட நாடுகளில் வேளாண்மைத் துறையில் ஒரு பகுதி நவீனப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, வேளாண்மை இயந்திரமயமும், ரசாயன மயமும், சீரமைப்பும் செய்யப்படாமலேயே உள்ளது.

5. சிறிய நிலக்கிழார்களும், விவசாயிகளும் வேளாண்மைத் துறையில் ஒரு சிறிய நெருக்கடி ஏற்பட்டாலும் சமாளிக்கச் சக்தியற்று இருக்கிருர்கள். இருக்கும் சிறிய அளவு நிலத்தை ‘ஆழ உழும்’ முறைப்படி (Intensive cultivation) சாகுபடி செய்து விளைச்சலை அதிகரிக்க முயல்வதால் நிலம் தன் சக்தியை இழந்துவிடுகிறது.

6. விவசாயிகளின் வறுமை நிலையால் கடன் எல்லை கடந்து அதிகரித்து அவர்கள் துன்பப்படுகிருர்கள்.

7. பிற்பட்ட நாடுகளில் கிராமப்புறச் சூழ்நிலைஉற்பத்திக்கு ஊக்கம் தருவதாக இல்லை. இப் பகுதிகளில் விவசாயிகள் கல்வியறிவு இன்றி அறியாமை, மூடநம்பிக்கை, பழைமைநோக்கு, பிற்பட்ட பழக்க வழக்கங்கள், ஜாதிமுறை, கூட்டுக்குடும்பமுறை போன்ற பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் அமைப்புகளைப் பெற்றுள்ளனர். விவசாயிகள் பொருளாதார முன்னேற்றத்தில் தீவிரமாக அக்கறை கொண்டவர்களாக இல்லை.

8. பிற்பட்ட நாடுகளில்திறமையில்லாப் பழைமைத் தன்மையுடைய உற்பத்தி முறை இருப்பதால், உற்பத்தி செய்யப்பட்ட உணவுத் தானியங்கள் உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்தபின், மிகக் குறைந்த அளவே விற்பனை எச்சமாகச் (Marketable Surplus) சந்தைக்கு வருகிறது.

9. நிதி வசதி, விற்பனை வசதி (Marketing Facilities) போன்ற பணிகள் பிற்பட்ட நாடுகளில் போதாத நிலையில் உள்ளன. சிறிதளவு வசதிகள் இருந்தாலும், அவைகளைத் தேவையான அளவு குறைந்த செலவில் பெற இயலவில்லை.

10. நிலத்தில் பயிரிடுவதற்காக அதிகமான அளவு நிலம் தேவைப்படுகிறது. எனவே, நிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. நிலத்தை உழுபவன் நிலத்தின் உரிமையாளனுக இல்லாததால், வேளாண்மை உற்பத்திக்குத்

தேவையான ஊக்கம் ஏற்படுவதில்லை. அதன் விளைவாக, வேளாண்மைத்துறையில் உற்பத்தித்திறன் குறைந்துள்ளது.

3. மக்கள்தொகைச் சுமையின் இயல்புகள்

பிற்பட்ட நாடுகளை விரைவான பொருளாதார வளர்ச்சி பெற விடாமல் தடுப்பது மிதமிஞ்சிய மக்கள்தொகைப் பெருக்கமேயாகும். மக்கள்தொகை வளர்ச்சியை எண்ணித் துயரடைந்த தாமஸ் ராபர்ட் மால்தஸின் கருத்துகள் இந்தியா போன்ற ஏழ்மை நாடுகளுக்குத் தற்போது சரியாகப் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. பொதுவாகப் பிற்பட்ட நாடுகளில் மக்கள்தொகையின் பெருக்கத்தின் வீதம் ஆண்டுக்கு 2·0 சத வீதத்திற்கு மேற்பட்டே காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 1971–ல் இந்தியாவில் மக்கள்தொகை வளர்ச்சி விதம் ஆண்டுக்கு 2·5 சத வீதமாக உயர்ந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வேளாண்மைத் துறை வளர்ச்சி விதம் ஆண்டுக்கு ஒரு சத வீதத்திற்கு மேல் சற்று அதிகமான நிலையில்தான் உள்ளது. இந்தியா போன்ற ஏழ்மை நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் 15 வயதிற்கும் குறைந்தவர்களின் எண்ணிக்கை வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. பொதுவாக, ஆசியா, ஆஃப்ரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள நாடுகளில் 15 வயதிற்குக் குறைந்தவர்கள் மொத்த மக்கள் தொகையில் 40 சத வீதமாவர். ஆனால், வளர்ந்த நாடுகளாகிய ஐக்கிய அமெரிக்காவில் 25 சத வீதமும், இங்கிலாந்தில் 23 சத வீதமும்தான் உள்ளனர். அதே போன்று பிற்பட்ட நாடுகளில் மக்கள் வாழும் சராசரி வாழ்நாள் குறைந்து காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, எகிப்திலும், இந்தியாவிலும் முறையே சராசரி வயது 35 ஆண்டுகளும் 45 ஆண்டுகளும் ஆகும். ஆனால், வளர்ச்சி பெற்ற நாடுகளாகிய ஐக்கிய நாடுகளில் சராசரி வாழ்நாள் 66 ஆண்டுகளாகவும், இங்கிலாந்தில் 67 ஆண்டுகளாகவும் அமைந்துள்ளது. இதனால், பிற்பட்ட நாடுகளில் ஏராளமான மக்கள் பிறரை நம்பி வாழவேண்டிய நிலை உள்ளது. இதனால், பொருளாதார வளர்ச்சி தடையுறுகிறது. பிற்பட்ட நாடுகளில் மக்கள் தொகையின் விரைவான வளர்ச்சியால் வேலையின்மையும், வேலைக் குறைவும், உருமறைந்த வேலையின்மையும் அதிகரித்து வருகிறது. இத்தகைய நாடுகளில் ஏராளமான எச்ச மனித சக்தி வீணடிக்கப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் அறிக்கை ஒன்றில் இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ்,

இந்தோனேசியா போன்ற நாடுகளில் 20 முதல் 25 சதவிதம் வரைக்கும் எச்ச மக்கள்தொகை வேளாண்மைத்துறையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் லீபென்ஸ்டீன் (Leibenstein) என்பவர் பிற்பட்ட நாடுகளில் காணப்படும் மக்கள்தொகையின் இயல்புகளைக் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளார்.

(1) 1000-க்கு 40 பேருக்கு மேலாக ஏழ்மை நாடுகளில் பிறப்பு விதம் அமைந்துள்ளது.

(2) அதிகமான இறப்பு விதமும், குறைந்த வாழ்நாளும் இந்நாடுகளில் காணப்படுகிறது.

(3) போதாத சத்துணவும், உண்ணும் உணவு பல குறைகளைக் கொண்டதுமாக உள்ளது.

(4) அடிப்படை உடல் நலம், சுகாதாரம் போன்றவைகள் மிகவும் குறைவாக உள்ளன.

(5) கிராமப்புறங்களில் நெருக்கடி அதிகமாகக் காணப்படுகின்றது. பிற்பட்ட நாடுகளில் பலவகைப்பட்ட மக்கள் தொகை இயல்புகள் காணப்படுகின்றன. இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் மிதமிஞ்சிய மக்கள்தொகைப் பெருக்கத்தால் சிலர் துன்பப்படுகின்றனர். ஆனால், உலகிலுள்ள எல்லாப் பிற்பட்ட நாடுகளிலும் எச்ச மக்கள் தொகையோ அல்லது மக்கட் செறிவோ காணப்படவில்லை. லிபியா (Libya) போன்ற பிற்பட்ட நாடுகளில் குறைந்த மக்களே வாழ்கின்றனர். அமெரிக்காவில் ஒரு சதுரமைலுக்கு 20 பேர் வசிக்கின்றனர். ஆனால், வளர்ச்சியுறு நாடுகளாகிய லிபியாவில் ஒரு சதுர மைலுக்கு 1-ம், மலேசியாவில் 7-ம், எகிப்தில் 24-ம், பர்மாவில் 29-ம், பிலிப்பைன்ஸில் 74-ம் மக்கள் செறிவின் நிலையை உணர்த்துகின்றன. மக்கட் செறிவு சில பிற்பட்ட நாடுகளாகிய இந்தியாவில் 384-ம், சிலோனில் 136-ம் தைவானில் 257-ம் காணப்படுகின்றது. மக்கள் தொகையின் வளர்ச்சி விதமும் பிற்பட்ட நாடுகளுக்குள்ளேயே வேறுபடுகிறது. எனவே, அதிகமான மக்கள்தொகை வளர்ச்சி விதத்தின் அடிப்படையில் பின்தங்கிய நாடுகளை வேறுபடுத்த இயலாது. சில ஆசிய நாடுகளில் அதிகமான மக்கள் செறிவு இருக்கிறது. ஆனால், கானடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருக்கும் மக்கள்தொகை வளர்ச்சி விதத்தைவிட ஆசிய நாடுகளில் குறைவாகவே உள்ளது.

மக்கள்தொகை இயல் அறிஞர்கள் (Demographers). மக்கள்தொகை வளர்ச்சியை மூன்று கட்டங்களாகப் பிரித்துள்ளனர்.

1. குறைந்த மக்கள்தொகை வளர்ச்சியுடைய கட்டம்

2. அதிக மக்கள்தொகை வளர்ச்சியைக் கொண்ட நிலை

3. மாறும் நிலை உடைய கட்டம்.

ஐரோப்பாவும், வட அமெரிக்காவும் இறப்பு வீதம் குறைவாகப் பெற்றிருப்பதால், குறைந்த மக்கள்தொகை வளர்ச்சி கொண்ட வகையைச் சார்ந்த நாடுகளாகும். ஆசியாவிலுள்ள நாடுகளும், ஆஃப்பிரிக்காவும் அதிகமான மக்கள்தொகை வளர்ச்சியைப் பெற்றுள்ளன. ரஷ்யா, கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இறப்பு வீதம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே செல்வதால் மூன்றும் வகையாகிய மக்கள்தொகையில் மாற்றம் ஏற்படும் கட்டத்தில் அமைந்துள்ளன. இம் மூன்று வகைகளில் இந்தியா அதிகமான மக்கள்தொகை வளர்ச்சி வளங்களைக் கொண்ட நாடாகும். ஏனெனில், மக்கள்தொகை வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 2·5 சத வீதமாக அதிகரித்து வருகிறது. இந்தியா போன்ற பிற்பட்ட நாடுகளில் பிறப்பு வீதம் அதிகமாகவும், இறப்பு வீதம் குறைந்து கொண்டேயும் செல்கிறது. இதன் விளைவாக, அதிகமான பிறப்பு வீதத்திற்கும் குறைந்து வரும் இறப்பு வீதத்திற்கும் இடைப்பட்ட இடைவெளி அதிகரிப்பதால், மக்கள்தொகையின் அழுத்தம் அதிகமாகிறது. இத்தகைய நாடுகளில் மனித வளங்களின் திறனும், தரமும் மிகவும் குறைந்து காணப்படுகிறது. ஏனெனில், மருத்துவக் கண்காணிப்பு, கல்வி வசதி போன்றவைகள் மிகவும் குறைந்து காணப்படுகின்றன. மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவு இல்லாதவர்கள். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் கல்வி அறிவு இல்லாதவர்கள் 70 சத வீதத்திற்கு மேலும், இந்தோனேசியாவில் 92 சத வீதத்திற்கு மேலும், எகிப்தில் 75 சத வீதத்திற்கு மேலும் உள்ளனர். இப் பகுதிகளில் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் கிராமப் பகுதிகளிலேயே வாழ்ந்து வருகின்றூர்கள். தொழில்மயம், பொருளாதார வளர்ச்சி ஆகியவைகளின் அளவுகோலாக அமைவது நகரமயமாகும். பிற்பட்ட நாடுகளில் நகரமயம் உகந்த அளவு ஏற்படவில்லை. உதாரணமாக, இந்தியாவில் 80 சத வீதத்திற்கு மேல் தற்போது கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகிறூர்கள்.

மேலும், 1901-ல் 11 சத விதமாய் இருந்த நகர மக்கள்தொகை 1971-ல் 19·87 சத விதமாக உயர்ந்தது. மக்கள்தொகையைக் குறைக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் பிற்பட்ட நாடுகளில் சிறந்த பலன் கிட்டுவதில்லை. சில சமயங்களில் விவசாயத்தில் உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித்திறன் (Marginal productivity of Labour) பூஜ்யமாக இருக்கிறது.

4. கலாச்சார அரசியல் தன்மைகள்

தற்போதைய ஏழ்மை நாடுகளில் பெரும்பாலானவைகள் சமீப காலம் வரை, அரசியல் சுதந்திரம் இன்றி அயல் நாட்டவரால் ஆளப்பட்டு வந்தன. எனவே, இத்தகைய பிற்பட்ட நாடுகள், தொழில் மயமும், வேளாண்மை முன்னேற்றமும் சுய முயற்சியோடு அதிக அளவில் பெற இயலவில்லை. ஏனெனில், ஆட்சி நடாத்தி வந்த அயல் நாட்டினர் தங்கள் தாய்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப்பொருள்கள் போன்றவற்றை, ஏழ்மை நாடுகளிலிருந்து தாய்நாட்டிற்கு ஏற்றுமதி செய்தனர். இதன் விளைவாக, உள்நாட்டில் தொழில் வளர்ச்சி தோன்ற வசதியும் வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது, அரும்பாடுபட்டு பலரது அயராத முயற்சியால் அரசியல் சுதந்திரம் பெற்றபின், பொருளாதார சுதந்திரம் பெறுவதற்காகப் பிற்பட்ட நாடுகள் சமூக, கலாச்சார, பொருளாதார அமைப்புகளுடன்தொடர்ந்து போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் கூட்டுக் குடும்ப முறை, ஜாதிமுறை, மதநம்பிக்கை, மூடப்பழக்க வழக்கங்கள் சமுதாய விலக்குகள், (Social taboos) போன்ற பிற்பட்ட சமுதாய அமைப்புக்கள் காணப்படுகின்றன. இதன் விளைவாக, பொருளாதார வளர்ச்சி மேலோங்காமல் தடைப்பட்டு வளர்ச்சி விதம் குறைகிறது. பெரும்பாலான ஏழ்மை நாடுகளில் திறமையும், செயல் ஆற்றலும், கல்வி அறிவும் கொண்ட நடுத்தர வகுப்பு சிறப்பாக வளராததால், சமுதாய, கலாச்சார, பொருளாதார, அரசியல் துறைகளில் முன்னேற்றம் தடை பெற்றுள்ளது. பிற்பட்ட நாடுகளில் குடும்ப வருமானப் பற்றுக்குறையால், குழந்தைகளும் உழைக்க வேண்டிய சூழ்நிலை சர்வசாதாரணமாக உள்ளது. சத்துள்ள உணவும், சுகாதார வசதிகளும் மக்களுக்கு வேண்டிய அளவு கிடைப்பதில்லை. சமுதாயத்தில் பெண்களுக்கும் ஆண்களைப் போல, சம அந்தஸ்தோ உரிமைகளோ வழங்கப்படவில்லை.

5. தொழில்நுட்ப இயல்புகள்

பிற்பட்ட நாடுகளில் மிகப் பழமையான தொழில் நுட்ப முறைகளே வேளாண்மையிலும், மற்றத் துறைகளிலும் உற்பத்தி அதிகரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியா போன்ற பிற்பட்ட நாடுகளில் உணவு தானிய விளைச்சல் ஓர் ஏக்கருக்கு மிகவும் குறைவாக உள்ளது. முக்கியமாக, திறமையானதொழில் அதிபர்களின் தட்டுப்பாடு மிகவும் அதிகமாகக் காணப் படுகிறது. ஊக்கமும், செயலும், ஆற்றலும் மிக்க ஏராளமான தொழில் அதிபர்களை ஏழ்மை நாடுகளில் காண்பது அரிதாகும். வர்த்தகம் செய்யும் வகுப்பைச் சார்ந்தவர்கள் அதிகமாக இருந்தாலும், தொழில் அமைப்பைச் சீர்படுத்தும் வகுப்பைச் சார்ந்தவர்கள் மிகக் குறைவு. தொழிலாளர்களின் பெயர்ச்சியும் உற்பத்தித் திறனும் இந்நாடுகளில் மிகக் குறைவு. முக்கியமாக, மானிட மூலதனம் (Human Capital) பிற்பட்ட நாடுகளில் மிகக் குறைவாகும். தொழிலாளர்களின் குறைந்த ஆக்கத் திறமையால் உற்பத்தியின் அளவும் குறைந்துள்ளது. முதல் தட்டுப்பாட்டின் காரணத்தால் உழைப்பு-செறிவு முறைகளே (Labour-intensive methods) உற்பத்தியில் பெரும்பாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இந்நாடுகளில் பணஅங்காடிகள் சீராக அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படாததால் பணமானது உற்பத்தி முறைகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்படவில்லை. வங்கிகள், மற்றும் நவீன நிதி நிறுவனங்கள் இந்நாடுகளில் சிறப்பான வளர்ச்சியை அடையவில்லை. தொழில் வல்லுநர்களை யும், பொறியியல் வல்லுநர்களையும் உருவாக்க அவசியமான பயிற்சி வசதிகள் போதாத நிலையில்தான் உள்ளன. இறுதியாக, வளர்ச்சியுறாத நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக இருந்து வருவது போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நீர்ப்பாசன வசதி போன்ற சாதனங்களில் காணப்படும் பற்றாக்குறையே ஆகும்.

முடிவுரை : மேற்கூறிய தன்மைகளும் அமைப்பும் பெற்றுள்ள நாடுகள் வளர்ச்சியுறாப் பகுதிகள் என்று வர்ணிக் கப்படலாம். வளர்ச்சியடையாத ஒரு நாடு பொருளாதார அமைப்போடு தொடர்பில்லாத கலை, மதம், தத்துவம் அல்லது சீரான சமுதாய அமைப்பு போன்றவைகளில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருக்கலாம். எனவே, வளர்ச்சியுறா நிலை என்பது பொருளாதார, தொழில் நுட்ப சாதனைகளில் காணப்படும் குறைவையே புலப்படுத்துகிறது. வேறு எந்தச் சாதனையையும் தன்மைகளையும் குறிக்கவில்லை. சீனா, இந்தியா

போன்ற சில வளர்ச்சியுறு நாடுகள் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பிருந்தே பண்பட்ட கலாச்சாரங்களையும் உன்னத மான நாகரிகத்தையும் பெற்று விளங்குகின்றன. பொருள் சார்ந்த வளர்ச்சிக் கருத்தைத்தான் வளர்ச்சியுறு நாடுகள் என்ற சொல்லின் மூலமாக உணர்த்த வேண்டியுள்ளது. வளர்ச்சியுறு நாடுகளில் காணப்படும் மேற்குறிப்பிட்ட தொடர்புகளைத் தகர்த்தெறிய பொருளாதார, சமூக, அரசியல், தொழில் நுட்ப மாற்றங்கள் புரட்சிகரமாகத் தோன்றினு லொழிய, இந்நாடுகள் அதிவிரைவான பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க இயலாது. எல்லாத் துறைகளிலும் தன்னிறைவையும், நிலையான வளர்ச்சியையும் பெற இந்நாடுகள் சீரான பொருளாதார, சமூக, அரசியல் கொள்கைகளைத் துணிவோடும் திறமையோடும் செயல்படுத்த வேண்டும்.

2. இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை இயல்புகள்

இந்தியா ஒரு வளர்ச்சியடையாத நாடு என்பது வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது அறியப்படும் உண்மை. இந்திய மக்களில் பெரும்பாலோர் இன்னும் வறுமையிலேயே வாடி வருகின்றனர். திட்டமிட்டு ஏறக்குறைய இருபது ஆண்டுகள் ஆகியும், நாட்டைவிட்டு வறுமைப்பிணி அகன்றபாடில்லை. பயன்படுத்தப்படாத இயற்கை வளங்களுக்கு மத்தியில், மக்கள் ஏழ்மை நிலையில் நெடுங்காலமாக "இருந்து" வருகின்றனர். உலகிலுள்ள வளர்ச்சியடையாத நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதைக் கீழ்க்காணும் இந்தியப் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த அடிப்படைத் தன்மைகளி லிருந்து தெளிவாக அறியலாம்.

1. குறைந்த தலா வருவாய்

உலகிலுள்ள நாடுகளில் உகண்டா, பர்மா ஆகிய இரு நாடுகளைத்தவிர மற்ற எல்லா நாடுகளின் தலா வருவாயைக் காட்டிலும் இந்தியத் தலா வருவாய் மிகக் குறைவாய் உள்ளது. இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம் மிகப் பிற்பட்ட நிலையிலேயே இருந்து வருகிறது. 1968-69-ல் இந்தியாவின் தலா வருவாய் ரூ. 542 ஆக இருந்தது என்று மத்திய அரசின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இங்கிலாந்து நாட்டின் தலா வருவாயோடு ஒப்பிட்டால் இது சுமார் பதினெட்டில் ஒரு பகுதியாகும். ஐக்கிய அமெரிக்கா, கானடா ஆகிய நாடுகளின் தலா வருவாய் இந்தியாவின் தலா வருவாயைக் காட்டிலும் முறையே சுமார் 32 மடங்கும், 20 மடங்கும் அதிகமாக உள்ளது. வளர்ச்சியடையா நாடுகளின் இடையில் இந்தியாவின் தலா வருவாய் மிகக் குறைந்து உள்ளது. அது இஸ்ரேலின் தலா வருவாயில் எட்டில் ஒரு பகுதியாகவும் ஐக்கிய அரேபியாவின்

தலா வருவாயில் மூன்றில் ஒரு பகுதியாகவும், சிலோனின் தலா வருவாயில் இரண்டில் ஒரு பகுதியாகவும் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளின் தலா வருவாய் ஒப்பீட்டிற்காகக் கீழே தரப்பட்டுள்ளது.

1965 ல் சில நாடுகளின் தலா வருவாய் அமெரிக்க டாலர்களில்

ஐக்கிய அமெரிக்க நாடுகள்	2893
சுவிட்ஜர்லாந்து	1942
கானடா	1831
டென்மார்க்	1638
மேற்கு ஜெர்மனி	1510
ஜப்பான்	696
ஐக்கிய அரபுக் குடியரசு	199
சிலோன்	129
இந்தியா	89

2. வேளாண்மைப் பொருள் உற்பத்தி

இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாய் உள்ளது. மொத்த மக்கள்தொகையில் 70 சத வீதத்திற்கு மேல் வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், வேளாண்மைத்துறையில் அமெரிக்காவின் மொத்த மக்கள்தொகையில் 12 சத வீதமும், இங்கிலாந்தில் 5 சத வீதம் மட்டுமே ஈடுபட்டிருந்தும் அந்நாடுகளில் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து உள்ளது. இந்தியாவில் வேளாண்மைத்துறையில் ஒரு நபரின் உற்பத்தித்திறன் மிகவும் குறைந்துள்ளது. விவசாய நாடாகிய இந்தியாவே வேளாண்மைத்துறையில் மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பது பெரிய முரண்பாடாகும். இந்தியா வளர்ச்சியடையாப் பொருளாதாரமாக இருந்து வருவதற்கு வேளாண்மையின் பிற்பட்ட நிலையேதான் அடிப்படைக் காரணம். கடந்த சில ஆண்டுகளாக இந்திய மக்கட் தொகையின் மித மிஞ்சிய பெருக்கத்தால் நிலத்தில் மக்கட் தொகையின் அழுத்தம் பெரிதும் அதிகரித்து விட்டது. நிலம் - உழைப்பு விகிதம் அதிகமாய் இருப்பதாலும், நிலங்கள் உட்பிரிவுபடுத்தப்படுதல், துண்டாடப்படுதல் ஆகியவைகளால் நிலத்தின் அளவு குறைந்து விடுவதாலும், இயந்திரங்கள், கருவிகள் போன்றவைகளைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க இயல வில்லை. விவசாயி ஏழையாயும், கல்வியறிவில்லாமலும் இருப்பதால் டிராக்டர்கள்,

ரசாயன உரங்கள் ஆகிய நவீன உள்ளீடுகளைப் பயன் படுத்த இயலாமல், இன்னும் பழைமையான உற்பத்தி முறைகளே வேளாண்மையில் பிரபலமாய்ப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. எனவேதான், பேராசிரியர் கால்பிரெய்த்தும் “விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்ட நாடு அதன் விவசாயத்துறையிலேயே கூட முன்னேற்றமின்றிப் போய்விடும் நிலை ஏற்படுகிறது” என்று கூறியுள்ளார்.

ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து கிடைக்கும் சராசரி உற்பத்தி இந்தியாவில் மிகக் குறைந்து உள்ளது. உலகிலுள்ள சில வேளாண்மை நாடுகளில் இருக்கும் சில உணவுப் பொருட்களில் விளைச்சலில் மூன்றில் ஒரு பகுதியிலிருந்து நான்கில் ஒரு பகுதிதான் இந்தியாவில் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து கிடைக்கிறது. இந்தியாவில் ஒரு நபர் வேளாண்மை உற்பத்தி நியூஜிலாந்தில் இருக்கும் வேளாண்மை உற்பத்தியைவிட 34 மடங்கும், இங்கிலாந்தில் இருப்பதைவிட 20 மடங்கும், ஜப்பானில் இருப்பதைவிட 22 மடங்கும் குறைந்துள்ளது. இந்திய விவசாயிகளின் தலா வருமானம் ரூ. 500 ஆக மட்டும் இருக்கும்போது, சுரங்கத் தொழிலிலும், இருப்புப்பாதையிலும் பணி புரிபவர்கள் முறையே ரூ. 1700-ம் ரூ. 1600-ம் பெறுகின்றனர்.

வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களின் பணியின் அளவைவிட, அத்துறையிலிருந்து கிடைக்கும் வருமானம் குறைந்துள்ளது என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

1965-ல் தொழில்வாரியான மொத்த தேசிய உற்பத்தி

நாடு	வேளாண்மை, காட்டுத் தொழில் மீன் பிடித்தல் ஆகியவைகளில் உற்பத்தி (சத வீதங்களில்)	தொழிற்சாலைகளின் உற்பத்தி
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	... 3	... 30
இங்கிலாந்து	... 4	... 36
கானடா	... 6	... 26
பிரேசில்	... 28	... 26
இந்தியா	... 49	... 19
நைஜீரியா	... 65	... 8

மொத்த தேசிய வருவாயில் சுமார் பாதி வேளாண்மைத் துறையிலிருந்து கிடைப்பதால், இந்தியா வேளாண்மைத் தொழில் நாடு என்பது வெள்ளிடை மலையாகும். இந்திய வேளாண்மைத்துறையில் பத்தில் எழுவர் பணிபுரிந்தும் ஒரு நபர் உற்பத்தி மிகவும் குறைந்திருப்பதால், லாபமும் குறைந்து, பற்றுக்குறைத் தொழிலாகவே அது இருந்து வருகிறது. இயற்கையான, தொழிநுட்ப, பொருளாதார, சமூக அமைப்பு முறை, நிறுவன, நிர்வாக முட்டுக்கட்டைகளினால் இந்திய நிலவளங்கள் உத்தம அளவில் பயன்படுத்தப்படவில்லை.

3. அதிக மக்கள்தொகைப் பெருக்கம்

சைனாவுக்கு அடுத்த படியாக, இந்தியா உலகிலேயே இரண்டாவது அதிக மக்கள் தொகையையும் மக்கள் தொகையின் வளர்ச்சி வீதத்தையும் பெற்றுள்ளது. இன்று இந்தியாவில் இருந்துவரும் பொருளாதாரப் பிரச்சினைகளில் மக்கள்தொகைப் பிரச்சினையே தீவிரமானதாக உள்ளது. ஏனெனில், இதனால் தான் நாட்டில் வேலையின்மையும், வேலைக் குறைவும், ஏராளமானவர்கள் பிறரை நம்பி வாழ வேண்டிய நிலையும், உணவுப் பிரச்சினையும், பண வீக்கமும், நிலத்தின் மேல் அதிக அழுத்தமும், பொருளாதார வளர்ச்சியின் மேல் பெருஞ் சுமையும் ஏற்பட்டுள்ளது. மொத்த மக்கள்தொகையில் 70 சதவீதத்திற்கு மேல் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்தும், அதிகமான மக்கள்தொகை எழுச்சியால் இந்தியா உணவு தானியங்களில் இன்னும் தன்னிறைவு அடைய இயலாமல் தீவிரமான திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. 1951-ல் 362 மில்லியனாக இருந்த இந்திய மக்களின் எண்ணிக்கை 1961-ல் 439 மில்லியனாக அதிகரித்து 1971-ல் 547 மில்லியனாகப் பெருகி உள்ளது. இந்தியாவில் பிறப்பு வீதம் அதிகமாயிருப்பதாலும் இறப்பு வீதம் குறைந்து வருவதாலும் மக்கள்தொகை எண்ணிக்கை அதிகமாக உள்ளது. மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1941-க்கும் 1950-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆண்டுக்கு சராசரி 1·25 சத வீதமாக இருந்தது. ஆனால் 1961-க்கும் 1971-க்கும் இடைப்பட்ட காலத்தில் அது 2·5 சதவீதமாக அதிகரித்தது. 1911—20-க்கும் இடைப்பட்ட காலத்தில் இறப்பு வீதம் 1000 பேருக்கு 49 பேராக இருந்தது. 1961-க்கும் 1965-க்கும் இடைப்பட்ட காலத்தில் 1000 பேருக்கு 17 பேராகக் குறைந்தது. இத்தகைய மக்கள்தொகை வளர்ச்சியால், நாட்டில் வறுமை நீங்கா இடம் பெற்று உள்ளது.

அமெரிக்கா போன்ற அயல் நாடுகளிலிருந்து உணவு தானியங்கள் ஏராளமான அளவில் இறக்குமதி செய்யா திருந்தால் அநேக ஏழை மக்கள் பட்டினியால் வாடி வதங்கி இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். மக்கள் தொகையின் அழுத்தம் நிலத்தில் அதிகமாக இருப்பதால், மிகுதியான மனித சக்தி கிராம வேலையின்மையினாலும், உருமறைந்த வேலையின்மையினாலும் அவதிப்பட வேண்டிய நிலை உள்ளது. இதனால் வேளாண்மைத்துறை மந்த நிலையிலே இருக்கவேண்டியுள்ளது. அதிகரிக்கும் மக்களின் எண்ணிக்கையால், திட்டங்களின் மூலம் அதிகமாகும் உற்பத்திப் பொருட்கள் காலி செய்யப்பட்டு விடுவதால் நாடு முன்னேற்றமின்றிப் பிற்பட்ட பொருளாதார நிலையிலேயே இருக்கிறது.

4. வேலையின்மையும் வேலைக்குறைவும்

இந்தியப் பொருளாதாரத்தில் தீராத சிக்கலாய் விளங்குவது வேலையில்லாத் திண்டாட்டமாகும். மக்கள்தொகையின் மிதமிஞ்சிய வளர்ச்சியால் நாட்டில் எச்ச உழைப்பு அதிகமாகி மக்கள் லாபகரமான வேலை வாய்ப்புகளைப் பெற இயல வில்லை. மூன்றும் திட்ட காலத்தில் 17 மில்லியன் மக்கள் புதிதாக வேலை தேடி அலைந்தனர். திட்ட காலங்களில் ஏற்படும் வேலை வாய்ப்புகளின் அளவைவிட, வயது வந்து வேலைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் வேலையின்மை ஏற்படுகிறது. கிராமப் பகுதிகளில் உரு மறைந்த வேலையின்மை (Disguised unemployment) 25 முதல் 30 சத வீதம் இருப்பதாகக் கூறப்படுகிறது. வேளாண்மைத் துறையில் பணி புரிபவர்களின் இறுதி நிலை உற்பத்தி மிகக் குறைந்தோ, பூஜ்யமாகவோ, அல்லது கழித்துக் காண வேண்டியதாகவோ உள்ளது. எனவே, வேளாண்மைத்துறையில் ஏராளமான தொழிலாளர்கள் தேவைக்கும் அதிகமாகவே உள்ளனர். உபரி தொழிலாளர்களை வேளாண்மையிலிருந்து வேறு துறைகளுக்கு மாற்றம் செய்தால் வேளாண்மைத்தொழிலில் உற்பத்தி குறைவதில்லை. அத்தகைய "எச்சத் தொழிலாளர்கள்" இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக உள்ளனர்.

5. மூலதனப் பற்றுக்குறை

இந்தியப் பொருளாதாரத்தின் மற்றொரு அடிப்படை இயல்பு நெடுங்காலமாய் இருந்து வரும் முதல் பற்றுக்குறையாகும். முதல் பற்றுக்குறையின் ஆழமான வேராக இருப்பது சேமிப்புத்

தட்டுப்பாடாகும். இந்திய மக்களின் சேமிப்பு ஏற்கனவே குறைந்திருக்கக்காரணம்குறைந்ததலாவருவாயாகும். மக்களின் எண்ணிக்கைஅதிகரிக்கஅதிகரிக்கசேமிப்புகுறைகிறது. சேமிப்பு குறைவதால் முதலாக்கமும் (Capital Formation) குறைகிறது. இந்தியாவில் சேமிக்கும் சக்தியும் நாட்டமும் குறைந்திருப்பதாலும், முதலீடு செய்ய மக்களுக்கு ஊக்கமில்லாததாலும் முதலாக்கம் குறைந்துள்ளது. குறைந்த தலா வருமானத்தால், அதிக இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் இருப்பதால், இந்தியாவில் இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (Marginal Propensity to save) குறைவாய் உள்ளது. பொதுவாக, குறைந்த வருமானத்தால் பொருள்களின் தேவை குறைந்து, அங்காடியின் அளவு குறைந்து காணப்படுகிறது. இதனால், முதலீட்டிற்குத் தேவையான ஊக்கம் குறைந்து உற்பத்தியும் வேலை வாய்ப்பும் குறைகிறது. வேலை வாய்ப்பு குறைவதால், வருமானமும் சேமிப்பும் குறைகிறது. எனவே, இந்தியாவில் முதல் பற்றுக் குறையால், வறுமையின் வட்டத்திற்குள் (Vicious Circle of Poverty) மக்கள் சுழன்று வருகின்றனர். மேலும், எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவதுபோல், செயல் காட்சியின் விளைவால் (Demonstration Effect) ஏற்படும் போகத்தர நுகர்ச்சியால் (Conspicuous consumption) சில பணக்காரர்களால் இந்திய முதல் வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. 1954-ல் இந்திய மொத்த தேசிய வருமானத்தில் 6 சத வீதம்தான் முதலீடு செய்யப்பட்டது. மக்களின் வருமானங்கள் அதிகமானாலும், அதற்கேற்ப இந்தியாவில் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. இந்தியாவில் சராசரியாக ஒரு நபரின் முதல், (Capital per head) நடப்பு முதலாக்க வீதம் (Current rate of Capital Formation) ஆகியவைகள் குறைந்திருப்பதால், அயல்நாட்டு மூலதன வரவை எதிர்பார்த்து, ஐந்தாண்டுத் திட்டங்களின் முதலீட்டைத் தீர்மானிக்க வேண்டிய நிலை உள்ளது. தேவையான அளவு அயல்நாட்டு முதல் வராத பட்சத்தில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி தடைப்படுகிறது. 1965-ல் முதலாக்க வீதம் மொத்த தேசிய வருவாயில் 14 சத வீதமாக இந்தியாவில் இருந்தது. ஆனால், ஜப்பானில் 33 சத வீதமாகவும், கானடாவில் 27 சத வீதமாகவும் அமெரிக்காவில் 18 சத வீதமாகவும் இங்கிலாந்தில் 19 சத வீதமாகவும் இருந்தது. மொத்த முதலாக்க வீதம் இந்தியா போன்ற ஏழ்மை நாடுகளில் குறைவாகவும் ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அதிகமாகவும் இருப்பதைக் கீழ்க்கண்ட "உலகப் பொருளாதாரக் கணக்கீட்டி"லிருந்து அறியலாம்.

நாடுகளின் மொத்த உள்நாட்டு முதலாக்கம்

	மொ. தேசிய உற்பத்தியில் முதலாக்க சத வீதம் 1950	1965
1. ஜப்பான்	24	33
2. ஆஸ்திரேலியா	29	30
3. கானடா	25	27
4. யூ. எஸ். ஏ.	21	18
5. யூ. கே.	11	19
6. பாகிஸ்தான்	...	17
7. இந்தியா	5	14

பேராசிரியர் கோலின் கிளார்க் (Colin Clark), ஆண்டு ஒன்றுக்கு மக்கள்தொகை அதிகரிப்பு வீதம் ஒரு சத வீதமாக இருந்தால், நிலையான வாழ்க்கைத்தரத்தை நிலைநாட்ட ஒரு நாடு ஆண்டு ஒன்றுக்கு 4 சத வீதம் அதிகமாக முதலீடு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிருர். இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு மக்கள்தொகை அதிகரிப்பு 2·5 சத வீதமாக இருப்பதால் மக்கள்தொகை வளர்ச்சியினுல் அதிகரிக்கும் சுமைகளை நாடு சமாளிக்க ஆண்டுக்கு 10% முதலீடு தேவைப்படுகிறது. எனவே, இந்தியா போன்ற ஏழ்மை நாடுகளில் தேய்வுமானம் போன்றவைகளை, சரிகட்டி நிலையான வாழ்க்கைத் தரத்தைச் சாதிக்க மொத்த முதலாக்கத்தில் 16 சத வீதமாவது முதலீடு செய்யப்பட வேண்டும். மேலும், அதிகமான பொருளாதார வளர்ச்சியைப்பெற இதைவிட அதிகமான முதலாக்கம் தேவை. பொருளாதார வளர்ச்சிக்கும் நாடு தொழில்மயம் ஆவதற்கும் அடிக்கல்லாக அமையக்கூடிய முதலுக்கு இந்தியாவில் பற்ருக் குறை இருப்பதால், இந்தியா வளர்ச்சியடையாத பொருளாதாரமாக இருந்துவருகிறது.

6. மனித மூலதனத்தின் இயல்பு

இந்தியப் பொருளாதாரத்தின் வெளிப்படையான தன்மையில் மனித மூலதனத்தின் குறைந்த தரமும் ஒன்ருகும். இந்திய

மக்களில் பெரும்பாலோர் திறமையும், வலிமையும் செயலாற்றலும் குறைந்தவர்களாய்இருப்பதால் பிற்பட்ட பொருளாதார நிலையிலே இருந்து வருகின்றனர். இதையேதான், திறமை குறைந்த தன்மையுடைய மனித மூலதனம் (Poor Quality of Human Capital) என்கின்றோம். மனித வளங்களை அதிக தரமுடையவைகளாக்க ஒரு நாடு அதிகப் பணத்தை முதலீடு செய்யவேண்டியுள்ளது. எனவே தான், இந்திய அரசு, மனித மூலதனத்தின் திறமையை அதிகப்படுத்த ஏராளமான பணத்தைக் கல்வி, பொதுச் சுகாதாரம், சமுதாய காப்பீடு, சமூகப் பணிகள், சமுதாய நலன் போன்றவைகளில் முதலீடு செய்து வருகிறது. பொதுவாக, இந்தியாவிலுள்ள மக்கள் குறைந்த தொழில் திறன், தேர்ச்சியடையாமை, பொருளாதார அறியாமை, கல்லாமை, பழைமை நோக்கு, சோர்ந்த மனப் பான்மை, மூடப் பழக்க வழக்கங்கள், கூட்டுக் குடும்ப முறை போன்ற இயல்புகளைப் பெற்றிருப்பது வெளிப்படையாகும். இவைகள் இந்தியா பிற்பட்ட நிலையில் இருப்பதற்கான அறிகுறிகள். 1961-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்திய மக்களில் 24 சதவீத மக்கள் கற்றவர்களாக இருந்தனர். ஆனால், கானடா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் கற்றவர்களின் எண்ணிக்கை மொத்த மக்களில் 95 சத வீதத்திற்கு மேல் என்பது குறிப்பிடத்தக்கது. 1971-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் கற்றவர்கள், 29·35 சத வீதம் என்றும், கல்லாதவர்கள் 70 சத வீதத்திற்கும் அதிகம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 70% மக்களுக்கு மேல் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருப்பதால், அவர்கள் வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்ப முறைகளில் ஏற்படும் முன்னேற்றங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிவதில்லை. இதனால், நாட்டில் தொழில் திறன் ஆக்கம் (Skill Formation) குறைவாய் உள்ளது. இது பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கிறது. இந்தியக் கல்விக் குழுவின் 1964—66-ன் அறிக்கையின்படி இந்திய அரசு கல்வி வளர்ச்சிக்காக, சராசரியாக, ஆண்டு ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ. 15 செலவு செய்கின்றது. இது மொத்த இந்திய தேசிய வருமானத்தின் 3 சத வீதம் ஆகும். ஆனால், அமெரிக்காவில் மொத்த தேசிய வருவாயில் 10 சத வீதம் கல்வி வளர்ச்சிக்காக அரசு செலவு செய்கிறது. இது ஆண்டுக்கு ஒரு நபருக்கு ரூ. 2000 ஆகும். இதிலிருந்து இந்திய மக்கள் அறிவு வளர்ச்சியிலும் பிற்பட்ட நிலையில் இருப்பதை அறியலாம்.

7. பிற்பட்ட தொழில்நுட்ப முறைகள்

இந்தியாவில் பிற்பட்ட தொழில் உற்பத்தி முறைகளோடு கூடவே, நவீன முறைகளும் கையாளப்பட்டு வருகின்றன. விவசாயம், தொழில் போன்ற துறைகளில் பின்பற்றப்படும் உற்பத்திமுறை மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பதால்தான், இந்தியா ஏழ்மை நாடுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. வளர்ந்த நாடுகளில் தொழில்நுணுக்க மேம்பாட்டினால் ஆக்கத்திறன் உயர்ந்துள்ளது. இந்தியாவிலுள்ள சிறு தொழில்களில் உற்பத்தி முறைகளும், கருவிகளும் மிகவும் தொன்மையானவைகளாக இருப்பதால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வருவாயும் வாழ்க்கைத் தரமும் மிகவும் குறைந்துள்ளது. மூலதனத் தட்டுப்பாட்டினாலும், மக்களின் பொருளாதார அறியாமையாலும் இந்தியாவின் பெரிய தொழில்களின் வளர்ச்சி குறைந்துள்ளது. குறைந்த தொழில் நுட்ப முறைகளின் விளைவால்இந்தியாவில் வேளாண்மையிலும் தொழில் துறையிலும் ஒரு நபரின் சராசரி உற்பத்தியின் அளவு குறைந்துள்ளது. இந்தியாவில் தேவையான அளவு திறமையும், செயலாற்றலும் கொண்ட தொழிலதிபர்கள் மிகக் குறைவு. தொழிலதிபர்களின் திறனும், வசதிகளும் மிகக் குறைந்துள்ளதால் இந்தியாவில் பொருள் உற்பத்தி சிக்கனம் இல்லாமலும் தரம் குன்றியும் உள்ளது. பொருளாதார முன்னேற்றம் அடைந்த நாடுகளில் சிக்கனமான தரமுள்ள உற்பத்தி ஏற்படுவதற்கு அந்நாடுகள் பின்பற்றும் மேம்பட்ட தொழில் நுட்ப உற்பத்தி முறையே முக்கிய காரணமாகும். உலக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் இந்தியா போன்ற நாடுகளில் நவீன தொழில் நுட்ப உற்பத்தி முறைகள் மேற்கொள்ளப்பட்டாலும், மக்களின் பிற்பட்ட சமூக, பொருளாதார ஸ்தாபன அமைப்புக்களால் சிறந்த பலன் கிட்டுவதில்லை. எனவே, இந்தியாவின் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு இது ஒரு தடையாகும்.

8. அமைப்பு குறைந்த பொருளாதாரம்

இந்தியப் பொருளாதாரம் அமைப்பற்ற, அறிவியல் கருத்துகளோடு ஒவ்வாத பெரும் வேளாண்மைத்துறையைப் பெற்றுள்ளது. நவீன வங்கி முறைகள் இந்தியாவில் இன்னும் சிறப்பான முறையில் வளர்ச்சியடையவில்லை. இந்தியாவில் இன்னும் சில பகுதிகளில் பண்டமாற்றுமுறை பின்பற்றப்பட்டு வருவதால், பணப்புழக்கமற்ற துறை கிராமப்புறங்களில் இருந்து

வருகிறது. தற்காலத்திய பொருளாதார வளர்ச்சிக்கு அது பெருந்தடையாய் அமைகிறது. ஏனெனில், மத்திய வங்கியின் பொருளாதாரக் கொள்கைகளை அமுலாக்கினால் தகுந்த பயன் கிட்டாது. இந்திய பணச்சந்தையில் இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுக்கோப்பிற்குள் வராத சில நிதி அமைப்புக்கள் இருந்து வருகின்றன. நாட்டு வங்கிகள் மூலம் கடன் கொடுப்பவர்கள், (Indegenous Bankers) கிராமங்களிலும். நகரங்களிலும் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (Money-lenders) போன்றவர்களைச் சீராகக் கட்டுப்படுத்த முடியாமையால், இந்திய ரிசர்வ் வங்கியின் பணவழிக் கொள்கை(Monetary Policy)சிறந்த பயனை அளிப்பதில்லை.

பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத சில நிறுவனங்கள் இந்தியாவில் ஏற்படாமலோ அல்லது போதுமான அளவில் தோன்றாமலோ இருப்பது இந்தியாவின் பிற்பட்ட நிதித்துறை நடவடிக்கைகளை உணர்த்துகிறது. மாதிரியாக, நம் நாட்டின் பெரும்பாலான கிராமப் பகுதிகளில், முதலாக்கத்திற்கும், மற்ற உற்பத்தி, வர்த்தக நடவடிக்கை களுக்கும் அடிப்படை வேராக அமையும் சேமிப்பை, வேண்டிய அளவு சேகரிக்க, நிதி நிறுவனங்கள் இன்னும் பரவலாகத் தோன்றவில்லை. பொதுவாக, இந்திய மக்களின் சேமிப்பையும், குறிப்பாக, கிராம மக்களின் சேமிப்புத் திறனையும் ஊக்குவித்து அதிகரிக்கச் செய்ய, வசதியான வகையில் வங்கிகள் அதிக அளவில் ஆரம்பிக்கப்படவில்லை. குறுகிய, நடுத்தர, நீண்ட கால நிதி உதவி விவசாயிகளுக்கு உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான அளவு வங்கிகளிலிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் கிட்டாததால், அவர்கள் லேவாதேவிக்காரர்களை நாடித் துயரடைகின்றனர். வேளாண்மைத் துறையில், ஏராளமான தலத்திலில்லா நிலக்கிழார்கள் (Absentee land lord) வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க அக்கரை கொள்வதில்லை. மேலும், குடியானவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கை அளிக்காமல் அவர்கள் அபகரித்துக் கொள்ளுகின்றனர். இதனால் நாட்டில் வருமானம் சமூக அந்தஸ்து ஆகியவைகளில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது.

இந்திய மூலதனச் சந்தை(Indian Capital Market)யிலிருந்து பெரிய தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நீண்டகால, மத்தியகால கடன் வசதிகள் தகுந்த காலங்களில் கிடைப்ப தில்லை. அதற்கு வசதியாகத் தொழில் நிதி நிறுவனங்கள் (Industrial Finance Institutions) இந்தியாவில் பரவலாக அதிகரிக்கவில்லை.

இந்தியாவின் நிர்வாகத்துறை, மற்ற முன்னேறிய நாடுகளோடு ஒப்பிடும்போது திறமை குறைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. கடமை உணர்வும், நேர்மையும், திறமையும், துணிவும் கொண்ட நிர்வாகத் துறைதான் நாடு வளர்ச்சியடையும்போது குறுக்கே நிற்கும் தடைகளையும், இடர்களையும் தகர்த்தெறிய முடியும். இந்திய நிர்வாகத்தைச் சீரமைக்கப் பல முயற்சிகள் எடுக்கப்படுவது இந்தியப் பொருளாதார அமைப்பின் குறைகளை உணர்த்துகிறது.

சுருங்கக்கூறின், பொருளாதார, சமூக, விஞ்ஞான, தொழில் நுட்ப, அரசியல் துறைகளில் இந்தியா பிற்பட்ட நிலையில் இருக்கிறது. மற்ற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்தியா எத்தனை ஆண்டுகள் பிற்பட்டுள்ளது என்பதைப் "பொருளாதார, அறிவியல், ஆராய்ச்சி நிறுவனம்" (Economic and Scientific Research Foundation) மதிப்பிடப் பட்டுள்ளது. அதன்படி (1) இந்தியா 1967-ல் பிரேசிலுக்கு 20 ஆண்டுகள் பின்தங்கியிருந்தது. (2) இந்தியா 1967-ல் ஜப்பானுக்கு 44 ஆண்டுகள் பின்தங்கி இருந்தது. (3) இந்தியா 1948-ல் இங்கிலாந்துக்கு 47 ஆண்டுகள் பின்தங்கி யிருந்தது. (4) இந்தியா 1948-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 55 ஆண்டுகள் பின்தங்கியிருந்தது.

முடிவுரை

மேற்கூறியவற்றிலிருந்து இந்தியா பிற்பட்ட பொருளாதாரத்தின் ஏறக்குறைய எல்லாவகை அடிப்படை இயல்புகளையுந் தன்னகத்தே பெற்றிருக்கின்றதென்பது தெளிவாய் அறியலாம். அரசின் துணிவான முற்போக்குப் பொருளாதாரத் திட்டங்களாலும் இந்திய மக்களின் அயராத உழைப்பாலும், ஒத்துழைப்பாலும் தான், நாடு மேற்கொண்டு விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும்.

3. இந்தியா ஒரு வளர்ந்து வரும் பொருளாதாரம்

இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சியடையாப் பொருளாதாரத்துக்குரிய எல்லாத் தன்மைகளையும் பெற்றிருந்தாலும், வளர்ச்சியடையாமல் ஒரே நிலையில் தேங்கி இருக்கும் பொருளாதாரமாக இல்லை. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் முடங்கிக் கிடந்த இந்தியப் பொருளாதாரத்தைப் பின் தங்கிய பொருளாதாரம், (Backward economy) எனலாம். ஆனால், நாடு விடுதலையடைந்த பிறகு பொருளாதார வளர்ச்சிக்கான சக்திகள் தலைதூக்கத் தொடங்கின. ஆனால், இந்தியப் பொருளாதார வளர்ச்சியை வளர்ந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியோடு ஒப்பிட்டால் இந்தியா வளர்ச்சி குறைந்த பொருளாதாரம் (under-developed economy) எனலாம். 1951-ம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் இந்தியா அடைந்து வரும் பொருளாதார முன்னேற்றத்தால் "வளர்கின்ற பொருளாதாரம்" (developing economy) என்றும் அழைக்கலாம். இந்தியா வளர்ச்சியடையாப் பொருளாதாரத்தின் இயல்புகளைக் கொண்டிருந்தாலும் அது ஒரு வளர்ந்து வரும் பொருளாதாரம் என்பதை, கீழ் வரும் உண்மைகள் தெளிவாய் வர்ணிக்கின்றன. P. T. பாயர் (Bayer) இந்தியா மிகவும் ஏழ்மை நாடாக இருந்த போதிலும், கடந்த சில 10 ஆண்டுகளில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றது. பொருளாதாரத்தின் சில துறைகளில் மிகவும் விரைவான முன்னேற்றம் காணப்படுகின்றது," என்று கூறியுள்ளார். இந்தியா எந்தெந்தத் துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதைக் கடந்த இருபது ஆண்டுகளில் இந்தியா பெற்ற பொருளாதார வளர்ச்சியிலிருந்து அறியலாம்.

1. **தேசிய வருவாய் வளர்ச்சி**: கடந்த பதினைந்து ஆண்டுகள் அமுலாக்கப்பட்ட திட்டங்களால் இந்தியாவின்

தேசிய வருவாய் சுமார் 70 சத வீதம் ஆக அதிகரித்தது. இது சராசரி ஆண்டு ஒன்றுக்கு 5 சத வீதம் தேசிய வருமான வளர்ச்சியைக் குறிக்கின்றது. தலா வருவாயும் 1950—51-ல் ரூ. 256·5 லிருந்து 1968-69-ல் ரூ. 546 ஆக உயர்ந்துள்ளது.

2. **முதலீடு அதிகரிப்பு**: தேசிய வருவாயின் பெருக்கத் திற்கேற்ப முதலீடு விகிதமும் திட்ட காலத்தில் அதிகரித் துள்ளது. 1950-51 ல் நாட்டு வருவாயில் 6·5 சத வீதம் சேமிக்கப்பட்டது. இது 1961—62-ல் 9·5 சத வீதமாகக் கூடி யுள்ளது. முதலீடு தேசிய வருவாயில் 1950-51-ல் 5·6 சதவீத மாக இருந்தது, 1962—63-ல் 12·7 சத வீதமாக உயர்ந்தது.

3. **வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு**: வேளாண்மைத் துறை சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சிறப்பான மாற்றத்தைப் பெற்று வருகின்றது. உற்பத்தி முறைகளில் மாற்றங்கள் படிப்படியாகக் காணப்படுகின்றன. தேவையான அளவு அதிக விளைச்சல் தரும் விதைகளையும் இரசாயன உரங் களையும் அளிக்க அரசு முயன்று வருகின்றது. பொதுவாக, பசுமைப் புரட்சி வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது. 1950—51-ல் வேளாண்மை உற்பத்தியின் (எல்லாப் பொருட்களின்) குறிப்பெண் 95·6 ஆக இருந்தது, 1964—65-ல் 157·6 ஆக உயர்ந்தது. எனவே, வேளாண்மை உற்பத்தியில் 62 சத வீத உயர்வு ஏற்பட்டது.

4, **நவீன வேளாண்மை முறை**: திட்ட காலத்தில் இந்திய விவசாய உற்பத்தி முறை நவீனப்படுத்தப்பட்டது. நீர்ப்பாசனம், பலவகை இரசாயன உரங்கள், டிராக்டர்கள், சீரான வேளாண்மை முறைகள் ஆகியவைகளின் உபயோகம் அதிகரித்து வருகின்றது.

5. **தொழில் உற்பத்தி அதிகரிப்பு**: பொருளாதார வளர்ச்சியின் அடிக்கல்லாக அமைவது ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியாகும். இந்தியப் பொருளாதாரத்தில் போற்றத்தக்க விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. 1951-ல் 73·5 ஆக இருந்த தொழில் உற்பத்தி பொது குறிப்பெண் 1965-ல் 185 ஆக உயர்ந்தது. எனவே, இது சுமார் 152 சத வீத மாக அதிகரித்தது. முதல் மூன்று திட்டங்களில் இயந்திரங் களின் உற்பத்தி நாட்டின் மொத்த உற்பத்தியில் 8 சத வீதத்தி லிருந்து 22 சத வீதமாகக் கூடியது. திட்ட காலத்தில் பல புதிய தொழில்கள் ஏற்பட்டு இருப்பதோடு, பழைய தொழில்கள்

தொழில் நுணுக்க மாற்றமும் பெற்றிருப்பது வளர்ச்சிக்கான அறிகுறிகளாகும்.

6. சமூக நலனைப் பெருக்கும் முதலீடுகளின் அதிகரிப்பு : ஒரு நாட்டின் அதி விரைவான பொருளாதார வளர்ச்சிக்குப் போக்கு வரத்து செய்தித் தொடர்பு, வாணிகம், மின்சக்தி, கல்வி, பொதுச்சுகாதாரம் போன்ற மனித மூலதனம் போன்றவைகளின் வளர்ச்சி இன்றியமையாதது. இந்தியப் பொருளாதாரத்தில் இத்துறைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அடைந்து வருகின்றன. சமுதாய மாற்றம் பல வழிகளிலும் ஏற்பட்டு வருகிறது. 1961-ல் 25 சத வீதமாக இருந்த கல்வி கற்றவர்கள் 1971-ல் 30 சத வீதமாக அதிகரித்தனர். கல்வி வளர்ச்சியின் விளைவாக, சாதி பேதங்கள், பழமையான பழக்க வழக்கங்கள் போன்றவைகள் குறைந்து வருகின்றன. நகரமயமாக்கப்படல் அதிகரித்து வருகின்றது. நகர நாகரிகத்தின் விளைவுகள் கிராமங்களிலும் ஊடுருவிச் செல்வதைப் பார்க்கலாம்.

முடிவுரை : எனவே, திட்ட கால ஆரம்பத்திலிருந்து இந்தியாவில் பொருளாதாரமுன்னேற்றத்திற்கான அறிகுறிகள் காணப்படுவதை அறியலாம். இந்தியா வளர்ச்சியுறு நாடாக இருந்தாலும், மாற்றம்அடையாமல் மந்தமான நிலையில் இருக்கவில்லை. இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வரும் பொருளாதாரம் என்பதற்கு மறுப்பு இருக்க முடியாது. அரசின் முற்போக்குத் திட்டங்களின் அடிப்படையில் நாடு மேலும் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன.

4. பொருளாதார வளர்ச்சித் தேவைகள்

பொருளாதார வளர்ச்சியின் விளக்கம்
(Concept of Economic Development)

பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் உண்மை தலா வருவாயை நீண்ட காலத்தில் அதிகப்படுத்தப்படுவதைக் குறிக்கின்றது. பொருளாதார வளர்ச்சி, ஒரு நாட்டின் உண்மை தேசிய வருமானத்தை அதிகப்படுத்த உதவும் முறையே ஆகும். ஒரு நாட்டில் சிறப்பான பொருளாதார வளர்ச்சி ஏற்பட உண்மை தலா வருவாய் அதிகரிப்பு வீதம் மக்கட் தொகை அதிகரிப்பின் வீதத்தைக் காட்டிலும் அதிகமாய் இருக்க வேண்டும். எனவே, பொருளாதார வளர்ச்சியை அளப்பதற்காகப் பயன்படும் கருவிகளாக விளங்குபவை உண்மை தேசிய வருமானமும், தலா வருவாயுமேயாகும். ஒரு நாடு எந்த அளவு பொருளாதார வளர்ச்சியைப் பெற்று விளங்கியுள்ளது என்பதை அந்த நாட்டின் உண்மை தலா வருவாய் வளர்ச்சியைக் கணக்கிடுவதன் மூலம் கூறிவிடலாம். உண்மையில் தலா வருவாய் அதிகரிப்பு வீதம் உண்மை தேசிய வருமான வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். ஏனெனில், தேசிய வருமானத்தில் ஒரு பகுதி மக்கள்தொகை வளர்ச்சியின் அதிகரிப்பைச் சரிகட்டப் பயன்படுகிறது. உதாரணமாக, 1948-49-க்கும் 1966-67-க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் தேசிய வருவாய் 73 சத வீதமாக அதிகரித்திருந்தாலும், தலா வருவாய் 19 சத வீதம்தான் உயர்ந்தது. ஏனெனில், இக்காலத்தில் மக்கள்தொகை 36 சத வீதமாக அதிகரித்தது.

வளர்ச்சியின் இலக்கணம்

பொருளாதார வளர்ச்சி என்பது நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெறும் செயல் முறையாகும். "நாட்டில் காணப்படும் வறுமை, வேலையின்மை, அறியாமை போன்ற பொருளாதார இன்னல்களைத் தகர்த்து எறிந்து சீரான வளர்ச்சியுடன் தானாக இயங்கும் நிலையை ஒரு நாடு திறமை யுடன் சாதிப்பதைத்தான் பொருளாதார வளர்ச்சி என்கின் றோம்''. இந்தியாவின் தேசியப் பொருளாதாரக் கொள்கையும் இதன் அடிப்படையில்தான் தீட்டப்பட்டுள்ளது. ஒரு நாடு தானாக இயங்கும் வளர்ச்சி (Self-generating Growth) நிலையைப் பெற்றதும், பொருளாதாரத் திட்டங்களின் பணி முடிந்துவிட்ட தாகக் கொள்ள முடியாது. ஏனெனில், ஏழ்மை, அறியாமை போன்றவைகளை நாட்டிலிருந்து முழுவதுமாக நீக்கத் தொடர்ந்து பல காலம் முயற்சி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்தியப் பொருளாதார வளர்ச்சி எந்த விதத்தில் வளரவேண்டுமென்பதைத் தீர்மானித்தால்தான் இந்தியா தானாக இயங்கும் பொருளாதார நிலையைப் பற்றிய ஒரு சீரான விளக்கம் தர இயலும். இந்தியா தானாக இயங்கும் பொருளாதார நிலையைப் பெற ஆண்டுக்கு 6 முதல் 7 சத வீதம் பொருளாதார வளர்ச்சியைப் பெறவேண்டியது இன்றியமை யாததாகும். ஏனெனில், அந்த வளர்ச்சியில்தான் வளர்ச்சி யுருச் சம நிலை முட்டுக்கட்டையைத் தகர்த்தெறிய முடியும். அப்போதுதான் நாடு பொருளாதார வளர்ச்சிப் பாதையில் முன்நோக்கிச் செல்ல முடியும். இந்தியப் பொருளாதாரத் திட்டங்களின் குறிக்கோள் 6 முதல் 7 சத வீதம் உண்மை தேசிய வருமான வளர்ச்சியுடன் தானாக இயங்கும் பொரு ளாதார நிலையைச் சாதிப்பதுதான்.

பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தும் காரணிகள்

பொருளாதார வளர்ச்சி (1) பொருளாதாரக் காரணிகள் (2) பொதுக் காரணிகள் என்ற இருவகைக் காரணிகளைப் பொறுத்ததாகும். பொருளாதார வளர்ச்சி சிறந்த தொழில் நுட்பம், தகுந்த சாதனங்கள் போன்றவைகளைக் கொண்டு எல்லாத் துறைகளிலும் உற்பத்தியின் அளவை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் செயல்முறைகளைக் குறிக்கும். சிறந்த தொழில் நுட்ப வசதிகளைப் பெற இயந்திரங்கள், கருவிகள், சாதனங்கள் போன்றவைகள் தேவைப்படுகின்றன. எனவே, இந்நிலையைச் சமாளிக்க முதல் சேகரிப்பு (Capital formation)

அவசியமாகிறது. பொருளாதார வளர்ச்சி என்பது முதலாக்க வீதத்தை அதிகப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் குறிக்கும். முதலாக்கத்தோடு கூட, திறன் ஆக்கமும் (Skill Formation) பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். மூலதனப் பெருக்கத்தால் மட்டும் பொருளாதார வளர்ச்சி மேலோங்குமென்று கூறிவிட முடியாது. ஏனெனில், சமூகப் பழக்க வழக்கங்கள், அரசியல் நிலை, மனித அறிவு வளங்கள் போன்ற பொருளியலுக்குட்படாத காரணிகளை அடிப்படையாகக் கொண்டுதான் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். பொருளாதார சக்திகளால் மட்டும் வளர்ச்சி தீர்மானிக்கப் படுவதில்லை. மிகவும் பின்தங்கிய நாடுகளுக்கு இது சிறப்பாகப் பொருந்தும். வளர்ச்சியின் திறவுகோல் மக்களின் மனதிலும் அவர்களின் எண்ணங்களிலும் அமைந்துள்ளது என்று பேராசிரியர் கேயின்கிராஸ் குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சியுரு நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்த முதலீட்டைப் பெருக்குவதோடு சமூக மத பொருளாதார ஸ்தாபனங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். எனவே, சமூக அரசியல் ஸ்தாபனங்களில் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தியபின் அதிக உற்பத்தியையும் வளரும் வருமானம், வேலை வாய்ப்பு ஆகியவற்றையும் சாதிக்க முதலாக்க வீதத்தை அதிகரிக்க வேண்டும். இந்தியாவில் ஆறு முதல் ஏழு சத வீத வளர்ச்சியைச் சாதிக்க தேசிய வருவாயில் 15 முதல் 20 சத வீத முதலாக்கத்தைப் பெறவேண்டியது அவசியமாகும்.

பொருளாதாரக் காரணிகள்

பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் பொருளாதாரக் காரணிகள் பின்வருமாறு :—

1. **இயற்கை வளங்கள் :** அதிகமான இயற்கை வளங்களைக் கொண்ட நாடு குறைந்த இயற்கை வளங்களைக் கொண்ட நாட்டைக் காட்டிலும் வேகமாகப் பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க இயலும். ஆனால், அதற்கேற்றாற்போல் மூலதன அளிப்பும் நாட்டில் பெருக வேண்டியது அவசியமாகும். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் ஏற்பட்ட சிறப்பான பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைக் காரணம் அந்நாடுகளில் கிடைத்த வற்றாத இயற்கை வளங்கள்தான் என்று ஆராயப்பட்டுள்ளது.

2. **மனித வளங்கள் :** பொருளாதார வளர்ச்சி வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது மக்களின் சீரான மனப்போக்கும், வலிமையும் ஆகும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தகுதியில்லாத அதிக மக்களைவிட குணமுள்ள குறைந்த மக்கள் தொகையே வரவேற்கத் தக்க தாகும். எனவே, பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி, மருத்துவம் போன்ற மனித குண நலனைப் பெருக்க வல்ல துறைகளில் முதலீடு செய்யவேண்டியது அவசியமாகிறது.

பொருளாதார வளர்ச்சிக்குப் பொருளாதார மாற்றத்தின் இடர்ப்பாடுகளைஏற்றுக்கொண்டுநல்ல சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தத்தக்க மக்கள் உருவாக்கப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகத் தங்களையே அர்ப்பணித்து நேர்மை, தகுதி, அறிவு, ஆற்றல் ஆகியவைகளைப் பெற்ற மக்கள் நாட்டிற்குத் தேவை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மற்றவர்களுக்கு, முன் மாதிரியாக இருந்து வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள்.

3. **மக்கள்தொகை வளர்ச்சி :** மக்கள்தொகை வளர்ச்சியால் நாட்டிற்குத் தேவையான பணி புரிவோரின் அளிப்பு இருந்த போதிலும் மக்கள்தொகை வளர்ச்சி உத்தம அளவில் இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், மக்கள்தொகையின் மிதமிஞ்சிய பெருக்கம் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும். மக்கள்தொகை குறைந்துள்ள நாடுகளில் மக்கள்தொகையின் வளர்ச்சி விரும்பத்தக்கதாகும். ஆனால், ஆண்டுக்கு 2·5 சத வீதம் மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் அதிக மக்கள்தொகை வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக அமைந்துள்ளது.

4. **முதல் சேகரிப்பு :** பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டின் முதலாக்க வீதத்தைஅடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. நாட்டில் தொழில் வளம் பெருக மூலதன வளர்ச்சி இன்றியமை யாததாகும். எனவே, வளர்ச்சிக்கு உண்மை மூலதனத்தின் சேகரிப்பு அடிப்படையாய் விளங்குகிறது. எல்லாக் கருவிகள், இயந்திரம், சாதனங்கள், உற்பத்தியாளர்களின் முழுநிலை அடையாப் பொருள்கள் (Semi-finished goods) ஆகியவைகளின் மொத்த மதிப்பு, மொத்த முதலாக்கம் (Gross-capital formation) எனப்படுகிறது. இத்தகைய முதல் பொருள்கள் உற்பத்தியைச் சுலபமாக்கி அதன் பெருக்கத்திற்கு வழி வகுக்கின்றன. முதல் சேகரிப்புக்குப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான

முதலீட்டைப் பெருக்கவல்ல தொழிலதிபர்கள் தேவைப்படு கின்றனர். உண்மை முதலாக்கத்திற்கு அதிக சேமிப்பும், ஆக்கத்திற்கான முதலீடும் அவசியமாகிறது. வளர்ச்சியுறு நாடுகளில் முதலாக்கம் வேண்டிய அளவு ஏற்படவில்லை. நுகர்வோர்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யத்தக்க முதலீடு நாட்டில் கிடைக்கத் தகுந்த முறையில் முதல் சேகரிப்பு அதிகரிக்க வேண்டும். 1950-ல் திரு. கோலின் கிளார்க் (Colin Clark) என்பவர் இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உற்பத்தியின் அளவை அதிகரிக்கவும், பெருகிவரும் தொழிலாளர்கள் அனைவரையும் வேலையில் அமர்த்தவும் தேசிய வருவாயில் 12·5 சதவீதம் சேமிப்பு தேவைப்படும் என்று கணக்கிட்டார். ஆனால், இந்நாடுகளில் சேமிப்பு வருமான விகிதம் மிகக் குறைந்த அளவில் 5 முதல் 6 சத வீதமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. முதலாக்கத்திற்கு மக்களின் தகுந்த ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. மக்கள் தங்களின் வருமானம் பெருகும்போது தேவையற்ற நுகர்ச்சியினைக் குறைத்துக் கொள்வது அவசியமாகும். அரசும் பல வழிகளில் மக்களின் சேமிப்பைச் சேகரித்து முதலாக்கத்திற்கு அடிகோல வேண்டும். மக்களின் உண்மை தலா வருவாய் அதிகரிக்க நிகர முதல் சேகரிப்பு தற்போது இருப்பதைவிட அதிகரிக்க வேண்டும். பேராசிரியர் ஆர்தர் லூயிஸ் குறிப்பிடுவதுபோல், "நிகர முதலீடு பிற்பட்ட நாடுகளில் தேசிய வருவாயில் 5 சத வீதத்திலிருந்து 10 முதல் 15 சத வீதமாக அதிகரிக்க வேண்டும்."

ஜப்பான் நாட்டில் 1913-க்கும் 1939-க்கும் இடைப்பட்ட காலத்தில் முதலீடு வீதம் 16 முதல் 20 சத வீதமாக இருந்தது. ரஷ்யாவின் முதல் ஐத்தாண்டுத் திட்டம் 25 முதல் 30 சத வீத முதலீடு அமையுமாறு இலக்குகளை ஏற்படுத்தியது. தற்போது முதலீடு நிலையாக 20 சதவீதமாக இருந்து வருகிறது. இந்தியா தானாக இயங்கும் பொருளாதார நிலையைப் பெற அதன் சேமிப்பையும், முதலீட்டையும் அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகும். தற்போது முதலீடு சேமிப்பைவிடக் குறைந்திருப்பதால், அயல் நாட்டு முதலைப் பெற்று முதலீட்டை சமநிலையில் வைக்க வேண்டிய நிலை உள்ளது. ஆண்டிற்குத் தேசிய வருவாயில் 6 முதல் 7 சதவீத அதிகரிப்பைப் பெற்றால் அயல் நாட்டு முதலை எதிர்பார்க்க வேண்டிய நிலை இருக்காது. எனவேதான், மூன்றும் திட்ட அறிக்கையில் ஐந்தாம் திட்ட இறுதிக்குள் இந்தியா சுய - இயக்கப் பொருளாதார நிலையைப் பெற நிகர முதலீடு 19 முதல் 20 சத வீதமாகவும் உள்நாட்டுச் சேமிப்பு

18 முதல் 19 சத வீதமாகவும் அதிகரிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. முதல் - உற்பத்தி விகிதம் (Capital - output Ratio)

விளக்கம் : முதல் உற்பத்தி விகிதம் என்பது ஒரு குறித்த முதல் அதிகரிப்பால் ஏற்படும் உற்பத்தி அல்லது உண்மை வருமான அதிகரிப்பின் விகிதம் ஆகும். அதாவது, ஒரு குறிப்பிட்ட மூலதன முதலீட்டிற்கும் அதனால் ஏற்படும் உற்பத்தி அதிகரிப்புக்கும் இடையேயுள்ள தொடர்பை முதல்-உற்பத்தி விகிதம் தீர்மானிக்கின்றது. உதாரணமாக, ஒரு பொருளாதாரத்தில் முதல் - உற்பத்தி விகிதம் 1 : 10 ஆக இருந்தால், ஒரு அலகு மூலதனம் பத்து அலகு உற்பத்தியை உற்பத்தி செய்யும் என்று அர்த்தமாகும். மூலதனத்தின் உற்பத்தித்திறன் முதல் உற்பத்தி விகிதத்தைப் பொருத்ததாகும். அதாவது முதல் உற்பத்தி விகிதம் ஒரு குறித்த காலத்தில் பல்வேறு பொருளாதாரத் துறைகளில் காணப்படும் மூலதன-உற்பத்தித் திறனை விளக்குகிறது. ஒரு பொருளாதாரம் முழுவதற்குமான முதல்-உற்பத்தி விகிதம் பல்வேறு துறைகளின் மூலதன-உற்பத்தித் திறனைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவதாகும். முதல்-உற்பத்தி விகிதம் தொழிலுக்குத் தொழில், பொருளாதாரத்திற்குப் பொருளாதாரம், காலத்திற்குக் காலம் மாறுபடும் ஒன்றாகும். மூன்றும் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதைப்போல், "எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலங்களுக்கும் உகந்த தனியான ஒரு முதல்-உற்பத்தி விகிதம் இல்லை." முதல்-உற்பத்தி விகிதமானது பெரும்பாலும் ஒரு நாட்டின் அல்லது ஒரு துறையில் அமைந்துள்ள பொருளாதார வளர்ச்சி நிலையையும், மேற்கொண்டு வளர உள்ள வாய்ப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு விளங்கும். பொருளாதார வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் நீர்ப்பாசனப் பணிகள், மின் உற்பத்தித் திட்டங்கள், சாலைகள், இருப்புப்பாதைகள் போன்ற சமுதாய நலன் திட்டங்களில் பேரளவு முதலீடு மேற்கொள்ளப்படுவதால், பொருள் உற்பத்தியின் அளவு முதலீட்டை விட குறைவாக இருக்கும். காலப்போக்கில், ஆக்க சக்திகள் முழு அளவில் பயன்படுத்தப்பட்டால் முதல்-உற்பத்தி விகிதம் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமாக அமையும். பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படைக் காரணிகள் பலப்படுத்தப்பட்டால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும். எனவே, பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்போது முதலீட்டின் தன்மையும் முதல் உற்பத்தி விகிதமும் மாற்றமடைகிறது. புதுவகை முதல்

பொருள்கள் (New Capital Goods) திறமையுடன் பயன்படுத்தப் படுதல், தொழில் அதிபர்களின் திறமை ஆகியவைகளையும் பொறுத்துத்தான், முதல்-உற்பத்தி விகிதம் இருக்கும்.

வளர்ச்சி வீதத்தைக் கணக்கிடல் : ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் அந்நாட்டின் சேமிப்பு வீதத்தாலும், முதல் உற்பத்தி வீதத்தாலும் தீர்மானிக்கப்படுகிறது. அதை அடையாள வடிவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

$$g = \frac{S}{C}$$

இங்கு g என்பது பொருளாதார வளர்ச்சி வீதத்தையும், S என்பது சேமிப்பு வீதத்தையும், C என்பது முதல்-உற்பத்தி வீதத்தையும் குறிக்கின்றது. உதாரணமாக, சேமிப்பு வீதம் தேசிய வருவாயில் 10 சத வீதமாகவும், முதல்—உற்பத்தி விகிதம் 2 : 1 ஆகவும் இருந்தால், வளர்ச்சி வீதத்தைக் கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.

$$g = \frac{10}{2} = 5 \text{ சதவீதம்.}$$

அதாவது தேசிய வருவாயில் 10 சத விகிதம் முதலீடு செய்யப்பட்டால் தேசிய வருவாய் 5 சத விகிதமாக உயரும். தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதத்தில் அதிகரிப்பைச் சாதிக்க ஒரு நாடு இரண்டு வகைக் காரணிகளைச் செயல்படுத்த வேண்டும். அவைகளாவன : (1) முதலீடு வீதத்தை அதிகரித்தல், (2) முதல்-உற்பத்தி விகிதத்தை நாட்டிற்குச் சாதகமாக்கத்தக்க சக்திகளை இயங்கச் செய்தல். எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்தினால்தான் தலா வருவாயை அதிகரிக்க முடியும்.

6. தொழில் நுட்ப முன்னேற்றம் :

பொருளாதார வளர்ச்சிக்குத் திறவுகோலாக விளங்குவது தொழில் மயமாகும். ஒரு நாட்டில் தொழில் மயம் ஏற்பட, தொழில் நுட்ப முறைகளும், சாதனங்களும் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். முதல் ஆக்கம் தொழில் மயத்தை மேம்படுத்துகின்றது. தொழில் நுட்ப முன்னேற்றம் தொழில் வளர்ச்சியை வேகப்படுத்துகிறது, பிற்பட்ட நாடுகளில் பழைமையான தொழில் நுட்ப முறைகளே பின்பற்றப்பட்டு வருகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு நவீனத் தொழில்

நுட்ப முறைகளின் பிரயோகம் அவசியமாகும். முதல் பற்றுக் குறையினால் பிற்பட்ட நாடுகளில் சீரமைப்பும், நவீனப்படுத்துதலும் சாத்தியப்படவில்லை. எனினும், உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர் எல்லோக்கும் ஒரு குறைந்தபட்சக் கல்வி அறிவு இருந்தால்தான், நவீனத் தொழில் நுட்ப முறையை அறிந்து அதைப் பயன்படுத்த முடியும். தொழிலதிபர்களைப் புதிய கண்டு பிடிப்புக்களைத் தோற்றுவிக்க ஊக்குவிக்க வேண்டும். தொழில் நுட்ப முன்னேற்றத்தை ஏற்படுத்த, மக்களின் தொழில் நுட்பப் பயிற்சி, நிர்வாகச் சீரமைப்பு போன்ற நடவடிக்கைகளில் மூலதன முதலீடு அதிகரிக்க வேண்டும், ஏனெனில், தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு நிர்வாகம், தொழில் நுட்பம், தொழில் உற்பத்தி ஆகியவைகளில் திறன் அதிகரிப்பு தேவைப்படுகிறது. தொழில் முன்னேற்றம் என்பது முதலாவதாக, நல்ல உற்பத்திச் சாதனங்களை அதிக அளவில் உண்டாக்குவதைக் குறிக்கின்றது. இதைத் "தொழில் நுட்ப அதிகரிப்பு" என்று அழைக்கின்றோம். இரண்டாவதாக, முதல் பொருட்களின் அமைப்பிலோ அல்லது அளவிலோ மாற்றம் இல்லாமல், தொழில் நுட்ப அறிவு வளர்வதை, "தொழில் நுட்ப வளர்ச்சி" (Advancement of Technology) என அழைக்கிறோம். வளர்ச்சியுறு நாடுகள் தங்கள் நாட்டுக்குப் பொருத்தமான தொழில் நுட்ப உற்பத்தி முறைகளைக் கையாளுதல் சிறந்ததாகும்.

7. தொழில் பாகுபாடு (*Occupational Structure*) :

பொருளாதார வளர்ச்சிக்குப் பரவலான தொழில் பாகுபாடு இன்றியமையாததாகும். ஆனால், இந்தியா போன்ற நாடுகளில் தொழில் பாகுபாடு சீரான முறையில் இன்னும் ஏற்படவில்லை. மொத்த மக்கள்தொகையில் 70 சத விகித மக்கள் வேளாண்மைத் தொழிலையே உயிர்த்தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆனால், ஒரு நாட்டின் தேசிய வருமான வளர்ச்சிக்குத் தொழில் துறையில் பெரும்பாலான மக்கள் ஈடுபடுவது சிறந்ததாகும். எனவே, பொருளாதார வளர்ச்சியின்போது தொழிலாளர்கள் வேளாண்மைத் துறையிலிருந்து தொழில் துறைக்கு மாற்றப்பட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். 1870-க்கும் 1930-க்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தவர்களின் விகிதம் 54-லிருந்து 23 சத விகிதமாகவும், பிரான்சில் 42-லிருந்து 25 சத விகிதமாகவும், ஜப்பானில் 80-லிருந்து 48 சத விகிதமாகவும் குறைந்தது. எனவே, பொருளாதார வளர்ச்சிக்குப் பல்வேறு தொழில்களில் தொழிலாளர்களின்

அளிப்பு உத்தம அளவில் இருக்க வேண்டியது இன்றியமை யாததாகும்.

பொருளாதார வளர்ச்சிக்கான மற்ற முன் நிபந்தனைகள் (Pre-conditions of Economic Development)

வளர்ச்சியுறு நாடுகள் தங்கள் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்துவதற்கு, சமூகஅமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பொருளாதார வளர்ச்சியின்போது ஏற்பட வேண்டிய சமூக மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, பேராசிரியர் W. W. ராஸ்டாவ் (W. W. Rostow) ஆறு வகை மனவிருப்பங்களைப்பற்றி (Propensities) வலியுறுத்திக் கூறு கின்றார். அவைகளாவன :—(1) அடிப்படை அறிவியலை வளர்ச்சியடையச் செய்யும் மனவிருப்பம், (2) பொருளாதாரப் பலன்களைப் பெற அறிவியலைப் பயன்படுத்தும் மனவிருப்பம், (3) புதுக்கண்டுபிடிப்புக்களை ஏற்றுக்கொள்ளும் மனவிருப்பம், (4) பொருள்சார் முன்னேற்றத்தைப் (Material Advance) பெற வேண்டுமென்கின்ற மன ஆவல், (5) பொருள்களை நுகர வேண்டுமென்கின்ற மன அவா. (6) குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்கின்ற ஆவல் ஆகியவைகளாகும். அவரின் கருத்துப்படி வேகமான வளர்ச்சியைப் பெற பொருளாதார, சமூக அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். எனவே, பொருளாதார வளர்ச்சிக்குத் தகுந்த அடிப்படை சமூக, அரசியல் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அவற்றை விளக்க மாகக் கீழே காணலாம்.

1. வளர்ச்சி பெற வேண்டுமென்கிற ஆவல்

முதலாவதாக, பிற்பட்ட நாடுகளில் வாழ்வோர் அனை வருக்கும் எத்தகைய பொருளாதார இன்னல்கள் ஏற்பட்டாலும் வளர்ச்சி பெற்றேயாக வேண்டுமென்கின்ற அவா இருக்க வேண்டும். வளர வேண்டுமென்கின்ற உள்ளுணர்வே இல்லாத மக்களைக் கொண்ட நாடு வேகமான வளர்ச்சியை அடைய இயலாது. பொருள்சார் நலனை எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்ய, மக்கள் தன்னலம் கருதாமல் தியாக மனப் பான்மையுடன் உழைக்க முன்வர வேண்டும். ஜப்பான் போன்ற நாடுகளில் வாழும் மக்கள் பொருளாதார வளர்ச்சி யின் ஆரம்பக் கட்டத்தில் தியாக சிந்தனையுடன் அரும்பாடு பட்டு, அயராது உழைத்ததால், இன்று வேகமான பொருளா தார வளர்ச்சியைச் சாதித்து உள்ளனர். எனவே, பெற்றி

ருக்கும் பொருளாதார வளர்ச்சியே போதும் என்ற மனப் போக்கு மாறிப் பிற்பட்ட நாடுகளில் வாழும் மக்கள் பொருளாதார வளர்ச்சியும் செழிப்பும் பெறவேண்டும் என்கின்ற ஆர்வத்தினைப் பெற்றேயாக வேண்டும்.

2 பரவலான கல்வி

பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைக் கருத்துக்களை உணர்ந்து, தொழில் நுட்ப முறையில் உற்பத்தியை மேற் கொள்ளத் தகுந்த கல்வியை வளர்ச்சியுரு நாடுகள் வளர்க்க வேண்டும். பிரபல்யமான கல்வி முறையினால் மக்கள், தொழிற் கல்வியையும் கற்க நல்ல வசதி ஏற்படுகிறது. பேராசிரியர் G. K. கால்பிரெய்த் (G. K. Galbraith) அவர்கள் குறிப்பிடுவது போல், "கடந்த நூற்றாண்டில் பொருளாதார, சமூக முன்னேற்றத்தைப் பெற தேவையானவைகளுள் பொதுக்கல்வி, மக்களின் சிந்தனை எழுச்சி ஆகியவைகளைக் காட்டிலும் வேறு எதுவும் சிறப்பான இடத்தைப் பெறவில்லை." எனவே, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சிந்தனையையும் மன எழுச்சியையும் அளிக்க வல்லது மக்கள் விரும்பும் கல்வி வசதியாகும். சிறப்பான கல்வி, மக்கள் மனதில் வளர்ச்சிக்குத் தேவையான புரட்சிகரமான எண்ணங்களைத் தோற்று விக்கின்றது.

3. சமூக சீர்திருத்தங்கள்

வளர்ச்சியுரு நாடுகளில் பொருளாதார புரட்சியைத் தோற்றுவிக்க, சமூக சீர்திருத்தங்கள் இன்றியமையாதவை களாகும். இந்தியா போன்ற வளர்ச்சியடையா நாடுகளில் பிற்பட்ட மத, சாதி முறைகளினால் மூடப்பழக்க வழக்கங்கள், அறியாமை, பழைமை நோக்கு போன்றவைகள் காணப்படு கின்றன. சாதி முறையினால் தொழிலாளர்கள் ஓரிடத்தி லிருந்து மற்றோரிடத்திற்குச் சுலபமாகப் பெயர்ச்சியடைவ தில்லை. இதனால், நாட்டில் கிடைக்கும் வளங்கள் உத்தம அளவில் பயன்படுத்தப்படுவதில்லை. சில குறிப்பிட்ட தொழில் களில் தேவையான அளவு பணியாள்கள் கிடைப்பதில்லை. உதாரணமாக, தோல், செருப்பு உற்பத்தி செய்யும் தொழில் களைக் கூறலாம். அமெரிக்கா போன்ற நாடுகளில் காணப்படும் தொழிலின் கண்ணியம் (Dignity of Labour) பிற்பட்ட நாடு களில் இல்லை. இதனால், வேலையின்மையும் வேலைக்குறைவும் ஏற்படுகிறது. மேலும், மதக் கொள்கைகள் பொருள் சார் நலனின்மேல் மக்களுக்கு ஆர்வம் ஏற்படாத வகையில் அமைந்

துள்ளன. உள்ளதே போதும் என்ற மனத்திருப்தி கொண்டு மக்களில் பலர் இருப்பதால், நாடு பின் தங்கிய நிலையிலேயே இருந்து விடுகிறது. கிராம வாழ்க்கையையே மக்கள் விரும்புவதால் நாடு தொழில் மயமாக்கப்பட வாய்ப்பு ஏற்படுவதில்லை. இதனுல், வாழ்க்கைத் தரம் குறைந்தேயுள்ளது. கூட்டுக் குடும்ப முறை வளர்ச்சியுரு நாடுகளில் இருப்பதால், பாடுபட்டு முன்னேற வேண்டுமென்கின்ற ஊக்கம் மக்களுக்கு ஏற்படுவதில்லை.

வளர்ச்சியுரு நாடுகளில்இடர் தாங்குதலும், வளர்ச்சிக்கான முயற்சி மேற்கொள்ளுதலும், தேவையான அளவு ஏற்படுவதில்லை. இந்நிலை மாறி இடர்தாங்கி உறுதியின்மையை ஏற்று செயல் புரியும் திறன் வாய்ந்த தொழில் அதிபர்கள் இந்நாடுகளில் தோன்ற வேண்டும். மேலும், நாட்டை நகர மயமாக்க செயல் திட்டங்கள் உருவாக வேண்டும். மக்களிடம் அயல் நாட்டுப் பொருட்களை நுகர வேண்டுமென்கின்ற மோகம் நீங்க வேண்டும்.

உள் நாட்டுப் பொருள்களையே நுகரவும், பயன்படுத்தவும் மக்களும், உற்பத்தி செய்வோரும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். மக்களின் பிற்பட்ட எண்ணங்கள், பழக்க வழக்கங்கள் மாறுவதற்குப் பழைமைக் கருத்துக்களையும் சமூக ஸ்தாபனங்களையும் மாற்றியமைக்க வேண்டும். வளர்ச்சிப் பொருளாதார அறிஞர்களாகிய மேயரும் பால்டுவினும் (Meir and Baldwin) "வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாக விளங்குவது, ஏழ்மை நாட்டு மக்கள் தாங்களே சுய முயற்சியால் உள்நாட்டு வளங்களைப் பயன் படுத்திப் பொருள்சார் முன்னேற்றத்தைச் சாதிக்க ஆர்வமுடன் செயல்படுவதேயாகும்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

4. திறமையான அரசாங்கம்

பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவது சக்தியும், திறமையும் கொண்ட அரசாங்கமாகும். அரசின் தக்க உதவியும், ஒத்துழைப்பும் தனி ஒருவன் எந்தத் தொழிலையும் திறமையாக ஏற்று நடத்த முடியாது. சமதர்ம மக்களாட்சி, முதலாளித்துவஅல்லது வேறு எந்தப் பொருளாதார முறையை (Economic Order) அடிப்படையாகக் கொண்ட அரசாக இருந்தாலும் அது ஒரு நிலையான அரசாக அமைந்து திறமையுடன் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நாட்டில் நிலை நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான், நிலையான பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பொருளாதார வளர்ச்சியின் பலன் எல்லா

மக்களுக்கும் கிடைக்கச் செய்வது அரசின் தலையாய கடமையாகும். மேலும், பொருளாதார வளர்ச்சிக்குத் தகுந்த முறையில் நிர்வாக, சட்ட நடவடிக்கைளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

5. சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படுதல்

பொருளாதார வளர்ச்சிக்குச் சட்டம், ஒழுங்கு ஆகியவைகள் திறமையுடன் அமுல்படுத்தப்பட வேண்டும். மக்கள் தங்கள் உழைப்புக்கேற்ற பலனைப் பெற இயலா விட்டால் நாட்டில் சேமிப்பு, முதலீடு ஆகியவைகளில் மக்களின் நாட்டம் குறைந்து விடும். அநேக வளர்ச்சியுறு நாடுகளில் சக்தியற்ற அரசுகள் இருப்பதால் உள் நாட்டு ஒழுங்கீனங்கள் சச்சரவுகள் அடிக்கடி தோன்றுகின்றன. எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு நேர்மையும், நிர்வாகத்திறனும் கொண்ட அரசு ஏற்பட வேண்டியது அவசியமாகும். அரசு அதிகாரிகளிடம் அனுபவமின்மை, தகுந்த கொள்கைகளைத் தீர்மானிக்கத் தேவையான திறமை, பயிற்சி ஆகியவைகள் இல்லாமையால் பொருளாதார வளர்ச்சி தடைப்படுகின்றது. எனவே, அரசாங்கத் துறையைச் சீர்படுத்தவேண்டியது மிகவும் அவசியமாகும்.

முடிவுரை : பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் காரணிகளைத் தகர்த்தெறிய வளர்ச்சியுறு நாடுகள் தங்கள் பொருளாதார, சமூக, அரசியல், கலாசார, தொழில் நுட்ப ஸ்தாபனங்களில் சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்த அயராது முயற்சிக்க வேண்டும். முதலாவதாக, மித மிஞ்சிய மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப் பாடு முறைகள் மக்களிடம் பிரபல்யமடையச் செய்ய வேண்டும். இரண்டாவதாக, சந்தையில் காணப்படும் நிறை குறைகள் (Market Imperfections) நீக்கப்பட வேண்டும். சமூக அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டால் உற்பத்திக் காரணிகள் பெயர்ச்சி (Mobility) யடைந்து எல்லா வகை வளங்களும் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட முடியும். சந்தையில் போட்டி இருப்பது நல்லது. ஆனால், சர்வாதீன நடவடிக்கைகள் ஒடுக்கப்பட வேண்டும். சந்தையில் இருக்கும் ஒழுங்கீனங்கள் நீக்கப் பட்டால் வளங்கள் உத்தம அளவில் பங்கிடப்பட்டு உற்பத்தியின் அளவு அதிகரிக்கும். மேலும், சிறந்த அமைப்பும், திறமையும் கொண்ட வங்கிகள் உத்தம அளவில் தோன்றி ஆக்கத்திற்கான கடன் வசதிகளைத் தேவையான அளவு அளிக்க வேண்டும். ஒருங்கிணைந்த பண அங்காடியும், முதலங்காடியும் தோன்றிக் குறுகிய, நீண்ட காலக் கடன் வசதிகளை உற்பத்தி செய்வோருக்கு வழங்க வேண்டும். மூன்றாவதாக, ஒரு குறித்த

அளவு உற்பத்தி செய்தால் போதும் என்ற கொள்கையை விட இருந்துவரும் உற்பத்தி எல்லையை (Production Frontier)த் தாண்டி முன்னேக்கிச் செல்லச் செயல் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் விரைவான வளர்ச்சியைச் சாதிக்க முடியும். இருக்கும் சாதனங்களையும், வளங்களையும் பயன் படுத்தினல் மட்டும் போதாது. புதிய வளங்களைக் கண்டறிய வகை செய்யப்பட வேண்டும். அடிப்படை அமைப்பில் மாற்றங்களை (Structural Change) ஏற்படுத்த வேண்டும் உதாரணமாக, ஒரு புதிய இருப்புப்பாதையை ஏற்படுத்தினல் அதன் மூலம் ஓர் இடப் பகுதியில் உற்பத்தி அமைப்பில் முழு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். நான்காவதாக, வளர்ச்சியடையா நாடுகள் விரைவான பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க, பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை (Development Planning) திறமையுடன் செயல்படுத்த வேண்டும். இந்திய அரசு 1951-ம் ஆண்டிலிருந்து பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் செய்து வரும் முயற்சிகள் மகிழ்ச்சியைத் தருவனவாய் உள்ளன. இறுதியாக, நிலையான நிதி வசதியும் தகுந்த கொள்கைகளும் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமாகும். போதுமான அளவு நிதி வசதி நாட்டின் வளர்ச்சிக்கு ஊன்றுகோல் போல் உதவுவதாகும். ஆனல், அளவு கடந்த நிதி வசதியால் பணவீக்கம் போன்ற சிக்கல்கள் ஏற்படா வண்ணம் கண்காணிக்க வேண்டும். பலனுள்ள பண வழிக் கொள்கை, (Monetary Policy) நிதி வழிக் கொள்கை (Fiscal Policy) வருமான கொள்கை (Income Policy) ஆகியவைகளை அமுலாக்கி பணத்துறையில் சமநிலையும் (Monetary Stability) விரைவான பொருளாதார வளர்ச்சியும் (Economic Growth) ஏற்பட அரசு வகை செய்ய வேண்டும். ஒரு வகையான நடவடிக்கைகளை மட்டும் அரசு மேற்கொண்டால் தகுந்த பலன் கிட்டாது. எனவே, எல்லாவகையான மக்களது வாழ்க்கையைச் சீரமைக்கும் பொருளாதார, அரசியல், சமூக நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்துச் செயல் முறைகள் கையாளப்பட வேண்டும். அப்போதுதான், பிற்பட்ட நாடுகள், எல்லா வகையிலும் தன்னிறைவு பெற்று தாங்களாகச் சுய வளர்ச்சி நிலையைச் (Take-off Stage) சுலபமாக அடைய இயலும். பேராசிரியர் ஆர்தர் லூயிஸ் குறிப்பிடுவதுபோல், "பொருளாதார ஸ்தாபனங்களில் தகுந்த மாற்றத்தை விரும்பும் மனப்போக்கும் தங்களையே அத்தகைய பொருளாதார முன்னேற்றத்தை நிலையாக அடைய அர்ப்பணிக்கும் ஆவலும் கொண்ட மக்களைப் பெற்ற சமூதாயத்தில் தான் மகத்தான பொருளாதார வளர்ச்சி தோன்றும்."

5. பொருளாதார வளர்ச்சிச் சிறப்புக் கொள்கைகள்

(Strategy of Economic Development)

பொருளாதார வளர்ச்சி (Economic Growth) என்பது பிற்பட்ட, வளர்ச்சியடையா ஏழ்மை வேளாண்மை நாடு முன்னேறிய வளர்ச்சியடைந்த செழிப்பான தொழில் துறை நாடாக மாற்றம் பெறும் முறையைக் குறிக்கிறது. ஓர் ஏழ்மை நாடு வளர்ச்சி பெற்ற தொழில் துறை நாடாக மாற்றம் பெற இருவகைப் பாதைகள் இருப்பதாக பொருளியல் அறிஞர்கள் விளக்குகின்றனர். ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து அதன் மூலம் மகத்தான பொருளாதார வளர்ச்சியைப் பெற ஏழ்மை நாடுகள் தங்கள் நாட்டுக்கேற்ற சிறப்புக்கொள்கையை (Strategy) வகுக்க வேண்டும். அவ்வாறு ஒரு தகுந்த கொள்கையை வகுக்கும்போது இரு அடிப்படைக் கருத்துக்களை ஆராய வேண்டும். முதலாவதாக, நாடு குறைந்த முயற்சியைக் கொண்டு அதிகமான பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க வாய்ப்பு இருக்க வேண்டும். இரண்டாவதாக, மேற்குறிப்பிட்ட வளர்ச்சி மாற்றத்தைப் பெற நீண்ட காலதாமதம் ஏற்படாமல் குறுகிய காலத்திலேயே வளர்ச்சியைச் சாதிக்கவல்ல கொள்கையாக அமைய வேண்டும். இக்கருத்துக்களை ஆராய்ந்து செயலாற்றும்போது இருவகை வளர்ச்சிக் கொள்கைகள் முன் தோன்றுகின்றன. அவைகள் "சம சீரான வளர்ச்சிக் கொள்கை" (Balanced Growth Doctrine) "சரிசம மில்லா வளர்ச்சிக் கொள்கை" (Unbalanced Growth Doctrine) என்று அழைக்கப்படுகின்றன.

பேராசிரியர் ராக்னர் நூர்க்ஸ், வளர்ச்சியடையா நாடுகள் ஏழ்மை நாடுகளாக இருப்பதற்கு முதல் பற்றுக்குறையே அடிப்படைக் காரணமாகக் கருதுகிறார். முதல் பற்றுக்குறை

யால்தான் வறுமை என்னும் நச்சு வளையம் தோன்றி ஏழ்மை நாடுகள் விரைவான வளர்ச்சியைப் பெற இயலவில்லை. இந்நாடுகளில் பொருள்களின் உறுதித் தேவை, (Effective Demand) வருவாய், சேமிப்பு, முதலீடு, வேலை வாய்ப்பு, உற்பத்தித்திறன் ஆகியவைகள் குறைந்திருப்பதற்கும் அதுவே தான் காரணம். நுர்க்ஸின் கருத்துப்படி. "சந்தையின் அளவுதான் முதலீடு செய்வோரின் ஊக்கத்திற்கு ஆக்கம் அளிக்கிறது". சந்தையின் அளவு என்பது "உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை பயன்படுத்தத் தேவையான சக்தியைக்" குறிக்கிறது. மக்களிடம் பொருள்களை வாங்கும் சக்தி குறைந்திருந்தால் சந்தையின் அளவும் சுருங்கி இருக்கும். எனவே, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை சந்தையின் அளவு நிர்ணயிக்கிறது. பொருளியல் அறிஞர் ஆலின் எங்க் (Allyn A. Young) அவர்களின் கருத்துப்படி, "அமெரிக்கத் தொழில் அமைப்பும் வளர்ச்சியும் இங்கிலாந்திலிருப்பதைக் காட்டிலும் திறமையானதாக இருப்பதற்குக் காரணம் சிறந்த தொழில் நுட்பமோ, தலைமையோ அல்ல. ஆனால், இறக்குமதித்தடைகள் மூலம் அமெரிக்கர்கள் தங்கள் உள்நாட்டுச் சந்தையைப் பலப்படுத்தியதே அடிப்படைக் காரணமாகும்".

மக்களின் உற்பத்தித்திறன் குறைந்திருப்பதால்தான் சந்தையின் அளவும் குறைந்து இருக்கும். முதல் செறிந்த (Capital-intensive) உற்பத்தி முறை பின்பற்றப்படாவிட்டால் உற்பத்தித்திறனும் குறைந்து இருக்கும். முதல் செறிவு முதலீட்டை பொருத்ததாகும். முதலீட்டிற்கான ஊக்கம் சந்தையின் அளவைப் பொறுத்ததாகும். எனவே, இந்த நச்சு வளையத்தை (Vicious circle) தகர்த்தெறிய சமசீர் வளர்ச்சிக் கொள்கையே சிறந்ததாகும்.

சம சீரான வளர்ச்சிக் கொள்கை

விளக்கம் : தனி நிறுவனங்களின் வெற்றிகரமான வளர்ச்சியை ஊர்ஜிதப்படுத்தத் தேவையான வகையில் பல்வேறு வகையான நிறுவனங்களில் ஒரே தருணத்தில் முதலீட்டை மேற்கொண்டு வளர்ச்சியைச் சாதிப்பதே சம சீர் வளர்ச்சிக் கொள்கையாகும், இக்கருத்தை வலியுறுத்திக்கூறும்பொருளியல் நிபுணர்கள் ராக்னர் நுர்க்ஸ், ரோடான் (Rodan), லூயிஸ் ஆகியவர்களாவார். தனியொருவர் தனித்து தன் நிறுவனத்தில் சுதந்திரமாக முதலீடுகளை மேற்கொள்வதால் சந்தையின் அளவு குறைந்துள்ளது. பல்வேறு வகையான தொழில்களில்

ஒரே தருணத்தில் ஒன்றையொன்று தொடர்பு கொண்டு முதலீடு மேற்கொள்ளப்பட்டால் எல்லாத் துறைகளும் சமமான அளவில் வளர்ச்சி பெற்று சந்தையின் அளவு பெருகும் இதனால் பல்வேறு நிறுவனங்களில் சிறந்த சாதனங்கள் கருவிகள் ஆகியவைகளைக் கொண்டு பணிபுரியும் மக்கள் ஒருவருக்கொருவர் வாடிக்கைதாரர்களாக விளங்குவர் எல்லா வகைத் தேவைகளையும் பூர்த்தி செய்யவல்ல முதலீட்டுக் கொள்கைகள் உருவாக்கப்படவேண்டும் இதனால் சந்தையின் அளவு அதிகரித்து உற்பத்தியாளர்கள் முதலீடு செய்ய ஊக்கம் பிறக்கும் ஏனெனில் சந்தை சுருங்கியிருப்பதால் நஷ்டமேற்படும் என்ற இடர் நீக்கப்பட்டு மக்களிடம் பொருள்களை வாங்கும் திறன் அதிகரிக்கிறது எனவே பல்வேறு வகையான புதுத்தொழில்களை ஒரே சமயத்தில் ஏற்படுத்தினால் ஒரு தொழில் மற்றொரு தொழிலின் வாடிக்கைதாரராக விளங்கும் என்று கருதப்படுகிறது நாட்டின் ஒரு துறையிலிருந்து அளிக்கப்படும் பொருள்கள் மற்றொரு துறைக்குத் தேவைப்படுகிறது இரண்டாம் துறையின் அளிப்பு மூன்றும் துறையின் தேவையாக விளங்குகிறது உதாரணமாக வேளாண்மைத் துறையின் அளிப்பு தொழில்துறையின் தேவையாக விளங்குகிறது தொழில்துறையில் உற்பத்தியாகும் பொருள்கள் போக்குவரத்து சுரங்கத் தொழில் போன்ற துறைகளுக்குத் தேவைப்படுகிறது இதைத்தான் பலவகைத் தேவைகள் ஒருங்கிணைதல் (Complementarity of Demand) என்கிறோம்

புறச் சிக்கனங்கள்

பேராசிரியர் நூர்க்ஸ் அவர்களின் கருத்துப்படி சமசீர் வளர்ச்சியினால் நாட்டில் எல்லாத் துறைகளும் சம அளவில் வளர்ச்சி பெற்று சந்தையின் அளவு விரிந்து முதலீட்டின் அளவும் பெருகிப்பொதுவாக, பொருளாதார உற்பத்தித்திறன் மகத்தான நிலையை அடைகிறது இதனால் மக்களின் வருவாயும், செலவும் அதிகரித்து சந்தையின் அளவு விரிவடைந்து உற்பத்தியில் புறச் சிக்கனங்கள் (External Economics) ஏற்படுகின்றன எனவே சமசீர் வளர்ச்சியினால் பேரளவு உற்பத்தியின் சிக்கனங்கள் மேலும் பெருகிப் பொருளாதார வளர்ச்சிக் காலத்தில் வளர்ந்து செல் விளைவு (Increasing Returns) ஏற்படுகிறது

இடர் தாங்குதல் பேராசிரியர் P N ரோசன்ஸ்டீன் ரோடான் அவர்களின் கருத்துப்படி பொருள்களைச் சந்தையில்

விற்க இயலாது என்ற இடர் நீக்கப்படுவதே உற்பத்திச் செலவைக் குறைக்கிறது. ஏனெனில், இடர் தாங்குதலும் (Risk-Taking) ஒரு வகைச் செலவே என்று கருதப்படுகிறது. எனவே, சமசீர் வளர்ச்சியினுல் ஒரு வகைச் சிறப்பான புறச் சிக்கனங்கள் கிடைக்கப் பெறுகின்றன என்று ரோடான் கருதுகிருர். அதையே நூர்க்ஸ் அவர்களும் வலியுறுத்தி, "எல்லா வகை உற்பத்தியிலும் ஏற்படும் சம அளவு அதிகரிப்பு, புறச் சிக்கனங்களை விசாலமடையும் சந்தையின் உருவில் தோற்றுவிக்கிறது" என்று குறிப்பிடுகிருர்.

பல்வேறு வகையான தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டால் இருவகையான புறச் சிக்கனங்கள் தோன்றுகின்றன. முதலாவதாக, ஒரு பெரிய வளர்ந்துவரும் தொழிலின் கீழ் செயல்படும் நிறுவனங்கள் புறச் சிக்கனங்களைப் பெறுகின்றன. அச்சிக்கனங்கள் போக்குவரத்து, தொழில்திறன், தொழில்நுட்பம் போன்ற உற்பத்திச் சீரமைப்பு வசதிகளாகும். இரண்டாவதாக, மற்றத் தொழில்களின் வளர்ச்சியால் ஒரு தொழிலுக்குக் கிட்டும் புறச் சிக்கனங்களாகும். அத்தகைய சிக்கனங்கள் மூலப் பொருள்களின் வளர்ச்சி, மின்சார உற்பத்தி, துணைத் தொழில்களின் தோற்றம் போன்றவைகளால் ஏற்படுகின்றன.

ஒருங்கிணைந்த வளர்ச்சி

ஒரு நாட்டில் தேவையான அளவு முதல் அளிப்பு அல்லது தொழிலாளர்களின் அளிப்பு இருந்தால் முதலீட்டின் மூலம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய துறைகளில் நல்ல லாபம் பெற இயலும் என்பது நூர்க்ஸ், ரோடான் ஆகியவர்களின் கருத்தாகும். ஏனெனில் ஒரே துறையில் புறச் சிக்கனங்கள் தோன்றினுல் அதனுல் நன்மை இல்லை. சமசீர் வளர்ச்சியேற்படும் போது பல்வேறு துறைகள் படுக்கை வாட்டிலும், செங்குத்தாகவும் ஒன்றை யொன்று சார்ந்து (horizontal and vertical Interdependence) செயல் புரிந்து முதலீட்டைப் பெருக்குவதால் லாபம் பெருகிச் சந்தையின் அளவு விரிந்து, திரளான, ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சி தோன்றுகின்றது.

வாணிப முன்னேற்றம் : சம சீர் வளர்ச்சி முதலீட்டுக் கொள்கையைப் பின்பற்றி வளர்ச்சியடையா நாடுகளில் அதிக உற்பத்தித்திறன் மூலம் உண்மை வாங்கும் திறன் பற்றுக் குறையை அகற்றி, வறுமை என்னும் நச்சு வளையத்தைத் தகர்த்தெறிய இயலும். மேலும், சமசீர் வளர்ச்சி பன்னாட்டுச் சிறப்புத்

தேர்ச்சியையும் (International specialisation) அதிகரித்து, பன்னாட்டு வாணிபத்தைப் பெருக்குகிறது. எனவே, ஏழ்மை நாடுகள் சம சீர் வளர்ச்சிக் கொள்கையைப் பின் பற்றினால் முதலீடு அதிகரித்து உள் நாட்டுப் பொருளாதார நிலை சீரடையும். சம சீர் வளர்ச்சிக் கொள்கையை, தேவை, அளிப்பு ஆகிய இரு காரணிகளைக் கொண்டும் ஆராயலாம்.

பொருளாதார எழுச்சி

தேவையை அடிப்படையாகக் கொண்டு இக்கருத்தை ஆராயும் போது சம சீர் வளர்ச்சியினால் பல்வேறு துறைகளில் தேவையின் அளவு அதிகரிப்பதால் மூலதன முதலீடு பல்வேறு தொழில்களில் கடல் அலையெனப் பெருகும். இதனால் உற்பத்தியில் பெரிய மாற்றம் ஏற்படும். நுர்க்ஸின் இக்கருத்து "குதித்து எழுச்சியடையும் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டுடன்" (Theory of big push) தொடர்புடையதாக விளங்குகிறது. பேராசிரியர்பென்ஜமின் ஹிக்கின்ஸ்"பொங்கி எழும் வளர்ச்சிக் கோட்பாட்டைக்" கீழ்க்கண்டவாறு விளக்குகிறார். "பொருளாதார வளர்ச்சிக் காரணிகளின் செயலும் தொடர்பும் தாறுமாறாய்க் குவிந்தும், வேறுபட்டும், சிறிதும் ஒருங்கிணைப்பு இன்றியும் (Lumps and discontinuties) காணப்படுகின்றன. எனவே, மாறா வளர்ச்சி கொண்ட பொருளாதாரங்களின் ஆரம்ப வளர்ச்சி நிலையை வேகப்படுத்தி உற்பத்தியும் வருமானமும் அதிகரிக்கச் செய்ய ஒரு குறைந்த பட்ச முயற்சியோ அல்லது பொருளாதாரம் குதித்து எழச் செய்வதோ மிகவும் இன்றியமையாததாகும்." தேங்கிய நிலையில் இருக்கும் பொருளாதாரத்தை இயங்கச் செய்து சீரான வளர்ச்சி பெறச் செய்ய ஒரு குறைந்த பட்ச முதலீடு எல்லாத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே "குதித்து எழும்" வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகும். பல்வேறு அளவு கொண்ட, ஒன்றையொன்று தொடர்பு கொண்ட துறைகளின் முதலீட்டால் பொருளாதாரம் "குதித்து எழுச்சி பெறுகிறது" என்ற கருத்து "சம சீர் வளர்ச்சிக் கொள்கையிலும்" உள் அடங்கியுள்ளது. உதாரணமாக, மணல் நிரப்பப்பட்ட மோட்டார் வாகனத்தைப் பலத்த சக்தி கொண்டு தள்ளிவிடுவதைப் போல், தேக்க நிலையிலிருக்கும் பொருளாதாரத்தைத் தகுந்த முதலீட்டால் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பது "குதித்து எழும்" கோட்பாட்டின் உட்கருத்தாகும். சம சீர் வளர்ச்சி ஏற்படுவதற்கு முன், வளர்ச்சித் தடைகளைத்

தகர்த்தெறிய பலத்த சக்தியால் பொருளாதாரம் எழுச்சியடையச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

நிறைவு செய்யும் தேவை

சம சீர் வளர்ச்சியை மேற்கொண்டால் பொருள்களின் அளிப்பும் சீரான முறையில் தடையின்றிப் பல்வேறு துறைகளுக்குக் கிடைக்கிறது. உதாரணமாக, தொழில் துறையும் வேளாண்மைத் துறையும் ஒரே சமயத்தில் சம வளர்ச்சியைப் பெற்ருல் ஒன்றின் தேவை மற்ருென்றின் அளிப்பால் சம அளவில் சரி செய்யப்பட முடியும். வேளாண்மை வளர்ச்சியும் தொழில் முன்னேற்றமும் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொள்ளாமல் நிறைவு செய்பவைகளாய் (Complementary) இருக்க வேண்டும். ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி வீதம், பெரும்பாலும் அதற்கு இணையான வேளாண்மைமுன்னேற்றத்தையே பொறுத்ததாகும். ஏனெனில், தொழில்துறைக்கு அவசியமான மூலப் பொருள்கள் போன்றவற்றை வேளாண்மைத் துறைதான் அளித்து வருகிறது. பொதுவாக, நகரங்களில் வாழும் சமூகத்தினருக்கு வேளாண்மைத் துறைதான் கச்சாப் பொருள்கள். சில சாதனங்கள், உணவு போன்றவற்றை அளித்து வருகிறது; வேளாண்மைத் தொழிலல்லாத மற்ற உற்பத்தித் துறைகளில் அதிகமான தொழிலாளர்கள் வேலையில் அமர்ந்தால் அவர்களுக்குப் போதுமான அளவு உணவுப் பொருள்களை அளிப்பது வேளாண்மைத் துறையாகும். மேலும், நாடு தொழில்மயமாக்கப்பட்டால் உற்பத்தி செய்யப்பட்ட சாதாரண நுகர்வுப் பொருள்களை விற்பனை செய்வதற்குத் தகுந்த சந்தையாக விவசாயிகள் விளங்குகின்றனர். எனவே, செய்பொருள் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளின் வருமானம் அதிகரிக்க வேண்டியது முதலில் இன்றியமையாததாகும். விவசாய மல்லாத வேறு துறைகள் வளர்ந்து விரிவடையும் சமயத்தில், மூலப் பொருள்களை அளிக்கவல்ல வேளாண்மைத்துறையை வளர்ச்சியடையச் செய்யா விட்டால், நாட்டில் பண வீக்கம் தோன்றும். இந்தியாவில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில் துறைக்கு முதலிடம் அளிக்கப்பட்டு வேளாண்மைத் துறையில் முதலீடு குறைக்கப்பட்டதால், குன்றிய தொழில் வளர்ச்சியும், பணவீக்கமும் ஏற்பட்டது. எனவே, நாட்டின் வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் சம சீர் வளர்ச்சி ஏற்பட சமமான முதலீடு இருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒரே சமய வளர்ச்சி : பேராசிரியர் W. A. லூயிஸ் அவர்கள் "பெரும்பாலான வளர்ச்சிச் சிக்கல்களைத் தீர்க்க, பல்வேறு துறைகளில் தகுந்த சமசீர் நிலையை ஏற்படுத்த வேண்டும்" என்று குறிப்பிடுகிறார். தொழில் துறை, வேளாண்மைத்துறை ஆகியவைகளிலும், உள்நாட்டுக்கான உற்பத்தி, ஏற்றுமதிக் கான உற்பத்தி ஆகியவைகளிலும் சமசீர் நிலை ஏற்படும் அளவுக்கு எல்லாத் துறைகளும் ஒரே சமயத்தில் சம அளவில் வளர்ச்சியடையச் செய்வதற்காக, செயல் திட்டங்களை மேற் கொள்ள வேண்டும். எல்லாத் துறைகளும் ஒரே சமயத்தில் விரிவடைய வேண்டு மென்பது மறுக்க முடியாத உண்மை யாகும்.

சம சீர் வளர்ச்சி என்பது நாட்டின் எல்லாப் பகுதிகளும் ஒரே சமயத்தில் சம அளவில் எல்லாத் துறைகளின் ஒத்துழைப் போடும் வளர்ச்சியடைவதைத்தான் குறிக்கிறது. சில பகுதிகள் விரைவான முன்னேற்றமும் மற்றப் பகுதிகள் வளர்ச்சியில் பிற்பட்டு இருக்கும் நிலையும் ஏற்படுவது சரி இல்லை. எல்லாத் துறைகளின் உற்பத்தியும் சமமாகப் பங்கிடப்பட்ட எச்சமோ அல்லது பற்றாக்குறையோ இன்றி ஒவ்வொரு துறையும் செயல்பட வேண்டும். நூர்க்ஸ் நுகர்ச்சிப்பொருள் தொழில்கள் சம சீர் வளர்ச்சியைப் பெறவேண்டுமென்று வற்புறுத்தினார். ஆனால், சம சீர் வளர்ச்சி வேளாண்மை, தொழில்துறை ஆகிய வைகளிலும், நுகர்வுப் பொருள்கள், முதல் பொருள்கள் ஆகிய தொழில்களுக் கிடையேயும், பொருளாதார வளர்ச்சிக்கானதும் சமூக முன்னேற்றத்திற்கான முதலீட்டிற்கிடையேயும் ஏற்பட வேண்டும்.

சம சீர் வளர்ச்சியின் இரு முக்கிய அம்சங்களாவன :

(1) ஒரே சமயத்தில் (Simultanity) எல்லாத் துறைகளிலும் சமமான முதலீடு ஏற்பட அரசு செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

(2) சம சீர் வளர்ச்சியைச் சாதிக்க விரும்பும் நாடுகளில் மத்திய பொருளாதாரத் திட்டங்கள் தீட்டப்பட்டு எல்லாத் துறைகளுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டும்.

ஆய்வுரை : சம சீரான வளர்ச்சிக் கொள்கை, பேராசிரியர் ஹான்ஸ் சிங்கர், மார்கஸ் பிளீமிங், A. O. ஹிர்ச்மேன் (A. O. Hirschman) கின்டில் பர்கர் (Kindleberger) போன்றவர் களால் குறையுள்ள கோட்பாடாகக் கருதப்பட்டுள்ளது.

(1) ஒரு நாட்டில் போதுமான அளவு மூலதனமும் தொழில் திறமும் அளிக்கப்பட்டால்தான் எல்லாத் துறைகளிலும் சமமான முதலீட்டை மேற்கொண்டு சம சீர் வளர்ச்சியைச் சாதிக்க முடியும். ஆனால், ஏழ்மை நாடுகள் அனைத்திலுமே முதல் பற்றாக்குறையும் தொழில் நுட்ப நிபுணர்களின் தட்டுப்பாடும் வெகு நாட்களாகவே இருந்து வருகிறது. எனவே, ஒரு சில இன்றியமையாத துறைகளில், திட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட சாதனப் பங்கீட்டின் (Allocation of resources) அடிப்படையில்தான் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். எல்லாத் துறைகளுமே முக்கியமானவைகளாக இருக்கலாம். ஆனால், ஒரே சமயத்தில் எல்லாத் துறைகளிலும் முதலீடு செய்தால் முதல் வசதியும், உழைப்புத்திறனும் போதுமான அளவு இல்லாமையால் சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டிய துறைகள் சீரான வளர்ச்சி பெறுவதில்லை. முதல் பற்றாக்குறை அதிகமாக உள்ள நாடுகளில் சமசீர் வளர்ச்சிக்கருத்தை அமுலாக்க இயலாது என்று பேராசிரியர் ஹான்ஸ் சிங்கர் குறிப்பிடுகிறார். திரு. மார்கஸ் பிளிமிங் (Marcus Fleming) அவர்களின் கருத்துப்படி, "உற்பத்திக் காரணிகளின் அளிப்பில் பற்றாக்குறை இருப்பதால், பல்வேறு தொழில்களின் ஒத்துழைப்பு நிறைவு செய்வதாய் (Complementary) இருப்பதற்குப் பதிலாக போட்டியை (Competitive) ஏற்படுத்தும்." எனவே, போட்டியினால் நுகர்வுப் பொருள் தொழில்களில் பேரளவு உற்பத்திச் சிக்கனங்கள்ஏற்பட்டாலும், மற்றத் துறைகளில் சிக்கனமின்மை (Diseconomics) ஏற்படும்.

சம சீர் வளர்ச்சிக்கு ஏராளமான வளங்களும் சாதனங்களும் அதிக அளவில் தேவைப்படுவதால் இக்கருத்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத்தான் பொருந்தும். ஏழ்மை நாடுகளின் பொருளாதாரச் சிக்கலாகிய சாதனத் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் கொள்கையாக, சம சீர் வளர்ச்சிக் கோட்பாடு இல்லை என்று பேராசிரியர் சிங்கர் குறை கூறுகிறார்.

ஆனால், சம சீர் வளர்ச்சிக் கொள்கையைஆதரிப்பவர்களின் கருத்துப்படி, முதல், உழைப்புத்திறன் தட்டுப்பாடு ஏழ்மை நாடுகளில் இருந்தாலும் தொழிலாளர்களின் அளிப்பு ஏராளமாக இருப்பதால் எல்லாத் துறைகளிலும் ஒரே சமயத்தில் நிறைவு செய்யும் அளவுக்கு உழைப்பு–செறிந்த உற்பத்தி (Labour-intensive) முறையைப் பின் பற்றலாம். இதற்கு உண்மையில் சிறிது மூலதனம் தேவைப்படலாம். இதை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இருப்பினும், ஏழ்மை

நாடுகளில் தொழிலதிபர் திறன், நிர்வாகத்திறன் குன்றியிருப்பதால் உழைப்பு-செறிந்த முறைப்படி உற்பத்தியில் ஈடுபட்டாலும் சமசீர்வளர்ச்சியை அடைய இயலாது. எந்த அளவுக்கு உழைப்பு-செறிந்த தொழில்கள் மற்றத் துறைகளின் உற்பத்தியை ஏற்றுக் கொண்டு செயல் புரிய இயலும் என்பது ஐயப்பாட்டுக் குரியதாகும்.

2. பிற்பட்ட நாடுகளில் சம வளர்ச்சிக் கருத்தைச் செயல்படுத்த முடியும் என்பது கருத்தளவில் ஏற்றுக் கொள்ளத் தக்கதாயிருந்தாலும் செயல் அளவில் இயலாததாகும். ஏனெனில், சம சீர் வளர்ச்சிக்கு இன்றியமையாத வளங்களும் சாதனங்களும் போதுமான அளவு ஏழ்மை நாடுகளில் இல்லை. கின்டில் பர்கர், "சம சீர் வளர்ச்சி என்பது செய்முறைக்கு ஊக்கம் அளிக்கும் சூளுரை (Slogan) யாக இல்லை" என்று குறிப்பிடுகிறார். எல்லாவற்றையும் வளர்ச்சியடையச் செய்ய வில்லை என்றால் ஒன்றையுமே வளர்ச்சியடையச் செய்ய முடியாது என்பது அல்லது பரந்த முறையில் மட்டும்தான் பொருளாதார வளர்ச்சியைத் தோற்றுவிக்க இயலும் என்பதெல்லாம் நிச்சயமாக இயலாத காரியமே என்று கின்டில் பர்கர் விளக்குகிறார். இதனால் நிர்வாகத்துறையின்மேல் பெருஞ்சுமை யேற்படும் தவறுகளும், நிர்வாகச் சீர்கேடும் தோன்றும்.

3. முதலீட்டைப் பெருக்கிச் சந்தையின் அளவை விரிவடையச் செய்ய சமசீர் வளர்ச்சி அவசியமாகும் என்று நூர்க்ஸ் கருதினார். ஒவ்வொரு துறையிலும் உற்பத்தியாகும் பொருள்கள் நிறைவு செய்யும் முறையில் அமைய சமசீர் வளர்ச்சிக் கருத்தைச் செயலாக்க வேண்டுமென்றும் கூறினார். ஆனால், ஒரு புதுவகை முதலீட்டால் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உள்நாட்டுச் சந்தை சுருங்கியிருப்பதால் விற்கப்பட இயலவில்லை என்றால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதை நூர்க்ஸ் கவனிக்கத் தவறிவிட்டார். எனவே, நூர்க்ஸ் அயல்நாட்டுச் சந்தையையும் உள்நாட்டுப் பொருள்களை விற்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமென்பதை உணரவில்லை.

4. சம சீர் வளர்ச்சிக் கோட்பாட்டின் பிரதான குறைபாடு, "அது ஒரு வளர்ச்சிக் கோட்பாடே அல்ல" என்று பேராசிரியர் ஹிர்ச்மேன் குற்றஞ்சாட்டுகிறார். சமசீர் வளர்ச்சிக்கோட்பாடு, ஒரு முற்றிலும் புதிய, தன்னிறைவு பெற்ற நவீன தொழில்வளர்ச்சி பெற்ற பொருளாதாரத்தை, வளர்ச்சியில்லா

தேக்கநிலே, சம அளவு தன்னிறைவு ஆகியவைகளேப் பெற்ற தொன்மையான பொருளாதாரத் துறையின் மேல் சுமத்தப் பட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டதாக விளங்குகிறது. இது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் கோட்பாடாக இல்லே. பொருளாதார வளர்ச்சி என்பது பிற்பட்ட ஏழ்மை நாடு வளர்ச்சியடைந்த தொழில் துறை நாடாக மாற்றம் பெறும் முறையே ஆகும். அத்தகைய வளர்ச்சி மாற்றத்தை சம சீர் வளர்ச்சிக் கோட்பாடு வலியுறுத்த வில்லே. ஏனெனில், அது வளர்ச்சி குறைந்த சம நிலேயை (Underemployment Equilibirium) எந்தக் கட்டத்தில் தகர்த்தெறிய வேண்டுமென்று விளக்கவில்லே. எனவே, இக்கோட்பாடு வளர்ச்சி முறையைத் தெளிவாக விளக்காமல் இருவகை வளர்ச்சி முறை (Dualistic-pattern) யைக் கொண்டதாக உள்ளது. ஆனல், ஹிர்ச்மேன் அவர்களின் இடித்துரை நியாயமானதாக இல்லே. ஏனெனில், சமசீர்வளர்ச்சிக்கோட்பாட்டைத்தந்தவர்கள் ஒருவகைப்பொரு ளாதாரத்தின் மேல் மற்ருெரு வகை பொருளாதாரத்தைச் சுமத்த வேண்டுமென்று எப்போதும் குறிப்பிடவில்லே. பொரு ளாதாரத்தின் எல்லாப் பகுதிகளும் ஓரே சமயத்தில் பொருளா தார வளர்ச்சியைப் பெற்ருல் தேவை, அளிப்பு ஆகியவைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வு இன்னல்களேத் தவிர்க்க முடியும் என் பதையே அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

5. பிற்பட்ட நாடுகளில் சம சீர் வளர்ச்சிக் கொள்கையை அமுலாக்குவதிலுள்ள முக்கிய பிரச்சினே உற்பத்திக் காரணிகள் சமவிகிதத்தில் கிடைக்காமையே ஆகும். சில வளர்ச்சியடையா நாடுகளில் ஏராளமான தொழிலாளர்களும், ஆனல், மிகக் குறைந்த மூலதனமும், தொழில் அமைப்பும், தேடிக் கண்டு பிடிக்கப்பட்ட வளங்களும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. மற்ற நாடுகளில் மிகக் குறைந்த தொழிலாளர்களும், மூலதனமும் ஆனல், ஏராளமான மற்ற வளங்களும் இருப்பதால் உற்பத் திக் காரணிகள் சம விகிதத்தில் உற்பத்தியில் ஈடுபட இயல வில்லே. எனவே, சமசீர் வளர்ச்சிக் கருத்தை அமுலாக்குவதில் இத்தகைய சிக்கல்கள் தோன்றுகின்றன.

6. இறுதியாக, சமசீர் வளர்ச்சிக் கொள்கை முன்னேறிய நாடுகளுக்கும் பிற்பட்ட நாடுகளுக்கு மிடையே உள்ள உண்மை வேறுபாட்டைத் தெளிவாகக் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. வளர்ச்சியடையா நாடுகளில் பயன்படுத்தப் படாத வளங்கள் இருந்தாலும் அவைகள் கிடைப்பதற்கு அருமை உடையவைகளாகவும், போதாதவைகளாகவும்

உள்ளன. எனவே, வெளிப்படையாகவே சம சீர் வளர்ச்சிக் கொள்கை பிற்பட்ட நாடுகளில் அமுலாக்க முடியாது. வளங்கள் ஏராளமாகவும் போதுமான அளவும் இருக்கும் முன்னேறிய நாடுகளில்தான் இக்கொள்கையைச் சிறப்பாக அமுலாக்க முடியும்.

சமசீர் வளர்ச்சிக்கருத்து, ''முதன் முதலாக வேலைக் குறைவு கொண்ட பொருளாதார நிலைக்குத் தீர்வாகக் கருதப்பட்ட மருந்து, வளர்ச்சி குறைந்த பொருளாதார நிலைக்குக் கொடுக்கப்படுகிறது'' என்று ஹிர்ச்மேன் குறிப்பிடுகிறார்.

முடிவுரை: இக்கோட்பாட்டில் குறைகளிருப்பினும், அதை ஓரளவுக்கு உண்மையான கருத்துக்களைக் கொண்டது எனலாம். சமசீர் வளர்ச்சிக் கொள்கையைப் பொருளாதாரத்தின் சிறிய அமைப்புகளைக் கொண்ட துறைகளில் ஒரு வகை உள்ளார்ந்த சமநிலையைப் பெறப் பயன்படுத்த முடியும். உதாரணமாக, இந்தியாவில் தொழிற்பேட்டைகள் இத்தகைய சமநிலையைப் பெற்றுள்ளன. பொருளாதார வளர்ச்சி தடைப்படாமலிருக்கப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் ஓரளவாவது சமவிகிதத்தில் ஒருங்கிணைந்து வளர்ச்சி பெறவேண்டுமென்பது உண்மையாகும். ஏனெனில், தம் பொருளுக்குத் தேவை குறைவாக உள்ளது என்று எந்தப் பொருளாதாரத் துறையும் வளர்ச்சி குன்றி இருப்பது சிறந்ததாகாது.

6. சரிசமமில்லா வளர்ச்சிக் கொள்கை

விளக்கம்: சமசீர் வளர்ச்சிக் கொள்கைக்கு மாருக விளங்கும் வளர்ச்சியின் சிறப்புக் (Strategy) கொள்கை, சரிசமமில்லா வளர்ச்சிக் (Unbalanced Growth) கொள்கையாகும். திரு. A. O. ஹிர்ச்மேன், திரு. சிங்கர் போன்ற பொருளியல் அறிஞர்கள் பேராசிரியர் நூர்க்ஸின் சமசீர் வளர்ச்சிக் கொள்கையைக் குறை கூறி, பொருளாதார வளர்ச்சியை வேகப் படுத்தும் கருவியாக விளங்குவது சரிசமமில்லாக் கொள்கையே என்று எடுத்துரைக்கின்றனர். வளர்ச்சியடையா நாடுகளில் மூலதனம் உழைப்புத்திறன், நிர்வாகத்திறமை போன்றவைகளில் பற்ருக்குறை உள்ளதால், பல்வேறு துறைகளும் சரிசம நிலையைக் காட்டிலும் சரிசமமின்மையே பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். உதாரணமாக, தொழில்துறை, வேளாண்மை, சமூக நலனுக்கான பணிகள் போன்ற எல்லாத் துறைகளிலும் சம முதலீட்டைச் செய்வதைக் காட்டிலும், ஏதேனும் ஒரு துறையில் மட்டும் முதலீட்டைச் செய்வதால் மற்றத் துறைகளும் வளர்ச்சியை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட முடியும் என்று கருதப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சியின்போது சரிசமமின்மையை ஏற்படுத்துதலே தலைசிறந்த வளர்ச்சிக்கொள்கையாகும் என்று ஹிர்ச்மேன் குறிப்பிடுகிருர். உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வரலாற்றை நோக்குங்கால், தொழிற்புரட்சி ஏற்பட்டுள்ள நாடுகளிலெல்லாம் ஒன்றையொன்று ஆதரவு தரும் எல்லாத் துறைகளிலும் திட்டமிடப்பட்ட முறையில் சரிசமமான நிலையில் ஒரே சமயத்தில் முதலீடு செய்யப்பட்டு தொழிற்புரட்சி தோன்றவில்லை. மேலும் கீழுமாக மாறும் தொழில் மாற்றங்களால் பல்வேறு துறைகளில் ஏற்றத்தாழ்வுகள் தோன்றி ஒரு நாட்டில் வளர்ச்சி ஏற்படுகிறது. ஏற்றத்

தாழ்வுகள் ஏற்படாமல் ஒரே சீராகவும், நிலையாகவும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட இயலாது. எனவே, சரிசம நிலை என்பது தேக்கமடைந்த பொருளாதார நிலையைத் தான் குறிக்கும். சரிசமமின்மை என்பது பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து முன்னேக்கி நகரச் செய்யும் தன்மையுடையதாகும். ஒரு நாடு சரிசம நிலைக்கு வந்தபின் ஒரு குறித்த காலத்தில் நிலைமைக்கேற்றபடி முழு ஒழுங்குநிலை ஏற்படுவதால், பொருளாதாரம் ஊக்கம் பெற்று மேற்கொண்டு தீவிர பொருளாதார வளர்ச்சியைப் பெற இயலாது.

நிறைவிலா வளர்ச்சியைப் போக்குதல்

பேராசிரியர் ஹிர்ச்மேன் அவர்களின் கருத்துப்படி வளர்ச்சியடையா நாடுகளில் காணப்படும் குறைபாடு, குறைந்தவருமான மட்டத்தில் பொருளாதாரம் அமைந்திருக்கும் சமநிலையாகும். இதையே அவர் ''நிறைவிலா வளர்ச்சிச் சமநிலை'' ('' the equilibirium of underdevelopment) என்று வருணிக்கிருர். அதாவது உற்பத்திநுகர்வு, சேமிப்பு, முதலீடு ஆகியவைகள் ஒவ்வொன்றும் ஒழுங்காக மிகக் குறைந்த அளவைக் கொண்டே அமைந்து சமநிலையில் இருக்கின்றன. இத்தகையவளர்ச்சியில்லாச் சமநிலை தான் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்தடையாய் விளங்குகின்றது. எனவே, குறை மட்டத்திலுள்ள இச்சமநிலையை தகர்த்தெறிந்து விரைவான பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க மிகச் சிறந்தது சரிசம வளர்ச்சியின்மைக் கொள்கையே ஆகும். பொருளாதாரத்தில் வேண்டுமென்றே திட்டமிட்டு சம சீரின்மையை ஏற்படுத்தினல்தான் மாரு நிலையிலிருக்கும் பொருளாதாரம் ஊக்கமும் ஆக்கமும் பெறும். மேலும், நாட்டில் ஒரு பகுதியில் அல்லது துறையில் முதலீட்டைப் பெருக்கி வளர்ச்சியை அதிகரித்தால், மற்றத்துறைகளில் ஊக்க உணர்வு தாஞகவே ஏற்பட்டு, தூண்டப்பட்ட முதலீடு (induced investment) பெருகி நாடு முன்னேற்றமடையும். எனவே, பொருளாதாரத்தில சம சீரின்மையைத் தோற்றுவித்தால் தொடர்ந்து நாட்டில் சம சீரின்மை ஏற்பட்டு, தூண்டப்பட்ட முதலீடு பெருகும். ஆனல், சம சீர் வளர்ச்சிக் கொள்கையைப் பின்பற்றினல் அது சிக்கனமின்மையையும் வளங்கள் வீணடிக்கப்படும் நிலையையுமே ஏற்படுத்தும் என்று சமசீரில்லா வளர்ச்சிக் கருத்தைத் தந்தவர்கள் கருதுகின்றனர். சரிசமமில்லா முதலீட்டை அதிகரித்தால் நாட்டில் தாமாகவே இயங்கும் பொருளாதாரப் போக்குகளால், சமநிலையைச் சுலபமாக சாதிக்க இயலும் என்று ஹிர்ச்மேன் கருதுகிருர்.

வளர்ச்சித்தடைகளும் முன்னேற்றமும்

சரிசம மில்லா வளர்ச்சியினுல் ஏற்படக்கூடிய பற்ருக் குறைகள், வளர்ச்சித் தடைகள் ஆகியவைகளால் நாட்டில் புதிய கண்டு பிடிப்புக்களும், புதிய உற்பத்தி முறைகளும் தோன்ற, சிறந்த வாய்ப்பு கிடைக்குமென்று கூறப்படுகிறது. சரிசம மின்மை நாட்டில் தீவிர பொருளாதார வளர்ச்சி ஏற்பட ஊக்கம் தந்து வளர்ச்சியின் வேகத்தை அதிகப்படுத்துகிறது.

ஒரு தலைப்பட்ட முதலீடு

சம சீரில்லாப் பொருளாதார நிலையை ஏற்படுத்த, கீழ்க் காணும் இருவகை முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஹிர்ச்மேன் அறிவுறுத்துகிருர்.

(1) சமூக நலனை அதிகப்படுத்தும் துறைகளில் முதலீடு செய்தல் (Social overhead capital)

(2) நேரடியாய் ஆக்க நடவடிக்கைகளில் முதலீடு செய்தல் (Directly productive activities) சமூக நலன் முதலீடு என்பது "முதல்நிலை, இரண்டாம்படி, மூன்ரும்படி (Tertiary) உற்பத்தி நடவடிக்கைகளைச் சிறப்பாய்ப் பணி புரியச் செய்யவைக்கத் தேவையான அடிப்படைப் பணிகளைக்" குறிக்கிறது. உதாரண மாக, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, நீர்ப்பாசனம், போன்ற துறைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் சமூக நலன் முதலீடாகும்.

தூண்டுதல் முதலீடுகள்

முதலில் சமூக நலன் முதலீட்டை அதிகரிக்கச் செய்தால் தாஞகவே பொருளாதாரத்தில் நேரிடை ஆக்கத்திற்கான நடவடிக்கைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்படும். ஏனெனில், சமூக நலன் முதலீட்டால் பொருளாதார வளர்ச் சிக்குத் தேவையான உள்ளீடுகளின் விலைகள் குறைந்து வேளாண்மை, தொழில்துறை போன்ற துறைகள் உதவிக் கொடைகளைப் பெற்று வளர முடிகிறது. உற்பத்தியைப் பெருக்கவல்ல நடவடிக்கைகளின் மேல் முதலீடு அதிகரிக்க ஒரு சில சமூக நலன் முதலீடுகளும் முதலில் அவசியமாகின்றன. எனவே, பொருளாதாரத்தைச் சமசீரில்லா நிலைக்குக் கொண்டு வர சமூக நலன் முதலீட்டைப் பெருக்க வேண்டும். அவ்வாறு செய்தால், அதைத் தொடர்ந்து நாட்டில் தூண்டப்பட்ட நேரடி ஆக்க முதலீடுகள் பெருகும்.

மேற் குறிப்பிட்டதைப் போலவே, அரசாங்கம் உற்பத்தியைப் பெருக்கவல்ல நடவடிக்கைகளில் நேரடியாக முதன் முதலாக முதலீட்டை அதிகரித்தாலும் பொருளாதாரத்தில் சமசீரில்லா வளர்ச்சி நிலையைத் தோற்றுவிக்க இயலும். எனவே உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் நேரடி முதலீடு பெருகினுல், சமூக நலன் முதலீட்டில் பற்ருக்குறை ஏற்படுவது தவிர்க்கப்பட அத்துறையிலும் அடுத்து தானுகவே தூண்டுதல் முதலீடு பெருகும். அரசியல் தலையீடு சமூக நலன் முதலீட்டை அதிகரிக்க ஊக்குவிக்கும். ஹிர்ச்மேன் அவர்களின் கருத்துப்படி ஒரு பொருளாதாரத்தில் தூண்டுதல் முதலீடு (Induced investment) இரு காரணிகளால் தொடர்ந்து இயக்கப்படுகிறது. அவைகளாவன :—

(1) லாப எதிர்நோக்குகள்

(2) அரசியல் தலையீடு

லாப நோக்கு, சமூகநலன் முதலீடு ஏற்பட்டபின் உற்பத்தித் துறைகளில் தொடர்ந்து நேரடி முதலீடு பெருக வகை செய்கிறது. இத்தகைய முறையில் ஏற்படும் வளர்ச்சி, "சமூக நலன் மூலதனத்தின் மிதமான சக்தியின் மூலம் வளர்ச்சி பெறுதல்" (Development via excess capacity of social overhead cost) என்று அழைக்கப்படுகிறது. அது போலவே, நேரடி உற்பத்தி நடவடிக்கைகளில் முதலீடு முதலில் அதிகரித்தால் அரசியல் தலையீட்டின் மூலம் சமூக நலன் முதலீடும் தொடர்ந்து ஏற்படுகிறது. இவ்வாறு உற்பத்தி நடவடிக்கைகளில் முதலீடு செய்வதால் சமூக நலனுக்கான முதலீடும் பெருகி வளர்ச்சி ஏற்படுவது சமூக நலனுக்கான துறைகளில் மேற்கொள்ளப்படும் முதலீட்டின் பற்ருக்குறையினுல் ஏற்படும் வளர்ச்சி (development via shortage of social overhead cost) என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இவ்விருவகைத் தொடர்நிலை முதலீட்டுகளில் எவ்வகை முதலீடு வளர்ச்சிக்கு உகந்த தீவிரமான சுய-இயக்கு சக்தி கொண்ட தொடர்நிலை முதலீடு என்பதை அறிந்து அதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இருவகை தொடர் வரிசை கொண்ட முதலீட்டையும் ஒரே சமயத்தில் மேற்கொள்ள முடியாது என்று ஹிர்ச்மேன் கருதுகிருர். ஏனெனில், ஏழ்மை நாடுகளில் அதற்கேற்ற வளங்களும் சாதனங்களும் போதுமான அளவு இல்லை.

வளர்ச்சிக்கான ஊக்கமும், அழுத்தமும்

எனவே, சம சீரான வளர்ச்சி ஏழ்மை நாடுகளில் ஒரே சமயத்தில் தோன்ற இயலாது. மேலும், அது விரும்பத்தக்கதும்

அல்ல என்று ஹிர்ச்மேன் விவாதிக்கிருர். நெடுங்காலம் இருக்கத்தக்க சம சீரில்லாப் பொருளாதாரத்தில் வளர்ச்சி மிக விரைவாக ஏற்படும். ஏனெனில், அத்தகைய நிலேயில் தான் பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்கமும் அழுத்தமும் அதிகமாக ஏற்படும். ஆகையால், வேண்டுமென்றே பொருளாதாரத்தைச்சமசீரில்லா வளர்ச்சி நிலேயில் வைப்பது தான் பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க சிறந்த வழி என்று ஹிர்ச்மேன் வாதிடுகிருர்.

சமசீரான வளர்ச்சி ஒரு வளர்ச்சி வகையாகவோ (Process) அல்லது பொருளாதார நடவடிக்கைகளின்முடிவாகவோ (End) இருக்கலாம். அது பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்த, பயன்படுத்தத் தகுந்த முறையே என்று நுர்க்ஸ் விவாதிக்கிருர். ஆனுல், சமசீரில்லா வளர்ச்சிக் கோட்பாட்டைத் தந்தவர்கள், இம் முறையினுல் சமசீரான வளர்ச்சியை நிலேயான சம சீரில்லா நிலேயின் மூலம் அடைய முடியுமென்று கருதுகின்றனர்.

உற்பத்திச் சிக்கனங்கள்

தேவைகளின் நிறைவுப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் சமசீரான வளர்ச்சியைப் பெற இயலும் என்பது நுர்க்ஸின் கருத்தாகும். சமசீரில்லா வளர்ச்சியினுல் ஏற்படும் பற்ருக்குறை, வளர்ச்சித்தடைகள் (Bottle necks) போன்றவைகள் புதிய கண்டு பிடிப்புக்கள் தோன்ற ஊக்கமும், ஆக்கமும் அளிக்கின்றன. இதனுல், பேரளவு உற்பத்தி முறை ஏற்பட்டு உற்பத்தியின் அகச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் தோன்றி உற்பத்திச் செலவைக் குறைத்து லாபத்தை அதிகரிக்கின்றன. எனவே, சமசீரான வளர்ச்சியினுல் கிடைக்கும் நன்மைகளுக்கும் சமசீரில்லா வளர்ச்சியினுல் பெறப்படும் அளவுச் சிக்கனங்களுக்கும் இடையே ஒரு நியாயமான சமரச சம நிலேயை ஏற்படுத்த வேண்டும்.

குறைபாடுகள் : (1) சமசீரில்லா வளர்ச்சியினுல் மித ஆக்க சக்தி ஏற்படுத்தப்பட்டு வீணடிக்கப் படுகிறது. ஒரு துறையில், மற்றத் துறைகளேக் காட்டிலும் அதிக வளர்ச்சி ஏற்பட்டால் மற்றத்துறைகளும் சமவளர்ச்சி அடையும் வரையில்சாதனங்கள் பயனற்று வீணுக இருக்க வேண்டியுள்ளது. இத்தகைய நிலே இந்தியாவிலும் இரண்டாம் திட்ட காலத்தில் ஏற்பட்டது. இக்காலத்தில் பேரார்வமும், விருப்பமும் கொண்ட திட்ட நிபுணர்கள் பேரளவுத் தொழில்களின் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்து விட்டு வேளாண்மைத் துறையைப் புறக்கணித்

தனர். மூலப் பொருள்களைத் தொழில்துறைக்கும் மற்றத் துறைகளுக்கும் வழங்கவல்ல வேளாண்மைத் துறை புறக்கணிக்கப்பட்டதால் தொழில் துறையின் வளர்ச்சி இந்தியாவில் இத்திட்ட காலத்தில் குன்றியது. எனவே, வளர்ச்சி சமசீரான நிலையில் வைக்கப்பட்டால், மித மிஞ்சிய சக்தி வீணடிக்கப்படாமலும் ஒவ்வொரு துறையும் தம் பொருள்களுக்கு ஏற்ற சந்தையைப் பெற இயலும்.

2. சம சீரில்லா வளர்ச்சிக் கருத்து வளர்ச்சியின்போது ஏற்படும் தூண்டுதலைப்பற்றி வலியுறுத்திக் கூறியதே தவிர, அதனால் ஏற்படுத்தப்படும் எதிர்ப்புகளைக் கவனிக்க வில்லை. சமசீரில்லா வளர்ச்சிக் கோட்பாட்டைத் தந்தவர்கள் செயல் திறமுடைய துறைகள் மற்றத் துறைகளைத் தங்கள் பால் ஈர்த்து வளர்ச்சியடையச் செய்யும் என்றும், சமசீரான வளர்ச்சிக் கருத்தைத் தந்தவர்கள் அடங்கி இருக்கும் (Passive) துறைகள் செயல்திறமுடைய துறைகளைத் தங்கள்பால் இழுத்து வளர்ச்சியடையச் செய்யும் என்றும் விவாதிக்கின்றனர். எல்லாத் துறைகளுமே செயல்திறமுடைய (Active) துறைகளாக இருப்பது ஒரு பொருளாதாரத்திற்கு மிகவும் நல்லது. எனவே, செயல் திறமுடைய துறைகளை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளைத் தூண்டுதல்கள், பொருளாதாரத் தடைகள் ஆகியவைகளின் மூலம் மேற்கொள்ள முடியும்.

3. சம சீரில்லா வளர்ச்சிக் கோட்பாட்டைத் தந்தவர்கள் கீழ்க்கண்ட பிரச்சினைகளுக்கு விளக்கம் தரவில்லை. முதலாவதாக, உத்தம அளவு சம சீரின்மையின் அளவு எவ்வளவு இருக்க வேண்டுமென்பதற்கும், எங்கு சமசீரின்மையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்கும் சரியான விடையை அவர்கள் கூறவில்லை. இரண்டாவதாக, விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு சமசீரின்மை தேவைப்படும் என்பதையும் அவர்கள் தெளிவாகக் கூறவில்லை. மூன்றாவதாக, சமசீரின்மைஅமுலாக்கப்படும்போது பொருளாதாரத்தில் வளர்ச்சிக்குரிய அம்சங்கள் (growing points) எவை என்பதையும் இக்கோட்பாடு உணர்த்தவில்லை. நான்காவதாக, எவ்வளவு, என்ன வகை முதலீடு தேவைப்படும் என்பதைப் புலப்படுத்தவில்லை. ஐந்தாவதாக, சமசீரின்மையை ஏற்படுத்த எப்படி செயல்திறமுடைய துறைகளைத் தேர்ந்தெடுப்பது என்பதையும் இக் கோட்பாடு ஆய்ந்து கூறவில்லை. எனவே, இக் கோட்பாடு முழுமையானதாகக் கருதப்பட இயலாது.

4. இக்கோட்பாடு பொருளாதாரத்தில் சமசீரின்மையினால் ஏற்படும் பணவீக்க அழுத்தங்களைக் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. பொருளாதாரத்தின் ஒரு குறித்த சிறப்புத் துறைகளில் ஏராளமான முதலீடு மேற்கொள்ளப்பட்டால் மக்களின் வருவாய் அதிகரித்து நுகர்வுப் பொருள்களின் தேவை அதிகரிக்கும். நுகர்வுப் பொருள் உற்பத்தித்துறையும் சமசீராக வளர்ச்சியடையா விட்டால் பற்ருக்குறை ஏற்பட்டு பண வீக்கம் தோன்றும். ஏழ்மை நாடுகளில் இது எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவது போல் சிக்கல்களை அதிகரிக்கும்.

முடிவுரை : சமசீரில்லா வளர்ச்சிக் கோட்பாடு பலவகையில் குறையுள்ளதாகக் கருதப்பட்டாலும், அது ஒரு புதுவகை வளர்ச்சிக் கருத்து என்று வரவேற்கப்படுகிறது. முதன் முதலில் ரஷ்யப் பொருளாதாரத்தில் சமசீல்லா வளர்ச்சிக் கருத்து அமுலாக்கப்பட்டது. ரஷ்யாவின் முதல் பொருளா தாரத் திட்டம் கனரகத் தொழில், மின்சார உற்பத்தி ஆகிய துறைகளில் மட்டும் முதலீட்டைப் பெருக்கியது. இதனுல், தூண்டப்பட்டமுதலீடு மற்றத்துறைகளிலும் பெருகி விரைவான பொருளாதார வளர்ச்சியை ரஷ்யா மிகக் குறுகிய காலத்தி லேயே சாதிக்க முடிந்தது. இந்தியாவிலும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொழில் துறையில் முதலீடு அதிகப்படுத்தப்பட்டது. ஆனல், விவசாயம் போன்ற மற்றத் துறைகள் சீரான வளர்ச்சியடையவில்லை. இதனுல், தொழில் முன்னேற்றம் தடைபட்டுப் பணவீக்கம் ஏற்பட்டது. எனவே, சமசீரில்லா வளர்ச்சிக்கருத்து இந்தியாவில் வெற்றிபெறவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். இக்கருத்தை அமுல் படுத்த அரசு இருவகைச் செயல் முறைகளை மேற்கொள்ளவேண்டும். "இக்கொள்கை சிறப்பான பயனளிக்கஅரசாங்கம் வளர்ச்சியை முன்னேக்கித் தள்ளிக் கொண்டு செல்ல வேண்டும். அதனுல் முதலீட்டுக்கான ஊக்கமும் வளர்ச்சிக்கான அழுத்தமும் ஏற்பட்டு மேலும் வளர்ச்சி மேலோங்கும். மேலும் அரசாங்கம் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் வளர்ச்சிக்கான அழுத்தங்களை எளிதாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கவும் தயாராக இருக்க வேண்டும்"[1]

[1]ஹிர்ச்மேன், A. O. பொருளாதார வளர்ச்சியின் சிறப்புக் கொள்கை (Hirschman, A. O.) பக்கம் 202—3.

7. இந்தியப் பொருளாதார வளர்ச்சிச் சிறப்புக் கொள்கை

(Strategy of Indian Economic Development)

திட்ட காலச் சிறப்புக் கொள்கை

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாக விளங்குவது சம சீரான திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சிச் சிறப்புக் கொள்கையாகும். இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் எல்லாத் துறைகளும் சம சீரான முறையில் வளர்ச்சியடைய முதலீடு திட்டத்தின் சாதனைப் பங்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதே சிறந்தது என்று ஆராயப்பட்டது. அதன்படியே ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சமசீரான முதலீட்டுக் கொள்கை அமுலாக்கப் பட்டது. நாடு முழுவதிலுள்ள எல்லாப் பகுதிகளும், வட்டாரங் களும் சம சீரான வளர்ச்சியைப் பெறச் செய்ய வேண்டு மென்பதே ஐந்தாண்டுத் திட்ட அறிக்கைகளில் காணப்படும் ஒரு கொள்கையாகும். முதல் திட்ட அறிக்கையில் இச்சிறப்புக் கொள்கை விவரிக்கப்பட்டுள்ளது பின்வருமாறு: "விவசாயம், நீர்ப்பாசனம், மின் சக்தி ஆகியவைகளுக்குப் பிரதான முக்கியத் துவம் அளிக்கப்படும். ஆனல், வேளாண்மைத் துறையில் உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள் ஆகியவைகளின் உற்பத்தி சீராக அதிகரிக்கா விட்டால் நிலையான அதிகபட்சத் தொழில் வளர்ச்சியைச் சாதிக்க இயலாது......ஒரு துறை மற்றொரு துறையின் உதவியின்றி வளர இயலாது; இரண்டும் ஒன்றையொன்று நிறைவு செய்பவைகளாய் உள்ளன. எனவே, பொருளாதாரத்தின் அடிப்படை ஆக்க சக்தியை மேலும் பலப் படுத்த முதலில் மூலப்பொருள்கள், உணவு ஆகியவற்றில் ஏராளமான உற்பத்தியைப் பெருக்கித் தன்னிறைவு பெற

வேண்டும். இந்தியாவில் சம சீரான வளர்ச்சியை மேற்கொள்ளத் தேவையான பல்வேறு வகையான வளங்கள் இருக்கின்றன."[1]

முதல் திட்ட சிறப்புக் கொள்கை

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அமுலாக்கப்பட்ட சம சீரான வளர்ச்சிக் கொள்கையினாலும் பருவ மழை தவறாது பெய்ததாலும் பொருளாதாரம் மகத்தான வளர்ச்சியைச் சாதிக்க முடிந்தது, முதல் திட்ட காலத்தில் வேளாண்மைத் துறையின் வளர்ச்சி போற்றத்தக்கதாய் இருந்தது. உணவு தானிய உற்பத்தி இலக்கு 61 மில்லியன் டன்களாக தீர்மானிக்கப்பட்டிருந்தது, ஆனால், இலக்கைவிட அதிகமாக உணவு தானிய உற்பத்தி 65·8 மில்லியன் டன்களாகப் பெருகியது. பஞ்சு, முக்கிய எண்ணெய் வித்துக்கள் ஆகியவைகளின் உற்பத்தி முறையே 45 சத வீதமாகவும் 8 சத வீதமாகவும் உயர்ந்தது.

இரண்டாம் திட்ட வளர்ச்சி முறை

இரண்டாம் திட்ட காலத்தில், முதல் திட்டத்தின் வளர்ச்சியின் இலக்குகளின் அடிப்படையில் வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பேரார்வத்துடனும் உயர்ந்த குறிக்கோளுடனும் இரண்டாம் திட்டத்தில் கனரக, மற்றும் அடிப்படைத் தொழில்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. ஏனெனில், வேளாண்மைத்துறைஏற்கனவே வளர்ச்சி வேகத்தை, அரசாங்கத்தின் தீவிர நடவடிக்கைகளால் (Big Push) பெற்றுவிட்டது. இனி, தொழில்துறையில் மட்டும் தீவிர நடவடிக்கைகள் (Push) மேற்கொண்டு அத்துறையும் வளர்ச்சி வேகத்தைச் சாதிக்கத் திட்டமிட வேண்டுமென்று கருதப்பட்டு முதலீடு செய்யப்பட்டது. இரண்டாம் திட்டம் ரஷ்யாவின்அனுபவத்தின் அடிப்படையில் திரு மஹலெனோபிஸ் வளர்ச்சி மாதிரியாக (Mahalanobis Model) தீட்டப்பட்டிருந்தது. ஆனால் அத்தகைய மாதிரியை ஏற்படுத்தக் காரணமாய் இருந்தது முதல் திட்ட கால வேளாண்மைத்துறையின் சிறப்பான வளர்ச்சியாகும். இரண்டாம் திட்டம் முதல் பொருள்களின் உற்பத்தித்துறைக்குச் சிறப்பிடம் அளித்திருந்தாலும், "இந்தியாவின் பிரதான பொதுக் கொள்கையாகவும், தேசியச் செயல் முறையாகவும் இருப்பது விரைவானதும்,

[1] முதல் ஐந்தாண்டுத் திட்டம் பக்கம் 44.

சம சீரான வளர்ச்சியை மேம்படுத்துவதுதான்''[2] என்று கூறப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கொள்கையைப் பின்பற்றிப் பொருளாதாரத்தின் எல்லாப் பகுதிகளும் ஒரே சமயத்தில் சீராக வளர்ச்சியடைந்து தேசிய வருவாயும், வேலை வாய்ப்பும் தொடர்ந்து, பெருகச் செய்ய வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் இக்கொள்கையினால் நல்ல பலன் கிட்டவில்லை. ஏனெனில், பல்வேறு துறைகள் அவற்றிற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தின்படி பிரிக்கப்பட்டிருந்தாலும், தீவிரமாக ஒவ்வொரு துறைகளின் உட்பிரிவுகளுக்கும் சரியான முதலிடம் அளிக்கப்படாததே பெருங்குறையாக இருந்தது.

இரண்டாம் திட்ட தோல்வியின் காரணங்கள்

இரண்டாம் திட்ட காலத்தில் வேளாண்மைத்துறை வளர்ச்சியில் தோல்வி ஏற்பட்டதற்குக் காரணம் வளங்களின் பற்றுக்குறை என்று கூற முடியாது. வேளாண்மைத் துறையின் உட்பிரிவுகளில் சிலவற்றிற்கு முதலிடம் அளிக்கப்படாததே அடிப்படைக் காரணமாகும். 1956-ல் வேளாண்மை உற்பத்தி இலக்குகள் மறுபரிசீலனை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்பட்ட பிறகு, அதிக விளைச்சல் தரும் சீரான விதைகள், உரங்கள், நீர்ப்பாசனம், நிலப் பாதுகாப்பு போன்ற திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படவில்லை. எனவே, இவ்வகையில் சிறப்பான முன்னேற்றங்கள் செய்யப்படவில்லை.[3]

தொழில் துறையில் சீரான வளர்ச்சியை ஏற்படுத்த முதன் முதலில் இரண்டாம் திட்ட காலத்தில்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்துறைக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருந்தாலும், இத்துறையின் உட்பிரிவுகளாகிய எஃகு போன்ற பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க முதலிடம் அளிக்கப்படவில்லை. திரு. மஹாலனோபிஸ்அவர்களின் வளர்ச்சி மாதிரியில் (Growth Model) கனரகத் தொழில்களுக்கு முதலீட்டில் முதலிடம் அளிக்கப்பட்டது. அதனால், எஃகு உற்பத்தி அதிகரித்தது. ஆனால், என்ன வகை உற்பத்திக்கு எஃகைப் பயன்படுத்த வேண்டுமென்று சிறப்பாகக் குறிக்கப்படவில்லை. அதாவது எஃகை நீடித்த நுகர்வுப் பொருள்களை உற்பத்தி

[2] இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்—பக்கம் 1

[3] மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்—ப. 303

செய்யப் பயன்படுத்துவதா அல்லது நுகர்வுப் பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்யத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்துவது சிறந்ததா என்பதை இத்திட்டம் குறிக்கவில்லை. இத்துறையில் தகுந்த கட்டுப்பாடு மேற்கொள்ளப்படாததால் பொருளாதாரம் சீர்குலையும் நிலை ஏற்பட்டது. ஏனெனில், பணக்காரர்கள் விரும்பும் நீடித்த நுகர்வுப் பொருள்களே (Durable consumer goods) உற்பத்தி செய்யப்பட்டனவே அன்றிச் சாதாரண மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்ய வளங்கள் பயன்படுத்தப்படவில்லை. அதனால்கூட, நாட்டில் பணவீக்கம் தோன்றியது என்று Dr. K. N. ராஜ் அவர்கள் குறிப்பிடுகிறார். இதன் காரணமாகவே குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சி இலக்குகளையும் நாடு சாதிக்க முடியவில்லை.

மூன்றும் திட்ட கொள்கையும் வளர்ச்சியும்

மூன்றும் திட்ட வளர்ச்சி சாதனையிலிருந்து, குறிக்கப்பட்ட இலக்குகளை இத்திட்ட காலத்தில் அடையஇயலவில்லை என்பது அறியப்படுகிறது. மூன்றும் திட்ட காலத்தில் வேளாண்மை வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 5 சத வீதமும் தொழில் துறையின் வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 14 சத வீதமும் இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உண்மையில் சுமார் 2·5 சத வீதம்தான் வேளாண்மைத் துறையிலும், 5·7 சத வீதமே தொழில் துறையிலும் சாதிக்க முடிந்தது. மொத்தப் பொருளாதார வளர்ச்சியை அடைய வேளாண்மையை நன்கு அமைந்த அடிப்படையில் வளரச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. வேளாண்மைக்கு முதலிடம் அளிக்கப் பட்டாலும், இரும்பு, எஃகு, எந்திரங்கள் செய்தல், நிலக்கரி, மின்சாரம், இரசாயனம் போன்ற துறைகளின் வளர்ச்சி புறக் கணிக்கப்படவில்லை. நாட்டுப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்படும் வகையில் திட்டம் அமைந்தது.

ஆய்வுரை : இந்தியப் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த கடந்த 15 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட சிறப்புக் கொள்கைகள் தகுந்த முறையில் வெற்றியடையவில்லை. ஏனெனில், அக்கொள்கைகள் இந்தியப் பொருளாதாரச் சிக்கல்களைச் சிறப்பாகத் தீர்த்து வைக்க இயலவில்லை. அக்கொள்கைகள் சாதிக்கவேண்டிய குறிக்கோளுக்கேற்றபடி

சாதனங்களை ஒருங்கிணைக்கத் தவறிவிட்டன. தற்போது இந்தியாவின் நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் அமுலில் இருக்கும் தருணத்தில், பிரச்னைகளைத் தீர உணர்ந்து அதற்கேற்ப நாட்டுக்கு உகந்த கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு துறையின் உட்பிரிவு களிலும் உள்ள முக்கியமான பகுதிகளுக்கு முதலிடம் அளிக்க வகை செய்ய வேண்டும். சம சீரான வளர்ச்சிக் கொள்கையை ஏற்றுக்கொள்வதில் எவ்விதக் குறையும் இல்லை. ஆனல், அதைப் போதுமான அளவு நடைமுறைக்கு உகந்த முறையில் மேற்கொள்வதே தகுந்த கொள்கையாகும்.

8. பொருளாதார வளர்ச்சியில் அரசின் பங்கு

அரசாங்கத் தலையீட்டின் முக்கியத்துவம்

பொருளாதார வளர்ச்சி பொதுவாக இரு முறைகளில் வேகப் படுத்தப்படுகிறது. முதலில், முதலாளித்துவத்தின் அடிப்படையில் தனியார் துறை நிறுவனங்கள் அரசாங்கக் கட்டுப்பாடு ஏதுமின்றி, போட்டியின் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்கி, அதிக லாபமடையும் நோக்கோடு செயல் படும்போது பொருளாதாரத் துறைகள் விரைவான வளர்ச்சியைப் பெறுகின்றன. உதாரணமாக, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளில் ஆரம்பக் கட்டத்தில் ஏற்பட்ட போற்றத்தக்க பொருளாதார வளர்ச்சியிலிருந்து இதை அறியலாம். அமெரிக்க நாட்டில் தனியார் துறையால் நிர்வகிக்கப்பட்ட போக்குவரத்து, தொடர்பு ஆகிய தொழில்களுக்கு அரசாங்கம் மானியங்களை அளித்து அவைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியிருப்பதை அறிகிறோம். இதனுல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தனியார் தொழில்களின் மூலம் சிறந்த முறையில் முக்கியமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் பெருகித் தழைத்தோங்கி இருக்கிறது. இரண்டாவதாக, ரஷ்யா போன்ற சர்வாதீன நாடுகளில் அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையானது (Laissez Faise Policy) கைவிடப்பட்டு, பொருளாதார சமதர்ம வளர்ச்சிக்காக எல்லாப் பொருளாதாரத் துறைகளும் அரசுடைமையாகிக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பொருளாதாரத் திட்டங்களின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க அரசு முயல்கிறது. தனியார் தொழில்களின் செயலால் மட்டுமே வளர்ச்சியுறும் நாடுகளிலும் குறைகள் காணப்படாமலில்லை. அரசாங்கமே முழுவதுமாகப் பொருளாதார வளர்ச்சிப்

பணியை மேற்கொண்டு வளர்ச்சியுறும் நாடுகளிலும் பல குறைகளை நாம் காணலாம். எனவே, அரசாங்கத்தின் தலையீட்டால் மட்டுமோ அல்லது தனியார் தொழில்களின் வளர்ச்சியால் மட்டுமோ ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலோங்கு மென்று கருத இயலாது. பேராசிரியர் ஆர்தர் லீவிஸ் அவர்களின் கருத்துப்படி, "அறிவாற்றலும், திறமையும் கொண்ட அரசாங்கத்தின் திடமான தூண்டுதலின்றி எந்த நாடும் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறவில்லை. இங்கிலாந்து நாட்டிலும் பொருளாதார வளர்ச்சியானது அறிவாற்றல் மிக்க அரசர் எட்வர்ட் III போன்றவர்களால் நீண்ட காலந்தொட்டு ஏற்பட்ட தொழில் வளர்ச்சியின் அடிப்படையில் நாடு வளர்ச்சிபெற்று இருக்கின்றது. அமெரிக்காவிலும் கூட பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு மத்திய, மாநில அரசாங்கச் சட்டங்கள் காரணமாய் இருந்தன. ஓர் ஏழ்மை விவசாய நாடாக 18-ம்நூற்றுண்டுவரை இருந்த ரஷ்யா அரசாங்கத்தின் பல்வேறு வகையான நடவடிக்கைகளால் தொழில் மயமாய்ப் புதுமைப் படுத்தப்பட்டு ஒரு வளர்ச்சியடைந்த நாடாக மாற்றமடைந்து பல ஆண்டுகளாகிவிட்டன. இன்றைய பிரச்சினையானது அரசு பொருளாதாரத் துறையில் தலையிடலாமா அல்லது கூடாதா என்பதல்ல. சிறந்த வளர்ச்சிக்காக எந்தெந்தத் துறையில் அரசு தலையிடலாம் என்று அறிவதாகும். அரசாங்கத்தின் தலையீட்டாலும் கட்டுப்பாட்டாலும் மட்டுமே தனியார் தொழில்களினுல் ஏற்படும் குறைகளை நீக்க முடியும். பின் தங்கிய நாடுகளில் அரசின் கட்டுப்பாட்டினுல்தான் பொருளாதார வளர்ச்சி மேலோங்கும் என்பது முற்றிலும் உண்மையாகும்.

தனியார் தொழில்களின் இயலாமை

முதலில் தனியார் தொழில் நிறுவனங்கள் சர்வாதீனப் போட்டி முறையை வளர்க்கும் சக்தியுடையவைகளாய் அமைந்து பல இன்னல்களைப் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூகத்திற்கும் ஏற்படுத்துகின்றன. இதனுல் வேலை நிறுத்தம், வெளி நடப்பு, தொழில் கலவரம் ஆகியவை ஏற்பட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன.

இரண்டாவதாக, தனியார் துறையில் முதலீடு செய்பவர்கள் பொது நன்மை பயக்கும் திட்டங்களிலும் சமுதாய நலனுக்கான செயல்களிலும் பணத்தை முதலீடு செய்ய முன்

வருவதில்லை. ஏனெனில், அதிலிருந்து அதிக லாபம் கிடைக்க வாய்ப்பில்லை.

மூன்ருவதாக, லாபத்தைப் பெருக்கும் நோக்குடன் மேற்கொள்ளும் தனியார் முதலீடானது பொருளாதார வளர்ச்சிக்கு முழுவதும் போதாததாக அமைகிறது. தேசிய வளர்ச்சியின் நோக்கோடு பணம் முதலீடு செய்யப்படாததால் நாட்டின் பல இன்றியமையாத தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் போய்விடுகின்றன. மேலும், ஒரே சீராக அமைந்து நிலையாக இயங்கும் பொருளாதார நிலை அமைவதில்லை. நாட்டின் வருங்காலச் செல்வ வளர்ச்சியில் சிறிதும் அக்கறையின்றிப் பணம் முதலீடு செய்யப்படுகிறது. தொழில் அதிபர்கள் வருங்காலச் சந்ததிகளின் நலனில் அக்கறை கொள்வதில்லை. இதனுல் தேவையற்ற முறையில் நாட்டின் செல்வ வளங்கள் பயன்படுத்தப்பட்டு வீணடிக்கப்படுகின்றன.

இறுதியாக, பல்வேறு துறைகளும் ஒன்ருக இணைந்து செயல்படும் அளவுக்குத் தனியார் தொழில்கள் இயங்காததால், பொருளாதார வளர்ச்சி சீராக சம அளவுடன் அமைந்து நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

வறுமை என்னும் நச்சு வளையம் உடைக்கப்பட்டு நாடு சம வளர்ச்சியுடன் அமைய இயந்திரம் போன்ற சக்தி வாய்ந்த அரசின் பணிகள் முக்கியமாக, சமீபத்தில் சுதந்திரம் பெற்ற ஏழ்மை நாடுகளுக்கு இன்றைய நிலையில் இன்றியமையாததாக அமைந்துள்ளது. ஒரு நிலையான அரசினுல் மட்டும்தான் பொருளாதார வளர்ச்சியில் முழுமையான கண்காணிப்பு மேற்கொண்டு பெற்ற வளர்ச்சியைப் பேணிக் காக்கவும் முடியும். அரசானது வளர்ச்சி பெற்ற நாடுகளில் சாதித்துவிட்ட அதிகப் பொருளாதார வளர்ச்சி குறைந்து விடாமல் பார்த்துக் கொள்ளத் தடுப்பு நடவடிக்கைகளையும் வளர்ச்சியுரு நாடுகளில் வளர்ச்சியை இனிமேல் அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியதாய் உள்ளது. வளர்ச்சியுரு நாட்டின் அரசின் அடிப்படைக் கொள்கையாக விரைவான பொருளாதார வளர்ச்சி அமைகிறது. துணிந்து செயல்படும் ஓர் அரசால்தான் நீண்டகாலமாக இருந்துவரும் பொருளாதாரத் தேக்கம், மாருச் சமூகப் பழக்க வழக்கங்கள், முதல் பற்ருக் குறை, ஏழ்மை, தொழில் திறமின்மை, குறைந்த சேமிப்பு, முதலீடு, உற்பத்தி ஆகிய பலவகை இடையூறுகளைத்

தகர்த்தெறிய முடியும். பொருளாதாரத் திட்டங்களின் மூல மாகச் சீரான சம அளவு வளர்ச்சி பெறவும் முடியும்.

பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெற அரசின் தகுதிகள்

நாட்டின் வளர்ச்சிக்காகப் பெருமளவு பொதுச் செலவை மேற்கொள்ளவும், சேமிப்பு அளவைப் பெருக்கவும் அரசிற்குத் தான் சக்தியும், வாய்ப்பும் அதிகம். நாட்டில் பேரளவு உற்பத்தி முறையால் நாட்டிலுள்ள எல்லோருக்கும் குறைந்த விலையில் குறித்த காலத்தில் தரமான பொருள்களைப் பகிர்ந் தளிக்க முடியும். ஏனெனில், அரசுதான் நாட்டிலுள்ள பெரும் பான்மையான பல்வேறு வகை வளங்களுக்குச் சொந்தக்கார ராய் விளங்கிக் கிடைத்தற்கரிய வளங்களை வீணடிக்காமல் இன்றியமையாத உற்பத்திக்காகப் பயன்படுத்திப் பொதுமக்க ளுக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களைத் தக்க சமயத்தில் வழங்க இயலும். உதாரணமாக, 19-ம் நூற்றாண்டில் ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளிலும், 1918-ம் ஆண்டிலிருந்து, ரஷ்யா நாட்டிலும் மெக்ஸிகோ போன்ற நாடுகளிலும் அரசின் தலையீட்டால்தான் பொருளாதார வளர்ச்சி அதிசயிக்கத் தக்க முறையில் பெருகித் தேசிய வருமானத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியுள்ளது. பொருளாதார வளர்ச்சியில் அரசின் பங்கு காலந்தோறும் அதிகரித்து வருவதை இன்றைய பெரும்பாலான நாடுகளில் பொதுத் துறையின் அளவு (Public Sector) பெருகி வருவதிலிருந்து அறியலாம். பொதுத் துறையில் முதலீடு, உற்பத்தி, வேலை வாய்ப்பு போன்றவைகள் வளர்ந்துவரும் வீதத்திலிருந்தும் இதை அறியலாம். இந்தியா போன்ற ஏழ்மை நாடுகளில் 60 சத வீதத்திற்கும் மேலாகப் பொதுத்துறையின் பங்கு பெருகி வருகிறது. பொதுவாகப் பெரும்பாலான வளர்ச்சியுறு நாடு களில் அரசின் செலவு மொத்த தேசிய செலவில், 1950-ல் 13 சத வீதத்திலிருந்து 1958ல் 21 சத வீதமாக வளர்ந்தது.

அரசின் பொருளாதாரப் பணிகள்

பொருளாதார வளர்ச்சியின் முதல் கட்டத்தில் அரசு அடிப் படைப் பணிகளான உள்நாட்டுச் சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றை நிலைநாட்ட வேண்டியுள்ளது. மேலும், வெளி நாடுகளிலிருந்து வரும் எத்தகைய ஆபத்துகளிலிருந்தும் நாட் டைப் பாதுகாக்க வேண்டிய அரும் பணியையும் அரசு மேற் கொள்ள வேண்டியுள்ளது.

பொருளாதார நிபுணர்களாகிய மேயரும், பால்டுவினும் எந்தெந்தத் துறைகளில் அரசாங்கமானது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று மதிப்பிட்டுள்ளார்கள். அவைகள் பின் வருமாறு :

(1) தேர்ச்சியும், ஆற்றலும் கொண்ட நிறுவனங்களை அரசு ஏற்படுத்தி நாட்டில் பல்வேறு சந்தைகளின் அளவை அதிகரிக்க வேண்டும்.

(2) லாபம் குறைந்து வரும் தொழில்கள் அனைத்தையும் அரசாங்கமே தன் நிர்வாகத்தில் மேற் கொண்டு நடத்த வேண்டும்.

(3) தனியார் துறையால் சிறப்பாகச் செயலாற்ற இயலாத தொழில் வகைகளை அரசாங்கமே மேற்கொண்டு செய லாற்றுதல் வேண்டும்.

(4) புறச் சிக்கனங்களைப் பொருளாதார உற்பத்தியில் அதிகரித்து நிலையான சம வளர்ச்சியை (Balanced Growth) நாட்டில் ஏற்படுத்த அரசு வழிகாட்ட வேண்டும்.

சுருங்கக் கூறின், இன்றைய சூழ்நிலையில் வளர்ச்சியுறு நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தி எல்லாத் துறைகளையும் வழி நடத்திக் கொண்டு செல்ல அரசு பெரும் பங்கினை ஏற்றுப் பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ளது. அரசின் பொருளாதாரப் பணிகளில் முதலாவதாக, கல்வி, பொதுசுகாதாரம், போக்குவரத்து, மின்சக்தி போன்றவற்றில் அரசின் முதலீட்டால் வளர்ச்சிக்கான சூழ்நிலை அமைகிறது. உதாரணமாக, போக்கு வரத்து மற்றும் செய்தித் துறை வசதிகள் போன்றவைகளின் முன்னேற்றத்தால் சந்தையின் அளவு விரிவடைகிறது. உற்பத்தியின் அளவு பெருகுவதற்கு அது தூண்டுகோலாய் அச்சாணி போல் அமைகிறது. அரசு மின்சக்தி நிலையங்களை அமைப்பதால் ஒரு நாட்டைத் தொழில் மயமாக்கத் தேவையான அடிப்படை ஆக்க சக்தி கிடைக்கிறது. அரசாங்கச் செலவால் சுகாதார வசதிகள் அதிகமாவதாலும், கல்வியறிவு பெருகுவதாலும் தொழிலாளர்களின் தேக ஆரோக்கியம் சீரடைந்து அறியாமை நீங்கி உற்பத்தியின் அளவு பெருகுவதோடு, அவர்தம் வருமானங்களும் உயருகின்றன. இதனால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரம் உயருகிறது.

இரண்டாவதாக, பொருளாதார வளர்ச்சியானது சமூக, மத, கலாச்சார காரணிகளால் பிற்பட்ட நாடுகளில் தடைப்படுகிறது. இந்நாடுகளில் பொருளாதார வளர்ச்சி தோன்றுமுன் ஒரு சமூகப் புரட்சி ஏற்பட்டு மக்களின் மூட நம்பிக்கைகள் மறையவேண்டும். இத்தகைய சமூக மாற்றத்தால் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பெரும்பான்மையான நாடுகளில் பொருளாதார வளர்ச்சி மேலோங்கியுள்ளது. மக்களின் மாறு மனநிலைகளால் சில நாடுகளில் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. பிற்பட்ட சமூக, மத, கலாச்சார நம்பிக்கைகள் பெரும்பாலும் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூருகவே இருந்து வருகின்றன. எனவே, மக்களின் பிற்பட்ட மனப்பான்மைகளை மாற்றிச் சீர்திருத்த மடையச் செய்து பொருளாதார வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும் வகையில் அரசு சட்டங்களின் மூலமும் மற்ற வழிகளாலும் மாற்றி அமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக, வேளாண்மைத் துறையில் நில உடைமை முறை போன்றவைகளில் காணப்படும் குறைகளை மாற்றியமைத்து சமூக நீதியை நிலை நாட்டி உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பினை அரசு ஏற்படுத்த வேண்டும்.

மூன்ருவதாக, வருமான ஏற்றத் தாழ்வுகளைச் சரி செய்ய அரசு பயனுள்ள வருவாய் முறைக் கொள்கைகளைப் பின்பற்றி சமதர்ம, சமுதாய அமைப்பை ஏற்படுத்த வகை செய்ய வேண்டும்.

நாட்டில் அதிக வருமானம் பெறுபவர்களின் மேல் வளர்வீத வரி முறைப்படி வரி விதிப்பதால், வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க முடியும். செல்வந்தர்களின் மிஞ்சிய வருமானத்திலிருந்து ஒரு பகுதியை வரிகள் மூலம் வசூலித்து முதலாக்கத்திற்காகவும் முதலீட்டைப் பெருக்கவும் அரசு பயன்படுத்த நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. வருமான ஏற்றத் தாழ்வுகள் சமூக அமைதியின்மைக்கும், வகுப்புவாத உணர்வுகளுக்கும் காரணமாய் உள்ளன. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் நாட்டில் முதலீடும் நுகர்வும் குறைந்து விடுகிறது. செல்வந்தர்கள் ஆடம்பரச் செலவுகளை மேற்கொள்ளும் நிலை ஏற்படுகிறது. அரசின் பல் வேறு வகைக் கொள்கைகள் இக் குறைகளை நீக்கி நிலையான, சமதர்மக் கருத்துக்களின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியை நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

நான்காவதாக, வளர்ச்சியுரு நாடுகளில் முதலாக்க விதம் மிகவும் குறைந்து இருக்கிறது. தலா வருமானம் குறைந்திருப்பதால் சேமிப்பு விதமும் குறைந்து, முதலீடும் குறைந்து நாடு பிற்பட்ட நிலையிலேயே இருக்க வேண்டியுள்ளது. இந்நிலை வளர விடாமல் அரசு முதலாக்கத்தின் சிக்கலைப் போக்க, அதை வேகப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சேமிப்பு, முதலீடு விதங்களை அதிகப்படுத்த இன்றியமையாத வருவாய், நுகர்வு, உற்பத்தி, பண இயல் முறைக் கொள்கைகளை மேற்கொண்டு தீவிரமான முடிவுகளை அரசு எடுக்கவேண்டும். இதற்காக அடிப்படை அமைப்புக்களையே மாற்றியமைக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. இதற்குத் தேவையான சக்தியும், வாய்ப்பும், வசதியும், ஆற்றலும் அரசாங்கத்திடம்தான் உண்டு என்றால் அது மிகையாகாது. மேலும், தனியார் துறை முதலீடுகளையும், நாட்டு நலனுக்கு ஏற்ற வகைகளில் திசை திருப்பவும் அரசு செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஐந்தாவதாக, சிறப்பான வேலை வாய்ப்புக் கொள்கைகளைப் பின் பற்றிப் பொது நலனுக்கான பணிகளிலும் மற்றத் துறைகளிலும் முதலீட்டினைப் பெருக்கி வேலை வாய்ப்புக்களை அரசு அதிகரிக்கவேண்டும். அப்போது உற்பத்தியின் அளவு பெருகி வருமானங்களும்அதிகமாகி, சேமிப்பு, நுகர்வு, முதலீடு, உற்பத்தி ஆகியவைகள் அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி சீரானதாய் அமையும்.

ஆறாவதாக, பண முறை, வருமானமுறைக் கொள்கைகளைப் பின்பற்றிப் பொருளாதார வளர்ச்சியைச் சீராக அமைத்து அதைக் கட்டிக் காக்கும் பணியினை அரசு மேற்கொள்ள வேண்டும். தகுந்த வரிக் கொள்கைகள் மூலம் உபரி வாங்கும் சக்தியையும் (Excess purchasing power) அவசியமற்ற நுகர்ச்சியையும் நாட்டில் குறைத்து, சேமிப்பின் அளவைப் பெருக்கிட அரசால்தான் முடியும். பொருள் சேமிப்பை முதலாக்கி உற்பத்தி செய்யப் பயன்படுத்த அரசிடம் சிறந்த நிர்வாகத் துறை உள்ளது. பொருளாதார வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்ட பணம் பணவீக்க அழுத்தங்களை அதிகப்படுத்துவதால் தகுந்த பணவழிக் கொள்கையைப் பின்பற்றி அவசியமற்ற செலவினங்களைக் குறைக்க வகை செய்யவேண்டும். கடுமையான விலைக்கட்டுப்பாட்டின் மூலம் தட்டுப்பாடுடைய பொருள்களில் யூகவாணிகம் நடப்பதையும் அத்தியாவசியமான பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டு, வியாபாரிகள் மித லாபம் பெறுவதையும்

தடுத்து நிறுத்தும் பணியை அரசு மேற்கொள்ள வேண்டும். பற்றுக்குறையான நுகர்வுப் பொருள்களைச் சமமாக எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க அரசு பங்கீடு (Rationing) முறையைத் தக்க சமயத்தில் பின்பற்ற வேண்டும். அவசியமில்லா நுகர்வுக்காக அயல்நாட்டுச் செலாவணி வீணாக்கப்படாமல் பாதுகாக்கப்பட அரசு வகை செய்ய வேண்டும். மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக மட்டும் அதைப் பயன்படுத்த வேண்டும். பணக்கொள்கை, வருமான முறைக் கொள்கை, பொதுமுறைக் கொள்கை போன்றவைகளால், பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களை (Business Fluctuations) கட்டுப்படுத்த வேண்டும்.

ஏழாவதாக, உற்பத்திக் காரணிகளின் அளிப்பை அதிகப்படுத்தி அவைகளின் பெயர்ச்சிக்கு (Mobility) ஏற்ற நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முயலவேண்டும். அரசால் ஏற்படுத்தப்படும் பேரளவு உற்பத்தி நிறுவனங்களால் சிறப்புத் தேர்ச்சியும், செயலாற்றலும், தொழில் மயமும் நாட்டில் அதிகரிக்க அரசு வகை செய்யவேண்டும். தொழிலாளர்கள் சிறப்புத் தேர்ச்சி பெற தொழிற் பயிற்சிக் கூடங்களை ஏராளமாக அமைத்து தொழில் கல்வியோடு கூட பொதுக் கல்வியையும் தொழிலாளர்களுக்கு அளித்து தொழில் பெயர்ச்சியை வளர்க்க வேண்டும்.

எட்டாவதாக, நாட்டில் சில குறிப்பிட்ட தொழில் துறைகளில் தொழில் மயம் ஏற்பட, தனியார் தொழில்களுக்கு அவசியமான உதவிகளை அரசு செய்தல் வேண்டும். அரசே சில முக்கியத் தொழில் துறைகளில் தொழிலதிபர் பணியை மேற்கொண்டு புதிய தொழில்களை ஏற்படுத்துவதோடல்லாது தனியார் தொழில்களுக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுத்து வழிகாட்டியாக அமைய வேண்டும். இத்தகைய செயல் முறைகளினால் அரசு தொழில் வளர்ச்சியின் வேகத்தை அதிகரித்து மிகப் பெரிய சர்வாதீனங்களும், ஒரு சிலரிடமே பொருளாதார சக்தி குவிதலையும் திறமையுடன் தடுக்க நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. தொழில் பாதுகாப்பு, மானியங்கள், உதவிக் கொடைகள் போன்றவற்றாலும் குறிப்பிட்ட சில தொழில்களின் வளர்ச்சிக்கு அரசு உதவி செய்தல் நல்லது. மேலும், நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகரிக்க, புதிய கண்டுபிடிப்புக்கள் இன்றியமையாததால் அவற்றைத் தோற்றுவிக்க ஆராய்ச்சிக் கூடங்களை அரசு ஏற்படுத்த வேண்டும்.

கடைசியாக, இயற்கையின் இன்னல்களால் துன்பப்படு பவர்களுக்கு அரசு துணை புரிய வேண்டுவது இன்றியமையாத தாகும்[1]. உதாரணமாக, வெள்ளம், பூமி அதிர்ச்சி, வறட்சி, தொற்றுநோய் போன்ற இயற்கைக் கோளாறுகளால் அல்லல் படும் மக்களுக்கு அவசியமானதும் அவசரமானதுமான துயர் துடைக்கும் பணிகளை வேண்டிய அளவு செய்தல் வேண்டும். அதற்காக, தனி நிர்வாகத் துறைகளை அமைத்து திறமையுடன் தக்க சமயத்தில் துன்புறுவோரின் நலனுக்காகத் தொண்டாற்ற வேண்டும். உதாரணமாக, தமிழக அரசாங்கம் வறட்சி நிவாரண நிதி, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி போன்றவைகளை ஏற்படுத்தி, இயற்கையின் கொடூரத்தால் துன்பப்படுபவர்களின் துயர் நீக்குவதும் சாதாரண மக்களுக் காகப் பாடுபடும் அரசின் தலையாய பணியாகும். சில சமயங் களில் இயற்கையின் அழிவுச் செயல்களால் மூலதனமும், இயற்கை வளங்களும் கூட நாசமடையும் நிலை ஏற்படலாம். அதையும் சரிக்கட்ட வேண்டியது அரசின் பொறுப்பாகும். விவசாயிகளின் கடன்கள் அதிகரித்தலும் ஒரு பெரும் பிரச்சினை யாகும். அவர்களின் துயர் துடைக்கப்படாவிட்டால் வேளாண்மைத் துறையில் உற்பத்தி பாதிக்கப்பட்டு நாட்டில் பசி, பட்டினி அதிகரிக்கும். எனவே, இது போன்ற சிக்கல்களை யும் நீக்க வேண்டுவது அரசின் பொறுப்பாகும்.

வளர்ச்சியுறு நாடுகளில் இப்பணிகள் அனைத்தையும் வெற்றியுடன் செய்து முடிக்க, தக்க நிதி வசதி, நிர்வாக அமைப்பு போன்றவைகள் மிகக் குறைவு என்பது உண்மை யாகும். ஆனால், சக்தி படைத்த நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்தின் நிதி பற்றாக்குறையை நீக்க, தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டியது அவசியமாகும்.[2] மேற்கூறிய ஒன்பது கருத்துக்களையும் B.T. பாயரும், B.S. யாமி என்பவரும் "வளர்ச்சியுறு நாடுகளின் பொருளாதாரம்" என்னும் தங்கள் நூலில் வலியுறுத்திக் கூறியுள்ளனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெருகி "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண" அரசின் இத்தகைய பணிகள் இன்றியமையாதவைகளாகும்.

[1] பி. டி. பாயர், பி. எஸ். யாமி—வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொரு ளாதாரம்—பக்கம் : 170

[2] பி. டி. பாயர், பி. எஸ். யாமி (P. T. Bauer and B. S. Yamey) வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதாரம்—பக்கம். 171

அரசாங்கத் தலையீட்டின் வரையறை

வளர்ச்சியுறு நாடுகளில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்க, பல முக்கிய பணிகளை அரசு மேற்கொண்டபோதிலும், அரசினது தொழில் வளர்ச்சியில் சில வரையறைகளைக் காணலாம்.

முதலாவதாக, அரசின் பொருளாதாரப் பொறுப்புக்கள் பெருகப் பெருக, நிர்வாகத்தில் சுமையும், செலவும் கட்டுக்கடங்காமல் அதிகரித்து நிர்வாகத் திறமையும், ஒழுக்கமும் சீர்குலைந்து விடுகிறது. மக்களின் சீர்திருத்தப்பட்ட மனப்பான்மை, உற்பத்தித்திறன், செயலாற்றல் போன்றவைகளின் அமைப்பைப் பொறுத்துத்தான் அரசின் பணிகள் சிறப்பாய் அமைய இயலும். துரதிஷ்டவசமாக, வளர்ச்சி குறைந்த நாடுகளில் சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத் துறைப் பணிகளில் நுழைய நடைபெறும் தேர்வுகளில் திறமைக்கு முதலிடம் பொதுவாகக் கொடுக்கப்படுவதில்லை இதன் விளைவாக, அரசாங்கத் துறைகளில் சில சமயங்களில் திறமைக் குறைவும், பணிகளில் அக்கறை இன்மையும், சிகப்பு நாடா முறையும் உற்ருர் உறவினர்களுக்கு வேண்டிய சலுகைகளை அளித்தலும் போன்ற சில குறைகளும் ஏற்படுகின்றன. இதனுல், பொருளாதார வளர்ச்சி தடைப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய சூழ்நிலையை உருவாக்காமல் திறமை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பது இன்றியமையாததாகும். மேலும், சில சமயங்களில் அரசின் அளவுக்கு மீறிய தலையீட்டாலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தீங்கும் இடையூறும் ஏற்படலாம் என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

இரண்டாவதாக, வளர்ச்சியுறு நாடுகளில் அரசின் பல்வேறு வகையான வளங்கள் மிகவும் குறைந்து இருப்பதால் அரசு பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான பங்குகளையும் கூட முழுவதுமாக ஏற்றுச் செயல்பட இயலாது. தனியார் துறைகளும் அரசு துறைகளோடு சேர்ந்து பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வகை செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

மூன்ருவதாக, அரசால் ஆதரித்து வளர்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியானது தனியார் தொழில்களுக்கோ அல்லது மக்களாட்சிக்கோ அபாயகரமான இடையூறு ஏற்படாவண்ணம் அமைதல் வேண்டும். இல்லையெனில், அரசினது

அளவுக்கு மீறிய பொருளாதாரத் தலையீட்டால் சர்வாதிகார சக்திகள் முளைத்து மக்களின் சுதந்திரம் பறிபோகவும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இதனால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப் படும் நிலையும் ஏற்படலாம். பொருளாதாரத் துறைகளில் அரசின் தலையீடு அளவோடிருப்பதே சிறந்ததாகுமென்பது அறிஞர்களின் கருத்தாகும். முடிவாக, வளர்ச்சியுறு நாடுகள் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற விரும்பினால் சில சந்தர்ப்பங்களில் சில முக்கியப் பொருளாதாரத் துறை களில் அரசு தீவிரப் பங்கு பெற வேண்டுவது மிகவும் அவசிய மாகிறது.

இந்தியாவிலும் நம் மத்திய அரசு பொருளாதார வளர்ச்சி யில் எந்த அளவுக்குத் தலையிட்டு எந்தெந்தத் துறைகளில் வளர்ச்சியைப் பெருக்கவேண்டுமோ அதை அறிந்து செயல் படுவது போற்றத் தக்கதாகும். இதனால்தான், 1951-ம் ஆண்டி லிருந்து ஐந்தாண்டுத் திட்டங்களை இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்காக அரசு மேற்கொண்டுள்ளது. அதேபோன்று, நம் தமிழக அரசும் அறிஞர்கள் சுட்டிக் காட்டிய கடமை உணர்வை மனத்தில் கொண்டு எந்தெந்தத்துறைகளில் மாநில அரசு தன் பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதை ஆராயப் பல குழுக்களை அமைத்துக் கொள்கை அளவிலேயே இருந்து வந்த கருத்துக்களைச் செயல்முறையில் கொண்டு வந்துள்ளது. உதாரணமாக, இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத் தில்தான் மத்திய, மாநில உறவுகளைப் பற்றி ஆராயும் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, தீவிர பொருளாதார வளர்ச்சி ஏற்பட வழி முறைகளை அரசு கையாண்டு வருகிறது.

அரசு மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகள்

நாட்டின் பொருளாதார வாழ்வைச் சீரமைக்கக்கூடிய பல்வேறு வகையான முறைகளைத் தற்காலத்து அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. அவைகளை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்:

(1) நேரடி நடவடிக்கைகள். (Direct Measures)

(2) மறைமுக நடவடிக்கைகள். (Indirect Measures)

நேர்முக நடவடிக்கைகள்

தற்காலத்திய அரசுகள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்வதன் மூலம் நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. முதலாவதாக, பொது சுகாதாரம், கல்வி போன்ற சமூக நலனுக்கானதும், பொருளாதார நலனுக்கானதுமான வசதிகளைப் பெருக்கி வருகின்றன. மக்களின் பிற்பட்ட நிலையைப் போக்க பிற்பட்ட நாடுகளில் வளர்ச்சிக்கான இடையூறுகளைத் தகர்த்தெறிய, பொதுசுகாதாரம், மனிதமூலதனத்தின்சீரமைப்பு, கல்வி வசதிகள் போன்ற பணிகள் அவசியம் மேற்கொள்ளப் படவேண்டும். பொருளாதார வளர்ச்சிக்காக, கல்வி வளர்ச்சியில் ஒரு புரட்சியை உண்டு பண்ண வேண்டுவது இன்றியமையாததாகும். இதைப் போன்றே மின்சாரம், குடிநீர், போக்குவரத்து வசதி போன்ற பொதுப் பயன்பாட்டுப் பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, நில சீரமைப்புக்கள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாய வளர்ச்சியை வேகப்படுத்துவது அரசின் கடமையாகிறது. நாட்டிலுள்ள பல்வேறு வகையான அமைப்புகளில் வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சமூக நலனுக்காக, கூட்டுப் பங்கு நிறுவனங்கள், சர்வாதீன சந்தைகள், கூட்டுறவு இயக்கம் போன்றவைகளை ஒழுங்கு படுத்தி ஊக்குவிக்க வேண்டும். மேலும், பணச் சந்தைகள், முதல் அங்காடிகள் போன்றவற்றைச் சீரமைத்து முறையோடு பணிபுரியச் செய்வது அரசின் கடமையாகிறது. மூன்ருவதாக, சந்தையில் காணப்படும் சீர்கேடுகளை அகற்றி, வேறு பல வளர்ச்சிக்கான இடையூறுகளையும் அகற்றி, தொழிலாளர்களின் திறமையையும் ஊக்கத்தையும் அதிகரிக்க வேண்டுவது மக்கள் நலம் பேணும் ஓர் அரசின் இன்றியமையாத பணியாகும். தொழிலாளர்களுக்குச் சிறந்த பயிற்சியினை அளிப்பதற்காகப் பல்வகை பயிற்சிக் கூடங்களை ஏற்படுத்த வேண்டுவது அவசியமாகும். தனியார் துறையில் இத்தகைய நிலையங்கள் ஏற்பட வாய்ப்பில்லாததால் அரசாங்கமே அதிகமான முதலீடு செய்து நாட்டில் தொழிற்கல்வி போன்றவற்றைப் பரப்ப வேண்டும். தொழிலும், வர்த்தகமும் நாட்டில் வளர்வதற்காக நிதி வசதி இன்றியமையாததாகும். சில நிதி அமைப்புக்களை ஏற்படுத்தி, தொழில், வாணிபம் போன்ற துறைகளுக்கு நிதி வசதி அளிக்க அரசு துணை புரிய வேண்டும். நான்காவதாக, நாட்டின் அதிவிரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் நடவடிக்கைகளில் அரசே நேரடியாகப் பங்கு கொள்ளுதல்

தற்காலத்திய சூழ்நிலையில் மிகவும் அவசியமாகிறது. ஏழ்மை நாடுகளில் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் அமையக்கூடிய சில அடிப்படைக் கனரகத் தொழில்களைத் தனியார் துறை புறக்கணிப்பதால், இவற்றை அரசே பொதுத் துறையில் ஏற்படுத்துவது அவசியமாகிறது. தனியார் தொழில்களுக்கு அரசு முன்மாதிரியாக அமைந்து ஒரு திறமையான தொழில் அதிபர்போல் புதுத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். பிற்பட்ட நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஒரு சிறந்த கட்டத்தை அடைந்து அரசின் பாதுகாப்பின்றியே வளரும் நிலை ஏற்படும் வரைக்கும், அரசு ஒரு தலைமைத் தொழில் அதிபராகப் பொறுப்பேற்று பணி புரிய வேண்டும். இத்தகைய நேரடி நடவடிக்கைகளின் மூலம் இந்தியா போன்ற மக்களாட்சி நிலவும் நாடுகளில் பொதுத்துறையின் அளவு அதிகரித்து வருகின்றது. இதனால் சமதர்ம சமுதாயம் அமைக்க வேண்டும் என்ற குறிக்கோளைச் சாதிப்பது திண்ணம்.

மறைமுக நடவடிக்கைகள்

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த அரசு இருவகையான மறைமுக நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

(1) பணவாக்கக் கைக்கோளும் (Monetary policy)

(2) அரசிறைக் கைக்கோளும் (Fiscal policy)

பணவாக்கக் கொள்கை

பொருளாதார வளர்ச்சியின் செயல் திட்டங்களுக்கேற்ப பணவழிக் கொள்கைகளை, நிதித் துறைப் பொறுப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும். பணவழிக் கொள்கை என்பது பணத்தின் தேவையையும், அளிப்பையும் கட்டுப்படுத்த மத்திய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும். இக்கொள்கைகளை வங்கி வீதக் கைக்கோள், வெளி அங்காடி நடவடிக்கைகள், வங்கிகளின் பணக் கையிருப்பு மாற்றம் போன்ற பொதுக் கடன் முறைகளையும், மற்றத் தேர்ந்த கடன் கட்டுப்பாடுகள் மூலமும் மேற்கொள்ளலாம். வளர்ந்து வரும் நாடுகளில் பின்பற்றப்படும் பணக்கொள்கையின் பிரதானக் குறிக்கோள்கள் பின்வருமாறு :

(அ) விலையைச் சமநிலைப் படுத்துதல்.

(ஆ) சேமிப்பைச் சேகரித்தல்.

(இ) பொருளாதார வளர்ச்சியை மேம்படச் செய்தல். விலை எல்லை மீறி அதிகரிப்பது பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படுத்தும். ஆதலால், அதைக் கட்டுப்படுத்த மேற்குறிப்பிட்ட பணவழிக் கொள்கை முறைகளைப் பயன்படுத்த வேண்டும். ஆனல், பண அளிப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி தப்பித் தவறித் தடைப்பட்டு விடாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், நிதி வசதியே தொழில் வளர்ச்சிக்கு உயிர் நாடியாகவும், இரத்த நாளங்களாகவும் அமைந்திருக்கின்றது. ஆனல், நிலையான விலையை ஏற்படுத்த அரசு விரும்பினல், மிதமிஞ்சிய பணமும், கடனும் அளிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தி, வளர்ச்சிக்குப் பெருந்தடையாய் அமையும் குதிரை வேக பண வீக்கத்தைத் தடுக்க வேண்டும். நாட்டில் முதலீடு பெருக, முதலாக்கம் இன்றியமையாததாகும். ஏராளமான சேகரிப்பின் அளிப்பால் தான் முதலாக்கம் பெருகும். சேமிப்பு பெருகி முதலீடும் உற்பத்தியும் பெருக நிதி நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. பணவழிப் பொறுப்பாளிகள் (Monetary authorities) அத்தகைய நிதி நிறுவனங்களை ஏற்படுத்தி அவற்றை ஒழுங்குபடுத்த கட்டுப்படுத்த வேண்டுவது இன்றியமையாததாகும்.

அரசிறைக் கைக்கோள்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை சீரான முறையில் பெருகச் செய்ய, அரசிறைக் கைக்கோள் சக்தி வாய்ந்த ஒரு கருவியாகத் தற்காலத்தில் அமைந்துள்ளது. ஏனெனில், இந் நடவடிக்கைகள் மூலம் அரசு ஒரு தொழில் அதிபராய் ஒரு சேகரிப்பாளராய் வருமானத்தைப் பகிர்ந்தளிப்பவராய் நிலை யான பொருளாதாரத்தை ஏற்படுத்துபவராய் பணிபுரிய நல்ல வாய்ப்பு கிட்டுகிறது. பொதுத் துறையின் செயல் திட்டங்களை அமுல் படுத்துவதற்குத் தேவையான நிதி வசதியையும், வளங் களையும் அதிகரிக்க அரசின் வரிக்கொள்கைகள் பெருந்துணை யாய் அமைந்துள்ளன. அரசின் வருவாயை அதிகரிக்க அரசு புது வரியையும் விதிக்க முடியும். எடுத்துக் காட்டாக, முதல் திட்டகாலத்தில் மத்திய அரசு வரவு செலவு திட்ட வளங்களின் (Budgetary resources) மூலமாக மொத்த வருவாயில் 73 சத வீதத்தைப் பெற்றது. உள் நாட்டு வரி போன்ற அரசின் வரிக் கொள்கைகள் மூலம் சில இன்றியமையாத பொருள்களின் உற்பத்தியையும் மூதலீடுகளையும் ஊக்குவிக்கப் பயன்படுத்த முடிவதோடு சில அவசியமற்ற முதலீட்டையும், உற்பத்தியையும், தடுக்கவும் பயன் படுத்தலாம். நேரடி வரிக் கட்டுப்பாடுகள்

மூலம் யூக வாணிகம், டம்பப் பொருள் உற்பத்திக்கான முதலீடு ஆகியவற்றில் பண வளங்கள் சென்று வீணடிக்கப் படாமல் தடுத்துக் கொள்ளலாம். வரிகள் மூலம் கட்டாய சேமிப்பையும் ஏழ்மை நாடுகளில் அதிகப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப் படலாம். அரசின் கடன் வாங்கும் திட்டங்களால் தன்னிச்சை சேமிப்பை ஊக்குவிக்க அரசுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. குறைந்த முதலாக்கம் உள்ள ஏழ்மை நாடுகளில் வளர்ச்சியைப் பெருக்கப் பற்றுக்குறை நிதியாக்க முறையை (Deficit financing) மேற் கொள்ளலாம். இறுதியாக, அரசினது பிரதான சமதர்மக் கொள்கையைச் சாதிக்க வரிக் கொள்கைகளையும் செயல் திட்டங் களையும் மேற்கொண்டு வருமானத்தையும், செல்வத்தையும் சமமாகப் பங்கிட்டு, நாட்டிலுள்ள வருமான, செல்வ ஏற்றத் தாழ்வுகளையும் குறைக்க முடியும். இதற்காக அரசு அதிக வருமானம் பெறுவோரின் மேல் வளர்ச்சி வீத வரியை விதிப்ப தாலும் பொது நலனுக்கான செலவினங்களை அதிகப்படுத்துவ தாலும் சாதிக்க முடியும்.

பாகம் II

தேசிய வருவாயும் பொருளாதார வளர்ச்சியும்

9. இந்தியாவின் தேசிய வருவாய்

ஏழை, செல்வ நாடுகளில் தேசிய வருவாய்

உலகிலுள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சியினை அறிந்துகொள்வதற்காக, தேசிய வருவாய் கருத்தானது இன்றியமையாததாகும். பொதுவாக, இந்தியா போன்ற ஏழ்மை நாடுகளில் தேசிய வருவாய் மிகக் குறைந்தும், அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகளில் தேசிய வருவாய் மிக அதிகமாகவும் காணப்படுவதை எல்லோரும் அறிவர். வளர்ச்சியடைந்த செல்வந்த நாடுகளில் வேளாண்மைத் தொழில், வர்த்தகம் போன்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருவாய் அதிகமானதாக இருப்பதால், அந்நாடுகளில் தேசிய வருமானம் அதிகமானதாக உள்ளது. தேசிய வருமானம் அதிகமாக இருப்பதால், செல்வந்த நாட்டு மக்களின் தலா வருமானம் அதிகமாய் உள்ளது. எனவே, முற்பட்ட நாடுகளில் வாழும் மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்று எல்லா வகையிலும் தன்னிறைவு பெற்று வாழ்ந்து வருகின்றனர். வளர்ச்சியடைந்த நாடுகளில் செல்வம் அதிகரித்துக்கொண்டே செல்வதால், வாழும் மக்களும் பணக்காரர்களாகி அதிகமான சேமிப்பும், நுகர்ச்சியும் கிடைக்கப்பெற்று வாழ்ந்து வருகின்றனர். இதற்கு மாருக, வளர்ச்சியுரு ஏழ்மை நாடுகளில் வேளாண்மை, தொழில், வாணிபம் போன்றதுறைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகக் குறைவாக உள்ளது. எனவே, ஏழ்மை நாடுகளில் கிடைக்கும் தேசிய வருமானம் மிகக் குறைந்தும் இந்நாட்டு மக்களின் தலா வருவாயும் குறைந்து காணப்படுகிறது. இதனுல், ஏழ்மை நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகக் குறைந்து பெரும்பாலான மக்கள் பரிதாபத்திற்குரிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, நாட்டின் தேசிய வருமானத்தின் அளவையும், தன்மையையும், பகிர்வையும், கணக்கிட்டு மக்களின் பொருளாதார

நிலையை அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள், தேசிய வருவாய் அதிகரிப்பின் இலக்குகளை ஒவ்வொரு திட்டத்திலும் குறிக்கின்றன. தேசிய வருமான இலக்குகளது சாதனைகளின் அடிப்படையில் திட்ட காலத்தில் சாதிக்கப்பட்ட இந்தியப் பொருளாதார வளர்ச்சியைத் துல்லியமான முறையில் தெரிந்து கொள்ளலாம்.

விளக்கம் : தேசிய வருவாய் என்பது ஒரு நாட்டின் மொத்த வருமானத்தைக் குறிக்கிறது. ஒரு நாட்டில் ஒரு குறித்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பைத்தான் தேசிய வருமானம் என்று அழைக்கிறோம். இது ஒரு நாட்டின் செல்வத்தோடு சேர்க்கப்படும் வருடாந்திர வருமானமாகும். தேசிய வருவாயைத் தேசிய ஆதாயம் (National Dividend) என்றும் அழைக்கலாம். தேசிய வருவாயைப் பணத்தின் வாயிலாக வெளிப்படுத்துவது வழக்கம். சில சமயங்களில் தேசிய வருவாயை, பணத்தின் மூலம் அளக்கும் அடிப்படையில் பொருள்கள், பணிகள் ஆகியவைகளின் சேர்க்கை என்றும் கூறலாம்.

இக்கருத்தின் முக்கியத்துவம்

ஒரு நாட்டின் பொருளாதார நிலையைப் பற்றிய ஏராளமான அம்சங்களைத் தேசிய வருமானம் எடுத்துக் கூறுகிறது. ஒரு நாட்டின் தேசிய வருவாயின் அளவை அடிப்படையாகக் கொண்டு, அந்நாடு ஏழ்மை நாடா அல்லது செல்வந்த நாடா என்பதை அறியலாம். தேசிய வருவாயின் புள்ளி விவரங்களால் ஓர் ஆண்டில் பொருளாதார நலனில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ளலாம். இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் அளவைத் தேசிய வருவாயில் காணப்படும் மாற்றங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஓர் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதா, இல்லையா என்பதைத் தேசிய வருமான வளர்ச்சி வீதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும், நாட்டிலுள்ள உற்பத்திக் காரணிகள் தங்கள் சன்மானங்களாகிய வாரம், கூலி, வட்டி, லாபம் ஆகியவற்றைத் தேசிய வருவாயிலிருந்துதான் பெறுகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார நிலையைத் தெளிவாக அறிய, தேசிய வருவாயின் அளவைவிட, தேசிய வருவாயில் அமைந்துள்ளவைகள்தான் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக, நம் நாட்டில் மொத்த தேசிய வருவாயில் சுமார் பாதி வேளாண்மைத் துறையிலிருந்து கிடைக்கிறது. இது நம்

பொருளாதாரத்தில் வேளாண்மைத்துறை பெற்றுள்ள இடத்தினைப் புலப்படுத்துகிறது. எனவே, வேளாண்மையைச் சீரமைக்காமல் தேசிய வருவாயை அதிகரிக்க எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும் என்பதை அறியலாம். மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறையில் உற்பத்தி தோல்வி அடைந்ததால், அக்காலத்தில் ஆண்டுக்கு ஐந்து சத வீதம் தேசிய வருவாய் அதிகரிப்பைச் சாதிக்க வேண்டும் என்ற முயற்சி வெற்றியடையவில்லை. நாட்டின் பொதுக் கொள்கைகளை அமைக்க, தேசிய வருவாய் கருத்து பெரும் துணை புரிகிறது. நம் ஐந்தாண்டுத் திட்டங்களின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக இருப்பது வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதாகும். ஏற்றத் தாழ்வுகளை நீக்க, கொள்கை அமைக்கும்பொழுது நாட்டில் உற்பத்தி செய்யப் படக்கூடிய வருமானத்தின் மொத்தத் தொகையையும், அது எவ்வாறு பல்வேறு மக்களுக்குள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் அறிந்தாக வேண்டும். தேசிய வருமான அதிகரிப்பால் மக்களின் நலமும் எப்போதும் அதிகரிக்கும் என்று கூறுவது தவறாகும். எடுத்துக் காட்டாக, ஒரு குறித்த காலத்தில் தேசிய வருமானம் அதிகரிக்கலாம். ஆனால், மக்களது வருமானங்களின் அதிகரிப்பைவிட பொருள்களின் விலைகள் அதிகரிக்க நேர்ந்தால் மக்களுக்கு நலன் ஏற்படாது. மேலும், வருமான அதிகரிப்பில் பெரும் பகுதி ஒரு சிலருக்கே கிடைத்து விட்டால் மக்களில் பெரும்பாலோர் துயரடைவர்.

தலா வருமானத்தைக் கண்டுபிடிக்க மொத்த தேசிய வருவாயை நாட்டிலுள்ள மக்கள் தொகையால் வகுக்க வேண்டும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மொத்த மக்கள் தொகை}}$$

இதே போன்று நுகர்ச்சிப் பொருள்களிலிருந்து கிடைத்த தேசிய வருவாயை மொத்த மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது ஒரு வருட தலா நுகர்ச்சி.

கணக்கிடும் முறைகள்

பொதுவாக, தேசிய வருவாயைக் கணிக்க மூன்று முக்கிய முறைகளைக் கையாளுவது வழக்கமாகும். அவை பின்வருமாறு:

1. **உற்பத்தி முறை :** இம் முறைப்படி நாட்டிலுள்ள பல்வேறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களின் மொத்த மதிப்பைக் கணக்கிட்டு மொத்த தேசிய உற்பத்தியைக் (Gross National Product) கணக்கிட முடியும். பல்வேறு தொழில்களை வேளாண்மைத்துறை, இரண்டாம் வகையைச் சேர்ந்த துறை, மூன்றும் வகையைச் சேர்ந்த துறை என்று மூன்று துறைகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, வேளாண் மைத்துறையில் விவசாயம், காட்டுத்துறை, மீன்பிடிப்பு போன்ற தொழில்கள் சேர்க்கப்படுகின்றன. இரண்டாவது துறையில் உற்பத்தித் தொழில்களும், மூன்றும் துறையில் வர்த்தகம், போக்குவரத்து, மற்றும் பணிகள் போன்றவை சேர்க்கப் படுகின்றன. மொத்த தேசிய உற்பத்தியைக் கணக்கிடும் பொழுது இருமுறை சேர்க்கையை விலக்க வேண்டும். இதைக் கிடைக்கும் உற்பத்திப் பொருள்களின் மதிப்பைச் சேர்ப்பதால் மட்டும் தவிர்க்கலாம். மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து முதல் பொருள்களின் தேய்மானம் போன்றவற்றைக் கழித்து விடுவதால், நிகர தேசிய உற்பத்தி (Net National Product) கணக்கிடப்படுகிறது. இம்முறையினுல் மேற்கூறிய மூன்று துறைகளிலிருந்தும் கிடைக்கக்கூடிய பொருள்களுடைய மதிப் பின் அடிப்படையில் திட்டம் தீட்டவும், நாட்டின் சமமான பொருளாதார வளர்ச்சிக்கு வளங்களை ஒதுக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. நிகர தேசிய உற்பத்தியிலிருந்து நேர்முக வரிகளின் மதிப்பைக் கழித்து விடுவதால் கிடைப்பது தேசிய வருமானம் ஆகும்.

2. **வருவாய் முறை :** பொருளாதார வளர்ச்சிக்காக உழைப்பு, நிலம், முதல், தொழில் அமைப்பு போன்ற பல்வேறு உற்பத்திக் காரணிகள் தங்கள் பணிகளைப் புரிந்து வருகின் றனர். இக்காரணிகளின் சன்மானமாகிய கூலி, வட்டி, வாரம், லாபம் ஆகியவைகளின் கூட்டுத் தொகையின் மூலம் ஒரு நாட்டின் தேசிய வருவாயைக் கணக்கிட முடியும்.

3. **செலவு முறை :** மொத்த செலவையும், மொத்த சேமிப்பையும் இணைத்தால் கிடைப்பது மொத்த வருமானம் ஆகும். இம்முறைப்படி நாட்டிலுள்ள மக்களின் மொத்த நுகர்ச்சிச் செலவைக் கணக்கிட வேண்டும். அடுத்து, எல்லா மக்களுடைய சேமிப்பின் அளவைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க வேண்டும். இது ஒரு கடினமான முறையே ஆகும். ஆனுல், மொத்த முதலீடு மொத்த சேமிப்பிற்குச் சமமாக எடுத்துக் கொண்டால், இக்குறையை நீக்கலாம். ஆனுல்,

இம்முறை வளர்ந்துவரும் நாடுகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படுவது இல்லை. வளர்ச்சியடைந்த நாடுகளில் முதலீட்டையும், சேமிப்பையும் கணக்கிடுவது சுலபமாகும். வளர்ந்துவரும் நாடுகளில் பொருத்தமான புள்ளி விவரங்கள் கிடைக்காத காரணத்தினால் செலவு முறை பயன்படுத்தப்படுவதில்லை. நடைமுறையில் இம்மூன்று முறைகளும் தேசிய வருவாயை மதிப்பிடத் தனித்தனியாய் பயன்படுத்தப்படுவதில்லை. புள்ளி விவரங்கள் போதுமான அளவு கிடைக்காததால் தேசிய வருவாயைக் கணக்கிட, பொதுவாக முதல் இரண்டு முறைகளையும் கலந்து மதிப்பிடுவது வழக்கம்.

இந்தியத் தேசிய வருமானத்தை மதிப்பிடுவதில் ஏற்படும் பிரச்சினைகள்

இந்தியாவில் தேசிய வருமானத்தை மதிப்பிடுவதற்காக 1949-ல் பேராசிரியர் P. C. மஹாலனோபிஸ் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பெற்றது. இந்தியாவில் தேசிய வருவாயைக் கணக்கிடுவதில் காணப்படும் முக்கிய குறைகளை இக்குழு தெளிவாக எடுத்துரைத்தது.

1. கருத்து வழிக் குறைபாடுகள் (Conceptual Difficulties)

1. **பண உபயோகம் இல்லாத துறை:** இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வேளாண்மைப் பொருள்கள் உற்பத்தி செய்பவர்களாலேயே பெரும்பகுதி நுகர்ச்சி செய்யப்படுவதால், சந்தைக்கு மிஞ்சிய பொருள்கள் வருவது மிகக் குறைவாகும். அப்படியே பொருள்கள் சந்தைக்கு வந்தாலும், அது பண்டமாற்று முறையில் பரிவர்த்தனையாகிறது. எனவே, பணத்தை உபயோகப்படுத்தாமலே, பொருள்கள் பண்டமாற்று முறையில் கொண்டு கொடுக்கப்படுவதால், தேசிய வருவாயைக் கணக்கிடும்போது இப் பொருள்கள் பணத்திற்காக விற்கப்பட்டால், என்ன விலைக்கு விற்கப்படும் என்று மதிப்பிட்டு, பிறகு தேசிய வருமானத்தைக் கணிக்க வேண்டும்.

2. **உற்பத்தியாளர்களின் அறியாமை:** இந்தியாவில் உற்பத்தி செய்பவர்கள் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருப்பதால், அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களின் கணக்குகளைத் துல்லியமாக வைத்துக் கொள்வதில்லை. தேசிய வருமானத்தை மூன்றும் முறைப்படி இந்தியாவில் கணக்கிட

முடியவில்லை. ஏனெனில், உற்பத்தியாளர்கள் வருமானம், செலவு போன்ற குடும்ப வரவு செலவுத் திட்டக் கணக்குகளை வைத்துக்கொள்வதில்லை. ஆனால், வளர்ந்த நாடுகளில் உற்பத்தியாளர்கள் இத்தகைய விவரங்களைத் துல்லியமாக வைத்துக்கொள்வதால் தேசிய வருவாயைச் சுலபமாகக் கணிக்க முடிகிறது.

3. **பணிகளில் வேறுபாடின்மை:** வருமான முறைப்படி தேசிய வருவாயைக் கணக்கிட, சில துறைகளில் பணியாற்றி வருபவர்களில் உண்மையான வேலையை அறிந்து கணக்கிடுவது அவசியமாகும். தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் பணியாற்றி வருபவர்களைப் பிரித்து வகைப்படுத்த வேண்டும். ஆனால், இந்தியாவில் அத்தகைய வகுப்பு முறை (classification) தெளிவாகவும் துல்லியமாகவும் இல்லை. விவசாய நடவடிக்கைகள் உச்ச நிலையில் இருக்கும் காலங்களில் ஒருவன் விவசாயப் பணியாளனாக இருப்பான். வேளாண்மை தளர்ச்சியாக இருக்கும் காலங்களில் அதே பணியாள் சிற்றளவு தொழிலிலோ அல்லது போக்குவரத்துத் துறையிலோ பணியாற்றி வருவான். இக்குறைகளைக் கருத்தில் கொண்டு இந்தியத் தேசிய வருவாய்க் குழுவின் பணிகளில் காணப்படும் வேறுபாடின்மையைப் போக்கத் தொழில்களின் (Enterprise) அடிப்படையில் பணிகளை வகைப்படுத்துவதற்குப் பதிலாக, தொழில் புரியும் பணிகளின் அடிப்படையில் வகைப்படுத்த வேண்டும் என்று அறிவுரை கூறியது.

2. புள்ளி விவரக் குறைபாடுகள்
(Statistical Difficulties)

கருத்துவழிக் குறைபாடுகளோடு கூட, புள்ளி விவரங்கள் தேவையான அளவு கிடைக்காததால், தேசிய வருவாயைக் கணக்கிடல் கடினமாகஉள்ளது. முதலாவதாக, வேளாண்மைத் துறை, ஆலைகள் ஆகியவைகளின் மொத்த உற்பத்தி,உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு, பொருள்களின் சரியான விலைகள் போன்ற புள்ளி விவரங்கள் போதுமான அளவு முறையுடன் கிடைப்பதில்லை. இரண்டாவதாக, கால்நடை வளர்ப்பு போன்ற சில துறைகளில் சீரான உற்பத்தி விவரங்கள் இல்லாததால், உற்பத்தி மதிப்பு குத்து மதிப்பானதாகவே உள்ளது. மூன்றாவதாக, புள்ளி விவரங்களைச் சேகரிக்கும்துறை சரியாகவும் திறமையாகவும் பணிபுரிவதில்லை. விவரங்களைச் சேகரிப்பவர்களுக்குப் போதுமான ஊதியம்

தரப்படுவதில்லை. விவரங்களைக் கொடுப்பவர்கள் அவற்றின் முக்கியத்துவத்தை அறிவதில்லை. நான்காவதாக, சில சமயங்களில் வருமான முறையைக் கையாளும்போது ஒருவரின் ஊதியத்தைச் சில மாதிரி கணக்கீடுகளின் அடிப்படையில்தான் மதிப்பிடவேண்டியுள்ளது. எனவே, மக்களின்வருமானத்தைப் பற்றிய சரியான கணக்கீடு கிடைப்பதில்லை. கடைசியாக, நுகர்வோரின் செலவு, நாட்டின் சேமிப்பு, முதலீடு முதலாக்கம் போன்ற விவரங்கள் இந்தியாவில் துல்லியமாகக் கிடைப்பதில்லை. எனவே, தேசிய வருவாயைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்ட புள்ளி விவரங்களில் பெரும்பாலானவை சரியான அடிப்படை இன்றிப் பிறப்பிக்கப்பட்டவைகளாகும். எனவே, மிகவும் எச்சரிக்கையுடன் தேசிய வருவாயைக் கணக்கிட்டுப் பயன்படுத்த வேண்டும். "புள்ளி விவரங்களின் குறைபாடுகளினுல், தேசிய வருவாய் மதிப்பீடுகளின் பயன்பாடு சந்தேகத்திற்கு உரியனவாகும்" என்று பேராசிரியர் K. N. ராஜ் குறை கூறியுள்ளார்.

இந்தியத் தேசிய வருமானக் கணக்கீடு

இந்தியத் தேசிய வருவாய்க் குழு அமைக்கப்பட்டதற்கு முன்பே தாதாபாய் நௌரோஜி, பிண்ட்லே சிர்ராஸ் (Findlay Shirras), டாக்டர் V. K. R. V. ராவ் போன்றவர்கள் இந்தியத் தேசிய வருவாயைக் கணக்கிட்டுள்ளனர். ஆனால், இந்தியா விடுதலையடைந்ததற்குப் பின் ஆகஸ்ட், 1949-ல் பேராசிரியர். பி. சி. மஹாலனோபிஸ் (Prof. P. C. Mahalanobis) அவர்கள் தலைமையில் தேசிய வருவாய்க்குழுநியமிக்கப்பட்டது. இதன் முதல் அறிக்கை 1951-ஆம் ஆண்டிலும், இறுதி அறிக்கை 1954 பிப்ரவரியிலும் வெளியிடப்பட்டன. இக்குழு உற்பத்தி முறையையும், வருமான முறையையும் கலந்து உபயோகித்து இந்தியத் தேசிய வருவாயை மதிப்பிட்டது. உற்பத்தி முறையில் போக்குவரத்து, வர்த்தகம், பொது நிர்வாகம், வீட்டுப் பணிகள், பணிபுரியும் வகுப்பினர்கள் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும், பொருள்களின் மதிப்பையும் கணக்கிட்டது. துறைகள் வாரியாக பிரிக்கப்பட்டுத் தேசிய வருவாய் கணக்கிடப்பட்ட முறை பின்வருமாறு :

1. விவசாயம், கால்நடைகள், காட்டுத் தொழில், மீன் பிடிக்கும் துறை.

(a) **வேளாண்மை :** கிராமங்களிலுள்ள பயிரிடப்படும் பகுதிகள், உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் ஆகியவற்றின் துல்லியமான விவரங்கள் முழுவதுமாகக் கிடைக்கவில்லை. பயிரிடப்பட்ட மொத்த நிலப்பகுதியில் 76%க்கு மட்டும்தான் விவரங்கள் கிடைத்தன. மேலும், இந்த மதிப்பீடுகள் குத்து மதிப்பான முறையில் கணக்கிடப்பட்டவை. பருப்பு வகைகள், பழ வகைகள், காய் கறிகள், அரிசி போன்ற பொருள்களின் உற்பத்தியின் அளவையும், விலைகளையும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட, பிரசுரிக்கப்படாத அறிக்கைகளின் மூலமாக இக்குழு அறிந்தது. தேசிய வருவாயைக் கணக்கிட உற்பத்திக்குச் செலவிடப்பட்ட பல்வேறு செலவுகளின் நிகர மதிப்பைக் கணக்கிட வேண்டும். இச்செலவினங்கள் விதைகள், அங்காடிச் செலவுகள், வீணடிப்பு, பழுதுபார்த்தல், கால்நடைகளுக்கு உணவளித்தல் போன்றவைகளாகும். இவ்விவரங்களை யெல்லாம் இக்குழு வேளாண்மை அமைச்சரகம், விற்பனை அறிக்கைகள் போன்ற வற்றிலிருந்து அறிந்தது.

(b) **கால்நடைகள் :** கால்நடைத் துறையிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கணக்கிட 1945ல் கால்நடைக் கணக்கீட்டு விவரங்களிலிருந்து இக்குழு அறிந்தது. விற்பனை அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து கால்நடைப் பொருள்களாகிய பால் பொருள்கள், இறைச்சி, முட்டை, கோழி, கம்பளி போன்றவை களின் உற்பத்தியின் அளவையும், விலைகளையும் தெரிந்து அவற்றைப் பயன்படுத்தியது.

(c) **காட்டுத் தொழில் :** நாட்டிலுள்ள காடுகளின் நிலப் பகுதியை அறிய போதுமான விவரங்கள் கிடைக்கவில்லை. மேலும், காடுகளில் அரசாங்கக் காடுகள், தனியார் காடுகள் என இரு வகைகள் உண்டு. அரசாங்கக் காடுகளைப் பற்றிய விவரங்கள் ஓரளவு தெரிந்தாலும் தனியார் துறையிலுள்ள காடுகளைப் பற்றிய விவரங்கள் தெரிவதில்லை. எனவே, அரசாங்கக் காடுகளில் ஓர் ஏக்கருக்கு சராசரியாகக் கிடைக்கும் உற்பத்தியின் அளவையே நாடு முழுவதற்குமாக இக்குழு பயன்படுத்தியது.

மீன் பிடிக்கும் தொழில்

இத்துறையில் போதாத, நம்பிக்கை இல்லாத புள்ளி விவரங்கள்தான் கிடைக்கின்றன. எனவே, மீன்களைப் பற்றிய விற்பனை அறிக்கையின் மூலம் இக்குழு இத்துறையின் உற்பத்தியை மதிப்பிட்டது.

2. தாதுப் பொருள்களைப் பயன்படுத்துதல்

இந்திய மண்ணியல் ஆராய்ச்சி கணக்கீட்டுத் துறையின் விவரங்களை இக் குழு பயன்படுத்தியது. பொருள்களின் உற்பத்தி செலவிலிருந்து ஒரு குறித்த தொகையைக் கழித்து பொருள்களின் நிகர மதிப்பை இக் குழு மதிப்பிட்டது.

3. தொழில்

தொழில் துறையை இக் குழு இரண்டு வகைகளாகப் பிரித்தது. ஒன்று ஆலைத்தொழில்கள், இரண்டாவது கைத் தொழிலையும் உட்கொண்ட சிறு தொழில்கள்.

(a) **ஆலைத் தொழில்கள் :** 1948-ல் எடுக்கப்பட்ட உற்பத்திக் கணக்கீட்டிலிருந்து வேலையிலிருப்போர், உற்பத்தி செய்யப் பட்டபொருள்களின் அளவு, உற்பத்தியால் சேர்க்கப்படும் நிகர மதிப்பு ஆகியவற்றின் மதிப்பை மொத்த மதிப்பிலிருந்து மூலப் பொருள்கள் தேய்மானம் ஆகியவைகளின் மதிப்பைக் கழித்து இக்குழு கணக்கிட்டது. வங்கிகள், காப்பீட்டுக் கழகங்கள் போன்ற நிறுவனங்களின் கட்டணங்களைக் கழித்துவிட்டு நிகர உற்பத்தியின் உண்மையான மதிப்பை இக்குழு கணக்கிட்டது.

(b) **சிறு தொழில்கள் :** இத் துறை மூன்று துணைப் பகுதி களாகப் பிரிக்கப்பட்டது. 1. ஆலைகளைப் போன்ற சிறிய நிறுவனங்கள், 2. நடுத்தர வகையைச் சேர்ந்தவை, 3. குடிசை, கைத் தொழில்களின் வாராந்தர, மாதாந்திர அல்லது வருடாந்திர ஊதியத்தின் அளவிலிருந்து ஒரு தொழிலாளரின் நிகர உற்பத்தி மதிப்பை இக்குழு கணக்கிட்டது. இதே வருடாந்திர சராசரி குடிசைத் தொழில்களின் தொழிலாளர் களுக்குமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. நடுத்தர வகைத் தொழில்களின் தொழிலாளர்களுக்குக் கூலிகள், சம்பளங்கள் ஆகியவைகள் போக மேற்கொண்டு பன்னிரண்டு சதவீதம் அதிகமாக இவ்வகுப்பினர்க்குச் சேர்க்கப்பட்டது. ஆலைகளைப் போல் உள்ள தொழில்களிலும் கூலிகள் ஆகியவைகளுக்கு மேல் 24% வருமானம் சேர்க்கப்பட்டு இத்தொழில்களிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானம் கணக்கிடப்பட்டது.

வருவாய் முறை

இம் முறைப்படி மேற் குறிப்பிட்ட துறைகள் போக எஞ்சிய ஆறு துறைகளின் வருமானம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப் பட்டது. 1. வர்த்தகம் 2. போக்குவரத்து. போக்குவரத்து, வர்த்தகத் துறையில் உள்ள தொழிலாளர்களின் வருவாயை மதிப்பிட அவற்றை ஆறு பகுதிகளாக இக் குழு பிரித்தது.

(a) செய்தித் தொடர்பு, (b) இரயில்வேக்கள், (c) அமைக்கப் பட்ட வங்கிகள், (d) காப்பீட்டுக் கழகங்கள்,(e) மற்ற வாணிபம், (f) போக்குவரத்துத் துறைகள். செய்தித் தொடர்புத் துறையின் நிகர உற்பத்தி மதிப்பை அரசின் வரவு செலவு திட்டத்தின் மூலம் அறிய முடிந்தது. அதே போன்று இரயில்வே போர்டின் கணக்கு அறிக்கைகளிலிருந்து இரயில்வே துறை யின் நிகர உற்பத்தியின் மதிப்பை அறிய முடிந்தது. ரிசர்வ் வங்கியால் 1948-ல் அறிவிக்கப்பட்ட 611 வங்கிகளின் லாப நட்டக் கணக்கு, இருப்பு நிலைக்குறிப்பு ஆகியவற்றின் மூலம் வங்கித் துறையின் விவரங்களை அறிய முடிந்தது. 1949-ல் இந்தியக் காப்பீட்டு வருடாந்திர நூலை அடிப்படையாகக் கொண்டு, காப்பீட்டு நிறுவனங்களின் விவரங்களை அறிய முடிந்தது. வர்த்தகம், போக்குவரத்து ஆகிய துறைகளில் பணி புரிபவர்களுடைய விபரங்கள் இரு வகையாகப் பிரிக்கப் பட்டன. வருமான வரி கட்டுபவர்கள், வருமான வரி கட்டாத வர்கள் என இருவகைப்படுத்தப்பட்டனர். வருமான வரி கட்டு பவர்களுடைய புள்ளி விவரங்கள் வருமான வரித் துறை யிலிருந்து கிடைத்தது. ஆனல், வருமானவரி கட்டாதவர் களுடைய புள்ளி விவரங்களைச் சரியாக அறிய முடியாமல் குத்து மதிப்பாகத்தான் இக்குழு கணக்கிட்டது.

3. பொது நிர்வாகம், அரசாங்கப் பணிகள்

அரசாங்கத் தொழில்களிலிருந்து கிடைத்த பொருள்களின் நிகர மதிப்பைத் தொழில் துறையிலிருந்து இக்குழு நீக்கியது. ஏனெனில், அரசாங்கத் தொழில்களிலிருந்து பெரும் பொருள் களின் மதிப்பு ஏற்கனவே தொழில் துறையில் சேர்க்கப் பட்டுள்ளது. எனவே, அரசாங்கப் பணிகள் என்பது பொது நிர்வாகத்தைத்தான் குறிப்பிடுகிறது. பொது நிர்வாகத் துறை யிலிருந்து கிடைத்த வருமான விபரங்களை அறிய, அரசாங்க நிர்வாகத் துறைகளில் கொடுக்கப்பட்ட கூலிகள், சம்பளங்கள் ஆகியவைகளிலிருந்து அறிய முடிந்தது.

4 & 5 வாழ்க்கைத் தொழில்கள், கலைகள், வீட்டுப்பணிகள்
(Profession and Liberal Arts and Domestic Services)

இத்துறையில் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறி யியல் ஆலோசகர்கள், தணிக்கையாளர்கள், ஆடை தைப்பவர் கள், சவரத் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் போன்றவர்களின் வருமானங்கள் சேர்க்கப்படுகின்றன. இத்துறையைச் சேர்ந்தவர்களின் ஊதியங்களை இக்குழு மதிப் பிட்டது. இத்துறையில் உற்பத்தி செய்யப்பட்ட நிகரப் பொருள்

களின் மதிப்பும், இப்பொருள்களை வாங்குவதற்காகச் செலவிடப்பட்ட பணமும் சமமாகவே இருந்தது.

6. வாடகை வருமானங்கள்
(Rental Incomes)

மனைச் சொத்திலிருந்து கிடைக்கப்பெறும் குடியிருப்புக் கூலிகளின் (Rent) மதிப்பீடு ஒரு தனி வகையாகவே கருதப்பட்டது. மனைகள், நகர, கிராம மனைகள் என்று இரு வகையாகப் பிரிக்கப்பட்டன. நகராட்சி வீதங்கள், வீட்டு வரிகள் போன்றவைகளின் வசூலிலிருந்து முறையே நகரப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் வருடாந்தரக் குடியிருப்புக் கூலிகளும், நகர வீட்டுச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களும் மதிப்பிடப்பட்டன. ஆனால், கிராம வீட்டுச் சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கணக்கிடுவதில் குழப்ப நிலை ஏற்பட்டது.

மேற்கூறிய எட்டு துறைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற நிகர உற்பத்தியின் மொத்த மதிப்பானது உற்பத்திக் காரணிகளின் சன்மான அடிப்படையில் நிகர உள்நாட்டு உற்பத்தியின் அளவைக் குறித்தது. 1948-49-ஆம் ஆண்டுக்கான தேசிய வருமான மதிப்பீட்டைக் கண்டு பிடிக்க அயல் நாடுகளிலிருந்து கிடைத்த நிகர வருமானத்தையும் இக்குழு மதிப்பிட்டது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கைகளின் மூலமாக, ஏராளமான விவரங்களைப் பெற்று இக்குழு தேசிய வருவாயை மதிப்பிட்டது.

தேசிய வருவாய்க் குழுவின் அறிக்கையின் அம்சங்கள்

தேசிய வருவாய்க் குழுவின் அறிக்கை நம் பொருளாதாரத்தின் இயல்புகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காண்பித்தது. இந்தியாவின் தேசிய வருமானம் 1948—1949-ஆம் ஆண்டில் இருந்த விலைகளின் அடிப்படையில் அவ்வாண்டில் ரூபாய் 8,650 கோடியாகவும், 1949-50 இல் ரூபாய் 8,820 கோடியாகவும், 1950-51 இல் ரூபாய் 8,850 கோடியாகவும் கணக்கிடப்பட்டது. 1948-49-ஆம் ஆண்டில் இந்தியாவில் தலா வருமானம் ரூபாய் 247 ஆக இருந்தது என்று இக்குழு கணக்கிட்டது. இது ஏறக்குறைய $ 58·7-க்குச் சமமாகும். நம் நாட்டின் தலா வருவாய் மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது மிகக் குறைவாய் உள்ளது. எடுத்துக் காட்டாக, இதே காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் தலா வருமானம் $ 1453-ம் கானடாவில் $ 870 மாக இருந்தது. எனவே, இந்தியா ஏழ்மை நாடுகளில் ஒன்று என்பதை இக்குழுவின் அறிக்கை தெளிவுபடுத்தியது. மேலும், இந்திய மக்களின்

வாழ்க்கைத் தரத்தில் மிகக் குறைந்த முன்னேற்றம் ஏற்பட்டு வருவதையும் வருமான ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக இருப்பதையும் உணர முடிகிறது.

மொத்த தேசிய வருவாயில் 33 சத வீத வருமானத்தை 5 சத வீத மொத்த பணக்காரர்கள் அடைகிருர்கள். 3-ல் 1 பங்கு வகுப்பைச் சேர்ந்தவர்கள் 3-ல் 1 பங்கு வருவாயை அடைகிருர்கள். 60 சதவீதத்திற்கும் மேலாகவுள்ள பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள் 33 சத வீத வருவாயைத்தான் பங்கிட்டுக் கொள்கிருர்கள்.

இந்தியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் சம சீரில்லா வளர்ச்சியே இருந்து வருகிறது. இக்குழுவின் கணக்கீட்டின்படி மொத்த தேசிய வருவாயில் 50 சத வீதம் வேளாண்மைத் துறையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கிடைத்தது. போக்கு வரத்து, செய்தித்தொடர்பு ஆகிய துறைகளிலிருந்து மொத்த தேசிய வருவாயில் 18 சத வீதம் கிடைத்தது. மொத்த தேசிய வருவாயில் சுமார் 17 சத வீதம் செய் பொருள்கள், கைத் தொழில்கள், சுரங்கத் தொழில் ஆகியவைகளிலிருந்து கிடைத்தது. ஆனல், 1949-இல் இங்கிலாந்தில் தொழில்துறை உற்பத்தி மட்டும் மொத்த தேசிய வருவாயில் 53% ஆகும். ஆனல், இந்தியாவில் 18% தான் என்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். எனவே, சரி சமமான பொருளாதார வளர்ச்சியின் மூலம் தேசிய வருவாயைப் பெருக்க வேண்டியதின் அவசியத்தை இந்நிலை அறிவுறுத்துகிறது. விவசாயம் மற்றும் வர்த்தகத்திற்கு அடுத்தபடியாக, சிற்றளவு, குடிசைத் தொழில்கள் அதிக வருமானத்தை அளித்து முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இந்தியாவிலுள்ள மொத்த தொழில்களில் 66% சிற்றளவு தொழில் நிறுவனங்கள் ஆகும். அதாவது பேரளவுத் தொழில்களை விட, 6 மடங்கு சிற்றளவுத் தொழில்கள் அதிகமாக உள்ளன. இதைக் கருத்தில் கொண்டு அரசாங்கமும் ஐந்தாண்டுத் திட்டங்களில் சிற்றளவு, குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்கு முதலிடம் அளித்து வருகிறது. இந்தியாவின் தேசிய வருவாயில் பாதிக்கு மேல் உணவுப் பொருள்களின் நுகர்ச்சிக்காகச் செலவிடப்படுகிறது. மக்களின் மொத்த செலவில் 2/3 பகுதி உணவுக்காகவே செலவிடப்படுகிறது. நம் தேசிய வருவாயின் பெரும்பகுதி உணவு, உடை ஆகியவற்றிற்காகவே செலவழிக்கப்படுகிறது. ஆனல், முன்னேற்றமடைந்த நாடுகளில் உணவுக்காக மொத்த தேசிய வருவாயில் 20 சதவீதத்திற்கும் குறைவாகவே செலவிடப்படுகிறது. செல்வ நாடுகளில் கல்வி, சுகாதாரம் போன்ற வாழ்வை வளமாக்கும் துறைகளில்

தேசிய வருமானத்தில் பெரும்பகுதி செலவிடப்படுகிறது. இந்தியாவின்பல்வேறு வகையான பொருளாதாரத்துறைகளில் ஒரு நபரின் உற்பத்தியில் அதிகமான ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. 1950-51-இல் இக்குழுவின் அறிக்கையின் படி, ஒரு நபருக்குச் சராசரியாக, வேளாண்மைத் துறையில் ஆண்டுக்கு 500 ரூபாயும், ஆலைகளில் 1,700 ரூபாயும், இருப்புப் பாதைகள், செய்திப் போக்குவரத்துத் துறைகள் ஆகியவை களில் ரூபாய் 1600-ம், சிறிய தொழில் நிறுவனங்களிலிருந்து ரூபாய் 800-ம் தான் கிடைத்துள்ளது. இறுதியாக, இந்திய மொத்த உற்பத்தியில் பொதுத்துறையின் பங்கு 7.6 சத வீத மென்றும் தனியார்த் துறையின் பங்கு 92·4 சத வீத மென்றும் இக்குழு 1948—49-ல் இருந்த நிலைமையின்படி கணக்கிட்டது. தேசிய வருவாய்க் குழுவின் மதிப்பீட்டில் தொழில் வாரியாக மதிப்பிடப்பட்ட நிகர உற்பத்தியின் அட்டவணை பின் வருமாறு :—

தொழில் வாரியாக தேசிய வருவாய் (1948—49)
(Sectorwise Distribution of National Income)

தொழிகள்	1950—51 நிகர உற்பத்தி (கோடி ரூபாய் களில்)	சத விகிதம்
1. வேளாண்மை	4890	51·3
2. சுரங்கம், தொழில் உற்பத்தி, கைத் தொழில்கள்	1530	16·1
3. வாணிபம், போக்கு வரத்து, செய்தித் தொடர்பு	1690	17·7
4. பிற பணிகள்	1440	15·1
5. உற்பத்திச் செலவின்படி நிகர உற்பத்தி	9559	100·2
6. அயல் நாட்டிலிருந்து சம்பாதித்த நிகர வருவாய்	20	0·2
7. தேசிய வருவாய்	9530	100
8. தலா வருவாய்	ரூ. 265	·2

முடிவுரை : தேசிய வருவாய்ப் புள்ளி விவரங்களைச் சேகரித்து கணக்கிடுவதில் புதிய முறைகளைக் கையாளுவது மிகவும் அவசியமாகும். தற்போது வெளியிடப்படும் தேசிய வருமானப் புள்ளி விவரங்கள் இந்தியப் பொருளாதாரத்தின் உண்மையான வளர்ச்சியை ஆழமான முறையில் எக்ஸ்ரே படத்தைப்போன்று துல்லியமாகப் பிரதிபலிக்கவில்லை. எனவே, பரவலான மற்றும் ஆழமான முறையில் விவரங்கள் சேகரிக்கப் பட்டால் தான் தேசிய வருமானக் கணக்கீட்டை உண்மையான தென்று நம்பமுடியும். அரசாங்கக் கணக்கீட்டோடு இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஸ்டேட் பாங்கு, உயிர் காப்பீட்டுக் கழகம் போன்ற நிறுவனங்களும் புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும். மேலும், சுயேச்சை ஆராய்ச்சிக் கூடங்களும் தேசிய வருவாயைப் பாரபட்சமின்றிக் கணக்கிட வேண்டும்.

10. தேசிய வருவாயும் ஐந்தாண்டுத் திட்டங்களும்

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் விரைவான பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க முயன்று வருகின்றன. திட்ட காலத்தில் சாதித்த தேசிய வருமான வளர்ச்சி வீதத்தின் அடிப்படையில் இந்தியாவில் எந்த அளவிற்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். திட்டமானது தொடர்ந்து நடைபெறும் செயல் முறை ஆகும். திட்டமிடுவோர் ஒரு குறித்த காலத்தில் எவ்வளவு தேசிய வருவாய் கிடைக்கும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து, அதைச் சாதிக்கச் செயல் முறைகளைக் கையாளுகின்றனர். தேசிய வருவாய் பற்றிய புள்ளி விவரங்கள் இரு வகையானவை. ஒன்று, நடப்பு விலையில் (Current prices) கணக்கிடப்படும் விவரங்களாகும். மற்றொன்று 1948-49-ஆம் ஆண்டு விலைகளின் அடிப்படையில் (Base period prices) 1948-49 முதல் 1964-65 ஆண்டு வரைக்கும் கணக்கிடப்படும் விவரங்களும், 1960-61 விலைகளின் அடிப்படையில் 1960-61 முதல் கணக்கிடப்படும் புள்ளி விவரங்களும் ஆகும். தற்போது மத்திய புள்ளி விவர நிறுவனம் (Central statistical organisation) நாட்டு வருவாயைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சீராகச் சேகரித்து வெளியிட்டு வருகின்றது. 1948-49 முதல் இந்தியத் தேசிய வருவாய், தலா வருவாய் ஆகியவைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்குகின்றது.

ஆண்டு	நாட்டின் வருவாய் (கோடி ரூபாயில்)		தலா வருவாய் (ரூபாயில்)	
	நடப்பு விலைகளில்	1948–49 விலைகளில்	நடப்பு விலைகளில்	1948–49 விலைகளில்
1948–49	8,650	8,650	249·6	249·6
1950–51	9,530	8,500	266·5	247·5
1955–56	9,980	10,480	255·0	267·8
1960–61	14,140	12,730	325·7	293·3
1965–66[1]	20,340	14,660	415·3	299·4
1966–67[2]	23,120	14,950	460·8	298·0

ஆண்டு	நிகர தேசிய உற்பத்தி		தலா நிகர வருவாய்	
	நடப்பு விலைகளில்	1960–61 விலைகளில்	நடப்பு விலைகளில்	1960–61 விலைகளில்
1967–68	28,356	16,586	551·4	322·5
1968–69	28,583	16,943	542·3	321·4

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1950–51—1965–66) தேசிய வருவாய் 63.7 சதவீதமும் சராசரி தலா வருவாய் (Percapita income) 20.47 சதவீதமும் உயர்ந்திருப்பதைக் காட்டுகின்றன.

முதல் திட்ட வருவாய் அதிகரிப்பு

முதல் திட்ட ஆரம்பத்தில் இந்தியத் தேசிய வருவாய் ரூ. 9000 கோடி என்று மதிப்பிடப்பட்டது.

முதல் ஐந்தாண்டுகளில் அது ரூ. 10,000 கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்ததற்கு மேலாகவே, முதல் திட்ட இறுதியில் தேசிய வருமானம் ரூ. 10,480 கோடியாக அதிகரித்தது. எனவே, எதிர்பார்த்த அதிகரிப்பு 11%ஆக இருந்தாலும், உண்மையில் தேசிய வருமானம் 18% ஆக அதிகரித்தது. சராசரி தலா வருவாயும் ரூ. 246-ல் இருந்து ரூ. 274 ஆக ஐந்தாண்டுகளில் அதிகரித்தது.

இரண்டாம் திட்ட வருவாய் அதிகரிப்பு

முதல் திட்டத்தில் மக்கள் தொகை அதிகரிப்பு வீதம் ஆண்டுக்கு 1·25% இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. அதை அடிப்படையாகக் கொண்டு 1961—70 வரைக்கும் உள்ள பத்தாண்டு காலத்திற்கு மக்கள் தொகையின் வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 1·33% என்று குறிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இரண்டாம் திட்ட இறுதியில் தேசிய வருவாய் ரூ. 13,480 கோடியாகவும், தலா வருவாய் ரூ. 331 ஆகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மக்கள் தொகை வளர்ச்சி ஆண்டுக்கு 2·3% ஆக அதிகரித்ததாலும், முதல் உற்பத்தி விகிதம் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகரித்ததாலும், சேமிப்பு போதிய அளவு அதிகரிக்காததாலும் தேசிய வருவாய் (1960–61 விலைகளில்) ரூ. 14,500 கோடியாக எதிர்பார்த்ததைவிட 5% குறைந்தும் (25% பதிலாக 20%) காணப்பட்டது. அதே போல் தலா வருவாயும் ரூ. 330 ஆகக் குறைந்திருந்தது.

மூன்றும் திட்ட வருவாய் அதிகரிப்பு

மூன்றும் திட்ட இறுதியில் தேசிய வருமானம் ரூ. 19,000 கோடியாகவும், நான்காம் திட்ட இறுதியில் ரூ. 25,000 கோடியாகவும், ஐந்தாம் திட்ட இறுதியில் ரூ. 34,000 கோடியாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதே போல், தலா வருவாயும் மூன்றும் திட்ட இறுதியில் ரூ. 383 ஆகவும், நான்காவது, ஐந்தாவது திட்ட இறுதிகளில் முறையே ரூ. 480 ரூ. 530 ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய மதிப்பீடுகள் அடுத்த பதினைந்து ஆண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 2% ஆக அதகரிக்கும் என்ற எண்ணத்தில் குறிக்கப்பட்டன. மூன்றும் திட்ட காலத்தில் தேசிய வருவாய்

வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 5% ஆக அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், உண்மையில் இவ்வளர்ச்சியில் ஐந்தாண்டுகளில் மாறுதல்கள் காணப்பட்டதைக் கீழ்க் கண்ட அட்டவணை விளக்கும்.

ஆண்டு	உண்மையான தேசிய வருமான அதிகரிப்புகள் (சத வீதங்களில்)	தலா வருமான அதிகரிப்பு (சத வீதங்களில்)
1961–62	2·6	0·4
1962–63	1·9	0·3
1963–64	5·0	2·6
1964–65	7·7	5·3
1965–66	3·33	6·10

1965–66ல் தேசிய வருவாய் திடீரெனக் குறைந்து விட்டது. இந்தியாவின் பல பாகங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்ட தாலும், தொழில் பின்னிறக்கம் (Recession) அவ்வாண்டில் ஏற்பட்டதாலும் தேசிய வருமானமும் தலா வருமானமும் பெரிதும் குறைந்து விட்டது. மேலும், இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் வேகமாக அதிகரித்ததாலும், பல மாநிலங்களில் உணவுப் பயிர்களின் உற்பத்தித் திட்டத்தின் இறுதி ஆண்டில் படு தோல்வி அடைந்ததாலும் குறிப்பிட்ட தேசிய வருமான, தலா வருமான இலக்குகளைச் சாதிக்க இயல வில்லை. 1964–65க்குள் தலா வருமான அதிகரிப்பு 15 சத வீத மாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது எதிர்பார்த்ததற்கு மாறாக, பாதிக்கும் குறைவாக 7 சத வீதம் தான் அதிகரித்தது. தேசிய வருமானமும் 30 சத வீதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதே காலத்தில் உண்மையில் 17 சத வீதம் தான் அதிகரித்தது. மூன்றும் திட்ட காலம் முழுவதற்குமாக, சராசரியாக ஆண்டுக்கு 4 சத வீத அதிகரிப்பு வீதம் தேசிய வருமானம் 20 சத வீதமாகத் தான் அதிகரித்தது. இது இரண்டாம் திட்ட காலத்தில் கிடைத்த அதிகரிப்பு வீதத்தின் அளவேயாகும். 1964-65ல் (1948-49 ன் நிலையான விலைகளில்) தேசிய வருவாய் ரூ. 15,000 கோடியாக இருந்தது.

திட்ட காலத்தில் துறைவாரி நிகர தேசிய உற்பத்தி
(Sectorwise Net National Product under Planning)
(1948—49 விலைகளில்) (சத வீதம்)

	1948–49	1950–51	1965–66	1966–67
1. வேளாண்மை	49·1	49·0	39·0	38·3
2. சுரங்கம், தொழில் உற்பத்தி, கைத் தொழில்கள்	17·1	16·7	18·2	18·2
3. வாணிபம், போக்குவரத்து செய்தித் தொடர்பு	18·5	18·8	20·3	20·2
4. பிற பணிகள்	15·5	15·7	23·3	24·4

ஆதாரம் மையப் புள்ளி விவர நிறுவனம் (Central Statistical organisation)

மேற்கண்ட அட்டவணையிலிருந்து 16 வருடங்களில் (1950—51 முதல் 1966—67 வரை) மொத்த தேசிய உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 49 சத வீதத்திலிருந்து 38.3 சத வீதமாகக் குறைந்தது. தொழிலின் பங்கு (சுரங்கம், தொழிலுற்பத்தி, கைத்தொழில்கள்) 17.1 சத வீதத்திலிருந்து 18·2 சத வீதமாக அதிகரித்தது. பொருள்களின் உற்பத்தியாக எடுத்துக் கொண்டால், அதன் பங்கு 1950—51ல் 66 சத வீதமாக இருந்தது,1966—67-ல் 56 சத வீதமாகக் குறைந்தது. பணத்தின் வாங்கும் திறனின் அடிப்படையில் வேளாண்மை, தொழில் ஆகிய துறைகளின் உற்பத்தியில் சரிவு ஏற்பட்டது. பொருள் களின் பண விலைகளின் அடிப்படையில் உற்பத்தி அதிகரித்தது. வாணிபம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகிய துறைகளின் பங்கு 18·8 சத வீதத்திலிருந்து 20·2 சத வீதமாக அதிகரித்தது. அதே போன்று தேசிய வருவாயில் பிற பணிகளின் பங்கு 15·7 சத வீதத்திலிருந்து 24·4 சத வீதமாக அதிகரித்தது.

வருடாந்திர திட்ட காலங்களில் தேசிய வருவாய்

1-4-1966லிருந்து நாட்டிலுள்ள வளங்களின் அளவு, தன்மை ஆகியவற்றின் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு வருடாந்திர திட்டங்கள் தீட்டப்பட்டன. 1966-67-ல் தேசிய

வருவாய் 3·5 சத வீதமாகவும் தலா வருவாய் 3 சத வீதமாகவும், அதிகரித்தது. 1967-68-ல் பருவகால மழை தவருது பெய்ததால், உணவு தானியங்களின் உற்பத்தி சிறப்பாக (95 மில்லியன் டன்னுக) அமைந்தது. எனவே, தேசிய வருவாயும், தலா வருவாயும் மேலும் அதிகரிக்க வாய்ப்பு கிடைத்தது. ஆனுல், தலா வருவாயை அதிகரிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் சீராக வெற்றி பெறவில்லை. எனவே, பிற்பட்ட நாடுகளின் மத்தியில் இந்தியாவின் தலா வருவாய் மிகவும் குறைந்து காணப்படு கிறது. இதை 1965ம் ஆண்டில் (1964-65 விலைகளில்) சில குறிப் பிட்ட நாடுகளில் காணப்பட்ட தலா வருமான விவரங்களி லிருந்து அறியலாம்.

நாடு	சராசரி வருவாய் (அமெரிக்க டாலரில்)
மலேசியா	260
கானு	230
பிலிப்பைன்ஸ்	150
தாய்லாந்து	120
வியட்நாம் குடியரசு	110
சிலோன்	102
இந்தியா	90

இந்தியாவின் தேசிய வருவாய் (1960-61 விலைகளில்) 1969-70-ல் 5·3% ஆக அதிகரித்து, ரூ. 17,955 கோடிகளாக இருந்தது. 1960-61 முதல் 1969-70 வரை சராசரியாக ஆண்டுக்கு 3·5 சத விகிதமாக அது அதிகரித்து வந்துள்ளது. 1969-70ல் தலா வருவாய் 2·9% ஆக அதிகரித்து ரூ. 339·4 ஆக இருந்தது. வேளாண்மைத்துறையில் இதே காலத்தில் நிகர உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு 42·4% ஆக, கணக்கிடப் பட்டது. சுரங்கம், பேரளவு, சிற்றளவு, தொழில்களை உள்ளடக்கிய இரண்டாம் துறையில் (Secondary sector) இதே காலத்தில் நிகர உள்நாட்டு உற்பத்திஅதிகரிப்பு 24·4% ஆகவும் பிற பணிகளை உள்ளடக்கிய மூன்ரும் துறையில் (Tertiary sector) நிகர உற்பத்தி அதிகரிப்பு 33·2% ஆகவும் இருந்தது. நான்காம், ஐந்தாம் திட்ட கால இறுதியில் தேசிய வருவாய் முறையே ரூ. 26,000 கோடியாகவும், ரூ. 37,000 கோடியாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

தேசிய வருவாய்ப் பங்கீடு
(Distribution of National Income)

ஒரு நாட்டு மக்களின் நலமானது தேசிய வருவாயின் அளவையும், வளர்ச்சியையும் மட்டும் பொறுத்ததல்ல; அது எந்த முறையில் பங்கீடு செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கும். 1951-61 வரைக்குமுள்ள பத்தாண்டு காலத்தில் தேசிய வருவாய் 40 சத விதத்திற்குமேல் அதிகரித்திருந்தாலும், திட்டத்தின் நற்பலன் செல்வந்தர்களுக்கு மட்டும் தான் நன்மையளித்தது. எனவே, நாட்டில் வருமான ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்து விட்டதாகக் குறை கூறப்பட்டது. ஆதலால், அக்டோபர் 1960ல் பேராசிரியர் P. C. மஹாலனோபிஸ் அவர்களைத் தலைவராக கொண்ட ஒரு குழுவை மத்தியத் திட்டக்குழு அமைத்தது. பிப்ரவரி 1964-ல் இக்குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. திட்டம் அமுலில் இருந்த முதல் பத்தாண்டுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் எந்த அளவு மாற்றம் பெற்றது என்றும் வருமானம், செல்வம் ஆகியவற்றின் பங்கீட்டில் ஏற்பட்ட மாறுதல்களையும் கணக்கிட்டுக் கூறியது.

மஹாலனோபிஸ் குழுவின் ஆய்வுரை

சரியான புள்ளி விவரங்கள் கிடைக்காததால் திட்டம் அமுலில் இருந்த முதல் பத்தாண்டுகளில் பொருளாதார சக்தி ஒரு சிலரிடம் குவிந்திருத்தலைப் பற்றியும், வருமானப் பங்கீட்டைப் பற்றியும் நேர் ஆய்வு செய்ய முடியவில்லை. ஆனால், மறைமுகமாகக் கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் திட்ட காலத்தில் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக ஆயினர் என்பது உண்மையான கருத்தாக நிலை நிறுத்தப்பட்டது. நம் திட்டங்களின் அடிப்படைக் குறிக்கோள் சமதர்ம சமுதாயத்தைச் சாதிக்க வேண்டுமென்று சூள் உரைக்கப்பட்டிருந்தும், வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவோ, பொருளாதார சக்தி ஒரு சிலரிடம் குவிவதைக் குறைக்கவோ, சீரான வாய்ப்பு ஏற்படவில்லை. இக்குழுவின் அறிக்கையின்படி, "மேல் வகுப்பைச் சேர்ந்தவர்களின் வருமானத்தின்மீது அதிகமான வரிகளை விதித்த பிறகும், பத்தாண்டுகளாகச் செம்மையாக ஏழைகளின் நல்வாழ்வுக்காகத் திட்டமிட்டும், நகர்ப்புறங்களில் 'பொருளாதார சக்தி குவிதல்' (Concentration of economic power) இருந்துகொண்டேதான் இருக்கிறது." இவ்வாதம் கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கும் பொருந்தும். வரிச்சுமை அதிகப்படுத்தப்பட்டும்கூட, கிராமப் பகுதிகளில் ஏற்றத் தாழ்வுகள் இருந்துகொண்டேதான் இருக்கின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வருமான ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வரிக்கொள்கை பெரிதும் பயனுள்ள கருவியாய் இருக்கிறது. ஆனால், இந்தியாவில் வரிக்கொள்கைகள் மூலம் வேண்டியதைச் சாதிக்க இயலாத நிலை உள்ளது. இக்குழுவின் கருத்தின்படி, உண்மையில் சுய வேலையில் ஈடுபட்டு இருந்தவர்கள், காண்டிராக்டர்கள் போன்றவர்கள் திட்டத்தால் ஏராளமான வருவாயைப்

பெற்றனர். நிலமற்ற விவசாயிகள், தொழிலாளர்கள் திட்ட கால வருமான அதிகரிப்பால் பயன் பெறுமல் புறக்கணிக்கப் பட்டிருந்தனர்.

ஏற்றத் தாழ்வு—காரணங்கள்

வருமான ஏற்றத் தாழ்வுகள் இரு முக்கிய காரணங்களால் ஏற்பட்டதாக இக்குழு எடுத்துரைத்தது. (1) முதலாவதாக, இந்தியாவில் பேரளவில் வேலையின்மையும் வேலைக்குறைவும் பரவலாக இருக்கிறது. தொழில் உற்பத்தி இந்தியாவில் மிகக் குறைந்து உள்ளது. உற்பத்தித்திறன் (Productivity) குறைந்து இருப்பதாலும், பெரும்பாலோர் திட்டத்தின் முன்னேற்றத்தில் அக்கறையில்லாது இருப்பதாலும், பெருவாரியான மக்களின் வருவாய் மிகக் குறைந்துள்ளது. (2) இரண்டாவதாக, மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பேரளவிலே வரி விலக்கு முறைகளை கையாளுவதால், ஏற்றத் தாழ்வுகளைச் சீராகக் குறைக்க வாய்ப்பு கிடைப்பதில்லை. மேலும், சர்வாதீன சக்திகள் நாட்டில் வளரவும் ஒரு சிலரிடம் செல்வமும், பொருளாதார சக்தியும் குவிவதற்கு நிர்வாக பதிலாள் முறை, உரிமம் பெர்மிட் முறை (License-Permit System) போன்றவைகள் காரணமாயிருந்திருக்கின்றன. தேசிய மாதிரிக் கணக்கீட்டுத் (National Sample Survey) துறையின் அறிக்கையின்படி இந்திய மக்களில் சுமார் 20 சத வீதத்தினர் அல்லது ஐவரில் ஒருவர் அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வாழ்க்கை வறுமை எல்லைக்கோட்டிற்கு (Poverty-Frontier) கீழ் இருப்பதாக இக்கணக்கீடு தெளிவு படுத்துகிறது. திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பதினேரு ஆண்டுகள் முடிந்தும் வருமானக் குவிப்பு குறையாம லேயே இருந்து வருகிறது என்று தேசியப் பொருளாதார ஆய்வு சபை (1962-63-ல்) மேற்கொண்ட ஆய்வின் அடிப்படை யில் விளக்குகின்றது. மேலும், இந்தியாவிலுள்ள வருமானக் குவிப்பு அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற அதிக வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளில் காணப்படும் இயல்பைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது. இந்தியாவில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்கள் மோசமான பொருளாதார நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

முடிவுரை: மக்களின் பிற்பட்ட பொருளாதார் நிலையைப் போக்காவிட்டால், நாட்டில் பல்வேறு வகையான தீங்குகள் ஏற்படும். பொருளாதார சக்தியின் குவிப்பை நீக்கி, சர்வாதீன சக்திகள் நாட்டில் தலையெடுக்காமல் இருக்க அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அக்கறையுடன் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க முயற்சிகள் எடுக்கப்படாவிட்டால் மக்களாட்சியில் திட்டங்கள் வெற்றியுடன் அமைய, பொது மக்களின் பேராதரவும் ஒத்துழைப்பும் அரசுக்குக் கிடைக்காது என்பது திண்ணம். மேலும், அதிக அளவு ஏற்றத் தாழ்வு நாட்டில் இருந்துகொண்டே இருக்குமானல், மக்களாட்சிக்கே இடையூறு ஏற்பட்டு, இந்தியாவில் சமதர்ம சமுதாயத்தை அமைக்க இயலாது போய்விடும்.

பாகம் III

மக்கள் தொகைப் பிரச்சினை

11. இந்திய மக்கள் தொகைப் பிரச்சினை

ஒரு நாட்டின் பொருளாதார நலனைப்பற்றி அறிய அந்நாட்டின் மனித வளங்களைப்பற்றி அறிவது மிகவும் இன்றியமையாததாகும். உற்பத்தி செய்ய சாதனமாய் விளங்கும் மனித வளங்கள், சமுதாயத்தின் மனித சக்தியை வழங்கி அதன் மூலம் இயற்கை வளங்களைப் பயன் படுத்தி மனித தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருள்களையும் பணிகளையும் பெருக்கப் பெருந்துணையாய் உள்ளன. மனித நலனைப் பெருக்கக்கூடிய பலவகைப் பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி முறையைப் பயன்படுத்தி அதிகரிக்க மனித சக்தி பேருதவி புரிகிறது. ஆனால், மக்கள் தொகைப் பெருக்கம் அளவு கடந்து அதிகரித்தால் மனித சக்தி, பொருளாதார நலனுக்கும், வளர்ச்சிக்கும் பெரும் இடையூறும் அமைந்து விடுகிறது. இன்றைய இந்தியத் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு மாபெரும் தடையாயும் சுமையாயும் இருப்பது விரைவான மக்கள் தொகை வளர்ச்சியே ஆகும். ஒவ்வொரு ஆண்டும் 12 மில்லியனாக மக்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துக் கொண்டே செல்லுகிறது. 1971ல் எடுக்கப்பட்ட கணக்கெடுக்குப்படி இந்திய மக்களின் எண்ணிக்கை 547 மில்லியனாகும். ஆனால், 1961-ல் அது 439 மில்லியனாக இருந்தது. பத்து ஆண்டுகளில் 24·57 சதவீதம் அதாவது 108 மில்லியன் அதிகமாகியுள்ளது. இந்தியா உலகில் மக்களின் எண்ணிக்கையில் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியுள்ளது. கம்யூனிஸ்ட் சைனா 800 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையைப் பெற்று முதல் ஸ்தானத்தில் உள்ளது. உலகின் மொத்த நிலப்பரப்பில் 2·4 சதவீதம் இந்தியா பெற்றுள்ளது, ஆனால், உலகின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 15 சதவீதம் இந்தியாவில் உள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் மக்கள் தொகையில் ஏற்படும் மாறுதல்கள்

பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது பிறப்பு வீதம், இறப்பு வீதம் ஆகியவற்றில் ஏற்படும் மாறுதல்களை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் பிறப்பு வீதமும், இறப்பு வீதமும் மிகவும் அதிகமாய் இருக்கும். பொருளாதார வளர்ச்சியின் முதல் கட்டத்தில் நாட்டில் தேவையான அளவு மருத்துவ வசதிகள், தரமான உணவுப் பொருள்கள், கல்வி அறிவு, மற்றப் பொருளாதாரத் தேவைகள் மக்களுக்குக் கிடைக்காததால் இறப்பு வீதம் அதிகமாக இருக்கும், அதே போல், பொருளாதார வசதியைப் பெறுவதற்காகவும், உயிர் வாழ்வுக்குத் தேவையானவைகள் குறைந்திருப்பதாலும், அறியாமை, சமூக, மத நம்பிக்கைகளாலும் மக்களுக்குக் குடும்ப திட்டத்தின் நன்மைகள் தெரியாததாலும் பிறப்பு வீதம் ஆரம்ப கட்டத்தில் அதிகமாக இருக்கிறது. ஆரம்ப காலத்தில் குழந்தைகளாய் இருப்பவர்கள் பெற்ருேர்களின் வயதான காலத்தில் அவர்களைப் பாதுகாப்பவர்களாய் இருப்பார்கள் என்ற எண்ணத்தில், அதிகக் குழந்தைகளைப் பெறுகிருர்கள் என்று தங்கள் நூலில் பொருளியல் நிபுணர்களாகிய கோல் மற்றும் ஹூவர் (Goale and Hoover) கூறியுள்ளார்கள். எனவே, முதல் கட்டத்தில் பிறப்பு வீதமும் அதற்கேற்ருற் போல் இறப்பு வீதமும் அதிகமாய் இருப்பதால் இரண்டும் சமமாகி விடுகின்றன. இதனுல், உண்மையில் இக்கட்டத்தில் மக்களின் எண்ணிக்கையின் வளர்ச்சி வீதம் அதிகமாயில்லை. இக்கட்டத்தில் அதிக மக்கள் தொகைப் பெருக்க சக்தி இருந்தாலும் அதிக இறப்பு வீதம் இருப்பதால் வளர்ச்சி உண்மையில் குறைவானதுதான்.

இரண்டாம் கட்டத்தில் மக்களின் வருமானம் அதிகரிப்பதால் தரமான உணவுப் பொருள்களை மக்கள் உட்கொள்கிருர்கள். மேலும், மருத்துவ வசதி, போக்கு வரத்து வசதி, மற்றப் பொருளாதார சாதனங்கள் போன்றவைகள் பொருளாதார வளர்ச்சியின் காரணத்தால் மிகுவதால் இறப்பு வீதம் குறைகிறது. ஆனுல் பிறப்பு வீதம் குறையாமல் அதிகரிப்பதால், மக்கள் தொகையின் வளர்ச்சி வீதம் அதிகரிக்கிறது. இதனுல் இக்கட்டத்தில் மக்கள் தொகைப் பிரச்சினை அதிகரிக்கிறது. முதல் கட்டத்தில் ஏற்பட்ட மக்கள் தொகை வளர்ச்சியின் சக்தி இரண்டாம் கட்டத்தில் இறப்பு வீதம் குறைவதால் மிக அதிகமான உண்மை வளர்ச்சியாகத் தோன்றுகிறது.

குடும்பத்தின் சராசரி அளவு இக்கட்டத்தில் அதிகரிக்கத் தொடங்குகிறது.

மக்கள் தொகை வளர்ச்சி மாற்றத்தின் மூன்றும் கட்டத்தில் பொருளாதார வளர்ச்சியின் விளைவால் இதுகாறும் வேளாண்மை நாடாக இருந்த ஒரு நாடு தொழில் வளர்ச்சியால் தொழில் மயமாகிறது. இதனால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது. மக்கள் இப்போது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அதிகக் குழந்தைகளைப் பெற வேண்டியதில்லை. கல்வியின் வளர்ச்சியால் பெண்களும் வேலைக்காகப் பெயர்ச்சியடைவதால், குறைந்த அளவு குடும்பத்தையே விரும்புவர். கோல் மற்றும் ஹூவர் கருத்துப்படி பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளில் சிறப்பு அம்சமாய் விளங்குவது அதிகரிக்கும் நகரமயமாகும். கிராமப்புறத்தைக் காட்டிலும் நகரங்களில் குழந்தைகள் பொதுவாய் சொத்துக்களாய் இருப்பதற்குப் பதிலாக, பெருஞ்சுமைகளாய் உள்ளன. தொழில் மயமாக்கப்பட்ட நாட்டில் நியாயமான வாழ்க்கைத் தரத்தை விரும்பி மக்கள் தங்கள் குடும்ப அளவைக் குறைக்க முயல்வதால் பிறப்பு வீதம் குறையும். எனவே, மூன்றும் கட்டத்தில் குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம், திட்டமிட்ட சிறு குடும்பம், குறைந்த மக்கள் தொகை வளர்ச்சி வீதம் ஆகியவை காணப்படும். எனவே, இக்கட்டத்தில் மக்கள் தொகை இறக்கத்தின் தொடக்க நிலையைக் காணலாம். இம்மூன்று கட்டங்களுள் இந்திய மக்கள் தொகையின் மாற்றம் எக்கட்டத்தில் உள்ளது என்பதை இனி ஆராயலாம்.

மக்கள் பெருக்கம்

இந்தியாவின் மக்கள் தொகை பதினாறும் நூற்றாண்டில் சுமார் 100 மில்லியனாக இருந்தது என்று ஒரு சாதாரண மதிப்பீடு உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் சுமார் 150 மில்லியனாக இருந்தது. 1881ல் முதல் முறையாக கணக்கெடுப்பு (Census) எடுக்கப்பட்டபோது இந்திய மக்கள் தொகை 254 மில்லியனாக இருந்தது. சமீபத்தில் எடுக்கப்பட்ட 1971-ன் கணக்கெடுப்புப்படி இந்திய மக்கள் தொகை 547 மில்லியனாக அதிகரித்துள்ளது. கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சி வீதத்தை விளக்கமாய் அறியலாம்.

இந்திய மக்கள் தொகை வளர்ச்சி (1901—1971)

கணக்கெடுப்பு எடுத்த ஆண்டு	மக்கள் தொகை (மில்லியனில்)	பத்து ஆண்டுகளில் ஏற்படும் வளர்ச்சி அல்லது தளர்ச்சி (கோடிகளில்)	பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சி அல்லது தளர்ச்சி (சதவீதம்)
1901	236	0·0	0·0
1911	252	+ 1·6	+ 5·7
1921	251	— 0.1	— 0·3
1931	279	+ 2·8	+11·0
1941	319	+ 4·0	+14·2
1951	361	+ 4·2	+13·3
1961	439	+ 7.8	+21·5
1971	547	+10·8	+24·6

1921-ம் ஆண்டு வரைக்கும் இந்திய மக்கள் தொகை மிகவும் குறைந்த வீதத்தில் உயர்ந்தது. 1891-க்கும் 1901-க்கும் இடையில் வளர்ச்சி வீதம் பூஜ்யமாக இருந்தது. 1911-க்கும் 1921-க்கும் இடையில் மக்கள் தொகையில் சிறு தளர்ச்சி காணப்பட்டது. 1901-க்கும் 1911-க்கும் இடைப்பட்ட பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை 5·73 சதவீதம் தான் உயர்ந்தது. ஆனல், 1921-க்குப்பிறகு இந்திய மக்கள் தொகைஅதிவேகமாக அதிகரிக்க ஆரம்பித்தது. 1921-க்கும் 1961-க்கும் இடைப்பட்ட 40 ஆண்டு காலத்தில் மக்கள் தொகை 160 மில்லியன் அல்லது 60 சத வீதமாக உயர்ந்தது. 1951 முதல் 1961 வரையுமுள்ள பத்து ஆண்டு காலத்தில் மட்டும் இந்திய மக்கள் தொகை 21·5 சத வீதமாக அதிகரித்தது. இது ஆண்டுக்கு 2·15 சத வீத வளர்ச்சி வீதத்தைக் குறிக்கிறது 1901 முதல் 1971 வரையுமுள்ள 70 ஆண்டுகளில் இந்திய மக்கள் தொகை 129 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதாவது 309 மில்லியன் அதிகரித்துள்ளது. 1961 முதல் 1971 வரையுமுள்ள கடைசி பத்து ஆண்டுகளில் இந்திய மக்கள் தொகை 108 மில்லியனுக அதாவது 24·57 சதவீதம் அதிகரித்துள்ளது. இது ஏறக்குறைய ஆண்டுக்கு 2·5 சத வீத வளர்ச்சி வீதத்தைக் குறிக்கும்.

1971-ல் எதிர்பார்த்த மக்கள்தொகை 564 மில்லியன் ஆகும். ஆனால், உண்மையில் 547 மில்லியனாகத்தான் உயர்ந்துள்ளது. 1981-ல் எதிர்பார்க்கப்படும் மக்கள்தொகை 630 மில்லியனாகும். இது உயர் மதிப்பீடோ அல்லது கீழ் மதிப்பீடோ என்பது பின்னால் தெரியும். இந்நிலையில் வளர்ச்சி வீதம் இருப்பதால் இந்தியாவில் "ஜனத்தொகை எழுச்சி" (Population Explotion) இருப்பது தெரிய வருகிறது.

பிறப்பு வீதம், இறப்பு வீதம் ஆகியவைகளில் ஏற்படும் மாற்றத்தால் மக்கள்தொகையின் வளர்ச்சி வீதத்தில் மாறுபாடு காணப்படுகிறது. இந்தியாவில் ஏற்பட்டு இருக்கும் மக்கள் தொகையின் விரைவான வளர்ச்சியும் இந்தியப் பிறப்பு வீதம், இறப்பு வீதம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களால்தான் ஏற்பட்டுள்ளது என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை தெளிவு படுத்துகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு பத்து ஆண்டுகளிலும்
சராசரி வருடாந்திரப் பிறப்பு,
இறப்பு வீதங்கள் (1901-1961)

பத்தாண்டு காலம்	பிறப்பு வீதம் ஒரு 1000 மக்களுக்கு	இறப்பு வீதம் ஒரு 100 மக்களுக்கு
1901—1911	48·1	42·6
1911—1921	49·2	48·6
1921—1931	46·4	36·3
1931—1941	45·2	31·2
1941—1951	39·9	27·4
1951—1961	41·7	22 8
1961—1965	42·2	17·2
1969—	—	79·3

1921-க்கு முன் அதிகமான பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் இருந்ததால், மக்கள்தொகை வளர்ச்சி தடைப்பட்டிருந்தது என்பதை மேற்கண்ட அட்டவணை தெளிவாய் விளக்குகிறது.

பிறப்பு வீதம் 1901—1921 வரை ஆயிரம் மக்களுக்கு 46க்கும் 49-க்கும் இடையே மாறுதல் கண்டது. இறப்பு வீதமும் 42-க்கும் 48க்கும் இடையே மாறிக்கொண்டு இருந்தது. அதனால் மக்கள் தொகையில் வளர்ச்சி அவ்வளவாக இல்லை. ஆனால், 1921-க்குப் பிறகு இறப்பு வீதம் குறைந்து கொண்டே வருகிறது. 1911—21-ல் ஓர் ஆயிரத்திற்கு 48·6 ஆக இருந்த இறப்பு வீதம் 1961—66-ல் 17·2 ஆகக் குறைந்தது. ஆனால், இதற்குப் பதிலாக, பிறப்பு வீதம் மிகவும் குறைவாக இறங்கியது. அதன்முடிவாக, காலப்போக்கில் உயர்ந்த பிறப்பு வீதத்திற்கும் குறைந்து வரும் இறப்பு வீதத்திற்கு மிடையேயுள்ள இடைவேளை அதிகரித்துக்கொண்டே வருவதால், இன்று இந்தியாவின் மக்கள்தொகை 547 மில்லியனாக உயர்ந்துள்ளது.

எனவே, மேற்கண்ட விளக்கத்திலிருந்து 1921-ம் ஆண்டுக்கு முன் இந்தியா மக்கள்தொகை மாற்றத்தின் முதல் கட்டத்தில் இருந்தது என்பதை அறியலாம். ஆனால், 1921-ம் ஆண்டு முதல் இந்தியா மக்கள் தொகை மாற்றத்தின் இரண்டாம் கட்டத்தில் நுழைந்து விட்டது. ஏனெனில் மக்கள் தொகையின் பெரும் வளர்ச்சி சக்தியை உண்மையான பெரும் மக்கள் தொகை வளர்ச்சியால் உணர முடிகிறது. நம் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் அதிகமாக இருந்தாலும், அது இயல்பு கடந்ததாக இல்லை. ஆனால், காலப்போக்கில் வளர்ச்சி ஒரே சீராக இல்லை. முன்பு மக்கள்தொகையின் வளர்ச்சிக்கும் தளர்ச்சிக்கும் காரணம் போர், பஞ்சங்கள், பரவும் நோய்கள் போன்றவைகள் தோன்றுதலும் மறைதலுமேயாகும். கடந்த நூறு ஆண்டுகளாக இந்திய மக்கள் தொகை கட்டுப்படுத்தப் படக் காரணம் பஞ்சமும், பரவும் பிணிகளுமே என்று சிலர் கருதுவது உண்மையாகும். ஏனெனில், இந்திய மக்கள் தொகை யின் அளவைக் குடும்பத் திட்ட முறைகள் இதுவரை கட்டுப் படுத்த இயலவில்லை. இந்தியாவின் தற்போதைய தலையாய பிரச்சினை மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு வீத மல்ல. ஆனால், ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும், ஏற்கனவே இருந்துவரும் மக்கள்தொகையோடு புதிதாகச் சேர்ந்துவரும் தொகைதான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் பத்தாண்டுகளில் ஏற்படக்கூடிய ஒரு சிறிய அதிகரிப்பாகிய 50 மில்லியன் மக்களாக இருந்தாலும், அதுவே ஜெர்மனி, ரஷ்யாவைத்தவிர மற்ற எந்த ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் மக்கள் தொகையைக் காட்டிலும்அதிகமாகும். நாட்டில்உணவுப் பொருள்கள், உடைகள், இருப்பிடம் மற்றப் பொருள்களும் பணிகளும் போன்றவற்றை அதிகரிக்க மேற்கொள்ளப்படும்

முயற்சிகளனைத்தும், மக்கள்தொகையின் அதிகரிப்பால் வெற்றி பெறுமல் போய் விடுகின்றன. "மக்கள் தொகையில் பெருகி வரும் வளர்ச்சியும், இந்திய வாழ்க்கைத்தரத்தில் சீரமைப்பும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்களாகும்" என்று Dr. சந்திரசேகரும் குறிப்பிட்டுள்ளார்.

காரணங்கள் : இந்தியாவில் மித மிஞ்சிய மக்கள்தொகை வளர்ச்சி இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. திரு. மால்தஸின் கருத்துப்படியோ அல்லது உத்தம அளவு மக்கள் தொகைக் கருத்துப்படியோ ஆராய்ந்தாலும், இந்தியாவில் தற்போது இருக்கும் மக்கள் தொகையைச் சமாளிக்க இயலாது என்பது புலனுகும். இந்தியாவிலிருக்கும் அதிக மக்கள் தொகையின் வளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் பிரதானமானவைகள் குழந்தைகளின் பிறப்பு வீதமும், மக்களின் இறப்பு வீதமுமே ஆகும். 1961ன் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் சராசரியாக ஆண்டொன்றுக்கு ஆயிரம் பேருக்கு 40 குழந்தைகள் பிறக்கின்றன. Dr. சந்திரசேகர் 1967-ல் கூறியதுபோல், நாளொன்றுக்கு இந்தியாவில் சுமார் 50,000 குழந்தைகளுக்குமேல் பிறக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் 125 லட்சம் பேர் மக்கள் தொகையில் அதிகரிக்கின்றனர். இந்நிலை மேலும் தொடர்ந்து நீடிக்குமானுல் அடுத்த முப்பதாண்டுகளில் நமது மக்களின் எண்ணிக்கை இரு மடங்காகப் பெருகுமென்பதில் ஐயமில்லை. ஆயிரத்திற்கு 25 குழந்தைகளுக்குமேல் பிறக்காமலிருக்க முடியுமானதைச் செய்தாக வேண்டும். பிறப்பு வீதம் இந்தியாவில் அதிகமாயிருப்பதற்கான காரணங்களை அறிந்து அதைக் குறைக்க வகை செய்ய வேண்டும்.

பிறப்பு வீதம் அதிகமாயிருக்கக் காரணங்கள்

1. இந்தியாவில் எல்லோரும் திருமணம் செய்து கொள்ளும் நிலை இருந்து வருகிறது. அதாவது உரிய பருவத்திலோ அல்லது காலந் தாழ்த்தியோ திருமணத்தை மதச்சடங்காகக் கருதி முடித்துக் கொள்ளும் நிலை காணப்படுகிறது. திருமணத்திற்குப் பொதுவாக, ஒருவரின் பொருளாதார நிலையைப்பற்றிக் கருதாமலும் மணமுடிக்கப்படுகிறது. கூட்டுக் குடும்ப அமைப்பு முறை இந்தியாவில் இன்னும் காணப்பட்டு வருகிறது. இதனுல் வேலையில்லாதவரும் குடும்ப அளவைப் பெருக்கினுல் மற்றக் குடும்ப உறுப்பினர்கள் அவரது குடும்பத்தைப் பாதுகாப்பார்கள் என்ற உறுதி

இருப்பதால், குடும்ப அளவு அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

2. இந்தியாவில், இளம் வயதிலேயே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் திருமணத்தை முடிப்பது இன்னும் சாதாரணமாகவே காணப்படுகின்றது. 1929-ல் நிறைவேறிய சாரதா சட்டத்திற்குப் பின் குழந்தைத் திருமணம்இந்தியாவில் குறைந்தது. இந்தியாவில் எல்லா மதத்தைச் சார்ந்த பெண்களின் சராசரி திருமண வயது 1891-ல் 12·5 ஆக இருந்தது, 1961-ல் 15·8 ஆக உயர்ந்தது. அதேபோல், ஆண்களின் சராசரி வயது 1891-ல் 19·55 ஆக இருந்தது, 1961-ல் 29·59 ஆக அதிகரித்தது. திருமணத்தின்போது வயது அதிகமாயிருப்பதால், ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் பிறப்பு வீதம் குறைந்து காணப்படுகிறது. இந்தியாவிலும் படிப்படியாக அது ஓரளவு குறைந்து வரக் காரணம் கல்வியின் வளர்ச்சியே ஆகும். கல்வி கற்றுள்ள அளவுக்குத் தகுந்தபடி பெண்களுக்கு ஏற்படும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைகிறது. சமீபத்தில் எடுக்கப்பட்ட மதிப்பின்படி பள்ளியின் மத்திய நிலை வகுப்பு, மெட்ரிக்குலேஷன், பல்கலைக்கழகப் படிப்புஆகிய கல்வி கற்றப் பெண்கள் முறையே 5·0, 4·6, 2·0 குழந்தைகளைப் பெற்றனர்.

3. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 80 சதவீதமாக இருக்கும் கிராம மக்களுக்குப் பயனுள்ள பரந்த குடும்பத் திட்டத்தைப் பற்றிய உணர்வு இன்னும் ஏற்படவில்லை. முன்னேற்றமடைந்த நாடுகளில் இது ஒரு சாதாரண பழக்கமாக இருந்து வருகிறது. இந்திய நகரங்களிலும் கூட இது தற்போதுதான் உணரப்பட்டு வருகிறது.

4. இந்தியாவில் வெப்ப தட்பச் சூழ்நிலையாலும் பிறப்பு வீதம் அதிகமாக இருந்து வருகிறது. வாடியா மெர்ச்சன்ட் ஆகிய இந்தியப் பொருளியல் எழுத்தாளர்களின் கருத்துப்படி, "வெப்பமான நாடுகளில், குளிர்நாடுகளில் இருக்கும் பிறப்பு வீதத்தைவிட அதிகமாக இருக்கும். குளிர் நாடுகளில் பெண்கள் பருவமடையும் காலமும் திருமணமாகும் காலமும் அதிகரித்து வருகிறது."

5. வறுமையே நாட்டில் உள்ள எல்லாச் சிக்கல்களுக்கும் காரணமாய் அமைகிறது. வறுமையைப் போக்கச் சிலர் தங்கள் குடும்ப அளவைப் பெருக்கிக் கொள்ளுகின்றனர். மேலும்

இந்தியாவில் தலா வருவாய் குறைந்திருப்பதால் வாழ்க்கைத் தரமும் குறைந்துள்ளது. வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில், கல்வி கற்றவர்களும் செல்வந்தர்களும் தங்கள் குடும்பத்தின் அளவைச் சுருக்கக் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளுகின்றனர். ஆனல், வறுமையில் வாடுபவர்களோ அதிகமான குழந்தைகளைப் பெறுகின்றனர். இதனல் பிறப்பு வீதம் அதிகரிக்கின்றது.

பிறப்பு வீதம் அதிகமாயிருப்பதுவும்கூட மக்கள் தொகை வளர்ச்சிக்கு அவ்வளவு முக்கிய காரணமாய் இல்லே. ஆனல், அதிசயிக்கத்தக்க முறையில் இறப்பு விகிதம் குறைந்து கொண்டே வருவதுதான் சிக்கலே ஏற்படுத்துகிறது. இறப்பு வீதம் குறைந்து வருவதற்கான காரணங்கள் வருமாறு

1. இறப்பு வீதம் இந்தியாவில் குறைந்து வருவதன் முக்கிய காரணம் பொதுச் சுகாதாரத் திட்டங்கள் விரிவு படுத்தப்பட்டு வருவதேயாகும். 19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் உலகின் முன்னேறிய நாடுகளில் இறப்பு விகிதம் ஆயிரம் பேருக்கு 35-40க்கும் இடைப்பட்ட எல்லேயில் இருந்தது. தற்போது ஆயிரம் பேருக்கு 7-8க்கும் இடைப்பட்ட எல்லேயில் காணப்படுகிறது. ஆனல், இந்தியாவில் 1901-ல் ஆயிரம் பேருக்கு 42·6 விகிதமாக இருந்த இறப்பு விகிதம் 1961-ல் 16·4 விகிதமாகக் குறைந்துள்ளது. எனினும், இது கணிசமான குறைவேயாகும். இதன் காரணங்கள், நல்ல உணவு, சுத்தமான குடிநீர், சீரமைக்கப்பட்ட மருத்துவ மனே வசதி, நல்ல சுகாதாரம், தொற்றுநோய்களேத் தடுக்கவும், போக்கவும் சிறந்த மருந்துகள் போன்றவைகளாகும்.

2. இந்தியாவில் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்து கொண்டே வருவதும் மக்கள் தொகையின் அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும். மருத்துவ வசதிகளின் முன்னேற்றத்தால் குழந்தை இறப்பு விகிதம் 1920-ல் ஆயிரத்திற்கு 218 ஆக இருந்தது 1960–ல் ஆயிரத்திற்கு 88 ஆகக் குறைந்தது. குழந்தைகளின் இறப்பு அதிகமாயிருப்பதற்குக் காரணம் சத்தில்லா உணவு, நிமோனியா, டைபாய்டு, டையீரியா, தொற்று நோய்கள் போன்றவைகளாகும். ஒரு குழந்தைக்கும் மற்ருெரு குழந்தைக்கும் இடையில் இடைவேளே இல்லாமல் தொடர்ந்து ஆண்டுக்கொரு குழந்தை பிறப்பதால், பிறக்கும் அவைகளின் சக்தி குறைந்து இறப்பு விகிதமும் அதிகரிக்கிறது.

தற்போது இத்தகைய காரணங்களால் இறப்பு விகிதம் அதிகமாவது படிப்படியாகத் தடுக்கப்பட்டு வருகிறது.

3, குழந்தை பெறும் வயதுகளில் பெண்களின் இறப்பு விகிதம் இந்தியாவில் அதிகமாய் உள்ளது. 15 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட பெண்களில் இந்தியாவில் 1000 பெண்களுக்கு 300—400க்கும் இடையே உள்ள எல்லைகளில் பெண்களின் இறப்பு விகிதம் இருக்கிறது. ஏழ்மையால், குழந்தை பிறப்பிற்கு முன்னும் பின்னும் பெண்களின் மேல் வேண்டிய அளவு அக்கரை செலுத்தப்படுவதில்லை. மருத்துவ மனை வசதிகளும் இந்தியாவில் குறைவு. மக்கள் தொகையில் 6000 பேருக்கு ஒரு மருத்துவரும், 45,000 பேருக்கு ஒரு பணிமகளும், 60,000 பேருக்கு ஒரு மருத்துவப் பெண்ணும் (Midwife) தான் இந்தியாவில் இருப்பதாகக் கூறுகின்றனர். இதிலிருந்து நாம் மருத்துவத் துறையில் அடைந்துள்ள வசதி குறைவானது என்பது புலனுகிறது.

4. மலேரியா, இன்புளுவன்சா போன்ற பலவகை காய்ச்சல்கள், காலரா, அம்மை, தொற்றுநோய், வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் மக்களின் அறியாமையாலும், சுகாதாரப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளாததாலும் ஏற்படுகின்றன. இதனுல்தான், இந்தியாவில் ஏராளமான அளவு இறப்புக்கள் ஏற்படுகின்றன. முன்பு மலேரியாவால் இறந்தவர்களின் எண்ணிக்கை 1 மில்லியனுக்கு மேலாகும். இந்நோய்களில் மலேரியா, அம்மை போன்ற நோய்களை ஏற்படாமல் தடுக்கத் தடுப்பு முறைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதால், அவை இப்போது குறைந்து விட்டன. மருத்துவ வசதிகளின் வளர்ச்சியாலும். மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றத்தாலும் கடுமையாக இருந்து வரும் இறப்பு விகிதம் 1969-ல் ஆயிரத்திற்கு 19·3 ஆக இருந்தது 1981-ல் ஆயிரத்திற்கு 9 ஆகக் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

5. கடந்த இருபது ஆண்டுகளாக இந்தியாவில் பெரிய பஞ்சம் ஏற்படாமல் இருப்பதும் இந்திய மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இந்தியாவில் உணவுப் பற்றுக்குறை ஏற்படும் போது உணவு தானியங்களை இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவின் மக்கள் தொகைப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்களில் ஒன்ருகும். அதன்

உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள அதன் தன்மைகளாகிய மக்கள் செறிவு, மக்களின் வாழ்நாள், ஆண் பெண் விகிதம், வயது பாகுபாடு, தொழில் பாகுபாடு, கிராம-நகர மக்கள் பாகுபாடு, கல்வி அளவின் பாகுபாடு, நகர மயத்தில் மாற்றம் போன்றவற்றை அறிவது அவசியமாகும்.

1. மக்கள் செறிவு

மொத்த நிலப்பரப்பை மொத்த மக்கள் தொகையின் அளவால் வகுப்பதால் கிடைக்கும் விகிதமே மக்கள் செறிவாகும். 1951-ல் இந்தியாவில் சராசரி மக்கள் செறிவு ஒரு சதுரமைலுக்கு 316 பேராக இருந்தது 1961-ல் 375 ஆக அதிக ரித்தது. 1971-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி மக்கள் செறிவு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 182 பேராக உயர்ந் துள்ளது. நிலப்பரப்பில் அதிகரிப்பின்றி மக்கள் தொகையில் அதிகரிப்பு ஏற்படுவதால் இந்நிலை ஏற்படுகிறது. இந்தியாவில் மக்கள் செறிவு சதுர மைலுக்கு 375 பேர்களாய் இருந்தபோது சைனுவில் 134-ம், இங்கிலாந்தில் 536-ம், ஜப்பானில் 579-ம் ஆக இருந்தது. ஆனால், இங்கிலாந்தும், ஜப்பானும் சிறப்பான தொழில் வளர்ச்சி கொண்ட நாடுகளாய் இருப்பதால், பிரச்சினை இல்லை. உலக சராசரி மக்கள் செறிவைவிட, இந்தியாவில் மக்கள் செறிவு அதிகமாக இருக்கிறது. முக்கிய மாக, இந்திய மாநிலங்களில் 1971-ம் ஆண்டின் கணக்கெடுப் பின்படி, கேரள மாநிலத்தில்தான் அதிகமாக மக்கள் செறிவு இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கேரளாவில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 548 பேரும், மேற்கு வங்காளத்தில் 507-ம், பீகாரில் 324-ம் தமிழ் நாட்டில் 316-ம் நாகாலாந்தில் 31 மாக மக்கள் செறிவு அமைந்துள்ளது.

2. ஆண் பெண் விகிதம்

ஆண் பெண் விகிதமென்பது நாட்டிலுள்ள 1000 ஆண் களுக்கு எத்தனை பெண்களிருக்கின்றன ரென்று கணக்கிடுவ தாகும். இந்தியாவில் 1951-ல் ஆயிரம் ஆண்களுக்கு 946 பெண்களாக இருந்த விகிதம் 1961-ல் 940 ஆகக் குறைந்து 1971-ல் 932-ல் நின்றுள்ளது. இந்தியாவில் பெண்களைவிட ஆண்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர். பெண் களின் எண்ணிக்கை கடந்த 50 ஆண்டுகளாகக் குறைந்து கொண்டே வருகிறது. 1971-ன் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையாகிய 547 மில்லியனில் ஆண்கள் 283 மில்லி யன் பேர்களும் பெண்கள் 264 மில்லியன் பேரும் ஆவர். பெண்

களைக் குழந்தைப்பருவத்தில் அக்கரையுடன் கவனிக்காததாலும் பெண்கள் குடும்பத்திற்குப் பாரமாகக் கருதப்படுவதாலும் ஆண் பெண் விகிதத்தில் சரிசமம் ஏற்படவில்லை என்ற விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஆனால், இப்புள்ளி விவரங்கள் ஒருவேளை உண்மைக்குப் புறம்பாகவும் இருக்கலாம். பெண்கள் குழந்தைகளாய் இருக்கும் காலத்தை விட, அதிக வயதடைந்த காலத்தில் தான் அதிகமாக இறக்கின்றனர். எனினும், இச்சீர்கேடு சமுதாய நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் இடையூருகவே அமைந்துள்ளது.

3. சராசரி வயது

1951-க்கும் 60-க்கும் இடைப்பட்ட பத்தாண்டு காலத்தில் இந்தியரின் சராசரி வாழ்நாள் இரு பாலார்க்குமாக 41 ஆண்டுகள் என்றும் ஆண்களுக்கு 42 ஆண்டுகள் என்றும் பெண்களுக்கு 40 ஆண்டுகள் என்றும் கணக்கிடப்பட்டது. 1941–50-க்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியரின் சராசரி ஆயுள்காலம் இருபாலார்க்குமாக 33 ஆண்டுகள் என்று கணிக்கப்பட்டது. ஆனால், இது முன்னேற்றமடைந்த நாடுகளில் சராசரியாக 60 ஆண்டுகளுக்குக் குறைவாய் இல்லை. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆண்களின் சராசரி ஆயுள்காலம் 65 ஆண்டுகளாகவும், பெண்களின் சராசரி 70 ஆண்டுகளாகவும் இருப்பதிலிருந்து இந்திய மக்கள் நீண்ட காலம் வாழ்வதில்லை என்பது தெரிகிறது. இதனால், பிள்ளைகளைச் சீரோடும் சிறப்போடும் ஏராளமாகச் செலவு செய்து வளர்த்து பெரியோராக்கிய பின் பெற்றோர் பிள்ளைகளின் நல்வாழ்வைக் காணக்கூட கொடுத்து வைக்காதவர்களாய் அகால மரணமடைகின்றனர். ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் பொதுச்சுகமும், சுகாதாரமும் அதிகரிக்கும் முறைகளை அரசுகையாண்டு வருவதால் தற்போது இந்தியரின் சராசரி வாழ்நாள் அதிகரித்து வருகிறது. நான்காம் ஐந்தாண்டுத்திட்ட அறிக்கையின்படி 1968–69-ல் இந்தியரின் சராசரி வயது 50 ஆண்டுகளாகத் தற்போது உயர்ந்துள்ளது என்று கூறப்படுகிறது.

4 வயது பாகுபாடு

இந்திய மக்கள் தொகையை வயதின் அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலில், 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் மொத்த மக்கள் தொகையில் 39 சதவீதம்

உள்ளனர். இவர்கள் படித்து வேலைக்குச் செல்லும் வரை இவர்களைக் காப்பாற்றுவது பெரும் பொறுப்பாகும். இரண்டாவதாக, ஏறக்குறைய வளர்ந்த பணி புரியும் 15 முதல் 64 வயதை உடைய மக்கள் மொத்த மக்கள் தொகையில் சுமார் 59 சதவீதம் இருக்கின்றனர். மூன்றாவதாக, 65 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வயதடைந்த முதியோர் மொத்த மக்கள் தொகையில் 2 சதவீதம் தான் இருக்கின்றனர். ஒரு கோபுரம் போன்று காணப்படுகிறது இந்திய மக்களின் வயது பாகுபாடு. கீழ்மட்டத்திலும் அதற்கு அடுத்தும் உள்ள நிலையில் பணிபுரிபவர்கள் அதிகமாயிருக்கின்றனர். ஆனால், கோபுரத்தின் மேல் வர வர வயதடைந்த முதியோர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. ஆனால், முன்னேற்ற மடைந்த நாடுகளில் இதற்கு மாறாக, எண்ணிக்கை கீழிலிருந்து மேலே செல்லச் செல்ல அதிகமாகிக் கொண்டே செல்கிறது. உதாரணமாக, குழந்தைகளின் எண்ணிக்கை இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு ஆகிய நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் 30 சதவீதமும் மேற்கு ஜெர்மனியில் 25 சத வீதமுமாக உள்ளது. அறிவாற்றல் மிக்க 55 வயதுக்கு மேற்பட்ட பெரியோர்கள் இந்நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதத்திற்கு மேல் காணப்படுகின்றனர். ஆனால், இந்தியாவில் ஏறக்குறைய 8 சதவீதத்திற்கு மேல் இல்லை. இத்தகைய இந்திய வயது பாகுபாட்டினால் இந்திய வருவாய்க்கு, சேமிப்புக்கு, முதலீட்டிற்கு, உற்பத்திற்கு முதியவர்களை நம்பி வாழும் ஏராளமான குழந்தைகளால் எந்த நற்பயனும் ஏற்படுவதில்லை.

5. தொழில் பாகுபாடு

மக்கள் தொகையின் தொழில் பாகுபாடு, ஒரு நாடு தன் பொருளாதார வளர்ச்சியில் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்குகிறது. தொழில் பாகுபாட்டை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

(1) முதல் வகை அடிப்படைத் தொழில்கள் (Primary Industries.)

(2) இரண்டாம் வகைத் தொழில்கள் (Secondary Industries.)

(3) இதர தொழில்களும் பணிகளும் (Tertiary Industries.)

முதல்வகை அடிப்படைத் தொழில்களில் விவசாயம், அதைச் சேர்ந்த தொழில்கள், காட்டுத்தொழில், மீன் பிடித்தல் ஆகியவை உள்ளன. இரண்டாம் வகைத் தொழில்களில் உற்பத்தி, சுரங்கத் தொழில், கட்டடம் கட்டும் தொழில் சேர்க்கப்பட்டுள்ளது. மூன்றும் வகை இதர தொழில்களிலும் பணிகளிலும் வர்த்தகம், போக்குவரத்து, பணிகள் மற்றும் இதர பொருளாதார நடவடிக்கைகள் அமைந்துள்ளன. தொழில் வளர்ச்சியால் முற்பட்ட நாடுகளாகிய அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும், வேளாண்மையின் முன்னேற்றத்தால் முற்பட்ட நாடுகளாகிய ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து போன்ற நாடுகளிலும் மூன்றும் வகையைச் சேர்ந்த தொழில்களிலும் பணிகளிலும் மொத்த மக்கள் தொகையில் 50 சத வீதத்திற்கு மேல்தான் உள்ளனர். ஆனால், இந்தியாவில் இதற்கு நேர் மாறுன நிலை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. 1951, 1961 ஆகிய ஆண்டுகளில் எடுக்கப் பட்ட கணக்கெடுப்பின்படி, மொத்த பணி புரியும் மக்களில் 72 சதவீதம் பேர் முதல்வகைத் துறையிலும், 12 சதவீதம் பேர் இரண்டாம் வகைத் தொழில்களிலும், 16 சதவீதம் பேர் மூன்றும் வகைத் தொழில்களிலும் பணிகளிலும் ஈடுபட்டிருந் தனர். இந்தியாவில் மொத்த தொழிலாளர்களில் 70 சதவீதத் திற்கு மேல் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்தும் நமக்குத் தேவையான உணவு தானியங்களை நாமே உற்பத்தி செய்யச் சக்தியின்றி ஆண்டுக்கு சுமார் ரூ. 1 கோடி மதிப்புள்ள தானியங்களை இறக்குமதி செய்து வருகிறோம். இதற்கு நேர்மாறுக, அமெரிக்காவில் 10 சத வீதத்திற்கும் குறைந்த எண்ணிக்கை கொண்டவர்கள் தங்கள் நாட்டுக்குத் தேவையான உணவு தானியங்களை உற்பத்தி செய்வதோடு அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

6. கிராம நகர மக்கள்

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று கூறப்பட்டது முற்றிலும் உண்மையே. ஏனெனில், 5 லட்சம் இந்தியக் கிராமங் களோடு ஒப்பிடும்போது நகரங்கள் 3000 மட்டுமே உள்ளன. 1961-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி கிராமப் பகுதிகளில் 82 சதவீதம் பேரும் நகரப் பகுதிகளில் 18 சதவீதம் பேரும் வசித்து வந்தனர். 1971-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி கிராமங்களில் 80 சதவீதமும் நகரங்களில் 20 சதவீதமுமாக இந்திய மக்கள் வசித்து வருகின்றனர். இக்கணக்கெடுப்பின்படி இந்தியாவில் நகர மயமாக்கல் அதிகரித்து வருகிறது. 1901-ல்

10 சதவீதமாக இருந்த நகர மக்கள் தொகை 1961-ல் 17·89 சதவீதமாக அதிகரித்து 1971-ல் 19·78 சதவீதத்தை அடைந்துள்ளது. மொத்த மக்கள் தொகையாகிய 547 மில்லியனில் 108·8 மில்லியன் பேர் நகரப்புறங்களில் வசித்து வருகின்றனர். தமிழ் நாட்டில் 30·28 சதவீத மக்கள் நகரங்களில் வசிக்கின்றனர். எனினும், இந்தியாவில் காணப்படும் நகர மயத்தின் அளவோடு முற்பட்ட நாடுகளில் ஏற்பட்டுள்ள நகர மயத்தை ஒப்பிடும்போது நம் சதவீதம் மிகக் குறைவே. உதாரணமாக, நகரத்தில் வசிப்பவர்கள் இங்கிலாந்தில் 78·87 சதவீதம், கானடாவில் 73·58 சதவீதம், ஐக்கிய அமெரிக்காவில் 69·86 சதவீதம், ஜப்பானில் 68·09 சதவீதம், மற்றும் ரஷ்யாவில் 55·85 சதவீதமுமாகும். இந்தியா இன்னும் வேளாண்மை நாடாகவே இருந்து வருகிறது. இப்பாகுபாட்டிலிருந்து நாட்டின் தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது என்பதை அறிய முடிகிறது. தொழில் மயத்தின் அதிகரிப்பு, நகரங்களில் வேலை வாய்ப்புக்கள் கிடைத்தல் போன்ற காரணங்களால் கிராமங்களிலிருந்து நகர் தேடி கிராம மக்கள் வருகின்றனர். ஆனால், பேரளவில் நகரங்களில் மக்கள் குவிவதால், அநேக சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, தொழில் பரவலாக்கல் முறையைத் தீவிரப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

7. கல்வி கற்றோர் பாகுபாடு

இந்திய மக்கள் தொகையின் தன்மையை அறிய கணக்கிடப்படும் மக்கள் தொகையின் பலவகைப் பாகுபாடுகளின் இலக்கணம் ஒவ்வொரு கணக்கெடுப்பிலும் மாறுபடுகிறது. உதாரணமாக, 1961-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 4 வயதுக்கு மேற்பட்ட எழுதப், படிக்கப், பேசத்தெரிந்த ஒருவர் கற்றவர் என்று கருதப்பட்டார். ஆனால், தற்போது வெளியிடப்பட்டுள்ள 1971ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அறிக்கையின்படி 4 வயதுக்குட்பட்டவர்களையும் கற்றவர்கள் எண்ணிக்கையில் சேர்த்து உள்ளனர். கல்வித்தரம் இந்தியாவில் மிகக் குறைந்து உள்ளது. 1961-ல் மொத்த மக்களில் 25 சதவீதம் மட்டுமே கற்றவர்களாயும் 75 சதவீதத்திற்குமேல் கல்வியறிவு இல்லாதவராகவும் இருந்தனர். இருபாலார்க்கும் தனியாகக் கற்றவர்களைக் கணக்கெடுத்ததில் ஆண்கள் 34 சதவீதமும், பெண்கள் 13 சதவீதமும்தான் இருந்தனர். எனவே, கல்வியின் முன்னேற்றம் இந்தியாவில் ஆண்டுக்கு 1 சதவீதத்திற்கும் குறைவாகத்தான் இருந்து வருகிறது.

1971-ல் கற்றவர்களின் எண்ணிக்கை 29·34 சதவீதம் உயர்ந்தது. ஆண்களில் 39·51 சதவீதமும் பெண்களில் 18·44 சதவீதமும் கல்வி கற்றவர்களாய் இருக்கின்றனர். இன்றும் 70 சதவீதத்திற்குமேல் கல்வியறிவில்லாதவர்கள் இந்தியாவில் இருக்கின்றனர்.

1971-ல் இந்திய மாநிலங்களுள் அதிகமாகக் கல்வி கற்றவர்களைக் கொண்ட மாநிலங்கள் பெற்றுள்ள இடத்தின் வரிசைப்படி வருமாறு : (1) சண்டிகர் (61·24 சதவீதம்), (2) கேரளா (60·16 சத வீதம்) (3) டெல்லி (56·65 சத வீதம்), (7) பாண்டிச்சேரி (43·36 சதவீதம்) (8) தமிழ்நாடு (39·39 சதவீதம்)

1961-ல் முதலிடம் பெற்றிருந்த டெல்லி இப்போது மூன்றும் இடத்தையும், இரண்டாம் இடம் பெற்றிருந்த சண்டிகர் இப்போது முதல் இடத்தையும், மூன்றும் இடத்தைப் பெற்றிருந்த கேரளா இப்போது இரண்டாம் இடத்தையும் ஆறும் இடத்தைப் பெற்றிருந்த தமிழ்நாடு இப்போது எட்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. கல்வித்துறையில் நாம் என்னதான் முன்னேற்றம் அடைந்தாலும், பெண்களின் கல்வியின் அளவு இன்னும் பிற்பட்டே காணப்படுகிறது. இந்திய கிராமங்களில் ''கல்வியினாலாய பயனும் முக்கியத்துவமும்'' இன்னும் உணரப்படவில்லை. அறியாமையாலும், ஏழ்மையாலும் கிராமப் பகுதிகளில் கல்வி வசதிகள் வீணடிக்கப்படுகின்றன.

மக்கள் தொகை வளர்ச்சியும் தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சியும்

பொருளாதார வளர்ச்சி அதிகரிக்க, மக்கள் தொகை வளர்ச்சி துணைபுரியுமா? அல்லது பெரும்பாரமாய் இருக்குமா? இந்தியா ஒரு மிகுதியான மக்கள்தொகையைக் கொண்ட நாடு தானா? என்பதை முதலில் நிர்ணயிக்க வேண்டும். ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கப் பொதுவாக மனித சக்தி தேவைப்படுகிறது. நாட்டிலுள்ள இயற்கை வளங்களையும் செயற்கைச் சக்திகளையும் முழுமையாகப் பயன்படுத்த மனித சக்தி தேவைப்படுவதால், மக்கள்தொகையில் கணிசமான அளவு அதிகரிப்பு இருப்பது சில சமயங்களில் பயனுள்ளதாக இருக்கும். இந்தியாவில் இயற்கை வளங்கள் ஏராளமாய் இருப்பதாகவும், முதல் பற்றுக்குறையால் அவைகள் முழுவதுமாகப் பயன்படுத்தப்படாமல் வீணாய் இருக்கின்றன

என்றும் இவற்றை முழுவதுமாகப் பயன்படுத்தினால் தற்போது இருக்கும் மக்கள் தொகை நாட்டுக்குப் பாரமாக இருக்காது என்றும் சிலர் கருதுகின்றனர். இதன் அடிப்படையில், இந்தியாவில் மிகுதியான மக்கள்தொகை இல்லை என்றும் ஏராளமான வளங்களுக்கு மத்தியில் இந்தியா ஏழ்மையானதாய் இருப்பதால் சிக்கல் உள்ளது என்றும் அவர்கள் விவாதிக்கின்றனர்.

சிக்கல்

ஆனால், இக்கருத்து உண்மைக்குப் புறம்பானதாகும். இந்தியா போன்ற பிற்பட்ட நாடுகளில் மக்கள் தொகையின் அதிகரிப்பால் பொருளாதார வளர்ச்சியின் வேகம் குறைந்து விடுகிறது. பொதுவாக, எல்லா வகை இயற்கை, செயற்கை வளங்களும் முழுவதுமாக உற்பத்தியைப் பெருக்கப் பயன்படுத்தப்படுகின்றன. உள்நாட்டிலில்லாத முதல் பொருள்களும், நடுத்தர நிலைப் பொருள்களும், இறக்குமதி செய்யப்படுகின்றன. அயல்நாட்டு முதல் இறக்குமதி செய்யப்படுவதால், நாட்டில் முதல் தட்டுப்பாடு முடிந்த வரையில் நீக்கப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்படுகிறது. எனினும், மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்த தலா வருமானத்தால் அதிகரிப்பதில்லை. எனவே, இந்தியா ஒரு மிகுதியான மக்கள் தொகையைக் கொண்ட நாடுதான் என்பதையும் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய மக்கள்தொகை வளர்ச்சி ஒரு பெருஞ்சுமையாய் இருக்கிறது என்பதையும் கீழ்க்கண்ட உண்மைகளாலும் அறியலாம்.

மக்கள் தொகை மிகுதி

இந்தியா மித மிஞ்சிய மக்கள் தொகையைக் கொண்ட நாடுதான் என்பதை இரு வகையான மக்கள் தொகைக் கோட்பாடுகள் மூலமும் நிரூபிக்கலாம். முதலாவதாக, 1798-ஆம் ஆண்டில் மால்தஸ் என்னும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பொருளியல் அறிஞர் தன் மக்கள் தொகைக் கோட்பாடு பற்றிய கட்டுரையில் ஒரு நாட்டின் மக்கள் தொகை பெருக்கல் விகிதத்திலும் (Geometrical Progression) உணவு உற்பத்தியானது கூட்டெண் விகிதத்திலும் (Arithmetical Progression) கூடுகிறது என்று குறிப்பிட்டார். மக்களாக உணர்ந்து தவிர்ப்புத்தடைகள் (Preventive checks) மூலம் பிறப்பு வீதத்தைக் குறைக்காவிட்டால், காலப் போக்கில் மக்கள் தொகைப் பெருக்கத்தின்

விளைவாக இயற்கையின் கோளாறுகளால் இயல்புத் தடைகள் (Positive checks) ஏற்பட்டு இறப்பு வீதம் அதிகரித்து காலப் போக்கில் மக்கள் தொகை குறையும் என்றும் மால்தஸ் கருதினர். அவர் கருத்துப்படி மக்கள் தொகையின் வளர்ச்சி, உணவுப் பொருள்களின் உற்பத்தியின் வளர்ச்சியை விட மிக அதிகமாக உள்ளது. இந்தியாவில் அந்நிலை உள்ளது. முதலில் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 2·5 சத வீதம் என்ற அளவில் இந்தியாவில் அதிகரித்து வருகிறது. ஆனல், உணவுப்பொருள் உற்பத்தி அந்த அளவுக்கு இல்லா மல் அயல்நாடுகளிலிருந்து உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டிய நிலை உள்ளது. இரண்டாவதாக, இந்தியாவில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் அதிகமாயிருப்ப தால் மித மிஞ்சிய மக்கள் தொகை இருப்பதை அறியலாம். மூன்ருவதாக, இந்தியரின் சராசரி வயது இன்னும் குறைவாகத் தான் இருக்கிறது. நான்காவதாக, இந்தியாவில் நகரங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் தடுப்பு முறை கையாளப்படுவதில்லை. இதனல் வறட்சி, பஞ்சங்கள், வெள்ளம், தொற்று நோய் போன்ற இயல்புத் தடைகளால் இந்திய இறப்பு வீதம் அதிகரித்து வந்தது.

இரண்டாவதாக, பொருளாதார மேதைகளான எட்வர்டு கேனன், ராபின்ஸ், டால்டன் போன்றவர்கள் விளக்கிய உத்தம மக்கள் தொகைக் கோட்பாட்டின் மூலமாகவும் இந்தி யாவில் மிகுதியான மக்கள் தொகை இருப்பதை அறியலாம். உத்தம மக்கள் தொகையென்பது ஒரு நாடு தன் பல்வேறுவகை வளங்களை அடிப்படையாகக் கொண்டும் தலாவருமானம் அதிக மாகக் கொண்டும் ஆதரிக்கத்தக்க ஏற்றதொரு மக்கள் தொகை யாகும். இந்த உத்தம அளவு எண்ணிக்கைக்கு மேல் மக்கள் தொகை அதிகரித்தால் அது உபரி மக்கள் தொகையாகும். 1971-ல் இந்தியாவில் இருக்கும் 547 மில்லியன் மக்களில் சுமார் 300 மில்லியன் மக்களைத்தான் உத்தம அளவு எண்ணிக்கை என, நம் பல்வேறு வகை வளங்களின் அடிப்படையில் கொண்டு கூற முடியும். 547 மில்லியன் என்பது மிதமிஞ்சிய மக்கள் தொகையாகும். எச்ச மக்களாகிய 247 மில்லியன் பேர் முழு பட்டினியாகவோ அல்லது அரை பட்டினியாகவோ இந்தி யாவில் வாழ்கின்றனர். தற்போது இந்தியாவில் பணவருவாய் கூடிய போதும் உண்மை வருவாய் தேக்க நிலையிலே இருப்ப தன் காரணம் மித மிஞ்சிய மக்கள் தொகைப் பெருக்கே யாகும். பொருளாதாரத்திட்டங்களால் ஏற்படும் ஒரு சிறிது பொருளா

தார வளர்ச்சி ஆண்டு தோறும் அதிகரிக்கும் மக்கள் தொகையால் மறைந்து விடுகிறது.

அடுத்தபடியாக, இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய மக்கள் தொகையின் வேகமான வளர்ச்சி பெரும் பாரமாய் இருப்பதை, கீழ்க்கண்ட பல்வேறு வகையான காரணங்களால் உணரலாம்.

ஆதாரங்கள்

1. மக்கள் தொகையும் தேசிய வருமான வளர்ச்சியும்

கடந்த 15ஆண்டுகளாக (1950-51—1965-66) இந்தியப் பண தேசீய வருமானம் 53·7 சதவீதம் உயர்ந்தது. ஆனால், மக்கள் தொகையில் உயர்வு ஏற்பட்டதால் உண்மையான தேசிய வருமானம் (Real National Income)சுமார் 35 சதவீதமாக மட்டும் தான் உயர்ந்தது. மேலும், தலா வருமானமும் 20·4 சதவீதம் மட்டும் தான் அதிகரித்தது. ஆண்டுக்கு, சராசரி தேசிய வருமான, வளர்ச்சி வீதம் இந்தியாவில் 3·3 சதவீதம் தான் உள்ளது. நம் இயற்கை வளங்கள் மற்ற ஆக்க சக்திகளின் அடிப்படையில் உத்தம அளவு இந்தியத் தேசீய வருமான அதிகரிப்பு ஆண்டுக்குச் சுமார் 7·5 சத வீதமாவது இருக்க வேண்டும். 1971-ல் இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சி 25 சதவீதம் என்ற வீதத்தில் அதிகரிப்பதால் மக்களின் உண்மை தலா வருமானம் மேலும் குறையும்.

2. மக்கள் தொகையும் உணவு அளிப்பும்

மக்கள் தொகையின் மிதமிஞ்சிய வளர்ச்சியால் சராசரி ஒரு மனிதனின் நிலம் (Percapita land) ஒவ்வொரு கணக்கெடுப்பு ஆண்டிலும் குறைந்து கொண்டே வருகிறது. 1921-ல் பயிரிடப் பட்ட நிலப்பகுதி ஒரு மனிதனுக்குச் சராசரியாக 111 செண்டு களாக இருந்ததில் 1941-ல் 94 செண்டுகளாகி 1961-ல் 75 செண்டுகளாகக் குறைந்தது. மக்கள் தொகையின் வளர்ச்சி யால் இந்தியாவில் நிலத்தில் மக்களின் அழுத்தம் அதிகமாகி நிலங்கள் உட்பிரிவு படுத்தப்பட்டுத் துண்டாகி (Sub-division and Fragmentation of Holdings) சிக்கனமற்ற நில உடைமை (Uneconomic Holding) ஏற்படுகிறது. நில-மனித விகிதம் (Land Man Ratio) குறைவதை ஈடு செய்ய விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். 1949-50-க்கும் 1960-61-க்கும் இடைப்பட்ட காலத்தில் உணவு உற்பத்தியின்

குறிப்பெண் 32 சதவீதமாக உயர்ந்த போது மக்கள் தொகை 23 சதவீதமாக உயர்ந்தது. 1975-76-ல் இந்தியாவில் உணவு தானியங்களின் தேவை 152 மில்லியன் டன்களாக உயரு மென்றும் மக்கள் தொகை அப்போது 630 மில்லியனாக இருக்கு மென்றும் கூறப்பட்டு வருகிறது. மக்களிடம் வருமானம் அதிகரிப்பதால் உணவுப்பொருள்களின் தேவை அதிகரித்து உணவு பற்றுக் குறை ஏற்படுகிறது. இந்நிலையைச் சமாளித்து அளிப்பை அதிகரிக்க தொழில் நுட்ப விஞ்ஞான அறிவு முறைப் படி திறமையுடன் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இரண்டாவதாக, உணவுப்பொருள்களின்தேவையைக் குறைக்க தீவிரமாகப் பயன் தரத்தக்க குடும்பத் திட்ட முறைகளை மக்களை உணரச் செய்து நம் மக்கள் தொகையின் வளர்ச்சி வீதத்தைக் குறைக்க முயற்சிகளைத் திறம்பட மேற்கொள்ள வேண்டும். "உருமறைந்த வேலையின்மையைப்" போக்க, நிலத்தையே நம்பி வாழும் ஏராளமான மக்களைத் தொழில்கள் போன்ற ஆக்க வேலைகளுக்கு மாற்றி விடுவது நல்லதாகும்.

3. உற்பத்திக்குப் பயன்படாத நுகர்வோரின் சுமை

பொதுவாக, இந்திய மக்கள் தொகையை இருவகையாகவும் பிரிக்கலாம். முதல்வகை, உற்பத்தி செய்யும் நுகர்வோர்கள்; இரண்டாம் வகை, உற்பத்தி செய்யாமல் மற்றவர்களை நம்பி இருந்து நுகர்வோர்கள் ஆவர். உற்பத்தி செய்து நுகர்வோ ரால் மட்டும் தான் தேசீய வருவாய் அதிகரிக்கிறது. உற்பத்தி செய்யாத நுகர்வோர்கள் எனப்படுபவர் குழந்தைகள், வயோதிகர்கள் போன்ற ஒரு வேலையும் செய்யாதவர்களாவர். 1951-ல் உற்பத்தி வேலைகளில் ஈடுபட்டவர்கள் 169·5 மில்லிய னாகவும் மற்றவர்களை நம்பி வாழ்பவர்கள் 221·5 மில்லியனா மாக இருந்தவர்கள், 1967-ல் முறையே 188 மில்லியனாகவும், 251 மில்லியனாகவும் அதிகரித்தனர். 0·14 வயதுகளின் எல்லை யில் இருப்பவர்கள் மொத்த மக்கள் தொகையில் 40 சத வீத மாவர். உற்பத்தி செய்யாமல் மற்றவர்களை நம்பி வாழும் குழந்தைகள் வேலை செய்யாத மொத்த மக்களில் 80 சத வீத மாவர். எனவே, இந்தியாவில் உற்பத்தி செய்யாமல் நுகர்ந்து வருபவர்களின் சுமை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

4. கல்வி, மருத்துவம், வீடு ஆகியவைகளில் ஏற்படும் சுமை

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் பள்ளி செல்லும் சிறுவர் களின் எண்ணிக்கை அதிகரித்து கல்வி போதனைக்கான செலவு ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கல்வித்

துறையில் முதலீடு செய்வதால் உற்பத்தித்திறன் அதிகரித்து உற்பத்தியும் அதிகரிக்க வாய்ப்பிருந்தாலும், முதலீடு செய்த பணத்திற்கான ஆதாயம் பெற நீண்ட கால மேற்படுகிறது. எனினும், மக்களின் சமூக நலனுக்காகக் கல்வித் துறையில் முதலீடு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆண்டுக்கு ஏராளமான மில்லியன் டாலர்கள் கல்விக்காக செலவிட்டு மக்களின் கல்வித்தரத்தை உயர்த்தி வருகிறார்கள். இந்தியாவில் பள்ளி செல்லும் ஒரு மாணவருக்கு ஓர் ஆண்டுக்கு, சராசரி செலவு ரூ. 100-க்கு மேல் ஏற்படுகிறது. மக்கள் தொகை 5–14 வயது உடையவர்கள் எல்லையில் 21·5 மில்லியனாக இருப்பதால், ஆண்டுக்கு அதிகரிக்கும் கல்விச் செலவு ரூ. 215கோடிகள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பள்ளியிலிருந்து பல்கலைக் கழகப் படிப்பு வரைக்கும் செல்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கல்விச் செலவைக் கணக்கிட்டால் அது மேலும் அதிகமாக இருக்கும். அதற்குமேல் பொது சுகாதாரம், மருத்துவ உதவி, வீட்டு வசதி போன்றவற்றிற்காக ஆண்டு தோறும் செலவிடப்படும் தொகையும் மக்கள் தொகையின் பேரெழுச்சியால் அதிகரித்து வருகிறது.

5. வேலையின்மைப் பிரச்சினை

மக்கள்தொகையின் மித மிஞ்சிய பெருக்கத்தால் இன்று இந்தியாவிலுள்ள பிரச்சினைகளில் வேலையின்மையும், வேலைக் குறைவும், உரு மறைந்த வேலையின்மையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. நாட்டிலுள்ள பல்வேறுவகை வளங்களைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புக்களைத் திட்ட காலத்தில் பெருக்கியும் ஒவ்வொரு திட்டத்திலும் பூர்த்தியாகாத வேலையின்மையின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உதாரணமாக, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் வேலை இல்லாதவர்கள் 9 மில்லியனும், குறைவு வேலை பெற்றவர்கள் (Under-employed) 15 முதல் 20 மில்லியனுமாக இருந்தனர். இரண்டாம் திட்டம் 6·5 மில்லியன் மக்களுக்குத்தான் வேலைகளை ஏற்படுத்த இயன்றது. மூன்றாம் திட்ட காலப்பகுதியில் புதிதாக வேலை தேடுவோர் 17 மில்லியன் என்று மதிப்பிடப்பட்டது. இது போக, ஏற்கனவே வேலை இல்லாமலிருந்து 9 மில்லியனுக்குமாகச் சேர்ந்து வேலை வாய்ப்புக்களை மூன்றாம் திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், மூன்றாம் திட்டத்தில் 14 மில்லியன் மக்களுக்குத்தான் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடிந்தது. எனவே, நான்காம் ஐந்

தாண்டுத் திட்ட கால இறுதியில் மொத்தம் 35 மில்லியன் பேர் வேலை இல்லாமல் இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. வேலையின்மைப் பிரச்சினை தீர்க்க இயலாத நிலையில் தீவிர மடைந்து வருவதால், இப்பிரச்சினைக்கு முதலிடம் அளித்து, வேலையில்லாதோரின் துயரைத் தீர்க்க வேண்டுவது இன்றி யமையாததாகும்.

6. முதலாக்கப் பிரச்சினை

மக்கள் தொகையின் மிதமிஞ்சிய அதிகரிப்பால் மக்களின் உண்மை தலா வருமானம் குறைவதால் சேமிப்பு வீதமும் குறைந்து தேவையான அளவு முதலாக்கம் (Capital Formation) ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. சேமிப்புதான் நாட்டின் முதலீட்டையும் உற்பத்தியின் அளவையும் வருமானங் களையும் அதிகரிக்க வல்லது. இந்தியாவில் மக்கள்தொகை வளர்ச்சிவீதம் 2·5 சதவீதமாக இருப்பதால், உண்மை தலா வருமானத்தைக் குறைந்து விடாமல் நிலைநிறுத்த தேசீய வரு மானமும் ஆண்டுக்கு 2·5 சதவீதம் என்ற வீதத்தில் பெருக வேண்டும். இச்சமநிலையைச் சாதிக்க முதலீட்டின் அளவு அதிகரிக்க வேண்டும். இரண்டாம் திட்ட காலத்தில் இந்தியா வில் முதல்-உற்பத்தி விகிதம் (Capital-Output Ratio) 3·1 என்று மதிப்பிடப்பட்டது. அதாவது 1 அலகு உற்பத்தியை அதி கரிக்க, முதல் அலகுகள் 3·1 என்ற அளவில் தேவைப்படு கின்றன. எனவே, தேசிய வருமானத்தில் 2·5 சதவீத அதிகரிப்பைப் பெற முதலாக்கம் 7·75 சதவீதம் (2·5 × 3·1) என்ற அளவுக்கு அமையவேண்டியது இன்றியமையாததாகும். எனவே, தற்போது இருந்துவரும் தலா வருமானத்தை நிலை நிறுத்த வேண்டின், முதலீட்டு வீதம் 7·75 சதவீதமாக அமைய வேண்டும். மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 2·5 சதவீதத்திற்கும் மேற்படாமலும் இருக்கவேண்டும். எனவே, மக்களின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்த முதலீடு பெருகி மக்கள் தொகையின் அதிகரிப்பு குறைக்கப்பட வேண்டும்.

முடிவுரை: மேற்கண்ட விளக்கத்திலிருந்து இந்தியா ஓர் எச்ச மக்கள் தொகை கொண்ட நாடு தான் என்பதையும் அதன் விளைவால் மூன்று முக்கிய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதையும் அறியலாம். முதலாவதாக, இந்தியாவில் உத்தம அளவு மக்கள் தொகையைவிட அதிக அளவு மக்கள் தொகை இருந்து வருகிறது. இதனால் உணவு, உடை, வீடுகள், வேலை, கல்வி வசதி, சத்துணவு போன்றவைகளில் தட்டுப்பாடு

இருந்து வருகிறது. தலா வருமானம் அல்லது தலா உற்பத்தி அதிகரிக்க, சிறந்த பலமும் திறமும் கொண்ட மக்களை இந்தியா பெற்ருக வேண்டும். மேலும், பல்வேறு வகை வளங்களும் சீரான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது தலா வருமானம் குறையாமல் இருக்க, நாட்டில் முதலீடுகள் ஏராளமாகப் பெருகவேண்டும். ஆக்ஸ்போர்டு பொருளியல் அறிஞரான பேராசிரியர் கோலின் கிளார்க், (Colin Clark) மக்கள் தொகை வளர்ச்சியினுல் பொருளாதார ஊக்கமும் ஆக்கமும் தூண்டப்படுமாதலால் இந்தியா மக்கள் தொகை வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திஞர். 1950-ல் மொத்த தேசிய வருமானத்தில் 5 சதவீதமாக ஏற்கனவே இருந்த சேமிப்பு வீதம் மொத்த தேசீய வருமானத்தில் 9 சதவீதமாகப் பின்பு அதிகரித்தது. அத்தகைய சேமிப்பு வளர்ச்சி ஏற்படக் காரணம் அதிகரித்து வந்த பிறப்பு வீதமேயாகும் என்பதும் அவர் கூற்று. இளம் தலைமுறையினர் சேமிக்கும் சக்தியும் ஆர்வமும் பெற்று விளங்குவர் என்பதும் அவர் கருத்தாகும். ஆனுல், மக்கள் தொகையின் பெரும் எழுச்சியால் தலா வருமானம் குறைவதால் சேமிப்பு குறைந்து நுகர்ச்சி அதிகரிக்கும். இதன் விளைவாக, சேமிப்புவீதமும் முதலீட்டின் அளவும் குறையும். மூன்ருவதாக, மக்கள் தொகைப் பெருக்கத்தால் கணக்கற்ற முறையில் குழந்தைகள், வயோதிகர்கள் போன்ற மற்றவர்களை நம்பி வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்து தலா வருமானமும், வாழ்க்கைத்தரமும் குறைகிறது. உலக வங்கியின் பொருளியல் அறிஞர் Dr. G. C. ஜைதன் (Zaidan) என்பவரின் கருத்துப்படி மக்கள் தொகைக் கட்டுப்பாட்டால் குறுகிய காலத்தில் பிறப்பு வீதம் குறைந்து தலா வருவாய் அதிகரிக்கலாம். ஏனெனில் குடும்பக் கட்டுப்பாட்டால் குழந்தைகளின் எண்ணிக்கைதான் குறையுமே தவிர, வேலை செய்து வருபவர்களின் எண்ணிக்கை குறையாது. ஆனுல், நீண்ட காலத்தில், பணிபுரிவோரின் எண்ணிக்கை பாதிக்கப்பட்டு மொத்த தேசியவருவாயும் குறையும். நாட்டிலுள்ள வேலையின்மையின் அளவுக்கு ஏற்ப தேசிய வருவாயில் ஒரு பகுதி குறையும். ஆனுல், பிறப்பு வீதத்தைக் குறைக்க மேற்கொள்ளப்படும் கொள்கைகள் நீண்ட காலத்தில் வேலை செய்பவர்களின் அளவைப் பாதிக்குமா? அதனுல் மொத்த தேசிய வருவாயும் குறையுமா? என்பதைக் கவனமாய் ஆராய்ந்த பின் அதற்குத் தகுந்த மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை அமுலாக்கவேண்டும். இதன்மூலம் மேற்குறிப்பிட்ட அச்சத்தைப்

போக்கி நிலையான பொருளாதார வளர்ச்சியைப் பெற இயலும்.

7. தீர்வுகள்

இந்திய மக்கள்தொகைப் பிரச்சினை இன்றைய நிலையில் மிகத் தீவிரமான கட்டத்தை அடைந்திருப்பதால் ஒற்றை முறைத் தீர்வு மூலம் அதைத் தீர்க்க இயலாது. பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொண்டு அதன் தீவிர நிலையைக் குறைக்க வேண்டும். வளர்ச்சியுறு நாடுகளில் மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்க்க பொருளியல் அறிஞர்கள் ஐவகைத் தீர்வுகளை ஆய்ந்து அறிவுறுத்தியுள்ளனர். அவைகளாவன: (1) விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியைஅதிகரித்தல் (2) தொழில் மயத்தைப் பெரிய அளவில் ஏற்படுத்துதல் (3) உள் நாட்டுக் குடிபெயர்ச்சி, (4) வெளி நாட்டுக் குடியேற்றம், (5) கட்டுப்பாடுகள் மூலம் மேலும் மக்கள்தொகை அதிகரிக்காமல் காத்தல்.

1. வேளாண்மைத் துறையில் உற்பத்தியை அதிகரிக்க அரசு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பெருமுயற்சிகள் மேற்கொண்டும் முழுமையான வெற்றி கிட்டவில்லை. நிலச் சீர்திருத்தக் கொள்கைகளை அமுலாக்கி, சிறந்த பொறுக்கு விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவற்றையும் அளித்து, தொழில் நுட்ப, விஞ்ஞான முறைகளைக் கூடுமான வரையில் கையாண்டு, சீரான நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, புதிய கருவிகளைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தும் குறிப்பிட்ட உணவு தானிய இலக்குகளை ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் பெற இயலவில்லை. ஏனெனில், விவசாய உற்பத்தியைப் பெருக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் அநேக பிரச்சினைகள் சேர்ந்துள்ளன.

2. நாட்டைத் தொழில் மயமாக்குவதன் மூலம் இந்திய மக்கள் தொகைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலும் என்று கருதப்படுகிறது. ஏனெனில், இங்கிலாந்தில் தொழில் புரட்சி ஏற்பட்ட பின், மக்கள் தொகைப் பிரச்சினை குறைந்தது. இந்தியாவில் மூன்று முக்கிய காரணங்களால் தொழில் மயம் விரும்பப்படுகிறது. முதலாவதாக, தொழில் மயமாக்குவதன் மூலம் கிராமத்தில் வேலையின்மையாலும் வேலைக்குறைவாலும் துன்பப்படுபவர்களை நகரத்திலுள்ள ஆலைகளிலோ அல்லது சிறிய கிராமத் தொழில்களிலோ ஈர்த்துக்கொள்ள முடிகிறது.

இரண்டாவதாக, பேரளவு உற்பத்தியால் தலா வருவாயை அதிகரித்து நுகர்ச்சியின் அளவையும் அதிகரிக்க முடியும். மூன்றாவதாக, திட்டமிட்டு வெற்றியுடன் நாட்டைத் தொழில் மயமாக்குவதன் மூலம் நகரங்களில் ஒரு புதுமைப் பாங்குடைய வாழ்க்கை முறையை ஏற்படுத்துவது சாத்தியமாகும். இத்தகைய வாழ்க்கை முறையால் கல்வி வளர்ச்சி, தொழில் பயிற்சி, காலம் தாழ்த்திய திருமணங்கள், சிறிய அளவுடைய குடும்பங்கள் ஏற்பட வசதியும் வாய்ப்பும் ஏற்படுகிறது. மேற்கத்திய நாடுகளிலும், ஜப்பானிலும், தொழில் மயமேற்பட்டதால் ஆரம்பத்தில் பிறப்பு வீதம் குறையத் தொடங்கியது. இந்தியாவில் அத்தகைய நிலை ஏற்படாதது வருந்தத்தக்கதாகும். இருபது ஆண்டுகளுக்கு முன் நம் தொழில் வளம் இருந்தநிலையோடு இன்றைய தொழில் வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் போற்றத்தக்க முறையில் அமைந்து பேரளவு தொழில் மயத்தை ஏற்படுத்தியுள்ளது.

3. உள்நாட்டுக் குடிபெயர்ச்சி யேற்பட இந்தியாவில் போதிய வாய்ப்புகள் இல்லை. மொழி வழியில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டு அவற்றின் எல்லைகளும் குறுகிவிட்டபடியாலும் உள்நாட்டுக் குடிபெயர்ச்சியை மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லாததாலும், இந்திய மக்கள் பொதுவாகவே சமூக, கலாசார, பொருளாதார காரணங்களால் பெயர்ச்சியை விரும்பாதவர்களாலும் இந்த வழிமுறை இந்திய மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்க்கப் பயனளிக்காது.

4. அயல்நாட்டுக் குடியேற்றத்துக்குரிய வாய்ப்புக்கள் அதிகமாய் இல்லை. வெளிநாடுகளில் இருக்கும் 25 இலட்சம் இந்தியர்களில் பலர் இலங்கை, பர்மா போன்ற நாடுகளிலிருந்து திரும்பி வருகின்றனர். இவர்களுக்கு வாழ்வளிப்பதே பெரிய சிக்கலாய் இருக்கிறது. இந்திய மக்களின் குடியேற்றத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அயல்நாடு எதுவும் இல்லை.

5. இந்திய மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்க்க ''கருத்தடை'' (Birth control) போன்ற குடும்பக் கட்டுப்பாடு முறைகள்தான் தன்னிகரில்லாதவைகளாகும். ஏற்கனவே, இருந்துவரும் மக்கள் தொகையைக் குறைக்க வாய்ப்பில்லை என்றாலும், இனிப் பெருகும் மக்கள்தொகையைக் குறைக்கத் திட்டங்களைத் தீட்டினால் முடியக்கூடிய செயலாகும். ஏதோ ஒரு வகை குடும்பக் கட்டுப்பாடு தங்களுக்கு இன்றியமையாதது

என்பதை இன்று இந்திய மக்கள் உணரத் தொடங்கி விட்டனர். மேலும், கருத்தடை முறைகளுக்கு இந்தியாவில் பலத்த எதிர்ப்புஇல்லை. ஆனால், எத்தகைய குடும்பக்கட்டுப்பாடு முறை தகுதியும் சிறப்பும் பெற்றுப் பக்க விளைவுகளின்றி இருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பதுதான் பெரிய பிரச்னை யாக உள்ளது. அந்த முறை இந்திய வாழ்க்கை முறைக்குத் தகுந்ததாயும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாயும் இருக்க வேண்டுவது அவசியமாகும். அடுத்த பிரச்சினை குடும்பக் கட்டுப்பாடு முறைகளை இந்திய ரெல்லோருக்கும் அறியப்படுத்தும் சிக்கலாகும். மேலும், இந்தியாவில் பொது வாக வாழ்க்கைத்தரம் குறைந்து உள்ளது. ஆனால், குடும்பக் கட்டுப்பாடு முறைகளைத்தீவிரமாகச் செயல்படுத்தி வெற்றியைப் பெற, தற்போதுள்ள வாழ்க்கைத்தரத்தைவிட உயர்ந்த வாழ்க்கைத்தரம் தேவைப்படுகிறது. இந்த நச்சு வளையத்தைத் தகர்த்தெறிய ஒரு சிறந்த முறையைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

அரசின் மக்கள்தொகைக் கொள்கை

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து மக்களின் சுய குடும்பக் கட்டுப்பாடு முறைகளை மேம்படுத்தும் கருத்தைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுக்கொண்டது. காந்தியடிகள் கருத்தடை முறையைவிட, புலனடக்கமே சிறந்த தென்று போதித்திருந்தார். புலனடக்கமே சிறந்ததெனினும், அனைவரும் பின்பற்றத்தக்க முறையாக அது அமையவில்லை என்பதை நடைமுறை உணர்த்துகிறது. குழந்தைகளின் பிறப்பு விதத்தைக் குறைக்க (1) கருத்தடை மூலம் குழந்தைகளைச் "சந்தர்ப்பவசமாய்ப் பெருமல் தேர்ந்தெடுத்து"ப் பெறுவதால் முடியும். (2) ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்குமிடையில் உள்ள காலத்தை அதிகரிக்க வேண்டும். (3) திருமணம் செய்யும் வயதை உயர்த்துதலும்அவசியமாகும். இம்முறைகளைக் கையாளுவதால் மக்கள் தொகையின் அளவு குறைவதோடு, தொடர்ந்து குழந்தைகள் பெறும் தாயின் உடல் நலமும், மன நிலையும் சீரடைவதோடு பிறக்கும் குழந்தையும் ஆரோக்கிய மாக இருக்கும். மேலும், கருத்தடையால்அவசியமற்ற குழந்தை களின் பிறப்பு தடுக்கப்படவும் முடியும்.

கொள்கை அளவில் மிகச் சிறப்பாய் விளங்கும் குடும்பக் கட்டுப்பாடு முறை நடைமுறையில் சுலபமானதாய் இல்லை. நம் ஐந்தாண்டுத் திட்டங்களில் குடும்பக் கட்டுப்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட ஒரு சிறிய தொகைகூட முழுமையாகச் செலவழிக்

கப்படவில்லை என்பதிலிருந்து இம்முறையிலுள்ள இன்னல்களை உணரலாம். எடுத்துக்காட்டாக, முதல் திட்டத்தில் ஐந்தாண்டுகளில் செலவழிக்கப்பட வேண்டுமென்று ஒதுக்கப் பட்ட ரூ. 50 லட்சத்தில் ரூ. 16 லட்சம்தான் உண்மையில் செலவிடப்பட்டன. அதேபோன்று, இரண்டாம் திட்ட காலத்தில் செலவழிக்க ஒதுக்கப்பட்ட ரூ. 5 கோடியில் பாதியை விடக் குறைவாக ரூ. 2·3 கோடிதான் மெய்யாகச் செலவிடப் பட்டது. மூன்றும் திட்டத்தில் செலவிடப்பட்ட மொத்த தொகை ரூ. 27 கோடியாகும். நான்காம் திட்டத்தில் குடும்பத்திட்ட செயல் முறைகளை மேற்கொள்ளத் தற்காலிகமாக ரூ. 95 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்பத்திட்ட செயல்முறைகளை வேகப்படுத்த மேற்கொண்டு அதிகமாக ரூ. 144 கோடி ஒதுக்கப்பட்டது. எனவே, நான்காம் திட்ட காலத்தில் மொத்த மாக இவ்வகையில் ரூ. 239 கோடி செலவிடப்படுமென்று தெரிகிறது.

திட்ட காலச் சாதனைகள்

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களை ஏற்படுத்துதலும் கருத்தடை முறைகளும் வலியுறுத்தப்பட்டன. 1968-ல் 1815 நகர குடும்பக்கட்டுப்பாடு நிலையங்களும் 24,387 கிராம நிலையங்களுமாக மொத்தம் 26,202 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இருந்தன. மேலும், 1592 மருத்துவ மனைகளிலும் நகர நிறுவனங்களிலும் 7401 கிராம நிறுவனங்களிலும் குடும்பக்கட்டுப்பாடு வசதிக்கான உதவிகள் மேற்கொள்ளப்பட்டன. பெண் மருத்துவர்களின் பற்றுக்குறை யால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் விரிவடைவதில் தடைகள் ஏற்படுகின்றன. நான்காம் திட்டத்தில் 1970-71-ல் 48,000 குடும்பத் திட்ட நிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இலக்கு குறிக்கப்பட்டது. மார்ச் 1965 வரைக்கும் அறுவை முறை மூலம் கருத்தடை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை சுமார் 8·5 லட்சமாகும். இவற்றில் மூன்றில் இரண்டு பாகம் ஆண்கள் அறுவை முறை மூலம் கருத்தடை செய்து கொண்டனர். இந்தியாவில் கருத்தடைக்காக "லூப் வளையம்" வைத்துக்கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1966-67 வரைக்குமுள்ள காலத்தில் மட்டும் $1\frac{1}{2}$ லட்சம் பெண்களுக்கு மேல் லூப் வளையம் வைத்துக் கொண்டனர். 1967-68-ல் ஒரு மில்லியன் குழந்தை பிறப்புக்கு அதிகமாகவே தடை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் பொது உடல் நலம் பெரிதும் சீரடைந்தது. 1947-ல்

ஆயிரம் பேருக்கு 25 பேராக இருந்த இறப்பு வீதம் 1967-ல் ஆயிரம் பேருக்கு 12·7 பேராகக் குறைந்தது. அதேபோல், குழந்தைகளின் இறப்பு விதமும் குறைந்தது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைப் பல முறைகளில் செயல்படுத்த முனைந்தும், அவைகள் ஊக்கமளிப்பதாக இல்லை. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் ஆயிரத்திற்கு 40 ஆக இருக்கும் பிறப்பு வீதத்தை 25 ஆக குறைக்க இயலவில்லை. ஒரு வேளை 1975-76-ல் பிறப்பு வீதத்தை 25 பேர் ஆகக் குறைக்க வாய்ப்பு ஏற்படலாம்.

இந்தியாவுக் கேற்ற மக்கள் தொகைக் கொள்கை

இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் ஒரே குறித்த முறையை மட்டும் பயன் படுத்தாமல் விஞ்ஞான ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுச்சிறப்பாகஅமையும்எல்லாக் கருத்தடைச் சாதனங்களையும் மேற்கொள்ள வேண்டும். கருத்தடைச் சாதனங்களில் சிலவற்றையும் மக்கள் தொகையைக் குறைக்க மேற்கொள்ள வேண்டிய சில செயல் முறைகளையும் இனி ஆராயலாம்.

1. கருத்தடை மாத்திரை

இந்தியாவில் தற்போது நுரை மாத்திரை, பாகு, சவ்வு போன்ற மருந்து வகைகள் கிடைக்கின்றன. மாத்திரையைப் பயன் படுத்தும் முறை நம்பிக்கைக்குப் பாத்திரமானதாக உள்ளது. எனவே, அரசால் இது ஏராளமான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இதற்காகவே, கேரளாவில் ஒர் ஆலையையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. தனியார்த் துறையிலும் ஏராளமான ஆலைகள் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்துவதால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படா வண்ணம் கண்ணும் கருத்துமாய்க் கண்காணிக்க வேண்டும்.

2. கருத்தடை உறை

இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 300 மில்லியன் உறைகள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது அரசு உதவிக் கொடைகள் வழங்கி ஏராளமான அளவில் உறைகள் உற்பத்தி செய்யப்பட்டு குறைந்த விலைக்கும் விற்கப்பட்டு வருகின்றன. 1968-ல் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து, குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட உதவியின் ஒரு பகுதியாக இந்தியாவுக்கு

200 மில்லியன் உறைகள் அனுப்பப்பட்டன. இந்த முறை ஆண்கள் சுலபமாக மேற்கொள்ளத்தக்க வகையில் இருக்கிறது. இது எளிமையானதும் நம்பிக்கைக்கு உகந்ததுமான முறையாகவும் உள்ளது. எனவே, மத்திய அரசும் உறைகளின் அளிப்பை நாட்டில் அதிகரிக்க, ஆண்டுக்கு 145 மில்லியன் உறைகளை உற்பத்தி செய்யும் சக்தி கொண்ட ஹிந்துஸ்தான் லாடெக்ஸ் லிமிடெட் என்ற ஆலையைக் கேரளாவில் ஏற்படுத்தி உள்ளது. இக்கருத்தடை உறைகளை நாட்டிலுள்ள எல்லாக் குடும்பத் திட்ட நிலையங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் கட்டணமின்றி அரசு வழங்கி வருகிறது. தனியார் வியாபாரிகளும் மிகக் குறைந்த விலைக்கு இவற்றை விற்று வருகின்றனர்.

3. அறுவை கருத்தடை முறை

கருத்தரிப்பதைத் தடை செய்வதற்கு நம்பிக்கையான முறை அறுவை முறையாகும். திருமணமானவர்கள் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பெற்ற பின் கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஆபரேஷன் செய்து கொள்ள விரும்புகின்றனர். ஆண்களுக்கு வாசெக்டமி (Vasectomy) முறையிலும் அல்லது பெண்களுக்கு டியூபெக்டமி (Tubectomy) முறையிலும் ஒரு சிறிய ஆபரேஷன் செய்வதனால் குழந்தைகள் ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுக்க முடிகிறது. அறுவை செய்து கொள்ளும் ஏழை மக்களுக்கு ரூ. 25 ஊக்கத் தொகையாகவும் அளிக்கப்படுகிறது. மூன்றும் குழந்தைக்கு மேல் குழந்தை வேண்டாமென்று அறுவை செய்து கொள்ளும் தொழிலாளர்களுக்கு டாடா போன்ற நிறுவனங்களில் ஊக்கத் தொகையாக ரூ. 250ம் சம்பளத்துடன் கூடிய சில நாள் விடுமுறையும் தரப்படுகிறது.

இம்முறையில் நிரந்தரமாகக் கருத்தரிப்பு ஏற்படாமல் தேவையான போது குழந்தைகளைப் பெற இயலாத நிலை உள்ளதால், இம்முறையில் அதிகமான முன்னேற்றம் ஏற்படவில்லை. மார்ச் 1966 வரைக்கும் ஒரு மில்லியன் பேரும், ஜூன் 1968 வரைக்கும் 4·2 மில்லியன் பேரும் ஆபரேஷன் செய்து கொண்டனர். 1968-69-ல் சாதிக்க வேண்டிய மொத்த இலக்கில் 54 சதவீதம் தான் சாதிக்க முடிந்தது. ஆனால், இம் முறையின் சீரான முன்னேற்றம் காண முதலில் ஊக்க வெகுமதித் தொகையைக் குறைந்தது ரூ. 100 ஆக உயர்த்த வேண்டும். நாட்டு நன்மையைக் கருதி இந்த அதிகச் செலவினை மேற்

கொள்ள அரசு முன்வரவேண்டும். குழந்தை பெற்றபின் இம் முறையை ஏற்றுக்கொள்ளும்படி தாய்மார்களுக்கு அறிவுறுத்த வேண்டும். கட்டணமின்றி, சிறந்த முறையில் அரசு பேறுகால சிகிச்சையை, அறுவை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு அளிக்கும் என்பதை அறிவிக்க வேண்டும். மேலும், அறுவை முறையை மேற்கொண்ட பெற்றோரின் குழந்தைகளுக்குப் பள்ளி களிலும் கல்லூரிகளிலும் கட்டணம் வசூலிக்கக் கூடாது. அத்தகைய பெற்றோரின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு களில் முதலிடமும் அளிப்பது நல்லது. அறுவை முறையை மேற் கொண்டவர்களுக்கு வருமான வரியிலும் சிறிது விலக்கு அளிப்பது ஊக்க மூட்டுவதாக அமையும். மதி கலங்கியவர்கள், நிரந்தர வியாதியுடையவர்கள் போன்றவர்களைக் கட்டாயப் படுத்தி அறுவை முறையை மேற்கொள்ளச் செய்ய வேண்டும். குடும்பத் திட்ட பணியாளர்களுக்குச் சிறப்பு ஊக்க உதவிக் கொடைகளை வழங்கி ஆண்டுக்கு ஒரு குறித்த அளவு மக்களை அறுவை முறையை ஏற்றுக் கொள்ளச் செய்ய வழி முறைகளைக் கையாளச் செய்யலாம். எல்லாவற்றிற்கும் மேலாகப் பெண்கள் கல்வியை விஸ்தரிப்பதால் அறுவை முறையில் சிறப்பான முன்னேற்றத்தைக் காணலாம்.

4. லூப் வளையம்

லூப் வளையம் (Intra-Uterine Contraceptive Device) குடும்பத்திட்ட முறைகளிலேயே ஒரு தொழில் நுட்பப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இம்முறை மிகச் சிறந்ததாயும், பயனுள்ள தாயும் உள்ளது. ஏனெனில், தப்பித்தவறிக் குழந்தை பிறக்கும் இடரை 1 சதவீதமாக இம்முறை குறைத்துள்ளது. மேலும், இம் முறையில் குழந்தை தேவையான பொழுது லூப் வளையத்தைக் கருப்பையிலிருந்து அகற்றி விடலாம். இம் முறை வசதியாய் இருப்பதோடு குறைந்த செலவுடையது தான் என்பது குறிப் பிடத்தக்கதாகும். ஒரு லூப் வளையத்தின் விலை ஏழு காசுகள் தான். மேலும் அரசாங்கமே இம்முறையை மருத்துவ மனைகளில் கட்டணமின்றி செய்ய ஏற்பாடு செய்துள்ளது. லூப் வளையங் களை ஏராளமாக உற்பத்தி செய்ய எடவா என்னுமிடத்தில் ஆண்டுக்கு 6 மில்லியன் லூப் வளையங்களை உற்பத்தி செய்யும் சக்தி கொண்ட ஆலை ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தி யுள்ளது. இந்தியாவில் இம்முறை பிரபலமடையவில்லை. ஒரு கணக்கெடுப்பில் லூப் வளையம் பொருத்தப்பட்டிருந்த பெண் களில் 10 சதவீதம் பேருக்கு அதிக இரத்த கசிவு இருந்ததாக வும், 6 சதவீதம் பேருக்கு அவ்வளையம் தானாகவே வெளியே

வந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதுவரைக்கும் சுமார் 2·4 மில்லியன் பேருக்கு இவ்வளையம் பொருத்தியிருப்பதாக அக்கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.

5. கருச்சிதைவு

கருச்சிதைவு (Abortion) செய்வதை இந்தியா உள்பட அநேக நாடுகளில் அரசாங்கம் பொதுவாக அனுமதிப்பதில்லை. மதக் கொள்கைகளின் போதனை, ஒழுக்கநெறி, தாயின் உடல்-மன நலம் போன்ற காரணங்களால் பெண்கள் கருவைக் கலைக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், சட்டத்திற்குப் புறம்பான கருச்சிதைவுகள் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் காணப் படாமலில்லை. மறைமுகக் கருச்சிதைவுகள் முறையில்லாமல் தகுதியற்றவர்களால் செய்யப்படுவதால், இது கருச்சிதைவு செய்யாதிருப்பதைவிட அபாயகரமானதாகும். சட்டத்திற்குப் புறம்பான கருச்சிதைவுகள் இந்தியாவில் பெருமளவில் செய்யப்பட்டு வருகின்றன. ஜப்பான் நாட்டில் ஏற்கனவே கருச்சிதைவு செய்ய, சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜப்பான் நாட்டில் பிறப்புவீதம் பாதியாகக் குறைந்துள்ளது. 1947-ல் 1000 பேருக்கு 30-ஆக இருந்தது 1959-ல் 1000 பேருக்கு 17-ஆகக் குறைந்தது. தாயின் உடல் நலத்தைப் பாதுகாக்கவோ அல்லது மற்றக் கருத்தடை முறைகள் தப்பித் தவறித் தோல்வியுற்ற காரணத்தாலோ கருச்சிதைவு செய்ய, சட்டத்தைத் தளர்த்தலாம் என்பது பொதுவான கருத்தாகும். Dr. சந்திரசேகர் அவர்களின் கருத்துப்படி "மருத்துவத் துறையின்மேல் வேலைப்பளு அதிகமாகு மாதலால் கருச்சிதைவு முறையை அனுமதிக்க இயலாது என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால், ரஷ்ய விஞ்ஞானிகள் தீங்கற்ற சுலபமான முறையைக் கையாண்டு உறிஞ்சும் கொள்கையின் அடிப்படையில் கருவைக் கலைக்கும் வழிமுறையைக் கண்டு பிடித்துள்ளனர். தனி மருத்துவக் கண்காணிப்பும் இம் முறையில் தேவைப்படுவது இல்லை. இந்தச் செயல் முறையை முழுவதுமாக செய்து முடிக்க ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஆவதில்லை." எனவே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குப் புத்துயிர் அளிப்பது போல் இந்தியாவில் கருச்சிதைவு செய்ய அனுமதிக்கும், "கருவுறுதலை மருத்துவ முறையில் தடுக்கும் மசோதா" (Medical Termination of Pregnancy Bill-1969) நவம்பர் 17, 1969-ல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மே, 26, 1971-ல் மேல்சபையில் நிறைவேறியது. இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுக்கு

மேல் பெற்றுள்ளவர்கள் பதிவு செய்துள்ள மருத்துவரிடம் கருச்சிதைவு செய்ய இச்சட்டம் அனுமதி கொடுக்கும்.

6. பால் வேறுபாடு உணர்த்தும் கல்வி

உடல்நலக் கணக்கீடு மற்றும் திட்டம் ஆகியவற்றிற்காக அமைக்கப்பட்ட முதலியார் குழு கல்லூரிகளில் பால் வேறுபாடு மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைப் பற்றிய பாடம் கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டுமென்று தன் பரிந்துரைகளில் கூறியுள்ளது. ஆனால், பெரும்பாலோர் பள்ளி இறுதி வகுப்பிற்குப் பின் வேலை தேட ஆரம்பித்து விடுவதால், இப்பாடங்களைப் பள்ளிகளிலும் பொதுவாக 14-18 வயதுக்கிடையில் இருப்பவர்களுக்கும் கற்பிக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

7. அதிகக் குழந்தை பெறுவோர்மேல் வரி விதித்தல்

மூன்று குழந்தைகளுக்குப் பிறகு ஏற்படும் ஒவ்வொரு பேறுகாலத்திற்கும் அதிக வரியை விதிக்கலாமென்றும் முதலியார் குழு சிபாரிசு செய்தது. அதைச் சீக்கிரத்தில் நடைமுறையில் கொண்டுவர வேண்டும். மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறுவோர்களுக்கு வரிச் சலுகைகளை அளிக்கலாகாது. மணமாகாதவர்களுக்கு வரிச்சலுகைகளை அளிக்கலாம்.

8. கருத்தடை முறைகளை எதிர்ப்பவர்களைத் தண்டித்தல்

நாட்டில் கருத்தடை முறைகளுக்கு மதவழி எதிர்ப்பு பலமாக இல்லை எனினும், சிலர் இம்முறைகளைக் கிராமங்களில் எதிர்த்து வருகின்றனர். நாட்டின் தற்போதுள்ள மக்கள் தொகையின் பலத்த எழுச்சியைப் புரிந்துகொள்ளாமல் சர்வ சேவா சங்கம் போன்ற சிலஅமைப்புக்கள் கருத்தடை முறைகளைக் குறை கூறிக் கிராம மக்களின் மனதை மாற்றுகின்றனர். இவர்களைத் தண்டிக்கப்படுவர் என எச்சரிக்க வேண்டியது அவசியமாகும். ஜாதியின் அடிப்படையிலும் மக்கள் தொகையின் அடிப்படையிலும் நாடாளு மன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிப்பதையும் நீக்க இந்திய அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்றும் Dr. சந்திர சேகர் கருத்துத் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் கருத்தடை தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு மக்கள் தொகை மற்ற மாநிலங்களைப்போல் அதிகரிக்கவில்லை. உண்மையில், தமிழ்நாடு இதனால் நாடாளுமன்றத்தில் 2 இடங்களை இழந்தது. இத்தகைய இழப்பை ஈடு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

முடிவுரை: குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தின் வெற்றியால் நாட்டின் உணவு, வேலையின்மை, கல்வி, உடல் நலம், இருப்பிடமின்மை, சத்தில்லா உணவு போன்ற எண்ணிறந்த பிரச்சினைகளைத் தீர்க்க இயலும். குடும்பத்திட்டத்தை ஒரு மருத்துவ பிரச்சினையாகக் கருதுவது தவறாகும். அது ஒரு சமூக, பொருளாதார இயக்க மாகும். “நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சி ஒரு நாணயமாகக் கருதப்பட்டால் உணவு உற்பத்தியும், குடும்பத்திட்டமும் அந்த நாணயத்தின் இரு சிறு பக்கங்களாகும்,” என்று Dr. சந்திரசேகர் கூறியுள்ளார். எனவே, குடும்பத்திட்டத்தின் மூலம் தற்போதுள்ள பிறப்பு வீதமாகிய ஆயிரம் பேருக்கு 40-பேர் என்பதை 1975—76-க் குள்ளாவது ஆயிரத்திற்கு 25 பேராகக் குறைத்து விட்டால் இந்தியாவின் மக்கள் தொகைப் பிரச்சினையை ஒரு வகையில் தீர்க்கலாம்.

12. இந்தியாவின் வேலையின்மைச் சிக்கல்

வளர்ந்துவரும் இந்தியப் பொருளாதாரத்தில் வேலையின்மைச் சிக்கல் ஒரு தீவிரமான பிரச்னையாக இருந்து வருகிறது. முன்னேற்றமடைந்த நாடுகளில் ஏற்படும் வேலையின்மைக்கும் பிற்பட்ட பொருளாதாரங்களில் காணப்படும் வேலையின்மைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு. முன்னேறிய நாடுகளில் உறுதித்தேவை மாறுவதற்கேற்ப நுகர்வு, சேமிப்பு, வருமானம், முதலீடு, உற்பத்தி, வேலை வாய்ப்பு ஆகியவைகளில் மாற்றம் ஏற்படுவதால், வாணிகச் சுழல் வேலையின்மை (cyclical unemployment) ஏற்படுகிறது. 1930-ல் ஏற்பட்ட பெரும் தொழில் மந்தத்தினால் இத்தகைய வேலையின்மை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஏற்பட்டது. மேற்கத்திய நாடுகளில் வேலையின்மையின் அளவை ஒரு குறித்த காலத்திற்குக் கணக்கிடுவது எளிதாகும். ஏனெனில், இந்நாடுகளில் உற்பத்தி, வேலைவாய்ப்பு போன்றவைகளின் புள்ளி விவரங்கள் அவ்வப்போது சீராக எழுதி வைக்கப்படுகின்றன. 1930-லிருந்து முன்னேறிய நாடுகளில் நிலையான பேரளவு வேலை வாய்ப்பைப் பெறுவதே அடிப்படைப் பொருளாதாரக் குறிக்கோளாக இருந்து வருகிறது. ஆனால், இந்தியப் பொருளாதாரத்தின் தனித்தன்மை ஏராளமான அளவு உருமறைந்த வேலை இன்மையை வேளாண்மை போன்ற துறைகளில் பெற்றிருப்பதாகும்.

வகைகள் : இந்தியாவில் பொதுவாக மூன்று வகை வேலையின்மை காணப்படுகிறது.

(1) வேளாண்மையில் வேலையின்மை. இது உருமறைந்த வேலையின்மை (Disguised unemployment) என்றும் அழைக்கப்படுகிறது.

(2) மத்திய வகுப்பினர் வேலையின்மை அல்லது கல்வி கற்ற வகுப்பினரிடையே வேலையின்மை.

(3) தொழில் வேலையின்மை.

கிராமப் பகுதிகளில் வேலையின்மைப் பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. கிராமப்புற வேலையின்மையை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. காலமற்ற வேலையின்மையும் 2. உருமறைந்த வேலையின்மையுமாகும். இந்தியப் பொருளாதாரத்தில் முழுவேலைக் கொள்கையைப் பற்றிய கருத்திற்கே இடமில்லை. முதலில் தேவைப்படுவது கால மாற்றத்தால் ஒரு பகுதி வேலையின்றி இருப்போருக்கு முழுநேர அல்லது முழுமையான (Fuller employment) வேலையை அளிப்பதாகும். முழுவேலை (Full employment) நிலையைச் சாதிக்க இந்தியாவிற்கு இன்னும் சில ஆண்டுகளாகும். நிலமற்ற குடியானவர்கள் வருடத்தில் 4 அல்லது 5 மாதங்கள் மட்டுமே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். மற்றக் காலங்களில் இவர்கள் வேலையின்றிக் காலத்தை வீணடிப்பதால் கால மாற்ற வேலையின்மை ஏற்படுகிறது. மக்கள் தொகை வளர்ச்சி வீதம் வேகமாக அதிகரிப்பதால் வேளாண்மைத்துறையில் மக்கள் தொகையின் அழுத்தம் பெருகி "உருமறைந்த வேலையின்மை"ப் பிரச்சினை எழுகிறது. மக்கள் தொகையின் வளர்ச்சி வீதம் அதிவிரைவில் அதிகமாவதாலும், வேளாண்மைத்துறைக்கு வெளியே வேறு துறைகளில் தேவையான வேலை வாய்ப்பு இல்லாமையாலும் பெரும்பாலோர் விவசாயத்தையே தங்கள் உயிர்த்தொழிலாக மேற்கொள்கின்றனர். இதனுல்தான், கிராமப் பகுதிகளில் "உருமறைந்த வேலையின்மை"ப் பிரச்சினை கடுமையாகக் காணப்படுகிறது. உண்மையில் எவ்வளவு குடியானவர்கள் தேவையோ அதைக் காட்டிலும் அதிகமானவர்கள் வேளாண்மைத்துறையில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் வேலை செய்வது போலத் தோன்றினுலும், உண்மையில் இவர்கள் வேலை செய்பவர்களல்லர். ஏனெனில், தேவைக்கும் அதிகமாக இருப்பவர்களை வேளாண்மைத் துறையிலிருந்து வேறு துறைகளுக்கு மாற்றிவிட்டால் விவசாய உற்பத்தி குறைவதில்லை. ராக்னர் நூர்க்ஸ் அவர்களின் கருத்துப்படி உற்பத்தி குறைவதற்குப் பதிலாகப் பெருகுகிறது என்பது அறியத்தக்கதாகும். மேலும், மாற்றப்பட்ட விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம், சாலை அமைத்தல், சிறு தொழில்கள் போன்ற துறைகளில் வேலை கொடுக்கப்பட்டால், நாட்டில் உற்பத்தி, வருமானம், சேமிப்பு, முதலீடு,

வேலை வாய்ப்பு, முதலாக்கம் ஆகியவை பெருக நல்ல வாய்ப்பு கிட்டுகிறது. எனவே, "உருமறைந்த வேலையின்மை"யில் சேமிப்பு வளம் மறைந்து கிடப்பதை அறியலாம். இத்தகைய வேலையின்மையால்தான், வேளாண்மைத் துறையில் திறமையற்ற குறைந்த உற்பத்தியாக்கம் இருந்து வருகிறது. "உருமறைந்த வேலையின்மையால் அல்லலுறுபவர்களின் சரியான எண்ணிக்கையைக் கணக்கிடுவது அவ்வளவு சுலபமல்ல. பொதுவாகக் கூறுமிடத்து இந்திய வேளாண்மைத்துறையில் மொத்த விவசாயிகளில் 25 முதல் 30 சதவீதம் வரை ஆக்கப் பணிகளில் உண்மையில் ஈடுபடவில்லை. எனவே, இந்தியாவின் வேலையின்மைப் பிரச்சினை உண்மையில் வேலைக் குறைவுப் பிரச்சினையுமாகும். எனவே, விவசாயத்துறையில் ஏராளமான குடியானவர்கள் பூஜ்ய இறுதிநிலை உற்பத்தியில் வேலை செய்து வருகிறார்கள். இதனால் ஏராளமான விவசாயிகளின் ஆக்கத்திறன் வீணடிக்கப்பட்டு வருகிறது. உருமறைந்த வேலையின்மையால் தலா வருவாய் உயிர்த்துறையாகிய வேளாண்மைத்துறையில் மிகக் குறைந்துள்ளது. மிகக் குறைந்த வருமானத்தில் சேமிப்பு என்பதற்கே இடமில்லை. சேமிப்பு குறைந்தால் உறுதித் தேவை, முதலீடு, முதலாக்கம், உற்பத்தி, வேலை வாய்ப்பு ஆகியவை குறைந்து வறுமை என்னும் கடுமையான வளையம் தோன்றுகிறது. இதனால் வேளாண்மைத்துறை வளர்ச்சியின்றி மாறா நிலையில் நின்று விடுகிறது.

அடுத்தபடியாக, படித்தவர்களுள் ஏற்பட்டுள்ள வேலையின்மை இந்தியாவில் மிகக் கடுமையாகவும் அபாயமாகவும் காணப்படுகிறது. படித்த வேலையற்றவர்கள் மனக்குறைவுடன் நிலை கலங்கிக் கூக்குரலிட்டால் அது நாட்டின் அமைதி, பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி, மக்களாட்சி ஆகியவற்றை என்றும் அச்சுறுத்தும் நிலையை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

வேலையின்மையின் அளவு

இந்தியாவின் வேலையின்மைப் பிரச்னையை ஆராயும்போது கவனிக்க வேண்டிய மற்றொரு கருத்து வேலையின்மையின் அளவைப் பற்றிய கணக்கீடாகும். இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் உற்பத்தி, வேலை, முதலீடு வருமானம், சேமிப்பு போன்றவற்றின் சரியான கணக்கு வழக்கு சீராக இல்லாததால், கிடைக்குா் புள்ளி விவரங்கள் மேல்மதிப்பாகவோ அல்லது கீழ்மதிப்பாகவோ தான் உள்ளது. எனவே, கிடைக்கும் புள்ளி விவரங்களை முழுவதுமாக சரியானவை

என்று நம்புவதற்கு இடமில்லை. சுய வேலைகளில் ஈடுபட்டுள்ளோரும் ஏராளமாய் இருப்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். வேலையில் அமர்த்தும் அலுவலகங்களில் பதிவாகும் எண்ணிக்கையைக் கொண்டுதான் பெரும்பாலும் வேலையின்மையைக் கணக்கிட வேண்டியுள்ளது. ஆனால், பெரும்பாலான தொழில்களில் விளம்பரமின்றியே தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கின்றனர். எனவே, தொழில் வேலையின்மையின் அளவையும் சரியாகக் கணக்கிட இயலவில்லை. வேலை மாற்றும் அமைப்புக்களால் வெளியிடப்பட்ட எண்களைக் கொண்டு ஆராயுமிடத்து, இந்தியாவில் நர்சுகள், பொறியாளர்கள் உள்பட எல்லாவகை வேலைப் பிரிவுகளிலும் வேலையின்மை சமீபத்தில் அதிகரித்துக்கொண்டே செல்வதை அறியலாம்.

வேலையின்மையின் காரணங்கள்

பல்வேறு காரணங்களால் இந்தியாவில் வேலையின்மை பெருகி வருகிறது. அவற்றுள் முக்கியமானவை வருமாறு:—

1. குறைவான பொருளாதார வளர்ச்சி

இந்தியப் பொருளாதாரம் பிற்பட்ட நிலையில் இருப்பதால் வளர்ந்து வரும் பேரளவு மக்கள் தொகையை வேலைகளில் ஈர்த்துக்கொள்ள வாய்ப்பும் வசதியும் குன்றியிருப்பதால் நாட்டில் வேலையின்மையின் அளவு அதிகரித்து வருகிறது.

2. போதாத பொருளாதார முன்னேற்றம்

இந்தியா வளர்ந்துவரும் பொருளாதாரமாக இருந்தாலும் அதன் வளர்ச்சி வீதம் மிக மிகக் குறைவு. இதனால், மக்கள் தொகைப் பெருக்கத்தின் அடிப்படையில் தொழில் செய்ய முயலுபவர்களின் அளிப்பின் அதிகரிப்பு வீதம் பொருளாதார வளர்ச்சி வீதத்தைவிட அதிகமாகும். இதனால், வேலையை விரும்பும் எல்லோருக்கும் வேலை வாய்ப்பை அளிக்க இயலவில்லை.

3. விரைவான மக்கள் தொகை வளர்ச்சி

கடந்த பத்து ஆண்டுகளாக அதிவேகமாகப் பெருகி வரும் மக்கள் தொகை எழுச்சியினால் வேலையின்மைப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. என்றும் பெருகிவரும் மக்கள் தொகையால் ஒரு முரண்பாட்டு நிலையும் ஏற்பட்டுள்ளது. வேலையின்மையின் அளவு மக்கள் தொகை எழுச்சியால் அதிகரித்துக் கொண்டே செல்லும்போது, திட்ட காலத்திலும்கூட வேலையின்மை அதிகமாகிக் கொண்டிருப்பது அதிசயிக்கத் தக்கதாய் உள்ளது.

4. வேளாண்மையைத் தவிர வேறு வேலை வாய்ப்பு இன்மை

மற்றத் துறைகளில் வேலை வாய்ப்புக்கள் இல்லாமையால் விவசாயத் துறையில்தான் மக்கள் தொகை அழுத்தம் அதிகமாகிறது. சுமார் 70 சத வீத மக்கள் வேளாண்மையையே தங்கள் உயிர்த்தொழிலாகக் கருதி வருகின்றனர். நிலத்தின் மேல் கூட்டம் அதிகமாவதால் குடியானவர்களில் 30 சத வீதம் வேலைக்குறைவு அல்லது உருமறைந்த வேலையின்மை காணப் படுகிறது.

5. பருவ கால வேளாண்மைத் தொழில்

நம் நாட்டில் விவசாயம் பருவ காலத்தில் தான் வேலை வசதியளிக்க முடியும். அதனால் பருவகாலம் முடிந்த பின் ஆறு மாதங்களுக்கு மேல் வேளாண்மைத்துறையில் வேலை இல்லாமையால் விவசாயிகளின் ஆக்க சக்தி வீணடிக்கப்படுகிறது.

6. கூட்டுக் குடும்ப முறை

கூட்டுக் குடும்ப முறையில் மக்கள் மதிப்பு வைத்திருப்பதால் உருமறைந்த வேலையின்மை அதிகரிக்கிறது. குடும்பப் பண்ணையிலோ அல்லது குடும்பத் தொழிலிலோ குடும்பத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களும் ஈர்க்கப்படுகின்றனர்.

7. கல்வி வளர்ச்சி

இந்தியப் பல்கலைக் கழகங்களிலிருந்து ஆண்டுதோறும் ஏராளமான பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். தொழில் நுட்ப முறையில்லாத பொதுக்கல்வி கற்ற ஏராளமானவர்கள் பேரவாவுடனும் பெரும் மனக்கோட்டைகளைக் கட்டிக் கொண்டும் பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் வெளியேறி வேலைச் சந்தையில் நுழைகின்றனர். இதனால் அவர்கள் வேலையின்றியே இருக்க வேண்டிய நிலை உள்ளது. அரசியல் கருத்துக்களின் அடிப்படையில் பெரும்பாலான மாநிலங்கள் கட்டணமின்றி, புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தை அமுலாக்கியுள்ளதால் இதுகாறும் வசதியில்லாத குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கல்வி பயின்று பின்வேலை தேடி அலைய வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. வேலைக்கு ஏற்ற கல்வி முறையை நாட்டில் அமுல் படுத்தினுல் ஒழிய, படித்தோர் வேலையின்மையைக் குறைக்க இயலாது.

8. குறைந்த தொழில் வளர்ச்சி

இந்தியாவில் தொழில் மயத்தின் முன்னேற்றம் மிகவும் குறைவு. அதனால் தொழிலாளர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்பு மிகவும் குறைவு.

9. தொழில் பின்னிறக்கம்

தொழில் பின்னிறக்கத்தால் ஏராளமானதொழில் பகுதிகள் ஆக்க சக்தியைப் பயன்படுத்தாமல் உற்பத்தியைக் குறைக்கின்றன. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்கிறது.

10. தொழிலாளர் பெயர்ச்சியின்மை

இந்தியாவில் தொழிலாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல விரும்புவது இல்லை. தங்கள் சொந்தக் கிராமத்திலோ நகரத்திலோ இருந்து கொண்டு பணி புரிய மக்கள் விரும்புகின்றனர். மொழி, ஜாதி, கலாசாரம், பழக்க வழக்கங்கள் ஆகியவைகளில் உள்ள வேறுபாட்டாலும் தொழிலாளர்கள் பெயர்ச்சியடைவது தடுக்கப்படுகிறது.

வேலையின்மையும் ஐந்தாண்டுத் திட்டங்களும்

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படைக் குறிக்கோள்களில் பிரதானமாக விளங்குவது வேலையின்மையைப் போக்கி வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதே யாகும். இருப்பினும், இந்தியத் திட்டங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பூரணமாக ஒழிக்கத் தவறி விட்டன. வேலைவாய்ப்புத் துறையில் திட்டங்கள் பெரும் தோல்வியே கண்டன. அது இந்தியப் பொருளாதார திட்டங்களின் பலவீன எல்லையாகும். இருப்பினும் வேலையின்மைப் பிரச்சினை என்பது நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல், கலாசார, தொழில் நுட்பக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அப்பிரச்சினையைத் தீர்ப்பது எளிதல்ல. சீரான மனித சக்தித் திட்டத்தினால் தான் இப்பிரச்சினையைத் தீர்க்க இயலும். இல்லையேல், அது தீவிரப் பிரச்சினையாக மாறும். அமுலாக்கப்பட்ட திட்டங்களின் அறிக்கைகள் மூலம் நாட்டின் வேலையின்மையின் அளவை அறிய இயலும். இரண்டாம் திட்டகால அறிக்கையின்படி இரண்டாம் திட்ட கால இறுதியில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 9 மில்லியனாகும். 1965-66-ல் மூன்றும் திட்ட கால இறுதியில் காணப்பட்ட வேலையற்றோரின் எண்ணிக்கை 12 மில்லியனாகும்.

நான்காம் திட்டம் 23 மில்லியன் வேலையற்றோரை ஏற்படுத்தும். எனவே, இத்தீவிரப் பிரச்சினையைத் தீர்க்க நான்காம் திட்டம் 35 மில்லியன் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டுவது இன்றியமையாததாகும். இதிலிருந்து இந்திய வேலையின்மைப் பிரச்சினையின் தன்மையையும் அளவையும் அறியலாம். வேலையில்லாதோரின் அளவு அதிகமாய் இருப்பதோடு, நாளுக்கு நாள் இந்த அளவு பெருகி வருவது அபாயத்திற்கு அறிகுறியாய் அமைந்துள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

முதல் ஐந்தாண்டுத்திட்டம் இப்பிரச்சினையைக் கீழ்க்கண்டவாறு கண்ணுற்றது. "மற்ற வளர்ச்சியுறு நாடுகளைப்போல் இந்தியாவிலும் நிலம், முதல் சாதனங்கள், மற்ற வளங்கள் ஆகியவற்றின் பற்றுக்குறையால் வேலையின்மை ஏற்படுகிறது. ஒரு பக்கம் பொருள்களுக்கும் பணிகளுக்கும் பற்றுக்குறை காணப்பட, மற்ெறாரு பக்கம் வேலை வாய்ப்புக்கள் போதாத நிலை தோன்ற அதன் விளைவாய் மித மிஞ்சிய உழைப்புச்சக்தி நாட்டில் காணப்படுகிறது. இந்தியாவின் வேலை இன்மைப் பிரச்சினை என்பது மிஞ்சிய மனித சக்தியை ஆக்க வேலைகளுக்காகப் பயன்படுத்தி, நாட்டில் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் அளவை அதிகரிப்பதுவேயாகும். இதன் அடிப்படை எல்லாவகைத் துறையிலும் நுகர்ச்சியின் அளவைப் பெருக்கி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுவே யாகும்". வேகமான மக்கள் தொகை வளர்ச்சியாலும், குடிசைத் தொழில்களின் மறைவினாலும் விவசாய மல்லாத தொழில்களின் குறைந்த வளர்ச்சியாலும் நாட்டில் வேலையின்மை ஏற்பட்டுள்ளதாக முதல் திட்ட அறிக்கை விளக்குகிறது. கீழ்க்கண்ட அட்டவணை மூலம் திட்ட கால வேலையின்மையின் நிலையை நன்கு உணரலாம்.

(மில்லியன்களில்)

	முதல் திட்டம்	இரண்டாம் திட்டம்	மூன்றும் திட்டம்	நான்காம் திட்டம்
திட்டத்தின் ஆரம்பகால வேலையின்மை	4·0	5·3	9·0	12·0
திட்டத்தின் இறுதிக்கால வேலையின்மை	5·3	9·0	12·0	35·0
திட்டகாலத்தில் ஏற்படுத்தப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை	4·5	6·5	14·0	—

நான்காம் திட்ட காலத்தில் வேலையின்மை 35.0 மில்லியன் என்பது எதிர்பார்க்கப்படுவதாகும்.

முதல் திட்டமும் வேலைக் கொள்கையும்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் வேலை வாய்ப்புகளை அதிகரித்தலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் ஒன்றாகும். முதல் திட்டம் சோதனை வகைத்திட்டமாய் இருந்ததாலும், முதல் முயற்சியானதாலும் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர ஆராய்ந்து தீர்வு காண இயலவில்லை என்பது உண்மையாகும். எனினும், 1953-ம் ஆண்டு இறுதியில் நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் முகத்தான் 11 அம்சத் திட்டம் ஒன்றை இந்தியத் திட்டக்குழு தயார் செய்தது. அத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

1. வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக நீர்ப்பாசன மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் பயிற்சிக் கூடங்களையும் வேலையையும் ஏற்படுத்துதல்.

2. சிறு தொழில்களை ஏற்படுத்த, தனி ஒருவருக்கோ அல்லது ஒரு கூட்டத்தினருக்கோ தனி உதவிகளை வழங்குதல்.

3. மனித சக்தி பற்றாக்குறையுள்ள துறைகளுக்குப் பயிற்சி பெற்றவர்களை அளிக்கப் பயிற்சி வசதிகளைப் பெருக்குதல்

4. பொதுத்துறை அல்லது அரசாங்கத் துறைகளில் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்குமாறு ஊக்குவித்தல்.

5. நகரங்களில் ஏராளமான முதியோர் பள்ளிகளைத் திறத்தலும் கிராமங்களில் ஓராசிரியர் பள்ளிகளைத் திறப்பதை ஊக்குவித்தலும்.

6. அதிக வேலை வாய்ப்பை அளிக்க வல்ல நாட்டுப் பெருக்கப் பணிகளை வேகமாக விஸ்தரித்தல்.

7. சாலைப் போக்குவரத்தை வளரச்செய்தல்.

8. பட்டிகளைச் சீராக்கும் திட்டங்களை அமுலாக்குதலும் நகரங்களில் குறைந்த வருமான வகுப்பாருக்கு வீடுகள் கட்டித் தருதலும்.

9. தனியார் கட்டிட வேலைகளை ஊக்குவித்தல்.

10. அகதிகள் நகரமைப்புக்குத் திட்டமிட்ட உதவிகளை வழங்குதல்.

11. பெருவாரியான வேலை வாய்ப்புக்களைப் பெருக்க வல்ல திட்டங்களை அமுல் படுத்துவதற்கு ஏற்ப, முதல் திட்டத்தைத் தேவையான அளவு மாற்றியமைத்தல் ஆகியவைகளாகும். முதல் திட்டம் வேலையின்மைப் பிரச்சினையை நேரடியாகத்தீர்க்க ஓரளவு தான் முடிந்தது. ஏனெனில், மொத்த முதலீடு தேவையான அளவு பெருகவில்லை. மக்களின் குறைந்த பட்ச தேவைகளின் அளவைக் காட்டிலும் முதலாக்கம் குறைந்து பிற்பட்டது. அதன் முடிவாக, 11 அம்ச வேலைத் திட்டம் பூரணமாகப் பலனளிக்க வில்லை. எனவே, முதல் திட்ட காலத்தில் வேலை வாய்ப்புக்கள், மனித வேலை சக்தியின் அதிகரிப்பைக் காட்டிலும் மிகவும் பிற்பட்டுக் காணப்பட்டன. முதல் திட்டம் படித்த வேலையில்லாதவர்களின் பிரச்சினையைத் தீர்க்கச் சீரான நேர்க் கொள்கை ஒன்றையும் அமைக்கவில்லை. முதல் திட்ட மத்திய காலப் பகுதியில் வேலையின்மைப் பிரச்சினை மிகவும் தீவிரமடைந்தது. அதனால் 1953–54-ல் உழைப்புச் செறிவுத் திட்டங்கள் (Labour Intensive schemes) புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. முதல் திட்டம் 4·5 மில்லியன் வேலையில்லாதவர்களுக்கு வேலை அளித்தது. மேலும், இத்திட்டத்திற்கு முன் வேலையற்று இருந்த 3·3 மில்லியன் மக்களுக்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தியது. ஆனால், நகரப்பகுதிகளில் 2·5 மில்லியனும் கிராமப் பகுதிகளில் 2·8 மில்லியனுமாக மொத்தம் 5·3 மில்லியன் மக்களுக்கு வேலை வாய்ப்புகளைக் கொடுக்க இயலாமல் விட்டு விட்டது.

இரண்டாம் திட்டமும் வேலைக் கொள்கையும்

வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதில் இரண்டாம் திட்டம் மும்முனைப் பணியை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. முதலாவதாக, நகரங்களிலும் கிராமப் பகுதிகளிலும் ஏற்கனவே இருந்த வேலையற்றோருக்கு வேலை கொடுத்தாக வேண்டும். இரண்டாவதாக, மேற்கொண்டு ஆண்டுக்கு 2-மில்லியன் பேர்களாக அதிகரிக்கும் வேலையற்றோருக்குப் புது வேலைகளை ஏற்படுத்தியாக வேண்டும். மூன்றாவதாக, கிராமாந்திர வேலைகள், நகரங்களில் வீட்டு வேலை செய்பவர்கள் ஆகியவர்களின் வேலைக் குறைவு நிலையைப் போக்கி, முழுநிலை அல்லது முழுநேரம் வேலை வாய்ப்புக்களை அளிக்க வசதிகளை அதிகரிக்க வேண்டும். மனித உழைப்பு சக்தி புதிதாக வேலைச் சந்தையில் நுழைவது இத்திட்ட காலத்தில் 10-மில்லியன் என்று

மதிப்பிடப்பட்டது. இதில் நகரங்களில் 3·8 மில்லியனும் கிராமப் பகுதிகளில் 6·2 மில்லியனும் என்று கணக்கிடப்பட்டது. எனவே, இரண்டாம் திட்ட ஆரம்ப கட்டத்தில் வேலையற்று இருந்த 5·3 மில்லியன் மக்களுக்கும், திட்ட காலத்தில் புதிதாக வேலையற்று இருக்கும் 10-மில்லியன் பேருக்கும் இரண்டாம் திட்டம் வேலை கொடுக்க வேண்டிய தலையாய பொறுப்பு ஏற்பட்டது. ஆனால், இதில் இத்திட்ட காலத்தில் 9-மில்லியன் வேலைகளைத்தான் ஏற்படுத்த முடியும் என்றும் மீதி உள்ளதைப் பின்வரும் திட்டங்கள் கவனிக்கலாம் என்றும் கருதப்பட்டது.

இரண்டாம் திட்ட காலத்தில் திட்டக் குழு பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையே ஒரு சுமுகமான சமநிலையை ஏற்படுத்த வேண்டிய சிரமத்திற்குள்ளானது. ஏனெனில், வளர்ச்சி, வேலை வாய்ப்பு ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று நேர் மாறானவையே. அதாவது நாட்டு வளர்ச்சியைக் கருதி கனரகத்தொழில்களாகிய இரும்பு, எஃகு போன்ற முதல் செறிவுள்ள துறைகளில் முதலீட்டைப் பெருக்கினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெருகும். ஆனால், வேலைவாய்ப்பு வெகுவாகப் பெருகாது. இதனால் வேலையின்மை நீடிக்கும் இதற்குப் பதிலாக உழைப்புச் செறிவுள்ள சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்ற குறைந்த முதலீடு கொண்ட துறைகளில் முதலீட்டை அதிகரித்தால் வேலை வாய்ப்பு பெருகும். ஆனால், வேண்டிய அளவு வளர்ச்சி பெருகாது. எனவே, வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் மத்தியில் ஒரு சம நிலையை ஏற்படுத்துதல் இக்கட்டான பிரச்சினையாகும். ஆனால், திட்டக் குழு நிபுணர்கள், இரண்டாம் திட்ட காலத்தில் முதலாவதாக வளர்ச்சியைப் பெருக்க, கனரகத் தொழில்களில் முதலீடு செய்தபின் எஞ்சியிருக்கும் மூலதனத்தைச் சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக முதலீடு செய்தால் வேலைவாய்ப்பும் பெருகும். பெருகிவரும் மக்கள் தொகைக்கு நுகர்வுப் பொருள்களின் அளிப்பும் அதிகரிக்கும் என்று கருதித் திட்டத்தை அமுலாக்கினார்கள். வேலை வாய்ப்பைப் பெருக்கச் சிறு தொழில்களில் முதலீடு மேற்கொண்டால் அதற்கேற்றாற்போல் வேலைவாய்ப்போ, உற்பத்தி அதிகரிப்போ ஏற்படுவதில்லை. ஏனெனில், பெரும்பாலான சிறு தொழில்களில் மிகப் பழைய உற்பத்தி முறையும், பழைமைத் தன்மையுடைய இயந்திரங்களும், தொழில் நுட்பக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இரண்டாம் திட்ட காலத்தில் எதிர்பார்த்த அளவு வேலை வாயப்புக்கள் ஏற்படாமல் திட்ட ஆரம்ப கட்டத்தில் இருந்த வேலையின்மையின் அளவைவிட, திட்ட இறுதியில் வேலையின்மைப் பிரச்சினை அதி

கரித்தது. இரண்டாம் திட்டகாலத்தில் புதிதாக ஏற்படுத்தப் பட்ட வேலைவாய்ப்புக்கள் சுமார் 8-மில்லியன் ஆகும். இதில் 6·5 மில்லியன்பேர் விவசாயத்துறைக்கு வெளியே வேலை பெற்ற வர்களாவர். இரண்டாம் திட்ட கால இறுதியில் வேலையற்ற எஞ்சியவர்கள் சுமார் 9-மில்லியன்பேர் ஆவர். இத்திட்டகாலத் தில் அளிக்கப்பட்ட வேலை பெரும்பாலும் "துயர் துடைப்பு வேலை" (Relief employment) யாகவே அமைந்தது. "பொரு ளாதார வேலை" கொடுக்க இத்திட்டத்தால் இயலவில்லை. துயர் துடைப்பு வேலை என்பது வேலையில்லாதோருக்கு ஏதோ ஒரு வேலையைக் கொடுத்து அவர் துயரத்தைப் போக்குவ தாகும். இதனால் நாட்டு வருவாயில் அதிகரிப்புக்கு வாய்ப் பில்லை.

மூன்றும் திட்டமும் வேலை வாய்ப்பும்

மூன்றும் திட்டம் வேலையின்மைப் பிரச்சினையின் மேல் தீவிர பார்வையைச் செலுத்தி இந்திய தற்போதைய நிலையில் "வேலையின்மை" என்பதன் இலக்கணத்தைத் தெளிவாய் விளக்கியது. ஏராளமானவர்கள் இந்தியாவில் சுய தொழில் செய்து வருதல் போன்ற காரணங்களால் நாட்டில் அதிக அளவு வேலைக் குறைவு இருந்துவருவதை இவ்விலக்கணம் தெளிவுபடுத்துகிறது. 1961-1976–வரை உள்ள பதினைந்து ஆண்டுகாலத்தில் தொழில்சக்தி எவ்வளவு பெருகும் என்பதை அறியஆராய்ச்சிநடத்தித் திட்டமொன்றை மூன்றும்திட்டம்உரு வாக்கியது. இப்பதினைந்து ஆண்டு காலத்தில் வேலை தேடி அலைபவர்கள் 70-மில்லியன் பேர் என்று மதிப்பிடப்பட்டது. இதில் சுமாராக 17-மில்லியன் பேர் மூன்றும் திட்டத்தையும், 23-மில்லியன் பேர் நான்காம் திட்டத்தையும், 30-மில்லியன் பேர் ஐந்தாம் திட்டத்தையும் சேர்ந்தவர்கள். முதல் இரண்டு ஐந் தாண்டுத் திட்ட கால அனுபவத்தை ஆராய்ந்து பார்க்கு மிடத்து பொதுவாக விவசாயமல்லாத வேறு துறைகளில்தான் வேலை வாய்ப்புக்கள் பெருகியுள்ளன.

இரண்டாம் திட்ட இறுதியில் வேலையற்றோர் 9-மில்லியன் பேர் இருந்தனர். மூன்றும் திட்ட காலத்தில் அதிகரிக்கும் வேலையின்மையின் அளவு 17-மில்லியன் என்று மதிப்பிடப் பட்டது. இதில் 14-மில்லியன் பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும் என்று கருதப்பட்டது. உண்மையில் மூன்றும் திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வேலையின் அளவு 14·5-மில் லியன் என்று மதிப்பிடப்பட்டது. இதில் 10·5 மில்லியன் பேர் விவசாய மல்லாத துறைகளையும் 4-மில்லியன் பேர் வேளாண்

மைத்துறையையும் சேர்ந்தவர்கள். நான்காம் திட்ட ஆரம்ப கட்டத்தில் சுமாராக 9-முதல் 10-மில்லியன் பேர் வேலையில்லாதவர்களாய் இருப்பார்களெனக் கணக்கிடப்பட்டுள்ளது. மூன்றும் திட்ட காலத்தின் முக்கிய அம்சம் யாதெனில் இக்காலத்தில் கிராம வேலைத்திட்டங்கள் (Rural Works Programme) அமைக்கப்பட்டன. மற்றத் திட்டங்களுடன் சிறு தொழில்கள் மூலமாக வேலை வாய்ப்புக்களைப் பெருக்க இத்திட்ட காலத்தில் கிராமப் பணித்திட்டங்கள் உருவாக்கப் பட்டன.

நான்காம் திட்டமும் வேலை வாய்ப்பும்

முன்னேறிய நாடுகள் தங்களின் முழு வேலை நிலையைப் பேணிப் பாதுகாக்க முயலும் போது இந்தியாவின் நான்காம் திட்டம் வளர்ந்துவரும் வேலையின்மை, வேலைக்குறைவு ஆகிய அச்சுறுத்தும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலை உள்ளது. முழு வேலை நிலை என்பது 3-சத வீத வேலையின்மையைக் குறிக்கிறது. ஆனால், இங்கிலாந்து போன்ற நாடுகளில் வேலையின்மை நீண்ட நாட்களாக சராசரி 1½ சத வீதத்திற்கும் சற்று மேலாக இருந்தது. தற்போது அது அதிகரித்துள்ளது. எனினும், இந்தியா போன்ற நாடுகளில் முழு வேலை நிலை (Full Employment) ஏற்பட இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என்பதைத்தான் முதல் மூன்று திட்டங்களும் அறிவுறுத்துகின்றன. மேற்குவங்காளம் போன்றமா நிலங்களில் வேலையின்மை மிகவும் கொடிய நிலையில் இருப்பதால், அங்கு அமைதியின்மையும், ஒழுக்கக் கேடும் ஏற்பட்டு வருகிறது. ஜனவரி-30, 1971-ல் மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையின்படி இந்தியாவில் மொத்தம் 41-லட்சத்து 68-ஆயிரம் பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இது 1970-ம் ஆண்டைவிட 20-சதவீதம் அதிகம். 1970-ம் ஆண்டு வேலை இல்லாமல் இருந்தவர்கள் 34-லட்சத்து 51-ஆயிரம் பேர். வேலையில்லாத 41-லட்சம் பேர்களில் ஆண்கள் 36-லட்சம், பெண்கள் 5-லட்சம் ஆவர்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்ட நகலின் விளக்கத்தின்படி நான்காம் திட்ட காலத்தில் புதிதாக வேலை தேடுபவர்களின் எண்ணிக்கை 23 மில்லியன் ஆகும். நான்காம் திட்ட காலத்தில் விவசாய மல்லாத துறைகளில் சுமார் 14 மில்லியன் பேருக்கும் விவசாயத்துறையில் சுமார் 4·5 முதல் 5 மில்லியன் பேருக்குமாக மொத்தம் 18·5 முதல் 19 மில்லியன் பேர்கள் வரைக்கும் வேலைகள் கொடுக்க இயலும் என்று முன்மொழியப் பட்டுள்ளது. தற்போது இருந்துவரும் தொழில் பின்னிறக்க மாறுபாடுகளால் வேலையின்மை மேலும் அதிகரிக்கும் நிலையி

லுள்ளது. எனவே, நான்காம் திட்ட காலத்தில் வேலை தேடு வோர்களின் எண்ணிக்கை மொத்தம் 35 மில்லியன் ஆகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் 15 மில்லியன் பேர்களை நான்காம் திட்டம் வேலை கொடுக்க இயலாமல் விட்டு விடும் நிலையில் உள்ளது. இத்திட்ட காலத்தில் தொழில் செறிவுத் திட்டங்களை மேற் கொண்டு வேலைவாய்ப்பைப் பெருக்க அரசு கருதியுள்ளது. தொழிலாளர்களுக்குப் பயிற்சியும் வசதிகளும் செய்து கொடுக்க ரூ. 37·11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசும் மாநில அரசுகளும் நாட்டில் வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்கத் தடையாய் இருக்கும் கொள்கைகளைத் தகர்த்தெறிய வேண்டு மென்றும் திட்ட நகலில் கூறப்பட்டுள்ளது.

முடிவுரை : மேற்கண்ட விளக்கத்திலிருந்து இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் வேலையின்மைப் பிரச்சினையைத் திடமாகத்தீர்ப்பதில் வெற்றி பெறவில்லை எனபதை அறியலாம். நம்முடைய வேலைக்கொள்கையில் அநேக முரண்பாடுகள் உள்ளன. திட்ட நிபுணர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்க செயல்முறைகளைத் தீவிரமாய்க் கையாண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்திய வேலையின்மைப் பிரச்சினையில் உருமறைந்த வேலையின்மையைப் போக்க மேற்கொண்ட வகைகளும் வெற்றி பெருதது கவனிக்கத் தக்கதாகும். ஆனால், இப்பிரச்சினையைக் காலம் தாழ்த்தாது உடனே கவனித்து தேவையான வழிமுறைகளைக் கையாள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க இரு முறைகளில் போராட வேண்டும். ஒன்று மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தீவிரமாய் கட்டுப்படுத்துதலும், மற்ருென்று பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகரித்தலுமாகும். பொருளாதார வளர்ச்சியின் வீதத்தை அதிகரிக்கச் சீரமைக்கப்பட்ட உற்பத்தி முறை, நீர்ப்பாசன வசதிகள், இயந்திர மயம், நிலச் சீர் திருத்தங்கள், நிலத்தில் அளவில் அதிகரிப்பு, கூட்டுறவுப் பண்ணைகள் போன்ற முறைகளால் வேளாண்மைப்புரட்சியை ஏற்படுத்த வேண்டும். (2) தொழில் மயத்தின் அளவை வேகப் படுத்த வேண்டும் (3) உழைப்புச் செறிவு முறையால் குடிசைத் தொழில், சிற்றளவுத் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியைப் பெருக்க வேண்டும் (4) உயிர்த்தொழில் துறையிலிருந்து விலக்கப்பட்ட மிஞ்சிய தொழிலாளர்களை, கிராம, சமுதாய வளர்ச்சித்திட்டங்களில் ஏர்த்துக்கொள்ள வேண்டும். சுருங்கக்கூறின், வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்க மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்திப் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பிரச்சினையைத் தீர்க்க அரசும் பல செயல் முறைகளைக் கையாண்டு வருகிறது. 1970-71ம் ஆண்டுக்கான டெல்லி சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் வேலையின்மையைப் போக்க ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டு எல்லா மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது வரவேற்கத்தக்கதாகும்.

பாகம் IV

வேளாண்மைப் பிரச்சினைகள்

13. வேளாண்மையும் அதன் முக்கியத்துவமும்

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியே அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றது என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. அதனால்தான் வேளாண்மை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல் சில சமயங்களில் தொழில்களின் வளர்ச்சிக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. ஆனால், அதே நேரத்தில் குறைந்த பொருளாதார வளர்ச்சி, தடைப்பட்ட தொழில் வளர்ச்சி ஆகியவைகளின் விளைவாகத்தான் வேளாண்மையும் பிற்பட்ட நிலையில் இருக்கும். நாட்டின் சரிசமமான பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மையும், தொழில் துறையும் ஒரே சமயத்தில் சரிசமமாக வளர்ச்சியடைய வேண்டியது இன்றியமையாததாகும். இன்று இந்தியப் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாய் அமைந்திருப்பது இந்திய வேளாண்மையாகும். கடந்த இருபது ஆண்டுகளாக, நாடு தொழில்மயமாக்கப்பட்டும் இன்னும் விவசாயமே பெரும்பாலான இந்திய மக்களின் அடிப்படைத் தொழிலாய் அமைந்துள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மையின் முக்கியத்துவத்தை அது பெற்றுள்ள பங்கிலிருந்து அறியலாம்.

வேளாண்மையின் முக்கியத்துவம்

(1) தேசிய வருமானத்தில் வேளாண்மையின் பங்கு
(Agriculture and National Income)

இந்திய வேளாண்மையும் அதைச் சார்ந்த தொழில்களும் மொத்த தேசிய வருவாயில் சுமார் பாதியை அளிக்கின்றன. இதைக் கீழ்க்கண்ட அட்டவணை தெளிவாக்குகிறது.

(நடப்பு விலைகளில்)

வருடம்	தேசிய வருவாய் (கோடி ரூபாய்களில்)	வேளாண்மை வருவாய் (கோடி ரூபாய்களில்)	தேசிய வருவாயில் வேளாண்மையின் சதவிகிதம்
1948–49	8,650	4,250	49·1
1950–51	9,530	4,890	51·3
1960–61	13,450	6,710	49·6
1963–64	17,560	8,475	47·9
1966–67	24,160	11,600	47·5

ஆதாரம்: மத்திய புள்ளி விவர நிறுவனம்;

மேற்கூறிய அட்டவணையிலிருந்து வேளாண்மைக்கு தேசிய வருவாயிலிருந்து கிடைக்கும் தொகையையும், தேசிய வருவாயில் வேளாண்மையின் பங்கு படிப்படியாகக் குறைந்து கொண்டு வருவதையும் அறியலாம். நாட்டின் இரண்டாம், மூன்றும் துறைகளின்(Secondary and Tertiary sectors)வேகமான வளர்ச்சியால் வேளாண்மையின் பங்கு குறைந்து வருவது உண்மையாகும். வேளாண்மையில் வருவாய் குறைவதிலிருந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் அளவும் இயல்பும் தெரிகிறது. முதல் உலக யுத்த காலம் வரைக்கும் (1914-18) தேசிய உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 65% மாக இருந்தது; 1925—29-க்கும் இடைப்பட்ட காலத்தில் 57% மாக இருந்தது; 1931-ல் பெரிய தொழில் மந்தம் ஏற்பட்ட காலத்தில் 53% மாகவும் குறைந்தது. தற்போது 47% மாக உள்ளது. மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது இந்திய வேளாண்மையின் வருமான அளிப்பு அதிகமாகவே உள்ளது. இந்தியாவில் வேளாண்மை மொத்த தேசிய வருமானத்தில் 47% அளிக்கிறது. ஆனால், இது இங்கிலாந்தில் மொத்த தேசிய வருவாயில் 4% மாகவும், ஐக்கிய அமெரிக்காவில் 5% மாகவும், கானடாவில் 7%மாகவும், ஆஸ்திரேலியாவில் 13% மாகவும் உள்ளது. ஒரு நாடு அதிக வளர்ச்சியடைந்த நாடாக இருந்தால், அந் நாட்டின் மொத்த தேசிய வருவாயில், வேளாண்மையின் பங்கு குறைவாகவே உள்ளது. இந்தியா இன்னும் விரைவான தொழில் வளர்ச்சி ஏற்படாத நாடாக இருப்பதால் வேளாண் மைத் துறையே ஆதிக்கம் பெற்றுள்ளது.

(2) வேளாண்மை மக்களின் உயிர்நாடி

இந்திய மக்களில் பெரும்பாலோர்க்கு வாழ்வின் ஆதாரமாக இருப்பது வேளாண்மைத் தொழிலேயாகும். இந்தியாவில் பத்தில் எழுவர் வேளாண்மையையே நம்பி உயிர் வாழ்கின்றனர். இவ்விகிதம் மிகவும் அதிகமானதாகும். 1901-க்கும் 1961-க்கும் இடைப்பட்ட காலத்தில் வேளாண்மையை நம்பி வாழ்ந்தோரின் விகிதம் மாருமல் ஒரே நிலையில் இருந்திருக்கின்றது. இங்கிலாந்து ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, கானடா போன்ற செல்வ நாடுகளில் வேளாண்மையையே நம்பி வாழும் மக்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 20 சதவீதத்திற்கும் குறைவாகும்; சில நாடுகளில் 5 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். செல்வ நாடுகளில் வேளாண்மையையே நம்பி வாழ்வோரின் விகிதம் படிப்படியாகக் குறைந்துகொண்டே செல்ல, இந்தியாவில் ஏறக்குறைய ஒரே நிலையில் இருந்து வருகின்றது.

3. வேளாண்மையும் வேலை வாய்ப்பும் (Agriculture and Employment)

நாட்டிலுள்ள ஒரு துறையின் முக்கியத்துவம் அத்துறையில் பணியாற்றும் மக்கள் தொகையைப் பொறுத்ததாகும். இந்தியாவில் வேளாண்மைத் துறையில் பணி புரியும் மக்கள் தொகையின் விகிதம் (Proportion of working population) மிகவும் அதிகமாகஇருக்கிறது. மேலும் இந்தியாவில் ஒவ்வொரு கணக்கெடுப்பின் போதும் வேளாண்மையில் பணி புரியும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உதாரணமாக, இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் வேளாண்மையில் பணி புரிந்தவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 62·5% மாகும். ஆனால், இது 1921ல் 68·5% மாகவும், 1961-ல் 70·5% மாகவும், அதிகரித்தது. மற்றத் தொழில் துறையில் அதிகமான வேலை வாய்ப்புகள் கிடைக்காத காரணத்தாலும், மக்கள் தொகையின் அதிகரிப்பாலும் வேளாண்மையில் பணி புரியும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் மற்றத் தொழில்துறைகள் விரைவாக வளர்ச்சியடைவதால் வேளாண்மையில் பணிபுரியும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. எடுத்துக் காட்டாக, இங்கிலாந்தின் மொத்த மக்கள் தொகையில் 5 சதவீதத்தினர் மட்டும் வேளாண்மையில் பணி புரிகின்றனர். அமெரிக்காவில் 12 சத வீதத்தினரும், ஆஸ்திரேலியாவில் 16 சத வீதத்தினரும் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்

ளனர். ஆனால், பிற்பட்ட நாடுகளாகிய எகிப்தில் 65 சதவீதத்தினரும் மலேசியாவில் 64 சதவீதத்தினரும், பிரேஸிலில் 58 சதவீதத்தினரும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர்.

4. தொழில் வளர்ச்சிக்கு வேளாண்மை உயிர்நாடி
(Interdependence of Agriculture and Industry)

வேளாண்மையும் தொழில் துறையும் ஒன்றையொன்று சார்ந்திருந்தால்தான் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கச் சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியின் விளைவால் ஏராளமான இயந்திரங்கள், கருவிகள், வேளாண்மை சாதனங்கள், இரசாயன உரங்கள் போன்றவை வேளாண்மை உற்பத்திக்கு அடிப்படையாய் அமைந்தன. இதனால் வேளாண்மைப் புரட்சி ஏற்பட்டுத் தொழில் மயமாக்கப்பட்ட இங்கிலாந்து உணவு தானியங்களில் தன்னிறைவு பெற்றது. அதே போல், வேளாண்மைத் துறை வளர்ச்சியடைந்து தொழில் துறைக்குத் தேவையான பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள் போன்ற உள்ளீடுகளைப் போதுமான அளவு அளிக்க வாய்ப்புக் கிடைத்தது. இதன் விளைவாக, வேளாண்மைத் துறையும் தொழில் துறையும் விரைவான வளர்ச்சி அடைந்தன. இதன் விளைவாக, நாட்டில் வருவாயும், வேலை வாய்ப்பும் அதிகரித்து மொத்த தேசிய வருவாய் பெருகியது. எனவே, வேளாண்மையும், தொழில்துறையும் ஒன்றையொன்று சார்ந்திருந்தால் தான், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக, நிலையாக அதிகரிக்கும். இந்திய வேளாண்மைத் துறை சீரான முறையில் சிறப்பான வளர்ச்சியை அடைந்தாலொழிய இந்தியத் தொழில்கள் விரைவாக வளர்ச்சி பெற இயலாது. ஏனெனில், இந்தியாவின் பிரதான கனரகத் தொழில்கள் போதுமான அளவு தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெறுவதற்கு வேளாண்மையையே நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது. உதாரணமாக, பருத்தி நெசவு, சணல், சர்க்கரை, வனஸ்பதி போன்ற தொழில்கள் மூலப் பொருள்களைப் பெற நேரடியாக வேளாண்மைத் துறையையே நம்பி வருகின்றன. தேயிலை, காப்பி, ரப்பர் போன்ற தோட்டத் தொழில்களும் நேரடியாக வேளாண்மைத் துறையையே சார்ந்துள்ளன. மறைமுகமாக வேளாண்மையைச் சார்ந்துள்ள பிற ஏராளமான தொழில்களும் உள்ளன. கைக்குத்தல், எண்ணெய் எடுத்தல், கைத்தறி நெசவு, கதர்த்துணி போன்ற தொழில்கள் வேளாண்மையைச் சார்ந்தவைகளாகும். காகிதம், தோல் பதனிடுதல், தீப்பெட்டி, ரசாயனப் பொருள்கள் போன்ற தொழில்கள்,

காட்டுத் தொழில், கால்நடை வளர்ப்பு, மீன்பிடிந்தல் போன்ற வேளாண்மைத்தொழில்நடவடிக்கைகளைச்சார்ந்தவைகளாகும். இரும்பு, எஃகு, ரசாயனப் பொருள்கள், இயந்திர சாதனங்கள், பொறியியல், ஆகாயவிமானம் போன்ற ஏராளமான நவீனத் தொழில்கள் தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை வேளாண்மைத் துறையிலிருந்து பெருவிட்டாலும், வேளாண் மைத் துறைக்கு இன்றியமையாத இரசாயன உரங்கள், இயந் திரங்கள், மற்ற சாதனங்கள் போன்ற வேளாண்மை உள்ளீடு களை அளித்து வருகின்றன. எனவே, வேளாண்மையும் தொழிலும் ஒன்றையொன்று நேர் சார்புடையவைகளாகும். இறுதியாக, இந்தியா தொழில் மயமாக்கப்பட வேளாண்மைத் துறையானது சிறப்புத் தேர்ச்சியுடன் வளர்ச்சியடைந்து பொருளாதார வளர்ச்சிக்குத் தன் பங்கினைத் தொடர்ந்து சீரான முறையில் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாத தாகும்.

5. வேளாண்மையும் இந்திய அயல்நாட்டு வர்த்தகமும்

இந்திய வேளாண்மைத் தொழிலின் மூலமாக நாட்டில் சிறப்பான முறையில் அயல்நாட்டுச் செலாவணி கிடைத்து வருவதிலிருந்து அதன் முக்கியத்துவத்தை அறியலாம். தேயிலை, எண்ணெய் வித்துக்கள், புகையிலை, வாசனைத் திரவியங்கள் போன்ற வேளாண்மைப் பொருள்கள் இந்திய ஏற்றுமதிப் பொருள் பட்டியலில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. ஏற்றுமதி செய்யப்படும் வேளாண்மைப் பொருள்களின் விகிதம் இந்திய மொத்த ஏற்றுமதியில் சுமார் 50-சதவீதமாகும். பருத்தி, சணல் போன்ற வேளாண்மைப் பொருள்களால் உற் பத்தி செய்யப்பட்ட செய் பொருள்களின் ஏற்றுமதி மொத்த ஏற்றுமதியில் 20 சதவீதமாகும். எனவே, வேளாண்மைத் துறையின் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் மொத்த விகிதம் இந்திய ஏற்றுமதியில் 70 சதவீதமாகும். மேலும், இந்திய வேளாண்மைப் பொருள்களின்ஏற்றுமதி வர்த் தகம் ஏராளமான நாடுகளுடன் சிறந்த முறையில் பரவலாக் கப்பட்டுள்ளது. வேளாண்மை ஏற்றுமதியின் மூலம் இந்தியா விற்கு மொத்த அந்நிய நாட்டுச் செலாவணியில் 70% கிடைக்கிறது. இவ்விகிதத்தில் சுமார் 20%-ஐ மட்டும் வேளாண் மைத்துறை செலவிடுகிறது. அதனால் அந்நிய நாட்டுச் செலா வணியில் சுமார் 50 சதவீதத்தைமட்டும் வேளாண்மைத் துறை அளிக்கிறது. சமீப காலத்தில் இந்திய ஏற்றுமதியின் மதிப்பு நிலையாக அதிகரித்து வருகிறது. இது நாட்டின் பொருளா

தார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். நாட்டை விரைவாகத் தொழில் மயமாக்க அவசியமான இயந்திரங்கள், மூலப் பொருள்கள் போன்றவைகளின் இறக்குமதித் தேவை களைச் சரிக்கட்ட இந்திய வேளாண்மைத்துறை பெரும் துணை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். வேளாண்மைத் துறையில் சில சமயங்களில் ஏற்படும் தோல்வியினால் இந்தியப் பொருளாதார நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப் படுகின் றன. உணவு தானியங்களின் தட்டுப்பாடு, நாட்டில் பொருள் களின் விலைகள், கூலிகள், மற்ற உற்பத்திச் செலவுகள் ஆகிய வற்றை அதிகரிக்கிறது. இதனால் மிகவும் இன்றியமையாத பொருள்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உணவு தானி யங்களை அரசு இறக்குமதி செய்யப்பட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படுகிறது.

6. வேளாண்மையும் இதர பணிகளும்
(Agriculture and the tertiary sector)

வர்த்தகம், போக்குவரத்து பிற பணிகள் போன்றவை களை உட்கொண்டது மூன்றும் துறையாகும். இத்துறைகளின் வளர்ச்சிக்கு வேளாண்மை சிறந்த முறையில் துணை புரிகிறது. இந்தியப் போக்குவரத்துத் துறைக்குப் பிரதான ஆதரவாக விளங்கி வருவது வேளாண்மைத் துறையாகும். ரயில்வே போக்கு வரத்தும், சாலைப் போக்கு வரத்தும் வேளாண்மைப் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வதனால் அதிக வருவாயைப் பெறுகின்றனர். வேளாண்மைப் பொருள்களில்தான் பெரும்பாலும் உள்நாட்டு வர்த்தகம் நடை பெறுகிறது. வேளாண்மை செய் பொருள் தொழில்களுக்கும் உதவி புரிகிறது. விவசாயிகளின் வருமா னங்கள் அதிகமாய் இருக்கும்பொழுது அவர்களின் வாங்கும் சக்தியும் அதிகமாகிறது. இதில் ஒரு பகுதி உற்பத்தி செய்யப் பட்ட நுகர்ச்சிப் பொருள்களை வாங்குவதற்காகவும் ஒதுக்கப் படுகிறது. இதனால் செய் பொருள்களின் தேவை அதிகரித்து நல்ல லாபம் கிடைக்கிறது. எனவே, விவசாயிகளின் செழிப் பான நிலையினால் தொழில்களும் செழிப்பான நிலையைப் பெறு கின்றன. அதைப் போலவே உணவு தானிய விளைச்சல் குறைந்தால் தொழில் மந்த நிலையை அடைகிறது. இறுதியாக, வேளாண்மைச் செழிப்பினால்தான் நேராகவும் மறைமுக மாகவும் அரசாங்க வருவாய் அதிகரிக்கிறது. மாநில அரசு களின் நிதி நிலை பெருமளவில் வேளாண்மைத் துறையின் செழிப்பைச் சார்ந்திருக்கிறது. இந்தியப் பொருளாதாரத்திற்கு

வேளாண்மைத் துறை முதுகெலும்பாகவும், இருதயமாகவும் இருக்கிறது என்பது தெளிவாகிறது. இந்தியப் பொருளாதா ரத்தின் செழிப்பு பெரிதும் இந்திய வேளாண்மைச் செழிப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். வேளாண்மைச் செழிப் பினுல் நிலையான நிதித்துறை நடவடிக்கைகள் ஏற்படுகின்றன. வேளாண்மைத் துறையின் செழிப்பு சமூக அரசியல் முக்யத் துவம் வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறையின் ஆதிக்கத்தால் தான் நாட்டில் குறைந்த தலா வருவாய் இருக்கிறது என்பது சிலரின் கருத்தாகும். அவர்களின் கருத்துப்படி இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மை நடவடிக்கைகளில் ஆதிக் கத்தைக் குறைத்தாலொழிய போதுமான அளவு தலா வருவாய் அதிகரிக்க வாய்ப்பில்லை என்பதாகும். இந்தியா பிற்பட்ட பொருளாதார நிலையில் இருப்பதற்கு வேளாண்மைத் துறை யின் ஆதிக்கமே காரணம் என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனுல், உண்மையில் நாட்டின் பிற்பட்ட பொருளாதார நிலை யின் விளைவாகத்தான் பிற்பட்ட வேளாண்மை நிலை உள்ளது. அதே நேரத்தில் வேளாண்மைத்துறை வளச்சியடைந்தா லன்றிப் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்க வாய்ப்பில்லை.

முடிவுரை: இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண் மைத்துறை முதுகெலும்பாகவும், உயிர் நாடியாகவும் இருந்து வருகிறது. வேளாண்மைத்துறை சிறப்பான வளர்ச்சியைப் பெற்ருல்தான் இந்திய மக்களின் வருவாயும், நாட்டில் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். அத்தகைய சூழ்நிலையில்தான் சேமிப் பும் முதலீடும் பெருகி, நாட்டில் முதலாக்கம் (Capital Formation) அதிகரிக்கும்.

14. வேளாண்மை உற்பத்தியும் பிரச்சினைகளும்

வேளாண்மை உற்பத்தித்திறன்
(Agricultural Productivity)

இந்திய வேளாண்மை உற்பத்தித்திறனைத் துல்லியமாக அறிய ஒரு நபர் உற்பத்தித்திறனையும், ஓர் ஏக்கர் நில உற்பத்தித்திறனையும் கணக்கிட வேண்டும். இவ்விரண்டையும் உழைப்பு உற்பத்தித்திறன் (Productivity of labour) என்றும், ஓர் ஏக்கர் நில விளைச்சல் (Field per Acre) என்றும் அழைக்கலாம். இந்திய வேளாண்மையில் பல காரணங்களால் உற்பத்தித்திறனும், உழைப்புத்திறனும் பெரிதும் குறைந்து உள்ளது. இதன் விளைவாகத்தான், இந்தியாவில் உணவு நெருக்கடியும் வேளாண்மைப் பிரச்சினைகளும் இருந்து வருகின்றன. உணவுப் பொருள்களில் சுலபமாகத் தன்னிறைவைப் பெற வேளாண்மை உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

ஓர் ஏக்கர் நில உற்பத்தித்திறன்
(Productivity per Acre)

மொத்த வேளாண்மை உற்பத்தியை (Output) சாகுபடி செய்த நிலத்தின் பரப்பளவால் வகுத்தால் ஓர் ஏக்கர் நில உற்பத்தித்திறனை அறியலாம். ஒரு ஹெக்டார் நிலத்திலிருந்து கிடைக்கும் விளைச்சலைக் கணக்கிட்டால் நில உற்பத்தித்திறனை மதிப்பிட முடியும். இந்தியாவில் நில உற்பத்தித்திறன், மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது மிகவும் குறைந்து உள்ளது. அதைப் பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது.

சில நாடுகளில் நில உற்பத்தித் திறன் 1966—67

பொருள்	நாடு	ஒரு ஹெக்டார் நிலத்தில் விளைச்சல் (கிலோ கிராம்களில்)
அரிசி (நெல்)	இந்தியா	1,290
	ஜப்பான்	5,090
	அமெரிக்கா	4,850
கோதுமை	இந்தியா	890
	இங்கிலாந்து	3,840
	பிரான்ஸ்	2,830
சோளம்	இந்தியா	960
	அமெரிக்கா	4,540
	பிரான்ஸ்	4,000
பருத்தி	இந்தியா	110
	ரஷ்யா	830
	மெக்ஸிகோ	790
நிலக்கடலை	இந்தியா	600
	ஜப்பான்	2,140
	அமெரிக்கா	1,900

ஆதாரம் : இந்திய வேளாண்மை-சுருக்கமான விளக்கம், 1968. பக்கம்-235-39.

நில உற்பத்தித்திறன் இந்தியாவில் குறைந்து இருப்பதற்கு நிலத்தின் குறைந்த செழிப்பும் ஒரு காரணமாகும். இப்புள்ளி விவரங்கள் மூலம் இந்தியாவில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க, இன்னும் அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை அறியலாம்.

உழைப்பு உற்பத்தித் திறன்
(Labour Productivity)

மொத்த வேளாண்மை உற்பத்தியை வேளாண்மையில் பணி புரிவோரின் எண்ணிக்கையால் வகுத்தால் கிடைப்பது ஒரு நபர் உற்பத்தித்திறனாகும். இவ்விவரங்களை 1950-51-ஆம் ஆண்டின் தேசிய வருவாய்க் குழுவின் அறிக்கையின் மூலம்

அறிந்து கொள்ளலாம். இக்குழுவின் கருத்துப்படி வேளாண்மையில் ஈடுபட்ட ஒரு நபரின் சராசரி உற்பத்தித்திறன் ரூ. 500 ஆகவும், சிறு தொழில்களில் ரூ. 800-ம் பெரிய தொழில்களிலும், சுரங்கங்களிலும் ரூ. 1700-ம் வாணிபம், போக்கு வரத்து, செய்தித் தொடர்பு ஆகியவைகளில் ரூ. 1500-ம் இருந்தது. ஒரு நபர் உற்பத்தித்திறன் வேளாண்மையில் மிகக் குறைந்தும் பெரிய தொழில்களில் அதிகமாகவும் இருக்கின்றது. மற்ற உலக நாடுகளோடு ஒப்பிடும் போது உழைப்பு உற்பத்தித் திறன் குறைவாய் உள்ளது. டாக்டர் பல்ஜித்சிங், "கிராம இந்தியாவில் அடுத்த கட்டம்" என்ற தம் நூலில் இந்திய ஒரு நபர் சராசரி உற்பத்தித் திறனை மற்ற நாடுகளின் உற்பத்தித்திறனோடு ஒப்பிடுகின்றார்.[1] அது பின் வருமாறு :—

வேளாண்மையில் ஆண்டொன்றுக்கு சராசரி உழைப்பு உற்பத்தித்திறன் (அமெரிக்க டாலர்களில்)

நாடு	சராசரி உற்பத்தித் திறன் டாலர்களில்
இந்தியா	105
நார்வே	973
இங்கிலாந்து	2,057
கானடா	2,126
ஜப்பான்	2,265
அமெரிக்கா	2,408
நியூஸிலாந்து	3,481
மேற்கு ஜெர்மனி	3,495

இந்தியாவில் வேளாண்மையில் எந்த அளவிற்கு உழைப்பு உற்பத்தித்திறன் குறைந்துள்ளது என்பதை மேற்கண்ட அட்டவணை தெளிவுபடுத்துகின்றது. அது இந்தியாவில் ஆண்டுக்கு 105 டாலராக இருக்கும்போது, மேற்கு ஜெர்மனியில்

1 டாக்டர் பல்ஜித்சிங் (Dr. Baljit Singh)—Next Step in Village India, P. 42

3,495 டாலர்களாக அல்லது இந்தியாவை விட 33 மடங்கு அதிகமாக உள்ளது. நிலத்தில் மக்கள்தொகையின் அழுத்தம் அதிகமாய் இருப்பதாலும், ஏழ்மையினால் நிலச்சீரமைப்பு மேற்கொள்ளப்படாததாலும் இந்தியாவில் ஒரு நபர் உற்பத்தி குறைந்திருக்கிறது.

ஒரு நபர் உற்பத்தித்திறனைச் சராசரி உற்பத்தித்திறன், இறுதி நிலை உற்பத்தித்திறன் என்றும் பிரிக்கலாம். மேற்கண்ட விவரங்களில் பல்வேறு நாட்டுத் தொழிலாளர்களின் சராசரி உற்பத்தித்திறனையும் உணரலாம். "ஒரு தொழிலாளியைச் சேர்ப்பதாலோ அல்லது நீக்கிவிடுவதாலோ ஏற்படும் கூடுதல் உற்பத்தித்திறன் இறுதி நிலை உற்பத்தித் திறனாகும்" இக்கருத்தை ராக்னர் நூர்க்ஸ் வளர்த்துள்ளார். நூர்க்ஸின் கருத்துப்படி, "ஒரு தொழிலாளியைச் சேர்ப்பதாலோ அல்லது நீக்குவதாலோ வேளாண்மை உற்பத்தியில் எந்த அளவு மாறுதலும் ஏற்படுவதில்லை." ஏனெனில் இந்திய வேளாண்மையில் ஏராளமான தொழிலாளர்கள் உருமறைந்து வேலையின்றிக் (disguisedly unemployed) காணப்படுகின்றனர். இதன் விளைவாக, சராசரி ஒரு நபரின் உற்பத்தித்திறனும் இறுதி நிலை உற்பத்தித்திறனும் இந்தியாவில் மிகவும் குறைந்துள்ளது.

வேளாண்மை உற்பத்தியைப் பரவலாக்கல்
(Diversification of Agricultural Production)

இந்தியாவில் வேளாண்மை உற்பத்தி பரவலாக்கப்படவில்லை. இந்திய வேளாண்மை உற்பத்தியில் உணவு தானிய உற்பத்தி மொத்தத்தில் 82 சதவீதமும், உணவு அல்லாத மற்ற மூலப் பொருள்களாகிய (Non-food Crops) எண்ணெய் வித்துக்கள், பருத்தி, சணல் போன்றவைகளின் உற்பத்தி மொத்தத்தில் சுமார் 18 சதவீதமும் உள்ளது. ஆனால், டென்மார்க், சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளில் உணவு உற்பத்தி பரவலாக்கப்பட்டு உணவு அல்லாத மற்றப் பொருள்களின் உற்பத்தி அதிகமாய் உள்ளது. உதாரணமாக, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி உற்பத்தி, கோழி வளர்ப்பு போன்ற பரவலாக்கப்பட்ட வேளாண்மைத் தொழில் முறைகளால் வருமானங்கள் அதிகரிக்கின்றன. இதன் விளைவாக, வேலை வாய்ப்புகளும் வேளாண்மைத் துறையில் அதிகரிக்கின்றன. வருமான அதிகரிப்பால் கிராமத்துறையில் சேமிப்பு அதிகரித்து முதல் சேகரிப்பும் (Capital formation) அதிகரிக்கிறது. இதனால் தான்,

டென்மார்க், சுவிட்ஸர்லாந்து போன்ற வேளாண்மை நாடுகள் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுள்ளன.

சுதந்திரத்திற்கு முன்பு வேளாண்மை உற்பத்தி

இந்தியாவில் வேளாண்மை உற்பத்தி 1901 முதல் 1947 வரைக்கும் இடைப்பட்ட காலங்களில் மிகக் குறைந்திருந்தது. நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு மக்கள் தொகை 38 சதவீதம் அதிகரித்தது. ஆனால், சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் அளவு 18 சதவீதம்தான் உயர்ந்தது. உணவு தானியங்கள், பருப்பு வகைகள் ஆகியவைகளின் சராசரி ஆண்டு உற்பத்தி ஏறக்குறைய மாறாமல் இருந்தது. ஆனால், உணவல்லாத வர்த்தக தானியங்கள் 53 சதவீதம் அதிகரித்தன. எனவே, வேளாண்மைத் துறையில் காணப்பட்ட பெரும் பிரச்சினை மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்பட்ட நில அழுத்தம் ஆகும். வேளாண்மை உற்பத்தியின் அதிகரிப்பைக் காட்டிலும் மக்கள் தொகையின் அதிகரிப்பு பன்மடங்கு அதிகமாய் இருந்தது.

திட்ட கால வேளாண்மை உற்பத்தி

முதல் திட்ட காலத்தில் உணவு தானியங்களின் சராசரி ஓர் ஏக்கர் விளைச்சல் 619 பவுண்டிலிருந்து 565 பவுண்டுகளாகக் குறைந்தது என்று முதல்திட்டஅறிக்கை குறிப்பிடுகிறது. 1945-ல் ஒரு ஹெக்டாருக்கு 0·9 மெட்ரிக் டன் ஆக இருந்த உற்பத்தி 1951-ல் 0-86 மெட்ரிக் டன் ஆகக் குறைந்தது. முதல் திட்ட காலத்தில் ஆழ உழும் சாகுபடி முறை மேற்கொள்ளப் பட்டதால், உணவு தானிய உற்பத்தி அதிகரித்தது. பருவ கால மழை தவறாது பெய்ததாலும், வேளாண்மைக்கு முதவிடம் அளிக்கப்பட்டதாலும் உணவு தானிய உற்பத்தி அதிகரித்தது. 1949–50க்கும் 1967–68க்கும் இடைப்பட்ட காலத்தில் உணவு தானிய உற்பத்தி 30 சதவீதம் அதிகரித்தது. ஆனால், உணவல்லாத மற்றப் பொருள்களின் உற்பத்தி சுமார் 8 சதவீதமாக மட்டும் அதிகரித்தது. இக் காலத்தில் வேளாண்மை உற்பத்தியின் பொது குறிப்பெண் 27 சதவீதம் அதிகரித்தது. 1950–51 லிருந்து படிப்படியாக அதிகரித்து வந்த வேளாண்மை உற்பத்தி 1965–66 க்கும் 1966–67க்கும் இடைப்பட்ட காலத்தில் நாடு முழுவதிலும் ஏற்பட்ட கடுமையான வரட்சியின் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதன் பிறகு 1967-68-ல் மீண்டும் வேளாண்மை உற்பத்தி மேல்நோக்கி

உயர்ந்தது. வேளாண்மை உற்பத்தியின் அளவானது சிறந்த ஊக்கம் தரும் வகையில் தற்போது அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

குறைந்த உற்பத்தி காரணங்கள்
(Causes for Low Agricultural Productivity)

இந்திய வேளாண்மை நிலையில் இன்னும் ஒரு போற்றத் தக்க மாறுதல் ஏற்படாமல் ஒரே நிலையிலேயே இருந்து வரு கிறது. இந்திய வேளாண்மை பிற்பட்ட நிலையிலிருப்பதற் குரிய காரணங்களை ஆராய்ந்தால்தான் எந்தெந்தச் செயல் முறைகளின் மூலம் அரசு சிறந்த முறையில் வேளாண்மைத் துறையை வளர்ச்சியடையச் செய்யமுடியும் என்பதைத் தெளி வாய் அறியலாம். இக் காரணங்களை வசதிக்காகவும் தெளிவாக ஆராயவும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. நிறுவன வகை அல்லது அமைப்பு முறை காரணிகள். 2. தொழில் நுட்பமுறைக் காரணிகள். 3. பொதுக் காரணிகள்.

1. நிறுவன வகைக் காரணிகள்
(Institutional Factors)

முதலாவதாக, இந்தியாவில் சராசரி நில உடைமை ஐந்து ஏக்கர் நிலத்திற்கும் குறைவாகவே உள்ளது. மேலும், நில உட் பிரிவுகள், நிலம் துண்டாடப்படுதல் ஆகிய நில அமைப்பு காரணங்களால் விவசாயிகளின் உழைப்பு, நேரம், சக்தி, பணம், கால்நடை, மற்றச் சாதனங்கள் வீணாகின்றன. பெரும் பாலான உழவர்களிடம், சாகுபடிக்குத் தேவையான அளவு நிலம் இல்லை. நாட்டின் சில பகுதிகளில் நிலம் மிகச் சிறிய அளவில் இருப்பதால், சாதாரணமான கலப்பை கூட திரும்புவ தற்கு வசதியில்லாமல் உள்ளது. சிறிய நில உடைமைகளாக இருப்பதால் சீரான கருவிகள், இயந்திரங்கள், சாதனங்கள், விதைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விஞ்ஞானத் தொழில் நுட்ப முறையில் நிலத்தைச் சாகுபடி செய்ய இயல வில்லை. இயந்திரமயமாக்கப்பட்ட பேரளவு உற்பத்தி மேற் கொள்ளப்பட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. வேலியிடு தல், நீதி மன்றத்தில் வழக்கு தொடர்தல் போன்ற வீணான செலவுகள் அதிகரிக்கின்றன. இதனால், ஓர் அலகுக்கான உற் பத்திச் செலவு அதிகரிக்கிறது. வேளாண்மை உற்பத்தியில் திறமை குன்றிவிடுவதால் வர்த்தகப் பண்ணை முறை ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது, சிதறுண்ட நில அமைப்

பினல் முதல் உழைப்பு ஆகியவைகளுக்கான செலவு அதிகரிக்கிறது. நேர் கண்காணிப்பு, சீரான நீர்ப்பாசன வசதிகள் போன்றவற்றை மேற்கொள்ள இயலுவதில்லை. இந்தியாவில் மக்கள் தொகைஅதிகரிப்பதாலும் சொத்துரிமைச் சட்டங்களின் தன்மைகளாலும் நிலம் சிறிய அளவுடையதாகவும், சிதறுண்ட நிலையிலும் இருந்து வருகிறது. இந்தியாவில் குறைந்த வேளாண்மை விளைச்சலுக்கான காரணங்களில் சிறிய நில உடைமை அமைப்பும் ஒன்ருகும். இரண்டாவதாக, இந்தியாவிலுள்ள நில உடைமை முறை நிலத்தில் பாடுபடும்விவசாயிகளுக்குப் பாதகமாகவே இருக்கிறது. நிலத்தை உழுபவர்களுக்குத் தேவையான சரியான அகத்தூண்டுதலும், ஈடுபாடும் இல்லாததால் உற்பத்தி பெருக வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. ஜமீன்தாரி முறை, நிலத்திலில்லா நிலக் கிழார் முறை (Absentee Landlordism) ஆகியவைகளின் அடிப்படையில் நிலத்தைச் சாகுபடி செய்பவன் நில உரிமையாளனுக இல்லை. எந்த நேரத்திலும் நிலக்கிழாரால் சாகுபடி செய்பவன் வெளியேற்றப்படும் நிலை இருந்து வருகிறது. ஜமீன்தாரி முறை பல்வேறு மாநிலங்களில் ஒழிக்கப்பட சட்டங்கள் இயற்றப்பட்டபோதிலும் குடியானவர்களின் நிலை திருப்திகரமாக இல்லை. நிலத்தைச் சாகுபடி செய்பவன் பெரும்பாலும் கிடைக்கும் கூலிக்காகவோ, குத்தகைக்காகவோதான் பாடுபடுகிருன். அவன் சாகுபடி செய்யும் நிலத்திற்கு அதிக வாரம் கொடுக்க வேண்டியுள்ளது. அவனுக்குத் தொடர்ந்து நிலத்தில் சாகுபடி செய்யத் தகுந்த பாதுகாப்பு இல்லை. இத்தகைய இன்னல்களுக்கு இடையில் சாகுபடி செய்பவன் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்க இயலாது.

2. தொழில் நுட்பக் காரணிகள்
(Technological Factors)

இக் காரணிகள் இரசாயன உரங்கள், சீரான விதைகள், சீரமைக்கப்பட்ட கருவிகள், சாதனங்கள், நீர்ப்பாசனவசதிகள் போன்றவைகளைக் குறிக்கின்றன. முதலாவதாக, உற்பத்தியில் பிற்பட்ட முறைகளை இந்திய விவசாயிகள் பின்பற்றி வருவதால் ஓர் ஏக்கர் உற்பத்தித் திறனும், ஒரு நபர் உற்பத்தித் திறனும் மிகக் குறைந்துள்ளது. இந்திய விவசாயிகள் பழமை நோக்குடையவர்களாகவும், ஏழ்மையில் துன்புறுபவர்களாகவும் இருப்பதால் ஜப்பான், மேற்கத்திய நாடுகள் ஆகியவைகளில் பின்பற்றப்படும் நவீன உற்பத்தி முறைகளை மேற்கொள்ளவில்லை. சமீப காலத்தில்தான் இந்திய விவசாயிகள் ஓரளவு இரும்புக்

கலப்பைகள், விதை விதைக்கும் கருவி, சிறிய நீர்க்குழாய் அமைப்புக்கள் போன்ற சீரான கருவிகளைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க மிகவும் இன்றியமையாததாக விளங்குவது போதுமான இரசாயன மற்றும் நாட்டு உரங்கள் ஆகும். இந்தியாவில் இடைவெளியில்லாமல் தொடர்ந்து நிலங்கள் சாகுபடி செய்யப்படுவதால் அதன் செழிப்பும் சக்தியும் முழுவதுமாகக் குறைந்துவிடுகிறது. எனவே, இந்தியாவில் நாட்டு உரங்களையும், இரசாயன உரங்களையும் போதுமான அளவு பயன்படுத்தாததால் ஓர் ஏக்கர் நில உற்பத்தி குறைந்துள்ளது. மேலும், உயர்ந்த தரமுடைய அதிக விளைச்சல் தரும் விதைகள், பயன் படுத்தப் படாததால், இந்தியாவில் வேளாண்மை உற்பத்தி சீராக உயரவில்லை. சிறந்த விதைகளைப் பயன்படுத்துவதன் மூலமாக வேளாண்மை உற்பத்தியில் 10-முதல் 20 சதவீதம் வரைக்கும் அதிகரிப்பைப் பெற முடியும். இந்திய விவசாயிகளில் பெரும்பாலோர் இன்னும் சீரான விதைகளைப் பயன்படுத்தாமல் சாதாரண விதைகளையே பயன்படுத்தி வருகின்றனர். ஜப்பான் போன்ற நாடுகளில் பாஸ்பேடிக் (Phosphetic) நைநடிரோஜினஸ் (Nitrogenous) உரங்களைப் பயன்படுத்தியும், சீரான விதைகளை விதைத்தும் வேளாண்மை உற்பத்தி முறையில் ஒரு மாபெரும் தொழில் நுட்ப மாற்றத்தைச் சாதித்துள்ளார்கள். துரதிர்ஷ்ட வசமாக, இந்தியாவில் இத்தகைய தொழில் நுட்ப உற்பத்தி மாறுதல் இன்னும் ஏற்படவில்லை. சமீபத்தில் தேசிய விதைக் கழகம் நாடு முழுவதும் அதிக விளைச்சல் தரும் விதைகள், பயிர்களுக்கு ஏற்படும் பிணியை எதிர்க்க வல்ல விதை வகைகளை உற்பத்தி செய்து பங்கிட்டு வருகிறது. இரண்டாவதாக, இந்தியாவில் போதுமான அளவு நீர்ப்பாசன வசதிகள் இன்னும் ஏற்படவில்லை. நிலச் சீரமைப்பு, சீரான விதைகள், ரசாயன உரங்கள், தேவையான கருவிகள் போன்றவைகளைப் பயன்படுத்தினாலும் போதுமான அளவு நிலையான தண்ணீரளிப்பு இல்லாமல் போனால் வேளாண்மை உற்பத்தி பெருகாது. இந்திய வேளாண்மை மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பதற்கான காரணங்களில் மிகவும் பிரதானமாக இருப்பது நீர்ப்பாசன வசதிக்குறைவே ஆகும். ஏனெனில், நாடு முழுவதிலும் உள்ள விவசாயிகளில் பெரும்பாலோர் பருவ கால மழையை நம்பியே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மிகச் சிலரே செயற்கை நீர்ப்பாசன முறைகளைக் கையாண்டு சாகுபடி செய்கின்றனர். எனவே தான், இந்திய வேளாண்மையைப் பருவ கால மழையின் போது ஏற்படும்

சூதாட்டம் என்று குறிப்பிடுகின்றனர். இந்தியாவில் உள்ள மொத்த சாகுபடி நிலத்தில் 22 சதவீதத்திற்கும் குறைவான நிலத்தில்தான் நீர்ப்பாசன வசதிகள் காணப்படுகின்றன. எனவே, பருவ கால மழையை நம்பியே வேளாண்மையின் செழிப்பு உள்ளது. இதனால் தான், இந்தியாவில் இரு போக சாகுபடிக்கு வாய்ப்பில்லாமல் ஒரு போக சாகுபடியே இருந்து வருகிறது.

3. பொதுக் காரணிகள்
(General Factors)

முதலாவதாக, இந்திய வேளாண்மையில் மக்கள்தொகை மிகுதியால் இட நெருக்கடி அதிகமாய் உள்ளது. ஏராளமானவர்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பி வாழும் சூழ்நிலை காணப்படுகிறது. 1901-ம் ஆண்டிலிருந்து வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை குறையாமல் சுமார் 70 சத வீதமாகவே இருந்து வருகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேளாண்மையில் 163 மில்லியன் மக்கள் ஈடுபட்டிருந்தனர். ஆனால், 1961-ல் இவர்கள் 307 மில்லியனாக அதிகரித்துள்ளனர். இதற்கு முக்கிய காரணம் தொழில் துறையில் இவர்களை ஈடுபடுத்த போதுமான அளவு வேலை வாய்ப்புக்கள் இல்லை. வேகமான தொழில் வளர்ச்சி நாட்டில் இன்றும் தகுந்த அளவு ஏற்படவில்லை. மேலும், ஆங்கிலேயர் காலத்திலேயே கைத்தொழில்கள் அழிந்ததால், இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள் நிலமற்ற விவசாயிகளாக மாறினர். மக்கள் தொகையின் மித மிஞ்சிய அதிகரிப்பால் நிலம் பிரிக்கப்பட்டு, பல இடங்களில் சிதறுண்ட அமைப்பைக் கொண்டு விளங்குகிறது. இதன் விளைவாக, ஒரு நபர் நில அளவு (area of land per capita) குறைந்து வருவதோடு, வேளாண்மையில் உருமறைந்த வேலையின்மை ஏற்படுகிறது. இதனால், இறுதிநிலை உழைப்பு உற்பத்தித்திறன் பூஜ்யமாக இருக்கிறது. நிலத்தில் மக்கள் தொகையின் அழுத்தத்தால், ஒரு விவசாயி சாகுபடி செய்யும் நிலத்தின் அளவு 1901-ல் 103 செண்டுகளாக இருந்தது, 1961-ல் 75 செண்டுகளாகக் குறைந்தது. எனவே, வேளாண்மையில் மக்கள் தொகையின் அழுத்தத்தைக் குறைத்தால் அன்றி, வேளாண்மை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பில்லை.

இரண்டாவதாக, இந்திய விவசாயிகள் பொதுவாக, அறியாமை, மூடநம்பிக்கை, பழைமை நோக்கு, கல்வியறிவு

இன்மை, ஜாதிபேதம் போன்ற பிற்பட்ட இயல்புகளைக் கொண்டவர்களாய் உள்ளனர். இவர்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறவேண்டுமென்ற எண்ணம் தோன்றுவதில்லை. "இவர்களுக்கு ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களை வணங்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதே அன்றி அவற்றை அடைய வேண்டுமென்ற சிந்தனை ஏற்படுவதில்லை." நவீன காலத்திற்கு ஒவ்வாத ஜாதிமுறை, கூட்டுக் குடும்ப முறை, பிற்பட்ட பழக்க வழக்கங்கள் போன்ற அமைப்புக்களால் பொருளாதார வளர்ச்சி தடைப் படுகிறது. எனவே, இத்தகைய பிற்பட்ட சூழ்நிலையில் ஒரு சிறந்த மாற்றம் ஏற்பட்டாலன்றி வேளாண்மை முன்னேற்றம் பெற இயலாது.

மூன்றாவதாக, இந்தியாவில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குத் தேவையான நிதி உதவி, விற்பனை வசதி போன்றவைகள் போதுமான அளவு கிடைக்காததால், வேளாண்மை உற்பத்தி சீராகப் பெருக வாய்ப்பில்லாமல் இருக்கிறது. சமீப காலம் வரைக்கும் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை அதிக வட்டி கொடுத்து லேவாதேவிக்காரர்களிடமிருந்து பெற்று வந்தனர். லேவாதேவிக்காரர்களிடம் கடன் வாங்கியவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாமல் போவதால், நிலம் லேவாதேவிக் காரர்களால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதன் விளைவாக, அநேக விவசாயிகள் நிலத்தை இழந்து வேளாண்மைக் கூலிகளாக மாறும் நிலை ஏற்படுகிறது. மற்ற விவசாயக் கடன் நிறுவனங்கள் நிதி வசதிகளை அளித்து வந்த போதிலும், அவைகள் விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லை. மேலும், விவசாயிகளுக்குத் தேவையான கிட்டங்கி விற்பனை வசதிகள் போதுமான அளவு இல்லை. விவசாயிகளுக்குத் தேவையான நிதி விற்பனை வசதி போன்ற சேவைகள் போதுமான அளவு கிடைத்தாலொழிய இந்திய வேளாண்மைத் தொழிலின் பிற்பட்ட நிலை மாறுவதற்கு அடிப்படை இல்லை.

இந்திய வேளாண்மைப் பயிர்களை உணவு தானியப் பயிர்கள், வர்த்தகப் பயிர்கள் என இரு வகைகளாகப் பிரிக்கலாம். அரிசி, கோதுமை, பார்லி, சோளம், பருப்பு வகைகள் ஆகியவை உணவு தானியப் பயிர்களாகும். தேயிலை, காப்பி, ரப்பர், பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள், புகையிலை, கரும்பு ஆகியவைகள் வர்த்தகப் பயிர்கள் (Commercial crops or Cash crops) ஆகும். இந்தியாவில் உணவு தானியப்

பயிர்களுக்குத்தான் வர்த்தகப் பயிர்களைவிட முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. ஏனெனில், மொத்த வேளாண்மை உற்பத்தியில் 75 சதவீதம் உணவு தானியங்களே பயிரிடப் படுகின்றன. உணவு தானியப் பயிர்களை, உணவு தானியங்கள் (Cereals), பருப்பு வகைகள் (Pulses) என இரு வகைகளாகப் பிரிக்கலாம். மொத்த உணவு தானிய உற்பத்தியில் உணவு தானியங்கள் 80 சதவீதமும், பருப்பு வகைகள் 20 சதவீதமும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவில் உணவல்லாத (Non-food) பயிர்கள் லாபகரமானதாய் உள்ளன. எனவே, பெரும்பாலான விவசாயிகள் வர்த்தக தானியங்களைப் பயிரிட விரும்புகின்றனர். எனவே தான், நெல் பயிரிடுவதற்குப் பதிலாக கரும்புப் பயிரை அநேக நிலங்களில் பயிரிடுகின்றனர். இதன் காரணம் அரிசி, சணல் ஆகியவைகளின் விலைகள் சர்க்கரை போன்ற பொருள்களின் விலைகளைவிட, குறைவாக இருப்பதுதான். 1964–65-ல் அமைக்கப்பட்ட வேளாண்மைப் பொருள்களின் விலைகள் குழு வர்த்தகப் பயிர்களிலிருந்து உணவுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கத் தகுந்தவாறு பல்வேறு வேளாண்மைப் பொருள்களின் விலைகளை நிர்ணயித் தது. சில பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி இந்திய விவசாயிகள் வர்த்தக வேளாண்மைப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதால் மிகுந்த லாபத்தைப் பெற்று, சிறந்த வாழ்க்கையைப் பெற இயலும். இதற்குப் பதிலாக உணவு தானியங்களை (Cereals) இறக்குமதி செய்து கொள்ளலாம். இதன் மூலம் அயல் நாட்டுச் செலா வணியைப் பெற வாய்ப்பு ஏற்படும். ஏனெனில், உணவுப் பயிர்களைவிட வர்த்தகப் பயிர்கள் அதிக லாபத்தைக் கொடுக்க வல்லவைகளாகும். ஆனால், திரு. அசோக் மேத்தாவைத் தலைவ ராகக் கொண்ட உணவு தானிய விசாரணைக் குழு இக் கருத் திற்கு மறுப்புத் தெரிவித்தது. "இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் நெருக்கடியான கட்டத்தில் உணவு தானிய உற்பத்தியின் சிறப்பு நிலையைக் குறைப்பது விவேகமாகாது. உணவு தானியங்களுக்காக உலகவர்த்தக மாற்றங்களைப் பெரி தும் நம்பியிருப்பது பெரிய அபாயகரமான கொள்கையாகும். எனவே, உணவு தானியங்கள், வர்த்தகப் பயிர்கள் ஆகிய இரு வகைகளின் உற்பத்தியை வலியுறுத்தும் தற்போதைய கொள்கை தான் சாலச் சிறந்ததாகும்."

தீர்வுகள்: இந்திய வேளாண்மை உற்பத்தி பிற்பட்ட நிலையில் இருப்பதைப் போக்குவதற்காக மேற்கொள்ள வேண் டிய நடவடிக்கைகள் பிற்பட்ட நிலையிலிருப்பதற்கான காரணங்

களிலிருந்தே அறியமுடியும். முதலாவதாக, வேளாண்மையில் எஞ்சியுள்ள மக்களுக்கு வேறு மாற்று வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கான முயற்சிகளை முதலில் மேற்கொண்டாக வேண்டும். இந்திய வேளாண்மைத் தொழில் முறையின் அடிப்படை அமைப்பை மாற்றி வேளாண்மையை நம்பி வாழ் வோரின் எண்ணிக்கையை 60 சதவீதத்திற்கும் குறைந்த நிலையில் இருக்குமாறு செய்தே ஆகவேண்டும். சாகுபடி செய் வோர்க்கு நிலையான விலைகள் உறுதியுடன் கிடைக்க வகை செய்யப்பட வேண்டும். விவசாயிகளுக்குப் போதுமான நிதி, விற்பனை கிட்டங்கி, போக்குவரத்து போன்ற வசதிகள், குறித்த நேரத்தில் தகுந்த அளவு கிடைப்பதற்காக, கூட்டுறவுக் கடன், கூட்டுறவு விற்பனை, கிட்டங்கி, போக்குவரத்து போன்றவை களின் பணிகளைச் சீராக்கி மேலும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். குடியானவர்களின் அறியாமை, மூட நம்பிக்கை போன்ற பிற்பட்ட மனநிலையை மாற்ற வேளாண்மைக் கல்வி, பயிற்சி ஆகியவைகளின் அளவை அதிகரிக்க வேண்டும். இரண்டாவதாக, இந்திய வேளாண்மை அமைப்பு முறையை மாற்ற பல்வேறு மாநில அரசுகள் மேற்கொண்டு வரும் நிலச் சீர்திருத்தங்களைத் தீவிரமாக அமுலாக்க வேண்டும். உண்மை யாக, நிலத்தை உழுது சாகுபடி செய்பவனுக்கு ஊக்கம் ஏற் படும் வகையில்முற்போக்கு சட்டங்களை இயற்றவேண்டும். சிறிய அளவிலும், சிதறுண்டும் காணப்படும் நில உடைமைப் பிரச் சினையைத் தகுந்த முறையில் தீர்க்க நில உடைமை இணைப்பு முறை, கூட்டுறவுப் பண்ணை முறை போன்றவைகளைத் துணிந்து தீவிரமாக அரசு மேற் கொள்ள வேண்டும். கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்துவ தாலும், நிலக் குத்தகைச் சீர்திருத்தச் சட்டங்களைத் திறமையாக அமுல்படுத் துவதன் மூலமாகவும் நில குத்தகைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். மூன்றாவதாக, இந்திய வேளாண்மை உற்பத்தியைத் தொழில் நுட்ப முறைப்படி வளர்ச்சியடையச் செய்ய சீரான கருவிகள், சாதனங்கள், இரசாயன உரங்கள். அதிக விளைச்சல் தரும் விதைகள், தகுந்த நீர்ப்பாசன வசதிகள் போன்ற உள்ளீடுகளின் அளவையும் தரத்தையும் மேலும் அதிகரிக்கச் செய்ய அரசு செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், விவசாயிகள் இவற்றை பெருமளவில் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வகை செய்ய வேண்டும். இரு போக சாகுபடி, பயிர்களைக் காலத்திற்குக் காலம் மாற்றிப் பயிரிடுதல், (Rotation of Crops) பயிர்களின் பிணியைத் தடுக்கவும், போக்கவும் வகைகளை மேற்

கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் விவசாயிகள் கண்ணும் கருத்துமாய் இருக்க விவசாயிகளுக்குச் சிறந்த பயிற்சி அளிக்க வேண்டும்.

முடிவுரை : மேற்கூறிய செயல் முறைகளை இந்திய விவசாய உற்பத்தி முறையில் கையாண்டாலன்றி நில, உழைப்பு, உற்பத்தி மேலும், அதிகரிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இதைச் சீக்கிரமாக சிறந்த முறையில் சாதிக்க முடிந்தால் இந்தியப் பொருளாதார வளர்ச்சி மேலோங்கும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. உலக வங்கித் தலைவர் மக்நமாரா (Mc Namara) கூறியதைப் போன்று இந்திய வேளாண்மைத் துறை எதிர்பார்த்த அளவு வளர்ச்சியடையத் தொடங்கி விட்டது. இனிமேல் தொடர்ந்து சீரான வளர்ச்சி ஏற்படும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மையாகும்.

15. நிலச் சீர்திருத்தங்கள்

நிலவுடைமைச் சிக்கல்

இந்திய வேளாண்மை உற்பத்தியில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருப்பது நில உடைமைப் பிரச்சினைகளாகும். இந்தியாவில் விவசாயிகளுக்கு நிலத்தின் மேல் பற்று மிகவும் அதிகமாக உள்ளது. நிலம் அதிக வருவாயும், உயர்ந்த மதிப்பும் கொடுக்கும் சொத்து என்ற எண்ணத்தில் வேளாண்மையில் நேரடியாகத் தொடர்புகொள்ளாதவர்களும் நிலத்தை வைத்துக் கொள்வதால் வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பதில்லை. பொதுவாக, நிலஉடைமையாளர்களை மூன்று வகைகளாகப் பிரிப்பது வழக்கம். முதல் வகையைச் சேர்ந்தவர்கள் தங்களது நிலத்தை நேரடியாகச் சாகுபடி செய்யாமல் மற்றவர்களிடம் நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்து விடுபவர்கள். இரண்டாம் வகை, நிலத்தைத் தாங்களே நேரடியாக மேற்பார்வை செய்து, ஆனால் விவசாயக் கூலிகளைக் கொண்டு சாகுபடி செய்பவர்கள். இவர்கள் நிலத்தில் இறங்கிப் பாடுபடமாட்டார்கள். மூன்றும் வகை, நிலத்தில் தாங்களே பாடுபட்டு உழைத்து சாகுபடி செய்யும் நில உடைமையாளர்கள். சில வேளைகளில் இவர்கள் பிறரின் நிலத்தையும் குத்தகைக்கு எடுத்துச் சாகுபடி செய்வார்கள்.

நிலஉடைமையை ஒட்டி நிலவரியை வசூலிப்பதிலும், தலத்தியில்லா நிலக் கிழார்களின் (Absentee Landlords) செயலால் உற்பத்தி குறைவதையும் நீக்க வேண்டிய சிக்கல் தீர்க்கப்படாததாகவே இருக்கிறது. ஒவ்வொரு மாநில அரசும் மேற்கொண்ட தீவிர நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் நிலப் பிரச்சினைகள் ஓரளவு தீர்த்துள்ளன. “நிலச் சீர்திருத்தம்” என்னும் சொல் நிலவுடைமையில் காணப்படும் குறைகளைப் போக்க மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளைக் குறிக்

கிறது. இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் குறிக்கப்பட்டுள்ள நிலச்சீர்திருத்தச் செயல் முறைகள் வேளாண்மை வளர்ச்சியையும், கிராமச் சீர் அமைப்பையும் மேம்படுத்த மேற்கொள்ளப் பட்டவைகளாகும். நிலச் சீர்திருத்தத் திட்டங்களின் இரண்டு பிரதான நோக்கங்களாவன : (1) வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தடையாக இருக்கும் முட்டுக்கட்டைகளை அகற்றுதல். (2) வேளாண்மை உற்பத்தி முறையில் இருந்துவரும் சுரண்டல், சமூக அநீதி போன்ற கொடுமைகளை நீக்குதல் ஆகியவைகளாகும்.

முதல் திட்டம் 18 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட பொழுது நடுவர் நில உரிமை முறைகளாகிய ஜமீன்தாரி, ஜாகிரி, இனும் போன்றவைகள் மொத்த சாகுபடி நிலத்தில் 40 சதவீதத்திற்குமேல் இருந்தன. ரயத்துவாரி நில உரிமையின் கீழ் எஞ்சிய 60% நிலம் மிகுந்த ஏற்றத்தாழ்வுகளுடன் காணப்பட்டது. குத்தகைக்கு எடுத்த நிலக் குடியானவர்களின் நிலை பாதுகாப்பு இல்லாமலும் அதிகமான நில வாரம் கொண்டதாகவும்இருந்தது. நில உடைமைகள்உட்பிரிவு படுத்தப்பட்டும் துண்டாடப் பட்டும் இருந்தன.மேலும் நிலமில்லாத வேளாண்மைக் கூலிகள் ஏராளமானவர்கள் இருந்தனர்.

நிலச் சீர்திருத்தக் கொள்கைகள்

மேற்கண்ட சூழ்நிலையில் நிலப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயனுள்ள நிலக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நிலக் கொள்கைகளாவன: (1) நடுவர் நில உரிமை முறைகளை ஒழித்தல். (2) குத்தகை முறையைச் சீர்திருத்துதல். அதன் அடிப்படையில் நியாயமான வாரத்தைக் குறித்தல், குத்தகைதாரர் நில உரிமையைப் பாதுகாத்தல், குத்தகை தாரர்களை அரசுடன் நேர் தொடர்பு கொள்ளச் செய்து நில உரிமையை அளித்தல், நிலச் சீர்திருத்தங்களின் அடிப்படையாக அமைவது "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்ற கொள்கையாகும். (3) நில உடைமை உச்ச வரம்பு கொள்கையை அமுலாக்குதல். அதன் மூலம் கிடைக்கும் எஞ்சிய நிலத்தை நிலமில்லா வேளாண்மைக் கூலிகளுக்கு சம பங்கீடு செய்தல். (4) வேளாண்மை நில உடைமைகள் ஒருங்கிணைப்புத் திட்டத்தை மேற்கொள்ளுதல். அதற்காகக் கூட்டுப்பண்ணை, கூட்டுறவுப்பண்ணை முறைகளைப் பரவலாக ஏற்படுத்தி வேளாண்மை உற்பத்தியின் அளவை அதிகரித்தல்,

நடுவர்களை ஒழித்தல்
(Abolition of Intermediaries)

நடுவர்களை ஒழித்தலைப் பற்றி அறியும் முன்பு இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுது எவ்வகை நில உடைமை முறைகள் இருந்தன என்பதை அறிய வேண்டியது அவசியமாகும். இந்தியாவில் மூன்று முக்கிய நில உடைமை முறைகள் இருந்தன.

(1) ரயத்துவாரி முறை (Ryotwari System)

(2) மஹல் வாரி முறை (Mahalwari System)

(3) ஜமீன்தாரி முறை (Jamindar System)

இம் மூன்று முறைகளில் ரயத்துவாரி முறைதான் சிறந்ததாகும். கூட்டுறவுப் பண்ணை முறையை நடைமுறைப்படுத்த மஹல்வாரிமுறை சிறந்ததாகும். ஆனால், இவற்றுள் ஜமீன்தாரி முறை பல கேடுகளைக் கொண்டதாகும். ஏனெனில், ஜமீன்தாரிகள் நிலத்தின் வருவாயைப் பெறுவதில் காட்டிய ஆர்வத்தை வேளாண்மை உற்பத்திக்காக ஈடுபடுத்தவில்லை. சாகுபடியாளர்களைச்சுரண்டிஜமீன்தார்கள்வாழ்ந்து வந்தனர். அவர்கள் வைத்ததே சட்டமாக இருந்தது. ஆனால், ரயத்துவாரி முறையின் கீழ் அரசுக்கும் சாகுபடியாளருக்கும் (Ryots) நிலவரி செலுத்துவதில் நேர் தொடர்பு இருந்தது. அரசுக்குக் காலந் தவறாமல் நில வரியைச் செலுத்தும் வரைக்கும் சாகுபடி செய்பவரை யாரும் வெளியேற்ற முடியாது. இம் முறை குஜராத், மஹாராஷ்டிரம், தமிழ்நாடு, மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து வருகின்றது. ஆனால், இம் முறையில் நிலவரியின் மதிப்பீடானது குறையுடையதாய் உள்ளது. இது சிறிய விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கின்றது. மஹல்வாரி முறையின் கீழ் கிராமச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு வகுப்பினரால் நிலவரி அரசுக்குச் செலுத்தப்படுகிறது, ஆனால், சாகுபடி தனி விவசாயிகளால் நடத்தப்படுகின்றது. மஹல்வாரி முறையானது பெரும்பாலும் பஞ்சாப், மத்தியப்பிரதேசம், உத்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் காணப் படுகிறது.

ஜமீன்தாரி முறையின் சீர்கேடுகள்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நில வரியை வசூலிக்க இந்தியாவில் ஜமீன்தாரி முறை தோற்றுவிக்கப்பட்டது. இம்

முறைப்படி ஜமீன்தார் தான் நிலத்தின் பூரண உரிமை கொண்டவராய் அரசுக்கு நில வரியைச் செலுத்தும் பொறுப்பைப் பெற்றிருந்தார். பிரபு காரன்வாலிஸ் காலத்தில் நிலவரியை வசூலிக்க ஜமீன்தார்களோடு நிலையான ஏற்பாடுகள் (Permanent Revenue Settlement) செய்து கொள்ளப்பட்டன. சில சமயங்களில் நிரந்தர நிலவரி செலுத்தும் ஏற்பாட்டின்படி நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை நிலவரி செலுத்தப்படும் ஏற்பாடுகளும் செய்து கொள்ளப்பட்டன, ஜமீன்தாரி முறையானது மேற்கு வங்காளம், பீகார், ஆந்திரா, உத்திரப்பிரதேசம், மேலும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பகுதிகளில் செயல் முறையில் இருந்து வந்தது. ஜமீன்தாரி முறைதான் இன்றைய வேளாண்மைத் துறையின் பெரும்பாலான சீர்கேடுகளுக்கு அடிப்படைக்காரணமாகும். ஏனெனில் இம்முறையினால் ஏராளமான தலத்திலில்லா நிலக்கிழார்கள் தோன்றி வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதில் பல இன்னல்கள் ஏற்பட்டன. குடியானவர்கள் ஜமீன்தாரிகளால் ஏற்படுத்தப்பட்ட நடுவர்களால் சுரண்டப்பட்டனர்.

ஜமீன்தாரி முறை ஒழிப்பு

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஜமீன்தாரி முறையானது அநேக மாநிலங்களில் ஒழிக்கப்பட்டது. மாநில அரசுகள் ஜமீன்தார்களின் நில உரிமைகளைக் கைப்பற்றி அவர்களுக்கு நட்ட ஈட்டுத்தொகை கொடுத்தனர். குடியானவர்களுக்கும் மாநில அரசுக்கும் இடையே நேரடியான தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. ஜமீன்தாரி முறையை ஒழிப்பதனால் அரசுக்குச் சுமார் 175 மில்லியன் (Million) கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டது. நடுவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை ரூ. 500 கோடியாகக் கணக்கிடப்பட்டது. நட்ட ஈடானது ஒரு பகுதி பணமாகவும் மற்றொரு பகுதி கடன் பத்திரங்களாகவும் கொடுக்கப்பட்டது. மேலும், ஜமீன்தார்கள் தங்கள் சொந்த சாகுபடிக்காக ஒரு குறித்த அளவு நிலத்தை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஜமீன்தார்கள், ஜாகீர்கள், இனும் தாரர்கள் போன்ற நடுவர்களின் நிலவுடைமைகள் ஒழிக்கப்பட்டதின் விளைவாக, கடந்த 18-ஆண்டுகளில் சுமார் 20 மில்லியன் குடியானவர்கள் அரசுடன் நேர் தொடர்பு கொண்டதோடு, அவர்களுடைய நில உடைமைகளின் சொந்தக்காரர்களும் ஆனார்கள். இதனால் அவர்களுடைய சமூகப் பொருளாதார நிலை சீரமைக்கப்பட்டது. நிர்வாகக் குறைகளாலும், நிதி வசதியின்மையாலும் நட்டஈட்டுத்

தொகையை மதிப்பிடுவதிலும், நடுவர்களுக்குக் கொடுப்பதிலும் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. நான்காவது திட்ட காலத்தி லாவது நட்ட ஈட்டுக் கடன் பத்திரங்கள் அளிப்பானது முழுவது மாக முடிக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

நிலக் குத்தகைச் சீர்திருத்தங்கள்
(Tenancy Reforms)

நிலக்குத்தகைச் சீர்திருத்தங்களாவன: (1) வாரத்தை முறைப்படுத்தல், (2) குத்தகைப் பாதுகாப்பு, (3) குத்தகை தாரர் களுக்கு நிலவுரிமையை மாற்றிக் கொடுத்தல்.

1. வாரத்தை முறைப்படுத்துதல்

18 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் பெரும்பாலான பகுதி களில் குத்தகைதாரர்கள் உற்பத்திப் பொருள்களில் பாதி யையோ அல்லது அதற்கு மேற்பட்டதையோ நிலச் சொந்தக் காரர்களுக்கு வாரமாக அளிக்கும் பழக்கம் இருந்து வந்தது. கடந்த சில ஆண்டுகளாக ஒரு நிலக்கிழார் உற்பத்தியில் ஒரு பகுதியை வாரமாகப் பெறும் அளவை ஒழுங்குபடுத்த எல்லா மாநிலங்களும் சட்டம் இயற்றியுள்ளன. முதல், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்களில் நில வாரமானது மொத்த உற்பத்தியில் $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{5}$ பேருக்குமேல் அதிகரிக்கக் கூடாது என்று பரிந்துரைக்கப்பட்டது. அஸ்ஸாம், பீகார், குஜரத், கேரளா, மைசூர், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் மொத்த உற்பத்தியில் கால்பகுதியோ அல்லது அதற்குக் குறை வானதோதான் அதிகபட்ச வாரமாக குறிக்கப்பட்டுள்ளது. ஆந்திரா, ஜம்மு—காஷ்மீர், தமிழ்நாடு, பஞ்சாப், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இன்னும் சட்ட பூர்வமாகவே மொத்த உற்பத்தியில் $\frac{1}{3}$ முதல் $\frac{1}{2}$ பகுதி நியாயமான வாரமாகக் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட் டத்தில் வாரமானது 70% அல்லது 80% மாக உள்ளது. அதற்கு மேலும், சாகுபடிச் செலவுகளைக் குத்தகைதாரர்களே மேற்கொள்கின்றனர். அநேக மாநிலங்களில் வாரத்தின் அளவை ஒழுங்கு படுத்த, சட்டங்கள் இயற்றப்பட்டு இருந்த போதிலும், குத்தகைதாரர்களுக்குச் சட்டத்தின்மூலம் கிடைக்கப் பட்டுள்ள உரிமைகள் தெரியவில்லை. விவசாய நிலத்தில் மக்களின் அழுத்தம் அதிமாக இருப்பதனால், குத்தகைதாரர் களின் சமூக, பொருளாதார நிலைமை சக்தியுடையதாய் இல்லை. எனவே, குத்தகைதாரர்களுக்குச்சட்டத்தின்மூலம் பாதுகாப்புத் தேடிக்கொள்ளக் கடினமாய் உள்ளது. மேலும், குத்தகை

தாரர்கள் ஏழைகளாய் இருப்பதால் தங்கள் உரிமைகளுக்காக நீதிமன்றங்களின்மூலம் போராடச்சக்தியற்று இருக்கின்றனர்கள். எனவே, குத்தகைச் சட்டங்களைப் பயனுள்ள முறையில் செயல் படுத்த, சீரான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அரசின் துறைகள் மேற்கொள்ள வேண்டும்.

2. குத்தகைப் பாதுகாப்பு
(Security of Tenure)

நிலம் சிலரின் உடைமையாக மட்டுமே இருந்து வருவதாலும், நிலமற்ற விவசாயிகள் ஏராளமாக இருப்பதாலும், போட்டி போட்டுக் கொண்டு நிலமற்றவர்கள் நிலத்தைக் குத்தகைக்கு எடுக்கின்றனர். இதனால், குத்தகையை நிர்ணயிப்பதில் நிலக்கிழாரின் கை ஓங்குகிறது. பெரும்பாலான வேளைகளில் நிலக் குத்தகை பதிவு செய்யப்படாததால், நிலக்கிழாரின் விருப்பம் போல் குத்தகை மாற்றப்படுகிறது. இதனால், குத்தகையாளர்களுக்கு வேளாண்மை உற்பத்தியில் முழுமூச்சாக ஈடுபடத் தூண்டுதல் கிடைப்பதில்லை. இத்தகைய குறைகளைப் போக்கிக் குத்தகையாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப் பல்வேறு மாநிலங்களில் சட்டங்கள் இயற்றப்பட்டன. இதன் மூலம் இதுவரைக்கும் 3 மில்லியன் குத்தகைதாரர்கள், 7 மில்லியன் ஏக்கர் நிலத்திற்குமேல் சொந்தமாகச் சாகுபடி செய்ய நிலம் பெற்றுள்ளனர்.

நன்மைகள் :—குத்தகைப் பாதுகாப்புச் சட்டங்கள் மூன்று முக்கிய நோக்கங்களைப் பெற்றுள்ளன. (1) சட்டத்திற்குட் படாத முறையில் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதைத் தடுத்தல். (2) சொந்தச் சாகுபடிக்கான நிலத்தை மட்டுமே நிலக்கிழார் வைத்துக் கொள்ளுதல். (3) நிலக்கிழார் தன் நிலத்தை திரும்ப, குத்தகை தாரரிடமிருந்து எடுத்துக் கொண்டாலும், ஒரு சிறிய குறிப்பிட்ட நிலப்பகுதி குத்தகைதாரருக்குக் கட்டாயமாக ஒதுக்கிவிடுதல் ஆகியவைகள் அடிப்படையான குறிக்கோள்களாகும்.

குறைபாடுகள் : நிலப் பாதுகாப்புச் சட்டங்கள்எதிர்பார்த்த அளவு நிலத்தில் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தவில்லை. ஏனெனில், குத்தகைதாரர்கள் தாங்களாகவே நிலத்தை நிலக் கிழார்களிடம் ஒப்படைத்தனர். ("Voluntary Surrenders") இந் நிலையைப் போக்க இரண்டாம் திட்டத்தில் இரு முக்கியக் கருத்துக்கள் சிபாரிசு செய்யப்பட்டன. முதலாவதாக, வருவாய்த் துறையில் முறையோடு குத்தகை பதிவு செய்யப்

யட்டிருந்தாலன்றித் தன்னிச்சை நில ஒப்படைப்பு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இரண்டாவதாக, குத்தகை நிலத்தை ஒப்படைக்கும் பொழுது சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட நிலத்தை மட்டும்தான் நிலக்கிழார் மீண்டும் பெறவேண்டும். ஆனால், சட்டமும் நிர்வாக நடவடிக்கைகளும் இப்பரிந்துரைகளை அமுலாக்க இயலவில்லை.

குத்தகைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

கடந்த பதினைந்து ஆண்டுகளாக, பல்வேறு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கீழ்க்கண்டபடி மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. உத்திரப் பிரதேசம், டில்லி ஆகிய இடங்களில் நிலக்கிழார்கள் சொந்த சாகுபடிக்கு நிலத்தை மீண்டும் குத்தகைதாரர்களிடமிருந்து பெறும் வகையில் குத்தகைதாரர்களுக்கு முழுபாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

2. அஸ்ஸாம், பம்பாய், பஞ்சாப், ராஜஸ்தான், இமயமலைப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குத்தகைதார்களுக்கு ஒரு குறித்த நிலப்பகுதியை ஓதுக்கிவிட்டு எஞ்சிய நிலத்தை நிலக்கிழார்கள் தங்கள் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

3. மேற்கு வங்காளம், ஜம்முகாஷ்மீர், பழைய ஹைதராபாத் ஆகிய மாநிலங்களில் நிலக்கிழார்கள் மீண்டும் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலத்தின் அளவிற்கு ஓர் எல்லை வகுக்கப்பட்டு எல்லாக் குத்தகைதாரர்களும் குறைந்த பட்சம் நிலத்தின் ஒரு பகுதியை வைத்துக்கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

கேரளாவில் 1957-ல் வேளாண்மைத் தொடர்பான மசோதாவில் ஒரு நிலக்கிழார் பதினைந்து ஏக்கரா இருபோக சாகுபடி நிலத்தை வைத்துக்கொள்ள ஓர் எல்லை வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, மைசூர், கேரளா, ஆந்திரப்பிரதேசம், ஓரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில் குத்தகைதாரர்களுக்குத் தற்காலிகப் பாதுகாப்பளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு நிலமற்ற குடியானவர்களுக்குப் புறம்போக்கு நிலத்தை வழங்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது, நிலக்கிழார்கள் குத்தகைதாரர்களிடமிருந்து நிலத்தைச் சொந்த சாகுபடிக்காக நிலத்தைத் திரும்பப் பெறுவதால் வேளாண்மையில் சில பாதக விளைவுகள் ஏற்படுகின்றன. சட்டத்தின் மூலம்

கொடுக்கப்பட்டுள்ள குத்தகைப் பாதுகாப்பு குறைந்து வேளாண்மையில் நிலையற்ற தன்மை ஏற்படுகின்றது. எனவே தான், முதலிரண்டு திட்டங்களிலும், ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்டு விட்டால் நிலத்தை நிலக்கிழார்கள் குத்தகை தாரர்களிடமிருந்து கைப்பற்ற அனுமதிக்கலாகாது என்று அறிவுறுத்தப்பட்டது. குத்தகை தாரர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு கிடைக்கா விட்டால் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டு வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு விடும்.

3: குத்தகை தாரர்களுக்கு நிலத்தைச் சொந்த மாக்குதல்

குத்தகைச் சீர்திருத்தங்களில் குத்தகைப் பாதுகாப்பும், வாரக் குறைப்பும் முதல் கட்டத்தைப் பெறுகின்றன. ஏராளமான குத்தகை தாரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கித் தருவது தான் இதன் முக்கிய நோக்கம். ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் குத்தகை தாரர்களுக்கு நிலவுரிமைகளை அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கீழ்க்கண்ட மூன்று முறைகளில் ஒரு முறையில் குத்தகை தாரர்கள் அரசாங்கத்துடன் நேரடி தொடர்பு கொள்ள வகை செய்யப்பட்டது.

(1) குத்தகைதாரர்கள் நிலச் சொந்தக்காரர்களாக ஆக்கப்பட்டு நிலக்கிழார்களுக்குத் தவணை முறையில் இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். குத்தகை தாரர்கள் தொகையைக் கொடுக்கத் தவறினால்அரசாங்கமே அளிக்கப்படாத தவணைப் பணத்தைக் குத்தகை தாரர்களிடமிருந்து வசூலிக்கும் பொறுப்பை ஏற்றது.

(2) நிலக்கிழார்களுக்கு இழப்பீட்டுத் தொகையைக் கொடுத்து அரசாங்கமே நிலவுரிமையைக் கைப்பற்றிக் குத்தகை தாரர்களுக்கு நிலவுரிமையைப் பிறகு மாற்றித் தந்தது. பிறகு தகுந்த தவணைகளில் குத்தகை தாரர்களிடமிருந்து அரசு இழப்பீட்டுத் தொகையைப் படிப்படியாக வசூலித்துக் கொண்டது.

(3) நிலக்கிழார்களிட மிருந்து அரசே நிலவுரிமையை ஏற்றுக்கொண்டு குத்தகை தாரர்களை அரசுடன் நேர் தொடர்பு கொள்ளுமாறு செய்தது. குத்தகைதாரர்கள் அரசாங்கத்திற்கு நியாயமான வாரத்தைக் கொடுத்து விட்டு அந் நிலத்தில் அப்படியே தொடர்ந்து குத்தகை உரிமையை வைத்துக் கொள்ளவோ அல்லது குறிப்பிட்ட இழப்பீட்டுத் தொகையைக் கொடுத்து விட்டு நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளவோ விருப்பம் தெரிவிக்க உரிமை வழங்கப்பட்டது.

நில ஒப்படைப்பு செயல் படுத்தப்படல்

மேற் கூறப்பட்டுள்ள முறைகளில் முதல் முறையை குஜராத், மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களும், இரண்டாம் முறையை டில்லியும், மூன்றும் முறையை கேரளா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன. தமிழ் நாட்டில் குத்தகை தாரர்கள் நில உரிமைகளைப் பெற இன்னும் முயற்சிகள் மேற் கொள்ளப்படவில்லை. விவசாய நிலவுடைமைகளில் உச்ச வரம்புகளைப் பயனுள்ள முறையில் செயல் படுத்தினால் உச்ச வரம்பு எல்லைக்கு மேல் நிலத்தைப் பெற்றிருக்கும் நிலக்கிழார்களின் குத்தகை தாரர்கள் நிலத்தைச் சொந்தமாகப் பெற வாய்ப்பு உண்டு என்று எதிர்பார்க்கப்படுகிறது.

II. நில உடைமைகளின் உச்ச வரம்பை நிர்ணயித்தல் (Ceiling on Land Holdings)

நோக்கங்கள் : விவசாய நில உச்சவரம்பை நிர்ணயிக்கும் கொள்கை விவாதத்திற்குட் பட்டதாக இல்லாமல் அரசின் நிலக்கொள்கைகளின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. நில உச்சவரம்புக் கொள்கையின் நோக்கங்களாவன :

1. நிலத்தைச் சொந்தமாகப் பெற வேண்டும் என்ற பரந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்தல்.
2. நிலவுடைமையிலும் நிலத்தைப் பயன் படுத்துவதிலும் காணப்படும் பெருவாரியான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
3. விவசாய வருமானங்களில் இருக்கும் பேதங்களைக் குறைத்தல்.
4. சுய வேலை வாய்ப்பை அதிகப்படுத்துதல்.

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் இடையூறாக இருப்பது குறைந்த எண்ணிக்கை கொண்ட நிலக்கிழார்கள் ஏராளமான சாகுபடி நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பதுதான். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒருவர் அதிக பட்சமாக வைத்துக் கொள்ளும் விவசாய நிலத்திற்கு ஓர் எல்லை வகுக்க வேண்டுமென்று கொள்கையளவில் ஏற்றுக்கொண்டது. 1956-க்கும் 1961-க்கும் இடைப்பட்ட காலத்தில் எல்லா மாநிலங்களிலும் இருந்து வரும் விவசாய உடைமைகளுக்கு உச்ச வரம்பை நிர்ணயிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பரிந்து உரைத்தது. ஆனால், மிகத்திறமையுடன் நிர்வகிக்கப்பட்டு வரும் பண்ணைகளுக்கு உச்ச வரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்

படவும் இரண்டாம் திட்டம் ஆலோசனை கூறியது. நில உச்ச வரம்புகளில் இருவகையுண்டு.

1. எதிர்காலத்தில் கைப்பற்றும் நிலத்தின் மேல் உச்ச வரம்பு நிர்ணயித்தல் (Ceilings on future acquisition)

2. இருந்து வரும் நில உடைமைகளின்மேல் உச்ச வரம்பை நிர்ணயித்தல் (Ceiling on gisting holdings) இரண்டாம் திட்ட காலத்தில் அஸ்ஸாம், ஆந்திரா, பம்பாய், மைசூர், கேரளா போன்ற மாநிலங்களில் எதிர்காலத்தில் கைப்பற்றப்பட்ட நிலங்களின் மேல் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. ஒரு நிலவுடைமையின் பரப்பளவையும், வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு உச்சவரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. நில உச்ச வரம்பை இன்றியமையாதது என்று கருதுகின்றவர்கள் கூறுகின்ற காரணங்கள் பின்வருமாறு :

நன்மைகள்

(1) விவசாய மக்கள் எல்லோருக்கும் முழுமையாக வேலை கிடைக்க வாய்ப்புண்டு. (2) வேளாண்மை உற்பத்தியைச் சீராக்கச் சிறந்த தூண்டுதல் ஏற்படுகின்றது. (3) வேளாண்மைத் துறையில் ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்பட்டுச் சமதர்ம சமுதாய முறை மலர வழி வகுத்தல். (4) நில உடைமை இணைப்பு முறையை அதிகப்படுத்துதல். (5) கூட்டுறவுப் பண்ணை முறைகளை ஏற்படுத்த ஆயத்தம் செய்தல். (6) சாகுபடி செய்யப்படும் நிலத்தை விஸ்தரித்தல். (7) குத்தகை தாரர்கள் நிலத்தைச் சொந்தமாகப் பெற்று மிகுந்த பயனடைதல் ஆகியவைகளாகும்.

குறைபாடுகள் : நில உச்ச வரம்புச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் கூறும் காரணங்களாவன: (1) நில உச்ச வரம்புச் சட்டம் பெரிய பண்ணைகள் அமைவதற்கு எதிராகச் செயல்படும். (2) நில உச்ச வரம்பின் மூலம் நிலமற்ற விவசாயிகளின் நிலப் பசியைத் தீர்க்கும் அளவுக்கு நிலம் கிடைக்காது. எச்ச நிலத்தை எடுக்க அரசு அளிக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை அரசுக்குப் பாரமாக இருப்பதோடு நிர்வாக இன்னல்களும் அதிகமாகும். (3) தனியார் சொத்தை அபகரிப்பதால் உற்பத்தி பாதிக்கப்படலாம். (4) கிராம வருமானங்களின் அளவு வரையறுக்கப்பட்டு விடுகிறது. (5) கிராமப் பகுதிகளில் இருக்கும் பலவகை மக்களுள் கடுமையான சச்சரவுகள் ஏற்படலாம். (6) விளைபொருள் விற்பனை எச்சம் குறைக்கப்பட்டு விடுகிறது. (7) நகர வருவாய்க்கு உச்ச வரம்பு கட்டாமல் நில

உடைமைக்கு மட்டும் உச்ச வரம்பை நிர்ணயிப்பது சிறந்த தாகாது.

ஆனால், நிலவரம்பிற்கு எதிராகக் கூறப்படும் காரணங் களில் பெரும் பாலானவை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. சிறிய பண்ணைகளின் மூலம் ஆழ உழும் முறைப்படி மிகுதியாக விளைய வைக்க முடியும் என்பதை ஜப்பானின் எடுத்துக்காட்டு மூலம் அறியலாம். அரசு இழப்பீட்டுத் தொகைக்குக் கடன் பத்திரங்களாக வழங்கலாம்.

இருக்கும் நிலவுடைமைகளின் மேல் உச்சவரம்பை நிர்ணயித்தல்

இருந்துவரும் விவசாய நில உடைமைகளின் மேல் உச்ச வரம்பு நிர்ணயித்து எல்லா மாநிலங்களிலும் சட்டங்கள் இயற் றப் பட்டுள்ளன. அஸ்ஸாம், குஜரத், ஜம்மு காஷ்மீர், மகாராஷ் டிரம், மத்தியப் பிரதேசம், தமிழ் நாடு, பஞ்சாப், மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நில உச்ச வரம்பினால் எச்சமான இரண்டு மில்லியன் ஏக்கர் நிலத்திற்குமேல் அரசாங்கங்களால் எடுத்துக்கொள்ளப் பட்டன. தமிழ்நாட்டில் மட்டும் உச்சவரம்பு எல்லைக்கு அதிகமாக இருந்த 20,000 ஏக்கர் எச்ச நிலம் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது; அல்லது எச்சமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. எச்ச நிலமானது நிலமில்லா விவசாயிகளுக்கும், சிக்கனமற்ற நிலவுடைமை உடை யவர்களுக்கும் குத்தகை தாரர்களுக்கும் பங்கிடப்பட்டு வரு கிறது. இரண்டாம் திட்ட காலத்தில் தனி ஒருவருடைய நில உடைமையின் மேல் உச்சவரம்பு நிர்ணயிப்பதா அல்லது ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்களுடைய மொத்த நிலத்தின் மேல் உச்சவரம்பு நிர்ணயிப்பதா என்ற பிரச்சினை எழுந்தது. இம் முறையில் ஒவ்வொரு மாநிலங்களிலும் வெவ்வேறு செயல்முறை கள் கையாளப்பட்டு வருகின்றன. உதாரணமாக, ஆந்திரப் பிரதேசத்தில், உச்ச வரம்பானது குடும்ப நில உடைமைக்கு மேல் 4½ மடங்கு அதிகமாக என்று குறிக்கப்பட்டது. (ஒரு குடும்ப நில உடைமை என்பது 6 ஏக்கர் ஈரம் குறைந்த நிலத்தி லிருந்து 72 ஏக்கர் ஈரமுள்ள நிலமாக வேறுபடுகிறது.) குடும்ப அளவுக்கு ஏற்ப உச்ச வரம்பிலிருந்து விலக்களிக்கப்படு கின்றது. ஆனால், அஸ்ஸாமில் குடும்ப அளவுக்கு ஏற்ப விலக்கு அளிக்காமல் உச்ச வரம்பு 50 ஏக்கர் நிலமாகக் குறிக்கப் பட்டுள்ளது. கேரளாவில் உச்ச வரம்பு 15 ஏக்கர் இரு போக சாகுபடி நிலமாகக் குறிக்கப்பட்டுள்ளது. மணமாகாத ஒரு வருக்கு உச்சவரம்பு பகுதியில் பாதியாகக் குறிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் உச்சவரம்பு 30 நிலையான ஏக்கர்களாக ஆரம்பத்தில் குறிக்கப்பட்டது. ஒரு நிலையான ஏக்கர் (Standard acre) என்பது நிலத்தின் தரம், நிலத்தின் மதிப்பீடு ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு, ஒன்று முதல் நான்கு ஏக்கர்களாக மாறும் ஒன்றாகும். தமிழ் நாட்டில் குடும்ப அளவுக்கு ஏற்ப உச்ச வரம்பிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. ஐந்து ஏக்கர் நிலத்திற்கு மேல் ஒரு குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஐந்து ஏக்கர் அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தமிழக அரசு நில உச்சவரம்பை 15 நிலையான ஏக்கர்களாகக் குறைத்துள்ளது. மைசூரில் குடும்ப அளவின் அடிப்படையில் விலக்கு அளிக்கப்பட்டு 27 நிலையான ஏக்கர்கள் உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்காள அரசு குடும்ப அளவுக்கு விலக்களிக்காமல் உச்ச வரம்பை 25 ஏக்கர் நிலமாக நிர்ணயித்துள்ளது. நில உச்ச வரம்புச் சட்டம் அமுல் படுத்தப்படும் காலத்தில் நில உச்சவரம்பின் அடிப்படையில் ஏராளமான நிலம் நிலச் சொந்தக் காரர்களிடமிருந்து மாற்றப்படுகிறது. இவ்வாறு நிலங்கள் மாற்றமடைவது நில உச்சவரம்புச் சட்டங்களின் நோக்கங்களுக்கு எதிராகவே அமைகின்றது. அஸ்ஸாம், குஜரத், கேரளா, தமிழ்நாடு போன்ற அநேக மாநிலங்களில் நில உச்சவரம்புச் சட்டத்தினால் நிலம் மாற்றப்படுவது பெரும்பாலும் வரவேற்கப்படுவதில்லை.

உச்ச வரம்பிற்கு விலக்குகள்

இரண்டாம் திட்டம் நில உச்ச வரம்பிலிருந்து கீழ்க்கண்ட நில வகைகளுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது: 1. தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்கள். 2. பழத் தோட்டங்கள் 3. கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, கம்பளி உற்பத்தி போன்ற தனிப் பண்ணைகள். 4. சர்க்கரை ஆலைகளால் நிருவகிக்கப்படும் கரும்புப் பண்ணைகள் அதிக மூலதனத்துடன் நிரந்தர அமைப்புகளை ஏற்படுத்தித் திறமையுடன் செயலாற்றிவரும் பண்ணைகள் இவ்வாறு விலக்கு அளிப்பதன் மூலம் தோட்டங்கள், தொழில் துறை, வேளாண்மைத் துறை போன்றவைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல் சாதிக்க முடியும். மேலும், செடிகளை வளர்த்தல், கால்நடை வளர்த்தல் போன்ற விவசாயப் பணிகளை நீண்டகால அடிப்படையில் முதலீடுகளை அதிகரிக்க வாய்ப்பு கிடைக்கிறது. திறமையாக நிருவகிக்கப்பட்டு வரும் பண்ணைகளைப் பாதுகாப்பதால் உற்பத்தி குறையும் என்கிற அச்சத்தை நீக்க முடியும்.

எச்ச நிலத்தைப் பங்கிடுதல்

நில உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்ட பிறகு அடுத்தபடியாக நிலமில்லாதவர்களுக்கு எச்சநிலத்தைக் காலம் தாழ்த்தாது மறுபடியும் பங்கிட வேண்டும். எச்ச நிலங்களுடன் கழிவு நிலங்களையும் பூதான இயக்கத்தின் அடிப்படையில் கிடைக்கும் நிலங்களையும் சேர்த்து நிலம்பங்கிடப்படவேண்டும். இரண்டாம் திட்டம் நிலக்குடியேற்றத் திட்டங்களை அமுலாக்கும்போது, யார் யாருக்கு முதலிடம் அளிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. நிலக்கிழார்கள் சொந்த சாகுபடிக்காக நிலத்தை மீண்டும் பெற்றதன் விளைவாக வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்கள், சிக்கனமற்ற நில உடைமைகளைக் கொண்ட விவசாயிகள், நிலமில்லா வேளாண்மைக் கூலிகள் என்ற முறைப்படி முதலிடம் அளிக்கப்பட்டுக் குடியேற்றத் திட்டங்கள் செயல்பட வேண்டும். குடியேற்றங்கள் கூடுமான வரைக்கும் கூட்டுறவு முறையின் அடிப்படையிலே ஏற்படுவது சிறந்தது எனக் கருதப்பட்டது. கடந்த 18 ஆண்டுகளில் சுமார் 10 மில்லியன் ஏக்கர் எச்சநிலம் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்குப் பங்கிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

III நிலவுடைமை ஒருங்கிணைப்பு
(Consolidation of holding)

இந்தியாவில் ஏராளமான எண்ணிக்கை கொண்ட நில உடைமைகள் மிகச் சிறிய அளவிலேயே இருக்கின்றன. இந்தியாவில் நிலங்கள் உட்பிரிவு படுத்தப்பட்டு, துண்டுபடுத்தப்படுவதாலும் (Sub-division and fragmentation of holdings) உற்பத்தியின் அளவை அதிகரிக்க முடியவில்லை. மக்கள் பெருக்கத்தின் மிகுதியாலும், பரம்பரைச் சொத்தைப் பிள்ளைகள் அனைவரும் பெறச் சட்டங்கள் இருப்பதாலும், பெருந் தொழில்களின் வளர்ச்சியால் சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் அழிந்ததாலும், இந்தியாவில் நில உடைமைக்குத் தனிமதிப்பு இருப்பதாலும் உழவர்களின் கடன் சுமையாலும், கூட்டுக் குடும்ப முறை செல்வாக்கு இழந்ததாலும் நிலம் துண்டு படுத்தப்பட்டு சிறிய அளவினைக் கொண்டதாக விளங்குகிறது. ஒரு குறித்த குறைந்தபட்ச அளவுக்குக் கீழ்நிலம் துண்டுபடுத்தப்படுவதைத் தவிர்க்க அநேக மாநிலங்களில் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால், மக்கள் தொகை அதிகரிப்பினால் நிலத்தின் மேல் மிதமிஞ்சிய அழுத்தம் இருப்பதாலும், அதிகரித்து வரும் மக்களுக்கு விவசாயமல்லாத வேலைகளை அளிக்க இயலாததாலும், மாநில அரசுகளின் சட்டங்கள் நடைமுறையில் சிறந்த பயன

ளிக்க வில்லை. கூட்டுறவுப் பண்ணைகளை அதிகப்படுத்துவதன் மூலம்தான் இப்பிரச்சினை தீர்க்க முடியும். ஆனால், தன்னிச்சையின் அடிப்படையில் கூட்டுறவுப் பண்ணைகளின் வளர்ச்சி ஏற்பட காலதாமதம் ஆகும். சிறிய நில உடைமையாளர்களின் உற்பத்தியை அதிகரிக்க வழி முறைகளைக் கண்டறிவதுதான் பெரும் பிரச்னையாக உள்ளது. சிறிய நில உடைமையாளர்களின் உற்பத்தியை அதிகரிக்க அவர்களை வெகு சீக்கிரத்தில் பணி கூட்டுறவு நிறுவனங்களின் (Service Co-operatives) பிடிக்குள் கொண்டுவருவது இன்றியாமையாததாகும். இதன் மூலம் சிறிய நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கடன் வசதியும், மற்ற முக்கிய உற்பத்தி சாதனங்களும், வசதிகளும் கிடைக்கும். நில உடைமைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் தான் நிலப் பிரிவு, நிலம் துண்டுபடுத்தப்படுதல் ஆகிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். மூன்றும் திட்ட காலத்தில் சுமார் 28 மில்லியன் ஏக்கர் நிலமானது ஒன்று சேர்க்கப்பட்டது. கடந்த 15 ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்ட "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்ற கொள்கையானது பெருமளவில் சொந்த சாகுபடியின் அளவை அதிகரிக்கப் பெருந்துணை புரிந்தது.

நவம்பர், 1963-ல்தேசிய வளர்ச்சி சபையின்மதிப்பீட்டின்படி நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் சில மாநிலங்களின் பல்வேறு காரணங்களால் முழுவதுமாக அமுலாக்கப்படவில்லை. கிராமப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும் நிலச் சீர்திருத்தங்களை வேகமாக அமுலாக்கியே ஆகவேண்டும் என்றும் இச்சபை வலியுறுத்தியது. மூன்றும் திட்ட இறுதிகாலத்திற்குள் எல்லா மாநிலங்களும் நிலச் சீர்திருத்தத் திட்டங்களை முழுமையாக அமுல்படுத்தியே ஆகவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது.

நான்காம் திட்ட நிலச் சீர்திருத்தச் செயல் முறைகள்

நான்காம் திட்டத்தில் கீழ்க் கண்ட நிலச் சீர்திருத்தச் செயல் முறைகளில் அக்கறை காட்டப்படும். 1. சட்டத்திற்கும் நடைமுறைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க நிர்வாக இயந்திரத்தைப் பலப்படுத்தி மக்களின் ஆதரவைத் திரட்டி நிலச் சீர்திருத்தங்களை மேற் கொள்ளுதல், 2. குத்தகைச் சீர்திருத்தங்களைச் சிறந்த முறையில் அமுலாக்கத் தேவையான குத்தகை தஸ்தாவேஜிகளை ஏற்படுத்திஅவற்றைச் சீரான முறையில் வைத்திருக்க வகை செய்தல். 3. நிரந்தரமாகக் குத்தகை உரிமை பெற்றுள்ள குடியானவர்களின் உரிமை பாது காக்கப்பட அவர்கள் நிரந்தரமான சீரமைப்புகளை நிலத்தில்

ஏற்படுத்த அனுமதி வழங்குதல், அவர்களுக்குப் போதுமான தக்க கால கடன் வசதிகளை அளிக்கச் செய்தல். 4. ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களில் தற்காலிகக் குத்தகை முறைகளே அதிகமாக இருப்பதால், நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் சீக்கிரம் அமுலாக்கவில்லை என்றால் வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும். 5. சொந்த சாகுபடி செய்வதற்காக நிலம் திருப்பிக் கொடுக்கப் படுவதால், வெளியேற்றங்கள் அதிகமாகின்றன. சொந்த சாகுபடிக்காகக் கொடுக்கப்பட்ட நிலம் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டு விட்டதால் சொந்த சாகுபடிக்காகக் கொடுக்கப்பட்ட நிலத்தைத் திரும்பப் பெற்று குத்தகை தாரர்களுக்கு நிரந்தர உரிமைகளின் அடிப்படையில் கொடுக்க முயற்சிகள் எடுக்கவேண்டும். 6. தன்னிச்சை நில ஒப்படைப்பு பெரும்பாலும் போலியான தாகவே இருப்பதால், வருங்காலத்தில், அரசாங்கத்தினிடமே நிலங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். 7. ஆந்திரப் பகுதிகள் தமிழ் நாடு, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இன்னும் நில வாரம் சட்டத்தின் மூலம் அதிகமாகவே இருந்து வருகிறது. திட்டங்களில் பரிந்துரைக்கப்பட்ட அளவாகிய மொத்த உற்பத்தியில் நான்கில் 1 பகுதியோ அல்லது ஐந்தில் ஒரு பகுதியோ வாரமாகப் பிரிக்கப்படல் வேண்டும்.

நிலச் சீர்திருத்தக் கொள்கைகளின் மதிப்பீடு

இந்திய நிலச் சீர்திருத்தக் கொள்கை பல வகைகளில் குறைகளை உடையதாய் உள்ளது. நாட்டின் பல பகுதிகளில் சாகுபடி முறையானது இன்னும் தானியங்களைப் பங்கிட்டுக் கொள்ளும் ஏற்பாட்டின் படியே நடந்து வருகிறது. தன்னிச்சை நில ஒப்படைப்பு முறை (Voluntary Surrenders) களின் மூலம் குத்தகையாளர்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நியாயமான வாரம் நடைமுறையில் செயலாக்கப் படவில்லை. நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து பாதுகாப்புப் பெற நிலத்தை மற்றவர்கள் பெயரில் எழுதி வைப்பதும், பாகப் பிரிவினை செய்து கொள்வதும் ஆகிய முறைகளை மக்கள் பின்பற்றுகின்றனர். நிலமற்றவர்களுக்குப் பங்கிடத் தேவையான அளவு நிலம் கிடைப்பதில்லை. நிலச் சீர்திருத்தத் திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பிட அவைகளின் இரு அடிப்படை நோக்கங்களின் அடிப்படையில் அறிந்துகொள்ளலாம். நிலச் சீர்திருத்தக் கொள்கைகளின் இரு முக்கிய குறிக்கோள்களாவன: 1. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் வழிகளுக்கு முன் தோன்றும் முட்டுக்கட்டைகளைத் தகர்த்து எறிதல்.

2. வேளாண்மை முறையில் ஏற்படும் சுரண்டல், சமூக அநீதி போன்ற குறைகளை நீக்குதல்.

இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் நேரான வழியில்தான் அமைந்துள்ளன. ஆனால், சரியான முறையில் செயல்படுத்தப் படாததால் உண்மையான முடிவுகள் திருப்திகரமானதாக இல்லை. நிலச் சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றுவதிலும் அமுலாக்குவதிலும் காலதாமதம் இருந்து வருகிறது. சக்தி வாய்ந்த பணக்கார நிலக்கிழார்களுடன் பகைத்துக் கொண்டால், தங்களுடைய அரசியல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுமோ என்று அஞ்சி, அநேக மாநில அரசுகள் நிலச் சீர்திருத்த முறைகளை அமுலாக்குவதில் பிற்பட்டன. இருபது ஆண்டுகளாக நிலச்சீர்திருத்தச் சட்டங்களை அமுலாக்கிய பிறகும் கிராமப் பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகள் எல்லாவகைகளிலும் அதிகமாகவே இருந்து வருகின்றன. வாழ்க்கைத் தரம், வருமானப் பங்கீடு ஆகியவற்றை ஆராய அமைக்கப்பட்ட மஹாலனோபிஸ் குழு 1953–54, 1956–60-க்கும் இடைப்பட்ட காலங்களில் ஏராளமான நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் நாட்டில் இயற்றப்பட்டிருந்தாலும் வேளாண்மைத்துறையில் ஏற்றத் தாழ்வு எதிர் பார்த்த அளவு குறைக்கப்படவில்லை. நில வாரங்கள் இன்னும் அதிகமாகவே இருந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழ் நாட்டில் மொத்த உற்பத்தியில் 40%க்கு மேல் வாரமாக நிலக்கிழார் பெறக்கூடாது என, சட்டமியற்றப்பட்டுள்ளது. ஆனால், நிலத்தில் குடியானவர்களின் அழுத்தம் அதிகமாக இருப்பதால் நிலக்கிழார் 50 அல்லது 60 சதவீத தானியங்களைக் குத்தகைதாரர்களிடம் இருந்து கைப்பற்றுவது வழக்கமாய் உள்ளது.

முடிவுரை : இந்தியாவில் நிலச் சீர்திருத்தம் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்று கருதப்பட்டுத் தனியாகவே அமுல் படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அது வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுடன் ஓர் ஒருங்கிணைந்த நடவடிக்கையாக வலியுறுத்தப் படவேண்டும். மேலும், நிலச்சீர்திருத்தத்தின் மூலமாக மட்டுமே வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து விடலாம் என்பது தவறான கருத்தாகும். குத்தகைச் சீர்திருத்தத்தின் விளைவாக உண்டாக்கப்பட்டுள்ள புதிய நிலச்சொந்தக்காரர்கள், குத்தகைதாரர்கள் ஆகியவர்களுக்கு வேளாண்மைக் கடன், ரசாயன உரம் போன்ற உள்ளீடுகள், பிற இன்றியமையாத பணிகள் ஆகிய வசதிகள் அளிக்கப்பட்டால் ஒழிய, நிலச் சீர்திருத்தங்கள் எதிர் பார்க்கும் அளவு சிறந்த விளைவுகளை ஏற்படுத்தாது.

16. இந்திய உணவுப் பிரச்சினை

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் உணவு பிரதானப் பங்கினைப் பெற்றுள்ளது. ஏனெனில், மொத்த நாட்டு வருவாயில் 45 சதவீதத்தை வேளாண்மைத் துறைதான் நல்கி வருகின்றது. விவசாய உற்பத்தியில் 75 சதவீதம் உணவு தானியங்களே அமைந்துள்ளன. எனவே, உற்பத்தியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் நாட்டு வருவாயிலும், அதற்கு இணையான மாற்றத்தைக் காணலாம். சுருங்கக் கூறின், உணவு உற்பத்தியின் அதிகரிப்பு நாட்டு வருவாயை அதிகரிக்கச் செய்கிறது. அதைப்போலவே, உணவு உற்பத்தியின் அளவு பருவகால மழை தவறுதல் போன்ற காரணங்களால் குறைந்தால் நாட்டு வருவாயும் குறைந்து மக்களின்வாழ்க்கைத் தரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவேதான், "இந்திய விவசாயத்தைப் பருவகால மழையின் போது ஏற்படும் ஒரு சூதாட்டம்" என்று கருதினர். அடுத்தபடியாக, பெரும்பாலான குடும்பங்களின் மொத்த வருமானத்தில் சுமார் 50 முதல் 75 சதவீதம் உணவு தானியங்களுக்காகச் செலவிடப்படுகிறது. உணவுப் பொருள்களின் விலைகள் உயரும் போது, பொதுவாக விலைகளில் ஏற்றமும், பண வருவாயின் வாங்கும் திறனில் இறக்கமும் ஏற்படுவதைக் காணலாம். இச் சூழ்நிலையில் அதிகக் கூலியும், சம்பளமும் தேவைப்படுகிறது. இவ்வாறு கூலியும் சம்பளமும் உயர்த்தப் பட்டால் உற்பத்திச் செலவு அதிகரித்து மீண்டும் பொருள்களின் விலைகள் உயருகின்றன. உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதன் காரணமாக, நாட்டில் விலை பண வீக்கச் சுழல் ஏற்படுகிறது.

பேராசிரியர் டன்ட்வாலா அவர்கள், இந்தியாவின் உணவுப் பிரச்சினையைக் கீழ்க்கண்ட வரிகளில் தொகுத்துக் கூறுகிறார். "நாம் தீர்க்க வேண்டுவது, ஒரு நெருக்கடியாய் இல்லை. ஆனால், ஒரு தீராப் பெரும் நோயாகும். அதற்கான

தீர்வுகள் மாறி மாறிக் காணப்படும் தன்மையுடையவைகளாய் இல்லாமல் தொடர்ந்த நிலையான தீர்வுகளாய் இருக்க வேண்டும்." சில நாட்களுக்கு முன் ஃபோர்டு (Ford) நிறுவனத்தால் அனுப்பப்பட்ட விவசாய உற்பத்தி நிபுணர் குழு இந்திய உணவு நிலையைக் கீழ்க்கண்டவாறு வருணித்தது. "உணவு உற்பத்தி நெருக்கடியான நிலையில் உள்ளது. அடுத்த சில ஆண்டுகளுக்கு இந்தியாவின் அடிப்படைப் பிரச்சினையாக இருக்கப் போவது உணவு உற்பத்திப் பெருக்கமேயாகும். போதுமான அளவு உணவுப் பொருள்கள் மக்களுக்குக் கிட்டா விட்டால் மக்கள் நலனைப் பெருக்குதல், சமூக நீதியைச் சாதித்தல், மக்களாட்சியைப் பேணிக் காத்தல் ஆகியவைகளைப் பெறப் பெரும்பாலும் முடியாது."

இந்திய உணவுப் பிரச்சினையை மூன்று முக்கியப் பகுதிகளாகப் பிரித்து ஆராய்வது பயனுள்ளதாகும். (1) உணவுப் பொருள் உற்பத்தி, (2) பகிர்வு, (3) விலைகள். உணவுக் கொள்கையின் பரந்த நோக்கங்களாவன: உணவுப் பொருள்களில் தன்னிறைவு பெறுதல், உணவுப் பொருள் அளிப்புகளைச் சரிசமமாகப் பங்கீடு செய்தல், உணவுப் பொருள்களின் நிலையான விலைகளைப் பாதுகாத்தல் ஆகியவைகளாகும். உணவு விலைக் கொள்கையானது உணவு உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது. விலைக்கொள்கையின் பரந்த நோக்கம், உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான விலைகளைக் கிடைக்கச் செய்வதும், நுகர்வோருக்குச் சிக்கனமான விலையில் பொருள்கள் கிடைக்கச் செய்வதும், தகுந்த விலைகளை நிலைத்து இருக்கச் செய்தலும் ஆகும். உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்தால் பகிர்வுப் பிரச்சினை சுலபமாகும். சீரான பகிர்வு இருந்தால் விலைகள் கட்டுக்கடங்கி இருக்கும்.

உணவு தானிய உற்பத்தி : 1921-ம் ஆண்டு வரை சீரான உணவு உற்பத்தி இந்தியாவில் இருந்து வந்தது. மேலும், உணவுப் பொருள்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டு வந்தன. இரண்டாம் உலகயுத்தத்திற்குச் சிறிது முன் மக்கள்தொகை மிக வேகமாகப் பெருகி வந்ததால், உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மக்கள்தொகைப் பெருக்கம் ஒன்றே, இந்திய உணவுப் பிரச்சினையின் பிரதானக் காரணியாக நெடு நாட்களாக இருந்து வருகிறது. 1891-க்கும் 1921-க்கும் இடைப்பட்ட காலத்தில் மக்கள் தொகை 14 மில்லியன் அதிகமாகப் பெருகியது, 1921-க்கும் 1951-க்கும் இடைப்பட்ட காலத்தில் அது

116 மில்லியன் அதிகமாகப் பெருகியது. 1931-க்கும் 1941-க்கும் இடைப்பட்ட காலத்தில் உணவு தானிய உற்பத்தி 1·5 சதவீதம் அதிகரித்தது. ஆனால், அதே காலப் பகுதியில் மக்கள் தொகையோ 15 சதவீதம் பெருகியது. எனவே, உணவு உற்பத்திக்கும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் இடையிலுள்ள இடைவெளி வளர்ந்து வருகிறது. நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே உணவு தானியங்களின் தட்டுப்பாடு சிறிது காணப்பட்டது. இக்காலத்தில் உணவு பற்றுக்குறை ஏற்பட 3 காரணங்கள் இருந்தன. (1) 1937-ல் மிஞ்சிய உணவு உற்பத்தி கொண்ட பர்மா இந்தியாவிலிருந்து பிரிந்தது. (2) 1921–லிருந்து ஏற்பட்ட மக்கள் தொகையின் அதிகரிப்பு, (3) 1900—1945 வரைக்கும் உணவு தானியங்கள் உற்பத்தியின் அதிகரிப்பு வீதம் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. 1948-ல் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினை 'எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல' இந்திய உணவு உற்பத்திப் பிரச்சினையைப் பேரளவில் அதிகரித்தது. ஏனெனில், பிரிவினையால் ஏற்கனவே நாட்டிலிருந்த மக்களில் 82 சதவீதம் இந்தியா விலேயே இருந்தனர். ஆனால், உணவு தானியம் உற்பத்தி யாகும் நிலத்தில் 75 சதவீதம் மட்டுமே இந்தியாவிற்குக் கிடைத்தது. பாகிஸ்தானுக்கு நீர்ப்பாசன வசதிகள் கொண்ட செழிப்பான நிலம் அதிக அளவில் கிடைத்தது. நாடு சுதந்திர மடைந்த நாளிலிருந்து உணவு உற்பத்தியில் எப்படியேனும் தன்னிறைவு பெற அரசு பலவகைப்பட்ட முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது. சுதந்திர மடைந்த பின் நாட்டில் உணவுப் பொருள்களின் தேவை மிகுந்து உணவுச்சிக்கல் அதிகரித்தது. அதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

அவைகளாவன : நகரமக்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், வருமானப் பெருக்கமும், உணவு நுகர்ச்சி முறையில் காணப் பட்ட மாற்றமும் ஆகும். பொதுவாக, உணவுச் சிக்கலின் காரணங்களைத் தேவை, அளிப்பு மாற்றங்கள் என இரு பகுதி களாகப் பிரிக்கலாம். தேவை, அளிப்பு ஆகிய இரண்டையும் பாதிக்கும் காரணிகளால் உணவுச் சிக்கல் ஏற்பட்டு விலைகள் அதிகரிக்கின்றன.

உணவுப் பிரச்சினையின் காரணங்கள்

உணவுத் தேவையை அதிகரிக்கும் காரணிகள்

(1) நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வரும் சமயத்தில் மக்களிடம் வருவாய் அதிகரித்து, அதனால் உணவுப்

பொருள்களை வாங்கும் திறன் அதிகரிக்கிறது. குறைந்த வருமானம் பெற்று வருபவர்களிடம் வருவாய் அதிகரித்தால், உணவுத் தேவை வருமான நெகிழ்ச்சி (Income Elasticity of Demand) அதிகரிக்கிறது. பணவருவாய் பெருகும் அளவுக்கு உணவுப் பொருள்கள் பெருகாததால், விலை அதிகரிக்கிறது; 1955-ம் ஆண்டுக்குப்பின் தான் திட்டமிட்ட முதலீடு உணவுப் பொருள்களின் விலையை அதிகரித்தது. உதாரணமாக, 1953–54-ல் ரூ. 340 கோடியாக இருந்த வருடாந்திர முதலீடு மூன்றும் திட்ட காலத்தில் ரூ. 2000 கோடியாக அதிகரித்தது. அதனால், அதிகப் பணம் மக்களின் புழக்கத்திற்கு வந்தது. அதன் விளைவாக, உணவுப் பொருள்களின் விலை உயர்கிறது. பற்றுக்குறை நிதியாக்கம் (Deficit Financing) மேற்கொள்ளப் பட்டதால், புதிதாக ஏற்படுத்தப்பட்ட பணம் உணவுப் பொருள்களின் விலையை அதிகரித்தது. முதல் திட்டத்தில் ரூ. 420 கோடியாக இருந்த பற்றுக்குறை நிதி இரண்டாம் திட்டத்தில் ரூ. 954 கோடியாக மாறி மூன்றும் திட்டத்தில் ரூ. 1150 கோடியாக அதிகரித்தது.

(2) வங்கிகளின் கடன் பணமும் மக்களிடம் பணப் புழக்கமும் திட்ட காலத்தில் பெருமளவில் அதிகரித்தது. 1951–52-ல் ரூ. 580 கோடியாக இருந்த வணிக வங்கிகளின் கடன் பணம் 1960–61-ல் ரூ. 1320 கோடியாக வளர்ந்து 1967–68-ல் ரூ. 2000 கோடியாக அதிகரித்தது. 1951-ம் ஆண்டுக்கும் 1967-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வணிக வங்கிகளின் கடன் பணம் சுமார் 350 சதவீதம் அதிகரித்தது. பற்றுக்குறை நிதியாக்கமும், வங்கிகளின் கடன் பணப் பெருக்கமும், நாட்டில் பண அளிப்பை அதிகரித்தது. 1951-52-ல் ரூ. 1850 கோடியாக இருந்த பண அளிப்பு 1960–61-ல் ரூ. 2870 கோடியாகப் பெருகி 1967–68-ல் ரூ. 5350 கோடியாக அதிகரித்தது. அதனால், உணவுப் பொருள்களின் விலைகளும் உயர்ந்தன.

(3) மக்கள்தொகை அதிகரிப்பால் உணவுப் பொருள்களின் தேவை மிகுந்து விலைகள் உயர்கின்றன. 1951-ல் 361 மில்லியனாக இருந்த மக்கள் தொகை 1961-ல் 439 மில்லியனாக உயர்ந்து 1971-ல் 547 மில்லியனாகப் பெருகியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் 25 சத வீதமும், எழுபது ஆண்டுகளில் சுமார் 130 சத வீதமும் அதிகரித்துள்ளது. மக்கள்தொகை அதிகரிப்பு வீதம் இந்தியாவில் ஆண்டுக்கு 2.25 சதவீதம் ஆகும். அதாவது, ஆண்டொன்றுக்குச் சராசரியாகப் புதிதாக

அதிகரிக்கும் மக்களின் எண்ணிக்கை 15 முதல் 20 மில்லியன் ஆகும். இவ்வாறு ஆண்டுதோறும் அதிகரிக்கும் மக்களுக்கு உணவு வழங்குவதோடு, ஏற்கனவே நாட்டில் இருப்போருக்கும் சிறந்த உணவை அளிக்க வேண்டிய பொறுப்பு சிக்கலை ஏற்படுத்துகிறது.

(4) மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு நகர்மயமும் அதிகரிப்பதால், நகரங்களில் உணவுப் பொருள்களின் தேவை பெருகி விலைகள் உயர்கின்றன. தொழில் மயம் ஏற்படுவதால் நகரங்கள் வளர்ச்சி பெறுவதோடு, புது நகரங்களும் தோன்றுகின்றன. இது காறும், கம்பு, கேழ்வரகு போன்ற தானிய வகைகளை உண்டு பழக்க மானவர்களும் கூட, அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகளைப் பயன்படுத்த ஆரம்பிப்பதால் இவற்றின் தேவை அதிகரிக்கிறது. இந்திய உணவுப் பிரச்சினையின் மற்றொரு தன்மை சத்து குறைந்த உணவுப் பொருள்களையே பெரும்பாலான இந்தியர்கள் பயன் படுத்தி வருகின்றனர். இதனால், இந்தியர்களில் பெரும்பாலோர் உடல் வலிமையும் மன வலிமையும் குறைவாகப் பெற்றுள்ளனர். எனவே, இந்தியாவில் இறப்பு வீதமும் அதிகமாய் உள்ளது. இந்தியரின் சராசரி வாழ்நாளும் குறைவாகவே இருக்கிறது. இந்தியாவிலுள்ள பெரும்பாலான நிலங்களில் உணவு அல்லாத மற்றப் பயிர்களே லாபநோக்கத்துடன் பெரும் அளவில் பயிரிடப்பட்டு வருகின்றன. உணவுப் பயிர்கள் பயிரிடப்படும் நிலங்களின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது. அதன் விளைவாக, உணவுப் பொருள்களின் தேவை அதிகரித்து தட்டுப்பாடு ஏற்படுகிறது. உண்மையில் 1962–63-ல் 8 மில்லியன் டன்களாக இருந்த உணவுப் பற்றுக் குறை 1965–66-ல் 20 மில்லியன் டன்களாக அதிகரித்தது.

(5) உற்பத்தியாளர்கள், வணிகர்கள், சில நுகர்வோர்கள், உணவுப் பொருள்களை அதிக அளவில் இருப்பாகச் சேர்த்து வைத்துக் கொள்ளுகின்றனர். இத்தகைய உணவு பதுக்கலால் உணவுப் பொருள்களுக்குச் செயற்கைப் பற்றுக்குறை ஏற்பட்டு விலைகள் அதிகரிக்கின்றன.

(6) சந்தையில் நிலையின்மை இருப்பதால் யூக வணிகர்கள் உணவு தானியங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி இருப்பு வைத்துக் கொள்ளுகின்றனர். இதனால், தேவை அதிகரித்து பொருள்கள் கொள்ளை விலைக்கு விற்கப்படுகின்றன. மேலும், உணவு தானியங்கள் சீனு, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு

கள்ளக்கடத்தல் செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. உணவு தானியங்கள் இருப்பாக வைத்துக்கொள்ளப்படுவதால்தான், உணவு நெருக்கடி ஏற்படுகிறது என்று கூறமுடியாது. விவசாயத் துறைக்கு அவசியமான நிதி உதவி கொடுக்கப் படாமல் விடப்பட்டதால், உணவு தானியங்களின் அளிப்பு குறைந்து விலைகள் அதிகரிக்கின்றன என்று பேராசிரியர் B. R. ஷெனுய் போன்ரேர் கருதுகின்றனர்.

அளிப்பைப் பாதிக்கும் காரணிகள்

(1) இயற்கைக் கோளாறுகளால் இந்தியாவின் வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு உணவு தானியங்களின் அளிப்பு குறைகிறது. தேவைக்குஏற்றவகையில் உணவுப் பொருள் அளிப்பு பெருகாமலிருப்பதால், பொருள் களின் விலைகள் அதிகரிக்கின்றன. 1960-61-ல் 82 மில்லியன் டன்களாக இருந்த உணவு தானிய உற்பத்தி பருவகால மழை தவறியதால், 1962-63-ல் 78 மில்லியன் டன்களாகக் குறைந்தது. ஆனுல், 1964–65-ல் உணவு உற்பத்தி 89 மில்லியன் டன்களாக உயர்ந்தபின் மீண்டும் குறைந்தது. 1965-66ல் உணவு தானியங் களின் உற்பத்தி ஆண்டுக்கு 72 மில்லியன் டன்னுகவும் 1966–67-ல் 74 மில்லியன் டன்னுகவும், 1967-68-ல் 95 மில்லியன் டன்னுகவும் 1968-69-ல் 98·0 மில்லியன் டன்னுகவும், 1969-70–ல் 99·5 மில்லியனுகவும், 1970-71-ல் 107·8 மில்லியன் டன்னுகவும் உயர்ந்துள்ளது. 1968-69 வரைக்கும் உணவு தானியங்களின் தேவை பெரிதும் அதிகரிக்க, உணவு உற்பத்தி குறைந்திருந் தது. தற்போது உள்ள உற்பத்தி நிலையில் உணவு நெருக்கடி சிறிது குறைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

(2) வணிகர்கள் விலை ஏற்றத்தை எதிர்நோக்கிஏராளமான உணவுப் பொருள்களை இருப்பு வைப்பதோடு, பெரும் நிலக் கிழார்களும் அதிகவிலையை எதிர்பார்த்து உணவுப் பொருள் களைத் தங்களிடமே இருப்பு வைத்துக் கொள்கின்றனர். இதனுல், உணவுப் பொருள்களின் அளிப்பு குறைந்து தட்டுப்பாடு அதிகரித்து விலை உயர்கிறது.

(3) உணவுப் பொருள்களின் அளிப்பு இரண்டாம், மூன்ரும் திட்ட காலத்தில் குறைந்ததற்குக் காரணம் முதல் திட்டத்தில் வேளாண்மைக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பிடம் பின் அமுலாக்கப்பட்ட திட்டங்களில் அளிக்கப்படாததுதான் என்று சிலர் கருதுகின்றனர்.

(4) பற்றாக்குறையை ஈடுகட்டுமளவுக்கு அரசு தானியங்களை கையிருப்பில் வைக்க முடியாததாலும், தானியத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. நிர்வாகக் குறைகளால் தானியக் கொள்முதலை யும், பங்கீட்டையும் அரசு திறம்பட நடத்த முடியவில்லை என்று திரு K. N. பட்டாச்சாரியா குறிப்பிட்டுள்ளார்.

(5) அயல்நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதால் ஓரளவு உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க முடிகிறது. ஆனால், சில வேளைகளில் உலக அரசியல் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றத்தால் இறக்குமதி தாமதிக்கப் படுவதால் உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கின்றது.

எனவே, தேவை, அளிப்பு ஆகியவைகளின் மாற்றத்தால் இந்தியாவில் உணவுச் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனலாம். உணவுப் பிரச்சினையைப் போக்கி உணவுப் பொருள்களில் தன்னிறைவு பெற அரசு மேற்கொண்ட தீர்வுகளை நீண்ட காலத்தீர்வுகள், குறுகிய காலத் தீர்வுகள் என இரு வகைகளா கப் பிரிக்கலாம். சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை அரசு மேற்கொண்ட முயற்சிகளை மூன்று பரந்த பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) திட்ட காலத்திற்கு முன் அரசு மேற்கொண்ட வழிமுறைகள், (2) முதல் மூன்று திட்ட காலங்களில் அரசு மேற்கொண்ட தீர்வுகள், (3) நான்காம் திட்டத்தில் அரசு மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள்.

திட்ட காலத்திற்குமுன் தீர்வுகள்

சுதந்திரம் பெற்ற உடன் உணவுப் பொருள்களில் தன்னிறைவு பெற ''உணவு உற்பத்தி அதிகரிக்கும் திட்டம்'' (Grow More Food Campaign) மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் சிறு நீர்ப்பாசன வேலைகள், நிலச்சீரமைப்பு, சீரான விதைகள், உரங்கள் ஆகியவைகளை அளித்தல்போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனாலும் சரியான பருவகால மழையாலும், 1947-48-ல் 52 மில்லியன் டன்னாக இருந்த உணவுப் பொருள் உற்பத்தி 1948-49-ல் 54 மில்லியன் டன்களாக உயர்ந்தது. ஆனால், வெகு சீக்கிரத்தில் உணவுப் பொருள்களின் உற்பத்தி குறையஆரம்பித்தது. அது 1949-50-ல் 52 மில்லியன் டன்னாகவும் 1950–51-ல் 50 மில்லியன் டன்னாகவும் குறைந்தது. இந்நிலையைச் சமாளிக்க அரசு இறக்குமதியை 1947-48-ல் 3 மில்லியன் டன்களிலிருந்து1951-ல் 5 மில்லியன் டன் களாக அதிகரித்தது. ''உணவு உற்பத்தி அதிகரிப்பு

திட்டத்தால் உணவுப் பொருள்களில் தன்னிறைவு பெறவேண்டுமென்ற குறிக்கோள் வெற்றி பெறவில்லை. 1950-51-ல் "உணவு உற்பத்தி அதிகரிப்பு திட்ட"மானது "ஒருங்கிணைந்த உற்பத்தித் திட்டமாக" மாறி (Integrated Production Programme) "அதிக உணவுப் பெருக்கத்"துடன் கூட "அதிக பஞ்சு உற்பத்தி", "அதிக சணல் உற்பத்தி" ஆகிய திட்டங்களையும் உள்ளடக்கியது. இதனால், நிலம், உரங்கள் போன்ற உள்ளீடுகள் பஞ்சு, சணல் ஆகியவைகளின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டன. எனவே, வெளிப் படையாகவே உணவு தானியங்களில் தன்னிறைவு பெறச் சாதிக்க வேண்டிய இலக்குகளை அடைய முடியாமல் போயிற்று. 1952-ல் திரு V. T. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் தலைமையில், "அதிக உணவுப் பெருக்கத் திட்டம்" வெற்றியடையாமைக் குரிய காரணங்களை ஆராய்ந்து அரசுக்கு அறிவுரை வழங்க "அதிக உணவுப் பெருக்கத்திட்ட விசாரணைக் குழு" ஒன்று நியமிக்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளைச் சாதிக்க இத்திட்டம் தவறிவிட்டது என்ற முடிவுக்கு இக்குழுவும் வந்தது. இத்திட்டம் மேற்கொண்டு வெற்றியுடன் செயல் படுத்தப்பட மூன்று முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று இக்குழு பரிந்துரைத்தது. (1) சிறு நீர்ப்பாச னத் திட்டங்களை வேகப்படுத்துதல் (2) நாடு முழுவதும் நாட்டு விரிவு பணிகளை (National Extension Services) மேற்கொள்ளு தல் (3) விவசாயிகளுக்குப் போதுமான அளவு கடன் வசதி அளித்தல் ஆகியவைகளாகும். இப்பரிந்துரைகளை அரசு முழுவதுமாக ஏற்றுக்கொண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அமுல் படுத்தியது.

திட்ட காலத் தீர்வுகளும் சாதனையும்

முதல் மூன்று திட்டங்களிலும் உணவுப் பொருள் உற்பத்தி யில் தன்னிறைவு பெற்று நிலையான உணவு தானிய உற்பத்தி யைச் சாதிக்க அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. இக்காலத்தில் குறிக்கப்பட்ட உணவுப் பொருள் உற்பத்தி இலக்கமும் சாதனைகளும் கொண்ட அட்டவணை வருமாறு :

உணவு தானிய உற்பத்தி (மில்லியன் டன்களில்)

திட்ட காலம்	இலக்கம்	சாதனை
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	58	65
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்	80·5	80
மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்	100	76

மேற்கண்ட அட்டவணையிலிருந்து முதல் திட்டமும் இரண்டாம் திட்டமும் எதிர்பார்த்த உற்பத்தி இலக்கங்களைச் சாதிக்க முடிந்தது. ஆனால், மூன்றும் திட்டம் திருப்திகரமாகச் செயல்படாததால், உற்பத்தி இலக்கங்களைச் சாதிக்க இயலவில்லை. ஆண்டுக்கு ஆண்டு உணவு தானிய உற்பத்தி மாறுபடுகிறது. 1950-51-ல் 50 மில்லியன் டன்களாகஇருந்தஉணவுப் பொருள்உற்பத்தி இருமடங்காகப் பெருகி 1967-68-ல் 95·6 மில்லியன் டன்களாக உயர்ந்திருந்தது. இரண்டாம் திட்ட காலத்தில் உற்பத்தியில் அதிக மாற்றமேற் பட்டது. இத்திட்ட காலத்தில் ஆரம்பத்தில் உற்பத்தி குறைந் திருந்தது. ஆனால், திட்ட கால இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கமாகிய 80 மில்லியன் டன்களை இத்திட்டம் எட்டிப் பிடித்தது. மூன்றும் திட்ட காலத்தில் உற்பத்தி ஏறக்குறைய குறைந்துகொண்டே சென்றது. 1961-62-ல் 79 மில்லியன் டன்களாக இருந்த உற்பத்தி 1965-66-ல் 72 மில்லியன் டன்களா கவும் 1966-67-ல் 76 மில்லியன் டன்களாகவும், இருந்தது. இவ்வாறு குறைந்தபின் 1967-68 முதல் அதிகரிக்க ஆரம்பித் துள்ளது. 1967-68-ல் 95·6 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது சிறந்த சாதனையாகும்.

திட்ட காலத்தில் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்க பலவகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக, உணவு உற்பத்திக்காக ஒவ்வொரு அடி நிலத்தையும் வீணுக்காமல் பயன்படுத்தவேண்டுமென்றும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. பொதுப் பூங்காக்களையும் தோட்டங்களையும் சாகுபடி நிலங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், இந்திய உணவுப் பிரச்சினை நீண்டகாலத் தீரா நோயாதலால், அதை இத்தகைய சுலபமான முறைகள் மூலம் தீர்த்துவிட இயலாது. திடமான ஒரு நிலைப்பட்ட சீரான முறைகளைக் கையாண்டால்தான், இப்பிரச்சினையைத் தீர்க்க இயலும். இவை நீண்ட காலத் தீர்வுகளாய் இருந்தாலும், அரசு உடனடியாக அவற்றைச் செயல்படுத்தினுல் உணவு தானிய உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற நல்ல வழி பிறக்கும். தொடர்ச்சியாகச் செயலாற்ற வேண்டிய நடவடிக்கைகளைப் பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். (1) தொழில் நுட்ப மாற்றங்கள், (2) ஸ்தாபன மாற்றங்கள், (3) நிர்வாகச் சீரமைப்பு. இவற்றோடு நான்காவதாக, பகிர்வு முறைகளையும் இணைத்துக் கொள்ளலாம்.

I. தொழில் நுட்ப மாற்றங்கள்

இம்முறைகளாவன: சிறந்த விதைகள், அதிக உரங்கள், நல்ல நீர்ப்பாசனம் ஆகியவற்றை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யப் பயன்படுத்துவது ஆகும். இத்தகைய உள்ளீடுகளால் உற்பத்தி பெருகுவது இயற்கையே. இந்தியத் திட்டக்குழு இத்தகைய உள்ளீடுகளால் பெருகிய உற்பத்தியின் அளவைக் கணக்கிட்டது. அதிர்ஷ்டவசமாக, இந்தியாவில் "பசுமைப் புரட்சி" தோன்றியதால் சில தானியங்களின் உற்பத்தி பெருகியுள்ளது.

1. உள்ளீடுகளின் இயலாமை
(Unreliability of inputs)

பேராசிரியர் டன்ட்வாலா அவர்கள் உள்ளீடுகளின் உற்பத்தியை அதிகரிக்கும் திறனையும் சத்தியையும் பெரும்பாலும் நம்ப இயலாது என்று குறிப்பிடுகிறார். ஏனெனில், உற்பத்திப் பெருக்கம் விவசாயத்தில் உண்மையில் பெரும்பாலும் பருவகால மழையின் தன்மையையும் அளவையும் பொருத்ததாகும். இந்த வேளாண்மை உள்ளீடுகளை (Agricultural inputs) போதிய அளவில் உற்பத்தியில் பயன்படுத்தியும் மூன்றும் திட்ட கால இறுதியில் உணவுப் பொருள் உற்பத்தி எதிர்பார்த்த 100 or 105 மில்லியன் டன்னை அடையவில்லை. 76 மில்லியன் டன்களாகவே இருந்து பெரும் ஏமாற்றத்தை அளித்தது. என்றும் ஏற்படா வெள்ளம், பல்வேறு விவசாய மாநிலங்களில் பஞ்சம் போன்ற இயற்கைக் கோளாறுகளால் மூன்றும் திட்ட இறுதியில் உற்பத்தி பெருகவில்லை. பலவகை உள்ளீடுகளின் உண்மையான திறனையும் சக்தியையும் மதிப்பிடுதல் சிரமமான செயலாகும். இந்திய வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கு உள்ளீடுகள் இன்றியமையாதவைகள்தான் என்பதை யாரும் மறுக்க இயலாது. இத்தகைய தொழில் நுட்ப உள்ளீடுகளைப் பெருமளவில் பயன்படுத்தத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க மற்ற இரண்டு முறைகளாகிய ஸ்தாபன மாற்றமும், நிர்வாகச் சீரமைப்பும் சிறப்பாகப் பயன்படும்.

2. விஞ்ஞான அறிவு

வேளாண்மை இயல் நிபுணர்கள் தற்போது நாட்டில் இருந்துவரும் விஞ்ஞான அறிவை முழுமையாகப் பயன்படுத்தினால் உணவுப் பிரச்சினைக்கு ஓரளவு சிறப்பாகத் தீர்வு காண

முடியுமெனக் கருதுகின்றனர். விஞ்ஞான அறிவைப் பயன் படுத்தி உற்பத்தியை மேற்கொண்டால் ஓர் ஏக்கருக்குச் சராசரி உணவுப் பொருள் விளைச்சல் அதிகரிக்கும் என்பதைக் கீழ்க்காணும் அட்டவணையின் மூலம் அறியலாம்.

தானிய வகைகள்	1963-64-ல் ஒரு ஏக்கருக்கு "சராசரி விளைச்சல்" (பவுண்டுகளில்)	அறிவைப் பயன்படுத்தினால் ஒரு ஏக்கருக்கு சராசரி விளைச்சல் (பவுண்டுகளில்)
அரிசி	820	3,000
கோதுமை	740	3,000
வாற்கோதுமை (பார்லி)	730	3,000
கம்பு	750	2,000
மக்காச் சோளம்	800	4,000

3. விவசாய இயந்திர மயமும் ரசாயன மயமும்

இந்திய உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்க, அமெரிக்கா, கானடா, ரஷ்யா போன்ற நாடுகளில்இருப்பதைப் போல் இந்திய விவசாயத்தையும் இயந்திர மயமாக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், தற்போதைய இந்தியப் பொருளாதார நிலையில் இயந்திர மயத்தை வேளாண்மையில் உட்புகுத்தினால் வேலையின்மையும் வேலைக்குறைவும் பெருமள வில் அதிகரிக்கும்என்பதில் சிறிதும் ஐயப்பாடு இல்லை. மேலும், நம்மிடம் உழும் இயந்திரங்கள், விதை விதைக்கும் கருவிகள், அறுவடைச் சாதனங்கள் போன்றவைகளை இறக்குமதி செய்ய அயல்நாட்டுச் செலாவணி வேண்டிய அளவு இல்லை. இயந்திரங்களைப் பயன்படுத்தி உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் தகுந்த பரந்த பெரிய நிலங்கள் இல்லை. ஆனால், வேளாண்மையை ரசாயன மயமாக்கினால் (Chemicalisation) உற்பத்தி அதிகரிக்கும். பலவகை ரசாயன உரங்களை நிலத்தில் போதிய அளவு பயன்படுத்தினால் உற்பத்தியின் அளவு பெருகத் தடையேதும் இல்லை. இம்முறையினால் ஜப்பான், மெக்ஸிகோ, அமெரிக்கா போன்ற நாடுகளில் உணவு தானியங்களில் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலும்

ரசாயன உரங்களின் உற்பத்தி பெருகி அதிக அளவில் நிலத்தில் அவைகள் பயன்படுத்தப்பட்டால் உற்பத்தி அதிகரிக்கும். தற்போது இந்தியாவில் சராசரி உர உபயோகம் மிகக் குறைந்துள்ளது என்பதைக் கீழ்க்கண்ட பட்டியல் உணர்த்தும்.

நாடு	பயிராகும் நிலம்	சராசரி உர உபயோகம் (மெட்ரிக் டன்களில்)
இந்தியா	1000 ஹெக்டார்	2 முதல் 3
சிலோன்	1000 ஹெக்டார்	6
உலக சராசரி	1000 ஹெக்டார்	8
ஜப்பான்	1000 ஹெக்டார்	125

4. அதிக நிதி ஒதுக்கீடு

வேளாண்மை உற்பத்தியை நாட்டில் அதிகரிக்க ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைக்கு இன்னும் அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை என்று பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது தவருன கருத்தாகும். எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு தேவையோ அந்த அளவுக்குத்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனுல், நிர்வாக அமைப்பில் இருக்கும் குறைகளாலும் இயற்கைக் கோளாறுகளாலும் ஒதுக்கப்பட்ட தொகையே முழுவதும் பயன்படுத்தப்படாமல் மிஞ்சி விடுகிறது. இதை முதல் மூன்று திட்டங்களில் ஏற்பட்ட அனுபவத்தி லிருந்தே நன்கு அறியலாம். நீர்ப்பாசனம் போன்ற சில துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் திட்டகாலத்திற் குள் பயன்படுத்தப்படவில்லை என்பதை நாடு அறிந்ததே. விவசாயத்தில் குறைந்த முதலீடு-உற்பத்தி விகிதம் காணப்படு கிறதென்று சிலர் கூறி நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படவேண்டு மென்று கருதினர். ஆனுல், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேளாண்மைத்துறை என்றும் புறக்கணிக்கப்படவில்லை. விவசாயத்தைவிட எஃகு போன்ற தொழில்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படக் காரணம், அத்துறைகளின் வளர்ச் சிக்கு விவசாய மூலப்பொருள்களின் தேவை இல்லை. நீர்ப்பாசன வசதி போன்ற பயன்படுத்தப்படா வளங்கள் தொழில் வளர்ச்சிக்குத் தேவை இல்லை. முதலீடு செய்து

பொருள்களைப் பெறும் வரைக்கும் உள்ள கால அளவு நிச்சய மற்றதாய் உள்ளது. மேலும், வளங்களை உருவாக்கி அவை களைப் பயன்படுத்துவதற்குமிடையேயுள்ள கால இடைவேளை நிச்சயமற்றதாய் உள்ளது. முதலீட்டுத் திறனை அடிப்படை யாகக் கொண்டும், கடன் பணம், விதைகள் போன்றவைகளைப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும் உற்பத்தி அமையும். வேளாண்மை முதலீடு என்பது நீர்ப்பாசனம், உர அலைகள், நிலப் பாதுகாப்பு, நிலச் சீராக்கம், நிர்வாக அமைப்பு, சமுதாய முன்னேற்றம் போன்றவற்றையும் உட்கொண்டுள்ளதால் இச்செலவினங்களை 'முதல்' என்னும் அம்சத்தில் சேர்த்துக்கொள்வதா என்பது விவாதத்திற் குரியதாகும்.

5. உள்ளீடுகளின் தரம்

தரமுள்ள உள்ளீடு என்பது தற்காலத்திய உள்ளீடுகளைக் குறிக்கிறது. கல்வி, பயிற்சி, தொழிலாளர் திறன், தொழி லதிபர்கள் பணி போன்றவற்றைச் சீர்ப்படுத்த மேற்கொண்ட முதலீடு உள்ளீடுகளின் தரத்தைச் சீரமைக்கப் பயன்படுகிறது. இதனுல் நீண்ட காலத்தில் உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருகும்.

6. செறிந்த முறைத்திட்டங்கள்
(Package Programmes)

செறிந்த முறை உணவு தானிய உற்பத்தித் திட்டம் "மாவட்ட விவசாயத் தீவிர சாகுபடித் திட்டம்" (Intensive Agricultural District Programme) என்றும் அழைக்கப்படு கிறது. போர்டு நிறுவன நிபுணர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது. உரங்கள், பொறுக்கு விதைகள், பூச்சி மருந்துகள் போன்ற உள்ளீடு களின் உபயோகத்தை அதிகரிப்பதே இத்தீவிர சாகுபடித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். அதிக அளவு உணவுப் பொருள் உற்பத்தியைப் பெறும் நோக்குடன் எல்லா வகை இயற்கை வசதிகள், ஸ்தாபன வசதிகள் ஆகியவற்றைச் சிறப்பாகப் பெற்ற மாவட்டங்களிலோ அல்லது சில குறிப்பிட்ட இடங்களிலோ இத்திட்டம் அமுலாக்கப்பட்டது. முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு மாவட்டங்களில் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்படி இம்மாவட்டங்களில் உர வகைகளின் நுகர்வு இருமடங்கு, மும்மடங்கு என்று

அதிகரிக்கப்பட்டது. நோயை எதிர்க்கும் சக்தி வாய்ந்த விதைகள் 50 சதவீதம் அதிகரிக்கப்பட்டன. இத்தகைய குறிப்பிட்ட நடவடிக்கைகளால் உணவுச்சிக்கலைத் தீர்க்க இயலவில்லை. "நம்முடைய முயற்சிகள் பகட்டானதாகவும் தேர்ந்தவைகளாகவும் இல்லாமல் நிதானமானதாகவும் பரந்த நோக்கம் கொண்டவைகளாகவும் இருக்க வேண்டும். எல்லா நிலப்பகுதிகளிலும் குறைந்த பட்சமாவது கூட்டுறவுப் பணி, விஸ்தரிப்புத் திட்டங்கள் அமுல் படுத்தப்பட வேண்டும்" என்று திரு. டன்ட்வாலா குறிப்பிடுவது ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

II. ஸ்தாபன மாற்றங்கள்

நாட்டில் நிறைவேற்றப்பட்ட பலவகை நிலச் சீர்திருத்தங்களே ஸ்தாபன மாற்றங்களாகும். அதாவது நாட்டிலுள்ள நில உடைமைகளின் அமைப்பில் காணப்படும் குறைகளைச் சீர்ப்படுத்துவதே ஸ்தாபன மாற்றங்களாகும். நாட்டில் மிகக் குறைந்த அளவுடைய நில உடைமைகள் (Land Holdings) இருப்பதால் தான் விவசாய உற்பத்தி இந்தியாவில் மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது உண்மைக்குப் புறம்பான தாகும். நாட்டில் சிறிய அளவு கொண்ட நில உடைமைகள் இருந்தாலும், பயிரிடப்படும் மொத்த பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவை குறைந்த எண்ணிக்கையுடையவையாகத்தான் உள்ளன. உதாரணமாக, தேசிய மாதிரி கணக்கீட்டு நிறுவனத்தின் முதல் அறிக்கையின்படி 1 ஏக்கருக்கும் குறைந்த அளவுடைய நில உடைமைகளே மொத்த நில உடைமைகளில் 40 சதவீதம்தான் இருக்கின்றன. இத்தகைய சிறு நில உடைமைகள் பயிரிடப்பட்ட மொத்த நிலத்தில் 1 சத வீதம் தான் உள்ளன. ஆனால், 19 ஏக்கர், அளவு கொண்ட நில உடைமைகள் பயிரிடப்பட்ட மொத்த பகுதிகளில் 63 சதவீதத்திற்குமேல் உள்ளன. பேராசிரியர் டன்ட்வாலாவின் கருத்துப்படி "இந்தியாவில் சிறு விவசாயிகள் உள்ளனர். ஆனால், சிறு விவசாயப்பண்ணைகள் இல்லை." ஏனெனில், பயிரிடப்படும் மொத்த பகுதிகளில் பெரிய பண்ணைகளே பெரும்பாலும் அமைந்துள்ளன. மேலும், இந்தியாவில் சிறு நில உடைமைகளில்தான் அதிகமான உணவுப்பொருள் உற்பத்தி செய்யப் படுகிறது. ஏனெனில், சிறு விவசாயி தன் நிலத்தின்மேல் பெரும் அக்கரை செலுத்தி உழைப்பின் அளவை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்குகிறான். இவ்வுற்பத்தியின் அளவு ஜப்பானிலுள்ள 2 அல்லது 3 ஏக்கர் சிறு நிலங்

களிலிருந்து கிடைக்கும் உற்பத்தியை ஒத்து இருக்கின்றது. இருந்தபோதிலும், நம் நாட்டுச் சிறு விவசாயிகளின் வருமானம் மிகவும் குறைந்துள்ளது. அவர்களின் வருமானத்தை அதிகரிக்க ஒரே வழி, இச்சிறு நில உடைமைகளை ஒருங்கிணைத்து உற்பத்தி செய்யக்கூடிய கூட்டுறவுப் பண்ணைகளுடன் இணைத்துவிட வேண்டும். இதனால் உற்பத்திபெருகுவதோடு விவசாயிக்கும்அதிக வருமானம் கிடைக்கும். பெரும் நில உடைமைகளைக்கூட்டுறவுப் பண்ணைகளுடன் இணைக்கத் தேவையில்லை. ஏனெனில், மிகப் பெரும் நிலங்களை நில உச்சவரம்புச் சட்டங்களின் மூலம் சீராக்கிக் கொள்ளலாம். சுருங்கக் கூறின், மிகக்குறைந்த நில உடைமைகளின் சிக்கலைத் தீர்க்க அவற்றை கூட்டுறவுப் பண்ணைகளில் இணைத்து விடவேண்டும். மிகப் பெரிய நில உடைமைகளை உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் சரி செய்வது நல்லது. நடுத்தர அளவு நில உடைமைகளைப் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (Service Co-operatives) மூலம் பலப்படுத்த வேண்டும். இத்தகைய ஸ்தாபன மாற்றங்களால் உற்பத்தியைப் பெருக்கி உணவுச்சிக்கலைத் தீர்க்கலாம்.

III. நிர்வாகச் சீரமைப்பு

விவசாய உற்பத்தியின் திட்டமிட்ட இலக்குகளை அமுலாக்கத் தேவையான எல்லாவகை நிர்வாகச் சீரமைப்பு முறைகளையும் அமுலாக்கவேண்டும்.உற்பத்தியின் அளவைப் பெருக்க அரசாங்கத்துறை, கூட்டுறவுச் சங்கங்கள், பஞ்சாயத்துகள் சமுதாய முன்னேற்றம், தேசிய விஸ்தரிப்புப்பணிகள் போன்ற எல்லாவகை நிறுவனங்களையும் திறமையுடன் செயலாற்றச் செய்ய வேண்டியுள்ளது. விவசாயத்துறையில் மேற் கொள்ளப்படும் தொழில் நுட்ப மாற்றங்களின் வெற்றி நிர்வாக அமைப்புத்துறையின் திறமையையும் செயலாற்றலையும் பொறுத்துத்தான் அமையும். விவசாய உள்ளீடுகளைச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கச் சம்பந்தப் பட்டவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய தலையாய பணி இவ்வமைப்புத் துறைகளைச் சாரும். ஆனால், தற்போது நிர்வாக அமைப்புத்துறை திறமை குன்றிச் செயலாற்றி வருவதாகச் சிலர் குறை கூறுகிறார்கள். பொறுக்கு விதைகள், உரங்கள் ஆகியவைகளைப் பங்கிடும் திட்டங்களைப் பற்றி இத்துறை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறுவதில்லை. நிர்வாகத் திறமையின்மை, போதாத விளம்பரமும், விவசாயிகள் போதுமான அளவு பங்கெடுக்காமை போன்ற காரணங்களால் விவசாயத் திட்டங்கள் திருப்திகரமான முறையில் செயல்பட முடியவில்லை. போதுமான கிட்டங்கி வசதியின்மை,

தரமான விதைகள் பெருகத் தேவையான கண்காணிப்பு இன்மை, விதைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு சென்று பங்கிடப்போதுமான வசதியின்மை போன்ற குறைகளை விவசாயிகள் அரசுக்குச் சுட்டிக்காட்டி வருகின்றனர். மேலும், விவசாயிகளுக்குத் தொழில் நுட்ப அறிவுரை போதுமான அளவு இல்லை. பல்வேறு அரசு துறைகளுக்கு இடையே சீரான ஒருங்கிணைப்பும், ஒருமைப்பாடும் குறைவு. எனவே, இத்தகைய குறைபாடுகளெல்லாம் நீக்கப்பட்டு விட்டால் உணவுப் பொருள் உற்பத்தி பெருமளவில் பெருகும்.

IV. சீரான பகிர்வு

கடந்த சில ஆண்டுகளாக உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க அரசு பகிர்வுத் துறையிலும் தலையிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோள் பற்றுக்குறை மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதேயாகும். அதனால், உரிமங்கள் (Licensing) அதிக பட்ச அளவைக் குறித்தல் போன்ற முறைகளால் மொத்த விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது. எச்சமுள்ள மாநிலங்களில் மாநில அரசாங்கங்கள் உணவுப் பொருளைக் கொள் முதல் செய்து பற்றுக்குறை மாநிலங்களில் அப்பொருளை விற்பனை செய்வதற்காக, மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுகின்றன. பேரளவில் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் இந்திய உணவு கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் விலை உயர்வும் தீர்வுகளும்

இதுகாறும் கூறப்பட்டதில் உணவுப் பிரச்சினைக்கும் உணவு தானிய உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பு ஆராயப்பட்டது. உணவு தானிய உற்பத்தி குறைவதன் காரணங்களும் அதன் தீர்வுகளும் உணவுப் பிரச்சினையை முழுவதுமாகப் பாகுபடுத்தி ஆராயவில்லை. நமக்குக் குறைந்த விலைக்கு உணவுப் பொருள்கள் கிடைத்து விட்டால் நாட்டில் "உணவுப் பிரச்சினையே" இல்லை என்று எல்லோரும் கூறுவர். உணவுப் பிரச்சினை நாட்டில் உண்டா இல்லையா என்பதை உணவுப் பொருள் உற்பத்தியை விட உணவுப் பொருள்களின் விலைகள் தான் தீர்மானிக்க முடியும். எனவே, உணவுப் பிரச்சினை ஏற்பட உணவுப் பொருள்களின் உற்பத்தியை விட உணவுப் பொருள்களின் விலைகள்தான் காரணம். பொது

வாக, உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதற்குத் தேவை, அளிப்பு ஆகிய இரண்டையும் பாதிக்கும் காரணிகள் தான் காரணம் என்பதை ஏற்கனவே அறிந்தோம். திட்ட காலத்தில் உணவுப் பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட மாறுதல்களையும் அவற்றைப் போக்க அரசு மேற்கொண்ட தீர்வுகளையும் இனி ஆராயலாம்.

உணவுப் பொருள் விலைகளின் மாற்றங்கள்

1947 முதல் 1950–51 வரையுமுள்ள காலத்தில் உணவுப் பொருள்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருந்தன. உணவுப் பொருள் விலைகளின் (1939—100) குறிப்பெண் 1950–51-ல் 421 ஆக உச்ச நிலையை அடைந்தது. நாட்டுப் பிரிவினை, அதிகப் பண அளிப்பு, நாட்டின் பல்வேறு பாகங்களில் ஏற்பட்ட வறட்சி, வெள்ளப் பெருக்கு போன்ற காரணங்களால் இக்காலப் பகுதியில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்தன.

விலை குறைதல் : முதல் ஐந்தாண்டுத் திட்ட காலப் பகுதியில் உற்பத்தி பெருகி, சரித்திரம் காணு அளவு உணவுப் பொருள்களின் விலைகள் குறைந்து கீழ்மட்டத்தையடைந்தன. இக்காலப்பகுதியை இந்திய உணவுப் பொருள் விலைகளின் பொற்காலம் எனக் கூறின் அது மிகையாகாது. ஏனெனில், இக்காலத்தில் பருவ கால மழை தவருமல் பெய்ததால் வேளாண்மைத்துறை செழிப்புற்று விலைகள் குறைந்தன. 1954-55–ல் 80 ஆக இருந்த தானிய விலைகளின் (1952—100) குறிப்பெண் 1955–56ல் 75 ஆக மீண்டும் குறைந்தது.

விலை உயர்வு : இரண்டாம் திட்ட கால ஆரம்ப கட்டத்திலிருந்து உயர ஆரம்பித்த தானியப் பொருள்களின் விலைகள் இன்று வரை பாராட்டத்தக்க வகையில் குறையவே இல்லை. 1950—51 லிருந்து 1960—61 வரைக்கும் ஒரு மதிப்பீடு செய்ததில் சராசரியாக ஆண்டுக்கு உணவுப் பொருள்களின் விலைகள் 4 சதவீதம் அதிகரித்தன. இரண்டாம் திட்ட காலத்திலும், மூன்ரும் திட்ட கால முற்பகுதியிலும் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கக் காரணம் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி, நாட்டின் அநேக பகுதிகளில் பருவ கால மழை தவறுதல், மக்கள் எண்ணிக்கையில் அதிவிரைவான பெருக்கம் போன்றவைகளே யாகும். அரசு மேற்கொண்ட சரியானதும் காலத்திற்கேற்றதுமான நடவடிக்கைகளின் மூலம் உணவுப் பொருள்களின் விலைகள் கட்டுப்படுத்தப்பட்டன. முக்கியமாக, தீவிர

உணவுப் பொருள் சாகுபடித் திட்டமென்ற "பசுமைப்புரட்சி" யின் மகத்தான ஆரம்பம் 1967–68-ல் உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைத்து நிலைமையைச் சுலபமாக்கி, நாட்டில் ஏற்பட்டிருந்த "உணவு நெருக்கடி" யின் தீவிரத்தைக் குறைத்தது. உண்மையில் 1967 நவம்பர் மாதத்தில் உணவுப் பொருள் விலைகளின் (1953—100) குறிப்பெண் 227-ஆக இருந்தது. ஆனால், நவம்பர் 1968-ல் 202 ஆகக் குறைந்தது.

விலை பொருள் கட்டுப்பாடு
(Physical Control)

உணவுப் பொருள்களின் விலையேற்றத்தைத் தடுக்க அவ்வப்போது அரசு திடமான கொள்கைகளை அமுலாக்கி வந்தது. நாடு சுதந்திரமடைந்த போது இந்தியாவில் பூரண உணவு தானியப் பங்கீட்டுக்கொள்கை கடைப்பிடிக்கப் பட்டு வந்தது. ஆனால், நவம்பர் 1947-ல் கட்டுப்பாடு நீக்கப்பட்ட உடன் உணவுப் பொருள்களின் விலைகள் பெரிதும் அதிகரித்த தால், 1948-லிருந்து 1951 வரை கட்டுப்பாடு அமுலில் இருந்தது.

1952-ல் உணவுப் பொருள்களின் உற்பத்தியின் நிலை சாதகமாக இருந்ததால், தினை வகைகள் போன்ற பொருள் களின் மேல் இருந்த கட்டுப்பாட்டை அரசு நீக்கியது. பொருள் களைப் பதுக்குபவர்களும், யூக வாணிபம் நடத்துபவர்களும் கட்டுப்பாட்டு நீக்கத்தால் கொள்ளை லாபமடையாமல் இருக்கச் செய்ய 1952-ல் உணவு தானியங்கள் (உரிமம், மற்றும் கொள் முதல்) உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உணவு தானியங்களின் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டதால் 1954-ல் அரிசி, கோதுமை ஆகிய பொருள்களின் மேல் இருந்த கட்டுப்பாடும் நீக்கப்பட்டது. உணவுப் பொருள்களின் விலைகள் பெருமள வில் குறைவது விவசாயிகளின் வருமானத்தைப் பாதிப்பதால், குறைந்த பட்ச விலைகளை அரசு அறிவித்தது. தினை வகைகள், கோதுமைப் பொருள்களை ஏற்றுமதி செய்யவும் அரசு அனு மதித்தது.

இரண்டாம் திட்ட காலத்தில் உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருமளவில் குறையாமலிருக்கும் போதும் விலைகள் உயர ஆரம்பித்ததால், உணவுப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது தடை செய்யப்பட்டது.

திரு. அசோக் மேத்தா அவர்களைத் தலைவராகக் கொண்ட "உணவு தானியங்களின் விசாரணைக் குழு" ஒன்றை அரசு

ஏற்படுத்தியது. மக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டதாலும் மக்களிடம் வருமானம் அதிகரித்ததாலும் தான் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்ததாக இக்குழு அறிவித்தது. தேவையான அளவு உணவுப் பொருள்களைக் கையிருப்பாக அரசு வைத்துக்கொண்டு மொத்த வியாபாரத்தில் வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையைக் கையாளும் படியும் இக்குழு அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. உணவு மண்டலங்களை ஏற்படுத்துதல், நியாய விலைக்கடைகள் மூலம் உணவுப் பொருள்களைப் பங்கிடுதல், விலை சரிசமப்படுத்தும் ஒரு சபை, உணவு தானியங்கள் சரிசமப்படுத்தும் ஒரு நிறுவனம் ஆகியவற்றை ஏற்படுத்துதல், காலப்படி இறக்குமதி செய்தல், துணை உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து நுகர்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்கும்படியும் இக்குழு அரசுக்கு அறிவுரை கூறியது. இப் பரிந்துரைகளில் பெரும்பாலான வற்றையும், மற்றப் பல ஆலோசனைகளையும் அரசு செயலாக்கியும் உணவுப் பொருள்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்தன. அரசு அமுலாக்கிய குறுகிய காலத் தீர்வுகள் வருமாறு:

அரசின் சமீப காலத் தீர்வுகள்

(1) உணவு தானிய இறக்குமதி
(Food Imports)

உணவுப் பிரச்சினையைத் தற்காலிகமாகப் போக்க அரசு உணவு தானியங்களைப் பல ஆண்டுகளாக அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், பர்மா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வந்தது. இரண்டாம் உலக மகா யுத்த காலத்திற்கு முற்பட்ட மூன்று ஆண்டுகளுக்குச் சராசரியாக இறக்குமதி ஆண்டுக்கு 2·09 மில்லியன் டன்னாக இருந்தது. 1947-ல் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து முதல் திட்ட கால ஆரம்பம் வரையிலுமான ஐந்து ஆண்டுகளில் சராசரியாக இறக்குமதி ஆண்டுக்கு 2·7 மில்லியன் டன்களாகும்.

1960-ம் ஆண்டிலிருந்து உணவு தானியங்களின் இறக்குமதியின் அளவு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. 1960-ல் இந்திய அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி 17 மில்லியன் டன் உணவு தானியங்களை இந்தியா அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து வாங்கியது; இதில் 16 மில்லியன்டன் கோதுமையும் 1 மில்லியன் டன் அரிசியுமாகும். 1965-ல் இந்திய அரசாங்கம் அமெரிக்

காவுடன் செய்து கொண்ட மற்றோர் ஒப்பந்தத்தின்படி இந்தியா அமெரிக்காவிடமிருந்து 20 மில்லியன் டன் உணவு தானியங்களை இறக்குமதி செய்தது. இத்தகைய வாங்கல்கள் எல்லாம் பொதுக்கடன் 480 (P.L. 480)-ன் வாங்கல்கள் என்று அழைக்கப்படுகின்றன. பி. எல். 480-ன் அடிப்படையில் உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டது போக, ஆஸ்திரேலியா, பர்மா போற நாடுகளிலிருந்தும் உணவுப் பொருள்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சராசரியாக ஆண்டுக்கு ரூ. 1 கோடி மதிப்புள்ள உணவு தானியங்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது, முக்கியமாக, கடந்த பத்து ஆண்டு காலமாக, சராசரி இறக்குமதி ஆண்டுக்கு மூன்று மில்லியன் டன்களாகும். இது நம்முடைய மொத்த உணவுப் பொருள் தேவைகளில் 6 சதவீதமாகும். அயல் நாட்டுச் செலாவணியில் பற்றுக்குறை மட்டும் இல்லாமலிருந்தால் இறக்குமதியின் அளவு இன்னும் பன்மடங்கு அதிகரித்திருக்குமன்றோ !

மூன்று திட்ட காலப் பகுதியிலும் சராசரியாக உணவு தானியங்களின் இறக்குமதி ஆண்டு தோறும் நிலையாக அதிகரித்து வந்துள்ளது, முதல் திட்ட காலத்தில் சராசரியாக ஆண்டொன்றுக்கு 2·4 மில்லியன் டன்னும், இரண்டாம் திட்ட காலத்தில் 3·5 மில்லியன் டன்னும், மூன்றும் திட்ட காலத்தில் 5·1 மில்லியன் டன்னுமாக இறக்குமதியின் அளவு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. பணத்தின் அளவு கொண்டு இறக்குமதியைக் கணக்கிட்டால், 1946—50 வரைக்கும் சராசரியாக ஆண்டுக்கு ரூ. 105 கோடி மதிப்புள்ள உணவு தானிய இறக்குமதியானது ரூ. 120 கோடியாக இரண்டாம் திட்ட காலத்திலும், ரூ. 216 கோடியாக மூன்றும் திட்ட காலத்திலும் அதிகரித்தது. அறுவடை தவறிய காலத்தில்தான் இறக்குமதியின் தேவை என்றாலும், செழிப்பான அறுவடை ஏற்பட்ட 1964-ம் ஆண்டிலும் எப்போதும் இருக்கும் இறக்குமதியைக் காட்டிலும் அதிகமாகவே இறக்குமதியின் அளவு இருந்தது. அறுவடை 95·6 டன்னைச் செழித்தோங்கிய 1967-68, 1968-69, 1969–70 ஆகிய ஆண்டுகளிலும் உணவு தானியங்களின் இறக்குமதி பூரணமாக நிறுத்தப்படவில்லை. பசுமைப்புரட்சியின் மும்முரமான வளர்ச்சியால் உணவு உற்பத்தி நிலை சீராகிக் கொண்டே வருவதாகவும் இனிமேல் இந்தியா உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையையும் பெற்றிருப்பதாக அரசாங்க அறிக்கைகள் கூறுகின்றன.

சமீபத்தில் வந்த ஓர் அறிக்கையில் இந்தியாவில் இப்போது உள்நாட்டுத் தேவைக்குப் போக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு அரிசி உற்பத்தி பெருகி உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1970–71-ம் ஆண்டில் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ரூ. 2 கோடியே 22 லட்சம் மதிப்புள்ள பஞ்சாப் மாநிலத்தில் விளையும் "பசுமதி" என்ற உயர்ந்த ரக அரசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

(2) நியாய விலைக் கடைகள்
(Fair Price Shops)

உணவு தானியங்களைச் சமமாக அரசு நிர்ணயம் செய்த நியாயமான விலைக்கு விற்பனை செய்ய நியாய விலைக்கடைகளை அரசு ஏற்படுத்தியது. ஆனால், இக்கடைகள் திருப்தி தரும் அளவுக்குச் செயல்பட வில்லை. எனவே, நியாய விலைக் கடைகளைச் சீர்திருத்த அரசுக்கு ஆலோசனை கூற ஏற்படுத்தப்பட்ட விவசாய விலைகள் குழு கீழ்க்கண்ட சிறப்பான பரிந்துரைகளை அரசுக்கு நல்கியது.

(அ) நியாயவிலைக் கடைகள் பெரும்பாலும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு உதவிபுரியும் வகையில் தொழிலாளர்கள் வசிக்கும் இடங்களில் அதிகமாகவும் பணக்காரர்கள் இருக்கும் இடங்களில் குறைந்த எண்ணிக்கை கொண்டதாகவும் இருக்க வேணடும். நாடு முழுவதிலுள்ள நியாய விலைக் கடைகளில் நிலையான ஒரே வகை விலைகள் தீர்மானிக்கப்படுவது நல்லது. சந்தையில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்தால் அதற்கேற்றாற் போல் இக்கடைகளிலும் விலைகள் மாற்றி அமைச்சுப்படுவது நல்லது. அதனுல், இக் கடைகளிலிருந்து வாங்கப்படும் பொருள்களின் அளவும் குறையும்.

(ஆ) உணவுப் பொருள் பற்றுக்குறை அதிகமாக இருக்கும் இடங்களில் அதிக நியாய விலைக்கடைகள் திறக்கப்பட வேண்டும். மேலும், உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு அதிகமாக உள்ள மாதங்களில் அளிப்பை அதிகப்படுத்தி அறுவடைக்குப் பிற்பட்ட மாதங்களில் அளிப்பைக் குறைக்க வேண்டும்.

(3) தேர்ந்த கடன் கட்டுப்பாடுகள்

தனியார் துறையிலுள்ள வணிகர்கள் உணவுப் பொருள்களை விலை குறைந்த காலங்களில் பதுக்கி வைத்துக் கொண்டு,

செயற்கைத் தேவையை அதிகரித்தபின் அதிக விலைக்கு உணவுப் பொருள்களைச் சந்தையில் விற்கிறார்கள். இத்தகைய யூக வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வணிக வங்கிகள் லாபத்திற்காக வணிகர்களுக்குத் துணைபுரிகின்றன. கிட்டங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்ட உணவுப் பொருள்களின் அடமானத்தின் பேரில் வணிக வங்கிகள் வியாபாரிகளுக்குக் கடன் கொடுக்கின்றன. இத்தகைய நடவடிக்கைகள் சமுதாயத்திற்குக் கேடு விளைவிப்பதால், இவைகளைத் தடுக்கவும், வணிக வங்கிகள் இதற்காக அதிக கடன் கொடுக்காமல் இருப்பதற்கும் இந்திய ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகளுக்குத் தேர்ந்த கடன் கட்டுப்பாடு உத்தரவுகள் பிறப்பித்து வருகிறது. இத்தகைய உத்தரவுகள் 1956-க்கும் 1968-க்கும் இடைப்பட்ட காலத்தில் முறையாகப் பிறப்பிக்கப்பட்டன.

(4) உணவு மண்டலங்கள்
(Food Zones)

அரிசி, கோதுமை ஆகிய உணவு தானியங்களின் பெயர்ச்சியை ஒழுங்குபடுத்தும் குறிக்கோளுடன் அமைக்கப்பட்ட குறிப்பான சில வட்டாரப் பகுதிகளுக்கு உணவு மண்டலங்கள் (Food Zones) என்று பெயர். இந்தியாவில் இருவகை உணவு மண்டலங்கள் இருக்கின்றன. (1) ஒற்றை மாநில மண்டலங்கள் (2) பல் மாநில மண்டலங்கள். ஒற்றை மாநில மண்டலங்களில் ஒரு மாநிலம் மட்டுமே அமைந்துள்ளது. அதனால், அவைகளுக்கு மாநில வாரி மண்டலங்கள் என்றும் பெயர் உண்டு. பல் மாநில மண்டலங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் இணைந்து ஓர் ஒற்றை மண்டலமாக அமைந்துவிடுகின்றன. உணவு மண்டலங்களில் அடிப்படைத் தத்துவம் யாதெனில், தனியார் வணிகர்களுக்கு உணவு தானியங்களை ஒரு மண்டலத்திற்குள் கொண்டு செல்லவும் ஒரு மண்டலத்திலிருந்து வெளியே உள்ள பகுதிகளுக்குக்கொண்டு வரவும் தடை விதித்து நிலையான விலையையும், அளிப்பையும் ஏற்படுத்துவதுதான். ஆனால், அரசாங்க கணக்கில் உணவுப் பொருள்களின் பெயர்ச்சிக்கு எந்த விதத் தடையுமில்லை. ஒரு மண்டலத்திற்குள்ளேயே ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குக் கொண்டு செல்லலாம். ஒரு மண்டலத்திற்குள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களைச் சேர்ப்பதால் எச்ச மாநிலங்களிலிருக்கும் மிச்சமான உணவுப்பொருள் பற்றாக்குறை மாநிலங்களிலிருக்கும் உணவு தானியத் தட்டுப்பாட்டைப் போக்க அளிக்கப்பட்டுப் பெரிதும் நன்மை ஏற்படு

கிறது. உணவு தானியங்களின் அடிப்படையில் உணவு மண்டலங்களை இந்தியாவில் இரு வகைகளாகப் பிரிக்கலாம். அரிசி மற்றும் கோதுமை மண்டலங்கள்.

அரிசி மண்டலங்கள்

முதன் முதலில் 1957-ல் நான்கு தென் மாநிலங்களாகிய தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், மைசூர் ஆகியவற்றை இணைத்து ஒரு பல் மாநில அரிசி மண்டலம் ஏற்படுத்தப் பட்டது. 1958-ல் பஞ்சாப், இமயமலைப் பிரதேசம், டெல்லி ஆகிய மாநிலங்களை இணைத்து மேற்கத்திய அரிசி மண்டலம் அமைக்கப்பட்டது. 1959-ல் ஒரிஸா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைச் சேர்த்து கிழக்கத்திய உணவு மண்டலம் ஏற்படுத்தப்பட்டது. கடைசியாக, 1960-ல் மத்தியப் பிரதேசம், குஜராத், மஹாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களை இணைத்து மத்திய உணவு மண்டலம் அமைக்கப்பட்டது. இந்த நான்கு பல்-மாநில மண்டலங்களுடன், அஸ்ஸாம், பீஹார், உத்தரப் பிரதேசம் போன்ற ஒற்றை மாநில மண்டலங்களும் இந்தியா வில் அநேகம் இருந்தன. டிசம்பர் 1964-ல் பல்-மாநில மண்ட லங்கள் ஒழிக்கப்பட்டு எல்லாமே ஒற்றை மாநில உணவு மண்டலங்களாக மாற்றப்பட்டன.

கோதுமை மண்டலங்கள்

1957-ல் மூன்று கோதுமை மண்டலங்கள் ஒரே நேரத்தில் ஏற்படுத்தப்பட்டன. அவைகளாவன : (i) பஞ்சாப், டெல்லி மற்றும் இமயமலைப் பிரதேசம், (ii) உத்தரப் பிரதேசம், (iii) ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் பம்பாய் (பம்பாய் நகரம் நீங்கலாக). 1959-ல் இவைகள் 5 மண்டலங் களாக மாற்றியமைக்கப்பட்டன. 1961-ம் ஆண்டில் எல்லாக் கோதுமை மண்டலங்களும் ஒழிக்கப்பட்டன. ஆனால், மார்ச் 1964-ல் மீண்டும் 9 மண்டலங்களாக மாற்றியமைக்கப்பட்டு உட்புகுத்தப்பட்டன.

நன்மைகள் : உணவு மண்டல முறைகளால் நாட்டில் சீரான உணவு தானியங்களின் பகிர்வு இருந்து வருகிறது. உணவு மண்டலங்கள் நீக்கப்பட்டால், உணவுப் பொருள் களின் விலைகள் பற்றாக்குறை மாநிலங்களில் அதிகரிப்பதோடு எச்ச மாநிலங்களிலும் விலை ஏற்றத்தை ஏற்படுத்திவிடும். மேலும், தேவையற்ற முறையில் உணவு தானியங்கள் ஓர் மாநிலத்திலிருந்து தூரமாய் உள்ள மாநிலங்களுக்குப் பெயர்ச்சியடைவதை மண்டல முறை தவிர்க்கிறது. உணவு

மண்டல முறை அமுலில் இல்லாத காலத்தில் ஆந்திரத்திலிருந்து மேற்கு வங்காளத்திற்கு அரிசி அனுப்பப்பட்டது. தென் மாநிலங்களிலேயே அரிசி விற்கப்பட்டால் போக்குவரத்து செலவு மிச்சமாவதோடு, அனுவசியமாகப் போக்குவரத்து அழுத்தத்தின்மேல் சுமையை அதிகரிப்பதையும் தவிர்க்கலாம். இதனால் பர்மாவிலிருந்து கல்கத்தாவிலேயே அரிசியை இறக்குமதி செய்து பகிர்வு செய்வதற்குப் பதிலாக சென்னை, கேரளா ஆகிய துறைமுகங்களில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே, உணவு மண்டல முறைகளால் உணவு தானியங்கள் தாறுமாறாகப் பெயர்ச்சியடைவதைத் தடுக்க முடிவதோடு போக்குவரத்துச் செலவும் மிச்சமாகிறது.

குறைபாடுகள் : இம்மண்டல முறையின் நடவடிக்கைகளில் சில குறைபாடுகள் காணப்படுவது உண்மையே. முதலாவதாக, இயற்கைக் கோளாறுகளால் உற்பத்தியின் அளவு குறைந்தால் எச்ச மாநிலங்களிலும் பற்றுக்குறை மாநிலங்களிலும் இக்கட்டான நிலை ஏற்படுகிறது. இரண்டாவதாக, சில மாநிலங்களில் கட்டாயக் கொள் முதல் முறை மேற் கொள்ளப்படுவதால் சந்தைக்கு உணவு தானியங்கள் வருவது சுருங்கி, அதனால் பொருள்களின் விலைகள் உயருகின்றன. மூன்றாவதாக, 1964-ல் கல்கத்தா, கொச்சி போன்ற துறைமுகங்களில் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தால் கப்பல்களிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது தாமதிக்கப்பட்டது. இதனால், உணவுப் பொருள்கள் பற்றுக்குறையுள்ள மாநிலங்களில் அளிப்பு குறைந்து விலைகள் அதிகரித்தன. கடைசியாக, விடாமல் மழை பெய்யும் காலத்திலும், போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாத காலத்திலும் எச்ச மாநிலங்களிலிருந்து பற்றுக்குறை மாநிலங்களுக்கு உணவுப் பொருள்கள் செல்வது தடைப்பட்டு விடுகிறது. இத்தகைய இன்னல்களைக் கருத்தில் கொண்டு பற்றுக்குறை மாநிலங்கள், மண்டல முறை ஒழிக்கப்பட்டால் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வேண்டிய அளவு எச்ச மாநிலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணின. அதே போன்று எச்ச மாநிலங்களும் பல் மாநில உணவு மண்டல முறைக்குப் பதில் ஒற்றை மாநில மண்டல முறையை நாடு முழுவதும் ஏற்படுத்த விரும்பின. ஏனெனில், பேரளவு உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து பற்றுக்குறை மாநிலங்களுக்குஅனுப்பும் பிரச்சினை எச்ச மாநிலங்களுக்கு ஏற்படாதல்லவா ! 1964—65-ல் ஏற்படுத்தப்பட்ட விவசாய விலைகள்குழு பல்-மாநில மண்டல முறையை

ஒழிக்கும்படியும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒற்றை மாநில மண்டலங்களை அமைக்கும்படியும் அரசுக்கு ஆலோசனை கூறியது.

5. அரசின் உணவு தானிய வர்த்தகம்

1958-ல் திரு. அசோக் மேத்தா அவர்களைத் தலைவராகக் கொண்ட "உணவு தானியங்களின் விசாரணைக் குழு" உணவுப் பொருள் வர்த்தகத்தை அரசு மேற்கொண்டு நாட்டின் உணவு தானியங்களின் மொத்த விற்பனையில் ஒரு பகுதியை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமென்று பரிந்துரைத்தது. அதன்படி 1959-ல் அதற்காக ஒரு திட்டமும் தீட்டப்பட்டது. அரசின் வர்த்தகம் முதலில் அரிசி, கோதுமை ஆகிய இரு தானியங்களில் ஏற்படுத்தப் பட்டது. கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் அரசு இவ்விரு தானியங்களையும் சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்தது. ஆனால் சில்லரை வியாபாரிகள் நுகர்வோரிடமிருந்து பெறும் சில்லரை விலையை அரசு தீர்மானிக்க வில்லை. அரசின் உணவுதானிய வர்த்தக முறை பொதுஉடைமை வாதிகளாலும், முதலாளிகளாலும், திறமையாகச்செயலாற்றவில்லை என்று குறை கூறப்பட்டது. சில பொருளாதார நிபுணர்கள் அரசின் தானிய வர்த்தக முறையின் இன்றியமையாத அவசியத்தை எடுத்து விளக்கினர். உள்நாட்டு உணவுப் பொருள் பகிர்வைச் சரிசமமாக நிலைப்படுத்தி அதிகரிக்கவும் திட்ட மிட்ட பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முன்னேறவும் தானிய வர்த்தகத்தில் அரசின் தலையீடு அவசியம் என்று அவர்கள் முறையிட்டனர். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் அரசின் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றை மக்கள் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கிறார்களா என்பது ஐயப்பாட்டுக்குரியதாகும். உணவு தானியங்களில் அரசின் வர்த்தகத்தைத் திறமையான முறையில் எடுத்து நடத்த சிறந்த அமைப்பு இன்மையால் அரசின் வர்த்தகக் கொள்கை தோல்வியடைந்தது. இது அரசின் ஆயத்த மின்மை, விருப்பமின்மை, ஆர்வமின்மை போன்ற காரணங்களால் ஏற்பட்ட குறைபாடாகும்.

6. இந்திய உணவு கார்ப்பரேஷன்

மூன்றும் திட்ட கால ஆரம்பத்தில் உற்பத்தியாளர்களும், வணிகர்களும் பிற்காலத்தில் உணவுப்பொருள்களின் விலைகள் உயரும் என்ற எண்ணத்தில் ஏராளமான தானியங்களைப் பதுக்கிவைப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்

பட்டது. இந்நிலைமையைச் சமாளிக்க உணவு தானியங்களின் வர்த்தகத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திறமைமிக்க அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு ஏகமனதாகத் தீர்மானித்தது. அதன் முடிவே இந்திய உணவு நிறுவனத்தின் பிறப்பாய் அமைந்தது. இத்தகைய நிறுவனங்கள் அயல்நாடுகளிலும் அமைக்கப்பட்டுத் திறம்பட ஆற்றலுடன் செயல்பட்டு வருகின்றன. உதாரணமாக, அமெரிக்க உணவுப் பொருள் கடன் நிறுவனம் பொருள்களின் விலைகளை நிலையாக இருக்கச் செய்கிறது. ஆஸ்திரேலியாவின் கோதுமைச்சபை ஒவ்வொரு பருவ காலத்திலும் உத்திரவாதமுள்ள விலைகளை நிலைநாட்டுகிறது. ஜப்பானிலும் அரசு தானிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தி வருகிறது. இந்திய உணவு நிறுவனம் தானியங்களின் அளிப்பையும், பகிர்வையும் கட்டுப்படுத்தி, உணவுப் பொருள்களின் யூக வாணிகம் நடத்துவதையும், கொள்ளை லாபம் அடிப்பதையும் தடை செய்யும், தலையாய பணியை மேற்கொண்டுள்ளது. தடையில்லாச் சுதந்திர அங்காடியைக் கட்டுப்படுத்திப் பருவ கால மாற்றங்களால் ஏற்படும் விலை மாற்றத்தையும், பல்வேறு இடப்பகுதிகளில் காணப்படும் விலை பேதங்களையும் குறைத்து உணவுப் பொருள்களின் விலையைச் சரிசமமாக்கி நிலைப்படுத்த இந்திய உணவு நிறுவனம் பெருந்துணை புரிகிறது. விலைகள் கட்டுப்படுத்தப்பட்ட எல்லையைத் தாண்டினால் பொது நிலத்தைக் கருத்தில் கொண்டு, இந்த நிறுவனம் மொத்த வியாபாரிகளிடமிருந்தும் மில் முதலாளிகளிடமிருந்தும் உணவு தானியங்களைக் கைப்பற்றத் தனி அதிகாரம் பெற்றுள்ளது. அதிகமான உணவுப் பொருள் உற்பத்தியை உறுதிப்படுத்த, விவசாயிகளுக்குக் கடன் வழங்கவும் இந்நிறுவனம் ஏற்பாடு செய்கிறது. ஆண்டுக்கு 10 மில்லியன் டன் கோதுமை, அரிசி ஆகியவைகளை இந்நிறுவனம் எடுத்து நடத்தி வாணிகஞ் செய்யுமென்று மதிப்பிடப்பட்டது. "விவசாய விலைகள் குழுவின்" (Agricultural Prices Commission) பரிந்துரைகள் இந்நிறுவனத்தின் இன்றியமையாத சேவையை விளக்கியுள்ளன. அக்குழுவின் பரிந்துரைகளின்படி. கோதுமை, அரிசி ஆகியவற்றின் மொத்த விற்பனை எச்சத்தில் (Marketable Surplus) 15 முதல் 25 சதவீதம் வரைக்கும் அரசாங்கம் கைப்பற்ற வேண்டும். அவ்வாறு கைப்பற்ற (i) இந்திய உணவு நிறுவனம் (ii) விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் (iii) மாநில மத்திய அரசுகளின் கொள்முதல் நிர்வாக அமைப்புகள் ஆகிய நிறுவனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும் அக்குழு ஆலோசனை கூறியது. விற்பனைக் கூட்டுறவு நிறுவனங்கள்

அடிமட்டத்திலும், உணவு தானிய நிறுவனம் மேல்மட்டத்திலும் மாநிலங்களுக்குள்ளும் பணி புரிய வகை செய்யப்பட்டுள்ளது.

7. தேசிய உணவுப்பொருள் விலைக் கொள்கை (National Food Prices Policy)

1965-ல் பேராசிரியர் M. L. டன்ட்வாலா அவர்களைத் தலைவராகக் கொண்ட "விவசாய விலைகள் குழு"வின் அறிக்கையையே தேசிய உணவுப் பொருள் விலைக்கொள்கையின் சிறப்பான அம்சங்களாகக் கருதலாம். உணவு தானியங்களின் பெயர்ச்சி ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு எப்படி, எதற்காக மேற்கொள்ளப்படுகிறது என்ற வினாவிற்கு விடையாக அமைவதே தேசிய உணவுக் கொள்கையாகும். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் இயற்கை வளங்களை முழு அளவில் பயன்படுத்திச் சில குறிப்பிட்ட உணவு தானியங்களை உற்பத்தி செய்கின்றன. சில மாநிலங்கள் வர்த்தக விவசாயப் பொருள்களையும் மற்ற மாநிலங்கள் உணவு தானியங்களையும் உற்பத்தி செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றன. எச்ச மாநிலங்களிலிருந்து பற்றாக்குறை மாநிலங்களுக்கு உணவு தானியங்கள் பெயர்ச்சியடைவது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அதே நேரத்தில் நாடு முழுவதும் எல்லாப் பகுதிகளிலும் உணவுப் பொருள்களின் விலைகள் உயரும். வர்த்தக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் இருக்கும் மக்களிடம் வாங்கும் சக்தி அதிகமாக இருப்பதால், உணவுப் பொருள்கள் அங்கு அதிகமாகச் செல்லும். அதனால், பற்றாக்குறை மாநிலங்களிலிருக்கும் ஏழை மக்கள் அதிக விலை கொடுத்துப் பொருள்களை வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தக் காரணங்களுக்காகத்தான் உணவுப் பொருள்கள் ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்குச் செல்வதை ஒழுங்குபடுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாநிலங்களுக்குள் உணவு தானியங்கள் பெயர்ச்சியடைவதைக் கட்டுப்படுத்த மூன்று முக்கிய முறைகள் உள்ளன. அவைகளாவன: (1) மாநிலங்களுக்கிடையே உரிமம் பெற்ற பெயர்ச்சி, (2) ஒற்றை மாநிலங்களுக்கிடையேயுள்ள மண்டலங்கள், (3) பெரிய மண்டலங்கள்.

(1) மாநிலங்களுக்கிடையே உரிமம் பெற்ற பெயர்ச்சி

தனியார் வணிகர்களுக்கு அரசு உரிமங்களை வழங்கி எச்ச மாநிலங்களிலிருந்து பற்றாக்குறை மாநிலங்களுக்கு உணவு

தானியங்களைக் கொண்டு செல்ல இம்முறை அனுமதிக்கிறது. ஆனால், வியாபாரிகள் தாங்கள் கொண்டு செல்லும் உணவுப் பொருள்களின் மதிப்பு, விலை போன்றவைகள் அடங்கிய விபரப் பட்டியல்களைக் காலாகாலம் அரசுக்கு அனுப்ப வேண்டும். இந்த முறையில் அரசு எவ்வளவு தானியப் பொருள்கள் பெயர்ச்சியடைகின்றன என்பதை அவ்வப்போது அறிந்து கட்டுப்பாடுகள் மேற்கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது. உணவு தானியங்களின் பற்றுக்குறையை எல்லா மாநிலங்களும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுகின்றன. இதனால் எச்ச மாநிலங்களில் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து தானிய உற்பத்தியாளர்களுக்கு நல்ல லாபமும் கிடைக்கும். கட்டுப்பாட்டு முறைக்கு உட்பட்டு சுதந்திர அங்காடியின் நடவடிக்கையின் மூலம் சிக்கனமாயும் சமதர்ம முறைப்படியும் உணவு தானியங்கள் நாட்டில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. சந்தையில் அநேக வணிகர்கள் இருப்பதால், நிறைவுப் போட்டி ஏற்பட்டுக் குறைந்த செலவில் உணவுப் பொருள்கள் விற்பனைக்குக் கிடைக்கும். பல்வேறு காலங்களிலும் இடங்களிலும் விலைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டால் அவற்றைத் தடுக்க அரசு நாடு முழுவதிலுமுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்தும் மில் அதிபர்களிடமிருந்தும் தேவையான உணவு தானியங்களைக் கைப்பற்றலாம். அதன் மூலம் விலைகளின் மாற்றத்தை ஒழுங்கு படுத்த உணவு தானியங்களைக் கையிருப்பாக வைத்துக் கொள்ளலாம். ஆனால், இந்த முறையைக் கீழ்க் கண்ட குறைபாடுகளால் விவசாயவிலைக்குழு ஏற்றுக் கொள்ளவில்லை. தனியார் துறையிலுள்ள வணிகர்களின் பிரதான நோக்கம் கொள்ளை லாபம் பெற வேண்டுமென்பது தான். எனவே, சுதந்திரசந்தை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உணவுப் பொருள்களின் பற்றுக்குறை நாடு முழுவதும் பரவும். இரண்டாவதாக, விலைகளின் மாற்றத்தைத் தவிர்க்க அரசு உற்பத்தியாளர்களிடமிருந்தும் மில் முதலாளிகளிடமிருந்தும் சரிசமமான வரியை விதித்துப் போதுமான தானியங்களைப் கைப்பற்ற முடியுமா என்பது சந்தேகத்துக் குரியதாகும். மூன்றாவதாக, சுதந்திர அங்காடி முறை தோல்வியடைய நேர்ந்தாலும் அல்லது போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்பட்டாலும் அரசிடம் போதுமான உணவு தானியங்கள் இருப்பாக இருக்க வேண்டுவது மிகவும் அவசியமாகிறது. ஏனென்றால், அரசு ஒரு பகுதியிலிருந்து வேறு ஒரு பகுதிக்கோ அல்லது மாநிலத்திற்குள்ளாகவோ உணவு தானியங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். நான்காவதாக, உணவு மண்டலங்கள் நீக்கப்பட்டால், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், ஆந்திரம்,

அஸ்ஸாம் போன்ற மிஞ்சிய மாநிலங்களிலிருந்து உணவுப் பொருள்கள் மேற்கு வங்காளம், மஹாராஷ்டிரம், குஜராத், கேரளா போன்ற பற்றாக்குறை மாநிலங்களுக்கு அதிக அளவில் நழுவிச் செல்லும். அதனால், விலைகள் அதிகரிக்கும் சமயத்தில் மத்திய அரசு ஏராளமான தானியக் கையிருப்பைப் பயன்படுத்த வேண்டும். விலைகளைச் சமப்படுத்த அதிக எண்ணிக்கை கொண்ட நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும். ஆனால், அரசிடம் இச்சூழ்நிலைகளில் போதுமான சரக்கு கையிருப்பாக இருக்குமா என்பதும் ஐயப்பாடுடையதாகும். எனவே, இம்முறையை இக்குழு நிராகரித்தது.

(2) ஒற்றை மாநில மண்டலங்கள்

1965 லிருந்து அரிசியை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அரசு கொண்டு செல்லுவதற்காக ஒற்றை மாநில மண்டல முறை அமுலில் இருந்து வருகிறது. இம்முறையின் அடிப்படை நோக்கம் யாதெனில், எச்ச மாநிலங்களிலிருந்து பற்றாக்குறை மாநிலங்களுக்கு உணவு தானியங்களைக் கொண்டு செல்லும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டு நாட்டில் பொதுவாகப் பகிர்வு, விலைகள் ஆகியவற்றில் சமநிலையை ஏற்படுத்துவதுதான். எச்ச மாநிலங்கள் பற்றாக்குறை மாநிலங்களுக்குத் தங்கள் மிச்சமான உணவு தானியங்களைத் தரம், அளவு விலைகள் ஆகியவற்றில் சமநிலையை ஏற்படுத்திப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அவ்வாறு எச்ச மாநிலங்கள் பகிர்ந்து கொள்ள ஒத்துக்கொள்ளவில்லை என்றால், இம்முறை செயலற்றுப் போகும். பற்றாக்குறை மாநிலங்களும் தங்கள் சுயமாக மதிப்பிட்ட பற்றாக் குறையின் அடிப்படையில் மத்திய அரசிடமிருந்து தங்கள் தேவையைப் பூர்த்தி செய்யத் தானியங்களைக் கேட்கக் கூடாது என்பது நிபந்தனையாகும். ஆனால், இந்நிபந்தனையைக் கேரளா போன்ற மாநிலங்கள் புறக்கணித்து மத்திய அரசிடம் உணவு தானியங்களைக் கேட்கின்றன. இத்தகைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, கோதுமை, அரிசி, மட்டரக தானியங்கள் ஆகியவைகளுக்குத் தனித் தனியாக எச்சத்தையும் பற்றாக்குறையையும் மதிப்பிட்டு தேசிய உணவு பட்ஜெட்டை (வரவு-செலவு திட்டத்தை)த் தயார் செய்ய வேண்டுமென்று விவசாய விலைக் குழு சிபாரிசு செய்தது.

ஆனால், இம்முறையில் எச்ச மாநிங்களிலிருந்து கொள் முதல் செய்து பற்றாக்குறை மாநிலங்களுக்கும் தானியம் வழங் கும் பொறுப்பையும்அரசு மேற் கொள்வதால் நிர்வாகத் துறைக்

குப் பெருஞ்சுமை ஏற்படுகிறது. எனினும், இம்முறையில் அரசு பற்றுக்குறை மாநிலங்களில் நிலையை அறிந்து உதவி புரிய முடிகிறது. கடும்போட்டியும் யூக வாணிகமும் நீக்கப்பட்டு அரசு அதிக அளவு தானியங்களைப் பெற்றுச் சர்வாதீனச் சக்தியைப் பெற முடிகிறது. போக்குவரத்துத் தடைகளால் உணவு தானியங்கள் பெயர்ச்சியடையாமல் இருக்கும் நிலையும் நீக்கப்பட்டு விடுகிறது. சமுதாயத்தின் உணவுத் தேவையையும் இருக்கும் வசதியையும் முன்கூட்டியே அரசு அறிந்து திட்டமியற்றவும் இம்முறையில் வாய்ப்பு கிடைக்கிறது. இத்தகைய நன்மைகள் ஒற்றை மாநில மண்டல முறையில் இருப்பதால், விவசாய விலைக்குழுவும் இதைச் சிபாரிசு செய்தது.

(3) பேரெல்லை மண்டலங்கள்
(Larger Zones)

மாநிலங்களுக்கிடையே உணவு தானியங்களைக் கொண்டு செல்வதை ஒழுங்குபடுத்த, அக்கம் பக்கத்திலுள்ள எச்ச, பற்றுக் குறை மாநிலங்களை ஒன்றாக இணைத்துப் பெரிய உணவு மண்டலங்களை ஏற்படுத்துவது மூன்றும் முறையாகும். அரசாங்கக் கணக்கில் மட்டும் இம்மண்டலத்திற்கு வெளியேயுள்ள மாநிலங்களுக்குத் தானியங்கள் செல்வது அனுமதிக்கப்படும். இம் முறையில் இப் பெரிய மண்டலத்திற் குள்ளாகவே இருக்கும் ஒரு சில மாநிலங்களின் எச்ச தானியங்களையும் மற்றச் சில மாநிலங்களில் இருக்கும் பற்றுக் குறையையும் சரிசமமாக்க முடிகிறது. இம் முறையில் மத்திய அரசின் பெரும் பொறுப்பு குறைகிறது. மண்டலத்திற்குள்ளாகவே, தனியார் வணிகர்களால் பற்றுக்குறை மாநிலங்களுக்குத் தேவையான தானியம் கொண்டு செல்லப்படுகிறது. ஆனால், இந்தியாவில் பெரிய மண்டலங்கள் பணிபுரிந்த அனுபவத்திலிருந்து இம் முறை தோல்வி கண்டது என்பதை அறியலாம். உற்பத்தியில் பற்றுக்குறை ஏற்பட்டபோது எச்ச மாநிலங்கள் பற்றுக்குறை மாநிலங்களுக்கு உணவு தானியங்கள் செல்வதற்குத் தடை விதித்தன. இதனால், பெரிய மண்டலங்கள் உடைந்து போக நேரிடுகிறது. 1966-67, 1967-68 ஆகிய ஆண்டுகளில் ஆந்திராவில் ஓரளவு பஞ்சம் ஏற்பட்டதால், பெரிய தென் மண்டலத்திலிருந்த மாநிலங்கள் இன்னலுற்றன. மேலும், பற்றுக் குறை காலங்களில், மண்டல அளவில் அரசியல் அல்லது நிர்வாகத்துறையின் ஆணையாளர் யாரும் இல்லாமையால் நிலைமையைச் சமாளித்துப் பயனுள்ள நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

முடிவுரை: தற்போது இந்திய உணவுப் பிரச்சினையை முழுவதுமாகத் தீர்க்க அரசு 15 முதல் 25 சதவீத உணவு தானிய விற்பனை எச்சத்தைத் தன் கையிருப்பில் வைத்திருக்க நிர்வாகத்துறையைச் சீர்படுத்த வேண்டும். ஏனெனில், இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் உணவுப் பிரச்சினை, முற்றிலுமாகத்தீர்ந்து விடுமா என்பது நிச்சயமாகக் கூற இயலாது. மக்களின் வருமான அதிகரிப்பு, மக்கள்தொகைப் பெருக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆராய்ந்ததில், உணவுத் தேவை ஆண்டுக்குக் குறைந்து 3·5 சதவீதம் அதிகரிக்கும் என்று தெரிகிறது. ஆனால், தற்போது ஆண்டுக்கு 2·5 சதவீதம் என்ற வீதத்தில்தான் உணவு உற்பத்தி பெருகி வருகிறது. ஆண்டுக்கு 5 சதவீதம் உணவு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் இருக்கும் என்று எதிர்பார்த்தாலும், உணவுப் பொருள்களில் தன்னிறைவு பெற இன்னும் பத்து ஆண்டுகளுக்குமேல் ஆகும். சமீபத்திய ஐ. நா. வின் உணவுவிவசாய நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையின்படி, 1970-ல் இந்தியாவின் விவசாய, உணவுப் பொருள் உற்பத்தி 5 சதவீதமும் அதிகரித்துள்ளது. 1971-ல் அரிசி உற்பத்தி வீதம் 6 சதவீதமும் கோதுமை உற்பத்தி வீதம் 8-சத வீதமும் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. தற்போது உணவு நெருக்கடியின் தீவிரம் குறைந்துள்ளது. ஏனெனில், நாட்டில் முதன் முறையாக உணவுப்பொருள்களின் உற்பத்தி 1970-71-ல் உன்னத நிலையை அடைந்துள்ளது. 1970-71-ல் உணவுப் பொருள்களின்(தானிய, பருப்புவகைகள்) உற்பத்தியின் அளவு 107·81 மில்லியன் டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1969-71ம் ஆண்டை விட 8·4 சதவீதம் அதிக அளவு உற்பத்தியாகும். இவ்வளவு உயர்ந்த உற்பத்தி தானியங்களின் உற்பத்திப் பெருக்கத்தால் ஏற்பட்டதாகும். இதன் முக்கிய காரணங்கள் வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றமும்,உற்பத்திக்கு உகந்தசீதோஷ்ண நிலையுமாகும். உணவு உற்பத்தியின் தற்போதைய சிறப்பான நிலை நீடிக்குமானால் நான்காம் திட்ட இறுதியில் குறிப்பிடப்பட்ட இலக்காகிய 129 மில்லியன் டன் உணவுப் பொருள்களை ஆண்டுதோறும் உற்பத்தி செய்ய முடியும்.

17. திட்ட கால வேளாண்மை வளர்ச்சி

இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மை தொழிலின் பங்கு மிக இன்றியமையாதது என்பதை திட்ட கால வேளாண்மைத் தொழில் வளர்ச்சியின் மூலம் நன்ருக அறியலாம். வேளாண்மை மொத்த தேசிய வருவாயில் 45 சத வீதத்தை அளிப்பதோடு மொத்த மக்கள் தொகையில் 70 சதவீத மக்களுக்கு வேலே வாய்ப்புகளே அளித்து வருகிறது. சில விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியினுல் இந்தியாவிற்கு அயல்நாட்டுச் செலாவணியும் கிடைத்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இந்திய தேசிய வருமான வளர்ச்சியும், மக்களின் தலா வருமான அதிகரிப்பும் இந்திய வேளாண்மைத் துறையின் இயல்பு, திறமை, ஆக்கம் ஆகியவைகளின் அடிப்படையிலேதான் அமையும் என்பதை, திட்ட நிபுணர்கள் அறிந்து திட்டங்களேத் தீட்டி வருகின்றனர். எடுத்துக் காட்டாக, வேளாண்மைத்தொழிலின் முன்னேற்றத்தில்தான் தொழில்கள், ஏற்றுமதி, போக்குவரத்து போன்ற மற்ற எல்லாத் துறைகளின் வளர்ச்சியும் அமைந்துள்ளது என்பதை முதல் ஐந்தாண்டுத் திட்டம் அறிந்து செயலாற்றி வந்தது. நாட்டின் எந்த ஒரு பொருளாதார வளர்ச்சித் திட்டத்தைத் தீட்டினுலும் விவசாய சீரமைப்பும் நிலச் சீர்திருத்தங்களும் அடிப்படையானவைகள் என்பதை மறந்திடலாகாது. உணவு, மூலப்பொருள்கள் ஆகியவைகளின் தேவை அதிகரித்து வருவதால், வேளாண்மைத் துறையின் முக்கியத்துவம் நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் எல்லா மக்களிடமும் உணரப்பட்டு வருகிறது. திட்டத்தில் ஏற்படும் வெற்றியும் தோல்வியும் நாட்டில் எந்த அளவுக்கு நிலம் உழைப்பு வளங்கள் ஆகியவைகளே விவசாய வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிருேம் என்பதைப் பொறுத்து அமையும். எனவே, வேளாண்மையின் முக்கியத்

துவம் நாட்டிற்கு அடிப்படையானதாகவும் உயிராதாரமானதாகவும் அமைந்துள்ளது.

முதல் திட்ட கால வேளாண்மை வளர்ச்சி

இரண்டாவது உலகயுத்தம், நாட்டுப் பிரிவினை ஆகியவைகளின் விளைவால், நம் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சமநிலையின்மையைப் போக்கிச் சமமான பொருளாதார வளர்ச்சியைச் சாதிப்பதே முதல் திட்டத்தின் இன்றியமையாத நோக்கமாக இருந்தது. நாட்டுப் பிரிவினையின் விளைவாக, பஞ்சாபிலிருந்த கோதுமை வளரும் செழிப்பான நிலப்பகுதிகளும், வங்காளத்திலிருந்த நெல் பயிராகும் இடங்களும் பாகிஸ்தானைச் சேர்ந்தன. எனவே, பாகிஸ்தானுக்கு நீண்ட இழைப் பருத்தி, சணல் ஆகியவைகள் பயிரிடப்படும் நிலங்கள் கிடைத்தன. அதுமட்டுமின்றி, அதிகமான நீர்ப்பாசன வசதிகளுடைய நிலப்பகுதிகளையும் பாகிஸ்தான் பெற்றது. இத்தகைய குறைபாடுகளை நீக்க முதல் திட்டத்தில் வேளாண்மை நீர்ப்பாசன வசதித் திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. முதல் திட்ட மொத்தப் பொதுத்துறை முதலீடாகிய ரூ. 2,356 கோடியில் மூன்றில் ஒரு பகுதியாகிய ரூ. 758 கோடி வேளாண்மை உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டது. 1949-50-ல் வேளாண்மை உற்பத்திக் குறிப்பெண் 100லிருந்து 114 ஆக 1955-56 அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. வர்த்தகப் பயிர்களாகிய கரும்பு, பருத்தி, சணல் போன்றவைகள் தவிர மற்ற எல்லாவகை வேளாண்மைப் பொருள்களிலும் குறிப்பிடப்பட்ட இலக்குகள் சாதிக்கப்பட்டன. உணவு உற்பத்தியின் இலக்குகள் அதிகத் திருப்தியை அளித்ததால் நாட்டில் வேளாண்மைப் பொருள்களின் விலைகள் சரிந்தன. பல்வேறு வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி இலக்குகள் கீழ்க்கண்ட அட்டவணையில் விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

பயிர்	அலகு	இலக்கு	உண்மை உற்பத்தி	மிஞ்சிய சாதனை (+) அல்லது சாதனைக் குறைவு (+)
உணவு தானியங்கள்	மில்லியன் டன்களில்	61·6	65·8	+ 4·2
எண்ணெய் வித்துக்கள்	லட்சம் டன்களில்	55·0	56·0	+ 1
கரும்பு	,,	63·0	60·0	− 3
பருத்தி	,,	42·0	40·0	− 2
சணல்	,,	54·0	42·0	− 12

மேல்குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள், கூட்டுறவுகள் போன்ற நிறுவன முறை சீர்திருத்தங்களாலும், சமுதாய வளர்ச்சி, தேசிய வளர்ச்சிப் பணிகள் போன்றஅமைப்புமுறை மாற்றங்களாலும் நிலச் சீர்திருத்தங்கள் போன்ற அடிப்படை முறை மாற்றங்களாலும் சீரான விதைதள், உரங்கள், நிலப் பாதுகாப்பு, சீரமைந்த கருவிகள் போன்றவைகளைப் பயன் படுத்துவதால் ஏற்படும் தொழில் நுட்ப முன்னேற்றங்களாலும் சாதிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய மாற்றங்களால் மட்டும்தான் இலக்குகளை அடைய முடிந்தது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. பருவகால மழை தவறாது பெய்ததாலும் உணவுப் பொருள்களின் உற்பத்தி சிறப்பான தாக அமைந்தது. உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பால் நாட்டில் சில வரவேற்கத்தக்க விளைவுகள் ஏற்பட்டன என்பதை யாரும் மறுத்துக்கூற இயலாது. முதலாவதாக இந்தியா உணவு தானியங்களில் தன்னிறைவு பெற்றது. இரண்டாவதாக, விவசாயப் பொருள்களின் விலை குறிப்பெண் 92·8 ஆகக் (1952-53ன் விலைகளின்படி) குறைந்தது எல்லாவற்றிற்கும் மேலாக, முதல் திட்ட உணவுப் பொருள் உற்பத்தி அதிகரிப்பால் நாட்டில் பணவீக்கம் நீங்கிப் பொருளாதார வளர்ச்சியில் சமநிலை ஏற்பட்டது. எனவே, முதல் திட்டம் இரண்டாம் திட்ட காலத்தில் அதிகமான பொருளாதார வளர்ச்சிவீதத்தைப் பெறச் செம்மையாக வழி வகுத்தது.

இரண்டாம் திட்ட கால வேளாண்மை வளர்ச்சி

முதல் திட்ட உணவுப் பொருள் உற்பத்தி இலக்குகளில் மிதமிஞ்சிய திருப்தி ஏற்பட்ட காரணத்தினலோ அல்லது நிலையான பொருளாதார வளர்ச்சி காணப்பட்டதாலோ திட்ட நிபுணர்கள் நாட்டில் உணவுப் பிரச்சினை தீர்ந்துவிட்ட தென்றும் வேளாண்மைத்துறையின் அஸ்திவாரம் பலம் வாய்ந்ததாகி விட்டது என்றும் தவருகக் கணக்கிட்டனர். எனவேதான், முதல்திட்டத்தில்மூன்றில் ஒரு பகுதியாகஇருந்த வேளாண்மைத்துறை முதலீடு இரண்டாம்திட்டத்தில் பொதுத் துறையில் ஐந்தில் ஒரு பகுதியாகக் குறைக்கப்பட்டது. இரண்டாம் திட்ட முதலீடு பணத்தின் அடிப்படையில் வேண்டுமாயின் அதிகமாயிருக்கலாம். ஆனல், உண்மை மதிப்பில் வேளாண்மைத்துறையில் முதலீடு இரண்டாம் திட்டத்தில் குறைந்தது. பணத்தின் அடிப்படையில் முதல் திட்டத்தில் ரூ. 758 கோடியாக இருந்த வேளாண்மைத்துறை

முதலீடு இரண்டாம் திட்ட காலத்தில் ரூ. 1,054 கோடியாக உயர்ந்தது. இரண்டாம் திட்டத்திற்காக முதலில் குறிக்கப் பட்ட இலக்குகள் மிகவும் குறைந்ததாக இருந்ததால் பிறகு மாற்றியமைக்கப்பட்டது. இரண்டாம் திட்ட கால இறுதியில் சாதித்த உண்மை உற்பத்தியின் அளவுகள் கீழ்க்கண்ட அட்டவணையில் விவரமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

பயிர்	அலகு	இலக்கு	உண்மை உற்பத்தி 1960-61	மிஞ்சிய சாதனை (+) அல்லது சாதனைக் குறைவு (—)
உணவு தானியங்கள்	மில்லியன் டன்களில்	80·5	79·7	– 0·8
எண்ணெய் வித்துக்கள்	,,	7·6	6·5	– 1·1
கரும்பு	,,	7·8	10·4	+ 2·6
பருத்தி	மில்லியன் பேல்களில்	6·5	5·4	– 1·1
சணல்	,,	5·5	4·0	– 1·5
தேயிலை	மில்லியன் பவுண்டுகளில்	700	725	+ 25

முதல் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிறுவன, ஸ்தாபன, தொழில் நுட்ப நடவடிக்கைகளே மீண்டும் இரண்டாம் திட்ட காலத்தில் மேற் கொள்ளப்பட்டன. இருப்பினும், தேயிலை, கரும்பு ஆகிய இரு பயிர்களின் உற்பத்தியைத் தவிர மற்றப்பயிர்களின் உற்பத்தி இலக்குகள் சாதிக்க இயலவில்லை. எனவே, இத் திட்ட காலத்தில் பொருள்களின் விலைகள் அதிகரித்து நாட்டில் பணவீக்கச் சூழல் ஏற்பட்டது. பொருள்களின் விலை ஏற்றத்தால் முக்கியமாக, தொழிலாளர்கள் அதிகமான கூலிகளைக் கேட்டு வேலை நிறுத்தம் செய்தனர். வர்த்தகப் பயிர்கள் விலைகளின் அதிகரிப்பால் நம் ஏற்றுமதியில் தேக்கநிலை காணப்பட்டது.

பத்தாண்டு கால வேளாண்மை உற்பத்தியின் ஆய்வுரை

1951–61-க்கும் இடைப்பட்ட பத்தாண்டு காலத்தில் வேளாண்மை உற்பத்தி 41 சதவீதமாக அதிகரித்தது என்று திட்டக்குழு அறிவித்தது. இது ஆண்டுக்குச் சராசரியாக 4·1 சதவீத வளர்ச்சியைக் குறிக்கின்றது. ஆனால், இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டதா என்பது ஐயப்பாட்டிற்குரியதாகும். திட்டக்குழு வேளாண்மை உற்பத்தியை மிகைப்படுத்திக் கூறியிருப்பதை கீழ்வரும் புள்ளிவிவரங்களால் அறியலாம். பொதுவாக, வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு பயிரிடப்படும் நிலத்தின் அளவு விரிவடைவது, நீர்ப்பாசனம் அதிகப்படுத்தப்படல், சீரமைக்கப்பட்ட கருவிகள், நல்ல உரங்களும், விதைகளும் அதிக அளவில் பயன் படுத்தப் படல், சிறந்த நில நிர்வாகம் போன்ற பல காரணங்களால் தான் சிறப்பாக அமையக் கூடும். ஆனால், முதல் பத்தாண்டு காலத்தில் இத்தகைய முறைகளின் வளர்ச்சி சாதனை மிகவும் குன்றி இருந்தது. 1. இக்காலத்தில் பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு ஒரு சதவீதமாக மட்டும் தான் அதிகரித்தது. 2. இக்காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்பட்ட நிலம் சுமார் 50 மில்லியன் ஏக்கரிலிருந்து 70 மில்லியன் ஏக்கராக மட்டுந் தான் அதிகரித்தது. நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்ட 10 மில்லியன் ஏக்கர் நிலத்தில் ஒரு மில்லியன் ஏக்கர் நிலத்தில் மட்டும் தான் இரு வகைப் பயிரிடும் முறை பயன்படுத்தப்பட்டது. 3. 1951 முதல் 1961 வரை பயன்படுத்தப்பட்ட உரங்களின் நுகர்வு சுமார் 5 மடங்காக அதிகரித்தது. எனவே, உரங்களைப் பயன்படுத்தி உணவு தானிய உற்பத்திகளை அதிகப்படுத்தியிருக்க இயலாது. 1960–61-ல் கூட நீர்வசதி அளிக்கப்பட்ட ஓர் ஏக்கர் நிலத்தில் சுமார் 10 பவுண்டு உரம் தான் பயன்படுத்தப்பட்டது. 4. 1960-61-ம் ஆண்டின் இறுதியில் 4,000 சீரான விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. இப்பண்ணைகள் யாவும் 1951 லிருந்து 1961-க்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்படுத்தப் பட்டவைகளல்ல. இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பே சீரான விதைகளின் உபயோகம் பழக்கத்தில் இருந்து வந்தது. மேலும், இவ்விதைகள் பெரும்பாலும் பிணியைத் தடுக்கும் சக்திவாய்ந்தவைகளாக மட்டுமே இருந்தன. அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகளாக இல்லை. 5. மொத்த நிலத்தில் ஒரு சதவீதம் தான் நிலப்பாதுகாப்பு முறையின் கீழ் வந்தது. 6. பயிரிடப்பட்ட நிலத்தில் 4 சதவீதம் தான் பசுமை உரமிடப்பட்டுச் செழிப்பாக்கப்பட்டது. 7. எருது, கலப்பை, கிணறு, எண்ணெய் இஞ்ஜின், டிராக்டர், கரும்புச் சாற்றைப் பிழியும்

இயந்திரம், நிலம் ஆகியவற்றை உள்ளடக்கிய இணைந்த குறிப்பெண் 1951–61 வரையிலுள்ள காலத்தில் 12 சதவீத அதிகரிப்பையும் அளிக்கவில்லை. மேற்கூறிய பல்வேறு குறைபாடுகளின் அடிப்படையில் வேளாண்மை உற்பத்தி 41 சதவீதம் பத்தாண்டுகளில் அதிகரித்தது என்பது நம்பத்தகுந்த கருத்தாக இல்லை.

மூன்றும் திட்ட கால வேளாண்மை வளர்ச்சி

மூன்றும் திட்டம் வேளாண்மைக்குச் சிறப்பிடம் அளித்து அதன் வளர்ச்சிக்காகப் பலவகைச் செயல் முறைகளைக் கையாண்டது. இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் உணவு தானியங்களில் தன்னிறைவு பெறுவது, ஏற்றுமதிக்காக வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவையே என்பது குறிப்பிடத்தக்கதாகும். திட்டத்தின் அறிக்கையில் வேளாண்மைக்கு மூன்றும் திட்ட கால வளர்ச்சித் திட்டங்களில் முதலிடம் தரப்படும் என்று கூறப்பட்டுள்ளது. முதல் இரண்டு திட்டங்களின் அனுபவத்திலிருந்தும் முக்கியமாக இரண்டாம் திட்ட கால சாதனைகளிலிருந்தும் இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சி வீதமே அடிப்படையாக அமையும் காரணி என்பது உணரப்பட்டது. எந்த அளவுக்கு வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க முடியுமோ, அந்த அளவிற்கு அதிகப்படுத்த நாட்டில் உள்ள எல்லா வளங்களையும் முழுவதுமாகப் பயன்படுத்தியே ஆக வேண்டுமென்று மூன்றும் திட்ட அறிக்கையில் கூறப்பட்டது. கிராமப் பொருளாதார அமைப்பைக் கூடுமான வரை பரவலாக்கிப் பலவகை உற்பத்தித் துறைகளையும் ஏற்படுத்தி வேளாண்மைத் தொழிலையே சார்ந்திருப்பவர்களின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைக்க வழிவகைகள் கையாளப்பட்டன. மற்றத் துறைகளில் கிடைக்கும் வருவாய்க்குச் சமமாக கிராம மக்களின் வருவாயும் நிலையாக அமைய இத்தகைய செயல் முறைகள் இன்றியமையாதவை. வேளாண்மை வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டு அமுலாக்கும் திட்டங்களில் எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்கு நிதி வசதியையும் அளித்தே ஆக வேண்டும் என்ற கருத்து வழிகாட்டியாகவும் பிரதானமாகவும் பயன்படுத்தப்பட்டது. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு மூன்றும் திட்ட மொத்த பொதுத்துறை முதலீட்டில் ஐந்தில் ஒரு பகுதி வேளாண்மைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது. அதாவது, மொத்த முதலீடாகிய ரூ. 6300 கோடியில் வேளாண்மைக்காக

ரூ. 1310 கோடி ஒதுக்கப்பட்டது. சில வேளாண்மை பயிர்களின் இலக்குகள் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பயிர்	அலகுகள்	1965–66-ன் இலக்கு	1965–66ல் வருடாந்தர உற்பத்தி	மிஞ்சிய சாதனை (+) சாதனைக் குறைவு (—)
உணவு தானியங்கள்	(மில்லியன் டன்களில்)	100·0	72·3	— 27·7
எண்ணெய் வித்துக்கள்	(,,)	9·8	6·1	— 3·7
கரும்பு	(,,)	10·0	11·8	+ 1·8
பஞ்சு	(மில்லியன் பேல்களில்)	7·0	4·7	— 2·3
சணல்	(,,)	6·2	4·5	— 1·7

சுருங்கக் கூறின், மூன்றும் திட்டம் வேளாண்மை உற்பத்தியில் ஒரு தோல்வியே ஆகும். மூன்றும் திட்டகால ஐந்தாண்டுகளில் வேளாண்மை உற்பத்தியின் அதிகரிப்பு 30 சதவீதமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உணவு தானிய உற்பத்தி மிகக் குறைவாக 10சதவீதமாகத்தான் அதிகரித்தது. அதாவது ஆண்டுக்கு 6 சதவீதமாக அதிகரித்திருக்க வேண்டிய உணவு தானிய உற்பத்தி ஆண்டுக்கு 2 சதவீதமாகத்தான் அதிகரித்துள்ளது மிகவும் வருந்தத்தக்கதாகும். 1961–62-ல் 118.4 ஆக இருந்த உணவு தானிய விலைகளின் குறிப்பெண் 1965–66-ல் 168·8 ஆக உயர்ந்தது. உணவு உற்பத்தியில் ஏற்பட்ட பற்றுக் குறையின் விளைவாக 1961–62-க்கும் 1965–66-க்கும் இடைப்பட்ட காலத்தில் ரூ. 1100 கோடி மதிப்புள்ள உணவு தானியங்கள் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இது நம் அயல் நாட்டுச் செலாவணியின் நிலையை மேலும் அதிகமாகப் பாதித்தது. மூன்றும் திட்டத்தைத் தீட்டிய திட்ட நிபுணர்கள் தொழில் நுட்ப முறை

யில் மாபெரும் மாறுதல் ஒன்றை ஏற்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து எதிர்பார்த்த இலக்குகளைச் சாதிக்க முடியும் என்று கருதினர். தொழில் நுட்ப முறையில் ஏற்படுத் தப்பட்ட சில முக்கிய நடவடிக்கைகளை இனி ஆராய்வோம்.

1. உரங்கள்: இத்திட்டத்தில் நைட்ரஜன் உரங்களின் உபயோகம் ஐந்து மடங்காகவும் (சுமார் 2 லட்சம் டன்களி லிருந்து 10 லட்சம் டன்களாக) பாஸ்பரஸ் உரங்களின் உபயோகம் 6 மடங்காகவும் (70,000 டன்களிலிருந்து 4.00,000 டன்களாக) அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது. இது நீர் வசதி பெற்ற ஓர் ஏக்கருக்கு நாற்பது பவுண்டு உர உபயோக அதிகரிப்பை உணர்த்துவதாகும்.

2. நீர்ப்பாசனம்: இத்திட்ட காலத்தில் நீர்ப்பாசன வசதி பெற்ற நிலம் 20 மில்லியன் ஏக்கராக அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது. 1965-66-ல் மொத்த நீர்ப்பாசன வசதி பெற்ற நிலம் 90 மில்லியன் ஏக்கராவாக அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டது.

3. பொறுக்கு விதைகள்: மூன்றும் திட்டத்தில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதை வகைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று பெரிதும் வலியுறுத்தப்பட்டது. இத்திட்ட காலத்தில் எண்ணூறு விதைப் பண்ணைகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஏதோ ஒரு வகையான சீரான விதை வகை களைப் பயரிடப்பட்ட மொத்த நிலப் பகுதியில் 50 சதவீகிதம் நிலத்தில் பயன்படுத்த இத்திட்டத்தின் நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

4. மற்ற செயல் முறைகள்: மற்ற செயல் திட்டங்களில் நிலப்பாதுகாப்பு, பயிர்பாதுகாப்பு சிறந்த கருவிகள், சாதனங் கள் பயன்படுத்தப்படல் போன்ற தொழில் நுட்ப மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் உள்ள எல்லா விவசாயி களுக்கும் தொழில் நுட்ப உதவி விநியோகம் ஆகியவைகள் கிடைக்கச் செய்ய அக்டோபர் 1963-க்குள் சமுதாய வளர்ச்சி, தேசிய வளர்ச்சிப் பணிகள் ஆகியவைகள் எல்லாக் கிராமப்புறப் பகுதிகளிலும் விசாலமாக்கப்படும் என்று கூறப்பட்டது. பணி கூட்டுறவுகளில் (Services Co-operativies) சுமார் 37 மில்லியன் அங்கத்தினர்கள் அதிகமாகச் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டத்தில் நீண்டகால கூட்டுறவு கடன் தொகை ரூ. 150 கோடிகளாகவும், குறுகிய, நடுத்தர

கால கடன் சுமார் ரூ. 530 கோடியாகவும் அதிகரிக்கும் என்று கருதப்பட்டது.

மேற் குறிப்பிட்ட வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருந்த போதிலும் கீழ்க்கண்ட தவிர்க்க முடியாத நிறுவன, அமைப்பு முறை, மஜோதத்துவ இன்னல்களால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் சாதிக்கப்படவில்லை. (1) வேளாண்மை விஸ்தரிப்பு சிக்கலை அறிந்து தீர்க்கவல்ல தொழில் பயிற்சி பெற்றவர்கள் இல்லாமை, (2) உரம் போன்ற வளங்களை எந்த அளவுக்குச் சிறந்த முறையில் பயன் படுத்த முடியும் என்று ஆய்ந்து கூறக்கூடிய ஆராய்ச்சியும், தொழில் நுட்ப ஆராய்ச்சியாளர்களும் இல்லாமை, (3) வளங்களைச் சரியான காலத்தில், சரியான இடத்தில், சரியான முறையில் வேகமாகத் தேவையான அளவு வழங்கத்தக்க திறமை வாய்ந்த நிறுவனங்களும் அமைப்புகளும் இல்லாமை. (4) பரந்த நிலப் பரிசோதனைத் திட்டங்களை மேற்கொள்ளச் சரியான ஆட்கள் இல்லாமை. (5) விவசாயிகளிடம் வளங்களைத் திறமையுடன் பயன்படுத்தும் உணர்வும், ஆக்கமும் இல்லாமை. இத்தகைய காரணங்களால் மூன்றும் திட்டம் வேளாண்மை உற்பத்தியில் வெற்றி காண இயலவில்லை.

நான்காம் திட்டத்தில் வேளாண்மை

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் பெரும் சிக்கல்களுக் கெல்லாம் அடிப்படையாக விளங்குவது வேளாண்மை உற்பத்தியே என்பது மூன்றும் திட்ட கால அனுபவத்தில் உணரப்பட்ட உண்மையாகும். மூன்றும் திட்டத்தில் ஏற்பட்ட உணவுப்பொருள்களின்பற்றுக்குறையைத் தீவிரமாகக் கருத்தில் கொண்டு நான்காம் திட்டத்தில் வேளாண்மை உற்பத்திக்கும் செயல் திட்டங்களுக்கும் மிக உயர்ந்த சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு விவசாய, கூட்டுறவு, நீர்ப்பாசனச் செயல் திட்டங்களுக்காக நான்காம் திட்டத்தில் ரூ. 5404 கோடியை இந்தியத் திட்டக்குழு ஒதுக்கி உள்ளது. மக்கள்தொகை அதிகரிப்பின் அடிப்படையில் எந்த அளவுக்கு உணவு தானியங்களின் தேவை நாட்டில் அதிகரிக்கக் கூடும் என்பதைக் கருத்தில் கொண்டு நான்காம் திட்ட இறுதிக்குள் 120 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க, சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்ட காலத்தில் நீர்ப்பாசனம், வெள்ளத் தடுப்பு போன்ற செயல் திட்டங்களின் மூலம் வேளாண்மை உற்பத்தி இலக்கு

களைச் சாதிக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காம் திட்ட இறுதிக்குள் பெரிய, நடுத்தர, நீர்ப்பாசனத் திட்டங்களை 13 மில்லியன் ஏக்கர் நிலங்களுக்கு அதிகமாக நீர் வசதி அளிக்கப்படும். மேலும், தனியார் பண்ணைகளிலும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வேளாண்மைப் பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கு லாபகரமான விலைகள் கிடைக்க அரசால் உறுதியளிக்கப்பட்டுள்ளது. கிராமக்கடன் வசதி அளிப்பு அதிகரிக்கப்பட்டு முதலீட்டை அதிகப்படுத்துவதற்கான முறைகளும் கையாளப்படும். வேளாண்மை உற்பத்தி முறைகளையும், பழக்கங்களையும் சீர்ப்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க விஞ்ஞான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

நான்காம் திட்ட காலத்தில் உணவு உற்பத்தியில் அதிகரிப்பு 33 சதவிகிதமும் கச்சப் பருத்தியில் 43 சதவிகிதமும் கரும்பு உற்பத்தியில் 23 சதவீதமும் கச்ச சணலில் 45 சதவிகித அதிகரிப்பும் எதிர்பார்க்கப் படுகிறது. நான்காம் திட்ட நகல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் பேராவல் உடையவைகளாய் காணப்படுகின்றன. ஆனால், அதற்கேற்றாற் போல் இலக்குகளைச் சாதிக்கக் கூறப்பட்டுள்ள செயல் திட்டங்களும், கொள்கைகளும் போதாதவைகளாகவே உள்ளன. வேளாண்மை உற்பத்தியில் ஐந்தாண்டுகளில் ஆண்டுக்கு 5·59 சதவிகிதம் கூட்டு வளர்ச்சி வீதம் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுவது என்பது திட்டமிடுபவர்களின் பேராவலையும் மிதமிஞ்சிய நம்பிக்கையையுமே புலப்படுத்துகின்றது. வளர்ச்சி வீதத்தை ஒரு புது உற்பத்தி முறையினால் சாதிக்க முடியுமென்று திட்டக்குழு கருதுகின்றது. அப்புது முறைகளில் சில தன்மைகள் வருமாறு: முதலாவதாக, சீரான விதைகள், உரங்கள், மின்சக்தி, பூச்சி மருந்துகள், நீர்ப்பாசனம், தொழில் நுட்ப அறிவு போன்ற உள்ளீடுகளின் அழிப்பை அதிகரிக்க மாபெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இரண்டாவதாக, தீவிர வேளாண்மை சாகுபடித் திட்டங்கள் அமுலாக்கச் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வளங்களை அளித்துத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். உற்பத்தியை மேலும் அதிகரிக்க, விவசாயியின் நோக்கத்தையும் திறமையையும் அதிகரிக்க நிலச்சீர் திருத்தங்களும், அவசியமான விலைக் கொள்கையும் பின் பற்றப்படும். கடைசியாக, ஒரே நிலத்தில் அதிக விளைச்சலை அளிக்கும் குறுகிய காலப் பயிர்கள் பயிரிடப்படும். இத் திட்டத்தின் புதிய முறை கருத்தளவில் சிறப்பானதாக இருந்தாலும்

நடைமுறையில் எந்த அளவுக்கு வெற்றியைத் தேடித் தரும் என்பது ஐயப்பாட்டுக்குரியதாகும். நான்காம் திட்ட கால வேளாண்மை உற்பத்தி இலக்குகள் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பொருள்	அலகு	1968–69ல் உற்பத்தி மதிப்பீடு	1973–74 இலக்குகள்	உற்பத்தி அதிகரிப்பு சதவீதங்களில்
உணவு தானியங்கள்	மில்லியன் டன்களின்	98·0	129·0	31
எண்ணெய் வித்துக்கள்	,,	8·5	10·5	24
கரும்பு	,,	12.0	15.0	25
பருத்தி	மில்லியன் பேல்களில்	6·0	8·0	33
சணல்	,,	6·2	7·4	19
புகையிலை	மில்லியன் கி. கிராமில்	380	480	26

உற்பத்தியில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் உணவு தானியங்களின் நுகர்ச்சி ஆகியவைகளின் அடிப்படையில் 1970–71-ல் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

வருடாந்திரத் திட்டங்களும் வேளாண்மையும்

மூன்றும் திட்ட காலம் முடிவடைந்த பின் நான்காம் திட்டம் ஏப்ரல் 1,1969-ல் தான் அமுல் படுத்தப்பட்டது. எனவே, மூன்று வருடாந்திரத் திட்டங்கள் 1966–67-க்கும் 1968–69-க்கும் இடைப்பட்ட காலத்தில் நடைமுறையில் இருந்தன. மூன்று வருடாந்திரத் திட்டங்களிலுமாகச் சேர்த்து வேளாண்மையில் மொத்தம் ரூ. 1624 கோடி (மொத்த முதலீட்டில் 24 சதவீதம்) செலவிடப்பட்டது.

1966–67-ல் நாட்டில் வறட்சிநிலை இருந்ததால், சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் அவசரமாக மேற்கொள்ளப்பட்டன. அதிக விளைச்சலைத் தரும் விதைகளும், ஏராளமான அளவில் பலவகை உரங்களும் செவ்வையாகப் பயன்படுத்தப் பட்டன. மேலும், 1967–68-ல் பருவகால மழை முறையோடு பெய்ததால், வேளாண்மை உற்பத்தி 95 மில்லியன் டன்களாக அவ்வாண்டில் உயர்ந்தது. எனவே 1968–69-க்கு உணவு தானிய உற்பத்தி இலக்கு 102 மில்லியன் டன்களாகத் தீர்மானிக்கப் பட்டது. ஆனால், நாட்டின் சில பகுதிகளில் பயிர்களில் தோல்வி காணப் பட்டதால், உண்மையில் அவ்வாண்டில் 95·6 மில்லியன் டன்கள்தான் உணவு தானிய உற்பத்தி இருந்தது. எனினும், விஞ்ஞான முறையில் வேளாண்மை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதாலும், பருவகால மழையை எதிர்பார்க்காமல் இருக்க சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற் கொள்ளப் பட்டதாலும் உணவு தானிய உற்பத்தி அதிகரித்து வருகிறது.

வேளாண்மை வளர்ச்சி வீதம்
(Agricultural Growth)

ஐந்தாண்டுத் திட்டங்கள் அமுலில் கொண்டு வரப்பட்ட தற்குப் பிறகு வேளாண்மை குறிப்பிடத்தக்க வகையில் முன் னேற்றம் பெற்று வருகிறதென்பதை யாரும் மறுத்துக்கூற இயலாது. வேளாண்மை உற்பத்தி வீதம் பொதுவாகத் திட்ட காலத்தில் சராசரியாக ஆண்டிற்கு 3·92 சதவீதமும், சாகுபடி நில அளவு விரிவடையும் வீதம் சராசரியாக ஆண் டிற்கு 1·72 சதவீதமும் வளர்ந்து வருவது கவனிக்கத் தக்க தாகும். மேலும், எல்லா மாநிலங்களிலும் வேளாண்மை வளர்ச்சி வீதம் சமமாக இல்லை. வேளாண்மை உற்பத்தியில் பஞ்சாப், (பிரிக்கப்படாத) குஜரத், தமிழ் நாடு, மைசூர் ஆகிய மாநிலங்கள் முன்னணியில் நிற்கின்றன. பஞ்சாபில் 1952–53க்-கும், 1964–65-க்கும் இடைப்பட்ட காலத்தில் வேளாண்மை உற்பத்தி வீதம் 5·56 சதவீதமாகவும், குஜரத்தில் 5·12 சதவீத மாகவும், தமிழ் நாட்டில் 4·91 சதவீதமாகவும், மைசூரில் 4.06 சதவீதமாகவும் கூடியுள்ளது. சிறப்பாக, தமிழகத்தில் அதிக மான நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டும், "ஆழ" உழும் முறைப்படியும், "அகல" உழும் முறைப்படியும் உற் பத்தி செய்து உணவு தானியங்களின் உற்பத்தி பெருகி யுள்ளது. இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்குள் சிறந்த வேளாண்மை வளர்ச்சி ஏற்பட்டுள்ள மாநிலங்களில் தலா

வருமானம் மிகுந்து காணப்படுகிறது. எடுத்துக் காட்டாக, இந்தியாவில் உள்ள மாநிலங்களில் பஞ்சாபில்தான் தலா வருவாய் ரூ. 575 ஆக உள்ளது. அதை அடுத்து, மகாராஷ்டிரத்தில் ரூ. 526, மேற்கு வங்காளத்தில் ரூ. 498-ம் தலா வருவாய் உள்ளது. அதிகமான தொழில் வளர்ச்சி பெற்ற மேற்கு வங்காளத்தில் கூட, பஞ்சாபை விடக் குறைந்த தலா வருவாய் உள்ளது. எனவே, தொழில் வளர்ச்சியை விட வேளாண்மை வளர்ச்சி இந்தியாவில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெரிய வருகிறது.

முடிவுரை: தற்போதுள்ள இந்தியப் பொருளாதார நிலையில் புது வகைத் தொழில் நுட்ப வேளாண்மை உற்பத்தி முறை இந்திய மண்ணில் வேரூன்றிப் பிடித்துவிட்டது. இனி, அதை யாராலும் அசைக்க முடியாது. விவசாயிகளுக்குத் தேவையான உதவியையும், ஊக்கத்தையும் அளித்து திறமையான வேளாண்மை நிர்வாகத்தின் மூலம் இந்திய வேளாண்மை வளர்ச்சி மேலும் விரைவாகப் பெருகி நான்காம் திட்ட இறுதிக்குள் 129 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தியைச் சாதிக்க முடியும் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது.

18. வேளாண்மை இயந்திரமயமாக்கப்படுதலும் சிக்கல்களும்

இந்திய விவசாயிகள் நெடுங்காலமாகவே சீரான அமைப்பில்லாத, எளிமையான, பழமைத்தன்மையுடைய கருவிகளையும் சாதனங்களையும் பயன்படுத்தியே வேளாண்மைத் தொழிலை நடத்தி வருகின்றனர். நவீன இயந்திரங்களையும், கருவிகளையும் பரந்த முறையில் விஞ்ஞான காலத்திற்கேற்பப் பயன்படுத்த இன்னும் முன்வரவில்லை. இதனால் தான், இந்தியாவில் வேளாண்மை உற்பத்தி விரைவாகப் பெருக முடியாமல் குறைந்த வளர்ச்சி வீதத்தைக் கொண்டு உள்ளது. வேளாண்மைத் தொழிலை இயந்திரமயமாக்கினால், உற்பத்தி செலவு குறைந்து, லாபம் அதிகரிப்பதோடு, உழைப்புத்திறனும் மேம்பட்டு ஏராளமான உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட இயலும். இதனால், குறுகிய காலத்தில் இந்தியாவில் உணவுப் பொருள்களில் தன்னிறைவு ஏற்பட வாய்ப்பும் கிடைக்கும். விவசாயிகளின் வருமானமும், நீண்டகாலத்தில் வேலைவாய்ப்பும் பெருகி நாட்டில் முதலாக்கம் ஏற்படும். விவசாயிகளின் ஏழ்மை நிலை நீங்கி வாழ்க்கைத்தரமும் உயரும். ஆனால், இந்தியாவில் இயந்திரகாலத்தில் இன்னும் மரக்கலப்பையே பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கத்திய நாடுகளிலும், ரஷ்யாவிலும் நவீன முறைப்படி தயார் செய்யப்பட்ட இயந்திரங்களே பண்ணைகளில் பயன் படுத்தப்படுகின்றன. அந்நாடுகளில் ஏற்பட்டுள்ள வேளாண்மைப் புரட்சி தொழில் புரட்சியோடு ஒப்பிடும் அளவுக்கு வெற்றியடைந்துள்ளது. குறைந்த செலவில் உயர்ந்தரக பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டு கிராம வாழ்க்கை மேம்படுத்தப்பட்டுள்ளது. இயந்திரங்களைக் கொண்டு பயனற்றுக் கிடக்கும் நிலங்களையும் சீராக்கிச் சாகுபடிக் கேற்ற நிலங்களாக மாற்ற முடிகிறது. எனவே, தற்போது, வேளாண்மைத் துறையை

இயந்திரமயமாக்காமல் வேளாண்மை வளர்ச்சியை வேகப் படுத்த முடியாது என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், எந்தச் சமயத்தில் எந்த அளவு, எந்த முறையில் இயந்திரங்களைப் பயன் படுத்த வேண்டும் என்பது தான் விவாதத்திற்குரியது.

சீரான தொழில் நுட்ப உற்பத்தி

வேளாண்மை இயந்திரமயமாக்கப்படுதல் என்பது கால் நடைகள் மற்றும் மனித சக்திக்குப் பதிலாக உற்பத்தியில் இயந்திர சக்தியைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இயந்திரங்களைப் பயன்படுத்தி நிலத்தை உழுவது முதல் உணவு தானியங்களைச் சந்தையில் விற்பது வரையுமுள்ள வேளாண்மை நடவடிக்கைகள் அனைத்தையும் குறுகிய காலத்தில் திறமையுடன் குறைந்த செலவில் செய்ய முடிகிறது. டிராக்டர்களைப் பயன்படுத்தி நிலத்தைச் சீராக உழ முடிகிறது; விதைகளை விதைப்பதற்கும் உரமிடுவதற்கும் டிரில் என்னும் இயந்திரம் பயன்படுகிறது; அதைப்போலவே, அறுவடை செய்வதற்கும், நெல் பிரிப்பதற்கும் சாகுபடி இயந்திரங்கள் (Harvester-thresher) இருக்கின்றன. சந்தைக்குத் தானியங்களைக் கொண்டு செல்லவும் டிராக்டர் பயன்படுகிறது. இம்முறையினால், மரக்கலப்பை, எருதுகள் போன்ற சாதனங்கள் நீக்கப்பட்டு இயந்திரங்கள் அவைகளின் பணியை மேற்கொள்ளுகின்றன. இதனால், ஓர் ஏக்கர் நில விளைச்சலும், ஒரு நபர் உற்பத்தித்திறனும் அதிகரிக்கின்றது.

இந்தியப் பொருளாதார இயல் அறிஞர்களில் சிலர் இந்திய விவசாயிகள் தங்கள் பழமையான கருவிகளையும் சாதனங்களையும் நீக்கி விட்டு நவீன கருவிகளைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமென்று வாதிடுகின்றனர். மற்றவர்கள், தற்போது இந்தியாவிலுள்ள பொருளாதார, சமூக சிக்கல்களின் அடிப்படையில், வேளாண்மை இயந்திர மயமாக்கப்படுவது சிறிதும் பயனளிக்காது என்று விவாதிக்கின்றனர். இனி, வேளாண்மை இயந்திரமயமாக்கப்படுவதால் ஏற்படும் நன்மைகளையும், தீமைகளையும் ஆராய்வோமாக.

நன்மைகள்

வேளாண்மைத்துறையில் இயந்திரங்களை இரு கட்டங்களில் உட்புகுத்தலாம். முதலாவதாக, எந்த விதப் பாதக

விளைவும் ஏற்படாத வகையில் உடனேயே வேளாண்மைத் துறையில் இயந்திரங்களைப் பயன் படுத்துதல். உதாரணமாக, காடுகளைச் சுத்தமாக்குதல், பயனற்றுக் கிடக்கும் நிலங்களைச் சீராக்குதல், நிலப்பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற பணிகளை உடனடியாக மேற்கொள்ள டிராக்டர்களைப் பயன் படுத்த முடியும். மேலும், நீர்க்குழாய்கள் அமைத்தல், மின்சக்தியினால் இயங்கும் குழாய்க்கிணறுகளை ஏற்படுத்துதல் போன்ற வேலைகளுக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தலாம். கரும்புச் சாறு பிழிதல், எண்ணெய் தயாரித்தல் போன்ற மற்ற வேளாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மின்சார மோட்டார்கள், டீஸல் இயந்திரங்கள் ஆகியவைகளைப் பயன் படுத்தலாம்.

இரண்டாவதாக, வேளாண்மைத் துறையில் கூட்டுறவு இணைப்பண்ணைகள், நிலவுடைமை ஒருங்கிணைப்பு போன்றவைகளை ஏற்படுத்திய பிறகு இயந்திரங்களை உட்புகுத்தல். ஏனெனில், இந்நிலையில்தான் நிலத்தின் சராசரி அளவை அதிகரித்து இயந்திரங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்ய இயலும். இனி, இயந்திரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகளை ஆராயலாம்.

1. வேளாண்மை இயந்திரமயமாக்கப்படுவதால் பேரளவு உற்பத்தியினால் ஏற்படும் அகச்சிக்கனங்கள், புறச்சிக்கனங்கள் அனைத்தும் பண்ணைகளுக்குக் கிடைக்கும். இயந்திரங்கள் மிக விரைவாகவும் மிகத் திறமையோடும், துல்லியமாகவும் செயல் புரிகின்றன. மனிதன் தானாக உற்பத்தியில் ஈடுபட்டால் உற்பத்தியாவதைவிட, மிக அதிகமாக, இயந்திரங்களின் துணையோடு நடவடிக்கைகளை மேற் கொண்டால், உற்பத்தி செய்ய முடியும். உதாரணமாக, ஒரு விவசாயி ஒரு ஜதை மாடுகளின் உதவியோடு 10 நாட்களில் உழுவதை, ஒரு டிராக்டர் ஒரு நாளில் மிகவும் ஆழமாகக் கூட உழ முடியும். பண்ணை இயந்திரங்களின் மூலம் மிகப் பெரிய நிலங்களையும் மிகச் சுலபமாக உழ முடிகிறது; ஏராளமான பயிர்களையும் குறுகிய காலத்தில் அறுவடை செய்ய முடிகிறது; ஏராளமான விளைபொருள்களையும் சந்தைக்குச் சீக்கிரத்தில் கொண்டு போக முடியும். இதனால், உற்பத்திச் செலவுகள் குறைந்து, நுகர்வோருக்குக் குறைந்த விலையில் தரமான பொருள்கள் கிடைக்கும்.

2. வேளாண்மைத்துறையிலுள்ள கடினமான வேலைகள் முழுவதையும் இயந்திரங்கள் செய்வதால் விவசாயியின் இன்னல்

கள் குறைகின்றன. எடுத்துக்காட்டாக, நிலச்சீரமைப்பு, மண்ணை வெட்டி எடுத்து வெளியே போடுதல், நிலத்தை உழுதல் போன்ற நடவடிக்கைகள் கடுமையான பணிகளாகும். இவைகளனைத்தையும் இயந்திரங்கள் சுலபமாகவும் குறுகிய காலத்திலும் செய்து முடிக்கின்றன.

3. இயந்திரங்களைப் பயன் படுத்தி விவசாயம் செய்வதால், தொழில்துறை, போக்குவரத்துத் துறை போன்றவைகளில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும், எனவே, வேளாண்மைத் துறையிலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்குச் சிறு தொழில்கள் போன்ற துறைகளில் வேலைகள் கிடைக்கும். ஆகையினால் பண்ணை இயந்திரங்களால் வேலையின்மை ஏற்படும் என்ற அச்சம் அவசியமில்லை.

4. நம் நாட்டின் சில பகுதிகளில் நில உடைமைகள் பெரிய அளவில் இருப்பதால், வேளாண்மையை இயந்திரமயமாக்குவதால் உற்பத்தி பெருகும். எல்லா வகை நிலங்களிலும் பயன் படுத்தத்தக்க டிராக்டர்கள் இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. முன்மாதிரியாக 20 முதல் 50 ஏக்கர் நிலத்திலும் பயன்படுத்தத்தக்க சிறிய டிராக்டர்கள் உள்ளன.

5. கால்நடைகளைப் பல்வேறு வேளாண்மை நடவடிக்கைகளில் பணி புரியச் செய்யலாம். ஏனெனில், இயந்திரமயமாக்கப்பட்ட துறையால் விவசாய நடவடிக்கைகள் அதிகரிக்கும். மேலும், பயன்படாத ஏராளமான கால்நடைகளைக் குறைப்பதற்கான வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

6. இயந்திரங்களை இயக்கும் எண்ணெயின் அளிப்பு அதிகரித்து வருகிறது. சமீபத்தில் அஸ்ஸாமிலுள்ள டிக்பாய் (Digboi) என்னுமிடத்தில் எண்ணெய்ச் சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகளால் எண்ணெயின் தட்டுப்பாடு சிறிது குறைந்துள்ளது. மேலும், இரண்டாம் திட்ட காலத்தில், இந்தியாவிலேயே இரும்பு, எஃகு ஆலைகள் இயந்திரங்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன.

வேளாண்மையை இயந்திர மயமாக்கிய நாடுகளில் விவசாயிகளின் பொருளாதார வாழ்க்கை புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் இயந்திரங்களைப் பயன்படுத்தியதால் வேளாண்மை உற்பத்தி பன்மடங்கு உயர்ந்துள்ளது.

மேலும், முதலில் விவசாய நாடாக இருந்த அமெரிக்கா முன்னேற்றமடைந்த தொழில்துறை நாடாக மாற்றமடைந்தது. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 12 சதவீதம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், இக்குறைந்த எண்ணிக்கை கொண்ட விவசாயிகள் இயந்திரங்களின் துணை கொண்டு ஏராளமான உணவு தானியங்களை உற்பத்திசெய்து உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, இந்தியா போன்ற அயல் நாடுகளுக்கும் ஏராளமான உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து வருகின்றனர். இந்தியாவின் தற்போதைய பிரச்சினை உணவு உற்பத்தியை அதிகரித்து, அதில் தன்னிறைவு பெறவேண்டியதாக இருப்பதால், வேளாண்மையைப் பயனுள்ள வகையில் இயந்திரமயமாக்குவது அவசியமாகும். ஆனல், இந்தியாவிலுள்ள தற்போதைய பொருளாதார, சமூக, தொழில்நுட்ப நிலை எந்த அளவுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தச் சாதகமாக இருக்கும் என்பதுதான் சிக்கல்.

*சிக்கல்கள்

1. தற்போதைய இந்திய நிலையில் இயந்திரங்களைப் பயன்படுத்திக் குறுகிய காலத்தில் ஏராளமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்கிற கட்டாயநிலை இருந்தாலும், அதற்கு எதிராகப் பல பிரச்சினைகள் உள்ளன. முதலாவதாக, இயந்திரங்களைப் பயன் படுத்த முதலில் இன்றியமையாததாக விளங்குவது பரந்து ஒருங்கிணைந்து இருக்கும் நிலவுடைமையாகும். இந்தியாவில் நிலம் உட்பிரிவுபடுத்தப்பட்டும், துண்டாடப்பட்டும் உள்ளது. இதனுல், நில உடைமைகளின் அளவு மிகச் சிறியதாக உள்ளது; மேலும், பல இடங்களில் சிதறுண்டு காணப்படுகிறது. இந்தியாவில் நிலவுடைமைகளின் அளவு மேற்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில் 3 ஏக்கராகவும் பழைய பம்பாய் மாநிலத்தில் 12 ஏக்கராகவும் இருந்தது. நிலவுடைமைகள் இந்தியாவில் மிகச் சிறிய அளவினதாய் இருப்பதால், பயனுள்ள முறையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க இயலாது. நிலவுடைமைகளின் சராசரி அளவு ரஷ்யாவில் 1600 ஏக்கராகவும், கானடாவில் 234 ஏக்கராகவும், அமெரிக்காவில் 145 ஏக்கராகவும் உள்ளது. இயந்திரமயமாக்கல் இத்தகைய நாடுகளில்தான் சாத்தியப்படும். இந்தியா போன்ற நாடுகளில் அதை உட்புகுத்த இயலாது.

2. வேளாண்மையை இயந்திர மய மாக்கினல் ஏராள மான விவசாயிகள் வேலையை இழந்து தவிக்க வேண்டிய துன்ப நிலை ஏற்படுமென்று கூறப்படுகிறது. ஏற்கனவே கிராமங்களில் வேலையின்மையும், வேலைக்குறைவும், அதிகமாக இருந்துவருகிறது. ஒரு மதிப்பீட்டின்படி, தற்போது இந்தியா விலுள்ள சாகுபடி நிலங்களை இயந்திரங்களின் துணையோடு சாகுபடி செய்ய 3 முதல் 4 மில்லியன் விவசாயிகளே போதும். எனவே, எஞ்சியுள்ள ஏராளமான வேளாண்மைத் தொழிலா ளர்களுக்கு வேறு மாற்று வேலை கிடைக்கச் செய்வது எளிதில் இயலாத காரியமாகும். ஏனெனில், விவசாயமல்லாத தொழில் களில் எஞ்சிய எல்லோருக்கும் வேலை அளிப்பது கடினமாகும். எனவே, இது இயந்திரமயம் ஏற்படுவதற்கு எதிராக இருக்கும் தீவிரமான மறுப்பு ஆகும். ஐக்கிய அமெரிக்கா, கானடா போன்ற நாடுகளில் வேளாண்மைத் தொழிலாளர்களின் பற்றுக்குறைப் பிரச்சினையைத் தீர்க்க இயந்திரமயம் கையாளப் பட்டது. ஆனல், இந்தியாவில் அதற்கு நேர்மாருக வேளாண் மைத் தொழிலாளர்களின் அளிப்பு அதிகமாக இருப்பதோடு குறைந்த கூலிக்கும் தொழிலாளர்கள் பணிபுரிய வருகின்றனர். மக்கள் தொகையின் அழுத்தம் நிலத்தில் அதிகமாக இருப் பதால், சாகுபடி செய்யப் பட்ட ஒரு நபர் சராசரி நிலத்தின் அளவு 1921-ல் 0·90 ஏக்கராவாக இருந்து 1941-ல் 0·72 ஏக்க ராகக் குறைந்து வருகிறது[1].

திரு. தர்லோக் சிங் அவர்களின் கணக்கீட்டின்படி, மொத்த மக்கள் தொகையில் 30 சதவீதத்தினர் இயந்திர மயத் தால் வேளாண்மையிலிருந்து வெளியேற்றப்பட்டுத் தங்கள் வேலையை இழப்பார்கள்.[2] எனவே, இந்தியாவில் உழைப்புச்- சிக்கன செயல் முறைகள் (Labour-saving devices) விரும்பத்தக்க தல்ல. இதையே மகாத்மா காந்தி அவர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார். "ஒரு குறிப்பிட்ட வேலையைக் குறைந்த எண்ணிக்கை கொண்ட தொழிலாளர்கள் இருக்கும் பட்சத்தில் இயந்திர மயம் சிறந்ததாகும். இந்தியாவில் இருப் பதைப்போல் ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு ஏராள மானவர்கள் இருக்கும் போது இயந்திரமயம் நாட்டிற்குக் கேடு விளைவிக்கும்."

[1] பட்டாச்சார்ஜீ. J. P., இந்திய வேளாண்மையில் இயந்திரமயம் அதன் பொருளாதாரம்; இந்திய வேளாண்மைப் பொருளாதாரப் பத்திரிகை. *1965* ப. *76* இலிருந்து.

[2] இந்திய வேளாண்மைப் பொருளாதாரப் பத்திரிகை, தேர்ந்தெடுக் கப்பட்ட கட்டுரைகள் *(1940—1964)* ப. *90*.

3. பண்ணைகளில் செய்யப்படும் வேலைகள் அனைத்தும் இயந்திரங்களே செய்து முடித்துவிடுவதால், இந்தியாவிலுள்ள ஏராளமான கால்நடைகள் பயனற்றுப் போய் விடும். எஞ்சிய கால்நடைகள் முழுவதையும் வேறு பணிகளுக்காகப் பயன் படுத்தவும் இயலாது. தற்போது இருக்கும் ஏராளமான கால் நடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது கடினமான காரிய மாகும்.

4. தற்போது, விவசாயிகளில் பெரும்பாலோர் கல்வி அறிவும் பொருள் வசதியும் இன்றி இருக்கும் சூழ்நிலையில், இயந்திரமயம் பெரும் அளவில் மேற்கொள்ளப் பட்டால் சிறந்த பயன் கிட்டாது. முதலாவதாக, சராசரி கல்வி அறிவு கொண்ட விவசாயிக்குப் பண்ணையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களைக் கையாளும் அளவுக்கு, தொழில்நுட்ப அறிவு இல்லை. இரண்டாவதாக, விலையுயர்ந்த சாதனங்களாகிய டிராக்டர் போன்றவைகளை வாங்கிப் பயன்படுத்தும் அளவுக்கு நிதி வசதி இல்லை. பெரும்பாலான விவசாயிகள் அறியாமை, ஏழ்மை போன்றவைகளால் அல்லல்படுகின்றனர்.

5. வேளாண்மை இயந்திரமயமாக்கப்பட்டால் பேரள வில் இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். இந்தியாவில் தற்போதுள்ள சூழ்நிலையில் பேரளவில் பண்ணை இயந் திரங்களை உற்பத்தி செய்ய முடியாது. எனவே, வெளிநாடு களிலிருந்து பண்ணை இயந்திரங்களை இறக்குமதி செய்யப் போதுமான அயல் நாட்டுச் செலாவணி இந்தியாவிடம் இல்லை. மேலும், இவ்வியந்திரங்களைப் பயன்படுத்த, பெட்ரோல், டீஸல், மண்ணெண்ணெய் போன்ற சுரங்க எண்ணெய்கள் தேவைப்படும். உள்நாட்டில் கிடைக்கும் தாது எண்ணெய்கள் உள்நாட்டுத் தேவைகளையே பூர்த்தி செய்யப் போதாததால் நாட்டில் ஏற்கனவே இவைகளுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. இவைகளை நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தால் அயல் நாட்டுச் செலாவணி இருப்பு மீண்டும் குறையும். மேலும், இயந்திரங்களைப் பழுது பார்க்கத்தகுந்த நிபுணர் களும், இயந்திரங்களின் துணைப் பகுதிகளும், (Spare parts) பணிபுரியும் நிலையங்களும் (Servicing Station) போதுமான அளவு இந்தியாவில் இல்லை.

6. இறுதியாக, இயந்திரமயம் ஒரு நபர் உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்கும். ஏனெனில், அது தொழிலாளர் களின் எண்ணிக்கையைக் குறைத்து இயந்திரங்களின்பணியை அதிகரிக்கிறது. ஆனால், இயந்திரமயம் ஓர் ஏக்கர் நில உற்பத்

தியை அதிகரிக்காது. இந்தியாவின் பெரும் பிரச்சினை ஓர் ஏக்கர் நிலத்தில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதுதான். ஏனெனில், நாட்டில் கிடைப்பதற்கு அருமை உடைய சாதன மாக இருப்பது நிலம். இருக்கும் நிலத்தைக் கொண்டு அதிக மான உணவு உற்பத்தியைச் சாதிப்பதுதான் தற்போதைய குறிக்கோளாகும். ஜப்பான் போன்ற நாடுகளில் வேளாண்மை இயந்திரமயமாக்கப் படாமலே, தீவிர சாகுபடி முறையால் (Intensive cultivation) ஓர் ஏக்கர் நில விளைச்சல் பன்மடங்கு அதிகரித்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆய்வுரை : வேளாண்மை இயந்திரமய மாக்கப்பட்டால் ஏற்படும் பிரச்சினைகளையும் நன்மைகளையும் ஆராயுமிடத்து, இந்தியாவைப் பொறுத்த வரையில் அது சிறந்த கொள்கை யாகாது என்று கூறப்படுகிறது. ஆனால், அந்த மறுப்புக்கு விடையாகக் கீழ்க்கண்டவற்றைக் கூற முடியும்.

முதலாவதாக, இயந்திரங்களைப் பயன்படுத்த மிகப் பெரிய அளவு நிலவுடைமைகள் இருக்க வேண்டுமென்று கூறப்படு கிறது. ஆனால், வருங்காலத்தில் அரசின் கொள்கை நாடு முழுவதும் கூட்டுறவு இணைப்பண்ணைகளும், நில ஒருங்கிணைப் பும் ஏற்படுத்துவதாக இருப்பதால், சாகுபடி செய்யப்படும் நிலங்களின் அளவு அதிகரிப்பது திண்ணம். மேலும், மிகச்சிறிய அளவுகொண்ட நிலங்களிலும் பயன்படுத்தத் தக்க இயந்திரங் களும் தற்போது உற்பத்தி செய்யப் படுவதால், இப்பிரச்சினை யைச் சுலபமாகத் தீர்க்க முடியும்.

இரண்டாவதாக, வேளாண்மை இயந்திரமய மாக்கப் பட்டால் ஏராளமான வேளாண்மைக் கூலிகள் வேலையில் லாமல் தவிப்பார்கள் என்பது வேலையின்மையை மிகையாகக் கணக்கிடுவதாகும். இயந்திரங்களைப் பயன் படுத்தினால் குறுகிய காலத்தில் சிறிது வேலையின்மை ஏற்படலாம். ஆனால், இயந்திரமயத்தால் நாட்டில் நிலக்கரி, கரும்பு, எஃகு, போக்கு வரத்து போன்றவைகளின் தேவை அதிகரிக்குமாதலால், இத் துறைகளில் அதிகமான வேலை வாய்ப்பு ஏற்படும். மேலும், மகத்தான இந்தியப் பொருளாதாரம் வேலை வாய்ப்பை ஏற் படுத்த முடியாது என்று கூறுவது அதன் செயல் ஆற்றலையும் சக்தியையும் குறைபடக் கூறுவதாகும். சமீபத்தில் ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில் ஏராளமான வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வேலையற்றோரின் துயர் துடைக்கப்படுவதை யாரும் மறுக்க இயலாது.

மூன்றாவதாக, வேளாண்மைத் தொழில் இயந்திரமயமாக்கப் பட்டால் ஏராளமான கால்நடைகள் பயனற்றுப் போய் விடும் என்று கூறப்படுகிறது. ஆனால், தற்போது சக்தியற்ற, பலவீனமான கால்நடைகளைக் குறைக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. எண்ணிறந்த கால்நடைகளுக்குத் தீனி போட வசதியும் போதிய நிலங்களும் இல்லை. பெரும்பாலான இடங்களில் மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் இடையே நிலத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களுக்கும் போட்டி இருக்கிறது.

நான்காவதாக, அயல் நாட்டு இயந்திரங்களையும் தாது எண்ணெய்களையும் பேரளவில் இறக்குமதி செய்வதால் அயல் நாட்டுச் செலாவணியில் பெரும் இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது. ஆனால், பண்ணை இயந்திரங்களுக்காக அயல் நாடுகளை எதிர்பார்ப்பதற்குப் பதிலாக இந்தியாவிலேயே அவைகளை உற்பத்தி செய்யச் செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டும். ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் இத்துறையில் தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதியாக, வேளாண்மை இயந்திரமயமாக்கப்பட்டால் ஒரு நபர் உற்பத்திதான் அதிகரிக்கும். ஓர் ஏக்கர் நில உற்பத்தி அதிகரிக்காது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும். ஏனெனில், ரஷ்யாவிலும், நம் நாட்டிலேயே சூரத்கார் (ராஜஸ்தான்) என்னுமிடத்திலும் இயந்திர உற்பத்தியால் ஓர் ஏக்கர் நில உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

முடிவுரை : இந்தியாவின் வேளாண்மை உற்பத்திப் பிரச்சினையைத் திறமையான முறையில் தீர்க்க வேளாண்மைத் தொழிலை இயந்திரமயமாக்குவது சிறந்த பயனளிக்கும். இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் விவசாயிகள் வெளியேறும் நிலை ஏற்படாதவகையிலும், இயந்திரங்கள் விவசாயிகளுக்குச் சிறந்த முறையில் துணைபுரியும் வகையிலும் இருப்பது நலம். ஒரே சமயத்தில் பேரளவு இயந்திரமயம் ஏற்படாத வகையில் ஒவ்வொரு கட்டமாக இயந்திரங்களின் உபயோகத்தை அதிகரிக்கவேண்டும். இது விவசாயிகளுக்கு எவ்விதத் தீங்கையும் ஏற்படுத்தாது. அதற்கு நடுவில் எஞ்சிய மக்கள் தொகையை வேளாண்மையல்லாத மற்றத் தொழில்களுக்கு மாற்றிவிட வேண்டும்.

இந்தியாவில் இயந்திரமயம் அமுலாக்கப்படல்

தொழில் நுட்ப ரீதியில் இந்தியாவில் இயந்திர மயம் தோன்ற எவ்விதத் தடையுமில்லை. 1947-ல் மத்திய அரசு, மைய டிராக்டர் நிறுவனத்தை (Central Tractor Organisation) ஏற்படுத்தியது. அது உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பயனற்றுக் கிடந்த நிலங்களைப் பண் படுத்தி, சீராக்கிச் சாகுபடிக்கு ஏற்றவைகளாக மாற்றியது. உலக வங்கியின் நிதி உதவியால் மத்திய அரசு 240 டிராக்டர் களை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது. பல்வேறு மாநிலங்களும் தங்கள் டிராக்டர் கழகங்களை (State Tractor Organisation) ஏற்படுத்தியுள்ளன. இவைகள் பயனற்றுக் கிடக்கும் நிலங்களைச் சாகுபடிக்கு ஏற்ற வகையில் பண்படுத்து வதோடு டிராக்டர்களை விவசாயிகளுக்கு வாடகைக்குத் தருகின் றன.

நாடு சுதந்திரமடைந்தபின், செல்வமும், திறமையும் கொண்ட நிலக்கிழார்கள் டிராக்டர்களைப் பயன்படுத்தி வேளாண்மைப்பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றனர். 1949–50-ல் 3300 டிராக்டர்களும், 1951–52-ல் ரூ. 6 கோடி மதிப் புள்ள 7400 டிராக்டர்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. தற்போது டிராக்டர்களின் இறக்குமதி குறைந்து விட்டது. நில உச்சவரம்புச் சட்டம் வருவதால், நிலக்கிழார்கள் தற்போது டிராக்டர்களில் பணத்தை முதலீடு செய்ய அச்சப்படுகின்றனர். ஆனால், உள் நாட்டிலேயே டிராக்டர்களின் உற்பத்தி, தமிழ்நாடு, ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் அதிகரித்து வருவது போற்றத்தக்கதாகும்.

பெரும்பாலான விவசாயிகள் அறியாமையாலும், ஏழ்மை யாலும் துன்பப்படுவதால்தான், இந்தியாவில் இயந்திர மயம் மகத்தான முன்னேற்றத்தைஅடைய முடியவில்லை. இருப்பினும், பெரும்பாலான இந்திய விவசாயிகள் மின்சக்தியால் இயங்கும் இயந்திரங்கள், மின்சார மோட்டார், டீசல் இயந்திரங்கள் போன்றவைகளை மிகுதியாகப் பயன் படுத்தி வருகின்றனர். நீர் இறைத்தல், கரும்புச்சாறு பிழிதல், எண்ணெய் தயார் செய்தல் போன்ற பணிகளும் தற்போது இயந்திரங்களைப் பயன்படுத்தியே செய்யப்படுகின்றன. நான்காம், ஐந்தாம் திட்ட காலத்திற்குள் உணவுத்துறையில் முழுமையான தன் னிறைவு பெறவேண்டுமென்றால், அரசு வேளாண்மையில் இயந்திரமயம் அதிகரிக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

19. பசுமைப் புரட்சி
(Green Revolution)

விளக்கம் : பசுமைப் புரட்சி என்னும் சொல் உலகத்தின் பல பாகங்களில் ஏற்பட்டிருக்கும் வேளாண்மை உற்பத்தி முறையின் அடிப்படை மாற்றத்தைக் குறிக்கிறது. இப் புரட்சியினுல் ஓர் ஏக்கர் நிலத்தில் ஏற்படும் விளைச்சலின் அளவு திடீரென மேல்நோக்கி அதிகரிப்பதை உணர முடியும். ஆனுல், நல்ல பருவகால மழையின் காரணமாக ஓரிரு ஆண்டுகளில் தற்காலிகமாக உணவு தானிய உற்பத்தி அதிகரிப்பதைப் பசுமைப் புரட்சி என்று கூற இயலாது. வேளாண்மை உற்பத்தி தொடர்ந்து வேகமாக நிலையான முறையில் பல ஆண்டுகளுக்கு அதிக விளைச்சலைக் கொடுக்கும் நிலையைத்தான் பசுமைப் புரட்சி என்று உண்மையில் அழைக்க முடியும். எதிர்காலப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இது ஓர் அற்புதம் போல் அமைந்து உணவுப் பிரச்சினையைத் தீர்த்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை. வளர்ந்து வரும் நாடுகளாகிய இந்தியா, பாகிஸ்தான் உணவு தானியங்களின் விளைச்சலை அதிகப்படுத்த; அதிக விளைச்சல் தரும் விதைகள், சிறந்த நீர்ப்பாசன வசதிகள், அதிகமான ரசாயன உரங்கள், பசுமை உரங்கள், சிறந்த கடன் வசதி, அவசியமான விவசாயக் கருவிகள், சாதனங்கள், பூச்சி மருந்து தூவுதல், நிலச் சீரமைப்பு, விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவு போன்ற பல முறைகளால் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. பசுமைப் புரட்சி, முக்கியமாக, உணவு தானிய உற்பத்தியில் தான் அதிக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பருப்பு வகைகள் ஆகியவைகளில் ஏற்படுத்த வில்லை. இந்தியாவில் ஏற்பட்ட பசுமைப் புரட்சி பெரும்பாலும் கோதுமைப் புரட்சியாகவே உள்ளது. இந்தியாவில் கோதுமை விளைச்சல் ஓர் ஏக்கருக்கு வேகமான வளர்ச்சியைப் பசுமைப் புரட்சியின் மூலம் பெற்றுள்ளது. ஓர் ஏக்கருக்கு அரிசி விளைச்சல் இப்புரட்சியினுல் வியக்கத்தக்க

முறையில் அதிகரிக்கவில்லை. கோதுமையின் உற்பத்தி முறையில் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய மாறுதல் இந்தியாவில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வெற்றிக்கெல்லாம் காரணமாக அமைந்தது மெக்ஸிகோ நாட்டில் 20 ஆண்டுகளாக இடைவிடாது தீவிரமாக மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சியே ஆகும். டாக்டர் நார்மன் போர்லாக் (Dr. Norman E. Borlaug) கும் அவருடைய குழுவும் அதிகமான விளைச்சலைத் தரும் மெக்ஸிகோ நாட்டுக் குட்டை விதை வகைகளை உருவாக்கி பயிரிட்டு வளர்த்தார்கள். இந்த மெக்ஸிகோ நாட்டுக் குட்டை கோதுமையும், அதிலிருந்து பிறப்பிக்கப்பட்ட விதைகளும்தான் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பசுமைப் புரட்சியைத் தட்டி எழுப்பி வேளாண்மைத் துறை முன்னேற்றத்திற்கு அடிகோலி வருகிறது.

புதிய உற்பத்தி முறையும் வேளாண்மையும்

இந்தியாவில் பசுமைப் புரட்சி ஏற்படுவதற்கு முன் "தீவிர வேளாண்மை மாவட்ட திட்டம் (Intensive Agricultural District Programme) 1960–61-ல் ஏழு மாவட்டங்களில் முன்னோடித் திட்டங்களாக (Pilot Projects) மேற் கொள்ளப்பட்டன. இம்முறையின் அடிப்படையில் நாட்டிலுள்ள உணவுப் பற்றுக் குறையைத் தீர்க்கவும், விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த அடிப்படையை அமைக்கவும் உற்பத்திச் சாதனங்களைத் தீவிரமாகப் பயன்படுத்தி விளைச்சலைக் கூட்டும் முறையைப் பரப்ப அரசு முயன்றது. இதற்காக அரசு உற்பத்தி முறையில் புதிய சூழ்ச்சி முறைகளைக் கையாளத் திட்ட மிட்டது. அதன் அடிப்படையில் மிகுதியான விளைச்சலைத் தரும் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய விதைகள்பயன்படுத்தப்பட்டன. மேலும், இரசாயன உரங்கள் தக்க அளவில் பயன்படுத்தப்பட்டன. தீவிர சாகுபடி முறை, நல்ல மழை வளம் உள்ள இடங்களிலும், நீர்ப்பாசன வசதிகள் மிகுந்த இடங்களிலும் மேற் கொள்ளப் பட்டது. உள் நாட்டிலேயே உர உற்பத்தியைப் பெருக்கி மிகுந்த அளவில் பயிர்களுக்கு உரமிட்டு விளைச்சலை அதிகரிக்கவும் அரசு வழி வகைகளை மேற் கொண்டது. குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டும் செயல் படுத்தப்பட்ட இத்திட்டம் அமோக வெற்றி அடைந்ததால் நாட்டின் பிற பகுதிகளிலும் விரிவு படுத்தப்பட்டது.

பசுமைப் புரட்சியின் முன்னேற்றம்

1967–68-ல் புதிதாக மிகுந்த விளைச்சல் தரும் விதைகளை 14·8 மில்லியன் ஏக்கரில் (High yielding varieties) பயன் படுத்தி

யதால் உணவு தானிய விளைச்சல் 7·7 மில்லியன் டன் கூடியது. மிகுந்த விளைச்சல் தரும் வகைகளையும் பயிரிடும் திட்டத்தின் மூலம் உற்பத்தியின் அளவு அதிகமாகப் பெருகும் என்று திட்டக்குழு கீழ்க் கண்டவாறு மதிப்பிட்டுள்ளது. அதிகமாக உற்பத்தியாகும் உணவு தானியம் ஏக்கருக்கு 0·6 டன் வீதம் 1974–75-ல் 42 மில்லியன் டன்களாகவும் உணவு தானிய உற்பத்தி அதே காலத்தில் 137·6 மில்லியன் டன்களாகவும் அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், உணவு தானிய உற்பத்தி வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 7 சதவீதத்திற்கு மேல் இருக்கும் என்றும் குறிப் பிடப் பட்டுள்ளது. மெக்ஸிகோ நாட்டுக் கோதுமை வகை யானது சுலபமாகப் பயன் படுத்தக் கூடியதாகவும், அதிக விளைச்சலைத் தரக் கூடியதாகவும், பிணியைத் தடுக்கும் சக்தி கொண்ட தாகவும், அதிகமான உரங்கள் பயன்படுத்தும் அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க வல்லதாகவும் அமைந் திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். எடுத்துக் காட்டாக, 1969–70-ல் 14 மில்லியன் ஹெக்டேர் நிலத்தில் 35 சதவீதம் மெக்ஸிகோ நாட்டு விதை வகைகளைக் கொண்டு இந்தியாவில் கோதுமை பயிரிடப்பட்டது. கோதுமை உற்பத்தியில் வியக்கத் தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் மெக்ஸிகோ நாட்டு விதை வகைகளே என்று கூற இயலாது. இந்தியாவில் மேற் கொள்ளப்பட்ட அயராத மகத்தான வேளாண்மை ஆராய்ச்சியின் விளைவேயாகும். அரசின் புதிய வேளாண்மை செயல் முறைகள் புதிய தொழில் நுட்ப முறையையும், புதிய அமோக விளைச்சல் தரும் விதைகளையும் பயன்படுத்த சிறந்த வாய்ப்பினை அளித்தது. அரசின் சக்தி வாய்ந்த பொருளா தாரக் கொள்கை விவசாயியின் பொருளுக்கு ஒரு நியாயமான விலையை ஏற்படுத்தி, சிறந்தவிதைகள், உரங்கள், பூச்சி மருந்து கள், இயந்திரங்கள், நிதி வசதி போன்றவைகள் பசுமைப் புரட்சிக்கு அடிப்படையாய் அமைந்தன.

பசுமைப் புரட்சியின் சாதனை

பசுமைப் புரட்சியின் வெற்றியானது உற்பத்தித் திட்டங் களைச் சீராக அமுலாக்கும் சிறந்த அமைப்பு முறையினலும், அனுபவமும் திறமையும் வாய்ந்த விஞ்ஞான நிபுணர்களின் செயல் ஆற்றலின் மூலமாகவும்தான் ஏற்படும். கடந்த மூன்று ஆண்டு காலமாக இந்தியாவில் கோதுமை உற்பத்தி போற்றத் தக்க முறையில் அதிகரித்துள்ளது. புரட்சிக்கு முற்பட்ட கால மாகிய 1964–65-ல் இந்திய கோதுமை உற்பத்தி 12·3 மில்லியன்

டன்களாக இருந்து வந்தது. 16·5, 18·7, 20 மில்லியன் டன்களாக முறையே 1968, 1969, 1970 ஆகிய ஆண்டுகளில் அதிகரித்தது. தற்போது இந்தியா, கோதுமை உற்பத்தியில் தன்னிறைவு பெறும் கட்டத்தை நெருங்கி விட்டது. 1967–68-ல் பொறுக்கு விதைகளைப் பயன்படுத்திய நிலத்தின் அளவு 112 மில்லியன் ஏக்கரிலிருந்து 134·5 மில்லியன் ஏக்கராக உயர்ந்தது.

பிலிபைன்ஸ் நாட்டிலுள்ள பன்னாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையத்தால் உருவாக்கி வளர்க்கப்பட்ட அதிக விளைச்சல் தரும் குட்டை அரிசி வகையாகிய ஐ. ஆர். 8 (I. R. 8) மேற்கு பாகிஸ்தானில் பயன்படுத்தப்பட்டது. இவ்விதையைப் பயிரிட்டு, புதிய தொழில் நுட்ப முறையில் வேளாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் அங்கு அரிசி உற்பத்தி சிறந்த முறையில் அதிகரித்தது. ஆனால், இந்தியாவில் பருவ கால தட்பவெட்ப நிலையின் காரணத்தால் இவ்வகை அரிசியைப் போற்றத் தக்க முறையில் பயன் படுத்த முடியவில்லை. எனவே, இவ்வகை அரிசியைப் பயன்படுத்தி அரிசி உற்பத்தியில் பெரிய மாற்றம் காண முடியவில்லை. 1960–61-ல் 34·12 மில்லியன் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, 1967–68-ல் 37·86 மில்லியன் டன்களாகக் கூடியது. டி. என் 1 (T. N.1) ஏ. டி. டி. 27 (ADT-27) போன்ற புதிய நெல் வகைகளைச் சோதனை முறையாகச் சில தேர்ந்தெடுத்த இடங்களில் பரப்ப அரசு வழி முறைகளைக் கையாண்டது. நிலச் செழிப்பின் நல்ல நிலைக்கு ஏற்ப அதிக விளைச்சலைத் தரக்கூடிய புதிய அரிசி வகைகள் வைரஸ், பாக்டீரியா போன்ற கிருமிகளால் பாதிக்கப்படுவதால் இந்தியாவில் அத்தகைய விதைகள் நல்ல பயன் அளிக்கவில்லை. இந்திய அரிசி கலாச்சார வரலாற்றிலே வைரஸ் பிணிகள் முக்கியமான இடத்தைப் பெற்று வருகின்றன. இந்தியாவின் அநேக பாகங்களில் தேவையான அளவுக்கு அதிகமாக மிதமிஞ்சிய நீர் பயன் படுத்தப்படுவதால் அரிசி விளைச்சல் குறைவாக உள்ளது.

கோதுமை, அரிசி உற்பத்தியில் புரட்சி ஏற்பட்டுள்ளதால் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உணவு உற்பத்தி அதிகரித்திருப்பதோடு குடியானவர்களின் நிகர வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. இந்திய மொத்த தேசிய உற்பத்தி குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. பசுமைப் புரட்சியின் மகத்தான சாதனை, வளர்ந்து வரும் நாடுகளுக்கு உணவு உற்பத்தியில் "தன்னிறைவைப் பெறுவோம்" என்ற தன்னம்பிக்கையை வெகுவாக ஏற்படுத்தியதே ஆகும்.

டாக்டர். போர்லாக்கின் கருத்துப்படி, "பசுமைப் புரட்சியின் தலையான சாதனையாதெனில், கோதுமை உற்பத்தி முறையில் வெற்றிகரமான மாறுதலை ஏற்படுத்தி, அதை ஒரு மாதிரியாகக் கொண்டு மற்ற பயிர் வகைகளின் உற்பத்தியைப் பெருக்க செயல் திட்டங்களைத் தீட்டுவதே யாகும்."

ஊக்குவிக்கும் காரணிகள் : அதிக விளைச்சல் தரும் புதிய விதைகள், புதுத் தொழில் நுட்ப உற்பத்தி முறை ஆகியவை களை மேற்கொண்டு ஆசியா, ஆப்ரிக்கா, லத்தின் அமெரிக்கா ஆகிய வளர்ந்து வரும் நாடுகளில் பார்லி, பஞ்சு ஆகியவை களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் உறுதி யான செயல் திறனும், நிதிவசதியும், விவசாய வளர்ச்சிக்காக வாழ்வை அர்ப்பணிக்கத் தக்க விஞ்ஞானிகளும் பசுமைப் புரட்சிக்கு இன்றியமையாத அம்சங்களாகும். இவ்விதத்தில் இந்திய அமைப்பு புதிய வேளாண்மை உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டு பசுமைப் புரட்சியின் பயன்களைப் பெறச் சாதகமாக உள்ளது.

இந்தியாவில் கோதுமை, நெல், மக்காச் சோளம், பாஜ்ரா, ஜோவர் ஆகிய ஐந்து பயிர்களின் சாகுபடிக்கு அதிக விளைச்சல் தரும் விதை வகைகள் பயன் படுத்தப்பட்டன. இப் பயிர்களுள் கோதுமை உற்பத்தியில் அமோக விளைச்சல் ஏற்பட்டது. "ஆழ உழும்" முறைப்படி பயிரிட்டதனாலும் அதிக விளைச்சல் ஏற்பட்டது.

பசுமைப் புரட்சி நடவடிக்கைகள்

1. உரத்தைப் பயன்படுத்தல்

புதிய வேளாண்மை விளைச்சல் பெருக்கத் திட்டத்தில் உரமிடுவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து மிகுதியான இரசாயன உரத்தை நிலத்தில் பயன் படுத்தி வருகின்றனர். 1950–51-ல் 56000 டன் நைட்ரஜனும், 700 டன் பாஸ்பேட்டும், 600 டன் பொட்டாசியமும் பயன் படுத்தப்பட்டன. 1968–69-ல் 17 லட்சம் டன் நைட்ரஜனும், 65 லட்சம் டன் பாஸ்பேட்டும், 45 லட்சம் பொட்டாசியமும் பயன் படுத்தப் பட்டது. இந்தியாவிலேயே அமைக்கப்பட்ட இரசாயன உர ஆலைகளின் மூலமாகவும், இறக்குமதி செய்ததன் மூலமாகவும் உரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது.

2. சிறுநீர்ப் பாசனம்

1965–66, 1966–67 ஆகிய ஆண்டுகளில் நாட்டில் வறட்சி ஏற்பட்ட காரணத்தினுல் பீகார், உத்தரப் பிரதேசக் கீழ்ப்பகுதி போன்ற இடங்களில் பஞ்சநிலை தாண்டவ மாடியது. இந் நிலையைப் போக்க, புது வேளாண்மை செயல் முறையின் (Strategy) ஒரு பகுதியாக, சிறுநீர்ப்பாசனவளர்ச்சித்திட்டங்கள் மேற் கொள்ளப் பட்டன. 1966 முதல் 1969 வரையிலுள்ள மூன்றுண்டு காலத்தில் 10 மில்லியன் ஏக்கர் நிலம் புதிதாக நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றது.

3. தொழில் நுட்ப உற்பத்தி முறை

சமீப காலத்தில், வேளாண்மை உற்பத்தியின் பிரதான உள்ளீடாகிய வேளாண்மைத் தொழில் நுட்ப முறை பெரிதும் வலியுறுத்தப் பட்டு வருகிறது. வேளாண்மை ஆராய்ச்சியை வளர்க்கவும் அதற்குத் தகுந்த அமைப்பு முறைகளை ஏற்படுத் தவும் ஏராளமான வழி முறைகளை அரசு கையாண்டு வருகிறது. பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு கருவிகள், இயந்திரங்கள் நீர்ப்பாசன வசதிகள், விவசாயக் கடன் போன்றவைகளின் உபயோகத்தை அதிகரிக்க பல்வேறு புதிய பொது நிறுவனங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் மேற்குறிப்பிட்ட உள்ளீடுகளைப் பயன் படுத்தி வேளாண்மை உற்பத்தி செயல் திட்டங்களைச் சிறப்பாக அமுல் படுத்த அரசு கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், சமூ தாய நலத் திட்டத்தின் வாயிலாகவும், நேரடியாகவும் நிதி வசதி அளித்து ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது.

4. உறுதியளிக்கப்பட்ட விலைகள்

புதிய செயல் திட்ட முறையில் வேளாண்மை உறபத்திக்கு ஊக்கமும், ஆதரவும் அளிக்கத் தக்க வகையில் குறைந்த பட்ச வேளாண்மைப் பொருள் விலைகளை நிலைநிறுத்த உறுதியளிக் கப் பட்டது. 1964-ம் ஆண்டிலிருந்தே இந்தியா முழுவதும் உணவு தானிய ஆதரவு விலைக் கொள்கை கடைப் பிடிக்கப் பட்டது. 1965-ம் ஆண்டில் வேளாண்மைப் பொருள்களுக்கு ஏற்ற விலைக் கொள்கைகளை அவ்வப்போது அரசுக்கு அறி வுறுத்த வேளாண்மைப் பொருள் விலைக்குழு அமைக்கப் பட்டது.

பசுமைப் புரட்சியின் பயன்கள்

உணவு தானிய உற்பத்தியில் நான்காம் திட்ட இறுதிக்குள் தன்னிறைவு பெற 25 முதல் 30 மில்லியன் டன்கள் அதிகமான உணவுப்பொருள் தேவைப் படுகிறது. புதிய திட்டத்தின் கீழ் அதிக விளைச்சல் தரும் விதைகளைப் பயன் படுத்தி விரைவாக விளைச்சலைப் பெருக்கச்செய்ய, பசுமைப் புரட்சி பயன் படு கிறது.

இரண்டாவதாக, இந்தியாவில், உற்பத்திக்கு இன்றி யமையாததாக விளங்கும் உரங்கள், விதைகள், கருவிகள், நீர்ப்பாசனம் போன்றவைகள் போதுமானதாக இல்லை. எனவே, பற்றுக் குறையாயுள்ள இக்காரணிகளை நாடு முழுவ தும் பரவலாகப் பயன்படுத்துவதைக் காட்டிலும் நிலவளமும் நீர்வளமும் கொண்ட சிறந்த வாய்ப்புள்ள குறிப்பிட்ட பகுதி களில் பயன் படுத்துவதால் பசுமைப் புரட்சியின் மூலம் தேவை யான அளவு விளைச்சலைக் குறுகிய காலத்தில் பெற இயலும்.

மூன்றாவதாக, அதிக விளைச்சல் தரும் விதைகளைப் பயன் படுத்தி, அதிகரிக்கும் விளைச்சலைப் பெறுவதால் உணவில் தன்னிறைவு பெற்று உணவு தானிய இறக்குமதியைக் குறைக்க வாய்ப்புக் கிடைக்கும். இதனால் அயல் நாட்டுச் செலாவணி பற்றுக்குறையை ஈடுசெய்ய முடியும். நாட்டில் தொழில்துறை முன்னேற்றத்திற்கு இது அடிப்படையாகவும் விளங்கும்.

நான்காவதாக, குறிப்பிட்ட இடங்களில் போற்றத் தக்க முறையில் விளைச்சல் ஏற்படுகின்ற போது மற்ற விவசாயி களும் இதனைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து, தங்களது நிலங்களிலும் இம் முறையைப் பின் பற்ற ஆர்வம் ஏற்படும். இதன் விளைவாக, நாட்டில் வேளாண்மை உற்பத்தி அதிகரித்து இரண்டாம் வகைத் தொழில்களும், பிற தொழில்களும், பணி களும் சிறந்த வளர்ச்சியைப் பெறும்.

கடைசியாக, புதிய வேளாண்மை உற்பத்தி நடவடிக் கைகளால் நல்ல நீர்ப்பாசன வசதியும் மழையும் உள்ள இடங் களில் முதலில் பசுமைப் புரட்சி ஏற்படுகிறது. இதனால் வேளாண்மை உற்பத்தியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் குறைக் கப்பட்டு நிலையான வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு கிடைக்கிறது. 1965–66-ல் நேர்ந்ததைப் போல பருவ மழை பெய்யாத காலங் களிலும் மொத்த உற்பத்தி குறையாமல் நிலையாக இருக்கும். பருவ கால மழையின் மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை நீக்க பசுமைப் புரட்சியின் மூலம், உணவு தானிய உற்பத்தி யைச் சீராக்கி வெற்றி காண முடியும்.

பசுமைப் புரட்சியின் குறைபாடுகள்

"பசுமைப் புரட்சி எவ்வளவு பசுமையாயிருக்கின்றது" என்பது கேள்விக் குரியதாக உள்ளது. கடந்த மூன்றுண்டுக ளாக, பசுமைப் புரட்சி "என்ன சாதித்துள்ளது"என்ற வினவும் எழுப்பப் பட்டுள்ளது. அதற்கு விடை, அரிசி, சோளம், கோதுமை ஆகிய உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித் துள்ளது என்பதாகும். ஆனால், இத்திட்டத்தின் செயல் முறை யில் சில குறைகள் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1. வேளாண்மை உள்ளீடுகளின் பற்றுக்குறை

பசுமைப் புரட்சியின் முன்னேற்றத்தால் உரம், விதைகள், கருவிகள், பூச்சி மருந்துகள் போன்ற உள்ளீடுகளின் பற்றுக் குறை அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்டு வரும் உள்ளீடுகள் போதுமானவைகளாக இல்லை. எனவே, இவற் றிற்குத் தேவைஅதிகமாகிப் பதுக்கல் முறைகள் மேற்கொள்ளப் படுவதால் விலைகள் அதிகரித்து விடுகின்றன. இதன் விளை வாக, சிறிய உழவர்களால் வேளாண்மைப் புரட்சியின் முழுமை யான பயனை அடைய முடிவதில்லை.

2. முதலாளித்துவப் பண்ணை வளர்ச்சி

அதிக விளைச்சல் தரும் விதை வகைகளைப் பயன் படுத்த உரம், நீர்வசதி ஆகியவைகளில் முதலீடு செய்ய ஏராளமான பணம் தேவைப்படுகிறது. சிறிய நடுத்தர விவசாயிகளுக்கு இத்தகைய பெரிய முதலீடுகள் சக்திக்கு அப்பாற்பட்டவை களாகவே யுள்ளன. மொத்த சாகுபடி நிலத்தில் ஐம்பது விழுக்காடு நிலம் பதின் மூன்று விழுக்காடு பெரிய நிலக்கிழார் களால் நிர்வகிக்கப்பட்டு, அதிகமான முதலீடுகளைக் கொண்டு வேளாண்மை செய்யப் படுகிறது. இதன் விளைவாக, புது வேளாண்மைத்திட்டம்இந்தியாவில்முதலாளித்துவப் பண்ணை முறையை ஊக்குவிப்பதாயுள்ளது. எனவே, இப்புரட்சியின் மூலம்ஏராளமானவிவசாயிகள் பயனடையாமல்கிராம மக்களில் பத்து விழுக்காடு பெரிய நிலக்கிழார்களிடம் செல்வம் குவிவ தற்கு ஏதுவாயுள்ளது.

உலக ஐக்கிய நாடுகளின் சபையின் பொதுக் காரியதரிசியா யிருந்த யூதாண்ட் இதே கருத்தைத்தான் வலியுறுத்தியுள்ளார். "வேளாண்மைத் தொழிலில்அங்காடி நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தாமல் விட்டுவிட்டால் பசுமைப் புரட்சியால் வாணிப

தானியங்களை உற்பத்தி செய்யும் நிலக்கிழார்கள்தான் பெரிதும் நன்மைஅடைவர். சிறிய குடியானவருக்குப் பலன் கிடைக்காது. வாணிபப் பொருள்களில் உற்பத்தி செய்யும் நிலக்கிழார்களில் சிறிய உற்பத்தியாளர்களைக் காட்டிலும் மிகப் பெரிய நிலக் கிழார்களுக்குத்தான் அதிக நன்மை கிடைக்கும். வருமான, செல்வஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கப்போதுமானவழிமுறைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் சமூக அமைதியின்மை ஏற்பட்டு பசுமைப் புரட்சி இரத்தப் புரட்சியாக மாறும்."

3. நிலச் சீர்திருத்தங்களின் அவசியம்

பசுமைப் புரட்சிக்கு முன்னோடியாக நிலச்சீர்திருத்தம் அமைய வேண்டுவது இன்றியமையாததாகும். ஆனால், பசுமைப் புரட்சி முறையில் நிலச்சீர்திருத்தத்தை முதலில் செய்யாமல் சாகுபடி செய்கின்றவர்களுக்கு அதிக விளைச்சல் தரும் உள்ளீடு களைப் பயன்படுத்தி விளைச்சலைக் கூட்ட வேண்டும் என்று முயற்சிப்பதால் பிரச்னைகள் தீர்வதற்குப் பதிலாக அநேக பிரச்னைகள் தோன்றுகின்றன. சிறிய குடியானவர்களுக்கு விளைச்சலைக் கூட்ட வேண்டுமென்ற ஆர்வம் ஏற்படுவதில்லை. அடிப்படை நிலச்சீர்திருத்தங்களைச் செய்யாமல் பசுமைப் புரட்சியில் ஈடுபடுவது, வண்டிக்குப்பின் குதிரையை வைப்பதைப் போலாகும். சுவீடன் நாட்டுப் பொருளியல் அறிஞரான குன்னர் மிர்டால் (Gunnar Myrdal) அவர்களின் கருத்துப்படி பசுமைப் புரட்சியே எல்லாப் பிரச்னைகளுக்கும் சரியான தீர்வு என்ற தப்பெண்ணத்தினால் வளர்ந்துவரும் நாடுகளில் ஏழ்மை அதிகமாகக் காணப்படுகிறது. வளர்ந்து வரும் அநேக நாடுகளில் அடிப்படை சமூக, பொருளாதாரக் கேடுகளைத் தீர்க்க இன்றியமையாத நிலச்சீர்திருத்தங்களின் அவசியத்தைப் பசுமைப் புரட்சி அழித்துக் கொண்டிருக்கிறது". வளர்ந்துவரும் நாடுகளில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த விவசாயிகள்வேளாண்மையில்முதல் செறிவு முறையைப்புகுத்து வதில் அக்கரை கொள்வதால், நிலமில்லா வேளாண்மைக் கூலிகள் ஏற்கனவே நெருக்கடி கொண்ட நகரப் பட்டிகளுக்கு (Slums) விரட்டி அடிக்கப்படுகின்றனர்.

4. சமதர்மக் கோட்பாடும் புதிய உற்பத்தி முறையும்

பசுமைப் புரட்சியின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் அதிக விளைச்சல் தரும் பயிர்களைச் சாகுபடி செய்வதால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சில பகுதி கள் வேகமாக முன்னேற, சில பகுதிகள் பிற்பட்ட நிலையில்

இருக்கும். இதனுல் முன்னேறிய பகுதிகளில் இருப்பவர்களுக்கும், பிற்பட்ட பகுதிகளில் இருக்கும் மக்களுக்கும் இடையிலும் வருமான, செல்வ ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும். இந்நிலை தீவிரம் அடைந்தால் இந்திய அரசு அமைக்க விரும்பும் சமதர்ம அமைப்பை ஏற்படுத்த இயலாது.

5. கிட்டங்கி வசதியின்மை

இந்தியாவில் உள்ள வேளாண்மை உற்பத்தியில் சிறந்த மாநிலங்களில் கோதுமை போன்ற பொருள்கள் மிகுதியாக விளைவதால் அவைகளின் விலைகள் உயர்கின்றன. விலை பொருள்களை நியாயமான விலைக்கு விற்கவேண்டுமானுல் வைத்திருந்து சரியான காலத்தில் விற்க வேண்டும். ஆனுல், இதற்கான கிட்டங்கி வசதிகள் இந்தியாவில் போதிய அளவு இல்லை.

6. அரசாங்கத் துறைகளில் ஒருங்கிணைப்பு இன்மை

புது வேளாண்மை செயல் திட்டத்தின் அடிப்படையில் பல உணவு தானியங்களில் அரசாங்கத்தால் எதிர்பார்த்த அளவு விளைச்சல் சாதிக்கப்படவில்லை. வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒருங்கிணைந்த முழுமையான திட்டம் அமைக்கப்படவில்லை. மாநில அரசுகளின் விவசாயத் துறைகள் பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு நிறுவனங்கள், ஒருங்கிணைந்து வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கச் செயல்படவில்லை: கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுமல் போனதால், சரியான ரசாயன உரங்கள், நிதிவசதி போன்ற உள்ளீடுகள் சீரான முறையில் நாடு முழுவதும் பங்கிடப்படவில்லை.

முடிவுரை: டாக்டர் போர்லாக் அவர்களின் கருத்துப்படி பஞ்சத்திஞல் ஏற்படும் பழைய பிரச்னைகளை விட உற்பத்தி மிகுதியினுல் ஏற்படும் புதிய பிரச்சினைகளோடு போராடுவது மனித சமுதாயத்திற்குச் சாலச் சிறந்தது. பசுமைப் புரட்சியின் மூலம் வெகு நாட்களாக இருந்துவரும் உணவு உற்பத்திச் சீர்கேடுகளைப் போக்காமல் வைத்துக்கொண்டே இருந்தால் மக்கள் தொகை வளர்ச்சியின் மிகுதியினுல் ஏற்படும் குடியானவனின் வறுமை, பசி ஆகியவைகளின் கொடுமையைத் தகர்த்து எறிய முடியாது. பசுமைப்புரட்சி சீரான முறையில், நேர் வழியில் ஏற்பட்ட ஒரு சிறந்த மாறுதலாகும். பசியைப் போக்க மனிதன் மேற்கொண்ட போராட்டத்தின் தற்காலிக வெற்றி

யாக அமைவது பசுமைப் புரட்சியாகும். அது முழுமையாக எல்லா இடங்களிலும் அமுலாக்கப்பட்டால் அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு இந்திய மக்களுக்குப் போதுமான உணவு தானியங்களை அளிக்க முடியும். ஆனால், வேகமான மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைக்க விரைவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் பசுமைப் புரட்சியின் நற்பலன்கள் எல்லா மக்களுக்கும் கிட்டாமல் மிகக் குறுகிய காலத்தில் அழிந்துபோகும்.

20. வேளாண்மை சார்ந்த தொழில்கள்

(Agro-Industries)

இந்திய வேளாண்மைத் துறையில் ஏராளமான குடியான்வர்கள் வேலைக்குறைவால் இன்னலுற்று வருகிறார்கள். சுமார் 25 முதல் 30 சத வீதக் குடியானவர்கள் "உருமறைந்த வேலையின்மை" யால் துன்பப்படுவதாகக் கூறப்படுறது. கிராமப் புறங்களில் வேலையின்மை பரவலாகக் காணப்படுகிறது. மிதமிஞ்சிய மக்கள்தொகை அழுத்தம் நிலத்தில் அதிகமாக ஏற்பட்டுள்ளதைப் போக்க, வேளாண்மை சார்ந்த மற்ற தொழில்களில் எச்ச குடியானவர்களை அழைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இதன் மூலம் உற்பத்தியின் அளவு அதிகரித்து தேசீய வருமானமும் உயரும். இதனால் கிராமப்புறங்களி லிருப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடிகிறது. வேளாண்மைத்துறையில் அரையாண்டுக்குத்தான் குடியானவர்களுக்கு வேலை கிடைக்கிறது. மற்ற காலங்களில் மனிதசக்தி வீணடிக்கப்படாமல் அவர்களுக்கு துணை வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டியதுஇன்றியமையாததாகும். வேளாண்மைத்துறைக்குத் தேவையான சில கருவிகள் உரங்கள் போன்ற உள்ளீடுகளை உற்பத்தி செய்து கிராமங்களில் அளிக்க வேண்டுவதும் மிகவும் அவசியமாகும். இத்தகைய வசதிகளைக் கிராமப்புறங்களில் ஏற்படுத்தி வேலையின்மையையும் வேலைக்குறைவையும் போக்கி உற்பத்தியையும் நுகர்ச்சியையும் அதிகப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனங்களே வேளாண்மை சார்ந்த தொழில்களாகும் Agro-Industries).[1]

இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கை—அக்டோபர், 1969—ப. 1640.

வேளாண்மை சார்ந்த தொழில்களின் இலக்கணம்

இந்தியத் திட்டக்குழு வேளாண்மை சார்ந்த தொழில்களை கீழ்க்கண்டவாறு விளக்கியது: "கால் நடைகள் வளர்த்தல், தோட்டக்கலை, கோழி வளர்த்தல் ஆகியவற்றை உட்படுத்திய வேளாண்மைப் பொருள்களைப் பெறும் முறைகள் மட்டுமே வேளாண்மை சார்ந்த தொழில்களாகக் கருதப்பட முடியாது. அத்தோடு கூட வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான வேளாண்மைக் கருவிகள் போன்ற உள்ளீடுகளையும் உற்பத்தி செய்பவைகளே வேளாண்மை சார்ந்த தொழில்களாகும்."[2] உள்ளீடுகளின் உருவ அமைப்பு, உற்பத்தி ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு வேளாண்மைக்கு ஆதரவாக விளங்கும் நடுநிலை நிறுவனங்கள் "வேளாண்மை சார்ந்த தொழில் துறைகள்" (Agro–industrials) என்று பொதுவாக அழைக்கப் படுகின்றன. ஆனால், இவைகளில் வேளாண்மைப் பொருள்கள் மூலப் பொருள்களாகப் பயன்படுத்தப்படவில்லையாதலால், இத் தொழில் துறைகள் வேளாண்மைத் தொழில்களிலிருந்து வேறுபட்டவைகளாகும். வேளாண்மைப் பொருள்களை மூலப் பொருள்களாகப் பயன்படுத்திஅவற்றை ஆதாரமாக வைத்துச் செயல்படும் தொழில்கள் தான் "வேளாண்மைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்" (Agro-based industries) என்று அழைக்கப்படுகின்றன. பொதுவாக, இத் தொழில்களில் பெரும்பாலானவை எப்படியும் ஒரு வகையில் வேளாண்மைப் பொருள்களை அடிப்படை மூலப் பொருள் களாகக் கொண்டு பயன்படுத்தி வருகின்றன. நுகர்ச்சிக் காகத் தேவைப்படும் விவசாய பொருள்களை உற்பத்தி செய்யும் முறைகளைக் (Processing) கையாளுபவைகள் வேளாண்மை சார்ந்த தொழில்களேயாகும். மேலும், இத் தொழில்கள் மற்ற தொழில்களுக்குத் தேவையான பஞ்சு அதைப் போன்ற மற்ற பொருள்கள் ஆகியவற்றையும் உற்பத்தி செய்கின்றன. வேளாண்மைக்குத் தேவையான உரங்கள் போன்ற உள்ளீடுகளை உற்பத்தி செய்பவைகளும் இந்த வேளாண்மை சார்ந்த தொழில்களாகும். இவ்வகைத் தொழில்களில் வேளாண்மைச் சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழில்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

வேளாண்மை சார்ந்த தொழில்களின் வளர்ச்சி

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், சீரான முறையில் திட்டங்கள் தீட்டவும் வேளாண்மை சார்ந்த

[2] நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் - ஒரு விளக்கம், 1966—ப. 241.

தொழில்களின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். இத் தொழில்களை விரிவுபடுத்திச் சீரான முறையில் புதுமெருகு கொடுக்க பதின்மூன்று மாநிலங்களில் வேளாண்மை சார்ந்த தொழில் கழகங்கள் (Agro-Industries Corporations) ஏற்படுத்தப் பட்டுள்ளன. இக் கழகங்கள் ரூ. 21·5 கோடி அளிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டு விளங்குகின்றன.

இந்திய வேளாண்மை சார்ந்த தொழில் கழகங்கள்

இந்திய விவசாயப் பொருள்களின் உற்பத்தியை அதிகப் படுத்த பல்வேறு மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்ட புதிய பொது நிறுவனங்கள் வேளாண்மை சார்ந்த தொழில் கழகங்களாகும். இந்திய விவசாய உற்பத்தியை நவீனப்படுத்திச் சீரான உற்பத்தி முறைகளைக் கையாள இயந்திர மயத்தை மேற் கொண்டு வேளாண்மைத் தொழில் முன்னேற்றமடைய இக் கழகங்கள் துணைபுரிகின்றன. இந்தியாவிலேயே மகாராஷ்டிர மாநிலத்தில்தான் முதல் முதலாக டிசம்பர், 1965-ல் ஒரு வேளாண்மைத் தொழில் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அதைப் பின் பற்றி பஞ்சாப், பீகார், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இக் கழகங்கள் 1966-ல் அமைக்கப்பட்டன. தற்பொழுது நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களிலும் ஒவ்வொன்றாகப் பதினாறு வேளாண்மை சார்ந்த தொழில் கழகங்கள் பணி புரிந்து வருகின்றன.

இக்கழகங்களின் அமைப்பும் பணிகளும்

இக் கழகங்கள் மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சியால் ஏற்படுத்தப்பட்டவை. இக் கழகங்களின் பங்கு மூலதனத் தொகைக்கு மத்திய அரசு மொத்த மூலதனத்தில் 49% சதவீதத்தை அளித்துள்ளது.[3] இக் கழகங்கள் தங்கள் கடன் பத்திரங்களை அளித்துப் பணச் சந்தையிலிருந்து நிதி உதவி பெறவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், இக் கழகங்கள் வணிக வங்கிகள், மாநில நிதி நிறுவனங்கள், வேளாண்மை நிதிக் கழகங்கள், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிபோன்ற நிதி வசதி பெறுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக் கழகங்கள் ஒவ்வொன்றும் ஏழு முதல் பதினாறு அங்கத்தினர் களைக் கொண்ட இயக்குநர்கள் சபையால் நிறுவகிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு, ஆந்திரா, மைசூர், கேரளா போன்ற மாநிலங்களில் தொழில், வர்த்தகம், வேளாண்மை ஆகிய

3. இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கை—ஏப்ரல், 1971—ப. 587

துறைகளில் இருந்து தனியார் பிரதிநிதிகளும் இயக்குநர் சபையில் அங்கம் பெற்றுள்ளனர்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை கீழ்க் கண்டவாறு இக்கழகங்களின் பணிகளை விளக்குகிறது.[4] விவசாயிகள் தங்கள் குறைந்த நிதி வசதியோடு விலையுயர்ந்த சாதனங்களைப் பெற இயலாத நிலையில் உள்ளதால், இக்கழகங்கள் கடன் தவணை முறையில் இயந்திரங்களையும், சாதனங்களையும் விவசாயிகளுக்கு விற்கும் பணியை மேற்கொண்டுள்ளன. இக்கழகங்கள் டிராக்டர்கள், விவசாய சாதனங்கள், உபபகுதிகள் போன்றவற்றைப் பங்கிட அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளன. மேலும், விவசாய இயந்திரங்களைப் பழுதுபார்க்கவும், சீர்படுத்தவும் பணி நிலையங்களையும் ஏற்படுத்தியுள்ளன. பல்வேறு மாநிலங்களில் இக்கழகங்கள் அநேக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அவற்றில் முக்கியமானவைகள் பின்வருமாறு:

1. கடன் தவணை முறையில் விவசாய இயந்திரங்கள், கருவிகள் ஆகியவைகளை விவசாயிகளுக்குப் பங்கிடுதல்.

2. இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுத்தல்.

3. வேளாண்மை உள்ளீடுகளை (inputs) உற்பத்தி செய்தல், பகிர்ந்து அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்.

4. பண்ணையில் உற்பத்தியாகும் பொருள்களைப் பிரித்துத் தரப்படுத்துதல்;

5. பணி நிலையங்களின் மூலமாக இயந்திரங்கள், மற்ற சாதனங்கள் ஆகியவற்றைப் பழுது பார்க்க வகை செய்தல்.

மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இக்கழகங்கள் வேளாண்மை உற்பத்தியைஅதிகரிக்கத் திட்டம் தீட்டி விவசாயிகளுக்குத் தேவையான இயந்திரங்களையும் சாதனங்களையும் அளித்து வருகின்றன. எல்லா மாநிலங்களிலும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை இக்கழகங்கள் விவசாயிகளுக்குப் பங்கிட்டு வருகின்றன. இக்கழகங்களில் பெரும்பான்மையானவைகள் கடன் தவணை முறையில்

[4] நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், 1969—74, திட்டக்குழு, இந்திய அரசு,—ப. 136.

பண்ணைக்குத் தேவையான இயந்திரங்களையும், டிராக்டர்களை யும் பங்கிட்டு வருகின்றன. தமிழ்நாடு, மைசூர் போன்ற மாநிலங்களில் டிராக்டர்கள், பம்பு செட்டுகள், மற்ற வேளாண்மை இயந்திரங்களைத் தவணை முறையில் விவசாயி களுக்கு அளித்து வருகிறார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் தவணை முறையில் இயந்திரங்களை விவசாயிகள் வாங்குவதற்கு நிதி வசதி அளித்து வருவதால், இக்கழகங்கள் தங்கள் செயல் முறைகளை மாற்றி அமைத்துள்ளன. தமிழ்நாடு, மைசூர், பீகார் ஆகிய மூன்று மாநிலங்களிலும் குறைந்தபட்சம் ஐந்து ஏக்கர் முதல் 25 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயி களுக்கு மட்டும்தான் டிராக்டர்கள் விற்கப்படுகின்றன.

பணி நிலையங்கள் அமைத்தல்

இக்கழகங்களின் அடுத்த இன்றியமையாத நடவடிக்கை பணி நிலையங்களைப் பல இடங்களில் ஏற்படுத்துதல். இப்பணி நிலையங்கள் விவசாய இயந்திரங்களையும், கருவிகளையும் பழுது பார்க்கத் தேவையான சாதனங்கள் அனைத்தையும் பெற் றுள்ளன. இப்பணி நிலையங்கள் விவசாய நடவடிக்கைகளுக் குத் தேவையான கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றை சீராகப் பழுது பார்த்து வருகின்றன. நிலத்தில் துளையிட்டு குழாய் கிணறுகளை ஏற்படுத்தத் தேவையான இயந்திரங்கள், நீர் ஓடைகளை ஏற்படுத்தத் தேவையான இயந்திரங்கள், இயந்திர அமைப்புகளைப் பாதுகாக்கும் சாதனங்கள் ஆகிய வற்றை இப்பணி நிலையங்கள் பழுது பார்த்து வருகின்றன, இந்நிலையங்கள் வேளாண்மைத் துறைக்குத் தேவையான உரங்கள் பூச்சி மருந்துகள்போன்றவற்றைச் சேர்த்துவைத்துத் தேவையானபோது விவசாயிகளுக்கு அளித்து வருகின்றன. மேலும், பூச்சி மருந்துகளையும் உரங்களையும் நிலத்தில் தூவும் பணியையும் பம்பு செட்டுகளை அமைக்கும் வேலையையும், வேளாண்மை இயந்திரங்களைப் புதுப்பிக்கும் சேவையையும் மேற்கொள்ளுகின்றன.

சில வேளாண்மைத் தொழில் கழகங்கள் நிலத்தைச் சீரமைத் தல் பூமிக்கு அடியில் உள்ள நீர் வசதியைப் பயன்படுத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டுள்ளன. உதாரணமாக, கேரளாவில் உள்ள தொழில் கழகம் ஓராயிரத்தி நூற்றி இருபது ஏக்கர் நிலத்தை மாநில அரசாங்கத்தின் சார்பாகச் சீரமைத்தது. மேலும், நிலத்தைச் சமப்படுத்தும் பணியையும் மேற்கொண்டது. தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள

வேளாண்மைத் தொழில் கழகம் துளையிட்டு குழாய் கிணறுகளை அமைக்கத் தேவையான துளையிடும் கருவிகளை வாடகைக்கு அளித்து வருகிறது.

வேளாண்மை இயந்திரங்கள் உற்பத்தி செய்தல்

விவசாய இயந்திரங்களை அளிக்கும் பணியோடு உற்பத்தி செய்யும் பணியையும் இக்கழகங்கள் மேற்கொண்டு வருகின்றன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளையும், அமைப்புகளையும் பயன்படுத்தி இயந்திரங்களின் பகுதிகளை ஒன்றுசேர்க்கும் பணியை இக்கழகங்கள் மேற்கொண்டுள்ளன. மேலும், இக்கழகங்கள் பல்வேறு விவசாயக் கருவிகளையும் உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன. மாதிரியாக, உத்திரப்பிரதேசத்திலுள்ள கழகம் 847 டிராக்டர்களுக்கான பகுதிகளை ஒன்று சேர்த்து அவற்றைப் பிற மாநிலங்களுக்கு மத்திய அரசின் ஒதுக்கீட்டின்படி அனுப்பி வைத்தது.[5] இக்கழகம் விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்யும்பணியையும் மேற்கொண்டுள்ளது. இக்கழகங்களில் சில விவசாயத்தின் அடிப்படைத் தேவைகளான தரமான விதைகள், பூச்சி மருந்துகள், உரங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் திட்டங்களையும் தீட்டியுள்ளன. அதன்படி மகாராஷ்டிரா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் உள்ள கழகங்கள் உரங்களை உற்பத்தி செய்ய செயல்முறைகளை மேற்கொண்டுள்ளன. தமிழ்நாடு, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் உள்ள கழகங்கள் தரமான பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்ய விதைப் பண்ணைகளை ஏற்படுத்தியுள்ளன.

பொருள்களைத் தரம் பிரித்தலும், சேர்த்து வைத்தலும்

இக்கழகங்கள் சேவை செய்துவரும் பகுதிகளுக்கு ஏற்ப பொருள்களின் தரங்களைப் பிரித்து அதன் அடிப்படையில் உற்பத்தி முறையையும் சீராக்குகின்றன. சில கழகங்கள் இப் பணியை ஏற்கெனவே மேற்கொண்டு செம்மையாய்ச் செய்து முடித்து வருகின்றன. இவ்விதமாக, மக்காச் சோளத்தை மாவாக்கும் இயந்திரங்களை மகாராஷ்டிரா, தமிழ்நாடு, மைசூர், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள கழகங்கள் அமைத்துள்ளன. மகாராஷ்டிரா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் உள்ள கழகங்கள் கால்நடைகள், கோழிகள் ஆகியவற்றிற்குத் தேவையான உணவுப் பொருள்

[5] இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கை—ஏப்ரல், 1971—ப. 589

களை அளிக்கும் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளன. மேலும், தமிழ்நாடு, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் அத்தகைய கலப்பு உணவைத் தயார் செய்யும் நிலையங்களை ஏற்படுத்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது. ஆந்திரா, அஸ்ஸாம், பீகார் ஆகிய மாநிலங்களில் உள்ள கழகங்கள் பழங்களைப் பாதுகாக்கும் ஆலைகளை ஏற்படுத்தியுள்ளன. இக்கழகங்கள் தங்கள் மாநில அரசுகளின் நிர்வாகத்தில் இருந்த குளிர்சாதனவைப்பு அறைகள், மாவரைக்கும் இயந்திரப் பகுதிகள், பழவகைகளைப் பாதுகாக்கும் ஆலைகள் ஆகியவற்றைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டன. ஹரியானாவிலுள்ள கழகம் கம்பளிப் பொருளைத் தரப்படுத்தி முக்கியமான பகுதிகளில் கம்பளிச் சந்தைகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டு வேளாண்மைத் தொழில்கழகம் நவீன முறைப்படி இரு முந்திரி தரப்படுத்தும் ஆலைகளையும், மீன் வலைகளைத் தயாரிக்கும் ஆலையையும் ஏற்படுத்த வழிமுறைகளை ஆலோசித்து வருகிறது.

உள்ளீடுகளைப் பங்கிடுதல்

இக்கழகங்களில் சில, மற்ற நடவடிக்கைகளோடு கூட விதைகள் உரங்கள், கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் வேண்டிய உணவு போன்ற உள்ளீடுகளைப் பங்கிடும் பணியை ஆரம்பித்து உள்ளன. பஞ்சாபிலுள்ள கழகம் மக்காச்சோளம், ஜோவர் ஆகிய பயிர்களின் விதைகளை விவசாயிகளுக்குப் பங்கிட்டு வருகிறது. ஹரியானா, குஜரத்திலுள்ள கழகங்கள் கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் தேவையான உணவுப் பொருள்களைப் பங்கிட்டு வருகின்றன. அஸ்ஸாமிலுள்ள கழகம் பூச்சி மருந்துகளையும், உரங்களையும் பங்கிட்டு வருகிறது. மைசூரிலுள்ள கழகம் விதைகளையும், உரங்களையும் விற்பதற்கான பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசின் ஒதுக்கீட்டின்படி இக்கழகங்கள் அநேக மாநிலங்களில் விவசாய உபயோகத்திற்குத் தேவையான இரும்பு, எஃகு ஆகியவற்றைப் பகிர்ந்தளிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளன.

மற்ற நடவடிக்கைகள்: விவசாயிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான பயிற்சியை அளிக்கவும் இக்கழகங்கள் ஏற்பாடு செய்து வருகின்றன. மகாராஷ்டிராவிலுள்ள கழகம் விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளைச் சான்று விளக்கங்களோடு பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறது.

இக்கழகம் பயிர்களைப் பாதுகாக்கும் சாதனங்கள், மின் சக்தியால் பணிபுரியும் கருவிகள் போன்றவைகளை விவசாயிகள் பயன்படுத்த இம்முறைகளை விளக்கிக்காட்டிப் பிரபலப்படுத்தி வருகிறது. இவ்விதமாக ஒவ்வொரு மாநிலமும் விவசாயிகளுக்குப் பல்வேறு வகையான பயிற்சிகளை அளித்து விவசாய உற்பத்தி முறையில் மாறுதல் ஏற்பட வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றன. இக்கழகங்கள் சிறப்பான முறையிலே வளர்ச்சியடைந்தால் வேலையின்றி துயர்படும் பொறியியலாளர்கள் வேளாண்மைப் பட்டதாரிகள் போன்றவர்களுக்கு ஏராளமான சுய வேலை வாய்ப்பு வசதிகள் கிடைக்கும். இதன் மூலம் வேளாண்மை பொறியியல் மனித சக்தியைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தவும் உதவும்.

முடிவுரை: இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் விவசாய வேலையின்மை, வேலைக் குறைவு அல்லது "உருமறைந்த வேலையின்மை" போன்ற சிக்கல்களும் வேளாண்மை உள்ளீடுகளின் பற்றுக்குறை போன்ற பிரச்சினைகளும் சீரான முறையிலே தீர்க்கப்படவேண்டுமேயானால் வேளாண்மை சார்ந்த தொழில்கள் சீருடனும், சிறப்புடனும் வளர அரசு வகை செய்யவேண்டும். வேளாண்மை சார்ந்த தொழில் கழகங்களின் வளர்ச்சிக்கு அரசின் நிதி உதவி, அறிவுரை போன்றவைகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். இதன் விளைவால் வேளாண்மைத்துறையில் உற்பத்தி அதிகரித்து விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதில் ஐயமில்லை.

21. வேளாண்மை நிதி

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மைக் கடன் மிக முக்கிய பங்கினைப் பெற்றுள்ளது. விவசாயிகளுக்கு இன்றியமையாத உள்ளீடு (Input) நிதிவசதியாகும். தற்காலத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய கடனின் தேவையும், அளவும் வளர்ந்து கொண்டே வருகின்றது. ஒரு விவசாயி, நிலச் சீரமைப்பு, புதிய கருவிகளை வாங்குதல் போன்ற ஆக்கப் பணிகளுக்காகவும், சடங்குகள், வழக்குகள் போன்ற ஆக்கத்திற்குப் பயன் படாத செலவினங்களுக்காகவும் பல வழிகளிலிருந்து கடன் வசதி பெற வேண்டியுள்ளது. கிராமக் கடன் பிரச்சினை என்பது விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தல், ஆக்கத்திற்குட்படாத கடன் வாங்குதலைத் தடுத்தல், ஆக்கப் பணிகளுக்காகக் கடன் வாங்குதலை அனுமதித்து ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகளைக் குறிக்கிறது. பல் வேறு காரணங்களுக்காக இந்தியாவில் விவசாயிகள் கடன் வாங்குகின்றனர். இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழு 1951–52-ல் விவசாயிகளின் கடன் தேவைகளை நான்கு வகைகளாகப் பிரித்துள்ளது. அவை பின் வருமாறு :—

1. காலப்படி பிரித்தல்

விவசாய நிதி வசதி, குறுகிய கால, நடுத்தர கால, நீண்ட காலக் கடன் என்று காலப்படி பிரிக்கப்பட்டுள்ளது. 15 மாதங்களில் திருப்பிக் கொடுக்கப்படும் கடன் குறுகிய காலக் கடனாகும். பெரும்பாலும் அறுவடை முடிந்த பிறகு தான் இக்கடன் திருப்பிக் கொடுக்கப் படுகிறது. நடுத்தர காலக் கடன் என்பது 15 மாதங்களுக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவும் கொடுக்கப்படும் கடனாகும். ஐந்தாண்டுகளுக்கு மேல் கொடுக்கப்படும் கடன் நீண்ட காலக் கடனாகும். நுகர்ச்சிக்காக வாங்கப்படும் கடனும் மேற் கூறிய மூன்று காலங்களுக்குத்தான் அளிக்கப்படுகிறது.

2. காரணப்படி பிரித்தல்

உற்பத்தியைப் பெருக்குவதற்காகவோ அல்லது நுகர்ச்சிக்காகவோ விவசாயி கடன் வாங்குகின்றான். பொதுவாக நிலத்தில் நிரந்தர சீரமைப்புக்களை மேற்கொள்ளவும், பெரிய சடங்குகள் போன்றவற்றை நடத்துவதற்காகவும் நீண்ட காலக் கடன் தேவைப் படுகிறது. நிலத்தில் சீரமைப்புக்களை ஏற்படுத்தவும், கால்நடைகள், விலையுயர்ந்த கருவிகள் போன்றவற்றை வாங்குவதற்காகவும், சில வகை நுகர்ச்சிக்காகவும் நடுத்தர காலக் கடன் தேவைப் படுகின்றது. பலவகை உரங்கள், விதைகள், கால்நடை தீவனம் போன்றவற்றை வாங்கக் குறுகிய காலக் கடன் இன்றியமையாததாகும். சமூகப் பொருளாதாரக் காரணங்களுக்காக, தேவையற்ற வீண் நுகர்ச்சிக் கடனைத் தடுக்க வேண்டுவது மிக முக்கிய மாகும். ஆனால், நடை முறையில் நுகர்ச்சிக் கடன் முழுவதையும் தடுப்பது இயலாததாகும். உண்மையில் இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழு 1951-ல் மதிப்பீட்டின்படி மொத்த கிராமக்கடன் சுமார் 56% நுகர்ச்சிக்காகவும், எஞ்சிய 44 சதவீதக் கடன் உற்பத்திக்காகவும் வாங்கப்பட்டுள்ளது.

3. அடமானப்படி பிரித்தல்

கிராமக் கடன்களை அடமானக் கடன்கள், அடமானமில்லாக் கடன்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம். அடமானக் கடன்கள் நிலம் அல்லது மற்ற சொந்த சொத்துக்களின் அடமானத்தின் பேரில் கொடுக்கப் படுவதாகும். அடமானமில்லாக் கடன்கள், லேவாதேவிக் காரர்களால் பொதுவாக விவசாயிகளின் நேர் ஒப்பந்தத்தின் பேரில் கொடுக்கப் படுவதாகும். அத்தகைய அடமான மில்லாக் கடன்கள் விவசாயிகளுடைய நன்னடத்தை, திருப்பிக்கொடுக்கும் சக்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கப் படுவதாகும்.

4. கடனளிப்போரின்படி பிரித்தல்

இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக்குழு யாரிடமிருந்து கடன் வாங்கப்பட்டதோ அவர்களின் அடிப்படையில் கிராமக் கடன் தேவைகளைக் கணக்கிட்டது.

கிராமக்கடன் நடுவர்கள்

வேளாண்மை நிதியளிக்கும் நடுவர்களை அமைப்பு கொண்ட நடுவர்கள், அமைப்பு குறைந்த அல்லது அமைப்பு

இல்லாத நடுவர்கள் என இருவகைகளாகப் பிரிக்கலாம். அமைப்புடைய நடுவர்கள் வணிக வங்கிகள், அரசாங்கம், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவைகளாகும். அமைப்பு இல்லாத நடுவர்கள் (வேளாண்மை மற்றும் தனித்தொழில் நடத்தும்) லேவாதேவிக்காரர்கள், உறவினர்கள், நிலக் கிழார்கள், வணிகர்கள், தரகு வணிகர்கள் போன்றவர்களாவர். 1951–52-ல் இந்தியக் கிராமக்கடன் ஆய்வுக்குழுவும், 1961–62-ல் இந்தியக் கிராமக் கடன் மற்றும் முதலீடு ஆய்வுக் குழுவும் பல்வேறு நடுவர்களின் முக்கியத்துவத்தைப் புள்ளி விவரங்களுடன் கணக்கிட்டுள்ளது. அது பின் வருமாறு:—

கடன் கொடுப்பவர் எண்	மொத்த கடனில் பெற்ற சதவிகிதம். 1951–52 (விகிதங்களில்)	1961–62 (விகிதங்களில்)
1. அரசு	3·3	2·6
2. கூட்டுறவுச் சங்கங்கள்	3·1	15·5
3. வணிக வங்கிகள்	0·9	0·6
4. உறவினர்கள்	14·2	8·8
5. நிலக் கிழார்கள்	1·5	0·6
6. லேவாதேவிக்காரர்கள் (வேளாண்மை)	24·9	26·0
7. லேவாதேவிக்காரர்கள் (தனித்தொழில்)	44·8	13·2
8. வணிகர்கள், தரகு வணிகர்கள்	5·5	8·8
9. பிற	1·8	13·9
மொத்தம்	100·0	100·0

ஆதாரம்: 1. இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழு அறிக்கை, 1954.

2. இந்தியக் கிராமக் கடன் முதலீடு ஆய்வுக்குழுவின் அறிக்கை, 1965.

1951–52-ல் மொத்த கிராமக் கடனில் 7·3%த்தைத் தான் அரசு, கூட்டுறவு சங்கங்கள். வங்கிகள் போன்ற அமைப்புடைய நடுவர்கள் அளித்துள்ளனர். ஆனால், 1961–62-ல் அவர்களுடைய அளிப்பு 18·7%மாக அதிகரித்துள்ளது. லேவா தேவிக்காரர்களின் பங்கு வேகமாகக் குறைந்து வருகிறது. அவர்கள் 1951–52-மொத்த கடனில் 69–7%தை அளித்தனர். 1961–62-ல் அவர்களின் பங்கு 49·2% ஆகக் குறைந்தது. கூட்டுறவு சங்கங்கள் எவ்வளவுதான் கிராமக் கடன் வசதிகளை அளித்து வந்தாலும் வேளாண்மை நிதியளிப்பதில் அமைப்பற்ற நடுவர்களின் ஆதிக்கம் இன்னும் இருந்து கொண்டே தான் வருகிறது. இந்தியக் கிராமக் கடன் நடுவர்களைப் பற்றிய சில உண்மைகளை அறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

அமைப்புள்ள நடுவர்கள்
(Institutional Agencies)

1. அரசாங்கம்

இந்தியாவில் மாநில அரசுகள் 1883-ன் நிலச் சீரமைப்புச் சட்டத்தின்படியும், 1884-ன் விவசாயிகள் கடன் சட்டத்தின் படியும் குடியானவர்களுக்குக் கடன் வசதிகள் அளித்து வருகின்றன. நாடு சுதந்திரம் அடைந்தபின் அரசாங்கம் அதிக உணவு பெருக்கத்திற்காகவும் (Growmore Food), பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப் பட்ட அகதிகளின் புனர் வாழ்வு திட்டங்களுக்காகவும் அரசு கடன் வசதி அளித்து வருகிறது. இக் கடன்களில் பெரும்பாலானவை தக்காவி (Taccavi) கடன்கள் என்று அழைக்கப்படுகின்றன. நாட்டில் வெள்ளம், பஞ்சம் போன்றவைகள் ஏற்பட்டாலும் அரசு குடியானவர்களுக்குக் கடன் வசதி அளிக்கிறது. 1948–49-ல் ரூ. 9 கோடியும், 1955–56-ல் ரூ. 25 கோடியும் அரசு விவசாயிகளுக்குக் கடனை அளித்தது. அரசின் கடனளிப்பில் அநேகக் குறைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

1. **கடன் தொகை போதாமை :** அரசின் கடன் தொகையானது ஏராளமான குடியானவர்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை. கால்நடைகளை வாங்கத் தேவையான கடன் தொகை ரூ. 1000 மாக இருக்க, அரசு கொடுக்கும் தொகையானது ரூ. 200 ஆக மட்டும்தான் இருக்கிறது. 2. பகிர்வில் ஏற்றத்

தாழ்வு: கடன் தொகை பெரிய பண்ணைகளை வைத்துள்ளவர்களுக்கு அதிகமாகவும் நடுத்தர சிறிய நிலங்களை உடைய குடியானவர்களுக்கு மிகக் குறைவாகவும் அளிக்கப்படுகிறது. 3. உகந்த அடமானஅடிப்படையின்மை: நிலம் போன்றஅசையாச் சொத்துக்களைக் கடன் வாங்குவோரிடமிருந்து அடமானமாக அரசு பெறுகிறது. 1951-52ல் அரசு அளித்த மொத்த கடன் தொகையில் 75 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட கடன் அசையாச் சொத்துக்களின் அடமானங்களின் பேரில்தான் கொடுக்கப்பட்டது. குடியானவனின் சொந்த உறுதியின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. 4. காலதாமதம்: அரசினிடமிருந்து கடன் பெறுவதில் மிகுந்த காலதாமதமாவது வழக்கமான இயல்பாகும். கடன் தொகையைப் பெறுவதற்காக முறையில்லாத வகைகளைக் கையாள வேண்டியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31-ம் தேதி அதாவது ஆண்டில் இறுதியில் மட்டும்தான் கடன்கள் அளிக்கப்படுகின்றன. 5. திறமையற்ற கண்காணிப்பு: உற்பத்திக்குப் பயன்படுத்த அளிக்கப்படும் தக்காவிக் கடன்களை ஆக்கப் பணிகளுக்காக விவசாயிகள் பயன்படுத்துகின்றார்களா என்பதைக் கண்காணிப்பாளர்கள் கவனமாகப் பார்வையிடுவதில்லை. கடன் தொகையைக் கொடுப்பதற்கு முன் அரசாங்க அதிகாரிகள் உதாரணமாக, கிணறு வெட்டுவதையோ அல்லது வேறு பணிகளை மேற்கொள்வதையோ பார்வையிட வேண்டும் என்பது ஒரு நியந்தனையாகும். ஆனால், அவ்வாறு பார்வையிடுபவர்களுக்கு நிலத்தின் தன்மை போன்றவைகளைப் பற்றிய அனுபவம் இருப்பதில்லை. மேலும், கடன் தொகையானது சில குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டும்தான் கொடுக்கப்படுவதால் குடியானவர்கள் லேவாதேவிக்காரர்களை நாடிச் சீரழிகின்றனர். 6. ஒருங்கிணைப்பின்மை: கடன் வழங்கும் பல்வேறு அரசின் துறைகளுக்குள் ஒருங்கிணைப்பு இல்லாததால் அநேக விவசாயிகள் அரசின் பல துறைகளிலிருந்து பணத்தைக் கடனாகப்பெற முயற்சிக்கின்றனர். மேலும், அதிகக் கட்டுப்பாடுடன் கடன் தொகை வசூலிக்கப்படுகிறது. கல்வியறிவில்லாத குடியானவர்களால் அரசின் சட்டதிட்டங்கள் சுலபமாகப் புரிவதில்லை.

2. கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

இந்திய வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்குக் கூட்டுறவு கடன் தொகைதான் சிறந்த ஆதாரமாக விளங்க முடியும் என்பது உண்மையாகும். ஆனால், கூட்டுறவு சங்கங்கள் 1951-ல் மொத்த கடன் தேவையில் 3 சதவீதத்தை மட்டும்தான்குடியான

வர்களுக்குக் கடனுகை வழங்கியுள்ளனர். 1961-62-ல் அவர்களின் பங்கு 15·5 சதவீதமாக அதிகரித்தது என்பதை முன்பு குறிப்பிட்ட அட்டவணையின் மூலமாக அறியலாம். 1963-ல் வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் ரூ. 256 கோடியைக் குடியான வர்களுக்குக் கடனுகைக் கொடுத்துள்ளன. கூட்டுறவு கடன் வங்கிகள் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தேவையான நிதி வசதிகளைப் பெற்று வருகின்றன. கூட்டுறவு சங்கங்களின் பணிகளில் அநேக குறைகள் இருந்து வருகின்றன. கூட்டுறவு சங்கங்கள் ஒரு கிராமத்திலுள்ள மக்களில் மிகக் குறைந்த சதவீதத்தினரைத்தான் அதன் அங்கத்தினர்களாகக் கொண்டுள்ளது. இச்சங்கங்களின் மூலமாகக் கிடைக்கும் நிதி வசதி மிகக் குறைவானதாகும். இச்சங்கங்களின் நடைமுறை மூலதன வளங்களாகிய இருப்பு நிதி, வைப்புக்கள் முதல் போன்றவைகளின் அளவு மிகக் குறைவாகும். இச்சங்கங்கள் மற்ற நிறுவனங்களை நாடி நிதி வசதி பெறவேண்டிய நிலையில் உள்ளது. மேலும், இச்சங்கங்கள் குறுகிய காலக் கடன்களை மட்டும்அளித்துவிட்டு நடுத்தரக் காலக் குடியானவர்களின் நிதி தேவைகளில் கவனம் செலுத்தவில்லை. குடியானவர்கள் தங்களுக்கு மிகவும்அவசரமாகப் பணம் தேவைப்பட்டு விண்ணப்பித்தால் எந்தக் காரணத்திற்காகக் கடன் தேவைப்பட்டதோ அத்தேவை நீங்கியபின் இச்சங்கங்கள் கடன் வசதி அளிக்கின்றன. இத்தகைய காலதாமதம் ஏற்படுவதால் வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது. கடன் தொகையானது ஆக்கப் பணிகளுக்காகக் கொடுக்கப்படாமல் தகுதியற்ற காரணங்களுக்காகக் கொடுக்கப்படுகிறது. கடன் தொகையானது பெரும்பான்மையான சங்கங்களில் நிலம் போன்ற அடமான சொத்துக்களின் பேரில்தான் கொடுக்கப்படுகிறது. குத்தகைதாரர்கள், நிலமற்ற விவசாயிகள் கடன் உதவியைப் பெறுவதிலிருந்தும் விலக்கப்பட்டுள்ளனர். அளவுக்கு மீறி அதிகமான கடன் தொகைகளைக் கொடுத்துவிடுவதால் இச்சங்கங்களின் நடைமுறை மூலதனம் வெகுவாகக் குறைந்து விடுகிறது. பெரும்பாலும் விவசாயிகள் ஒரு புதிய கடன் தொகையைப் பெற்று, பழைய கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்தனர். இச்சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் பணக்காரர்களே அங்கத்தினர்களாக இருப்பதால், அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்குக் கடன் தொகை அளிப்பதில் முதலிடம் கொடுக்கின்றனர். இச்சங்கங்கள் சீரும் சிறப்புடனும் கண்ணும் கருத்துமாய்க் கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுவதில்லை.

பெரும்பாலும் பெரிய நிலக்கிழார்களே கூட்டுறவு சங்கங்களி லிருந்து கடன் வசதியைப் பெறுகின்றனர். ஏராளமான கூட்டு றவு சங்கங்கள் நஷ்டம் அடைகின்றன. மற்ற அநேக சங்கங் கள் செயல்புரிய சக்தியற்றுப் போய்விடுகின்றன. 1965-66-ல் 1,92,000 வேளாண்மைக் கடன் சங்கங்கள் இந்தியாவில் இருந்தன. இவற்றில் 2·6 கோடி பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவைகள் விவசாயிகளுக்குக் கடனாக ரூ. 342 கோடியை அளித்துள்ளன. மேற்கூறிய காரணங்களால் கூட்டுறவு சங்கங்கள் கிராமக்கடன் பிரச்சினையைத் தீர்க்க இயலவில்லை. ஆனால், அது நமது நாட்டிற்கு ஏற்ற முறையாக இருப்பதால், அதனை வெற்றி பெறச் செய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

3. நில அடமான வங்கிகள்
(Land Mortgage Banks)

விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கவும், நிலத்தில் சில நிரந்தர ஆக்கப்பணிகள் மேற்கொள்ளவும் தேவைப்படும் நீண்டகாலக் கடனை நில அடமான வங்கிகள் விவசாயிகளுக்கு அளித்து வருகின்றன. 1833-ல் முதன் முதலாக இந்திய நில அடமான வங்கி நிறுவப்பட்டது. அளவுக்கு அதிகமாக அது கடன் கொடுத்ததால் தொடர்ந்து நடைபெறவில்லை. 1929-ல் தமிழ் நாட்டில் மைய நிலஅடமான வங்கி (Central Land Mortgage Bank)தொடங்கப்பட்டது. இது கடன் பத்திரங்களின் மூலம் (Debentures) வேண்டிய அளவு மூலதனத்தைத் திரட்டியது. இவ்வங்கியின் கடன் பத்திரங்களைத் திரும்பச் செலுத்துவதற்கு மாநில அரசு உறுதியளித்தது. மாநில அரசுகள் பல வழிகளி லும் நில அடமான வங்கிகளுக்கு உதவிவருகின்றன. மைய நில அடமான வங்கி கடன் தொகையை முதல் நிலை அடமான வங்கிகளின் (Primary Land Mortgage Banks) மூலமாகத்தான் குடியானவர்களுக்கு நிதி வசதி அளித்து வருகிறது. இவ்வங்கி களின் உறுப்பினர்கள் தங்களது பங்குத் தொகையைப் போல பத்து மடங்கு கடன் பெறலாம். பழைய கடன்களைத் திருப்பிக் கொடுக்கவோ, உற்பத்தியைப் பெருக்கும் நிலச் சீர்திருத்தங் களை மேற் கொள்ளவோ, அல்லது அருகிலுள்ள நிலத்தை வாங்கவோ 20 ஆண்டுகளில் திருப்பி அளிக்கத்தக்க வகையில் 5000 ரூபாய் வரை குறைந்த வட்டிக்கு இவ்வங்கிகள் கடன் தருகின்றன. 1949–50-ல் 283 முதல் நிலை நில அடமான வங்கிகள் இருந்தன. இவற்றில் 126 தமிழ் நாட்டிலும், 79 மைசூரிலும், 26 மத்தியப் பிரதேசத்திலும் இருந்தன. இவ்

வங்கிகளின் செயல் முறைகளில் காணப்படும் குறைகள் வருமாறு: நாட்டிற்குத் தேவையான அளவு அடமான வங்கிகள் இன்னும் ஏற்படவில்லை. மேலும், ஒரு சில மாநிலங்களில் மட்டும்தான் இவ்வங்கிகள் நிலையாய் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாதிரியாக, தமிழ் நாட்டில் மட்டும் நாட்டிலுள்ள மொத்த நில அடமான வங்கிகளில் 45% காணப்படுகின்றன. இந்தியாவின் உள்ள மற்ற பாதிக்கு மேற்பட்ட மாநிலங்களில் இந்த வங்கிகள் ஏற்படுத்தப் படவில்லை. இவ் வங்கிகளின் நடைமுறை முதல் வளங்கள் மிகக் குறைவாய் உள்ளன. அரசின் உறுதியோடு அளிக்கப்படும் இவ்வங்கிகளின் கடன் பத்திரங்கள் பிரபல்யமடையவில்லை. கடன் தொகையானது 15 முதல் 20 ஆண்டுகளுக்குள் கட்டாயமாகத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும். இவ் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையானது பெரும் பாலும் ஆக்கத்திற்குப் பயனளிக்காத பணிகளுக்காகச் செலவிடப்பட்டது. ஏழை குடியானவர்களைக் கவனிக்காது பெரிய பணக்கார விவசாயிகளுக்குத் தான் பெரும்பாலும் நிதி வசதி அளிக்கப்பட்டது. கடன் தொகையைச் சீக்கிரத்தில் அளிப்பதற்காகப் போதுமான பயிற்சி பெற்ற பணியாளர்கள் இவ்வங்கிகளில் இல்லை. மாநில கூட்டுறவு வங்கிகளுக்கும் மைய நில அடமான வங்கிகளுக்கும் இடையே ஒரு சிறந்த ஒருங்கிணைப்பு இல்லை.

4. வணிக வங்கிகள்

வேளாண்மை நிதி வசதியளிப்பதில் வணிக வங்கிகள் குறிப்பிடத்தக்க வகையில் பணி புரியவில்லை. 1951ல் மொத்த கிராமக் கடன் தேவைகளில் 0·9% மட்டும்தான் வணிக வங்கிகள் அளித்தன. ஆனால், 1961–62-ல் மொத்த கடன் தேவையில் 0·6% மட்டும்தான் அளித்தன. வணிக வங்கிகள் பெரும்பாலும் தொழில் வளர்ச்சியடைந்த நகரங்களிலும் ஊர்களிலும் ஏற்படுத்தப்பட்டு கிராமப்புறங்களில் தேவையான அளவு ஏற்படுத்தப்படவில்லை. இதனால், கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு வணிக வங்கிகளிடமிருந்து வேண்டிய நிதி வசதி பெறவும், சேமிப்பு நிதியைச் சேர்த்து வைக்கவும் வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. வணிக வங்கிகள், தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளுக்கு அதிக நிதி வசதியளித்து வேளாண்மைத் துறையைப் புறக்கணித்தனர். வேளாண்மைக்காக வங்கிகள் கொடுத்த நிதி உதவி, அனைத்தும் பெரிய ரப்பர், தேயிலை தோட்டங்களுக்கே கிடைத்தது. மார்ச் 1966-ல், ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டின்படி பட்டியலிலுள்ள வணிக வங்கிகள் மொத்த

கிராமக் கடன் தேவையில் 0.2%த்தை மட்டுமே அளித்ததாகத் தெரிகின்றது. இந்திய வணிக வங்கிகள் சங்கத்தின் கருத்துப் படி, வேளாண்மைத் துறையில் அதிக இடர், நிச்சயமின்மை இருப்பதாலும், கூட்டுறவு நிதி நிறுவனங்கள் வேளாண்மைத் துறைக்கு நிதியுதவி செய்யத் தகுந்தவைகளாக இருப்பதாலும் வணிக வங்கிகள் வேளாண்மைக்கு அதிக நிதியுதவியளிக்க முடியவில்லை. ஆனால், ரிசர்வ் வங்கியின் தற்போதைய கடன் கொள்கையின்படி வேளாண்மைக்கு வங்கிகள் அதிக அளவு கடன் கொடுப்பது ஊக்குவிக்கப்படுகிறது. இதற்காகவே அரசு முதலில் வங்கிகளின்மேல் சமூகக் கட்டுப்பாட்டை விதித்துபிறகு 14 பெரிய வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்கி,வேளாண்மை நிதி வசதிகளை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வகை செய்துள்ளது. மேலும், இத்தகைய ஒரு நடவடிக்கையினால் கிராமக் கடன் வசதியளிப்பதில் வணிக வங்கிகள் ஒரு பிரதான இடத்தைப் பெற்று விளங்க வகை செய்யப்பட்டுள்ளது. எல்லா வணிக வங்கிகளும் இணைந்து வேளாண்மைக் கடனில் அதிகக் கவனம் செலுத்த "வேளாண்மை நிதிக் கழகத்தை" (Agricultural Finance Corporation) நிறுவியுள்ளனர். இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 100 கோடி; செலுத்தப்பட்ட முதல் ரூ. 5 கோடியாகும். இந்தக் கழகம் 20 ஆயிரம் நீர்ப்பாசனக் கிணறுகளை அமைக்க ஐந்து மாநில மின்சாரக் கழகங்களுக்கு ரூ. 7·6 கோடி கடனளித்துள்ளது. இக்கழகம் மொத்தம் ரூ. 60 கோடி முதலீடு செய்ய பல திட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றது. பெரிய வணிக வங்கிகள் கிராமப்புறங்களில் தங்கள் கிளைகளைத் தொடங்கியுள்ளன. 1967–68-ல் மட்டும் வணிக வங்கிகள் நில அடமான வங்கிகளின் கடன் பத்திரங்களில் ரூ. 17 கோடி முதலீடு செய்திருந்தனர்.

5. வேளாண்மை மறு நிதிக் கழகம்
(Agricultural Refinance Corporation)

வணிக வங்கிகள் வேளாண்மைக்குக் குறுகிய காலக் கடன் வசதியை மட்டுமே அளித்து வருகின்றன. ஆனால், விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் சரியான முறையில் ஏற்படுத்தப்படவில்லை. நில அடமான வங்கிகள் போதுமான அளவு நீண்ட காலக் கடன் வசதியை விவசாயிகளுக்கு அளிக்க இயலவில்லை. நீண்ட காலக் கடன் பற்றாக்குறையினால் வேளாண்மை வளர்ச்சி தடைப்படுகிறது. நில அடமான வங்கிகள் பெரும்பாலும் விவசாயிகளின் பழைய கடன்களைத் திருப்பிக் கொடுக்கவே நிதி வசதியளிக்கின்றன.

ஆனால், நீண்ட காலம் பொறுத்திருந்து பலனைப் பெறத்தக்க பெரிய வேளாண்மைத் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்ய நீண்ட காலக் கடன் தேவைப்படுகின்றது. இத்தகைய தேவையைப்பூர்த்திசெய்து நீண்ட காலக் கடன் கொடுக்கும் ஒரு மத்திய நிறுவனத்தைஅமைக்க வேண்டுமென்று வேளாண்மைக் கடன், நில அடமான வங்கிகளின் ஆலோசனைக் குழு வலியுறுத்தியது. அதன்படி 1963 ஆம் ஆண்டு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு ஜூலை 1, 1963-ல் வேளாண்மை மறுநிதிக் கழகம் தோன்றியது.

இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25 கோடி. இதனை 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 25 ஆயிரம் பங்குகளாகப் பகுத்துள்ளனர். இவற்றில் 2,500 பங்குகளை ரிசர்வ் வங்கி வாங்கியது. மீதியுள்ளவற்றை மாநிலக் கூட்டுறவு வங்கிகளும், மத்திய நில அடமான வங்கிகளும், ஆயுள் காப்பீட்டுக் கழகமும், இதர காப்பீட்டு நிறுவனங்களும்,வங்கிகளும் வாங்கியுள்ளன. மத்திய அரசு 15 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பச் செலுத்தும் கடனை 5 கோடி ரூபாய் அளித்தது. ஆரம்பத்தில் கழகம் நடப்பு முதலாக ரூ. 10 கோடி பெற்றிருந்தது. இக்கழகம் வேறு வகைகளிலும் நிதி பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தை ஒன்பது பேர் அடங்கிய இயக்குநர் குழு நிர்வகித்து வருகிறது.

இக்கழகம் நிலத்தைச் சீர்படுத்திச் சாகுபடிக்கு ஏற்றதாக ஆயத்தம் செய்யவும், சில சிறப்பான பயிர்களை வளர்க்கவும், இயந்திரங்களால் உற்பத்தி செய்யும் பண்ணைகளை அதிகரிக்கவும், கால்நடைகளை வளர்க்கவும், நிதி வசதியளித்து வருகின்றது. இது மற்ற நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிக்கின்றது. இக்கழகம் ரிசர்வ் வங்கியோடு இணைந்து பணியாற்றி வருகின்றது. ஜூன் 30, 1965ஆம் ஆண்டு வரை இக்கழகம் ரூ. 15.88 கோடி வரை கடன் கொடுத்துள்ளது. இது பெரும்பாலும் நில அடமான வங்கிகளின் மூலம் நிதியுதவியளிக்கின்றது. கிராமக் கடன் வசதியளிப்பதில் இக்கழகம் முன்னோடியாய் அமைந்து திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

6. இந்திய ஸ்டேட் வங்கி
(The State Bank of India)

இந்திய ஸ்டேட் பாங்கானது வேளாண்மைத் துறையைச் சீரான வளர்ச்சியடையச் செய்யும் குறிக்கோளோடு ஜூலை 1, 1955இல் நாட்டுடைமையாக்கப்பட்டது. இவ்வங்கி கூட்டுறவுத் துறையின் மூலம் வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய நிதி வசதியளிக்கும் பணியைத்தொடக்கம் முதல்அக்கறையுடன்மேற்

கொண்டுள்ளது. முதலாவதாக, இவ்வங்கிகள் கிராமக் கடன் வளர்ச்சிக்கு இன்றியமையாத பொதுவான உதவியளித்து வருகின்றது. இரண்டாவதாக, நில அடமான வங்கிகளுக்கு நிதியுதவியளிக்கிறது. மூன்றாவதாக, விற்பனை கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன் வசதியளிக்கின்றது. நான்காவதாக, கிட்டங்கிகளில் வைத்திருக்கின்ற வேளாண்மைப்பொருள்களுக்கு அவற்றின் ரசீதுகளின் மேல் கடன் தருகின்றது. ஐந்தாவதாக, கூட்டுறவு நிதி முறை ஒருங்கிணைந்து செயல்பட உதவி புரிகின்றது. கூட்டுறவு கடன் சங்கங்கள் வளராத இடங்களில் இவ்வங்கி வேளாண்மைக் கடனில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றது.

குறுகிய கால நிதியுதவி:—இந்திய ஸ்டேட் பாங்கானது கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்குப் பல வழிகளிலும் குறுகிய கால நிதி வசதியளித்து வருகின்றது. கூட்டுறவு நிறுவனங்களின் அரசாங்கக் கடன் பத்திரங்களின்மேல் ஸ்டேட் வங்கியின்வட்டி விகிதத்திற்கும் ½% குறைவாகக் கடனுதவி அளித்து வருகின்றது. சாதாரண வட்டிக்கும் ½% குறைவாகவே பொருள்களின் ஈட்டின் பேரில் இவ்வங்கி கடன் தருகின்றது. 1967ஆம் ஆண்டின் மத்தியில் 39 கோடி ரூபாய் இவ்வகையில் கடன் தரப்பட்டுள்ளது. மாநில மத்திய கூட்டுறவு வங்கிகள் கட்டணமின்றி வாரத்திற்கு மூன்று முறை ஸ்டேட் பாங்கின் மூலம் பணமனுப்பவகை செய்யப்பட்டுள்ளது. ஜூன் 1966 முடிய உள்ள வங்கி ஆண்டில் மட்டும் ஸ்டேட் வங்கியின் மூலம் 500 கோடி ரூபாய் அனுப்பப் பெற்றுள்ளது.

நீண்ட காலக் கடன் வசதி:—மத்திய நில அடமான வங்கிகளுக்கும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் நிதி வசதி செய்கின்றது. நில அடமான வங்கிகளின் கடன் பத்திரங்களை (debentures) வாங்கித் தேவையான பொழுதெல்லாம் அவற்றிற்கு நீண்ட கால நிதி வசதியளிக்கின்றது. இது பெரும்பாலும் தற்காலிக நிதியுதவியாக உள்ளது. ஸ்டேட் வங்கியானது நில வளர்ச்சித் திட்டங்களுக்காக நில அடமான வங்கிகள் மூலம் கடனளிக்கின்றது.

7. இந்திய ரிசர்வ் வங்கி
(The Reserve Bank of India)

இந்திய வேளாண்மைத் துறை பின்தங்கிய நிலையில் இருப்பதற்குக் காரணமாய் உள்ளது நிதி பற்றுக்குறையே என்பதை இந்திய ரிசர்வ் வங்கி அறிந்து தொடக்கம் முதல் வேளாண்மைக் கடனில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளது.

வேளாண்மைத் துறையைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துக் கிராமக் கடன் வசதியை மேம்படுத்தத் தனியாக "வேளாண்மைக் கடன் துறை" (Agricultural Credit Department) ஒன்றை ரிசர்வ் வங்கி ஏற்படுத்தி இயக்கி வருகின்றது. இந்திய வேளாண்மைத் துறையில் காணப்படும் சில குறைபாடுகளினால் ரிசர்வ் வங்கி மிகுதியாகக் கடனளிக்க இயலவில்லை. அதாவது வேளாண்மைக்குக் கடன் கொடுப்பது அதிக இடரை ஏற்படுத்துகின்றது. வேளாண்மைத் துறைக்கு 10 முதல் 15 மாத காலத்திற்குக் கடன் தேவைப்படுகிறது. ஆனால், ரிசர்வ் வங்கியால் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு மேல் அதன் நீர்மை நிதியைக் கடனாக அளிக்க இயலாது. நடுத்தர நீண்ட கால நிதி வசதியை ரிசர்வ் வங்கி மூலம் கொடுப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவதாக, எந்த நிறுவனத்தின் மூலம் ரிசர்வ் வங்கி எல்லா விவசாயிகளுக்கும் கடனளிக்க முடியும்? அநேக கிராமங்களில் கூட்டுறவு கடன் சங்கங்களே இல்லை. இரண்டாவதாக, எந்த வகை ஈட்டின் (Security)பேரில் ரிசர்வ் வங்கி விவசாயிகளுக்கு கடனளிப்பது? நிலம், தங்க நகைகள் ஆகியவைகளின் ஈட்டின் பேரில் கடனளிப்பதைவிட அரசாங்கக் கடன் பத்திரங்களின் அடமானத்தின் பேரில்தான் ரிசர்வ் வங்கி கடனளிக்க இயலும். எனவே, மேற்குறிப்பிட்ட சூழ்நிலையின் காரணமாக 1949-ல் ரிசர்வ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்ட ஆண்டில் ரூ. 2.71 கோடிதான் கடனாக அளித்திருந்தது. ஆனால், மொத்த கிராமக் கடன் தேவை சுமார் 800 கோடி ரூபாயாகும். 1949 வரைக்கும் தகுந்த கடன் பத்திரங்கள் கழிவுக்குக் (discounting) கொண்டு வரப்படாததால் கடன் வசதியை ரிசர்வ் வங்கி சீராக அளிக்க இயலவில்லை.

கிராமத் துறைக்கு ரிசர்வ் வங்கியின் உதவி படிப்படியாகத் தற்காலத்தில் அதிகரித்து வருகின்றது. 9 முதல் 15 மாத காலத்திற்குள்,காலாவதியாகும் வேளாண்மைஉறுதிப் பத்திரங்கள், அரசாங்கக் கடன் பத்திரங்கள் ஆகியவைகளின் ஈட்டின் பேரில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பருவகால வேளாண்மை நடவடிக்கைகள், தானியங்களை விற்பனை செய்தல் ஆகியவைகளுக்காக ரிசர்வ் வங்கி நிதியுதவி செய்கின்றது.

டிசம்பர் 1954-ல் அகில இந்திய கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் அறிக்கை ரிசர்வ் வங்கி மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகளை எடுத்துக் கூறியது. (1) புதுவகை கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி வேளாண்மைக் கடன் வசதியை பரவலாக்குதல், (2) தேவையான அளவு உணவு தானியங்களைச் சேர்த்து

வைத்திருக்க, கிட்டங்கிகளை ஏற்படுத்த நிறுவனங்களை அமைத்தல். (3) இந்திய ஸ்டேட் வங்கியை ஏற்படுத்தி அதை நாட்டுடைமையாக்கல். மேற்கூறிய மூன்று பணிகளிலும் ரிசர்வ் வங்கி கவனம் செலுத்தியது. அக்குழுவின் பரிந்துரையில் இரண்டு தனி நிதிகளை ஏற்படுத்தும்படி பரிந்துரைக்கப்பட்டது.

(1) **தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதி** :—இந்நிதிக்கு 5 கோடி ரூபாய்களை ஆரம்ப நிரந்தர முதலாக ரிசர்வ் வங்கி அளிக்க வேண்டியது. இந்நிதி மூலம் மாநில அரசுகளுக்கு நீண்ட கால நிதி வசதியளித்தல்.

(2) **தேசிய வேளாண்மை (நிலைப்படுத்தும்) நிதி** :—இந்நிதிக்கு ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ரிசர்வ் வங்கி அளிப்பது. இந்நிதியின் மூலம் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு நடுத்தர காலக் கடன்களைக் கொடுத்தல். இப்பரிந்துரைகளை அரசு ஏற்று ரிசர்வ் வங்கியின் மூலம் மேற்குறிப்பிட்ட நிதிகள் ஏற்படுத்தப்பட்டன.

குறுகிய கால நிதியுதவி :—பருவ கால வேளாண்மை நடவடிக்கைகள், உணவு தானியங்களை விற்பனை செய்தல் ஆகியவைகளுக்காக மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு வங்கிவீதத்திற்கும் 2% குறைந்த வீதத்தில் ரிசர்வ் வங்கி கடனளிக்கின்றது. இந்நிதியுதவி 15 மாத காலங்களுக்கு மேற்படாமல் இருக்கும். இக்கடனுதவி தற்போது அதிகரித்து வருகின்றது. 1950–51-ல் ரிசர்வ் வங்கி 7·6 கோடி ரூபாய் மட்டுமே குறுகிய காலக் கடனைக் கொடுத்திருந்தது. இது 1956–57-ல் 35 கோடி ரூபாயாகவும், 1964–65-ல் 253 கோடியாகவும், 1967–68-ல் 368 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

இடைக் காலக் கடன் உதவி :— மாநில அரசுகளின் உத்தரவாதத்தின் பேரில் நிலத்தை வளப்படுத்தவும், நில அரிப்பைத் தடுக்கவும், சிறு நீர்ப்பாசனப் பணிகளை மேற்கொள்ளவும், இயந்திரங்கள், கால்நடைகள் போன்றவற்றை வாங்கவும், மூன்று முதல் ஐந்தாண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய இடைக்காலக் கடனை ரிசர்வ் வங்கி அளிக்கின்றது. ஆரம்பத்தில் இக்கடன் 5 கோடி ரூபாயாகக் குறிக்கப்பட்டது. 1954–55-ல் மத்திய காலக் கடன் ரூ. 27 லட்சமாகும். இது 1964–65-ல் கோடி ரூபாயாகவும், 1967–68-ல் 16 கோடி ரூபாயாகவும் அதிகரித்தது.

நீண்டகால நிதி வசதி :—வேளாண்மையின் நீண்ட காலக் கடன் தேவையையும் ரிசர்வ் வங்கி இரு வழிகளில் நிறைவு செய்

கின்றது. (1) நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களை வாங்கிக் கடனுதவி செய்கிறது. (2) மாநில அரசுகளுக்குக் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்யக் கடன் தருகின்றது. கடன் பத்திரங்களின் மொத்த மதிப்பில் 20% வரைக்கும் கடன் தருகின்றது. 1963–64-ல் ரூ 3 கோடி மதிப்புள்ள நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களில் ரிசர்வ் வங்கி முதலீடு செய்திருந்தது. இது மார்ச் 1965-ல் ரூ. 15 கோடியாகவும், ஜூன் 1968-ல் ரூ. 32 கோடியாகவும் இருந்தது. 1956-ல் ஏற்படுத்தப்பட்ட தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட காலச் செயல்) நிதியிலிருந்து 15 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கத் தக்க கடன்களை ரிசர்வ் வங்கி அளித்தது. 1964–65-ல்13 மாநில அரசுகளுக்கு 4·4 கோடி ரூபாய் மதிப்புள்ள கடனும், 1967-68ல் 15 மாநிலஅரசுகளுக்கு 7·3 கோடிரூபாய் கடனும் தந்திருந்தது. தற்போது கூட்டுறவு வங்கிகளின் மூலதனத்தில் 40%வரை ரிசர்வ் வங்கியிடமிருந்து கிடைக்கின்றது. மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியின் நிதியானது 22%த்திலிருந்து 40 சதவீதமாக அதிகரித்துள்ளது. கூட்டுறவு நிதி வசதி முறையின் சக்தியின்மையைப் புலப்படுத்துகின்றது. கூட்டுறவு வங்கிகள் தன்னிறைவு பெறும் வரையில் வேளாண்மைக்கடன் பிரச்சினை சுலபமாகத் தீர்க்கப்பட இயலாது. கூட்டுறவுக் கடன் அமைப்பு முறை சக்தி பெற்று நிலையான முறையில் நாடு முழுவதும் பரவலாகத் தோன்றும் வரைக்கும் இந்திய ரிசர்வ் வங்கியானது கூட்டுறவுக் கடன் முறைக்குத் தாராளமாகக் கடன் வசதி அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

அமைப்பு இல்லாத நடுவர்கள்
(Non-Institutional Agencies)

1. உறவினர்கள்:—1951–52-ல் மொத்த வேளாண்மைக் கடன் தேவையில் 14·2%த்தை குடியானவர்களுக்கு அவர்களின் உறவினர்கள் கடனாக அளித்திருந்தனர். 1961–62-ல் இது 8·8% மாகக் குறைந்தது. இக் கடன்கள் வட்டி விதிக்கப்படாமலே அளிக்கப் பட்டன. கடனைத் திருப்பி அளிக்கும் முறைகளும், மிகவும் சுலபமாகவும், தாராளமாகவும் இருந்தன.

2. லேவாதேவிக்காரர்கள் தனித்தொழில் மற்றும் வேளாண்மை

1951–52-ல் மொத்த கிராமக் கடன் தேவைகளில் 69·7% லேவாதேவிக் காரர்களால் அளிக்கப்பட்டது. 1961–62-ல்

வேளாண்மைக் கடனின் 49·2% லேவாதேவிக்காரர்களால் அளிக்கப்பட்டது. இன்றும் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் முதன்மையான பங்கு பெறுபவர்கள் லேவாதேவிக்காரர்களே. இவர்கள் வேளாண்மை செய்து கொண்டோ, வாணிபம் நடத்திக்கொண்டோ, கடன் கொடுக்கும் தொழிலையும் மேற்கொள்பவர்களாவர். மற்ற நடுவர்கள் வேளாண்மைக் கடன்வசதிகள் அளித்து வந்த போதிலும் லேவாதேவிக்காரர்களின் முக்கியத்துவம் அதிகமாய் இருப்பதற்குச் சில நடைமுறைக் காரணங்கள் உள்ளன. (1) கடன் வாங்குபவர்களின் ஒழுக்கம், திரும்பச் செலுத்தும் சக்தி ஆகியவைகளைப் பற்றிய தெளிவான உண்மைகளை லேவாதேவிக்காரர்கள் அறிந்துள்ளனர். (2) கடன் வாங்கும் நபர்களின் மேல் ஓர் உறுதியான பிடிப்பினைப் பெற்றுக் கடனைத் திரும்பப் பெறுகின்றான். குடியானவனுடைய அந்தஸ்து லேவாதேவிக் காரனுடைய சமூக அந்தஸ்தை விடக் குறைவாக உள்ளது. கடன் வாங்கிய விவசாயி உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்கத் தவறினால் லேவாதேவிக் காரன் மேற்கொண்டு எதிர் காலத்தில் கடன் கொடுப்பதில்லை. பெரும்பாலும் லேவாதேவிக் காரர்கள் வணிகர்களாகவும், நிலக் கிழார்களாகவும் இருப்பதால் குடியானவர்களிடமிருந்து சுலபமாகக் கடனை வசூலிக்கின்றனர். (3) லேவாதேவிக்காரர்கள் கடன் வாங்கும் நோக்கத்தையோ காலத்தையோபற்றிக்கவலைப்படாமல்தேவையான அளவு கடன் தருகின்றனர். அவர்களுக்கு வட்டிமட்டும் கிடைத்துக் கொண்டிருந்தால் போதும். (4) இவர்களிடமிருந்து கடன் பெறுவது எளிதாக இருக்கின்றது. வங்கிகள் போன்ற நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவதிலுள்ள சிக்கல்கள் இதில் இல்லை. விவசாயிகளுக்கும் இவர்களுக்கும் நேரடி தொடர்பு இருக்கின்றது. (6) இவர்கள் குறுகிய காலத்திற்கும் நீண்டகாலத்திற்கும் கடன் வசதியளிக்கின்றனர். இத்தகைய நன்மைகளினால் லேவாதேவிக்காரர்கள் கிராமக் கடன் அளிப்பதில் ஒரு சிறப்பான சர்வாதீனத்தைப் பெற்றுள்ளார்.

கடன் கொடுக்கும் பொழுது லேவாதேவிக்காரர்கள் பல வகையான ஏமாற்று முறைகளைப் பின்பற்றி விவசாயிகளைச் சுரண்டுகின்றனர். இவற்றுள் மிக முக்கியமானது, ஆண்டுக்கு 50% முதல் 75% வரைக்கும் அதிகமாக வட்டிவீதத்தை விதித்தல் ஆகும். எழுதப்படாத வாக்குறுதிப் பத்திரங்களில் கை ரேகை வாங்கிக்கொண்டு பின்னர் விருப்பம் போல் கடன் தொகை எழுதிக் கொள்வது, முதலிலே வட்டியைக் கழிப்பது,

கூடிய கூட்டு வட்டி வாங்குவது. பணத்தைத் திரும்ப செலுத்து வதற்கு வட்டி கொடுக்காமல் இருப்பது, கடனாளி கடனைத் திருப் பிக் கொடுப்பதிலிருந்து தப்பாமல் இருக்க குறைந்த விலையில் விளைபொருளைத் தங்களுக்கு விற்கும்படி கட்டாயப்படுத்துவது போன்ற பலவற்றை லேவாதேவிக்காரர்கள் இன்றும் செய்து வருகின்றனர்.

லேவாதேவிக்காரர்களின் ஏமாற்றும் முறைகளைத் தடுக்கப் பல்வேறு மாநிலங்களில் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் நடைமுறையில் அவைகள் சீராக அமுல் படுத்தப்படவில்லை. உரிமங்கள், வட்டி விகிதம், கடன் நடவடிக்கைகளின் கணக்கு வழக்குகள் ஆகியவைகளைப் பற்றிய சட்ட நிபந்தனைகள் பெரும் பாலும் கவனிக்கப்படுவதில்லை. கூட்டுறவு சங்கங்கள், வங்கிகள் போன்ற நிறுவனங்கள் உரிய காலத்தில் போதுமான அளவு கடன் கொடுக்கின்றவரை விவசாயிகள் லேவாதேவிக்காரர்களை நாடிச்செல்வது குறைய வாய்ப்பில்லை.

3 நாட்டுப்புற வங்கிகள்
(Indegenous Banks)

நாட்டுப்புற வங்கியாளர்கள் லேவாதேவிக்காரர்களிட மிருந்து சிறிது வேறுபட்டவர்கள். இவர்கள் உள்நாட்டு உண்டியல்களைக் கழிவு செய்து பணம் பெறுவார்கள். ஒவ் வொரு பகுதியிலும் ஒவ்வொரு இனத்தவர் இப்பணியில் மிகுதியாக ஈடுபடுகின்றனர். தமிழகத்தில் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் போன்றவர்களும் மற்ற மாநிலங்களில் மார் வாடிகள், முல்தானியர்கள், சிந்தி இனத்தவர்கள் வங்கிகளின் பணிகளை மேற்கொண்டுள்ளனர். 1951–52-ல் மொத்த வேளாண்மைக் கடனில் வணிகர்கள், கமிஷன் நடுவர்கள், போன்றவர்களின் பங்கு 8·8%மாக இருந்தது. 1961–62-ல் 31·5%மாக அதிகரித்தது. வணிகர்கள் குறைந்த வட்டிக்கு எதிர்காலத்தில் உற்பத்தியாகும் தானியங்களின் ஈட்டின் பேரில் கடன் அளிக்கின்றனர். இவைகள் போக, தமிழகம் போன்ற மாநிலங்களில் நிதியும் சீட்டுத் தொகைகளும் (Nidhi and Chit funds) ஏற்படுத்தப்பட்டு கிராம மக்களிடம் சிக்க னத்தை உருவாக்கி விவசாயிகளுக்குத் தேவையான பணம் கிடைக்க வசதி கிடைக்கிறது.

அனைத்திந்தியக் கிராமக்கடன் ஆராய்ச்சிக் குழுவின் கருத் துப்படி, "இந்தியாவின் வேளாண்மைக் கடன் வசதி சரியான முறையில், சரியான நோக்கத்திற்காக, சரியான அளவு

சரியான மக்களுக்குக் கிடைக்கவில்லை. 15 ஆண்டுகளாக இந்தியாவில் வேளாண்மைத் துறை செயல் புரிந்தும் திறமையான முறையில் வளர்ச்சி யடையவில்லை.'' எனவே, கூட்டுறவுத் துறை வெற்றி பெற வேண்டுமென்பதற்காக இக்குழு ''ஒருங்கிணைந்த கிராமக்கடன் திட்டத்தை''ப் பரிந்துரைத்தது.

வேளாண்மைக் கடன் சீர்திருத்த திட்டம்

1951-ல் கோர்வாலா (A.D. Gorwala) அவர்களைத் தலைவராகக் கொண்ட, பயனுள்ள வகையில் கிராமக் கடனைப் பற்றி ஒரு தெளிவான ஆராய்ச்சி நடத்த, அனைத்திந்திய கிராமக் கடன் ஆராய்ச்சிக்குழு (All India Rural Credit Survey Committee) ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழுவின் முதல் ஆராய்ச்சி அறிக்கை 1954-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 1957–58-ல் மறுபடியும் முதல் ஆராய்ச்சியைத் தொடர்ந்து ஒரு விசாரணை நடத்த அந்தக் குழு ஏற்படுத்தப்பட்டது. அக் குழுவின் அறிக்கை 1960-ம் ஆண்டில் வெளியானது. இக்குழு இந்தியக் கிராமக் கடன் பிரச்சினையைத் தெளிவாக ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க உதவக் கூடிய திட்டம் ஒன்றையும் பரிந்துரைத்தது. அதன் மூலம் அரசு சில சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

குழுவின் பரிந்துரை:—இக்குழுவின் முடிவுரையில் ஓர் ஒருங்கிணைந்த இயக்கம் இல்லாததால் இந்தியாவில் கூட்டுறவுத் துறை கிராமக் கடன் பிரச்சினையைத் தீர்ப்பதில் வெற்றியடையவில்லை, கூட்டுறவு கடன் சங்கங்களானவை கூட்டுறவு விற்பனை சங்கங்கள், கூட்டுறவு கிட்டங்கி சங்கங்கள் ஆகியவைகளோடு ஒருங்கிணைந்து செயல் புரியவில்லை. கிராமப்புறம் வளர்ச்சியடைய வேண்டுமானால் கூட்டுறவுத் துறை சிறப்பாக முன்னேற்றமடையவேண்டும். கூட்டுறவுத் துறை வெற்றியடைந்தால்தான் கிராமக் கடன் தேவைப் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கமுடியும். கூட்டுறவு முறை வெற்றியடைய, கூட்டுறவு கடன் முறையோடு விற்பனை கிட்டங்கி, பொருள்களைத் தரம் பிரித்தல் போன்ற பணிகளையும் இணைக்க வேண்டியது இன்றியமையாததாகும். விவசாயிகளிடமிருந்து கடனை வசூலிப்பதற்கு உகந்த முறை இல்லை. கடன் வாங்குபவர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் தன் பொருள்களை விற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூட்டுறவு சங்கம் தன் அங்கத்தினர்களுக்குக் கடன் கொடுக்கலாம். கடன் சங்கத்திடமிருந்து வாங்கப்பட்ட கடன் தொகையைப் பொருள்களின் மதிப்புத்

தொகையிலிருந்து மீதி விலையை விவசாயிக்குக் கூட்டுறவு விற்பனை சங்கம் அளிக்க முடியும். மேலும், குடியானவர்கள் தானியங்களை அறுவடை செய்த உடனேயே குறைந்த விலைக்கு விற்றுவிடுகின்றனர். அவர்களிடம் பொறுத்திருக்கும் சக்தி பெரும்பாலும் இல்லை. தானியங்களைச் சேர்த்து வைக்கத் தகுந்த கிட்டங்கி வசதிகள் போதுமான அளவு இல்லை. கூட்டுறவுச் சங்கங்களே தங்கள் சொந்த கிட்டங்கிகளை ஏற்படுத்தினால் கடன் வாங்கிய விவசாயிகளின் தானியங்களை நீண்ட நாட்களுக்குச் சேர்த்து வைக்க முடியும். இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிகமான விலைக்கு விற்க வாய்ப்பு கிடைக்கிறது. எனவே, கூட்டுறவு சங்கங்கள் தங்கள் சொந்த தரம் பிரிக்கும் இயந்திரங்களைக் கொண்ட ஆலைகளை ஏற்படுத்துவது விரும்பத் தக்கது. இதைத்தான் வழிகாட்டும் குழு (Committee of Direction), "ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டம்" (An integrated scheme of rural credit) என்று பெயரிட்டு அதை அமுலாக்கும்படி அரசுக்கு ஆலோசனை கூறியது. இத் திட்டத்தின்படி வேளாண்மைக் கடன், விற்பனை, கிட்டங்கி, செய்பொருள் பதனஞ்செய்தல் போன்ற பணிகளை ஒருங்கிணைந்து செயல்படச் செய்வதாகும்.

ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டம்

ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டம் வெற்றியடைய கூறப்பட்ட மூன்று ஆலோசனைகளை, கீழ்க் கண்ட முறையில் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. அரசு பங்கு பெறுதல்: கூட்டுறவு சங்கங்கள் மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைந்த பொருளாதாரப் பணிகளை மேற்கொள்ள அதிகமான முதல் தேவைப் படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களே இதற்குத் தேவையான மூலதனத்தைச் சேகரிக்க இயலாது. எனவே, அரசாங்கம் கூட்டுறவு சங்கங்களுக்குப் போதுமான நிதி வசதியை அளிக்க சில வேளாண்மைக் கடன் நிதிகளை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது. கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்தில் பெரும்பகுதியை அரசாங்கமே அளிக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்திற்குத் துணை புரிய ரிசர்வ் வங்கி போன்ற அரசாங்க நிறுவனங்கள் பல வகை நிதிகளை அமைக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டது. அந் நிதிகளாவன: (1) **தேசிய வேளாண்மைக்கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதி:**—இந்திய ரிசர்வ் வங்கி இந் நிதிக்குஆண்டு தோறும் ஐந்து கோடி ரூபாயை ஒதுக்க வேண்டும். இந் நிதியில் சேர்க்கப்பட்ட தொகையை மாநில அரசு

களுக்கு நீண்ட காலக் கடன்களாக அளிக்க வேண்டும். மாநில அரசாங்கங்கள் இக் கடன் தொகையைப் பயன் படுத்திக் கூட்டுறவு சங்கங்களின் பங்குகளை நேரிடையாகவோ மறைமுகமாகவோ வாங்க வேண்டும். இந்நிதியைப் பயன் படுத்தி ரிசர்வ் வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக முதல் நிலை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு குறுகிய கால கடன்களை அளிக்க வேண்டும். ரிசர்வ் வங்கி இந் நிதியிலிருந்து ஒரு பகுதியைப் பயன்படுத்தி நில அடமான வங்கிகளுக்கு நீண்ட காலக் கடன் வசதியை அளிக்க வேண்டும். 2. தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப் படுத்தும்) நிதி: இந்திய ரிசர்வ் வங்கி இந் நிதிக்கு ஆண்டு தோறும் ஒரு கோடி ரூபாயைக் கொடுத்து மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு இடைக்காலக் கடன்களைக் கொடுக்கப் பயன்படுத்த வேண்டும். மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அக் கடன் பணத்தைப் பயன்படுத்தி முதல் நிலை கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும் (3) இந்திய ஸ்டேட் வங்கி ஏற்படுத்துதல்: இந்திய இம்பீரியல் பாங்கை நாட்டுடைமையாக்கி அத்துடன் மற்றப் பத்து அரசு வங்கிகளையும் இணைத்து இந்திய ஸ்டேட் பாங்கை ஏற்படுத்த வேண்டும் என்று இக் குழு பரிந்துரைத்தது. இந்திய ஸ்டேட் வங்கி கிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் ஏராளமான கிளைகளை ஏற்படுத்த வேண்டும். மேலும், அது கூட்டுறவு கடன், விற்பனை, கிட்டங்கி, பதனிடுதல் போன்ற பணிகளுக்கு நிதி வசதியளிக்க வேண்டும்.

2. தேசியக் கூட்டுறவு வளர்ச்சி, கிட்டங்கி நிறுவனம்

கூட்டுறவு விற்பனை, கிட்டங்கி, பதனிடும் சங்கங்கள் ஆகியவைகக்கு உதவியளிக்க மத்திய அரசு இந் நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அக் குழு பரிந்துரைத்தது. அத்தகைய கிட்டங்கி நிறுவனங்களை பல்வேறு மாநில அரசுகளும் அமைக்க வேண்டும். தேசிய கூட்டுறவு வளர்ச்சி, கிட்டங்கி நிறுவனம் இரு நிதிகளை ஏற்படுத்த வேண்டும். ஒன்று தேசிய கூட்டுறவுவளர்ச்சி நிதி, இரண்டு தேசிய கிட்டங்கி வளர்ச்சி நிதி, இந்நிதிகளின் பணத்தை மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடன் வசதியளிக்கப் பயன் படுத்த வேண்டும்.மாநில அரசுகள் விற்பனை, பதனிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் கூட்டுறவு சங்கங்களின் பங்குகளை வாங்குவதற்காக இப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும். இக் கழகத்தின் முக்கிய பணிகளில் ஒன்று நாட்டில் ஏராளமான கிட்டங்கிகளைக் கட்டி அதன் வளர்ச்சிக்காக முயற்சி எடுப்பதாகும்.

3. பயிற்சி பெற்ற அலுவலர்கள்: பயிற்சி இல்லாத அலுவலர்கள் கூட்டுறவுச் சங்கங்களை நிருவகித்து வந்ததால் கூட்டுறவு இயக்கம் நாட்டில் கிராமக் கடன் பிரச்சினையை சுலபமாகத் தீர்க்க முடியவில்லை. எனவே, இச் சங்கங்கள் சிறப்புப் பயிற்சி பெற்ற அலுவலர்களால் நிருவகிக்கப்பட்டே யாக வேண்டு மென்று அக் குழு பரிந்துரைத்தது. மாநில அரசுகளால் பயிற்சி பெற்ற அலுவலர்களைக் கூட்டுறவுத் துறையில் பணி புரிய ஒதுக்குவது சிறந்தது என்றும் ஆலோசனை கூறப்பட்டது.

ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டத்தைச் செயல்படுத்தல்:— 1955ல் கடன் கொடுப்பதை விற்பனை, மற்ற பொருளாதார நடவடிக்கைகளோடு நினைக்க வேண்டுமென்று கூறப்பட்ட பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது. இரண்டாம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்ட முன்னேற்றத்திற்காக ஏராளமான செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு அரசு துறைகளும் இத்திட்டம் வெற்றியடைவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டன. அவற்றை, கீழ்க் கண்ட உண்மைகளால் அறியலாம்.

முதலாவதாக, 1956-ல் இந்திய ரிசர்வ் வங்கி 5 கோடி ரூபாய் ஆரம்ப முதலை அளித்து தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட கால செயல்) நிதியை ஏற்படுத்தியது. ஆண்டு தோறும் இந்நிதிக்கு ஐந்து கோடி ரூபாயை ரிசர்வ் வங்கி ஒதுக்கியது. மேலும், அதே ஆண்டில் ரிசர்வ் வங்கி தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப்படுத்தும்) நிதியை ஏற்படுத்தி அதற்கு ஆரம்ப முதலாக ஒரு கோடி ரூபாயைக் கொடுத்தது. அதன் பிறகு ஆண்டுதோறும் அந்நிதிக்கு ஒரு கோடியை ஒதுக்கி வருகிறது. 1955-ல் இந்திய இம்பீரியல் பாங்கு நாட்டுடைமையாக்கப்பட்டு அத்துடன் எட்டு அரசு வங்கிகளும் இணைக்கப்பட்டன. ஸ்டேட் வங்கி ஆரம்பிக்கப்பட்டு முதல் ஐந்தாண்டுகளில் 400 கிளைகளை ஏற்படுத்தியது. அதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் மேலும் 300 கிளைகள் திறக்கப்பட்டன. ஸ்டேட் வங்கியானது கூட்டுறவு கடன் சங்கங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்து கூட்டுறவு விற்பனை கிட்டங்கி சங்கங்களுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது. இரண்டாவதாக 1956-செப்டம்பரில் மத்திய அரசு தேசியக் கூட்டுறவு வளர்ச்சி, கிட்டங்கி நிறுவனத்தை ஏற்படுத்தியது. மார்ச் 1957-ல் மத்திய கிட்டங்கி கழகம் (Central Warehousing Corporation) அமைக்கப்பட்டது. வளர்ச்சி கிட்டங்கி நிறுவனம்தேசிய

கூட்டுறவு வளர்ச்சி நிதியையும், தேசிய கிட்டங்கி வளர்ச்சி நிதியையும் ஏற்படுத்தி, கிட்டங்கிகளை அமைக்க நிதி உதவி அளித்து வருகிறது. மூன்ருவதாக, இந்திய ரிசர்வ் வங்கியால் ஏற்படுத்தப்பட்டகூட்டுறவுப் பயிற்சி மையக் குழுவால்கூட்டுறவு இயக்கத்திற்குத் தேவையான அலுவலர்களுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேல்வகை அலுவலர்களைப் பயிற்சி அளிக்கும் பணியை இக்குழு கவனித்து வருகிறது.

முடிவுரை :— இந்திய வேளாண்மைத் துறை வளர்ச்சியை மேம்படுத்த அடிப்படையாக உள்ள கிராமக் கடன் பிரச்சினையைத் தீர்க்க அரசு பலவகை சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டது வரவேற்கத்தக்கதாகும். கடன் கொடுப்பதோடு வேறு பொருளாதாரப் பணிகளையும் இணைக்கும் முறையினுல் சிறப்பான ஒரு புதிய கிராமப் பொருளாதாரத்தை உருவாக்கி வேளாண்மையை லாபகரமான தொழிலாக மாற்றி அமைக்க முடியும்.

22. இந்தியக் கூட்டுறவு இயக்கம்

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் முதலில் முக்கியமாக, கிராமக் கடன் இயக்கமாக ஆரம்பித்தது. 19-ம் நூற்றுண்டின் இறுதியில் கிராமக் கடன் தொல்லே ஒரு தீவிரப் பிரச்சினையாக ஆரம்பித்தது. ஏனெனில், இந்திய விவசாயிகளின் கடன் சுமை கட்டுக்கடங்காமல் அதிகரித்தது. மேலும், நிலம் வேளாண்மை வகுப்பைச் சேர்ந்தவர்களிடமிருந்து வேளாண்மைத் தொழில் அறியாத கடன் கொடுக்கும் வகுப்பைச் சேர்ந்தவர்களிடம் முழுவதுமாகப் போய் சேர்ந்து விடக்கூடிய ஓர் அபாயகரமான நிலே நாட்டில் உருவாகியது. இதற்கு ஒரு தீர்வு காண்பதற்காக மத்திய அரசு முயன்றது. அப்போது திரு. பிரடரிக் நிகல்சன் (Sir. Frederick Nickalson) என்ற சென்னே நகர முன்னுள் பொதுத்துறை அதிகாரி 1897-ல் ''நிலம், வேளாண்மை வங்கிகள் ஆகியவைகளின் அறிக்கை''யில் கிராமக் கடன் பிரச்சினேக்குத் தீர்வு காண்பதற்குக் கூட்டுறவு முறையை மேற்கொள்ள வேண்டும் என்று ஆலோசனே கூறினர். அரசே நேரடியாகக் விவசாயிகளுக்குக் கடன் வசதி அளிப்பதை கீழ்க்கண்ட காரணங்களுக்காக அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். முதலாவதாக, இம்முறையினுல் அரசு ஏராளமான நிதி வசதியை மக்களிடமிருந்து சேகரிக்க வேண்டும். இரண்டாவதாக, இம்முறை சுய உதவி முறையை ஊக்கப்படுத்தவில்லே. மூன்ருவதாக, அரசு அமைப்பு முழுவதும் பல அரசு வர்க்கங்களே (Bureaucrazy) ஏற்படுத்தும். அவர் அறிக்கையில் ரைஃபைஸன் (Raiffeison) முறையை இந்தியா பின்பற்ற வேண்டும் என்று முடிவில் கூறப்பட்டுள்ளது. ரைஃபைஸன் வங்கிகள் என்பது ஜெர்மனியில் உள்ள கூட்டுறவு வேளாண்மை வங்கிகளேக் குறிக்கிறது. இவரது அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லே.

கூட்டுறவு சட்டங்கள்

1904-ன் கூட்டுறவு கடன் சங்கங்கள் சட்டம்

1904-ல் நிறைவேறிய கூட்டுறவு கடன் சங்கங்களின் சட்டம் இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் தொடக்கத்திற்கு அடிகோலியது. இச்சட்டத்தின்படி ஒரு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ வசித்து வரும் பத்துபேர்கள் சேர்ந்து ஒரு கூட்டுறவு சங்கத்தைப் பதிவு செய்து கொள்ளலாம். நகர சங்கங்களுக்கும் கிராம சங்கங்களுக்கும் இடையே வேறுபாடு இருந்தது. சங்கத்தின் உறுப்பினர்களில் ஐவரில் நால்வர் விவசாயிகளாக இருந்தால் அது கிராம சங்கம் என்று அழைக்கப்பட்டது. அதே போன்று ஒரு சங்கத்தின் உறுப்பினர்களில் ஐவரில் நால்வர் விவசாயமல்லாத தொழில் செய்பவராகஇருந்தால் அது நகர சங்கம் என்று அழைக்கப்பட்டது. கிராம சங்கங்கள் வரையறுக்கப்படாத பொறுப்போடும், நகரக் கூட்டுறவு சங்கங்கள் வரையறுக்கப்பட்ட பொறுப்போடும் அமைக்கப்பட்டன. கிராமக் கூட்டுறவு சங்கங்களின் லாபம் இருப்பு நிதியில் சேர்க்கப்பட்டது. நகரக் கூட்டுறவு சங்கங்கள் தங்கள் லாபத்தில் நான்கில் ஒரு பகுதியை இருப்பு நிதியில் சேர்த்தனர். கூட்டுறவு சங்கங்களை அமைக்க, கண்காணிக்க, மற்றும் கட்டுப்படுத்த எல்லா மாநிலங்களிலும் பதிவாளர்களை (Registrars) நியமிக்க இச்சட்டம் வகை செய்தது. பதிவாளர்களின் மூலமாக, சங்கங்களைப் பதிவு செய்வதிலும் கட்டாயக் கண்காணிப்பு செய்வதிலும் சங்கங்களை நீக்குவதிலும் அரசு பல அதிகாரங்களைப் பெற்றிருந்தது.

1904-ல் இயற்றப்பட்ட கூட்டுறவுச் சட்டம் இந்தியாவில் கடன் சங்கங்களை ஏற்படுத்த வகை செய்தது. மாநில அரசுகளுக்கு, உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப சங்கங்களை அமைக்க உரிமை வழங்கப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவித்து வலுப்படுத்த கூட்டுறவு சங்கங்களுக்கு வருமான வரி, பதிவுக் கட்டணம், முத்திரை வரி போன்றவைகளிலிருந்து, விலக்களித்தல் போன்ற சலுகைகளை அரசு வழங்கியது. இச்சட்டத்தின் நடைமுறையில் சில குறைபாடுகள் காணப்பட்டன.

முதலாவதாக, இச்சட்டம் கடன் வழங்குவது தவிர வேறு பணிகளுக்காகக் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க வழிவகுத்துத் தரவில்லை. இரண்டாவதாக, கிராமங்களில் நிதி வசதியளிக்கத் தேவையான முதல்நிலைச் சங்கங்களை ஏற்படுத்தவும், கூட்டுறவு மத்திய வங்கிகள் போன்றவற்றை அமைக்கவும், இச்சட்

டம் வகை செய்யவில்லை. மூன்றாவதாக, சென்னை, பஞ்சாப் போன்ற சில மாநிலங்களில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமான பணத் தொகையைப் பங்கு முதலாகப் பெற்றன. ஆனால், இலாபத்தை உறுப்பினர்களுக்குப் பங்கீடு செய்வதற்கு இச்சட்டம் வகை செய்யவில்லை. இது உறுப்பினர்களின் ஊக்கத்திற்குத் தடையாக இருந்தது. கடைசியாக, கூட்டுறவுச் சங்கங்களை, கிராம, நகரச் சங்கங்கள் என்று பிரித்தது சரியான பாகுபாடு அல்ல என்றும் கூறப்பட்டது. எனவே, 1904-ன் சட்டத்தின் குறைகளை நீக்குவதற்கு, மற்றொரு சட்டத்தை, அரசு 1912-ல் ஏற்படுத்தியது.

1912-ன் கூட்டுறவுச் சங்கச் சட்டம்

இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன :— 1. கடன் வழங்குவதைத் தவிர வேறு பணிகளுக்காகவும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த இச்சட்டம் வகை செய்தது. 2. இச்சட்டம் மூன்று வகையான மத்திய கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தவும் வகை செய்தது. அவைகளாவன :—முதல் நிலை கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய வங்கிகள், மாநில வங்கிகள். 3. சங்கங்களைக் கிராம, நகரச் சங்கங்கள் என்று பகுப்பதை நீக்கிப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்கள், பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்கள் என்று பிரிக்கப்பட்டன. எல்லா மத்திய சங்கங்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களாயின. விவசாயிகளே பெருவாரி உறுப்பினர்களாயுள்ள எல்லாச் சங்கங்களிலும் பொறுப்பு வரையறுக்கப்படாத முறை மேற்கொள்ளப்பட்டது. 4. பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்கள் தங்களின் மொத்த இலாபத்தில் 25 விழுக்காட்டை இருப்பு நிதியில் சேர்த்தபின் மீதியைப் பங்குதாரர்களுக்கு இலாப ஈவாகக் (Devidend) கொடுக்க இச்சட்டம் அனுமதித்தது. அந்தந்த மாநில அரசுகளின் அனுமதியுடன் இம்முறை செயல்பட்டது.

1912-ம் ஆண்டின் சட்டம் அமுலாக்கப்பட்டதிலிருந்து இந்தியக் கூட்டுறவு இயக்கம் வலுப் பெற்று வேகமான வளர்ச்சியைப் பெற முடிந்தது. விவசாயமல்லாத வேறு பணிகளுக்காகக் கடன் கொடுக்கும் சங்கங்களின் வளர்ச்சி அதிகரித்தது. கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி எல்லா மாநிலங்களிலும் ஒரே சீராக அமையவில்லை. பஞ்சாப், பம்பாய், சென்னை போன்ற மாநிலங்களின் விவசாயிகளுக்கு நிலத்தை அடமானம் வைக்கும் உரிமையிருந்ததால் கூட்டுறவுச் சங்கங்கள் விரை

வான வளர்ச்சியைப் பெற்றன. ஆனால், வங்காளம் போன்ற மாநிலங்களில் ஜமீன்தாரி முறை அமுலில் இருந்ததால் குடியானவன் நிலத்தை அடமானமாகக் கொடுத்துக் கடன் பெற இயலவில்லை. அதனால் இவ்வியக்கத்தின் முன்னேற்றம் மாநிலங்களில் தடைப்பட்டது. 1914-ல் கூட்டுறவு இயக்கம் சீரான முறையில் முன்னேற்ற மடைந்து வருகின்றதா என்பதைப் பரிசீலிக்கவும, சீரமைப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும் சர். எட்வர்டு மாக்லகன் (Sir Edward Maclagan) அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்தது. இக்குழுவின் அறிக்கையில் இந்தியக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் முறைகளைப்பற்றிய நம்பத் தகுந்த பல கருத்துக்கள் காணப்படுகின்றன. மாக்லகன் குழுவின் பரிந்துரையின்படி மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அனேக மாநிலங்களில் ஏற்படுத்தப் பட்டன.

1919-ல் கூட்டுறவுத் துறையானது மாநில அமைச்சர்களின் நேர் நிர்வாகத்தின் கீழ்வந்தது. கூட்டுறவு வளர்ச்சி மாநிலப் பொறுப்பாக மாறிய பிறகு, இவ்வியக்கத்திற்கு நல்ல ஊக்கமளிக்கப்பட்டது. அதன் விளைவாக, ஒவ்வொரு மாநிலமும் தத்தம் மாநிலத்துக் கூட்டுறவு வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்த ஆரம்பித்தது. 1920-க்கும் 1921-க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பொருளாதாரச் செழிப்பு ஏற்பட்டிருந்த காரணத்தால் இவ்வியக்கம் விரைவான வளர்ச்சியைப் பெற்றது. இக்காலத்தில் பஞ்சாப், சென்னை, பம்பாய் போன்ற பல மாநிலங்களில் கூட்டுறவு நில அடமான வங்கிகள் தோன்றின. இதன் பின்கூட்டுறவுஇயக்கம்சிறிது தடைப்பட்டது. ஏனெனில், ஏராளமான கடன் பணம் திருப்பிக் கொடுக்கப்படாமல் அளிக்கப் பட்டிருந்த கடன் தொகை அதிகரித்தது. பம்பாய், சென்னை போன்ற சிலமாநிலங்களில் அனைத்திந்தியக் கூட்டுறவுச் சட்டங்கள் கைவிடப்பட்டு, மாநிலச் சட்டங்கள் அமுலில் வந்தன. தற்போது தமிழ் நாட்டுக் கூட்டுறவு இயக்கம் 1932-ன் சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1934 சென்னை நில அடமான வங்கிகள் சட்டம் ஆகியவைகளால் ஒழுங்கு படுத்தப் பட்டு வருகிறது. 1919-லிருந்து கூட்டுறவு இயக்கமானது மாநிலங்களின் பொறுப்பாக மாற்றப்பட்டிருந்த போதிலும், மத்திய அரசு அவ்வப்போது இவ்வியக்கத்திற்குத் தொடர்ந்து வழிகாட்டியாக அமைந்து, அதன் வளர்ச்சிக்கான செயல் திட்டங்களை அமுலாக்க நிதி வசதியை மாநிலங்களுக்கு அளித்து வருகிறது. 1945-க்குப்பின் பேராசிரியர் டி. ஆர். காட்கில் (Prof. D. R. Gadgil) அவர்களைத் தலைவராகக்

கொண்ட வேளாண்மை நிதி துணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு, வேளாண்மைத் துறைக்கு மத்தியகால நிதி வசதிகளை அளிக்க ஒரு வேளாண்மைக் கடன் கழகத்தை (Agricultural credit corporation) ஏற்படுத்தும் படி அரசுக்குப் பரிந்துரைத்தது. 1946-ல் கூட்டுறவுத் திட்டக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில் இந்தியக் கிராமக் கடன் பிரச்சினையும் ஆராயப்பட்டிருந்தது. இப்பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி தீவிர மடைய வேண்டு மென்று அவ்வறிக்கையில் பெரிதும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

கூட்டுறவு விளக்கமும், வகைகளும்

கூட்டுறவு என்பது சக்தியற்ற, ஏழை மக்களின் கூட்டு அமைப்பாகும். பொது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியும். வாய்ப்பும் இல்லாத மக்கள் தாங்களாகவே கூட்டு சேர்ந்து லாபத்தைக் கருதாமல் பரஸ்பரமாக ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து நன்மை பெறுவதே கூட்டுறவாகும். தனி ஒருவன் சுதந்திரத்திற்கும் (Individualism) முதலாளித்துவத்திற்கும் (State Capitalism) இடைப்பட்ட சிறப்பான கொள்கைகளைக் கொண்டதாக விளங்குவது கூட்டுறவு முறையாகும். பேராசிரியர் ஸ்டிரிக்லாண்டு (Strickland) அவர்கள் கூட்டுறவுக் கொள்கைகளைக் கீழ்க்கண்ட வரிகளில் விளக்குகிறார். "கூட்டுறவுச் சங்கங்களின் அடிப்படைக் கொள்கை (1) மக்கள் தாங்களாகவே ஒன்று சேர்வது (Voluntary) (2) மக்களாட்சி முறையை (Democratic) ஏற்றுச் செயல்படுவது"[1] ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் மக்கள் தாங்களாகவே ஒன்று சேர்ந்து தங்கள் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர். ஒவ்வொரு உறுப்பினருக்கும் சம உரிமைகளும், சம பொறுப்பும் உண்டு. சேவை, தியாகம், கடமை ஆகிய நற்பண்புகளைக் கொண்ட நேர்மையான இயக்கம் கூட்டுறவு இயக்கமாகும்.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி

பொதுவாக, கூட்டுறவு இயக்கம் இரு முக்கிய பிரிவுகளைக் கொண்டதாகும். ஒன்று "கடன்;" மற்றொன்று "கடன் அல்லாத" இயக்கம். இவ்விரு பிரிவுகளையும் விவசாயம், விவசாயமல்லாத பிரிவு என்றும் பிரிக்கலாம். இவ்வியக்கத்தின் அமைப்பைக் கீழ்க்கண்ட விளக்கப் படம் விளக்குகிறது.

1 ஸ்டிரிக்லாண்டு—இந்தியாவில் கூட்டுறவு—ப. 15. 16.

கூட்டுறவு இயக்கம்

- கடன் சங்கங்கள் (Credit Societies)
  - விவசாயக் கடன் சங்கங்கள் (விவசாயிகளுக்குள்)
    - குறுகிய காலக் கடன் சங்கங்கள் (முதல்படி கடன் சங்கங்கள், மத்திய வங்கி, மாநில வங்கி)
    - நீண்ட காலக் கடன் சங்கங்கள் (நில அடமான வங்கிகள்)
  - விவசாயமல்லாத கடன் சங்கங்கள் (கைத்தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்குள்)
- கடனல்லாத சங்கங்கள் (Non-Credit Societies)
  - விவசாயச் சங்கங்கள் (உதாரணம் :— விற்பனை, நீர்ப்பாசனம் போன்றவை)
  - விவசாயமல்லாத சங்கங்கள் (நுகர்ச்சிப் பொருள் கடைகள், வீட்டு வசதி, போக்கு வரத்து தொழில் சங்கங்கள்)

கடன் கூட்டுறவுச் சங்கங்கள்: இவைகள் நகரங்களிலும் கிராமங்களிலும் குறுகிய, நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கின்றன. இவற்றுள் வேளாண்மைக் கடன் சங்கங்கள் முக்கியமான பங்கேற்றுச் செயல் புரிந்து வருகின்றன. 1964-ஜூன் மாதத்தில் 422 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 2·09 லட்சம் வேளாண்மைக் கடன் சங்கங்கள் இந்தியாவில் இருந்தன. இவைகளின் நடப்பு முதல் ரூ. 1200 கோடியாகவும், வைப்பு நிதி (Deposits) ரூ. 26 கோடியாகவும் இருந்தது.

கடனல்லாத கூட்டுறவுச் சங்கங்கள்: கடன் வசதி அளிப்பதோடு கூட மற்ற எல்லாத் துறைகளிலும், இரண்டாம் உலகப் போருக்குப்பின் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைந்துள்ளது. அவற்றைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

(i) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்(உதாரணம்டி.யு.சி. எஸ். சிறப்பு அங்காடி (Super market)

(ii) உற்பத்தி, விற்பனைச்சங்கங்கள் (உ-ம்) கூட்டுறவு பால் பங்கீட்டுச் சங்கங்கள், கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள்)

(iii) உற்பத்திச் சங்கங்கள்(உ-ம் கூட்டுறவுப் பண்ணைகள், கால்நடை பராமரிப்புச் சங்கங்கள், நிலஉடைமை ஒருங்கிணைப்புச் சங்கங்கள்)

(iv) சமூகப்பணிச் சங்கங்கள் (உ-ம். சுகவாழ்வு, சுத்தம், சுகாதாரக் கூட்டுறவுச் சங்கங்கள்)

(v) வீட்டு வசதிச் சங்கங்கள்

(vi) கூட்டுறவுக் காப்பீட்டுச் சங்கங்கள்.

பணி கூட்டுறவுச் சங்கங்கள்

தற்போது கூட்டுறவு இயக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எல்லாவகைப் பணிகளும் ஒருங்கிணைந்த பல்நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள்(Multi-purpose societies or Service Co–operatives)அல்லது பணி கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாகத் தோன்றியுள்ளன. எல்லா வகைப் பொருளாதாரப் பணிகளையும் இச்சங்கங்கள் செய்து வருகின்றன. "இச்சங்கம் ஒரு வங்கியாகவும், ஒரு கிட்டங்கியாகவும், ஓர் அளிப்பு விற்பனை நிறுவனமாகவும் ஒரு பங்கீட்டுத்துறையாகவும் ஒரு விவசாய வளர்ச்சி அமைப்பாகவும் பணி புரிய வேண்டும்"[2]

[2] Dr. C. B. மெமோரியா—இந்தியாவில் கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி, கிராமப் பஞ்சாயத்துக்கள்—ப. 55

மூன்று அடுக்கு கூட்டுறவு அமைப்பு

குறுகிய கால கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூன்று அடுக்கு (three-tier) அமைப்புகளைப் பெற்றுள்ளன.

(1) முதல்நிலை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கிராம மட்டத்தில் செயல் புரிந்து வருகின்றன.

(2) மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மாவட்ட அளவில் செயல்படுகின்றன.

(3) மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அல்லது தலைமை வங்கி மாவட்ட அளவில் செயல் புரிகின்றன.

பல்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

(i) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் (Consumer Co-operation)

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பின் நுகர்வோர் பொருள்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன. தனியார் துறை வணிகர்கள் அதிக விலைக்குச் சரியான அளவுமுறையின்றி தரம் பிரிக்கப்படாத நுகர்ச்சிப் பொருள்களை விற்று அதிக லாபம் பெறுகின்றனர். அரசின் கட்டுப்பாடு இக்குறைகளைச் சீராக நீக்க முடியவில்லை. இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண நுகர்வோர்கள் தாங்களாக ஒன்று சேர்ந்து கூட்டுறவுக் கடைகளை அரசாங்க உதவியுடன் ஏற்படுத்தியுள்ளனர். இச்சங்கங்கள் பற்றாக்குறையான நுகர்வுப் பொருள்களைக் குறித்த விலைகளுக்கு நுகர்வோர்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றனர். இதன் மூலம் குறைந்த வருமானமுடையவர்களை தனியார் விற்பனையாளர்களின் சுரண்டலிலிருந்து பாதுகாக்க முடிகிறது.

நன்மைகள் : 1. இச்சங்கங்கள் பொருள்களை உற்பத்தியாளர்களிடமிருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்வதால் உறுப்பினர்களுக்கு நியாயமான விலைக்குப் பொருள்களை விற்க முடிகிறது. இச்சங்கங்கள் லாப நோக்குடன் பணிபுரிவதில்லை. கிடைக்கும் லாபத்தை உறுப்பினர்களே தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர்.

2. தரமான பொருள்களைச் சரியான நிறுவையுடன் கலப்படம் இன்றி ஒரு குறித்த விலைக்கு இச்சங்கங்கள் விற்பதால் நுகர்வோர் நன்மையடைகின்றனர்.

3. காலப்போக்கில் இச்சங்கங்களே பொருள்களை உற்பத்தி செய்யவும் சக்தி பெற முடிகிறது. இதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து,உயர்ந்த தரமுடைய பொருள்களை விற்க முடியும்.

4. இறுதியாக, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியால் மருத்துவம், கல்வி போன்ற சமூக நலனை அதிகரிக்கும் துறைகளும் தோன்ற வாய்ப்பு ஏற்படுகிறது. மக்களாட்சி, சமுதாய வாழ்க்கை போன்றவைகளில் கல்வி அறிவை உறுப்பினர்களுக்கு அளிக்கவும், தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்கவும் இச்சங்கங்கள் துணை புரிகின்றன.

நுகர்வோர் சங்கங்களின் வளர்ச்சி

இந்தியாவில் முதன் முதலில் 1904-ல் தமிழ் நாட்டில்தான் நுகர்வோர் சங்கம் தோன்றியது. உறுப்பினர்களுக்கு இன்றியமையாத நுகர்வுப் பொருள்களை அளிக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட இச்சங்கம் "திருவல்லிக்கேணி நகர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்" என்ற பெயருடன் இன்றும் மகத்தான சேவை புரிந்து வருகிறது. இரண்டாம் யுத்தத்திற்குப் பின், அன்றாடம் தேவைப்படும் பொருள்களின் விலைகள் அதிகரித்தன. எனவே, விலை உயர்வைக் கட்டுப்படுத்தி, சரிசமமாகப் பொருள்களைப் பங்கிட அரசு கூட்டுறவுக் கடைகளையே தேர்ந்தெடுத்தது. எனவே, இச்சங்கங்கள் சிறப்பாக வளர்ச்சியடைய ஆரம்பித்தன. 1938-39-ல் முதல் நிலை நுகர்வோர் சங்கங்களின் எண்ணிக்கை 396 ஆக இருந்தது 1955-56ல் 7359 ஆகவும், அங்கத்தினர்களின் எண்ணிக்கை 0·43 லட்சமாக இருந்தது 14·14 லட்சமாகவும் அதிகரித்தது.[3] மூன்றும் திட்ட காலத்தில் 400 முதல்நிலை கடைகளையும் 100 மொத்த விற்பனைக் கடைகளையும் ஏற்படுத்த ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டது. 1962-ல் நுகர்வோர் கூட்டுறவுகளின் வேகமான வளர்ச்சிக்காக மத்திய அரசு சில திட்டங்களை ஏற்படுத்தியது.

அவைகளாவன : கூட்டுறவு நுகர்வோர் கடைகளை

(i) நகர்ப்புறங்களில் பொதுமக்களிடையேயும்

(ii) பொதுத்துறை, தனியார்துறை தொழில் நிறுவனங்களில் பணி புரிவோரிடையேயும்.

(iii) அரசு ஊழியர்களிடையேயும்

(iv) கிராம மக்களிடையேயும் அமைத்தலாகும்.

[3] R. D. பேடி (R. D. Bedi) கூட்டுறவின் கோட்பாடு, வரலாறு, நடைமுறை—ப. 384

(ii) தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (Producers Co-operation) நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி உறுப்பினர்களுக்குள் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ள, கூட்டுறவுப் பண்ணைகள் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை நாம் தனியே ஆராய்ந்துள்ளோம். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சிற்றளவு மற்றும் குடிசைத் தொழில்களை ஊக்கப் படுத்தி வளர்ச்சியடையச் செய்கின்றன. வேளாண்மையற்ற உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. சிறிய கைத்தொழில் செய்வோர் ஒன்று சேர்ந்து ஏற்படுத்தும் கைத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள். (Artisan Societies) இச்சங்கங்களின் நோக்கங்களாவன :

(i) நியாயமான விலைக்கு மூலப்பொருள்கள், கருவிகள் சாதனங்கள் போன்றவற்றைப் பெறுதல்

(ii) குறைந்த வட்டிக்கு உரிய காலத்தில் கடன் பெறுதல்

(iii) பல்வேறு உற்பத்திக் கட்டங்களில் தொழில் நுட்பப் பொது ஆலோசனைகளைக் கிடைக்கச் செய்தல்

(iv) நடுவர்களை நீக்கி தங்கள் பொருள்களுக்கு நியாய மான விலைகளைக் கிடைக்கச் செய்தல்

2. இரண்டாம் வகைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப் பினர்கள் தாங்களாகவே ஒன்று சேர்ந்து உற்பத்திப் பணிகளை மேற் கொள்கின்றனர். வெளிக் கட்டுப்பாடு ஒன்றும் இன்றி இச்சங்கங்கள் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. நடப்பு முதல் பங்கு முதலிலிருந்தும், மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்தும் கிடைக்கிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களை இரு பரந்த பிரிவுகளாகப் பிரிக்கலாம்:—(1)கைத்தறி நெசவாளர் சங்கங்கள் (2) பிற தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். உதாரணமாக, தோல் பதனிடுதல், தோலினால் செய்யப்பட்ட பொருள்களைச் செய் வோர், உலோகத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தேனீக் கள் வளர்த்தல், சாயமிடுதல், அச்சடித்தல், கூட்டுறவுச் சங்கங் கள் போன்றவைகளாகும்.[4] இச்சங்கங்களைச் சிறப்பாக வளரச் செய்ய மத்திய, மாநில அரசுகள் பல நிறுவனங்களை ஏற்படுத்தி

[4] Dr. K. P. பட்நகர் மற்றும் மூவர் இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் கூட்டுறவு—ப. 453-469

யுள்ளன. உதாரணமாக, அனைத்திந்தியக் கைத்தறி போர்டு, கதர், கிராமத் தொழில்கள் போர்டு, கைத்தொழில் போர்டு, சிற்றளவுத் தொழில்கள் போர்டு போன்றவைகளாகும்.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களுள் பிரதானமாக விளங்குவது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகும். வேளாண்மைத் துறைக்கு அடுத்தபடியாக விளங்கும் மிகப் பெரிய தொழில், கைத்தறி நெசவுத் தொழிலாகும். 2 மில்லியன் நெசவாளர்களுக்கு மேல் இத்தொழிலில் ஈடுபட்டு நாட்டின் மொத்த வருடாந்திர துணி உற்பத்தியாகிய 870 கோடி கஜத்தில் 370 கோடி கஜம் துணியை உற்பத்தி செய்கின்றனர். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய குறிக்கோள்களாவன :— (i) உறுப்பினர்களுக்கு மூலப் பொருள்களை அளிக்க மொத்தமாக அவற்றைவிலைக்கு வாங்குவது (ii) தொழிலை நடத்தத்தேவையான நிதிவசதிகளை உறுப்பினர்களுக்குக் கிடைக்கச் செய்ய வகை செய்தல் (iii) புதியரக துணிவகைகளை உற்பத்தி செய்ய ஆலோசனை கூறி வழிகாட்டுவது (iv) உறுப்பினர்களின் செய்பொருள்களைக் கூட்டாக விற்பனை செய்ய வகை செய்தல் (v) இத்தொழிலை வளரச் செய்து தொழிலாளர்கள் நல்ல பயன் அடையும்படி செய்தல் ஆகியவைகளாகும்.

இச்சங்கங்களின் பிரச்சினைகள் பலவாகும். அவற்றுள் முக்கியமானவை : (i) பல்வேறு நடுவர்கள் மூலமாக மூலப் பொருள்களைப் பெற வேண்டியிருப்பதால் அவற்றை அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை உள்ளது, இதனால் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. (ii) போதிய மூலப் பொருள்களும், நிதி வசதியும் இச்சங்கங்களுக்குக் கிடைப்பதில்லை. அதனால், நடுவர்களுக்காகவே துணி உற்பத்தி செய்யப்படுகிறது. இச்சங்கங்களுக்குக் கிடைக்கவேண்டிய லாபம் நடுவர்களுக்கு கிடைத்து விடுகிறது. (iii) சீரான விற்பனை வசதிகள் இல்லாமையாலும் நடுவர்களுக்குத் துணி விற்கப்படுகிறது. இதனால் துணிகளின் விலைகள் அதிகரிக்கின்றன. (iv) ஆலைகளில் பேரளவு உற்பத்தி முறையால் துணிகள் உற்பத்தி செய்யப்படுவதால் நாட்டு முறையைப் பின்பற்றும் நெசவாளர்கள், போட்டியைச் சமாளிக்க முடிவதில்லை. இதனால் இச்சங்கங்கள் விரைவாக வளர்ச்சியடைய முடியவில்லை. 1965-ல் இந்தியாவில் 13 லட்சம் அங்கத்தினர்களைக் கொண்ட 13, 084 முதல்நிலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அவைகளின் நடப்பு முதலும், அளிக்கப்பட்ட பங்கு முதலும் முறையே ரூ. 30·5 கோடியாகவும் ரூ. 5·25 கோடியாகவும் இருந்தது. அவைகள்

ரூ. 51 கோடி மதிப்புள்ள துணியை உற்பத்தி செய்து ரூ. 54 கோடிக்கு விற்பனை செய்தன.[5]

(iii) வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்

நடுத்தர வகுப்பாருக்கும், குறைந்த வருவாய் உடையவர்களுக்கும் வீடு கட்ட நிலங்கள் வாங்கிக் கொடுக்கவும், வீடு கட்டிக் கொடுக்கும் பணியை மேற்கொள்ளவும் இச்சங்கங்கள் நிறுவப்பெறுகின்றன. தவணைமுறையில் நிலங்களை அல்லது வீடுகளை வாங்கவும் இச்சங்கங்கள் வகை செய்கின்றன.

(iv) கூட்டுறவுப் பால் சங்கங்கள்

நகரங்களுக்கு வேண்டிய பாலை அளிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பெறுகின்றன.

இந்தியக்கூட்டுறவு இயக்கத்தில்வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களே முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவற்றைத் தனியாக ஆராய்வோம்.

கூட்டுறவும் ஐந்தாண்டுத் திட்டங்களும்

ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவுத் துறைக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது. வேளாண்மை, சிறுதொழில்கள், விற்பனை, பங்கீடு, அளிப்பு போன்ற ஏராளமான பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவு முறை பின்பற்றப்பட்டது.

இரண்டாம் திட்ட காலத்திலிருந்து கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிதி வசதி அதிகரித்து வருகிறது. 1951-52-ல் எடுக்கப்பட்ட ரிசர்வ் வங்கியின் அனைத்திந்தியக் கிராமக் கடன் கணக்கீட்டின்படி குடியானவர்களுக்கு ஆண்டுக்கு ரூபாய் 750 கோடி நிதி வசதி தேவைப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டது. இத்தொகையில் 3·1 சதவீதத்தைத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் அளித்தன. ஆனால், பத்தாண்டுகளுக்குப் பின்பும் 1961–62-ல் எடுக்கப்பட்ட ரிசர்வ் வங்கியின் அனைத்திந்தியக் கிராமக் கடன், முதலீடு கணக்கீட்டின்படி குடியானவர்களின் கடன் தேவைகள் ரூ. 1034 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் ரூ. 267 கோடியை மட்டும்தான் அளிக்க முடிந்தது. அதாவது குடியானவர்களின் மொத்தக் கடன் தேவையில் 25·8 சதவீதத்தை மட்டுந்தான் கூட்டுறவு நிறு

[5] R.D. பேடி கூட்டுறவின் கோட்பாடு, வரலாறு, நடைமுறை—ப. 376-385

வனங்கள் அளித்தன. 1965-66-ல் ஆரம்ப வேளாண்மைக் கடன் சங்கங்களால் சுமார் 400 கோடி ரூபாய் குறுகிய கால நடுத்தர காலக் கடனைக் கொடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாநிலங்களில் அளிக்கப்படும் கூட்டுறவுக் கடன் தொகையின் அதிகரிப்பு ஒரே சீராக இல்லை. குடியானவர்களுக்குத் தேவையான மொத்தக் கடன் தொகையில் 1961-62-ல் மகாராஷ்டிரத்தில் 55 சதவீதமும், குஜராத்தில் 41 சதவீதமும் தமிழ்நாட்டில் 31 சதவீதமும் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் அளிக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் இக்கடன் வசதியின் அளவு 30 சதவீதத்திற்கும் குறைவாகும். கூட்டுறவுக் கடன் பெரும்பாலும் தொடர்ந்து நில அடமானத்தின் பேரில் மட்டுமே அளிக்கப்பட்டு வருகிறது. பயிர்களின் அடமானத்தின் பேரில் கடன் கொடுப்பது இன்னும் அநேக மாநிலங்களில் பின்பற்றப் படாதது ஒரு குறையே ஆகும். இந்திய வேளாண்மை வளர்ச்சிக்கு "பயிர் கடன் முறை" (Crop loan system) மிகவும் இன்றியமையாதது என்று அனைத்திந்தியக் கிராமக் கடன் ஆய்வு பெரிதும் வலியுறுத்தி இருந்தும் இம்முறையில் சிறப்பான முன்னேற்றம் காணப்படவில்லை. சில மாநிலங்களில் மட்டும் இம்முறையின் மூலம் கூட்டுறவுக் கடன் கிடைப்பதால் அங்குள்ள விவசாயிகள் பெரும் பயனடைந்துள்ளனர்.

ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் கூட்டுறவு முறையானது பல வகைகளில் பின்பற்றப்பட்டு வருவது கவனிக்கத்தக்கது ஆகும். முக்கியமாக, வேளாண்மை விற்பனை, கூட்டுறவு வேளாண்மை விநியோகம், கூட்டுறவுக் கிட்டங்கி, கூட்டுறவுப் பண்ணை, நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகள், கூட்டுறவு வீட்டு வசதி, தொழில் கூட்டுறவு அமைப்புக்கள் போன்ற பல துறைகளில் கூட்டுறவு முறையானது சிறப்பாகப் பின்பற்றப் பட்டு வருகிறது. உதாரணமாக, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் பயன்படுத்தப்பட்ட வேளாண்மைப் பொருள்களின் மொத்த மதிப்பு 1955-56-ல் 53 கோடிரூபாயாக இருந்தது. 1960-61-ல் ரூ. 174 கோடியாகவும் 1964-65-ல் ரூ. 301 கோடியாகவும் அதிகரித்தது. சமீப காலத்தில் நுகர்ச்சிப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதைத் தடுக்கவும் தரமான பொருள்களைச் சரியான அளவு, எடை ஆகியவைகளுடன் வேண்டிய அளவு நுகர்வோர்களுக்கு நியாயமான விலைக்கு அளிக்க நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு அமைப்புக்கள் வெகு நாட்களாகவே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன. உதாரணமாக, திருவல்லிக்கேணி இணைப்புக் கூட்டுறவுச்

சங்கம் சென்னை நகரத்தில் ஏராளமான கிளைகளை ஏற்படுத்தி நுகர்வோர்கள் சிறந்த பயன்பெறும் அளவிற்கு செயல் புரிந்து வருகிறது. முக்கியமாக, 'சிறப்பு அங்காடி' (Super Market) சிறந்த முறையில் நுகர்வோர்களுக்குத் தேவையான இன்றியமையாத நுகர்ச்சிப் பொருள்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலைக்கு அளித்து வருகிறது. நுகர்வோர் சங்கங்களின் வெற்றிக்கு அங்கத்தினர்களின் உறுதியான ஆதரவு இன்றியமையாததாகும். 1950-51-ல் ஏற்படுத்தப்பட்ட அனைத்திந்திய கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் அறிவுரையின் அடிப்படையில் "ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டம்" அமுலாக்கப்பட்டதிலிருந்து கூட்டுறவுக் கடன் பணிகளும், கூட்டுறவு விற்பனை போன்ற பொருளாதாரப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதனால், விவசாயிகள் முதல் நிலைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வசதி பெற்று அச்சங்கங்களுக்கே தங்கள் விளைபொருள்களை விற்று சுலபமாகக் கடனைத் தீர்க்கவும் விற்பனை வசதிகளைப் பெறவும் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

திட்ட காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி

இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு செயல் முறைகளினாலும் இந்திய ஸ்டேட் வங்கியின் (State Bank) ஆதரவினாலும் வணிக வங்கிகளின் சிறந்த ஒத்துழைப்பினாலும் கூட்டுறவு இயக்கம் சமீப காலத்தில் சிறப்பான முறையிலே வளர்ச்சி அடைந்து வருகிறது. 1950-51–ல் சுமார் ஒரு லட்சம் சங்கங்கள் இருந்தன. 1966-ல் இவைகள் 1.97 இலட்சமாக அதிகரித்தன. இக்கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்களும், அதே காலத்தில் சுமார் 4 மில்லியனிலிருந்து 27 மில்லியனாக அதிகரித்தனர். இச்சங்கங்கள் அளித்த கடன் தொகையும் சுமார் ரூ. 20 கோடியிலிருந்து ரூ. 345 கோடியாக உயர்ந்துள்ளது. மூன்றும் திட்ட காலத்தில் 37 மில்லியன் நபர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய வளர்ச்சிஏற்பட்டால்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு இயக்கத்தினால் பயனடைய முடியும் என்பது உறுதி. 1951-52-ல் கிராமக் கடன் தேவை ரூ. 750 கோடி என்று அனைத்திந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழு மதிப்பிட்டது. ஆனால், இன்று கிராமக் கடன் தேவை ரூ. 1,500 கோடியாக உள்ளது. வளர்ந்து வரும் கிராமக் கடன் தேவைகளைச் சீரான முறையில் பூர்த்தி செய்ய கூட்டுறவு இயக்கம் வலுவடைய வேண்டியது அவசியமாகும். கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வளர்ச்சி சிறப்பாகக் காணப்பட்டாலும் ஒருங்கிணைந்த திட்டத்தின்

செயல்முறை சக்தி குன்றிக் காணப்பட்டது. ஒருங்கிணைந்த திட்டம் மொத்த கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 10%-ல் மட்டும் தான் உட்புகுத்தப்பட்டது. 1962-63-ல் மொத்த கூட்டுறவுக் கடன் தொகையில் 2 சதவீதம் மட்டுமே ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் வசூலிக்கப்பட்டது. இரண்டாம் திட்ட காலத்தில் நாட்டின் மொத்த விளைபொருள் விற்பனை எச்சத்தில் குறைந்தது பத்து சதவீதத்தையாவது விற்பனைச் சங்கங்கள் எடுத்து நடத்த முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 1963 ஜூன் மாத இறுதியில் மொத்த விளைபொருள் விற்பனை எச்ச மதிப்பில் 5 சதவீதம் மட்டுமே எடுத்து நடத்தப்பட்டது. எனவே, ஒருங்கிணைந்த திட்டத்தில் சிறப்பான வளர்ச்சி ஏற்படவில்லை.

குறைபாடுகளும் தாமதமான வளர்ச்சியும்

இந்தியாவில் கூட்டுறவு இயக்கமானது கடந்த 65 ஆண்டுகளாக நடைபெற்றுவந்தும் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுப் பலமான அடிப்படையில் வளர்ச்சியடையவில்லை. முதலில் அது ஒரு கடன் வழங்கும் இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தும் கிராமக் கடன் பிரச்சினை இன்னும் நாட்டில் இருந்துகொண்டேயிருக்கிறது. 1961-62-ன் அனைத்திந்தியக் கிராமக் கடன், முதலீடு ஆய்வின்படி கூட்டுறவு இயக்கத்தின் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூபாய் 254.81 கோடியாகும். இது விவசாயிகளின் மொத்த தேவையில் 9·1 சதவீதம்தான் என்பது வருந்தத்தக்கதாகும். ஏனெனில், விவசாய லேவாதேவிக்காரர்கள் விவசாயிகளின் கடன் தேவையில் 45·9 சதவீதத்தை அளித்துள்ளனர். இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் குறைபாடுகள் பின்வருமாறு: முதலாவதாக, இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் மக்களின் இயக்கமாகத் தோன்றாமல் அரசாங்கத்தால் கிராமக் கடன் பிரச்சினையைத் தீர்க்கத் திணிக்கப்பட்ட ஓர் இயக்கமாகத் தோன்றியுள்ளது. ஆரம்ப காலத்தில் அரசாங்க உதவியுடன் இவ்வியக்கம் துவக்கப்பட்டிருந்தது சரியானதாகக் கருதப்படலாம். ஆனால், இன்னும் அது மக்களின் ஆர்வம், முயற்சி ஆகியவைகளின் அடிப்படையில் வளர்ச்சியடையவில்லை. எனவே, இந்தியாவில் அரசின் ஆதரவு இவ்வியக்கத்திற்குக் கிட்டாமல் போனால் இவ்வியக்கம் அடியோடு வீழ்ச்சியடையும்.

இரண்டாவதாக, இந்தியாவில் கூட்டுறவுஇயக்கம் இன்னும் கடன் அளிப்பு இயக்கமாகவே இருந்து வருகிறது. கடன் அல்

லாத கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம் மிகவும் தளர்ந்துள்ளது. கூட்டுறவு இயக்கமானது கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்க வேண்டுவது அவசியமாகும். அதனால்தான் ஒற்றைப் பணி கடன் சங்கங்களை (Single purpose credit society) பல்வகைப் பணி கடன் சங்கங்களாக (Multi purpose credit society) மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முன்னோடியாக அமைந்துள்ளதுதான் ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டமாகும்.

மூன்றாவதாக, கூட்டுறவுக் கடன் அமைப்பிலுள்ள முக்கிய குறைபாடு அளவுக்குமேல் கடன் கொடுக்கப்படுதலும் சொந்த நிதி இருப்பு போதாமையுமே ஆகும். உதாரணமாக, 1963-64-ல் முதல்நிலை கடன் சங்கங்கள் திரும்பப் பெற இயலாத கடன் தொகை மொத்தம் ரூ. 77·31 கோடியாக இருந்தது. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் அளித்த கடன் தொகையைத் திரும்பப்பெற இயலாமல் அல்லல்படுகின்றனர். மேலும், பங்கு மூலதனத்தைக் காட்டிலும் நடப்பு முதல் (Working capital) பன்மடங்கு அதிகமாக உள்ளது. உதாரணமாக, அதே ஆண்டில் முதல் நிலை வேளாண்மைக் கடன் சங்கங்களின் மொத்த வைப்புக்கள் மொத்த நடப்பு முதலில் 5·9 சதவீதம் மட்டுமே இருந்தது.

நான்காவதாக, கூட்டுறவு இயக்கமானது எல்லா மாநிலங்களிலும் சரிசமமாக வளர்ச்சியடையவில்லை. மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் இவ்வியக்கம் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால், அஸ்ஸாம், பீஹார், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் இவ்வியக்கம் துரித வளர்ச்சியைப் பெறவில்லை.

கடைசியாக, பொதுவாகக் கூட்டுறவுக் கடன்கள் நில அடமானத்தின் பேரில் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. இதனால், விவசாயிகளுக்குத் தேவையான அளவு கடன் வசதி கிடைக்க வாய்ப்பில்லை. மேலும், நிலமில்லா விவசாயிகள் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க கடன் வாங்க இயலாமல் போய்விடுகிறது, எனவே, பயிர்க் கடன் முறையை மாநில அரசுகளும், கூட்டுறவு வங்கிகளும் உட்புகுத்த மத்திய அரசு செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

சாதனைகள் : கூட்டுறவு இயக்கம் தோல்வி அடைந்தால் கிராம இந்தியாவின் சிறந்த முன்னேற்றத்திற்கான ஊக்கம் தோல்வி அடையும் என்று இந்தியாவின் வேளாண்மை அரசுக் குழு குறிப்பிட்டது. 1954-ல் அனைத்திந்தியக் கிராமக்

கடன் ஆய்வுக் குழுவும் "கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் தோல்வி அடைந்துள்ளது; ஆனால் அது வெற்றியடைந்தே ஆகவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளது. எனவேதான், நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சக்தி வாய்ந்த கூட்டுறவுக்கடன் அமைப்பை ஏற்படுத்த அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது, வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க இன்றியமையாத அதிக விளைச்சல் தரும் விதைகள், பலவகை உரங்கள் போன்றவைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் கூட்டுறவு இயக்கம் பலப்படுத்தப்பட வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் பல குறைகள் காணப்பட்டாலும், சமீபகாலத்தில அதன் சாதனைகளை யாரும் மறுக்க இயலாது. முதலாவதாக, மிகக் குறைந்த வட்டியாகிய 6 சதவீதத்திற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்கி வருகின்றன. இரண்டாவதாக, இச்சங்கங்கள் உறுப்பினர்களிடையே சிக்கனத்தையும், சேமிப்பையும், சுய-முயற்சியையும் மேம்படுத்த முயற்சிகள் எடுக்கின்றன. மூன்றாவதாக, இச்சங்கங்கள் சிறந்த பண்ணை முறைகளையும், விற்பனை கிட்டங்கி வசதிகளையும் உறுப்பினர்கள் அறிந்து செயலாற்ற வகை செய்கின்றன. நான்காவதாக; இச்சங்கங்கள் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களின் சமூக, நற்குண வாழ்க்கையைச் சீர்ப்படுத்தி; பொருளாதார வளர்ச்சிக் கருத்தைப் பயிற்றுவிக்க முயலுகின்றன. இறுதியாக, நுகர்வோர் சங்கங்கள், வீட்டு வசதி சங்கங்கள் போன்றவைகள் உறுப்பினர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உதவி புரிகின்றன,

முடிவுரை: கூட்டுறவு முறையைப் பின்பற்றும் திட்டமிட்ட இந்தியா போன்ற நாடுகளில், அரசாங்கக் கட்டுப்பாட்டால் ஏற்படும் தீமைகளும் லாபத்தைப் பிரதானமாகக் கொண்ட தனியார் தொழில்களின் சுரண்டலும் நீக்கப்பட நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. எனவே, இந்தியப் பொருளாதாரத்தின் எதிர்காலம் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பான முன்னேற்றத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

23. கூட்டுறவுக் கடனும் வங்கிகளும்

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வேளாண்மைத்துறைக்கு நிதி வசதி அளிப்பதற்காகவே தோன்றியது. ஏனெனில், வேளாண்மைத்துறையில் ஏராளமான நடுவர்கள், வணிகர்கள், கிராம லேவாதேவிக்காரர்கள் விவசாயிகளுக்கு அதிக வட்டிக்கு முறையின்றிக் கடன் கொடுத்து வந்தனர். விவசாயிகளும் இவர்களின் பிடியில் அகப்பட்டு வெளிவர இயலாமல் தவித்தனர். எனவேதான், இந்திய விவசாயி "கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறக்கவேண்டிய" சூழ்நிலை இருந்தது. இப்பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசும், மாநில அரசுகளும் அவ்வப்போது முயற்சிகள் மேற் கொண்டன. மத்திய அரசு 1951-ல் அனைத்திந்தியக்கிராமக்கடன் கணக்கீட்டுக் குழுவைஏற்படுத்தி எந்தெந்த முறையில் கூட்டுறவுத்துறை கிராமக்கடன் சுமையைக் குறைக்க இயலும் என்று ஆராயப்பட்டது. அதன் விளைவாக, கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கியும், ஸ்டேட் வங்கிகளும் கூடுமானவரையில் நிதி உதவி அளித்து வருகின்றன. முதலில் குறுகியகாலக் கூட்டுறவுக்கடன் நிறுவனங்களையும் பிறகு நீண்டகாலக் கூட்டுறவுக்கடன் நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் ஆராய்வோம்.

குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் முதல் நிலை கடன் சங்கம் (Primary Credit Society)

கூட்டுறவுக் கடன் சங்கம் என்று அழைக்கப்படும் முதல் நிலைக் கடன் சங்கத்தை, ஒரு கிராமத்தைச் சேர்ந்த பத்து பேருக்குமேல் ஆரம்பிக்கலாம். பங்கு தொகை மிகக் குறைவான தாகையால் ஏழை விவசாயிகூட உறுப்பினராகலாம். உறுப்பினர்களுக்குப் பொறுப்பு வரையறுக்கப்படவில்லை. எனவே, சங்கத்திற்குத் தோல்வி ஏற்பட்டால் உறுப்பினரெல்லோரும் பொறுப்

பாவர். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், காரியதரிசி, பொருளாளர் ஆகியவர்கள் சங்கத்தை நிர்வகிக்கின்றனர். இச்சங்கம் வேளாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ள, குறுகிய கால (ஓர் ஆண்டு) கடனை, 6 சதவீதமாகச் சட்டத்தால் குறிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு விவசாயிகளுக்கு அளிக்கிறது. இச்சங்கத்தின் லாபம் பங்குதாரர்களுக்குப் பங்கிடப்படுவதில்லை. கிராமநலனுக்காகவும், கிணறு வெட்டவும், பள்ளிக்கூடத்தை நடத்துவதற்காகவும் அது பயன்படுத்தப் படுகிறது.

கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கம் விவசாயிகளிடையே சேமிப்பை ஏற்படுத்தி அதன் மூலம் அதிக வைப்பு நிதிகளைப் பெறும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், பெரும்பாலான விவசாயிகள் ஏழைகளாய் இருப்பதால் இச்சங்கத்திற்கு போதுமான நிதி வசதி கிடைப்பதில்லை. இச்சங்கங்களின் பங்கு முதல் போதுமானதாக இல்லாததால், உறுப்பினர்களுக்குத் தேவையான நிதி வசதிகளை அளிக்கமுடிவதில்லை. இக்குறையைத் தீர்ப்பதற்காக, மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் ஆரம்பிக்கப் பட்டன.

கூட்டுறவு மைய வங்கிகள்
(Co-operative Central Banks)

இவ்வங்கிகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் முதல் நிலை கடன் சங்கங்களின் கூட்டமைப்பாகும் (Federations). இவ்வங்கிகள் சாதாரணமாக ஒரு மாவட்டம் முழுவதிலும் பரந்துள்ள முதல் நிலைக் கடன் சங்கங்களைக் கண்காணித்து நிதி உதவிகள் வழங்கும். (அதனால்தான் இவைகளுக்கு மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் என்ற பெயரும் உண்டு.) இவ்வங்கிக்குச் சில தனிநபர்கள் நிதி வசதியும், நிர்வாக உதவியும் செய்கின்றனர். கூட்டுறவு மத்திய வங்கிகள் மூன்று வகை நிதிகளைப் பெறுகின்றன:—

(1) தங்கள் சொந்த பங்குமுதலும், பண இருப்பும்(Reserves) (2) பொதுமக்களிடமிருந்து பெறும் வைப்புக்கள் (Deposits) (3) மாநிலக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறும் கடன் பணம், இவ்வங்கிகளின் முக்கிய பணி பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைப் பெறுதலும், முதல்நிலைக் கடன் சங்கங்களுக்குக் கடன் வசதி அளித்தலும் ஆகும். ஆனால், இவ்வங்கிகள் பொதுமக்களிடமிருந்து போதிய வைப்புக்களைப் பெற முடியவில்லை. அதனால், இவ்வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும்

வேளாண்மை முதல் நிலைக் கடன் சங்கங்களுக்கும் இடையில் மத்தியஸ்தர்களாக (Intermediaries) விளங்குகின்றனர்.

மாநிலக் கூட்டுறவு வங்கி
(State Co-operative Bank)

இவ்வங்கி ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவுத்துறைக்கும் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கும் மேல்நிலை (Apex) வங்கியாகச் செயல் புரிகிறது. ஒரு மாநிலத்திலுள்ள எல்லா மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் இவ்வங்கி நிதி உதவி செய்து ஆலோசனை கூறி வழிகாட்டி வருகிறது. இவ்வங்கி இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் வாங்கி மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் முதல்நிலைச்சங்கங்களுக்கும்நிதி உதவி செய்கிறது. எனவே அது ரிசர்வ் வங்கிகளுக்கும் மத்திய, முதல்நிலை கூட்டுறவு கடன்நிறுவனங்களுக்கும் இடையில் நடுவராக அமைந்துள்ளது. இவ் வங்கியும் மூன்று வகையில் நடப்பு நிதிகளைப் பெறுகிறது. (1) தம் சொந்த பங்கு முதலும் இருப்புப் பணமும், (2) பொது மக்களிடமிருந்து பெறும் வைப்புக்கள், (3) ரிசர்வ் வங்கியிடமிருந்து வாங்கும் கடன் நாட்டிலுள்ள மாநிலக்கூட்டுறவு வங்கிகளின் நடப்பு முதலில் 50 முதல் 90 சதவீதம் ரிசர்வ் வங்கி அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வங்கிகள் கூட்டுறவுக் கடன் இயக்கத்தில் நாட்டம் கொள்வதோடு கூட, கூட்டுறவுக் கொள்கைகளை மற்றத் துறைகளிலும் உட்புகுத்த செயல் முறைகளை மேற் கொண்டு வருவது போற்றத்தக்கதாகும்.

குறுகிய காலக் கடன் வசதி அளிக்கும் பல்வேறு நிறுவனங்களில் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் விரைவான முன்னேற்றமடைந்து வருவது கவனிக்கத் தக்கதாகும். 1965–66-ல் இந்தியாவில் 22 மாநிலக் கூட்டுறவு வங்கிகள் இருந்தன. இவைகள் ரூ. 147 கோடியை மொத்த வைப்புக்களாகப் பெற்றிருந்தன. ரூ. 474 கோடியைக் கடனுகவும் முன்பணமாகவும் கொடுத்துள்ளன. ஆனால், 1951–52-ல் நாட்டில் 16 மாநில வங்கிகளே இருந்தன. இவற்றின் வைப்புக்கள் ரூ. 218 கோடியாகவும், அளித்த கடனும் முன்பணமும் ரூ. 55 கோடியாகவும்தான் இருந்தது.[1]

[1] இந்தியா, 1968.

நீண்ட காலக் கூட்டுறவுக்கடன் நில அடமான வங்கிகள் (Land Mortgage Bank)

விவசாயிகளுக்குத் தேவையான நீண்டகாலக்கடன் உதவிகளை, முன்பு லேவாதேவிக்காரர்கள், பிறகு மாநில அரசுகள், கூட்டுறவுக் கடன் வங்கிகள் போன்றவைகள் அளித்து வந்தன. ஆனால், இக்கடன் முறையில் பல குறைகள் காணப்பட்டதால், குறைந்த வட்டிக்கு நீண்டகாலக் கடன் வசதி அளித்து சுலபமான தவணை முறையில் கடனை வசூலிக்கத்தக்க ஒரு நிறுவனம் தேவைப்பட்டது. இத்தேவையைப் பூர்த்தி செய்யும் முகத்தான், நில அடமான வங்கிகள் என்று அழைக்கப்பட்ட நிலவள வங்கிகள் தோன்றின.

முதன் முதலாக, பஞ்சாப் மாநிலத்தில்தான் நில அடமான வங்கி 1920ல் அமைக்கப்பட்டது. அடுத்தபடியாக, தமிழ் நாட்டில் 1925ல் இரு நில அடமான வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன. அதன் பிறகு, பம்பாயில் 1929ல் மூன்று வங்கிகள் அமைக்கப்பட்டன. ஆனால், திறமையான முறையில், உண்மையான கொள்கைகளுடன் தமிழ் நாட்டில்தான் 1929ல் தமிழ் நாட்டிலுள்ள முதல்நிலை வங்கிகளை ஒருங்கிணைத்து நீண்டகால நிதி உதவி அளிக்க மத்திய நில அடமான வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

நில அடமான வங்கிகள் நிலையான வளர்ச்சியைப் பெற முடியாமல் அவ்வப்போது தடைகள் ஏற்பட்டன. பெரிய தொழில் மந்தம் ஏற்பட்ட காலத்தில் இவ்வங்கிகள் சிறிது ஊக்கம் பெற்று வளர்ந்தன. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் இவ்வங்கிகள் விரைவான வளர்ச்சியடைந்தன. ஏனெனில் கடன் வாங்கிய விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தியைப் பெற்றனர். நாடு சுதந்திர மடைந்தபின், இவ் வங்கிகள் செழிப்புற்று வளர்ந்து வருகின்றன. எனினும், சில மாநிலங்களாகிய ஆந்திரம் தமிழ்நாடு, மைசூர், மஹாராஷ்டிரம், குஜரத் ஆகிய மாநிலங்களில் மட்டும்தான் இவ்வங்கிகள் வளர்ந்து வருகின்றன.

நில அடமான வங்கிகளின் வளர்ச்சி

முதல்நிலை நில அடமான வங்கிகள் (Primary Land Mortgage Banks) 1951-52ல் 290 தான் இருந்தன. ஆனால், இவைகள் 1965-66ல் 673 ஆக அதிகரித்தன. இவ்வங்கிகளின் உறுப்பினர்களும் 2·2 லட்சத்திலிருந்து 10·48 லட்சமாக அதிக

ரித்தனர். பங்கு முதலும், இருப்பு நிதியும் முறையே ரூ. 58 லட்சம் ரூ. 18 லட்சமாக இருந்தது முறையே ரூ.1118 கோடியாகவும் ரூ. 155 கோடியாகவும் அதிகரித்தது. நடப்பு முதல் ரூ, 7·6 கோடியிலிருந்து ரூ. 136·9 கோடியாகவும் அதிகரித்தது. கடன் வசதியும் ரூ. 1·3 கோடியிலிருந்து ரூ. 41·2 கோடியாக அதிகரித்தது.

மத்திய நில அடமான வங்கிகள் 1951–52–ல் 6 தான் இருந்தன. ஆனால், 1965–66ல் 18 ஆக உயர்ந்தன. இவ்வங்கிகளின் உறுப்பினர்களும் 34,600லிருந்து 4 லட்சமாக அதிகரித்தனர்; பங்கு முதலும், இருப்பு நிதியும் முறையே ரூ. 44 லட்சமாகவும், ரூ. 37 லட்சமாகவும் இருந்தது; ரூ. 15,39 லட்சமாகவும் ரூ. 265 லட்சமாகவும் அதிகரித்தது. நடப்பு முதல் ரூ. 10·2 கோடியிலிருந்து ரூ. 206·6 கோடியாகவும் அதிகரித்தது. அளித்த கடன் தொகை ரூ. 2·5 கோடியிலிருந்து ரூ. 56·4 கோடியாகவும் உயர்ந்தது.[2]

நில அடமான வங்கிகளின் அமைப்பு

நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அளிப்பு நிறுவனங்கள் இரு அடுக்கு (Two-tier) முறையைப் பெற்றுள்ளன; முதல்வகை மாநில மட்டத்தில் (பொதுவாக ஒரு மாநிலத்திற்கு ஒன்றாக இருந்து செயலாற்றுபவை மத்திய நில அடமான வங்கிகள்; மற்ற வகை முதல்நிலை நில அடமான வங்கிகளாகும். சில மாநிலங்களில் முதல்நிலை அடமான வங்கிகளுக்குப் பதிலாக மைய நில அடமான வங்கியின் கிளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மத்தியப் பிரதேசத்தில் மாநிலக் கூட்டுறவு வங்கியே ஒரு மத்திய நில அடமான வங்கியாகவும் பணி புரிகிறது. எனவே, இவ் வங்கிகளின் அமைப்பு சில மாநிலங்களில் வேறுபடுகிறது.

நில அடமான வங்கிகளின் நிதி நிலை

நில அடமான வங்கிகள் தங்களுக்குத் தேவையான கடன் நிதியை பங்கு முதல், இருப்பு நிதி, வைப்புக்கள்கடன் பத்திரங்கள் (loans) அல்லது உறுதிப் பத்திரங்கள் (debentures) அளிப்பு ஆகியவைகளின் மூலம் பெறுகின்றன. இவை எல்லாவற்றிலும், உறுதிப் பத்திரங்கள்தான் நிதிபெறப்பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றன. டிபென்சர்கள் என்பது மத்திய நில அடமான வங்கிகளால் ஒரு குறிப்பிட்ட வட்டிக்கு ஒரு

இந்தியா, 1968.

குறிப்பிட்ட காலத்திற்கு (பொதுவாக 20 ஆண்டுகள்) அளிக்கப்படும் நீண்டகாலக் கடனாகும். டிபென்சர்கள் மாநில அரசுகளால் வட்டி, கடன் தொகை ஆகியவற்றிற்காக உத்திரவாதம் பெற்றவைகளாகும். இவ்வங்கிகளின் உறுதிப் பத்திரங்களைப் பெற்று நிதி வசதி அளிக்கும் நிறுவனங்கள் கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள், ஸ்டேட் வங்கி, ரிசர்வ் வங்கி ஆகியவைகளாகும். 1967–68ல் மத்திய நில அடமான வங்கிகள் சாதாரண டிபென்சர்கள், கிராம டிபென்சர்கள் ஆகியவைகளின் மூலம் முறையே ரூ. 20·60 கோடியையும் ரூ. 57 கோடியையும் பெற்றன.

கடன் நடவடிக்கைகள்

நில அடமான வங்கிகள், வேளாண்மைச் சொத்தை ஈடாகக் கொண்டு விவசாயிகளுக்குக் கடன் வழங்குகின்றன. நீண்ட காலங்களுக்குப் பணம் கடனாகக் கொடுக்கப்படுவதால் கடனளிப்பதில் சில கண்டிப்பான விதிகள் பின்பற்றப்படுகின்றன. (1) பொதுவாக, வேளாண்மைச் சொத்தின் பேரில் ஒரு முறை மட்டுமே கடன் வழங்கப்படுகிறது. இரண்டாம் முறை கடன் கொடுப்பது தவிர்க்கப்படுகிறது. (2) ஈடு கொடுக்கப்பட்ட சொத்தின் மொத்த மதிப்பில் 50 சதவீதம் மட்டும்தான் கடனாகக் கொடுக்கப்படுகிறது. (3) நிலத்தின் தன்மையையும் மதிப்பையும் கணக்கிட நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிலத்திற்காகக் கட்டப்படும் வரி, நிலத்தின் வாடகை மதிப்பு, நிலத்திலிருந்து கிடைக்கும் மொத்த, நிகர வருமானம், நிலத்தின் விற்பனை விலை மதிப்பு போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு நிலத்தின் மதிப்பைக் கணக்கிடப் படுகிறது. நிலத்தின் மதிப்போடு கடன் வாங்குபவரின் திருப்பி அளிக்கும் சக்தியும் பரிசீலிக்கப்படுகிறது. (4) குறைந்த வட்டியாகிய 6 சதவீதத்திற்கு நீண்டகாலக் கடனை, விவசாயிகளுக்கு இவ்வங்கிகள் அளிக்கின்றன.

நில அடமான வங்கிகள் பல நோக்கங்களுக்காகக் கடன் அளிக்கின்றன. பழைய கடனைத் தீர்த்தல், நிலச்சீரமைப்பு, விலையுயர்ந்த வேளாண்மைக் கருவிகளை வாங்கல், கிணறு வெட்டுதல், குழாய்களை அமைத்தல் போன்ற பல ஆக்கப் பணிகளுக்காகக் கடன் வழங்கப்படுகிறது. முதலில் விவசாயிகளில் பெரும்பாலோர் பழைய கடனைத் தீர்க்கும் நோக்கத்திற்காகவே இவ்வங்கிகளிடமிருந்து கடன் பெற்றனர். ஆனால், தற்போது நில வளர்ச்சிக்காகவே விவசாயிகள் இவ்வங்கிகளிடமிருந்து கடன் வாங்குகின்றனர்.

முடிவுரை : கூட்டுறவு நில அடமான வங்கிகள் முன்னேற்றமடைந்து வந்தாலும், கிராமக் கடன் பிரச்சினை குறிப்பிடத்தக்க வகையில் தீர்க்கப்படவில்லை. சில கோடி ரூபாய்கள் ஆண்டு தோறும் இவ்வங்கிகளால் வழங்கப்படுவது கடலில் ஒரு துளி நீரைத் தெளிப்பதுபோல் சென்று மறைந்து விடுகிறது. இவ்வங்கிகளின் பிரச்சினைகளில் முக்கியமானவை நிர்வாகத் திறமையின்மையும், விவசாயிகளின் அறியாமையும் ஏழ்மையுமே யாகும். விவசாயிகளுக்கு நில அடமான வங்கிகளின் பணிகளையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கி அவற்றில் அதிகத் தொடர்பு கொள்ளுமாறு செய்ய வேண்டும். இவ்வங்கிகள் நல்ல நிர்வாகத் திறமை பெற்று பணி புரிந்தால் குறைந்த வட்டிக்கு ஏழை விவசாயிகளுக்குக் கடன் வழங்க முடியும். இறுதியாக, நில அடமான வங்கிகளுக்கும் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் மற்ற நிறுவனங்களுக்குமிடையே தகுந்த ஒருங்கிணைப்பு ஏற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். அப்போதுதான் விவசாயிகளின் பல்வேறு வகையான கடன் தேவைகளைப் பயனுள்ள முறையில் பூர்த்தி செய்ய முடியும்.

24. கூட்டுறவுப் பண்ணை

இந்தியக் கிராமப் பொருளாதாரத்தைச் சீரமைத்து வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க, கூட்டுறவுப் பண்ணை முறையின் பங்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்திய நிலப் பிரச்சினைக்குச் சிறப்பான தீர்வு காணவும் சிறிய நிலங்களைப் பெரிய நிலங்களுடன் இணைத்து விஞ்ஞான ரீதியில் உற்பத்தி முறையைக் கையாள, கூட்டுறவுப் பண்ணை முறை விவசாயம் சிறந்ததென்று கருதப்பட்டது. 1959-ல் நடந்த இந்திய தேசிய காங்கிரசின் நாக்பூர் கூட்டத்தில் கூட்டுறவுப் பண்ணை முறையை அடிப்படையாகக் கொண்ட புதிய வேளாண்மைக் கொள்கை (New Agrarian Policy) தீர்மானிக்கப்பட்டது. "வருங்காலத்தில் கூட்டுறவு இணைப்புப் பண்ணை முறையே வேளாண்மைத் தொழிலின் அடிப்படை அமைப்பாக இருக்க வேண்டும். இணைப்புப் பண்ணை (Joint Farming) அமைப்பதற்குமுன் முதலாவதாக நாடு முழுவதும் பணி கூட்டுறவு அமைப்புக்களை (Service Co-operatives) அமைக்க வேண்டும். இக்கட்டமானது முதல் மூன்று ஆண்டுகளில் முடிவடைந்துவிட வேண்டும்." இக் கொள்கை தீர்மானிக்கப்பட்டதிலிருந்து கூட்டுறவுப் பண்ணை முறையை இந்தியாவில் ஏற்படுத்துவதில் உள்ள நன்மை தீமைகள் நாட்டில் விவாதிக்கப்பட்டன. கூட்டுறவுப் பண்ணை என்பதற்குச்சிறப்பான இலக்கணம் முன்பு கொடுக்கப்படவில்லை. 1946-ல் வெளியான கூட்டுறவுத் திட்டக் குழுவின் அறிக்கையின் படி கூட்டுறவுப் பண்ணை சங்கங்கள் நான்கு பரந்த வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

கூட்டுறவுப் பண்ணை வகைகள்

1. கூட்டுறவுச் சிறப்புப் பண்ணை சங்கங்கள் (Co-operative Better Farming.)

2. கூட்டுறவு இணைப்புப் பண்ணை சங்கங்கள் (Co-operative Joint Farming.)

3. கூட்டுறவு குத்தகைப் பண்ணை சங்கங்கள் (Co-operative Tenant Farming.)

4. கூட்டுப் பண்ணை சங்கங்கள் (Collective Farming.)

1. கூட்டுறவுச் சிறப்புப் பண்ணை சங்கங்கள்

கூட்டுறவுச் சிறப்புப் பண்ணைகளின் முக்கிய நோக்கம்சீரான சாகுபடி முறைகளை உட்புகுத்துவதாகும். இச்சங்கங்கள் நிலத்தோடோ அல்லது அதன் நிர்வாகத்தோடோ தொடர்பு கொள்ளுவதில்லை. நிலம் விவசாயியின் சொந்த நிர்வாகத்திலேயே இருக்கும். இச்சங்கம் குடியானவர்களுக்குத் தேவையான பணிகளையும், நீர்ப்பாசனம், கிட்டங்கி போன்ற வசதிகளையும் சீரான விதைகள், உரங்கள், கருவிகள் போன்ற உள்ளீடுகளையும் அளிக்கின்றன. அங்கத்தினர்களின் வேளாண்மைப் பொருள்களைச்சுத்தம் செய்து தரம் பிரித்துஒன்று சேர்த்து விற்பனை செய்யும் பொறுப்பினை இச்சங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. இவ்வகைப் பண்ணைகளில் பேரளவு பண்ணை முறை, சீரான விற்பனை போன்ற நன்மைகள் ஏற்படுகின்றன. ஆனால், பண்ணைகளில் சிறிய அளவு நிலங்களும் நிலம் சிதறுண்டு இருத்தல் போன்றவைகள் காணப்படுவதால், பேரளவு பண்ணை முறையின் மற்ற நன்மைகள் கிட்டா. பழமை நோக்கு கொண்ட விவசாயிகள் வாழும் பகுதிகளில் இத்தகைய சங்கங்கள் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.

2. கூட்டுறவு இணைப்புப் பண்ணை சங்கங்கள்

நம் நாட்டிற்கு உகந்ததாகக் கருதப்படும் இணைப்புப் பண்ணை முறையில் நிலம் ஒருங்கிணைக்கப்பட்டு இச்சங்கத்தால் இணைந்த சாகுபடி முறை (Joint Cultivation) கையாளப்படுகிறது. "கூட்டுறவுப் பண்ணை என்பது முக்கியமாக நிலத்தை ஒருங்கிணைத்தலும், இணைப்புப் பண்ணை நிர்வாகம் ஆகியவற்றைக் குறிக்கும்" என்று இந்தியத் திட்டக் குழு குறிப்பிட்டுள்ளது. சங்கத்தின் அங்கத்தினர்களின் நில உரிமை அவர்களிடமே வைத்துக்கொள்ளப்படுகிறது. இணைப்பு சாகுபடி மேற்கொள்ளுவதற்கு நிலம் ஒருங்கிணைக்கப்படுகிறது. பண்ணையில் சேர விரும்புவோர்கள் எப்போதும் சேரலாம். அதே போன்று பண்ணையிலிருந்து வெளியேற எண்ணினால் அதே மதிப்புடைய வேறொரு நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

பண்ணைக்கு அளிக்கப்பட்ட நிலத்தின் அளவுக்கேற்ப வாரம் கொடுக்கப்படுகிறது. ஓர் அங்கத்தினர் நிலத்திற்கான வாரம் பெறுவதோடு ஆற்றிய உழைப்புக்கு ஏற்ப கூலியும் பெறுகிறார். சாகுபடிக்கான செலவுகள், இருப்பு நிதி போன்றவைகளுக்காக அளிக்கப்படும் தொகை ஆகியவைகள் நீங்கலாக மீதி இருக்கும் நிகர லாபத்தை எல்லா அங்கத்தினர்களும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர். கூட்டுறவு இணைப்புப் பண்ணை சங்கம் மக்களாட்சியின் கொள்கைகளைக் கடைபிடிப்பதால் அதிகாரத்தின் மூலம் கட்டாயப்படுத்தும் நிலை இல்லை. மேலும், எல்லா அங்கத்தினர்களுக்கும் சம உரிமையும், சம அந்தஸ்தும், அளிக்கப்படுகிறது. இப்பண்ணை முறையின் நோக்கங்கள்: (1) பேரளவு சாகுபடி முறை, அம்முறையின் சிக்கனங்கள் ஆகியவைகளின் பயன்களைப் பெறுதல். (2) பல்வேறு வேளாண்மைப் பணிகளை அமைத்துக் கொடுத்தல். (3) சீரான முறைகள் இயந்திர சாகுபடி ஆகியவைகளைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல்.

3. கூட்டுறவுக் குத்தகைப் பண்ணை சங்கங்கள்

நோக்கங்கள்: (1) சுதந்திர சாகுபடியை மேற்கொள்ளுவதற்கு அங்கத்தினர்கள் நிலத்தைப் பெற வகை செய்தல் (2) நடுவர்–நிலக்கிழார் ஆகியவர்களை நீக்குதல் (3) நியாயமான கட்டணத்தில் தொழில் நுட்ப அறிவுரை, பணிகள் மற்ற வசதிகள் ஆகியவற்றை அங்கத்தினர்களுக்கு அளிப்பதற்காக வழிவகைகளை மேற்கொள்ளுதல். (4) குத்தகைதாரர்களால் கொடுக்கப்படும் வாரம் நியாயமான முறையில் இருக்க வகை செய்தல். எனவே, கூட்டுறவுக் குத்தகைப் பண்ணைகள் முக்கியமாகக் குத்தகைதாரர்களைக் கொண்டதாக விளங்குகிறது. அரசாங்கத்திடமிருந்தோ அல்லது நிலக்கிழார்களிடமிருந்தோ இச்சங்கம் நிலத்தைக் குத்தகைக்குப் பெறுகிறது. இவ்வாறு பெற்ற குத்தகை நிலம் சங்கத்தின் அங்கத்தினர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. சங்கத்தால் குறிக்கப்பட்ட வாரத்தை அங்கத்தினர்கள் செலுத்துகின்றனர். இச்சங்கம் விதை, நிதி வசதி, கருவிகள் போன்றவைகளை அங்கத்தினர்களுக்கு அளிக்க வகை செய்கிறது. பொதுவாக, இத்தகைய சாகுபடி முறையை நிலமில்லாக் குடியானவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகள் மேற்கொள்ளுகின்றனர்.

4. கூட்டுறவுக் கூட்டுப் பண்ணை சங்கங்கள்

நோக்கங்கள்: (i) பேரளவு உற்பத்தியின் சிக்கனங்களால் கிடைக்கும் பயன்களைப் பெறுதல். (ii) இணைந்த முறையின்

அடிப்படையில் சாகுபடியைப் பெருக்குதல். (iii) ஓர் ஏக்கர் நிலத்தின் விளைச்சலை அதிகப்படுத்தி சீரமைக்கப்பட்ட சாகுபடியின் மூலம் உறுப்பினர்களின் வருமானங்களை அதிகரித்தல் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்றோ அல்லது விலை கொடுத்து வாங்கியோ அல்லது அரசாங்க நிலத்திலோ இச்சங்கம் நிலத்தை ஒருங்கிணைத்து இணைந்த சாகுபடி முறையை மேற்கொள்ளுகிறது. நிலம் சிறிய துண்டுகளாகப் பிரிக்கப்படுவதில்லை. குத்தகைப் பண்ணை முறையைப் போலல்லாமல் நிலம் இச்சங்கத்தால் சாகுபடி செய்யப்படுகிறது. அங்கத்தினர்கள் கூட்டாகப் பணி புரிந்து தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியங்களைப் பெறுகின்றனர். சங்கத்தின் நடப்பு மூலதனம் பங்குகளை விற்பதன் மூலம் கிடைக்கிறது. ஆனால், பங்குகளுக்கு இலாப ஈவு கொடுக்கப்படுவதில்லை. லாபத்திலிருந்து ஒரு பகுதி இருப்பு நிதிக்கு ஒதுக்கிய பின் மீதியை உறுப்பினர்கள் தங்கள் கூலிகளின் விகிதத்தில் பிரித்து எடுத்துக்கொள்ளுகின்றனர். சங்கத்தை விட்டுப் பிரிந்து செல்ல உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், அவர்கள் முதலீடு செய்த முதலும் அவர்களுக்குத் திருப்பி அளிக்கப்படுகிறது. டாக்டர் ஓட்டோ ஸ்கில்லர் கூட்டுறவுப் பண்ணையைக்கூட்டுப் பண்ணையிலிருந்து வேறுபடுத்திக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்: "கூட்டுறவுப் பண்ணை சுய உரிமை கொண்ட பொருளாதார அமைப்புக்களின் அங்கமாகும். ஆனால், பொருளாதார சுய உரிமையை இழந்த உறுப்பினர்களைக் கொண்டது கூட்டுப் பண்ணைத் தொழிலாகும். ரஷ்யா போன்ற சோஷலிச நாடுகளில் கூட்டுப் பண்ணை முறைகள் வேளாண்மை அமைப்புக்களில் சிறப்பான இடத்தைக் கொண்டு விளங்குகின்றன. அத்தகைய நாடுகளில் நிலம் அரசின் பூரண உரிமையில் இருந்துவருகிறது, கூட்டுப்பண்ணை முறையில் கட்டாயப்படுத்தும் நிலை இருந்து வருகிறது கூட்டுப் பண்ணைகளில் பணிபுரியும் குடியானவர்கள் கூலி பெறுவோரின் நிலைக்குக் குறைத்து மதிக்கப்படுகின்றனர். மக்களாட்சியின் அடிப்படையில் இயங்கிவரும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இத்தகைய பண்ணை முறை சிறப்பானதாக இல்லை.

கூட்டுறவுப் பண்ணையின் நன்மைகள்

கூட்டுறவுப் பண்ணைக்கு ஆதரவாக, கீழ்க்கண்ட வாதங்கள் உள்ளன.

1. குடியானவன் தானாகவே தன் விவசாயப் பிரச்சினைகளைத் தீர்க்க சக்தியில்லாதவனாக இருப்பதால், அநேக நாடு

களில் கூட்டுறவுக் கொள்கைகள் சிறந்த பலனை அளித்துள்ளன. கூட்டுறவுக் கொள்கைகள், வேளாண்மைக் கடன், விற்பனை, கிட்டங்கி போன்ற துறைகளில் சிறந்த பலனை ஏற்படுத்தியிருப் பதால், பண்ணை நடவடிக்கைகளிலும் அச்சீரிய கொள்கைகளைக் கடைபிடித்தல் சாலச் சிறந்ததாகும். இதன் மூலம் கிராம வாழ்க்கை பொருளாதார கலாச்சாரத் துறைகளில் முன்னேற வாய்ப்பு ஏற்படுகிறது.

2. சமூக நீதியை நிலை நிறுத்த இத்தகைய பண்ணை முறை சிறந்த கருவியாக அமைந்துள்ளது. இம்முறையில் வருமான, செல்வ ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்பட்டு நிலமில்லா விவசாயிகளின் சுரண்டலுக்கு ஒரு முடிவு ஏற்பட வாய்ப்பு கிடைக்கிறது. கூட்டுறவு இணைப்புப் பண்ணை முறையில் நிலமுள்ள விவசாயிகள், நிலமில்லா வேளாண்மைக் கூலிகள் ஆகியவர்களுக்கிடையே உள்ள வேறுபாடு நீங்குகிறது.

3. இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் கிராமக் குடும்பங்களில் 30·4 சதவீத மக்கள் வேளாண்மைக் கூலிகளாகப் பணி புரிகின்றனர். அவர்களில் 50 சதவீத மக்கள் நிலமில்லாத வர்களாக உள்ளனர். வேளாண்மை சீர்திருத்தக்குழு இந்தியா வில் நிலமில்லா வேளாண்மைக் கூலிகள் 35 மில்லியன் பேர்கள் என்றும், அவர்களை நம்பி வாழ்பவர்கள் 100 மில்லியன் நபர்கள் என்றும் கணக்கிட்டுள்ளது. தொழில் துறையில் இவர்களுக்கு வேலை கிடைக்காத பட்சத்தில் கூட்டுறவுப் பண்ணை ஒன்றுதான் பாதுகாப்பளிக்க முடியும்.

4. இந்திய வேளாண்மையில் இன்று பெரும் பிரச்சினை யாக இருப்பது நிலப் பிரிவுகளும் நிலம் துண்டாடப்படுதலுமே ஆகும். இந்திய வேளாண்மையில் குறைந்த உற்பத்தி இருப்ப தற்கு இது ஓர் அடிப்படை காரணமாகும். நில உடைமைகளை ஒருங்கிணைக்கும் திட்டங்கள் வெற்றி பெற்றுவிட்டால் அடுத்த கட்டம் கூட்டுறவுப் பண்ணை முறையை நாட்டில் ஏற்படுத்து வதுதான். இதன் மூலம் வேளாண்மை உற்பத்தியை அதிக ரிக்கவும், ஏராளமான வேளாண்மைப் பொருள் எச்சங்களை உண்டாக்கவும் முடியும்.

5. கூட்டுறவுப் பண்ணை முறையில் பேரளவு உற்பத்தி முறையை மேற்கொள்ளச் சாத்தியமாகிறது. கூட்டுறவுப் பண்ணை முறையில் பேரளவு உற்பத்தியின் எல்லா வகைச் சிக்கனங்களையும் பெற முடியும்.

6. இப்பண்ணை முறையில் வேளாண்மையை இயந்திரமய மாக்க, சிறந்த வாய்ப்பும் வசதியும் கிட்டுகிறது. இம்முறையில் முதல் வளங்களைச் சிறப்பான முறையில் பயன்படுத்த முடியும். சிறந்த நீர்ப்பாசன வசதிகள் போன்றவைகளைத் தகுந்த முறை யில் ஏற்படுத்த முடிகிறது. இப்பண்ணை முறையில் திட்டப்படி பயிரிடுதல் (Crop planning), அறிவியல் ஆராய்ச்சியை மேற் கொள்ளுதல் ஆகியவைகள் சாத்தியப்படுகின்றன. சிறந்த உற்பத்தி முறை, பரவலான வேளாண்மை, நிலச்சீரமைப்பு ஆகியவைகள் மூலம் வேளாண்மை உற்பத்தி அதிகரிக்க இப்பண்ணை முறையால் முடியும்.

7. நில உச்சவரம்பு திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிலம், வீணாகக் கிடக்கும் நிலம், பூமிதான இயக்கத்தின்மூலம் கிடைக் கும் நிலங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து நிலமில்லா வேளாண்மைக் கூலிகளையும், சிக்கனமற்ற நிலஉடைமைகளைக் கொண்ட குடியானவர்களையும் கூட்டுறவுமுறையில் குடியேற்றச் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது.

8. கூட்டுறவுப் பண்ணையானது முதலாளித்துவத்திற்கும் சோஷலிஸத்திற்கும் இடைப்பட்ட ஒரு சிறந்த முறையாக அமைந்துள்ளது. இப்பண்ணை முறையில் முதலாளித்துவத் தின் நன்மைகளும் சோஷலிஸத் தத்துவங்களும் இணைக்கப் பட்டுள்ளன.

9. கூட்டுறவுப் பண்ணைகளின் மனித சக்தியைச் சிக்கன மாகப் பயன்படுத்தி ஒரு நபர் விளைச்சலை அதிகரிக்க வசதி ஏற்படுகிறது. அரசு துறைகளாகிய வேளாண்மைத்துறை, கால்நடைத்துறை போன்ற துறைகளிலிருந்து சிறந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற முடிகிறது.

10. கூட்டுறவுப் பண்ணை முறையில் குடியானவர்களுக்கு வேளாண்மை நடவடிக்கைகள் இல்லாத காலங்களில் வருமா னம் கிடைக்கச் செய்ய, குடிசை, சிற்றளவுத் தொழில்களை அமைக்க வாய்ப்பும் வசதியும் கிட்டுகிறது. பேராசிரியர் இன்பீஃல்டு (Prof. Infield) அவர்கள் கூட்டுறவுப் பண்ணை முறையின் மூலம் மக்களின் சமூகப் பொருளாதார, கலாச்சார வாழ்க்கையில் மிகச் சிறப்பான மாற்றம் ரஷ்யா, மெக்ஸிகோ, பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுறவுப் பண்ணையின் குறைபாடுகள்

கூட்டுறவுப் பண்ணைகளின் மூலம் வேளாண்மை உற்பத்தி சீராகப் பெருக, சிறந்த வாய்ப்பு கிட்டுமென்று கருதியபோதிலும் இந்தியா போன்ற நாடுகளில் அதைப் பரந்த முறையில் விரிவாக்க, பல இடையூறுகள் இருந்து வருகின்றன. அவற்றை இனி ஆராயலாம்.

(1) கூட்டுறவுப் பண்ணைகளின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முடியும் என்னும் வாதம் நடைமுறைக்கு உகந்ததாகக் காணப்படவில்லை. வேளாண்மை உற்பத்தியை இயந்திரமயமாக்கிப் பெரிய நிலங்களைப் பயன்படுத்திச் சாகுபடி செய்தாலும், வேளாண்மைக் குடியானவர்களின் இன்னல்கள் குறைக்கப்படாவிட்டால் உற்பத்தி பெருகாது. அதிக அளவில் வேளாண்மைத் தொழில் இயந்திரமயமாக்கப்பட்ட ரஷ்யாவிலும் விவசாயிகளின் துன்பங்கள் குறைக்கப்பட்டதால் தான் உற்பத்தி பெருகியுள்ளது. எனவே, இந்திய வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க "ஆழ உழும்" முறை (intensive cultivation)யைப் பயன்படுத்திச் சாகுபடி செய்தால் ஜப்பான் நாட்டைப்போல் இந்தியாவிலும் ஓர் ஏக்கர் நில உற்பத்தியும், ஒரு நபர் உற்பத்தியும் திடமாக உயரும்.

(2) வேளாண்மைத் தொழில் புரிவோரின் பற்றுக்குறை இருக்கும் நாடுகளில் இயந்திர மயமாக்குதல் உற்பத்தியின் அளவைப் பெருக்க முடியும். ஆனால், இந்தியா போன்ற விவசாயிகளின் அளிப்பு அதிகமாக இருக்கும் நாடுகளில் வேளாண்மை உற்பத்தியை இயந்திரமயமாக்கினால் வேலையின்மை அதிகரிக்கும் என்பது உண்மையாகும். ஏனெனில், இந்தியாவில் ஏற்கனவே வேலையின்மையும், உருமறைந்த வேலையின்மையும் கிராமப் புறங்களில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன. எனவே, வேளாண்மை உற்பத்தியை இயந்திரமயமாக்கினால் 'எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவது போல்' துன்பங்களை அதிகரிக்கும்.

(3) கூட்டுறவுப் பண்ணை முறையை உட்புகுத்தினால் வேளாண்மையில் ஸ்தாபன மாற்றங்கள் ஏற்படவேண்டியிருக்கும். இதனால், தனியொருவர் வேளாண்மை முறை மாறிக் கூட்டுப்பண்ணை முறை (Collective Farming) ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் விவசாயிகளிடமே தோன்றுகிறது. எனவே, தொழில்நுட்ப முறையையும் வேளாண்மைச் சீரமைப்புகளையும்

மேற்கொள்ளாமல் வேளாண்மை அமைப்பு முறையை மாற்றுதல் உற்பத்தியைப் பாதிக்கும். ஜப்பான் நாட்டில் தோன்றிய வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு ஸ்தாபன மாற்றங்களால் ஏற்படவில்லை. அந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொழில் நுட்ப, சீரமைப்பு முறைகளால்தான் தோன்றியுள்ளது என்பது உலகறிந்த உண்மையாகும். ஆகையால், இந்தியாவும் ரஷ்யா, சைனு போன்ற நாடுகளின் அனுபவங்களைப் பின்பற்ருமல் ஜப்பான் நாட்டின் வேளாண்மை முறையை நம் நாட்டுக்குத் தகுந்த முறையில் பின்பற்றுதல் சாலச் சிறந்ததாகும். எனவேதான், பேராசிரியர் W. ஆர்தர் லூயிஸ் (W. A. Lewis) "பிற்பட்ட நாடுகளின் விரைவான வேளாண்மை வளர்ச்சியின் இரகசியம், பண்ணையின் அளவை மாற்றுவதைக் காட்டிலும் வேளாண்மை விஸ்தரிப்பு செய்தல், உரங்கள், புதிய விதைகள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவைகளில்தான் காணப்படுகிறது" என்று குறிப்பிடுகிருர். எனவே, வேளாண்மை உற்பத்தி முறையைச் சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

(4) கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்துவதில் முட்டுக்கட்டையாக விளங்குவது அறிவும் ஆற்றலும், திறமையும் கொண்ட நிர்வாகிகளின் பற்ருக்குறையாகும். கூட்டுறவுப் பண்ணைகளை நிர்வகிப்பதற்குத் தகுதியான, சேவைமனப்பாங்கு கொண்டவர்கள் இந்தியாவில் கிடைப்பது அரிதாய் உள்ளது. இதனுல், இப்பண்ணைகள் நஷ்டமின்றிச் செயல் படுவது கடினமாய் உள்ளது. மேலும், தொழில்களின் நிர்வாகத்தைப் போல் வேளாண்மை நிர்வாகம் திறமையான வகையில் செயல்பட இயலாது. ஏனெனில், வேளாண்மையில் மனிதன் ஆற்றும் பங்கைவிட இயற்கையின் பங்கு சிறப்பிடத்தைப் பெறுகிறது.

(5) கூட்டுறவுப் பண்ணைகளில் லாபம், கூலி ஆகியவைகளைப் பகிர்ந்தளிப்பதில் விவசாயிகளிடையே ஒற்றுமை காணப்படுவதில்லை. எந்தச் சிறப்பான அடிப்படையில் கூலியையும் லாபத்தையும் பகிர்ந்தளிப்பது என்பது சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. ஏனெனில், அரும்பாடு பட்டுத் திறமையுடன் உற்பத்தியைப் பெருக்குபவர்களுக்கும், அக்கரையில்லாமல் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் ஏறக்குறைய ஒரே அளவு கூலியும், லாபத்திலிருந்து ஒரு பங்கும் கொடுக்கப்படுவதால், பெரும்பாலான விவசாயிகளிடையே

சச்சரவு ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க வகை செய்யப்பட வேண்டும்.

(6) இந்திய விவசாயிகள் நிலத்தைத் தங்கள் உயிரெனக் கொண்டுள்ளனராதலால், அதைக்கூட்டுறவுப் பண்ணைகளுக்கு அளிக்க விரும்புவதில்லை. கல்லாமை, ஏழ்மை, பழைமை நோக்கு, பிற்பட்ட பழக்கங்கள் போன்ற காரணங்களால் விவசாயிகளின் நில வேட்கையைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் வெற்றியடைவதில்லை. அவ்வாறே நிலத்தைக் கூட்டுறவுப் பண்ணைகளுக்கு அளித்தாலும் விவசாயிகளின் ஊக்கமும், சுய முயற்சியும் குறைந்துவிடுகிறது. இதனாலும் உற்பத்தியின் அளவு பாதிக்கப்படும்.

(7) கூட்டுறவுப் பண்ணை முறையானது இந்திய விவசாய முறைக்கு ஒவ்வாதது. ஒரு சில நிபுணர்கள், கூட்டுறவுப் பண்ணை முறையின் மூலம் ரஷ்யா போன்ற நாடுகளிலுள்ள கூட்டுப் பண்ணை முறைதான் நாட்டில் புகுத்தப்படுகிறது என்று குறை கூறுகின்றனர்.

கூட்டுறவுப் பண்ணைகளுக்கு எதிரான சில உண்மையான வாதங்களிருந்த போதிலும் இந்திய வேளாண்மை உற்பத்திப் பிரச்சினையைத் தீர்க்க கூட்டுறவுப் பண்ணைகளை நாட்டில் ஏற்படுத்த அரசு முயன்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நடைமுறைப் பிரச்சினைகள்

கூட்டுறவுப் பண்ணைகளில் விவசாயிகளைச் சேர்ப்பதில் பிரச்சினை உள்ளது. விவசாயிகளைக் கட்டாயப் படுத்திச் சேர்க்க வைத்தால்தான் கூட்டுறவுப் பண்ணைகள் பெரிய அளவில் சிக்கனமாய்ச் செயல்பட முடியும். ஆனால், கட்டாயப் படுத்துதல் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டதாகும். அறிவுறுத்தி விவசாயிகளைச் சேர்ப்பதால் சிறந்த பலன் கிட்டுவதில்லை. கட்டாயப் படுத்தலும் சிறந்த கொள்கையாகா. எனவே, இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுதலே சிறந்தது.

கூட்டுறவுப் பண்ணைக்கு ஒரு பகுதி நிலத்தைக் கொடுத்து விட்டு மீதியைத் தன் சொந்த சாகுபடிக்காக ஒரு விவசாயி வைத்துக் கொள்ளலாமா என்பது சர்ச்சைக் குரியதாகவே உள்ளது. மேலும், கூட்டுறவுப் பண்ணைகளிலிருந்து விலக விரும்புவோருக்கு உரிமை கொடுக்கப்படா விட்டால், அநேக விவசாயிகள் இப்பண்ணைகளில் சேரமாட்டார்கள். அவ்வாறு

நினைத்த போது விலக உரிமை கொடுக்கப்பட்டால் பண்ணைகள் நிலையாக வளர்ச்சி பெற இயலாது. மேலும், நிலத்தின் அளவு, நடப்பு மூலதனம் போன்றவைகளும் குறையும். ஏராளமான விவசாயிகளின் குடும்பங்கள் கடன் தொல்லையால் துன்புற்று வருகின்றனர். இவர்கள் கூட்டுறவுப் பண்ணைகளில் சேர்ந்தால், கூட்டுறவுப் பண்ணைகள் இந்தக் கடனையும் தீர்க்க வேண்டியுள்ளது. ஆனால், இப்பண்ணைகளில் நிதி வசதியின்மையால் கடன்கள் திருப்பிக் கொடுக்கப்பட முடிவதில்லை. இதனால், பல இன்னல்கள் ஏற்படுகின்றன. எனவே, ஏழை விவசாயிகளின் துயர் துடைக்கச் செயல் முறைகளைக் கையாள வேண்டும்.

திட்ட காலக் கூட்டுறவுப் பண்ணை வளர்ச்சி

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கூட்டுறவுப் பண்ணைகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. முக்கியமாக, இரண்டாம் திட்ட காலத்தில் கூட்டுறவுப் பண்ணைகளின் வளர்ச்சிக்கான அடிப்படை ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும், பத்தாண்டு காலங்களில் கூட்டுறவுப்பண்ணை முறையின் அடிப்படையில் பெரும்பாலான நிலங்கள் சாகுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப் பட்டது. அதற்கான செயல் முறைகளையும் அரசு ஏற்படுத்தியது. 1960ல் கூட்டுறவுப் பண்ணையின் பணிக்குழு Working Group (Nijalingappa Group on Co-operative Farming) அமைக்கப்பட்டது. இந்தியாவில் கூட்டுறவுப் பண்ணை வெற்றி பெற சில முக்கியமான அடிப்படைப் பணிகளின் மூலம் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அக்குழு பரிந்துரைத்தது. எனவேதான், மூன்றும் திட்டஅறிக்கையிலும்கூட்டுறவுப் பண்ணைகளின் வளர்ச்சி வலியுறுத்தப்பட்டுள்ளது. "சமூதாய வளர்ச்சித் திட்டங்களின் வளர்ச்சியின் அடிப்படையில் மக்களின் தலைமையில் பரந்த இயக்கமாக, கூட்டுறவுப் பண்ணைகள் வளர்ச்சிடைய வேண்டும்" என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்த ஒரு தேசியக் கூட்டுறவுப் பண்ணை ஆலோசனைக் குழு (National Co-operative Farming Advisory Board) அமைக்கப்பட்டது. அதே போன்று சில மாநிலங்களிலும் அத்தகைய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்திற்கு ஒன்றாக பத்து மாவட்டங்களில் சில மாதிரி கூட்டுறவுப் பண்ணையின் பணிக்குழுவும் பரிந்துரைத்தது. ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவுப் பண்ணை இயக்கத்தில் கட்டாயப்படுத்தும் நிலை

விளக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது, கூட்டுறவுப் பண்ணைகளில் அக்கறையுடன் உழைக்க விரும்புவோரை மட்டும் சேர்க்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. தலத்தி வில்லா நிலக்கிழார் ஆகியவர்களை கூட்டுறவுப் பண்ணைச் சங்கங் களில் சேர்க்கலாகாது என்றும் அறிவுறுத்தப்பட்டது.

கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களில் சேரும் உறுப் பினர்கள் குறைந்தது ஐந்தாண்டு காலமாவது தங்கள் நிலங்களைத் திரும்பப் பெறுமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். முடிந்தவரையில் நிலம் ஒருங்கிணைக்கப் பட வேண்டும் என்று கருதப்பட்டது. சிறிய நிலவுடமையாளர்களை கூட்டுறவுப் பண்ணைகளில் சேர்ப்பதற்குத் தேவையான உதவி களை அரசு கொடுத்து வருகிறது. கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியுதவிகளையும் அரசு செய்து வருகிறது. ஜூன் 1960–ம் ஆண்டு இந்தியாவில் 5409ம் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் தமிழ் நாட்டில் மட்டும் 169 சங்கங்கள் இருந்தன.

மூன்ரும் திட்ட காலத்தில் சமுதாய வளர்ச்சி வட்டாரங் களில் ஒவ்வொன்றிலும் 10 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களைக் கொண்ட 318 மாதிரி பண்ணைத் திட்டங்கள் (Pilot Project) அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. 1965டிசம்பர் மாத முடிவில் மாதிரித்திட்டங்கள் அமுல் படுத்தப் பட்ட இடங்களில் 2485 சங்கங்கள் அமைக்கப்பட்டன, மற்ற இடங்களில் 2527 சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன.

மதிப்பீடு: கூட்டுறவுப் பண்ணைத் திட்டங்கள் இந்தியா வில் இன்னும் பூரண வளர்ச்சியைச் சிறப்பான முறையில் பெற வில்லை. பெரும்பாலான சங்கங்கள் அரசாங்கத்தின் முயற்சி யாலும், ஆதரவாலும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் தங்கள் சொந்த பங்குமுதல், சாதனங்கள், கருவிகள் போன்றவற்றைக் கொண்டு வளர்ச்சி பெற சக்தி யற்று உள்ளன. எனவே, இச்சங்கங்களின் செயல் முறைகளை ஆராய்ந்து மத்திய அரசுக்குப் பரிந்துரைக்க ஜூலை 1963ல் ஒரு வழி காட்டி குழு அமைக்கப்பட்டது. செப்டம்பர் 1965ல் அக்குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அக்குழு நான்காம் திட்டத்தில் கூட்டுறவுப் பண்ணைகளில் பெருக்கத்தைவிட ஒருங் கிணைப்பு முறைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது. கூட்டுறவுப் பண்ணைகளின் திட்டங்கள் மக்க ளால் மக்களுக்காக மக்களுடைய திட்டமாக மாற வேண்டியது இன்றியமையாததாகும். சங்கங்களில் பெரிய நிலக்கிழார்கள்

ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும். நிலச்சீர் திருத்தச் சட்டங்களிலிருந்து பாதுகாப்புப் பெற நலத்திலில்லா நிலக்கிழார்கள் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களை ஏற்படுத்தியுள்ளனர். இது சங்கங்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாய் இல்லை. சில இடங்களில் சக்தி குறைந்த சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அரசாங்கத்திடமிருந்தோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தோ தேவையான அளவு தொழில் நுட்பம், நிதிவசதி ஆகியவைகள் உரிய காலத்தில் கூட்டுறவுப் பண்ணைகளுக்குக் கிடைப்பதில்லை. எனவே, கூட்டுறவுப்பண்ணை இயக்கம் இந்தியாவில் தேவையான அளவு வேகமான வளர்ச்சியைப் பெறவில்லை.

முடிவுரை: இந்திய வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க, கூட்டுறவுப் பண்ணைகள் சிறந்த பங்கினைப் பெற்று வளர்ச்சி அடைந்தேயாகவேண்டும். ஆனால், அதற்கான முதல் நிலை வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். அதற்குச் சிறந்த கருவியாய் அமையக்கூடியது பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (Service Co-operatives) ஆகும். பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயிகளுக்குத் தேவையான நல்ல விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், தொழில் நுட்ப நிபுணர்கள், விற்பனை வசதிகள், கடன் உதவி போன்ற எல்லாவகை இன்றியமையாத உள்ளீடுகளை அளித்து, சிறந்த சேவை செய்ய வேண்டும். நவரூது மழை பெய்யும் பகுதிகளில் பணி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பெருமளவில் ஸ்தாபன மாற்றங்களை மேற்கொள்ளாமல் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டுமானால், பணி கூட்டுறவுச் சங்கங்களே தகுந்தவைகளாய் உள்ளன.

25. வேளாண்மை விளைபொருள் விற்பனை

(Agricultural Marketing)

வேளாண்மைத் துறையில் சிறந்த பயனைப் பெரும்வழிகளில் ஒன்று விவசாயிக்கு அவன் விளைபொருளுக்கு நியாயமான விலையைக் கிடைக்கச் செய்வதேயாகும். வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மட்டும் அரசு குடியானவனுக்கு உதவி புரிவது போதுமானதாகாது. விவசாயி தன் பொருள்களுக்கு நியாயமான விலைகளைப் பெறுவதற்காக அவசியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஒரு தரமான வேளாண்மை முறைக்கு விற்பனை, நிதி, கிட்டங்கி, போக்கு வரத்து போன்ற அநேக வசதிகள் தேவைப்படுகின்றன. இத்தகைய பணிகளில் திறமையும் வளர்ச்சியும் ஏற்பட்டால் வேளாண்மைப் பொருள்களின் உற்பத்திச் செலவு குறைய வாய்ப்பு ஏற்படும். இத்தகைய பணிகளில் மிகவும் முக்கியமானது விற்பனை வசதியாகும். இந்திய வேளாண்மைச் சீரமைப்பிற்கு இன்றியமையாததாக விளங்குவது வேளாண்மை விற்பனை முறையாகும். ஒரு சிறந்த வேளாண்மை விற்பனை முறை மூன்று முக்கிய பணிகளை மேற்கொள்கிறது. [1] (ஒன்று) போதுமான விற்பனைப் பொருள் எச்சத்தைப் (Marketable Surplus) பெருக்குதல். [2] (இரண்டு) உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே உள்ள விலை பேதங்களைக் குறைத்தல். [3] (மூன்று) பல்வேறு பிராந்தியங்களிலும், பருவ காலங்களிலும் ஏற்படும் விலை மாற்றத்தைக் குறைத்தல்.

விளைபொருள் விற்பனைப் பணிகள்

உபரி செய்பொருள் விற்பனை

உபரிசெய்பொருள்என்பது விவசாயி தன் குடும்பத் தேவைகளுக்கு வைத்துக்கொண்ட உணவுப் பொருள்கள் போக

எஞ்சிய சந்தைக்கு வரும் வேளாண்மைப் பொருள்களாகும். சில புதிய பயிர்களின் உற்பத்தி அதிகரிப்பால் விளையும் இடங்களிலிருந்து நேராகச்சந்தைக்கு வரும் வேளாண்மைப் பொருள்களும் விளைபொருள் விற்பனை உபரியாகும். தற்போதைய இந்தியப் பொருளாதார நிலையில் விளைபொருள் எச்சம் மிகவும் அவசியமானதாக உள்ளது. நகரங்களில் மக்கள் தொகை மிகுதியாலும், மக்களின் வருவாய் அதிகரிப்பதாலும் விற்பனை எச்சம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. மேலும், தொழில் துறைக்கு அதிகமான வேளாண்மை மூலப் பொருள்கள் தேவைப் படுகின்றன. விற்பனையெச்சம் அதிகரித்தால்தான் எந்திரம் போன்ற பொருள்களின் இறக்குமதிக்கு ஈடுசெய்வதற்காக அதிக அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெறமுடியும். கச்சாப் பருத்தி,எண்ணெய்வித்துக்கள், சணல் போன்றபொருள்களின் ஏற்றுமதியை அதிகரித்தால் இயந்திரம், மற்ற அடிப்படைப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியும். விற்பனையெச்சம் அதிகரித்தால்தான் விவசாயிகளின் சேமிப்பு அதிகரித்து முதல் சேகரிப்பு பெருகும். விவசாயிகளின் அதிகமான சேமிப்பினால் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் தேவை நாட்டில் அதிகரிக்கும்.

விலை பரவுதல் அல்லது அதிகரித்தல்
(Price-Spread)

விலை பரவுதல் என்பது நுகர்வோர் கொடுக்கும் விலைக்கும் வேளாண்மைப் பொருள் உற்பத்தியாளர் பெறும் விலைக்கும் இடையே உள்ள வித்தியாசமாகும். நுகர்வோர் அதிக விலை கொடுத்துப் பொருளை வாங்க நேரிடுகிறது. ஆனால், விவசாயி தன் பொருள்களுக்குக் குறைந்த விலையைத்தான் பெறமுடிகிறது. ஏனெனில், ஏராளமான நடுவர்கள் வேளாண்மை உற்பத்தி முறையினிடையே அமைந்து அதிக லாபத்தைப் பெறுகின்றனர். பொருளை உற்பத்தி செய்பவனுக்கு குறைந்த விலையே கிடைப்பதால் விவசாயிக்கு உற்பத்தியில் ஊக்கம் ஏற்படுவதில்லை. குறைந்த விலைகளால் அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்கின்ற ஊக்கம் மறைந்து விடுகிறது. அதிக விலைகளால் நுகர்ச்சி குறைந்து பொருள்களின் தேவையுங் குறைகிறது.

விலை பேதங்கள்
(Price Disparities)

திறமையான விற்பனை முறையின் முக்கியமான பணி பல்வேறு காலங்களிலும், இடங்களிலும் ஏற்படும் விலை பேதங்

களைக் கூடுமானவரை குறைத்தலாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வேளாண்மைப் பொருள்களின் விலைகள் ஒரே சீராக இருக்கவேண்டியது அவசியமாகும். அவ்வாறு சீராக இல்லாவிட்டால் விற்பனை முறை திறமையுடையதாக இல்லை என்பதைத்தான் புலப்படுத்துகிறது. பல்வேறு காலங்களில் ஏற்படும் விலை வித்தியாசங்களைக் குறைக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். அறுவடைக்குப் பிறகு உணவுப் பொருள்களின் விலைகள் மிகவும் குறைவதும், அறுவடைக்குச் சற்று முன்பு வேளாண்மைப் பொருள்களின் விலைகள் மிகவும் அதிகமாக இருப்பதும் சிறந்ததல்ல. எனவே, ஒரு சிறந்த விற்பனை முறையினால் இம்மூன்று பிரச்சினைகளையும் தீர்க்க இயலும்.

விளைபொருள் விற்பனைப் பிரச்சினைகள்

இன்றைய விளைபொருள் விற்பனை முறையில் ஏராளமான குறைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்திய விளைபொருள் விற்பனை முறை திறமை குன்றியிருப்பதற்கான காரணங்கள் பலவாகும். இம்முறையிலுள்ள குறைகளைக் கீழே ஆராயலாம்.

1. **சிறந்த அமைப்பின்மை:** இந்திய வேளாண்மையில் ஏராளமான விவசாயிகள் சிற்றளவு பண்ணைகளையே வைத்துள்ளனர். விவசாயிகளுக்குள் சிறந்த கூட்டமைப்பு இல்லை. ஆனால், சணல், பருத்தி, எண்ணெய் வித்துக்கள் போன்ற வர்த்தக வேளாண்மைப் பொருள்களை வாங்குபவர்கள் நன்றாய் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். எனவே, சிறிய விவசாயிகள் நடுவர்களால் சுரண்டப்படுகின்றனர்.

2. **விளைபொருள்களைக் கிராமங்களில் விற்றல்:** அனைத்திந்தியக் கிராமக் கடன் கணக்கீடு மொத்த விற்பனையில் 65 சதவீதம் கிராமங்களிலேயே விற்கப்படுகிறது என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளது. விவசாயிகள் அரசுக்கு நில வரிகள், கடன் தொகை, வட்டி போன்றவைகளைக் கொடுக்கவேண்டியிருப்பதாலும், கிட்டங்கி வசதிகளின்மையாலும், போக்குவரத்து, தொடர்பு வசதிக் குறைவாலும் கிராமங்களிலேயே விளைபொருள்களை விற்றுவிட வேண்டிய இக்கட்டான நிலை இருந்துவருகிறது. கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் கருத்துப்படி "இந்திய விவசாயி தன்னுடைய பொருள்களைத் தகாத இடத்தில், தகாத காலத்தில், தகாத விற்பனை முறைகளுடன் விற்க வேண்டிய துயர நிலை இருந்துவருகிறது."

3. **விளைபொருள்களை வர்த்தகர்களுக்கு விற்றல்:** பெரும்பாலான விவசாயிகள் விளைபொருள்களைச் சேர்த்து வைத்து நல்ல விலை கிடைக்கும்போது விற்காமல் அறுவடை முடிந்த உடன் தங்களுக்குக் கடன் அளித்த அல்லது கடன் பெற உதவியாய் இருந்த தரகர்கள் (Commission Agents), வர்த்தகர்கள் (Traders) ஆகியவர்களுக்குக் குறைந்த விலைக்கு விற்று விடுகின்றனர். அனைத்திந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் அறிக்கையில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த மொத்த விளைபொருளில் மூன்றில் இரண்டு பகுதிகளை வர்த்தகர்களுக்கும் தரகர்களுக்குமே விற்றனர் என்றும், மிகக் குறைந்த அளவே அரசுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நுகர்வோர்களுக்கும் விற்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்நிலைக்கு அடிப்படைக் காரணங்களாவன: விவசாயியின் அறியாமை, வர்த்தகருக்கும் உற்பத்தி செய்பவருக்குமிடையே உள்ள தொடர்பு, லேவாதேவித் தொழில் நடத்தும் வர்த்தகருக்கே விளைபொருள்களை விற்கவேண்டும் என்ற நிபந்தனையோடு கடன் கொடுத்தல் போன்றவைகளாகும். இதனால் உற்பத்தியாளர்களுக்குப் பாதகமான விலைதான் கிடைக்கிறது. முதற் குழுவிற்குப்பின் அமைக்கப்பட்ட கிராமக் கடன் ஆய்வுக் குழுக்களும் தங்கள் அறிக்கைகளில் விவசாயிகளின் இந்நிலையில் இன்னும் சீரான மாற்றங்கள் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளன.

4. **ஏராளமான நடுவர்கள்:** விவசாயிகளில் பெரும்பாலோர் தங்கள் கிராமங்களிலேயே உணவு தானியங்களை விற்று விடுவதால், அப்பொருள்களை வாங்க ஏராளமான நடுவர்கள் தோன்றுகின்றனர். இதனால், உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையே ஏராளமான நடுவர்கள் தோன்றி மேற்கூறிய இருவர்களைச் சுரண்டுகின்றனர். உற்பத்தியாளருக்குத் தன் பொருளுக்குக் குறைந்த விலை தான் கிடைக்கிறது. ஆனால், நுகர்வோர்கள் அதிக விலை கொடுத்துப் பொருள்களை வாங்கவேண்டிய நிலை உள்ளது. மூன்றாம் திட்ட மத்திய காலத்திலிருந்தே அரசு குறைந்தபட்ச விலைகளை நிர்ணயித்துத் தன் கொள்முதல் கொள்கையின் (Policy of Procurement) மூலம் பண்ணைப் பொருள்களின் விலைகளை ஆதரித்து வருகிறது. சில சமயங்களில் கொள்முதல் விலையும் சந்தை விலையைவிட அதிகமாகிவிடுகிறது. இதனால், நுகர்வோர்கள் அதிக விலை கொடுத்துப் பொருள்களை வாங்க வேண்டியுள்ளது. நெல் போன்ற தானியங்களுக்கு நுகர்வோர்கள் கொடுக்கும் விலையில் பாதிகூட விவசாயிக்குச் சேருவதில்லை. எனவே, மிதமிஞ்சிய நடுவர்களை வேளாண்மையிலி

ருந்து வெளியேற்றினாலன்றி விவசாயிக்கு அதிக விலை கிடைக்க வாய்ப்பில்லை.

5. **ஒழுங்கில்லாச் சந்தைகள் :** கிராமத்திலுள்ள லேவாதேவி தொழில் செய்யும் வர்த்தகர்களின் பிடிகளிலிருந்து தப்பி நகரங்களுக்குத் தங்கள் தானியங்களைக் கொண்டுவரும் விவசாயிகள் நகரங்களில்பல வழிகளில்ஏமாற்றப்படுகின்றனர். ஒழுங்கில்லாச் சந்தைகளில் சந்தைக் கட்டணங்கள் என்ற பெயரில் விவசாயிகளிடமிருந்து அதிகப் பணம் வசூலிக்கப்படுகிறது. இச்சந்தைகளில் ஏராளமான துர்நடவடிக்கைகள் இருந்து வருகின்றன. உதாரணமாக, விவசாயிகளிடமிருந்து, விளைபொருள் மாதிரிகள் (Samples) என்று அதிக விளைபொருள்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சந்தைகளில் பொருள்களை வாங்குபவர்களுடன் தரகு நடுவர்கள் இரகசியமாகத் தொடர்பு கொண்டு விவசாயிகளை ஏமாற்றுகின்றனர். இச்சந்தைகளில் நிலையான எடை அளவை முறைகள் பின்பற்றப்படுவதில்லை. விளைபொருள்களை எடை போடவோ அல்லது அளக்கவோ தனி நடுவர்கள் இல்லை. எனவே, சந்தைகளில் பொருள்களை எடை போடுவதிலும் அளப்பதிலும் பல சூழ்ச்சிகள் கையாளப்படுகின்றன.

6. **பொருள்களைத் தரப்படுத்தாமை :** இந்திய வேளாண்மை விற்பனை முறையில் காணப்படும் மற்றொரு பெரும் குறை பொருள்கள் தரம் பிரிக்கப்படாமையேயாகும். உயர்ந்த தரமுடைய பொருள்களைக் கீழ்த்தரமுடையபொருள்களிலிருந்து வேறுபடுத்த இயலவில்லை. பொருள்கள் தரம்வாரியாகப் பிரிக்கப்பட்டு தரப்படுத்தப்பட்டால்தான் விவசாயி நியாயமான விலையை உறுதியாகப் பெறமுடியும். இந்தியாவில் அரிசி, கோதுமை போன்ற இன்றியமையாத பொருள்களுக்கும் கூட பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையான தரங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஜெர்மனி, இத்தாலி போன்ற வளர்ச்சியுற்ற நாடுகளில் அரசு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பொருள்களுக்கு உயர்ந்த தரம் இருக்கின்றதா என்று பெருமளவில் கண்காணித்து வருகிறது. இந்தியாவில் சமீபகாலம் வரைக்கும் பொருள்களின் சிறந்த தரங்களை நிலைநாட்ட முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இந்திய வேளாண்மைப் பொருள்கள் தரம் பிரிக்கப்படாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் உலக சந்தைகளில் இந்திய வேளாண்மைப் பொருள்களின் 'நற்பெயர் குன்றியுள்ளது.

7. விளைபொருள் கலப்படமாக்கப்படல்: இந்தியாவில் பருத்தி, புளி, நிலக்கடலை போன்ற ஏராளமான பொருள்களில் வேண்டுமென்றே கலப்படம் செய்யப்படுகிறது. கலப்படம் செய்வதால் எடையும் அளவும் அதிகமாகி விடுகிறது. இச் செயலுக்கு விவசாயிகளும், நடுவர்களுமே காரணமாவர். கலப்படம் செய்வதால் பொருள்களின் தரம் குறைந்து விலை குறைவதோடு விற்பனை செய்பவர்களின் நற்பெயரும் கெடுகிறது. முக்கியமாக, வெளிநாட்டு வாணிபத்தில் இது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

8. சந்தை நிலவரம் தெரியாமை: வேளாண்மை விற்பனை முறை மிகச் சிறப்பாக, சீரான முறையில் நடைபெற விவசாயிகளுக்கு விலை மாற்றங்களைப் பற்றிய துல்லியமான விவரங்கள் கிடைக்கப்படவேண்டும். விலை மாற்றங்களைப் பற்றிய தெளிவான விவரங்கள் தெரிந்தால்தான், விவசாயி அதிக விலை கிடைக்கும் சந்தைகளில் பொருள்களை விற்க இயலும். ஆனால், இந்தியாவில் விவசாயிகளுக்கு விலைகளைப் பற்றிய நம்பத் தகுந்த துல்லியமான விவரங்கள் கிடைப்பதில்லை. விலைகளின் பட்டியல்கள்கிடைத்தபோதிலும் அவ்விலைகள் எந்தத்தரமுடைய பொருள்களின் விலைகள் என்பது ஐயப்பாட்டிற்குஉரியதாகவே உள்ளது. ஏராளமான வர்த்தகப் பெயர்கள் (Trade names) இந்தியா முழுவதும் இருப்பதால் பொருள்களை வாங்குபவர்கள் குழப்பமடைகின்றனர். மேலும், அரசாங்க நிறுவனங்களாலும் செய்தித்தாள்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்தப்படும் விலைப் பட்டியல்கள் எப்போதும் நம்பத்தகுந்ததாக இல்லை. சந்தை விவரங்கள் துல்லியமாக இருந்தாலொழிய, பொருளை விற்பவர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் பயனுள்ளதாய் இருக்காது.

9. கிட்டங்கி வசதியின்மை: இந்தியாவில் கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் போதுமான கிட்டங்கி வசதிகள் இல்லை. தேவையான அளவு சிறந்த கிட்டங்கி வசதிகள் இல்லாத காரணத்தால் அறுவடை முடிந்த உடனே குடியானவர்கள் தங்கள் விளைபொருள்களைக் கட்டாயமாக விற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால், சந்தையில் தெவிட்டு நிலை (Glut) ஏற்படுகிறது. இதனால்தான், அறுவடைக்கு மேற்பட்ட காலத்தில் வேளாண்மைப் பொருள்களில் மந்தம் ஏற்படுகிறது.

10. வளர்ச்சியுறாப் போக்குவரத்து வசதி: இந்தியாவில் தற்போது இருந்துவரும் போக்குவரத்து வசதிகள் போது

மானவையாக இல்லை. ரயில்வேக்களின் சரக்கு சுமைக்கூலிக் கொள்கை வேளாண்மைப் பொருள் விற்பனைக்கு உகந்ததாய் இருப்பதாகத் தெரியவில்லை. சாலைப் போக்குவரத்து வசதியும் திருப்திகரமானதாய் இல்லை. கிராமங்களிலிருந்து சந்தை இருக்கும் நகரங்களையும், கிராமங்களுக்கு அருகாமையிலுள்ள ரயில்வே நிலையங்களையும் இணைக்கும் சாலைகள் முழுமையாக அமைக்கப்படவில்லை. நகரங்களிலிருக்கும் சாலைகள் சீரான நிலையில் வைக்கப்பட்டிருக்கும்போது மாட்டு வண்டிகள் பயன்படுத்தும் கிராமச் சாலைகள் கவனிக்கப்படுவதில்லை. இதனால், மழைக் காலங்களில் சாலைகளைப் பயன்படுத்த இயல்வதில்லை. தற்போது இருந்துவரும் உள்நாட்டு நீர் போக்குவரத்து, கடற்கரை கப்பல் போக்குவரத்து ஆகிய முறைகளும் விளைபொருள் விற்பனைக்குத் துணைபுரிபவைகளாக இல்லை. எனவே, விவசாயிகள் கிராமங்களிலேயே கிராம வணிகர்களுக்கோ அல்லது நடுவர்களுக்கோ கட்டாயமாய் விளைபொருள்களை விற்கவேண்டிய நிலை இருந்து வருகிறது.

11. நிதி வசதியின்மை. விவசாயிகளுக்குக் கடன் வசதியளிக்க, தற்பொழுது இருந்துவரும் நிறுவன அமைப்புகள் திருப்திகரமானவையாயில்லை. அதனால், விவசாயிகள் கிராமத்திலுள்ள லேவாதேவிக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்குகின்றனர். மிகக் குறுகிய காலத்தில்வட்டியும்முதலுமாகச் சேர்ந்து கடன் தொகை அதிகமாகி விடுகிறது. இதனால், விவசாயி விளைபொருள்களை லேவாதேவிக்காரர்களிடமே கட்டாயமாக விற்கவேண்டிய இக்கட்டான நிலை ஏற்படுகிறது. மேற்கொண்டு வேளாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கடன் தேவைப்படுவதால், மீண்டும் லேவாதேவிக்காரர்களிடமே விவசாயிகள் கடன் வாங்குகின்றனர். இதனால், கிராமக் கடன் அதிகரிக்கின்றது. மீண்டும் கிராமக் கடனைத் தீர்ப்பதற்காக விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை லேவாதேவிக்காரர்களிடமோ அல்லது தரகர்களிடமோ விற்றுவிடுகின்றனர். இதனால் நச்சு வளையம் (vicious circle) தோன்றுகிறது. வணிக வங்கிகள் சமீப காலம் வரை கிராமக் கடன் வசதிகளில் அக்கறை செலுத்தவில்லை. கூட்டுறவுக் கடன் நிறுவனங்களும் வணிக வங்கிகளும் விவசாயிகளுக்குத் தேவையான நிதி வசதிகளை அளித்தாலன்றி விவசாயிகளின் துயரங்கள் நீங்கி வருமானம்அதிகரிக்க வாய்ப்பில்லை. வேளாண்மைத் துறைக்கு முதலிடம் அளித்து நிதி வசதி அளிப்பதற்காகவே முதலில் வங்கிகளின் மேல் சமூகக் கட்டுப்பாடும் பிறகு நாட்டுடைமையும் அரசு மேற்கொண்டுள்ளது.

தீர்வுகள்: இந்திய வேளாண்மை சீரான வளர்ச்சியைப் பெற விவசாயி தன் பொருள்களுக்கு நேர்மையான விலையைப் பெறவேண்டும். அதற்காக வேளாண்மை விற்பனை முறையைச் சீரமைக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந்திய வேளாண்மை விற்பனை முறையைச் சீரமைக்க கீழ்க்கண்ட ஆலோசனைகள் முக்கியமானவைகளாகும்.

1. சந்தைக் கட்டணங்களை ஒழுங்கு படுத்துதல்

தற்போது விளைபொருள்களை விற்பனை செய்பவர்கள் ஏராளமான நியாயமற்ற கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. இத்தகைய கட்டணங்களின் மூலம் விவசாயி களைச் சுரண்டுவதை உடனடியாக நிறுத்தப்பட எல்லா இடங் களிலும் வகை செய்யப்படவேண்டும். சந்தைக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுப் பொறுப்பான அதிகாரிகளால்ஒழுங்குபடுத்தப் படவேண்டும். விவசாயிகள், வர்த்தகர்கள், ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அங்காடிக் குழுக்கள்அமைக்கப்பட்டு சந்தைகள்கட்டுப்படுத்தப் படவேண்டும். அநேக மாநிலங்களில் முக்கியமான விற்பனை இடங்களில் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகள் (Regulated Markets) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச் சந்தைகளில் விற்பனை யாளர்கள் கொடுக்க வேண்டிய கட்டணங்கள் குறிக்கப்பட்டுள் ளன. ஆனால், இத்தகைய சந்தைகள் மிகக் குறைந்த அளவிலும் வர்த்தகப் பயிர்களுக்காக மட்டுமே அமைந்துள்ளன. எனவே, கிராமங்களிலும், நகரங்களிலும் ஏராளமான சீரமைக்கப்பட்ட சந்தைகளை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். 1950–51-ல் சீரமைக்கப்பட்ட சந்தைகளின் எண்ணிக்கை 265–ஆக இருந்தது டிசம்பர், 1964-ல் 1,000 மாக அதிகரித்தது.

2. நிலையான நிறுவை அளவு முறை

இந்தியா முழுவதும் ஓரேவகையான சீரமைக்கப்பட்டஎடை அளவு முறைகளைப் பின்பற்ற வழிவகைகளைக் கையாளவேண் டும். சந்தைகளில் கட்டாயமாக, சரியான எடை அளவு முறை களைச் செயல்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். நிலைப்படுத்தப்பட்ட சீரான எடை அளவு முறையின் மூலம் விவசாயி சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாக்க முடியும்.

3 விளைபொருள்களைத் தரம் பிரித்தல்

சீரமைக்கப்பட்ட சந்தைகளில்தரம் பிரிக்கப்படாத பொருள் கள் விற்பனை செய்யப்பட இயலாதாகையால், ஒவ்வொரு

பொருளையும் தரம் வாரியாகப் பிரித்துப் பெயரிட்டும் வணிகர் குறியையும் (Trade Mark) பொருள்களின்மேல் இடுவதும் அவசியமாகும். இதன் மூலம் விவசாயிகள் தங்கள் பொருள் களுக்கு நல்ல விலையைப் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. சில வேளாண்மைப் பொருள்களின் தரத்தை அறிந்து ஒரு நிலையான தர முறையை ஏற்படுத்த 1937-ல் வேளாண்மை உற்பத்திச் (தரம், விற்பனை) சட்டம் நிறைவேற்றப்பட்டது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட உயர்ந்த தரமுடைய பொருள் களின் மேல் "அக்மார்க்" (Agmark) முத்திரையிடப்படுகிறது. மத்திய அரசு வேளாண்மைப் பொருள் விற்பனை ஆலோசகர் (Agricultural Marketing Adviser) வர்த்தகர்களுக்கு அவர்களின் பொருள்களின் தரத்தின் அடிப்படையில் நற்சான்றிதழ்கள் அளிக்கும் பணியை மேற்கொண்டுள்ளார். மைய வேளாண் மைப் பொருள் விற்பனைத் துறை(Central Agricultural Marketing Department) முக்கியமான வேளாண்மைப் பொருள்களுக்குத் தகுந்த தர அளவு கோல்களைத் தயார் செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. தரப்படுத்தப்பட்ட வேளாண்மைப் பொருள்களுக்கு அயல்நாடுகளில் நல்ல தேவை இருக்கிறது.

4. சீரான கிட்டங்கி வசதிகள்

நாடு முழுவதும் ஏராளமான நல்ல வசதிகள் கொண்ட கிட்டங்கிகளை ஏற்படுத்தினால்தான், இந்தியாவில் விவசாயப் பொருள் விற்பனையைச் சீரமைக்க முடியும். கிட்டங்கி வசதிகள் சீரான முறையில் அமைக்கப்பட்டால் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களைக் கிட்டங்கிகளில் சேர்த்து வைத்துச் சிறிது காலம் கழித்து விற்பனை செய்ய இயலும். இதனால், அறுவடை காலத்திற்குப் பின்பு ஏற்படும் வேளாண்மைப் பொருள்களின் மந்தத்தைத் தடுக்கமுடியும். மேலும், கிட்டங்கிகளில் வைக்கப் பட்ட தானியங்களின்பேரில் கடன் வசதி பெறவும் வாய்ப்பு ஏற் படுகிறது. தற்போது இந்தியாவில் போதுமான கிட்டங்கி வசதிகள் இன்மையால் இந்திய உணவு கார்ப்பொரேஷன் தன் உணவு தானிய நடவடிக்கைகளைச் சீராகப் பெருக்கமுடியவில்லை.

5. சந்தை நிலவரங்களை அறிவித்தல்

சந்தையில் நிலவும் விலைகள், பொருள்களின் தரம் போன் றவைகளைச் சீரான முறையில் விவசாயிகளுக்கு அவ்வப்போது அறிவிக்க வேண்டியது இன்றியமையாததாகும். இதனால், விவ சாயிகளின் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு

ஏற்படுகிறது. இதற்குச் செய்தித்தாள், ரேடியோ போன்றவைகள் பெரும் துணை புரிய முடியும். தற்போது அனைத்திந்திய ரேடியோ நிகழ்ச்சிகளில் முறையாக அவ்வப்போது ஆங்கிலத்திலும், பிராந்திய மொழிகளிலும் சந்தை நிலவரமானது ஒலி பரப்பப்படுகின்றது.

6. போக்குவரத்து வசதிகளைச் சீரமைத்தல்

இந்திய வேளாண்மைப் பொருள் விற்பனை முறையைச் சீரமைக்க, போக்கு வரத்து வசதிகள் சீரமைப்பு மிகவும் இன்றியமையாததாகும். போக்கு வரத்து வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது முக்கிய நெடுஞ்சாலைகளுக்கும் கிராமங்களுக்கும் நல்ல தொடர்பு ஏற்படும் வகையில் சிறந்த சாலைகளை அமைப்பதற்கு முதலிடம் அளிக்க வேண்டும். ரயில்வே சுமை கட்டணங்களை மாற்றி அமைப்பதால் வேளாண்மைப் பொருள்களைக் கொண்டு செல்லும்போது ஏற்படும் பாதக விளைவுகளை நீக்குவதற்காக, ரயில்வே நிர்வாக அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். நாட்டிலிருக்கும் வர்த்தக நிலைமைகள், பலவகைப் பொருள்களை ரயில்வேக்களின் மூலம் கொண்டு போதல் போன்றவைகளைப் பற்றிய ஆய்வை விற்பனை அலுவலர்கள் மேற்கொண்டு அதன்படி ரயில்வே சுமைக் கட்டணங்களை ஒழுங்கு படுத்த ரயில்வே அதிகாரிகளை வலியுறுத்த வேண்டும்.

7. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

வேளாண்மைப் பொருள் விற்பனை முறையைச் சீரமைக்க உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை அமைப்பது மிகச் சிறந்ததாகும். உண்மையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வளர்ச்சிக்குச் செயல் முறைகளை மேற்கொண்டு அவற்றின் வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு வழிகாட்டி வருகின்றன.

8. யூக வாணிகத்தைக் கட்டுப்படுத்துதல்

வேளாண்மைப் பொருள்களின் விலைகளில் ஏற்படும் யூக வாணிக விலைமாற்றங்களைக்கட்டுப்படுத்த மத்திய அரசு 1952-ல் முன்னேக்கிய அங்காடி ஒழுங்கு படுத்தும் சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. அதன்படி 1953-ல் முன்னேக்கிய அங்காடிகள் குழு (Forward Markets Commission) வை மத்திய அர அமைத்தது. தேஜி-மண்டி (Taji–mandi), பட்லா (Butla)

போன்ற யூக வாணிக நடவடிக்கைகளை அக்குழு கட்டுப்படுத்து கிறது. இக்குழு ஏராளமான பொருள்களின் சந்தை நிலவரத்தை ஆராய்ந்து அதன்படி பஞ்சு, எண்ணெய் வித்துக்கள் போன்ற பொருள்களின் முன்னோக்கு சந்தைகளை (Forward Markets) ஏற்படுத்தியுள்ளது.

9. விலை மாற்றத்தைத் தடுத்தல்

காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் பொருள்களின் விலைகள் மாறுவதைத் தடுப்பதற்காக உணவு தானியங்களை விநியோகிக்கும் ஒற்றை மாநில மண்டல முறையை அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. தேசிய உணவுக் கொள்கையின்படி பற்றுக்குறை மாநிலங்களில் சிறிதளவு குறைந்த விலைகளும், எச்ச மாநிலங்களில் சிறிது அதிகமான விலைகளும் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய கொள்கை மூலமாகவும், எச்ச உணவு தானியங்களைச் சேர்த்து வைக்கும் நடவடிக்கைகளாலும் கால, இட, விலை மாற்றங்களைக் குறைக்க அரசு முயன்று வருகிறது. விலை பரவுவதைத் தடுக்க அரசு தகுந்த விலைக்கொள்கைகளை ஏற்படுத்தி வருகிறது. பேராசிரியர் M.L. டன்ட்வாலா (M.L. Dantwala) அவர்களைத் தலைவராகக்கொண்ட வேளாண்மைப் பொருள் விலைகள் குழு குறைந்தபட்ச விலைகளையும் சிறிது அதிகமாக இருக்கும் கொள் முதல் விலைகளையும் தீர்மானித்துள்ளது. இந்திய உணவுக் கார்ப்பொரேஷன், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவை கள் மூலமாகஅரசு தனக்கு வேண்டியதில் 25 சதவீதம் வாங்கிக் கொள்கிறது. நியாய விலைக் கடைகள் மூலமாக நுகர்வோர் கொடுக்கவேண்டிய விலைகளையும் நிலையாகக் குறிக்க முடிகிறது. இம்முறைகள் மூலமாய் விலை பரவுவதை (Price-spread)த் தடுக்க முடிகிறது.

10. விற்பனை எச்சம்
(Marketable Surplus)

உணவு தானிய விற்பனை செய்யத்தக்க எச்சத்தை அதிக மான அளவில் சேகரிப்பதற்காக மத்திய அரசு இந்திய உணவுக் கார்ப்பொரேஷனை ஏற்படுத்தியுள்ளது. இக் கார்ப் பொரேஷனின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று அதிகமான அளவு விற்பனை செய்யத்தக்க உணவு தானிய எச்சத்தைப் பல முறைகளில் சேகரித்து வைத்தலாகும். உணவு தானிய விற் பனை எச்சத்தில் 15 முதல் 25 சதவீதம் வரைக்கும் அரசு சேகரிக்க வேண்டும் என்று வேளாண்மைப் பொருள்கள்

விலைகள் குழு பரிந்துரைத்திருப்பதால், நாட்டில் உணவுக் கார்ப்பொரேஷனின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. மேலும், பல்வேறு மாநில அரசுகள் முற்றுரிமைக் கொள்முதல் கொள்கையைப் (Monopoly Procurement policy) பின் பற்றி வருகின்றன. இதனால், உற்பத்தியாளருக்கு நியாயமான விலைகள் உறுதியளிக்கப்பட்டு நடுவர்கள், வர்த்தகர்கள் முழு வதுமாக வெளியேற்றப் படுகின்றனர். இத் திட்டத்தின்படி கூட்டுறவு சங்கங்களின் மூலமாக, தானியங்கள் வாங்கப்பட்டுச் சேகரித்து வைக்கப்பட்டு விற்கப் படுகின்றன. இதன் மூலம் கூட்டுறவு இயக்கம் வலுவடைந்து வளர்ச்சி பெற வகை செய் யப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்களும் விளைபொருள் விற்பனையும்

கிராமக்கடன் கணக்கீட்டுக் குழு கூட்டுறவு கடன் முறையைக் கூட்டுறவு விற்பனை முறையோடு இணைக்குமாறு ஆலோசனை கூறியது. இதனால், திட்ட காலத்தில் ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டத்தில் கூட்டுறவு விற்பனை முறை வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. திட்ட கால விளைபொருள் விற் பனை முறைஅனைத்திந்தியக்கிராமக்கடன் கணக்கீட்டுக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முக்கியமாக அமைந்திருந்தது. இரண்டாம் திட்ட காலத்திலிருந்து புதிய விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாநில அரசுகள் பங்கு பெற்று ஏற் கெனவே இருந்த சங்கங்களைச் சீரமைத்து உதவி புரிந்தது. 1965–ம் ஆண்டின் இறுதியில் நாட்டில் 2,231 முதல் நிலை விற்பனை சங்கங்கள் இருந்தன. இவைகள் போக திட்டத்திற்கு உட்படாமல் 900 விற்பனைச் சங்கங்கள் தோன்றின. 1955–56-ல் கூட்டுறவு விற்பனை சங்கங்களால் கையாளப்பட்ட வேளாண் மைப் பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 53 கோடியாக இருந் தது. 1960-61-ல் ரூ. 174 கோடியாகவும், 1964–65-ல் ரூ. 301 கோடியாகவும் அதிகரித்தது. சில மாநிலங்களில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உணவு தானியங்களைக் கொள் முதல் செய்யும் பணிகளையும் மேற் கொண்டுள்ளன. 1964–65-ல் கூட் டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ. 100 கோடி மதிப்புள்ள உணவு தானியங்களைக் கொள் முதல் செய்துள்ளன.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தங்களுக்கு வேண்டிய நிதியை கூட்டுறவு நிதி நிறுவனங்களிலிருந்து பெறுகின்றன. மேலும், இந்திய ஸ்டேட் வங்கிகளிடமிருந்தும் அவைகள் நிதி வசதியைப் பெறுகின்றன, இந்திய ரிசர்வ் வங்கியின் அதிக்

கையில் அநேக விற்பனைச் சங்கங்களின் பணிகள் திருப்திகர மானதாக இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அநேக விற்பனைச் சங்கங்கள் சக்தியற்ற முறையில் பணிபுரிந்து வருகின் றன. எனவே, கூட்டுறவு விற்பனை முறை அமைப்பை ஒழுங்கு படுத்திப் பல முள்ளதாக்க, சக்தியற்ற சங்கங்களைப் பலமுள்ள சங்கங்களோடு ஒருங்கிணைப்பது நல்லது என்று ரிசர்வ் வங்கி தன் அறிக்கையில், ஆலோசனை கூறியுள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உணவு தானியங்களின் அடமானங்களின் பேரில் கடன் கொடுத்தல், உணவு தானியங்களை விற்பனை செய்தல், உணவு தானியங்களைப் பங்கிடுதல் போன்ற செயல் களைப் புரிவதற்காக ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இச் சங்கங் களின் செயல் முறைகள் ஊக்கமளிப்பனவாய் இல்லை. கூட்டுறவு விற்பனை நடவடிக்கைகளைக் கூட்டுறவுக் கடன் நடவடிக்கை களுடன் இணைக்கப்பட்ட முறையும் கூட திருப்திகரமாய் முன் னேற்ற மடையவில்லை. எனவே, நான்காம் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் முன்பு தற் போதைய கூட்டுறவு விற்பனை முறையில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும். நான்காம் திட்ட காலத்தில் கடன் வசதியை விற்பனை முறை யோடு இணைக்கும் திட்டங்கள் சீரான வேளாண்மை வளர்ச்சி காணப்படும் பகுதிகளில் தீவிரமாக மேற்கொள்ளப் பட வேண்டும். இதன் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நடவடிக்கைகளை வேளாண்மை வளர்ச்சிக்குப் பயனுள்ளவை களாக இருக்கச் செய்ய முடியும்.

26. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்
(Community Development Projects)

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாக அமைவது நாட்டு மக்களது முன்னேற வேண்டுமென்கிற உள்ளக் கிளர்ச்சியேஆகும். அதிலும், முக்கியமாக, கிராமப் புறங்களில் வாழும் மக்களின் வளர்ச்சி நோக்கங்களும், பொருளாதார முன்னேற்றச் சிந்தனைகளும் நாட்டின் வளர்ச்சிக்கு ஊக்கம் ஏற்படுத்துபவைகளாகும். மக்கள் தங்களது பொருளாதார, சமூக, கலாச்சார கருத்துக்களைச் சீரமைத்துச் சிறப்பான முன்னேற்றத்தை அடையவேண்டும் என்ற உள்ளக் கிடக்கையைப் பெருவிட்டால் நாடு போதுமான அளவு விரைவான வளர்ச்சியை அடைய இயலாது. அநேக நூற்றுண்டுகளாக, கிராமப் பகுதிகளிலுள்ள இந்திய மக்கள் வறுமை, பிணி, அறியாமை, பசி போன்ற கொடுமைகளைத் தாங்கி வந்துள்ளனர். உத்தமர் காந்தியும், ரவீந்திரநாத் தாகூர், விநோபா பாவே போன்றவர்களும் கிராம சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்ய பெரிதும் முயன்றனர். ஆனால், அம்முயற்சிகள் பரந்த முறையிலே மேற்கொள்ளப்படாததால் சிறந்த பலனற்றுப் போயின. நாடு சுதந்திரம் அடைந்த பின்பு கிராமச் சீர்திருத்தங்களின் மூலம் அவற்றைச் செழிப்புள்ளவைகளாக்க வேண்டும் என்ற எண்ணம் நாட்டில் தோன்றியது.

சமுதாய வளர்ச்சிப் பணிகளின் விளக்கம்

சமுதாய வளர்ச்சி என்பது "நாட்டு முன்னேற்றத்தில் கிராம மக்கள் பங்கு பெற்று நாட்டு வாழ்க்கையோடு இணைந்து செயல்படவும், கிராம சமுதாயத்தின் பொருளாதார, சமூக, கலாச்சார அமைப்பு முறைகளைச் சீர்படுத்தவும், அரசாங்க அமைப்புகளோடு கிராம மக்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் முயற்சி முறையாகும்." பொதுவாக, சமுதாய வளர்ச்சி என்பது கிராம மக்களது எண்ணங்களைத் தட்டி எழுப்பி ஊக்க

மளித்து வசதிகளும், உதவிகளும் அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் செயல் முறைகளாகும். தேசிய விரிவாக்கப் பணிகள் (National Extension Services) என்பது கிராம மக்களுக்குப் பல்வேறு வகையான விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் நடவடிக்கைகளைக் குறிக்கின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு விவசாயிகளின் பொருளாதார, சமூக, கலாச்சார நிலைகளைச் சீரமைக்கத் துணை புரிந்திட அரசு மருத்துவர்கள், வேளாண்மை அறிவியல் வல்லுனர்கள், கால்நடை மருத்துவர்கள், பொறியியல் வல்லுனர்கள் போன்ற நிபுணர்களை நியமிக்கிறது. நாடு சுதந்திரம் அடைந்த பின்பு குறைந்த உணவு உற்பத்திக்கான காரணங்களை அறிந்து அதற்குத் தகுந்த செயல்முறைகளை ஆராயும் நோக்கத்துடன் அதிக உணவு உற்பத்தி விசாரணைக் குழு (Grow More Food Enquiry Committee) ஏற்படுத்தப்பட்டது. குறைந்த உணவு உற்பத்திக்கான காரணம் சமூகப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் உற்பத்தியில் பொருளாதார அம்சங்களையே பெரிதும் வலியுறுத்தியதாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க பரந்த செயல் திட்டங்கள் அமுலாக்கப் படவேண்டுமென்று இக்குழு பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில் 'கிராம சேவக்' என்ற கிராம நிலை பணியாளர்களை மையமாகக் கொண்ட சமுதாய வளர்ச்சி தேசிய விரிவாக்கப் பணிகளை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு, மகாத்மா காந்தி அவர்களின் பிறந்த நாளாகிய 2 அக்டோபர், 1952 லிருந்து இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வியக்கத்தின் நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கும் முகத்தால் திரு. பலவந்தராய் மேத்தா அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆராய்ச்சிக் குழு ஒன்றை 1957-ல் அரசு ஏற்படுத்தியது. இவ் வியக்கத்தைச் சீரமைக்கஇக் குழு அநேக ஆலோசனைகளைக் கூறியது. இவ்வியக்கம் நாடு முழுவதிலும் எல்லாப் பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தினுல் கிராம வளர்ச்சியில் மக்கள் பங்கேற்றுப் புதிய செயல்களை மேற்கொள்ள நல்ல வாய்ப்புக் கிடைக்கிறது.

அமைப்பு: சமுதாய வளர்ச்சி, நடவடிக்கைகளின் சிறிய அமைப்பு சமுதாய வளர்ச்சி வட்டாரமாகும். (Community Development Block). ஒரு வளர்ச்சி வட்டார அமைப்பில் 60,000 முதல் 70,000 பேர்களைக் கொண்ட சராசரியாக 100 கிராமங்கள் இணைந்திருக்கும். முதலில் ஒரு வட்டார அமைப்பு வளர்ச்சி மூன்று காலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. முதல்

காலப்பகுதி தேசிய விரிவாக்கப் பணிக்கட்டம் என்று அழைக்கப் பெற்றது. இம்முதல் கட்டத்தில் வட்டார அமைப்பில் தீவிர வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் காலத் திட்டம் சமுதாய வளர்ச்சிக் கட்டம் என்று அழைக்கப் பட்டது. இக்கட்டத்தில் குறைந்த வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிறகு தீவிர நடவடிக்கைக் காலத்திற்கு மேற்பட்ட கட்டத்தை ஒரு வட்டாரம் பெறுகின்றது, இத்தகைய முக்கால வட்டார எல்லைப் பிரிவினைகள் செயற்கைத் தன்மை கொண்டவைகளாய் இருந்தன. சில ஆண்டுகளுக்குள் வட்டார எல்லை வளர்ச்சி முடிந்துவிடும் என்ற தப்பெண் ணத்தை அது ஏற்படுத்தியது. இக்குறைகளைப் போக்க பலவந் தராய் மேத்தா குழு சமுதாய வட்டார வளர்ச்சி அடையச்செய்ய ஒற்றைத் திட்டம் ஒன்றை ஏற்படுத்துமாறு ஆலோசனை கூறி யது. அத்திட்டத்தின்படி 10 ஆண்டு கால வளர்ச்சித் திட்டங் கள் மேற்கொள்ளப்படும். இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் ஐந் தாண்டுகள் நடவடிக்கைகளைக் கொண்ட இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டத்தில் ஒரு வட்டாரத்திற்கு ரூ. 12 லட்சமும் இரண்டாம் கட்டத்திற்கு ரூ. 5 லட்சமும் வளர்ச் சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. 10 ஆண்டு கால நடவடிக்கைகளோடு திட்டங்கள் நின்று விடாமல் கிராமப்பகுதி முழுவதுமாக வளர்ச்சியடையும் வரைக்கும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன.

நிர்வாகம்: சமுதாய வளர்ச்சி திட்ட இயக்கத்தின் நிர்வாக மானது பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கீழ்மட் டத்தில் 'கிராம சேவக்' என்ற கிராம மட்டப் பணியாளர்கள் வேளாண்மை, கல்வி, சுகாதாரம், உடல்நலம் போன்ற பல் வேறு நடவடிக்கைகளில் கிராம மக்களுக்கு வழிகாட்டியாய் உள் ளனர். வட்டார மட்டத்தில் உயர்ந்த அலுவலர் வட்டார வளர்ச்சி அதிகாரி ஆவர்: (B. D. O.) அவருக்கு உதவியாக பொறியியல் வல்லுனர்கள், மருத்துவர்கள், கால்நடை மருத்து வர்கள், வேளாண்மை, அறிவியல் வல்லுனர்கள் போன்ற ஏராளமான தொழில் நுட்ப நிபுணர்கள் உள்ளனர். இத் தொழில்நுட்ப நிபுணர்கள் கிராம மட்டப் பணியாளர்களுக் குக் குறிப்பிட்ட சில செயல்முறைகளைக் கையாள கட்டளையிடு கின்றனர். அவற்றினைக் கிராம மக்களுக்கு எடுத்துக்கூறும் பணி யினைக் கி;ராமப் பணியாளர்கள் மேற்கொள்கின்றனர். வட்டார வளர்ச்சி அதிகாரிக்குமேல் ஒரு மாநிலத்திற்கு ஒரு வளர்ச்சி ஆணையாளர் (Development Commissioner) இருக்கின்றார். ஒரு ஈர்வட்டத்திலுள்ள பல்வேறு வட்ட வளர்ச்சி அதிகாரிகளின்

நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுவே இவரது பணியாகும். மேல் மட்டத்தில் மத்திய அரசின் சமுதாய வளர்ச்சி அமைச்சர் இருக்கின்றார்.

வளர்ச்சித் திட்ட முறைகள்

சமுதாய வளர்ச்சி செயல் திட்டங்களை, பரந்த இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று விரிவாக்கக் கல்வி; மற்றொன்று சமுதாய அமைப்பாகும். (i) விரிவாக்கக் கல்வி கிராம மக்களின் வாழ்க்கை நிலையைச் சீரமைக்கத் தேவையான கல்வியறிவு, சிந்தனை, ஆவல் ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். இதன் மூலம் மக்களின் கடினமான நடவடிக்கைகளைச் சுலபமாகவும், திறமையாகவும் செயலாற்ற முடிகின்றது. (ii) சமுதாயஅமைப்பில் கிராமப் பஞ்சாயத்து, கிராமக் கூட்டுறவு, கிராமப் பள்ளிக்கூடம் ஆகிய மூன்று அடிப்படை நிறுவனங்கள் அமைந்துள்ளன. பஞ்சாயத்து, குடிமக்கள் நலம், வளர்ச்சிப் பணிகள் போன்ற பணிகளை மேற்கொள்ளுகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் பொருளாதாரப் பணிகளை மேற்கொள்ளுகின்றன. கிராமக் கல்வி நிலையம் மக்களின் அறிவுத் திறனையும், கலாச்சாரத்தையும் சீரமைக்கும் தொண்டு புரிகின்றது. மாதர் சங்கம், (Women Organisation) இளைஞர் சங்கம், (Youth Organisation) விவசாயிகள், கைத்தொழிலாளிகள் சங்கம் (Farmer's and Artisan's Organisation) போன்ற மற்ற பல்வேறு சமுதாய அமைப்புக்கள் தத்தம் துறைகளில் முறையே பணி புரிகின்றனர். இந்த அமைப்புக்கள் பஞ்சாயத்துக்களுடன் அமைப்பு வகையிலும், நிதி வகையிலும் இணைக்கப்பட்டு பஞ்சாயத்துக்களின் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கின்றனர். பல்வேறு குழுக்களின் செயல்முறைகளின் மூலம் பஞ்சாயத்துக்கள் குடியாட்சியின் அங்கமாக விளங்குகிறது. சுருங்கக் கூறின், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் கிராமக் கலாச்சாரத்தை சீர்திருத்திக் கல்வியறிவை அதிகரித்து, கிராம மக்களின் நலனை அதிகரிக்கப் பெரிதும் முயன்று வருகின்றனர்.

வளர்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகள்

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் நடவடிக்கைகளை, பொதுவாக நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, கிராமங்களில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்கள் முதல் வகையைச் சாரும். இரண்டாவதாக, மக்களின் பிரதான பிரச்னைகள் முழுவதையும் தீர்க்க

வல்ல ஒருங்கிணைந்த பல்நோக்கத் திட்டங்களாகும். மூன்றுவதாக, மனிதசக்தி, மூலப்பொருள்கள் ஆகிய வட்டாரத்திற்குள் அமையப்பெற்ற வளங்களை முழுவதும் பயன்படுத்தும் நோக்கங்களைக் கொண்ட திட்டங்கள். நான்காவதாக, இதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டு பல்வேறு சமுதாய வகுப்புகளுக்கிடையேகாணப்படும் பொருளாதார, சமூகப் பேதங்களைக் குறைக்கும் திட்டங்களாகும்.

1. கிராம மக்களின் அடிப்படைத் தேவைகள் என்பது நல்ல விதைகள், இரசாயன உரங்கள், நீர்ப்பாசனம், சுத்தமான குடிநீர், கல்வி நிலையங்கள், சுகாதாரம் போன்ற தேவைகளைக் குறிக்கின்றது.

2. குறைந்தஉற்பத்தி, சத்து குறைந்த உணவு, பிணிகள், கல்லாமை, கடன் சுமைகள் போன்ற கிராம மக்களின் பெரும் பிரச்னைகளைத் தீர்க்க, சமூக, கலாச்சார, பொருளாதாரத்துறைகளில் ஒருங்கிணைந்த பல்நோக்கு செயல் திட்டங்கள் இன்றியமையாதவைகளாகும்.

3. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மனித சக்தி, மூலப்பொருள்கள், மக்கள்திறன் போன்ற வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி மக்களின் சுயஉதவி, தன்னம்பிக்கை போன்றவற்றை மேம்படுத்த பெரிதும் உதவுகின்றன. பயன்படுத்தப்படாத மனிதசக்தியைத்தீவிர வேளாண்மை,சிற்றளவு, குடிசைத் தொழில்களின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துவதோடு, சாலைகள் அமைத்தல், அணைகள் கட்டுதல், பொதுக் கட்டிடங்கள் ஏற்படுத்துதல், நீர்ப்பாசனப் பணிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு வேலைகள் போன்றவற்றை மேற்கொள்ளவும் பயன்படுத்தினால் கிராம வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்க இயலும்.

4. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பெரும்பாலும் ஏழை மக்களுக்குப்போதுமான அளவுஉதவாமல் செல்வந்தர்களுக்கே உதவி புரிந்துள்ளது என்று குறை கூறப்படுகின்றது. எனவே, ஏழை மக்களுக்கும் சமமான நன்மை கிடைப்பதற்காகச் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஏழைகள் மருத்துவ கல்வி, வசதிகளைப் பெற்றுப் பயனடையச் செய்யவேண்டும். பணக்காரர்கள் ஏழை மக்களுடன் கடன் வசதி, உதவிக் கொடைகள் போன்ற வசதிகளைப் பங்கிட்டுக் கொள்ளக் கற்பிக்

கப்படவேண்டும். இதன் மூலம் எல்லா வகுப்பினருக்கும் நன்மைகள் சமமாகப் பங்கிடப்பட இயலும்.

இடையூறுகள்: சமுதாய வளர்ச்சித் திட்டங்களைச் செயல் படுத்துவதில்அநேக இடையூறுகள் ஏற்படுகின்றன. ஏனெனில், கிராம மக்களின்சமூக, கலாச்சாரமனநோக்கு வேண்டிய அளவு வேகமாக மாற்றமடையவில்லை. முதலாவதாக, மக்களின் பழக்க வழக்கங்கள், மனப்போக்கு ஆகியவைகள் சிறப்பான மாற்றத்தைப் பெறவில்லை. இரண்டாவதாக, பிற்பட்ட சமூகச் செயல்முறைகள், சமூகப் பாகுபாடுகளை ஏற்படுத்துகின்றன. மேல்வகுப்பைச் சேர்ந்தவர்களும், உயர்சாதி மக்களும் வேலைகளைக் கண்காணிப்பதோடு இருந்து விடுகின்றனர். உண்மையான கடும் வேலைகளை, கீழ்ச்சாதி மக்கள் மேற்கொண்டு அரும் பாடுபடுகின்றனர். இத்தகைய பழமை, சமூக வழக்கங்கள் கல்வி வளர்ச்சித் திட்டங்களைக் கடுமையாகப் பாதித்துள்ளன. மக்களின் ஆதரவு இல்லாததால் முதியோர் கல்வியும், பெண்கள் கல்வியும் சிறந்த வெற்றியடையவில்லை. மூன்றாவதாக, கிராம மக்களின் பிற்பட்ட மத நோக்கு பழக்கங்கள் ஆகியவற்றால் தேவையற்ற பழமைக் கருத்துக்கள் குறையவில்லை. சுருங்கக்கூறின், விவசாயிகளின் வரையறுக்கப்பட்ட ஆர்வங்களாலும் சமுதாய வளர்ச்சித் திட்ட இயக்கத்தின் மூலம் மக்களுக்கு அளிக்கப்பட்ட பொன்னான வாய்ப்புக்கள் முழுவதும் பயன்படுத்தப்படவில்லை.

திட்ட காலங்களில் சமுதாய வளர்ச்சி

முதல் திட்டம் இவ்வியக்கத்திற்காக ரூ. 100 கோடியை ஒதுக்கிட்டது. ஆனால், உண்மையில் ரூ. 50 கோடிகள் மட்டுமே செலவழிக்கப்பட்டன. இத்திட்ட காலத்தில் சுமார் எழுபது மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் கிராமங்களை உள்ளடக்கிய சுமார் ஆயிரம் வட்டாரங்களில் இவ்வியக்கம் செயல்படுத்தப்பட்டது. இரண்டாம் திட்டம் சமுதாய வளர்ச்சிக்காக ரூ. 200 கோடிகளை ஒதுக்கியது. இத்தொகை முழுவதும் ஐந்தாண்டு காலத்திற்குள் செலவழிக்கப்பட்டது. அக்டோபர் 1960க்குள் இவ்வியக்கம் நாட்டிலுள்ள எல்லா கிராமப் பகுதிகளையும் உள்ளடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இக்கால எல்லை மூன்றாண்டுகளுக்கு ஒத்திப் போடப்பட்டது. இரண்டாம் திட்ட இறுதியில் இவ்வியக்கம் 4 லட்சம் கிராமங்களை உள்ளடக்கிய 3,000 வட்டாரங்களில் செயல் முறைகளை அமுல்படுத்தியது. மூன்றும்திட்டம் உற்பத்தி அதிகரிப்பையே பெரிதும் வலியுறுத்தி அதன் மூலம்

மற்ற அநேக பிரச்னைகளைத் தீர்க்க முடியுமென்பதை அறிவுறுத்தியது. எனவே, கிராம உற்பத்தித் திட்டங்கள் 12 செயல் முறைகளைப் பெரிதும் வலியுறுத்தின. நீர்ப்பாசன வசதிகளை முழுமையாகப் பயன்படுத்துதல், இருபோக, பலபோக சாகுபடியின் கீழ் உள்ள நிலப்பரப்பைஅதிகரித்தல், சீரானவிதைகளைப் பெருக்கிப் பங்கிடுதல், உர வகைகளை அளித்தல், சீரான வேளாண்மை உற்பத்தி முறைகளைக் கையாளுதல், புதிய சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்றவைகள் அந்தப் பன்னிரண்டு அம்ச திட்டங்களாகும். இத்திட்டங்களை அமுலாக்க ரூ. 300 கோடி மூன்றும் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. மூன்றும் திட்ட கால இறுதிக்குள் நாட்டிலுள்ள கிராம மக்கள் அனைவரையும் இவ்வியக்கத்திற்குள்ளடக்க முடிந்தது.

இவ்வியக்கத்தின் குறைபாடுகள்

இவ்வியக்கம் அளந்து மதிப்பிடத்தக்க வளர்ச்சியைச் சாதிக்க முடிந்தபோதிலும் அதன் செயல் திறத்தில் அநேக குறைபாடுகளைக் கொண்டுள்ளது. திட்ட மதிப்பீட்டு அமைப்பு ஐ. நா.க்குழு போன்ற அமைப்புக்கள் மேற்கொண்ட பல்வேறு ஆராய்ச்சிக் கணக்கீடுகள் இதைத் தெளிவுபடுத்தியுள்ளன. இக்குறைகளை மூன்று பரந்த வகைகளாகப் பிரிக்கலாம். (1) நிர்வாகக் குறைபாடுகள். (2) பணிவகைக் குறைபாடுகள். (3) அடிப்படைக் குறைபாடுகள்.

1. **நிர்வாகக் குறைபாடுகள் :** பல்வேறு அரசாங்கத் துறைகளுக்கிடையே ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் ஏற்படவில்லை. தகுதியும், திறமையும் வாய்ந்த பணியாளர்கள் போதுமான அளவு கிடைக்காததன் விளைவாக, இவ்வியக்கத்தைத் திறமையாக நிர்வகிக்க இயலவில்லை. இவ்வியக்கத்தின் விரைவான வளர்ச்சியின் காரணமாக, பயிற்சி பெற்ற பணியாளர்களின் தேவை பெரிதும் அதிகரித்தது. இக்குறைபாட்டினால் இவ்வியக்கம் மெதுவாக வளர்ச்சியடைந்தது.

2. **பணி வகைக் குறைபாடுகள் :** இவ்வியக்கத்தின் அடிப்படைப் பணிகள், பொருளாதார, சமூக அம்சங்களை உள்ளடக்கியதாகும். பொருளாதாரப் பணிகள், வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு போன்றவற்றைக் குறிக்கின்றன. சமூகப் பணிகள், சாலை அமைத்தல், பள்ளிக்கூடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு கட்டட நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றன. இவ்

வியக்கம் பொருளாதாரமல்லாத பணிகளையே பெரும்பாலும் வலியுறுத்திப் பொருளாதாரப் பணிகளில் அக்கறை காட்ட வில்லை. எனவே, வேளாண்மை உற்பத்தியில் எதிர்பார்த்த இலக்குகளைச் சாதிக்க இயலவில்லை.

3. அடிப்படைக் குறைபாடுகள்: இவ்வியக்கத்தின் அடிப் படை நோக்கங்களில் ஒன்று கிராமக் கூட்டுறவு பஞ்சாயத்து சமுதாயக் கூடங்கள், மகளிர் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள் போன்ற உள்ளூர் அமைப்புக்களை வளர்ச்சியடையச் செய்வ தாகும். ஆனால், இவ்வகையில் வேகமான வளர்ச்சி ஏற்பட வில்லை. மேலும், இவ்வியக்கத்தில் மக்களின் பங்கு படிப்படியாக குறைந்துகொண்டே வந்தது. இவ்வியக்கம் அரசாங்க உதவி யுடன் மக்களுடைய திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இது காலப்போக்கில் மக்களின் உதவியுடன் உண்மையில் அரசாங்கத் திட்டமாக மாறியது. எனவேதான், வளர்ச்சித் திட்டங்களை மக்களின் பொறுப்பாக மாற்றத்தக்க பஞ்சாயத்து ஆட்சி முறையை 'மேத்தா' குழு சரியாய்ப் பரிந்துரைத்தது.

இவ்வியக்கத்தின் நடைமுறையில் அநேக குறைபாடுகள் இருந்தபோதிலும், அது தோல்வியடைந்தது என்று கூற இயலாது அது தோல்வியடைந்தாலும் உத்தமர் காந்தி போற்றிய கிராம இந்தியாவில் நம்பிக்கையும் பேரார்வங்களும் தோல்வியடையுமென்று கூறினால் அது மிகையாகாது. இது உலக கவனத்தை ஈர்க்கத்தக்க இருபதாம் நூற்றுண்டின் சோதனைத் திட்டமாகும். "கடந்த சில ஆண்டுகளாக உலகி லேயே இந்தியாவில் தோன்றிய சமுதாயத் திட்டங்களைப் போன்ற புரட்சிகரமான தன்மை கொண்ட செயல் முறைகள் உலகில் எந்த நாட்டிலும் ஏற்படவில்லை" என்று மறைந்த பிரதமர் நேரு அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பஞ்சாயத்து ஆட்சி அல்லது பரவலான மக்களாட்சி
(Panchayat Raj or Democratic Decentralisation)

திரு. பல்வந்தராய் மேத்தா குழு, சமுதாய வளர்ச்சித்திட் டங்கள் நாட்டில் வெற்றியுடன் செயல் புரிய வளர்ச்சிக்குத் தேவையான அதிகாரங்கள் பஞ்சாயத்து ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது. வளர்ச் சிக்கான அதிகாரங்கள் அரசு அதிகாரிகளிடமிருந்து பஞ்சா யத்து ஆட்சி நிறுவனங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டு மென்று கூறப்பட்டது. பஞ்சாயத்து ஆட்சியில் கிராமப் பஞ்சா யத்து, பஞ்சாயத்து, சமிதி, மாவட்டப் பரிஷத் ஆகியவற்றைக்

கொண்ட மூன்றடுக்கு முறை (Three-Tier System) பரிந்துரைக்கப்பட்டது. கீழ்மட்டமாகிய கிராமத்தில் சமுதாய வளர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சித் திட்டங்களை அமுலாக்கும் பணியை கிராமப் பஞ்சாயத்து மேற்கொள்ளும். கிராமப் பஞ்சாயத்து மூன்று வகை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) **பிரதிநிதித்துவப் பணி:** சமுதாயத்திலுள்ள மக்களைப் பாதிக்கும் கருத்துக்களில் மக்களின் பெருவாரியான எண்ணங்களை எடுத்துக் கூறுவது. (2) **ஒழுங்கு படுத்தல், நிர்வாகம் ஆகிய பணிகள்,** தனி நபர்கள், நிறுவனங்கள் ஆகியவைகளின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துதல், கிராமப் பள்ளிகளின் வேலைமுறை, பிறப்பு, இறப்பு பதிவு, சுகாதாரப் பணிகளின் செயல் முறை போன்றவற்றைக் கண்காணித்தல் ஆகியவை இரண்டாம் வகைப் பணிகளாகும். (3) **வளர்ச்சிப் பணிகள்:** இவைகள் கல்வி வளர்ச்சி, உடல் நலம், செய்தித் தொடர்பு, நீர்ப்பாசனம் போன்றவற்றைக் குறிக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான வருமானம் வரிகள் பஞ்சாயத்து சமிதிகளின் உதவித் தொகைகள் (Grants-in-aid), நில வருவாயில் (Land Revenue) ஒரு பங்கு ஆகியவைகளிலிருந்து கிடைக்கிறது. கிராம மட்டப் பணியாளர்தான் கிராமப் பஞ்சாயத்தின் வளர்ச்சி காரியதரிசி (Developmental Secretary,)

பஞ்சாயத்து சமிதி

வட்டார அளவில் வளர்ச்சியை மேற்கொள்ள அதிகாரம் பெற்றஅமைப்பாகப் பஞ்சாயத்துசமிதி இருக்கவேண்டுமென்று ஆராய்ச்சிக் குழு (Study Team on Community Development and National Extension Service) கருதியது. வட்டாரத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களின் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பஞ்சாயத்து சமிதியின் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். பல் வேறு துறைகளில் வளர்ச்சி நடவடிக்கைகளை எடுப்பதே இச் சமிதியின் பணியாகும். இச் சமிதிகளுக்குத் தேவையானவருவாயை, பல் வேறு வகைகளிலிருந்து பெற வேண்டும். சிறப்பு வளர்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கு இச்சமிதி மாநிலஅரசின் நடுவராகப்பணிபுரிய வேண்டும். பொதுவான மற்றும் குறித்த திட்டங்களுக்கு அரசு இச்சமிதிகளுக்குப்போதுமான உதவித் தொகைகளை அளிக்கவேண்டும். கிராம வளர்ச்சிக்காக மத்திய, மாநில அரசுகள் செலவிடும் தொகை முழுவதும் பஞ்சாயத்து சமிதிகளின் மூலமாகத்தான் செலவழிக்கப்படவேண்டும். அரசின் வட்டார வளர்ச்சி அதிகாரி (B.D.O.) பஞ்சாயத்து சமிதியின் செயல்படுத்தும்

அதிகாரி (Executive Officer) யாவார். மாவட்ட அளவில் அதிகாரம் கொண்ட அமைப்பான மாவட்ட பரிஷத் (Zilla Parishad) இச்சமிதிகளின் உண்மையான வரவு செலவுத் திட்டத்தை (Budget) அங்கீகரிக்க வேண்டும்.

மாவட்டப் பரிஷத்

ஒரு மாவட்டத்திலுள்ள சமுதாய வளர்ச்சி வட்டாரங்களனைத்தும் இணைக்கப்பட்டு, மாவட்டப் பரிஷத் என்ற அமைப்பால் ஒழுங்கு படுத்தப் படுகின்றன. ஒரு மாவட்ட எல்லேக்குள் நிர்வாக அதிகாரம் பெற்ற அமைப்பு மாவட்டப் பரிஷத் ஆக இருக்க வேண்டும் என்று இக்குழு பரிந்துரைத்தது. ஒரு மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து சமிதிகளின் தலைவர்கள் (Presidents) சட்டப் பேரவை உறுப்பினர்கள், அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களை மாவட்டப் பரிஷத் உறுப்பினர்களாகப் பெறவேண்டும். ஒரு மாவட்ட நிலை அதிகாரி அல்லது மாவட்ட ஆட்சியாளர், இப்பரிஷத்தின் தலைவராய் (Chairman) இருக்க வேண்டும். ஒரு மாவட்டத்திலுள்ள பல்வேறு பஞ்சாயத்து சமிதிகளின் பணிகளை ஒருங்கிணைப்பதே மாவட்டப் பரிஷத்தின் தலையாய பணியாகும். இதுபோக, ஒன்றுக்கு மேற்கொண்ட வட்டாரங்களிலுள்ள பள்ளிகள், மருத்துவமனைகள், சாலைகள் போன்றவைகளைக் கண்காணிக்க வேண்டும். ஒரு மாவட்டப் பரிஷத், வரிகள், நிரந்தர சொத்துக்களின் வாரம் போன்றவைகளிலிருந்து தேவையான வருவாயைப் பெறவேண்டும். மாநில அரசுகள் உள்ளூர் அதிகார அமைப்புகளுடன் சேர்ந்து பங்கிட்டுக் கொள்ளும் வரிகளிலிருந்து ஒரு பங்கை மாவட்டப் பரிஷத் பெறவேண்டும். மேலும், இப்பரிஷத்துகளுக்கு மாநில அரசுகளால் உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. மாநில அரசுகளால் கொடுக்கப்பட்ட உதவித்தொகையை மாவட்டப் பரிஷத், பஞ்சாயத்து சமிதிகளுக்கும், கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் இப்பரிஷத் அளிக்க வேண்டும். பஞ்சாயத்து சமிதிகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகை சரியாகப் பயன் படுத்தப்பட சரியான கண்காணிப்பு தேவைப்படுகிறது. உள்ளூர் அமைப்புக்கள் அதிக சுதந்திரமும் சுய உரிமையும் பெற்றுப் பணிபுரிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேற்கூறப்பட்ட பரிந்துரைகளை மத்திய அரசு, தேசிய வளர்ச்சி சபை (National Development Council) மாநில அரசுகள் ஆகியவை ஏற்றுக் கொண்டன. மாநில அரசுகள்

இக் குழுவின் பரிந்துரைகளின் கருத்தைத் தத்தம் வசதிக்கேற்ப ஏற்றுக்கொண்டு திட்டங்கள் தீட்டியுள்ளன. வளர்ச்சித் திட்டங்களில் மக்கள் அதிகமான பங்கு பெறச் செய்வதே இந்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கமாகும். பஞ்சாயத்துக்களில் தேர்தல் முறையைப் பின்பற்றி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது சிறந்ததா? இல்லையா? என்பது விவாதத்திற்குரியதாக உள்ளது. ஜாதி, மதம், கொள்கை போன்றவைகளால் கிராம மக்கள் ஒற்றுமையின்றி இருப்பதால், தேர்தல் முறையை ஒழித்துவிட்டு கிராம வாழ்க்கையில் ஒற்றுமையைப் பாதுகாக்க வகை செய்ய வேண்டுமென்பது ஒரு சாரார் கருத்தாகும். தேர்தல் முறைக்கு மாற்று முறையாக இருப்பது ஒருமித்த கருத்துப்படி அல்லது ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறையாகும். போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாயத்துக்களில் பெரும்பாலான மக்கள் அக்கறை கொள்வதில்லை. எனவே, இம் முறை முன் குறிப்பிட்ட தேர்தல் முறையை விடச் சிறந்ததாக இல்லை. எனவே, ரகசிய ஓட்டெடுப்பு முறையைக் கொண்ட பஞ்சாயத்து தேர்தல் முறையைவிடச் சிறந்த மாற்று முறை இல்லை என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

திட்ட காலத்தில் பஞ்சாயத்து ஆட்சி

திட்ட முறைகளில் சிறந்தது கீழ்மட்டத்திலிருந்து திட்டமிடுவது ("Planning from Below") ஆகும். பஞ்சாயத்து ஆட்சி முறை இந்தியாவில் கீழ்மட்டத்திலிருந்து திட்டமிடுவதற்குச் சாதகமாக இருக்கும். பஞ்சாயத்துக்கள் சிறந்த வளர்ச்சியைப் பெற்றபின் அவைகளே தங்கள் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கும் சக்தியைப் பெறும். அதன் பிறகு அத்திட்டங்கள் பஞ்சாயத்து சமிதிகளால் அங்கீகரிக்கப்பட்டு மாவட்டப் பரிஷத்துகள், மாநில அரசுகள் மூலமாக இந்தியத் திட்டக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படலாம். இவ்வகைத் திட்டம் மேல் மட்டத்திலிருந்து தீட்டும்திட்டத்தைவிட சிறந்ததாக அமையும். ஏனெனில், உள்ளூர் மக்கள் தங்கள் தேவைகளைப் பிறரை விட தாங்களே உணர்ந்து செயல் முறைகளை வகுக்க முடிகிறது. கீழிருந்து திட்டமிடும் முறையைப் பின்பற்ற வேண்டுமானால் பஞ்சாயத்துக்கள் போதுமான வளர்ச்சியைப் பெற வேண்டும். எனவே, இரண்டாம், மூன்றும் திட்டங்களில் பஞ்சாயத்துக்களின் வளர்ச்சிக்காக முறையே ரூபாய் 25 கோடியும், ரூ. 30 கோடியும் ஒதுக்கப்பட்டது.

பஞ்சாயத்து ஆட்சியின் பிரச்சினைகள்

இந்தியாவில் பஞ்சாயத்து ஆட்சி வெற்றியுடன் வளர்ச்சி பெறவேண்டுமானால் ஏராளமான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இப் பிரச்சினைகளில் முக்கியமானவைகளாவன: நிதி, ஒருங்கிணைப்பு, தேர்தல் போன்றவைகளாகும். 1. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு ஏராளமான பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அவைகளுக்குப் போதுமான நிதி வசதி கிடையாது. உதாரணமாக, இந் நிறுவனங்கள் கிராம மக்களிடமிருந்து வரிகளைப் பெறவேண்டும். தாங்கள் பிரபலியமடைய வேண்டு மென்பதற்காகப் பஞ்சாயத்துக்கள் அதிகமாக வரியை விதிப்பதில்லை. 2. ஒரு மாவட்ட நிர்வாகத்திற்குள் இருக்கும் பஞ்சாயத்து, நிறுவனங்களுக்கிடையே திருப்திகரமான ஒருங்கிணைப்பு இல்லை. எனவே, கிராமப் பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து சமிதி ஆகியவைகளின் தனித்தனியான பணிகளை விளக்கமாய் அறிவிக்க வேண்டும். ஒரே பணியைப் பல நிறுவனங்கள் புரிவதால், நிர்வாகத்தில் திறமையின்மை ஏற்படும்.

3. ஓட்டெடுப்பு முறையின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்களில் பெரும்பாலோர் பணக்கார வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருக்கலாம். ஆனால், பஞ்சாயத்துக்களில் நிலமில்லா வேளாண்மைக் கூலிகள், அரிஜனங்கள் போன்ற உரிமை குறைந்த வகுப்பினரையும் பஞ்சாயத்துக்களில் சேர்ந்திருக்குமாறு செய்தல் அவசியமாகும். நிர்வாக அமைப்பு சரியான முறையில் கட்டுப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். பஞ்சாயத்து உறுப்பினர்களில் பெரும்பாலோர் கல்வியறிவில்லாதவர்களாதலால், வளர்ச்சிக்கான அதிகாரங்கள் நிர்வாக அதிகாரிக்கோ அல்லது கல்வி கற்ற எழுத்தர்களுக்கோ கொடுக்கப்படலாம். இதனால். கிராமப் பஞ்சாயத்து நிர்வாகம் சீரான முறையில் நடைபெற இயலும்.

பஞ்சாயத்து நிறுவனங்களால் அநேக அபாயங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் உள்ளூர் மக்கள் எப்போதும் கவனமாய் இருப்பது நல்லது. முதலாவதாக, பஞ்சாயத்துக்களின் தலைமைப் பதவி பணக்கார மேல்வகுப்பைச் சேர்ந்தவர்களின் கையில் இருப்பதால் அவர்கள் பணக்காரர்களுக்குச் சாதகமானவற்றைச் செய்துவிட்டு ஏழைகளின் நலனில் அக்கறை கொள்ளாமல் இருக்க நேரிடலாம். எனவே, சமூக நீதி, நிலச் சீர்திருத்தங்கள் போன்ற கொள்கைகளைச் செயல்படுத்தும்போது ஒவ்வொருவரும் கவனமாய் இருக்கவேண்டும். இரண்டாவதாக,

திறமையும் அனுபவமும் இல்லாத தலைவர்களால் பஞ்சாயத்து அமைப்புக்களின் நிர்வாகத் திறமை குறைய வாய்ப்பு ஏற்படலாம். இச்சீர்கேட்டைப்போக்குவதற்காக, பல்வேறுதுறைகளின் நடவடிக்கைகளில் அரசியல் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படலாம். மூன்றாவதாக, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் பல்வேறு மட்டங்களில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் போட்டியும், சச்சரவும் ஏற்படலாம். இதைத் தடுக்கப் பொறுப்புகளைப் பல்வேறு நிறுவனங்களுக்குப் பல்வேறு மட்டங்களில் பிரித்துக் கொடுப்பது சிறந்ததாகும். இறுதியாக, பொது நிறுவனங்களில் ஊழல், அபாயம் காணப்படுகிறது. இதைப் போக்க நன்றாக அறிந்த பொதுமக்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்க வேண்டும்.

முடிவுரை :— பஞ்சாயத்து ஆட்சி முறையின் நடைமுறையில் பல்வேறு பிரச்சினைகளும், அபாயங்களும் இருந்தபோதிலும் இப்பரவலாக்கப்பட்ட கொள்கையினால் நாட்டிற்கு அநேக நன்மைகள் ஏற்படக்கூடும் என்பது உண்மையாகும். கிராமம், வட்டாரம், மாவட்டம் ஆகிய மட்டங்களில் வளர்ச்சித் திட்டங்கள் சீரான முறையில் அமைக்கப்பட்டு கிராம மக்களின் தேவைகளையும் பேரார்வங்களையும் அடிப்படையாகக் கொண்டு கிராமச் சீரமைப்பு முறையை மேற்கொள்ள சிறந்த வாய்ப்பு கிடைக்கிறது. இரண்டாவதாக, உள்ளூரிலுள்ள வளங்களின்வளர்ச்சியாலும், அவ்வளங்களைச்சிறந்தமுறையில் பயன்படுத்துவதாலும் கிராமப் பகுதிகளில் சேமிப்பும் முதல் சேர்க்கையும் அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். மூன்றாவதாக, பஞ்சாயத்து நிறுவனங்கள் சிறந்த முறையில் ஒருங்கிணைந்து செயல் புரிகின்றனவா என்பதைக் கண்டறிய வேண்டும். கடைசியாக, தொழில் நுட்ப நிதி வளங்களை மக்களின் நலனுக்காக, பஞ்சாயத்து ஆட்சிமுறை பயன்படுத்துகிறதா என்பதைப் பொறுத்துத் தான் பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றி அமையும். எனவே, கிராமச் சீரமைப்பு, முன்னேற்றம், செழிப்பு ஆகியவைகள் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் மூலமாகவும், தேசிய விரிவாக்கப் பணிகளின் மூலமாகவும் அடுத்து வரும் திட்ட காலங்களில் சாதிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகம் V

தொழில் பிரச்சினைகள்

27. இந்தியத் தொழில் அமைப்பும் வளர்ச்சியும்

தொழில்களும் தேசிய வருவாயும்

வளர்ச்சியுறும் நாடுகள் சிறப்புடனும் விரைவாகவும் முன்னேற நாட்டில் தொழில்மயம் (Industrialisation) ஒரு முக்கிய பங்கினைப் பெற்றுச் செயலாற்றப்பட வேண்டும். பொருளாதார அமைப்பில் ஏற்பட்டுள்ள அடிப்படை வேறுபாடுதான் நாடுகளின் ஏற்றத்தாழ்விற்குக் காரணமாய் அமைகிறது. வளர்ந்த, வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கிடையேயுள்ள தலா வருமான ஏற்றத்தாழ்வு அந்நாடுகளின் தொழில் வளர்ச்சியின் நிலையை அடிப்படையாகக் கொண்டதாகும். தொழில் மயமாக்கப்பட்ட முன்னேறிய நாடுகளில் திறமையான, பரவலான, சரிசம வளர்ச்சியுடைய தொழில்களால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு தேசிய வருவாயும் பெருகியுள்ளது. முன்னேறிய நாடுகளில் தொழில் வளர்ச்சி சீராக உள்ளதால், அந்நாடுகள் தொழில் நாடுகளாக உள்ளன. ஏழ்மை நாடுகளில் விவசாய வளர்ச்சி கூட சிறப்பான முறையில் ஏற்படவில்லை எனினும், அந்நாடுகள் வேளாண்மை உற்பத்தி நாடுகளாகவே உள்ளன. அதனால் தான், ஏழ்மை நாடுகளில் தேசிய வருவாயும் குறைந்துஉள்ளது. தலா வருமானம் $125-க்கும் குறைந்துள்ள ஏழ்மை நாடுகளில் தற்போது முதல்நிலைப் பொருள் உற்பத்தி (Primary Production) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 47%தான். ஆனால், தொழில்களிடமிருந்து கிடைக்கும் தொகை மொத்த வருவாயில் 20% மட்டுமேயாகும். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் முதல்நிலை பொருள் உற்பத்தி 13% தொழில்களின் உற்பத்தி 49% ஆகும். எனவே, தொழில் உற்பத்தி அதிகமாக உள்ள நாடுகளில் பொருளாதார வளர்ச்சி சிறந்த முறையில் ஏற்பட்டு தலா வருவாய் அதிகரிப்பதால், தேசிய வருவாயும் பெருகி, மக்கள் உயர்ந்த வாழ்க்கைத்தரம் பெற்றுள்ளனர். வளர்ச்சி

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தொழில் பாகுபாடு—சில நாடுகளின் சராசரி எண்கள் 1950—59.
(சத வீதங்களில்)

தலா வருவாய்ப்படி வரிசைப் படுத்தப்பட்ட நாடுகள்	பொருள்களும் அடிப்படை வசதித் தொழில்				முதல்நிலை உற்பத்தி (Primary Production)	ஊழியம் (Service)	மொத்தம்
	மொத்தம்	உற்பத்தித் தொழில் (Manufacturing)	அடிப்படை வசதிகள்	கட்டுமானத் தொழில்			
வளர்ச்சியுறு நாடுகள்							
1. $125க்கும்குறைந்தவை	19	11	5	4	47	33	100
2. $125—$249	25	14	6	5	40	35	100
3. $250—$374	26	16	6	5	30	45	100
4. $375க்கு மேல்	28	17	6	5	27	46	100
அதிக வருமானமுள்ள தொழில் நாடுகள்	49	32	11	6	13	37	100

ஆதாரம்: ஐ. நா, உலகப் பொருளாதார மதிப்பீடு, 1961 பு. 1

யடைந்த சில நாடுகளில் அதிர்ஷ்டவசமாக இயற்கை வளங்கள் ஏராளமாய்க் கிடைக்கிறபடியால் அதிசயிக்கத்தக்க அளவு அந் நாடுகளில் தலா வருமானம் பெருகிவருகிறது. பெட்ரோல் எண்ணெய் இயற்கையாகக் கிடைக்கும் நாடுகளாகிய டிரினிடாட், வெனிஜீயூலா, ஈரான், ஈராக் போன்ற நாடுகள் பன்னாட்டு வாணிபத்தில் சிறந்த நிலையைப் பெற்றுள்ளன. எனவே, இந் நாடுகளில் தலா வருமானம் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. பல்வேறு நாடுகளின் உற்பத்திப் பொருள்களுக்கும் தலா வருமானத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்கும் அட்டவணையை முன்பக்கத்தில் காணலாம்.

தொழில் மயமும், பொருளாதார வளர்ச்சியும்
(Industrialisation And Economic Growth)

பன்னாட்டு வாணிபத்தின் அடிப்படையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழில் மயம் ஏற்பட்டது. முதல்நிலைப் பொருள்களின் (Primary Goods) வாணிபத்தின்மூலம் ஏற்பட்ட வளர்ச்சி முறையை நாடுகள் நன்ருய் உணரத் தலைப்பட்டன. அவ்வாறு உணரத் தொடங்கியதன் காரணங்கள் வருமாறு:—முதலாவதாக, போக்குவரத்துச் செலவு அதிகமாக இருந்ததால், மற்ற நாடுகளிலிருந்து முதல்நிலைப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத நாடுகள் தாங்களே அவற்றைத் தயாரிக்கச் சிறப்புத் தேர்ச்சி பெற்றன. இரண்டாவதாக, வாணிபத்தால் பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டிற்கு வெளியேயும் பரவுவதால் தொழில்நாடுகளில் முதல்நிலைப் பொருள்களுக்குத் தேவை அதிகரிக்கிறது. முன்போல் இப்போது வளர்ச்சியடைந்த நாடுகள் முதல்நிலைப் பொருள்களை வளர்ந்துவரும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது இல்லை. தலா நுகர்ச்சியின் அளவு அதிகரித்துக்கொண்டே போவதால் தேவையான பொருள்களின் வகையும் மாறிக்கொண்டே வருகிறது. விஞ்ஞான, தொழில் நுட்ப உற்பத்தி முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதால் மிகவும் சிக்கனமான புதுமையுடைய கச்சாப் பொருள்களும், பதிலீட்டுப் பொருள்களும் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன. இதனல் வளர்ந்த நாடுகள் இனி ஏழ்மை நாடுகளின் கச்சாப் பொருள்களை நாடவேண்டியது இல்லை. வளர்ச்சி குறைந்த நாடுகளின் ஏற்றுமதி வருடத்திற்கு 3·6 சதவீதம் என்ற வீதத்தில் வளர்ந்தது. ஆனல், வளர்ச்சியடைந்த நாடுகளின் ஏற்றுமதி வருடத்திற்கு 6·2 சதவீதம் என்ற வீதத்தில் உயர்ந்தது. ஏற்றுமதியில் ஏற்பட்ட இவ்வேறுபாடு ஏழ்மை நாடுகளின் வாணிப மாற்று வீதத்திலும் (Terms of Trade) பாதகத்தை ஏற்படுத்தி

யுள்ளது. எனவே ஏழ்மை நாடுகள் இனிமேலும் தங்கள் வளர்ச்சிக்கு வெளிநாட்டு வாணிபத்தை நம்ப முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஒரே பயனுள்ள தீர்வாக உள்ளது நாட்டைத் தொழில்மயமாக்குவதுதான். வளர்ச்சியுரு நாடுகளின் தீராப் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல முடிவு காண, நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டும். ஏழ்மை நாடுகளில் உண்மை தேசிய வருவாய் பெருக, பலவகைகளில் தொழில் வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்க வேண்டும். அதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டும். தொழில்மய மாக்குவதில் ஏற்படும் பிரச்சினைகளைத் தகர்த்து எறிந்து நாட்டில் உண்மை தலா வருமான அதிகரிப்பிற்கு வழிவகுக்க வேண்டும்.

தொழில் வளர்ச்சியும் வேலை வாய்ப்பும்
(Industrialisation and Employment)

வளர்ந்துவரும் நாடுகளில் வாணிகப் பாதகம் ஒரு பக்கமிருக்க, கட்டுக்கடங்காமல் மக்கள்தொகை பெருகி வருவதால் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது. மக்கள்தொகைப் பெருக்கத்தோடு வேளாண்மையில் குறைந்துசெல் விளைவு விதியும் நடைமுறையில் வருவதால், ஏழ்மை நாடுகள் வறுமை என்னும் நச்சு வளையத்தின் கோரப் பிடியில் அகப்பட்டுக்கொண்டு வாடுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவை எல்லாவகை உற்பத்தியிலும் உயர்வு ஏற்படுவதாகும். அப்போதுதான் வறுமையை ஒழிக்க முடியும். மேலும், வளர்ச்சிக்கு உழைப்புச் சக்தி குறைந்த உற்பத்தித் தொழில்களிலிருந்து அதிக உற்பத்தியளிக்கும் தொழில்களுக்கு மாற்றப்படவேண்டும். அப்போது நாட்டில் மொத்த உற்பத்தியின் அளவு பெருகி வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கத்தக்க சூழ்நிலை உருவாகும். பொதுவாக, ஒரு நபர் உற்பத்தி வேளாண்மைத் துறையில் இருப்பதைக் காட்டிலும், தொழில் துறையில் அதிகமாக இருக்கிறது. தொழில் துறையில் அகச் சிக்கனங்களையும் புறச் சிக்கனங்களையும் மேற்கொள்ளும் வாய்ப்பு மற்ற எல்லாத் துறைகளில் இருப்பதைக் காட்டிலும் மிக அதிகமாகும். நாடு தொழில் மயமாகும்போது அளவுச் சிக்கனங்களும், தொழில்களின் சீரமைப்பும் மேலும் மேலும் தொழில்களுக்குக் கிடைக்க வசதி ஏற்படுகிறது. இதனால் உற்பத்தியாளர்களுக்குப் பொருளாதார உபரி கிடைப்பதால், மேன்மேலும் முதலீடு செய்ய சக்தி கிடைக்கிறது.

தொழில்மயமும் முதலாக்கமும்

தொழில் வளர்ச்சியினால் நாடு தொழில்மயமானால் சேமிப்பு சக்தி பெருகி அதனால் முதல் சேர்க்கை ஏற்படுகிறது. முதல் சேர்க்கை பெருகுவதால் முதலீட்டின் அளவும் சக்தியும் நாட்டில் அதிகரித்துப் பொருளாதாரம் சுய வலிமையையும் ஊக்கத்தையும் பெறுகிறது. சுயவலிமையுள்ள பொருளாதாரம் அமைந்தால் நாட்டில் முதலீடு பெருமளவில் அதிகரித்து வருமானமும் வேலைவாய்ப்பும் பெருகுகிறது. வளர்ந்த தொழில் நாடுகள் இரண்டாம்படி, மூன்றாம்படி (Secondary and Tertiary) தொழில்களிலிருந்து வாழ்வாதாரத்தைப் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றன. ஆனால் இந்தியா போன்றவளர்ச்சியுறு நாடுகள் பெரும்பாலும் விவசாயம் போன்ற முதல் நிலை தொழில்களின் (Primary occupations) வளர்ச்சியை நம்பி வாழ்கின்றன. விவசாயத்திற்கு அடுத்தாற்போல் பெருமளவில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய துறை தொழில்துறையாகும். அதிலும், முக்கியமாக, சிற்றளவுத் தொழில்களும் பேரளவுத் தொழில்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் வேலைவாய்ப்பு இன்னும் அதிகமாகப் பெருகும். நாட்டில் வேலை வசதிகளைப் பெருக்க தொழில் செறிவு முறையைப் பின்பற்றினால் (labour-intensive industries) குறைந்த முதலீடு தான் தேவைப்படுகிறது. பேரளவுத் தொழில்களின்சீரான வளர்ச்சிவேளாண்மைத்துறையின் செழிப்பையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும். ஐரோப்பிய நாடுகளில் வேளாண்மைப் புரட்சியும் தொழிற் புரட்சியும் ஒன்றுக் கொன்று இணையாக ஏற்பட்ட காரணத்தால் தொழில்களின் வளர்ச்சி மேலோங்கியது. இதனால், சிற்றளவு விவசாயப் பண்ணைகள், பேரளவுப் பண்ணைகளாகவும், வாணிபப் பண்ணைகளாகவும் மாற்றமடைந்து குறைந்த விலைக்கு உணவுப் பொருள்களைத் தொழிலாளர்களுக்கும் கச்சாப் பொருள்களைத் தொழிற்சாலைகளுக்கும் வழங்கும் நிலை ஏற்பட்டது. வளர்ச்சியுறு நாடுகளில் வேளாண்மைத்துறை முன்னேற்ற மடையாமல் இருப்பதால், வேகமான தொழில் மயம் ஏற்பட வசதியில்லை. எனவே, வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை அதிகரித்து தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைக் குறைந்த விலையில் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

தொழில் மயமும் சமசீரான வளர்ச்சியும்

தொழில்மயம் அதிகரிக்க, தொழில்நுட்பம், தொழில்திறன், மனப்பாங்கு, தொழில் நிர்வாக அனுபவம் போன்றவைகள்

வளரவேண்டும். இதனால், விவசாயம், தொழில் போன்ற எல்லாத் துறைகளிலும் சம சீரான வளர்ச்சி ஏற்படும். உரு மறைந்த வேலை இன்மை இருக்கும் விவசாயத் துறையிலிருந்து தொழில் துறைக்கு உழைப்புச்சக்தி மாற்றமடைந்தால், பொருளாதார வளர்ச்சி பெருகும். தொழில் மயமும் நிலையான பொருளாதார வளர்ச்சியும் இணை பிரியாதவைகளாகும். இந் நிலை ஏற்படுவதற்குக் காரணம் உயர்ந்த வருமானமும் அதிக உற்பத்தியுமாகும். இதனால், நாட்டில் வேலைவாய்ப்புகள் பெருகும். விவசாயத்துறையிலிருந்து தொழிலாளர்கள் தொழில்துறைக்கு மாற்றப்படுவதால் விவசாயத்தில் "உருமறைந்த வேலையின்மை" நீங்கி வளர்ந்து செல்விளைவு விதி நடைமுறைக்கு வரும். தொழில் மயம் மிதமிஞ்சிய உழைப்புச் சக்தியை ஈர்த்துக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தும் ஓர் ஒப்பற்ற கருவியாகப் பயன்படுகிறது. சந்தையைப் பரவலாகி விற்பனை செய்யப் படும் பொருள்களின் அளவையும் தரத்தையும் அதிகரிக்க தொழில்மயம் துணைபுரிகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பிரச்சினை முதல் நிலை, (Primary) இரண்டாம்படி (Secondary) பொருளாதார நடவடிக்கைகள் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது அல்ல. பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளும் சமசீரான வளர்ச்சியைப்பெற்று விரைவான வளர்ச்சியைச்சாதிக்கமுதலீடு மேற்கொள்ள வேண்டும். அதன்பின் உற்பத்திச் சாதனங்களை எல்லாத்துறைகளுக்கும் சமமாகப்பங்கிட வேண்டும். இதனால்சம சீரான வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதார வளர்ச்சி விரைவாக ஏற்படும். இதற்கு மாறாக, சம சீரில்லா வளர்ச்சியை மேற் கொண்டால் வளர்ச்சி குறையும். இதையே ஐ. நா. நிபுணர்களும் வலியுறுத்தியுள்ளனர். "மித மிஞ்சிய வேகமும் சரி சமமில்லா வளர்ச்சிகொண்ட தொழில்துறையும், ஒன்றையொன்று நிறைவு செய்யத்தக்க மாற்றங்கள் இல்லாத தொழில்துறையும் கொண்ட நாடுகளில் பொருளாதார வளர்ச்சி தடைப்படும்"[1]

இந்தியத் தொழில்களின் அமைப்பு

தற்காலத்திய தொழில் வளர்ச்சி ஏற்படுமுன் இந்திய உற்பத்தியாளர்கள் உலகச் சந்தைகளுக்கு இந்திய மஸ்லின் பட்டு உயர்ந்த தரமுள்ள துணிவகைகள் போன்றவற்றை ஏற்றுமதி செய்து வந்தனர். இத்தகைய பொருள்களுக்கு வெளி நாடுகளில் தேவை அதிகமாய் இருந்தது, இந்தியத் தொழில் துறை

[1] ஐ. நா. அறிக்கை—வளர்ச்சி குறைந்த நாடுகளில் தொழில் மய முறையும் பிரச்சினைகளும்—பக்கம் 3—1958.

உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ததோடு வெளிநாடுகளுக்கும் செய் பொருள்களை ஏற்றுமதி செய்து வந்தன. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டவைகள் பருத்தி, பட்டு ஆடைகள், காலிகோ துணி வகைகள், கலைத்திறன் கொண்ட பாத்திரங்கள், கம்பளித்துணி வகைகள் போன்ற செய் பொருள்களாகும். இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே ஏற்பட்ட தொடர்பினால் இயந்திரத்தால் செய்யப்பட்ட பொருள்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டதால், இந்தியக் கைத்தொழில்கள் அழிந்து போயின. மேலும், இந்தியக் கச்சாப் பொருள்கள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, இங்கிலாந்திலிருந்து செய்பொருள்களை இந்தியாவில் இறக்குமதி செய்யும் கொள்கையை ஆங்கிலேயர் இந்தியாவில் கடைப்பிடித்து வந்தனர். "மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்ட கைத் தொழில் அழிவைக் காட்டிலும் இந்தியாவில் பேரளவில் கைத் தொழில் நாசமடைந்தது" என்று வீரா ஆன்ஸ்டே "இந்தியப் பொருளாதார வளர்ச்சி" என்ற தம் நூலில் விளக்குகிறார். 1918-ம் ஆண்டில் தொழில் குழு தன் அறிக்கையை வெளியிட்ட பிறகு, இந்தியாவில் சில குறிப்பிட்ட தொழில்களுக்குப் பேதங் காட்டும் பாதுகாப்பை பிரிட்டிஷ் அரசு அளித்தது. அதே போல் இங்கிலாந்தின் பொருள்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படவும் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இந்நிலை இருந்த போதும் பருத்தித் துணிகள், சர்க்கரை, காகிதம், தீப்பெட்டி, இரும்பு எஃகு போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் இந்தியாவில் முன்னேற்ற மடைந்தன. இந்தியத் தொழில் வகையின் முக்கிய அம்சங்களாவன :

1. சிற்றளவுத் தொழில்களின் அமைப்பு

இந்தியத்தொழில் அமைப்பு 1956-ம் ஆண்டுவரை ஒருவகை சிறிய அளவுடைய தொழில்களைக் கொண்ட முறையையே கொண்டிருந்தது. 1956-ம் ஆண்டு மத்தியில் செய்பொருள் உற்பத்தித் (Manufacturing) தொழிலில் ஈடுபட்டிருந்த மொத்த உழைப்பாளர்கள் ஏறக்குறைய 15 மில்லியன்பேர் ஆவர். இவர்களில் 10 பேர்களுக்கு மேல் வேலை செய்கின்ற தொழிலாளர்களைக் கொண்ட ஆலைகளில் பணிபுரிவோர் 3·9 மில்லியன் ஆட்கள். மீதி 11·1 மில்லியன் பேர் 10 பேர்களுக்கும் குறைவாக வேலை செய்யும் ஆட்களைக் கொண்ட வீட்டுத்தொழில்களிலும் பணி நிலையங்களிலும் சேவை செய்பவர்கள். இதிலிருந்து குடி

சைத் தொழில்களிலும் தொழில் நிலையங்களிலும் (Work shops) பெருவாரியான தொழிலாளர்கள் பணி புரிகிறுர்கள் என்பது புலனுகிறது. இதைக் கீழ்வரும் அட்டவணை தெளிவாக விளக்கு கிறது.

பல்வேறு தொழில்களில் பணி புரிவோர்

தொழிலின் பெயர்	வேலை செய்யும் தொழிலாளர் எண்ணிக்கை	1956-ல் சராசரியாக வேலைகளில் இருந்தவர்கள் (மில்லியனில்)	தொழில் பகுதிகளின் எண்ணிக்கை
1. வீட்டுத்தொழில்களும் சிறிய பணி நிலையங்களும்	10 பேர்களுக்கும் குறைந்தவர்கள்	11.1	5,130,000
2. சிறு ஆலைகள்	10—49 ஆட்கள்	1.2	61,000
3. நடுத்தர ஆலைகள்	50—499 ஆட்கள்	1.0	8,050
4. பெரிய ஆலைகள்	500க்கு-மேற்பட்டவர்கள்	1·7	1,050
மொத்தம்		15—0	5,200;000

மேற்கண்ட விவரத்திலிருந்து சில உண்மைகள் புலனுகின்றன. மொத்த ஆலைத்தொழில்களில் வேலை செய்யும் 3.9 மில்லியன் ஆட்களில் 1·2 மில்லியன் அல்லது 30·8 சதவீதம் பேர் சிறு ஆலைகளில் பணி புரிபவர்கள். 1·0 மில்லியன் அல்லது 25·6 சதவீதம் பேர் நடு நிலை ஆலைகளிலும் 1·7 மில்லியன் அல்லது 43·6 சதவீதம் பெரிய ஆலைகளிலும் வேலை செய்பவர்களாவர். இந்தியத் தொழில் அமைப்பில் காணும் புதுமை யாதெனில், ஏராளமான தொழிலாளர்கள் சிறிய அளவு தொழில்களாகிய வீட்டுத் தொழில்களிலும் சிறு ஆலைகளிலுமே வேலை செய்கின்றனர். பெரிய அளவு கொண்ட தொழில் பிரிவாகிய பெரிய ஆலைகளிலும் அடுத்தபடியாக அதிகமான தொழிலாளர்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு, பணி புரிகின்றனர். எனவே, இந்தியத் தொழில் வளர்ச்சியில் நடுத்தர அளவுடைய ஆலைகள் வளர்ச்சி பெறவில்லை. இந்நிலை ஏற்பட்டதன் காரணம் இந்தியா நீண்ட நாட்களாக அந்நியர் ஆட்சியில் இருந்ததால் தான்

என்பது அறிந்ததே. இதனால்தான், நம் நாட்டில் நடுத்தர நிலை தொழிலதிபர்கள் அதிகமாகத் தோன்றாமல் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் அதிகமாக ஏற்படவில்லை.

2. தொழில் முதலீட்டுப் பிரச்சினை

இந்தியாவில் தொழில்களின்மேல் முதலீடு செய்யும் பணத் தொகையின் அளவு மிகக் குறைவானதாகும். உறுதித்தேவை (Effective Demand) இந்தியாவில் குறைந்திருக்கின்றது. தலா வருமானம் குறைந்திருப்பதால் மக்களிடம் வாங்கும் திறன் (Purchasing power) குறைந்து முதலீட்டிற்கு இன்றியமையாத காரணியாகிய உறுதித் தேவை சிறிய அளவில் அமைந்துள்ளது. இதனால் மொத்த உற்பத்தியின் அளவும் குறைந்து விடுகிறது. நாடு தொழில் வளர்ச்சி குன்றி ஏழ்மை நிலையில் இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. கூலிகளின் அளவு குறைந்து இருப்பதால் சேமிப்பின் அளவும் குறைந்த நிலையில் இருக்கிறது. குறைந்த தலா வருமானத்தினால் உள்நாட்டுச் சந்தையின் அளவும் குன்றி இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையின் அடிப்படையில் தற்காலத்திய தொழில் நுட்பப் பேரளவு உற்பத்தி முறை, முதல் தட்டுப்பாட்டின் காரணத்தால் கட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது. இதன் முடிவால்தான் வேலை செய்யும் தொழிலாளர்களின் தலா முதல் (Capital per Worker) இந்தியாவில் மிகவும் குறைந்துள்ளது. கீழ்க்காணும் அட்டவணை இந்த உண்மையைத் தெளிவாக்குகிறது.

தொழில்களில் பணி புரிவோரின் ஒரு நபர் முதல்

தொழில்கள்	ஆயிரம் டாலர்கள் கணக்கில் இந்தியாவில்	அமெரிக்க ஐக்கிய நாடுகளில்
ரொட்டி, மாவுப் பொருள்கள்	3·5	5·0
பருத்தித் துணி	1·8	8·7
சர்க்கரை ஆலைகள்	2·6	26·8
காகிதம், காகிதப் பொருள்கள்	0·6	10·2
இரும்பு, எஃகு ஆலைகள்	5·7	32·1

ஐ. நா. சபையின் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் புள்ளி விவரம் இந்தியத் தொழில்களின்மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையின் அளவு அமெரிக்க நாட்டில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையைவிட மிக மிகக் குறைவு என்பதை உணர்த்துகிறது. மாவுப் பொருள்கள், சர்க்கரை, துணி போன்ற நுகர்வுப் பொருள் தொழில்களில் குறைந்த முதலீடு இருப்பதோடு, இரும்பு எஃகு போன்ற உற்பத்தி அல்லது முதல் பொருள் தொழில்களிலும் கூட குறைந்தமுதலீடு காணப்படுவது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

3. நுகர்வுப் பொருள் தொழில்களின் அமைப்பு

மது போன்ற பானங்கள், ரொட்டி, மாவுப்பொருள்கள், சர்க்கரை, காகிதம், துணி, சணல், தீப்பெட்டி போன்ற நுகர்வுப்பொருள்களைத் தயாரிக்கும் தொழில்கள் இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கைப் பெற்று வளர்ந்து வந்துள்ளன. இத் தொழில்களின் உற்பத்தி அளவு முதல் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. 1953-ல் உற்பத்திப் பொருள் தொழில் களைவிட நுகர்வுப் பொருள் தொழில்கள் உயர்நிலையில் இருந் தன. இக்காலத்தில் நுகர்வுப் பொருள்களுக்கும் (Cousumer goods) உற்பத்திப் பொருள்களுக்கும் (Heavy goods) இடையே இருந்த விகிதம் 62:38 ஆகும். ஐ. நா. சபையின் 1961–ம் ஆண்டின் அறிக்கையின்படி 1953-ல் இந்தியாவின் செய்பொருள் உற்பத்தியின் அமைப்பு பின்வருமாறு :

பொருள்கள்	மொத்த செய்பொருள் உற்பத்தியின் சதவீதம்	உள்நாட்டுத் தேவை குறியீட்டு எண் 100 உள்நாட்டு அளிப்பு குறியீட்டு எண்
1. நுகர்வுப் பொருள்கள்	62	112
2. முதல் பொருள்கள்	38	80

இந்தியத் தொழில் அமைப்பில் நுகர்வுப்பொருள் தொழில் கள் மேல் நிலையிலும், முதல் பொருள் தொழில்கள் அடுத்த நிலையிலும் அமைந்து இருப்பது நல்ல அறிகுறியாக இல்லை. பேராசிரியர் ஹாப்மேன் என்பவரின் கருத்துப்படி இந்தியப்

பொருளாதார வளர்ச்சி இரண்டாம் கட்டத்தை எய்திவிட்டது என்றாலும், முதல்பொருள் தொழில்கள் முன்னேறினால்தான், நாடு சுயபலத்திலும் சுய உறுதியிலும் வேகமான வளர்ச்சியைத் திடமாகப் பெற வாய்ப்பு கிடைக்கும்.[2] அதன் பிறகுதான், தலா வருமானம் உண்மையில் ரஷ்யா, அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளில் நேர்ந்ததுபோல் விரைவாக மேல்நோக்கிச் செல்ல நிச்சயமாக முடியும். மேலும், தொழில் முறையில் அடிப்படை சமநிலைக் குறைபாடு காணப்படுகிறது. அட்டவணைப்படி நுகர்வுப் பொருள்களின் தேவைக் குறியீட்டு எண் 100 ஆக இருக்க, அளிப்புக் குறியீட்டு எண் 112 ஆக உள்ளது. சுதேசி நுகர்ச்சிப் பொருள்களின் அளிப்பு தேவையைவிட அதிகமாக உள்ளது. ஆனால், சுதேசி முதல் பொருள்களின் அளிப்பு தேவையைவிடக் குறைவாக இருக்கிறது. தேவைக் குறியீட்டு எண் 100 ஆக இருக்க, அளிப்புக் குறியீட்டு எண் 80 ஆக உள்ளது. இதனால்தான் இந்தியா, முதல் பொருள்களாகிய இரும்பு, எஃகு எந்திரங்கள் கருவிகள் போன்றவற்றிற்கு அயல் நாடுகளை நம்பி வாழவேண்டிய நிலை அதிகரிக்கிறது. எனவே, தேவைக்கும் அளிப்புக்குமிடையே உள்ள வேற்றுமையைப் போக்க நடுத்தர நிலை, முடிவுநிலை முதல் பொருள்களின் உற்பத்தியின் அளவைப் பெருக்கவேண்டிய இக்கட்டான நிலையில் இந்தியப் பொருளாதாரம் அமைந்துள்ளது. அயல்நாட்டு முதல் பொருள்களை இறக்குமதி செய்து கொண்டே இருந்தால் அயல் நாட்டுச் செலாவணி நெருக்கடி ஏற்படுவதோடு, உள் நாட்டில் விலை அதிகரிப்பால் பணவீக்கம் போன்ற பணவழிப் பிரச்சினைகள் (Monetary Problems) ஏற்படவும் அது காரணமாய் இருக்கிறது. இப்பிரச்சினைகளைத்தீர்க்க நம்உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கி அயல்நாட்டு இறக்குமதியைக் குறைக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக மேற்குறிப்பிட்டுள்ள பிரச்னைகள் முழுவதும் தீர்க்க அரசு பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

[2] W. G. ஹாப்மேன். தொழில் பொருளாதாரங்களின் வளர்ச்சி, ஆக்ஸ்போர்டு—1958,—ப. 3.

28. பேரளவுத் தொழில்களின் பிரச்சினை

1. பருத்தி நெசவுத் தொழில்

வளர்ச்சி: பருத்தி நெசவுத் தொழில் இந்தியாவின் மிகப் பழைய தொழில்களில் ஒன்றாகும். இந்தியாவில் இத்தொழில் 1854-ல் பம்பாயில் சில ஆலைகள் துவக்கப்பட்ட பின்தான் சிறப் பாக ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பேதங்காட்டும்தொழில்பாதுகாப்புக் (Discriminating Protection) கொள்கையின் அடிப்படையில் 1926-ல் பருத்தி நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெறுவதற்குமுன் இத் தொழிலுக்குத் தொழில் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்தது. தொழில் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வந்த காலத்தில், அதாவது 1926-முதல் 1947-வரைக்கும் இத்தொழில் சிறப்பான முன்னேற்றத்தைப் பெற்று வளர்ந்தது. இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால் இந்தியப் பொருள்களுக்கு நேசநாடுகளின் பட்டாளங்களிட மிருந்து தேவை அதிகரித்தது. 1947-ல் நாடு இந்தியா, பாகிஸ்தான் என்று இரு பிரிவானதால், பருத்தி நெசவுத் தொழிலின் வளர்ச்சி தீவிரமாகப் பாதிக்கப்பட்டது. பிரிவினை யின் போது பாகிஸ்தானுக்கு, பருத்தி பயிராகும் இடங்களில் பெரும்பகுதி சேர்ந்து விட்டதால், இந்தியாவில் பருத்தி ஆலைகள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. செப்டம்பர் 1949-ல் இந்தியா பணத்தின் மதிப்பைக் குறைத்த போது பாகிஸ்தானும் அதைப் பின்பற்றியதால், கச்சாப் பருத்தியின் அளிப்பு மேலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. இதன் பிறகு இத்தொழிலின் வளர்ச்சி பெருகியது. வெளிநாட்டிலிருந்து கச்சாப் பருத்தியை இறக்குமதி செய்வதன் மூலமாயும் உள் நாட்டு உற்பத்தியைப் பெருக்கியும் இந்தியா தனக்கு தேவைப்

பட்ட கச்சாப் பருத்தியைப் பெற்று நெசவுத் தொழிலை வளர்த்தது. ஜுலை 1953-ல் பருத்தித் துணிகளின் மேல் இருந்த கட்டுப்பாட்டை அரசு நீக்கியது. ஆனால், பிறகு பருத்தி, பருத்தித்துணிகள் ஆகியவைகளுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டதால், அரசு மீண்டும் கட்டுப்பாட்டை அமுலாக்கியது. தற்போது அரசு ஒரு புடைக் கட்டுப்பாட்டுக் (Partial Control) கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது.

முதன் முதலில் பம்பாய் மாநிலத்திலேயே பருத்தி நெசவுத் தொழில் பெருகி வந்தது. ஆனால், ஒரே மாநிலத்திலேயே தொழில் செறிவு(Localisation of industries)ஏற்படுவது மாநிலங்களுக்குள் ஏற்றத்தாழ்வுகளைப் பெருக்குவதோடு இட நெருக்கடி, பணவீக்கம் போன்ற இன்னல்களும் ஏற்படுவதால், பருத்தி நெசவுத் தொழிலைப் பரவலாக்க முயற்சிக்கப்பட்டது. அநேக புதிய ஆலைகள் வட இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் மைசூர் மாநிலத்திலும் ஏற்பட்டன. பம்பாயில் ஏற்படுத்தப்பட்ட ஆலைகளில் நேர்த்தியான துணிவகைகள் ஏற்றுமதிக்காகவும் பணக்காரர்களுக்காகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், புதிய ஆலைப் பகுதிகளில் சிறிது தரமும் விலையும் குறைந்த துணிவகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பருத்தித்துணி உற்பத்தியில் அமெரிக்காவுக்கும் சைனாவுக்கும் அடுத்தபடியாக உலகத்திலேயே மூன்றும் இடத்தை இந்தியப் பருத்தி நெசவுத் தொழில் பெற்றுள்ளது. மேலும், பருத்தித் துணி வாணிபம் செய்வதிலும் இந்தியப் பருத்தி நெசவுத் தொழில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தியாவிலுள்ள வளர்ச்சியடைந்த பேரளவுத் தொழில்களில் இத் தொழில் முதலாவது இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இது அதிகமான தொழிலாளர்களை வேலையில் வைத்திருக்கும் பேரளவுத் தொழிலாகும். மொத்த ஆலைத் தொழிலாளர்களாகிய 4·6 மில்லியனில் 20 சதவீதம் அதாவது 9-லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை இத் தொழில் அளித்துள்ளது. மிகப் பழைமையான ஏற்றுமதிப் பொருள்களில் ஒன்றாகப் பருத்தி துணி வகைகள் இருந்து வருகின்றன. தற்சமயம் இத் தொழில் பெரும் பிரச்னைகளுடன் செயல் பட்டு வருகிறது.

பிரச்சினைகள்

(1) பருத்தி அளிப்பில் தட்டுப்பாடு

இத்தொழிலுக்கு இன்றியமையாத உற்பத்திப் பொருள் கச்சாப் பருத்தியாகும். இந்தியாவில் இக் கச்சாப் பொருள்

களின் தட்டுப்பாடு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆலை அல்லது கைத் தறித் தொழில்களில் துணி உற்பத்திச் செலவில் 40 முதல் 50 சதவீதம் பருத்திக்கான செலவாகவே அமைகிறது. உலகில் பருத்தி பயிரிடப்படும் 80 மில்லியன் ஏக்கர் நிலத்தில் 20 மில்லியன் ஏக்கர் நிலம் இந்தியாவிலேயே உள்ளது. ஆனால், உலக பருத்தி உற்பத்தியில் 10ல் ஒரு பங்கு கூட இந்தியாவில் உற்பத்தி செய்யப்படவில்லை. சராசரியாக ஓர் ஏக்கர் நிலத்தில் பருத்தி உற்பத்தி உலக சராசரியின்படி 304 பவுண்டுகளாக இருக்கிறது. ஆனால், இந்தியாவில் ஓர் ஏக்கருக்கு 110 முதல் 120 பவுண்டு பருத்தி விளைச்சலைத்தான் பெற முடிகிறது. பருத்தி அளிப்பில் தட்டுப்பாடு இருக்கிறபடியால், உயர்தர மெல்லிய துணிகளை உற்பத்தி செய்ய வெளி நாடுகளிலிருந்து நெட்டிழைப் பருத்தியை (Long staple cotton) இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்தியாவில் அயல் நாட்டுச் செலாவணித் தட்டுப்பாடு இருப்பதால், அது பெரிய நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது.

(2) உற்பத்தி விலை அதிகரிப்பு

பருத்தி நெசவுத் தொழிலில் பெரும்பாலான ஆலைகள் இன்னும் பழைய இயந்திரங்களையே வைத்து உற்பத்தி செய்து வருகின்றன. இதனால், உற்பத்தியின் அளவு குறைவதோடு உற்பத்திச் செலவும் அதிகமாகிறது. பருத்தி விலை அதிகரிப்பினாலும், கூலிகள் உயர்வதாலும், வரிவிதிப்பு அதிகமாவதாலும் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கின்றன. இதனால் நாட்டில் செலவுப் பணவீக்கம் (Cost-push inflation) ஏற்பட்டு இத்தொழிலின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. செலவுப் பண வீக்கத்தினால் லாபம் குறைகிறது. உற்பத்தியாளர்கள் அதிகச் செலவுகளை நுகர்வோர்களின் மீது திணித்தால் நுகர்வோர் பொருளை வாங்க மறுப்பார்கள், இப்பிரச்சினைகளைத் தீர்க்க நவீன முறைகளையும் சீரமைப்புகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(3) ஏற்றுமதிப் பிரச்சினை

பருத்தி துணி வகைகள் இந்தியாவிலிருந்து வெகு காலமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தவைகளாகும். அதனால், தற்போது இப்பொருள்களின் ஏற்றுமதி மிகவும் குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு இரண்டு முக்கிய காரணங்களாவன:

1. மிகப் பழமையான உற்பத்தி முறையினால் உற்பத்தி செலவு அதிகமாய் விடுவதால், பன்னாட்டுச் சந்தையில் அதிக விலையுள்ள இந்தியத்துணிகளுக்குத்தேவை குறைந்துஉள்ளது.

2. மேலும் இந்தியத்துணிகளுக்கு சுயமாக இயங்கும் இயந்திரங்களைக் கொண்ட ஜப்பான், பாகிஸ்தான் போன்ற நாடுகளால் போட்டி பெருகியுள்ளது. மேலும், நெதர்லாந்து, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளும் தங்கள் பருத்தித் துணிகளை பன்னாட்டுச் சந்தையில் குறைந்த விலைக்கு விற்று வருவதால் இந்தியப் பொருள்களுக்கு போட்டி அதிகரித்து வருகிறது. ஜூன் மாதம் 1966-ல் ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதால், துணி ஏற்றுமதி பாதிக்கப்பட்டது. ஏனெனில், அரசு உற்பத்தி ஊக்கத் திட்டங்களை (Incentive Schemes) நீக்கியது. ஏற்றுமதியின் அளவு பாதிக்கப்பட்டதால் மீண்டும் ஊக்கத் திட்டங்கள் அமுலுக்கு வந்தன. 1968-ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஏற்றுமதியின் அளவு அதிகரித்தது. இங்கிலாந்து, இந்தியப் பருத்தித் துணிகளை வழக்கமாய் இறக்குமதி செய்து வரும் நாடாகும். ஆனால், 1966-ல் இந்தியத் துணிகள் விற்கப்படாமல் தேங்கி இருந்தன. 1967-ல் இங்கிலாந்து ஐரோப்பியப் பொதுச் சந்தையில் சேர முயற்சி செய்ததால், இந்தியத் துணி ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்பட்டது. 1965-லிருந்து இந்தியத் துணிகளின் ஏற்றுமதி குறைந்தது. ஆப்பிரிக்க நாடுகளில் இறக்குமதி செய்யப்படும் 1·500 மில்லியன் கஜம் துணியில் இந்தியாவின் ஏற்றுமதி 100 மில்லியன் கஜம் அல்லது 7-சத வீதமாகும். எனவே, இத்துறையில் ஏற்றுமதியைப் பெருக்க புதிய வகைகளையும், முறைகளையும் கையாள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

(4) ஆலைச் சீரமைப்பு இன்மை

பழமையான இயந்திரங்களையும், இயந்திர அமைப்புக்களையும் கொண்டு உற்பத்தி செய்வதால், உற்பத்தி செலவு அதிகமாகிறது. இதைப் போக்கஇயந்திரங்களைச்சீரமைப்பதும், நவீனப்படுத்துவதும் இன்றியமையாததாகும். பெரும்பாலான இந்தியப் பருத்தி நெசவு ஆலைகளில் 25 ஆண்டுகளுக்கு மேல் உழைத்துதேய்ந்து போன இயந்திரங்களால் துணி உற்பத்தி செய்யப் படுகிறது. இதனால், அயல் நாடுகளின் போட்டியை எதிர்த்து நின்று ஏற்றுமதியைப் பெருக்க முடிவதில்லை. இந்தியப் பருத்தி நெசவுத் தொழிலைச் சீரமைக்க மொத்தம் ரூ. 1000 கோடி தேவைப்படும். இப்பெரும் தொகையை தங்கள் சொந்த நிதி உதவியுடன் தொழில்களே பெற இயலாது. எனவே, இத்தொழிலை நவீனப் படுத்த அரசு வங்கிகள், மற்ற நிதி நிறுவனங்கள் ஆகியவைகள் நிதி வசதி அளிக்க வேண்டும்.

நவீனப்படுத்துவதாலும் சீரமைப்பு மேற்கொள்வதாலும் வேலை வாய்ப்புகள் குறைந்து வேலையின்மை ஏற்படும் என்ற அச்சம் தொழிலாளர்களிடையே ஏற்படாமல் இருக்க, அவர்களுக்குக் கல்வி அறிவு கொடுக்கவேண்டும், மேலும். சீரமைப்பால் வேலைகள் குறைந்தால் வேலையற்றவர்களுக்கு மறுவேலை வாய்ப்புகளைப் பெருக்கவும் அரசு வகை செய்யவேண்டும். "கண்ணீரின்றி சீரமைப்பு" என்ற நிலை ஏற்படவேண்டும்.

(5) கட்டுப்பாட்டுப் பிரச்சினை

தனியார் துறையிலுள்ள துணி உற்பத்தியாளர்கள் அரசின் கட்டுப்பாடுகளால் உற்பத்தி அதிகரிக்காது என்று வாதாடி வருகின்றனர். கட்டுப்பாடுகளில் விலைக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு, தரக் கட்டுப்பாடு ஆகியவைகள் முக்கியமானவைகளாகும். அரசின் விலைக் கட்டுப்பாட்டினால் அதிகமாகும் உற்பத்திச் செலவை உற்பத்தியாளர்கள் பெற முடியவில்லை. இதனால் ஒரு சமயம் சிறிது லாபமும் சில சமயங்களில் லாபமே இல்லாத நிலையும் ஏற்படுகிறது. மேலும், தொழிலை நவீனப்படுத்த தடைகள் விதிக்கப்பட்டதால் ஒரு மனிதனால் மொத்த உற்பத்தியின் அளவு பாதிக்கப்பட்டது. வெகு நாட்களாக, பிற்பட்ட தொழில் நுட்ப முறையையே தொழில்கள் பின்பற்றி வரலாயின. 1960-ம் ஆண்டு வரைக்கும் இந்நிலை நீடித்தது. தற்போது இயந்திரங்களையும் இயந்திர அமைப்புகளையும் நவீனப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசு அறிந்துள்ளது. ஆனால், அயல்நாட்டுச் செலாவணித் தட்டுப்பாடு அதிகமாய் இருப்பதால் தேவையான அளவு நவீன இயந்திரங்களை இறக்குமதி செய்ய இயலவில்லை.

(6) பதிலீட்டுப் பொருள்கள்

உருக்கிச் செய்யப்பட்ட இழைகளாலான நைலான்,டெரிலின் போன்ற புதுமைப் பாங்குடைய பதிலீட்டுப் பொருள்களால் பருத்தித் துணி வகைகளின் தேவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பழமையான பருத்தி நெசவுத் துணிகளை உற்பத்தி செய்பவர்கள் தற்போது பருத்தி இழைகளையும் உருக்கிச் செய்யப்பட்ட இழைகளையும் சேர்த்து புதுவகைத் துணிகளை உற்பத்தி செய்து விற்று வருகின்றனர். அதனால்தான், ஓரளவு இப்பிரச்சினை குறைந்துள்ளது எனலாம்.

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்தொழிலின் வளர்ச்சி

முதலாம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பருத்தி நெசவுத் தொழில் சிறந்த முறையில் வளர்ந்தது. ஆனால், மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்தொழில் தீர்மானிக்கப்பட்ட குறியீட்டுகளையும் (Targets) சாதிக்க இயல வில்லை. மூன்றும் திட்ட காலத்தில் 70·65 லட்சம் பருத்திக்கட்டு கள் உற்பத்தி செய்யப்படக் குறிக்கப்பட்டது. ஆனால், உண் மையாக உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியின் அளவு 56·64 லட்சம் பருத்திக் கட்டுகளாகும். 1965—66-ன் முடிவில் தலா பருத்தித் துணி அளிப்பு 15·90 மீட்டர்களாகக் குறிப்பிடப் பட்டது. ஆனால், வருடத்திற்கு உண்மையில் தலா பருத்தித் துணியின் அளிப்பு 14.90 மீட்டர்தான் கிடைத்தது 1966—67-லும் 1967—68-லும் உண்மையில் பயன்படுத்தப்பட்ட ஆக்க சக்தி குறைந்தது. இதனால், துணி முறுக்கிழைகளின் உற்பத்தி இக்காலத்தில் முறையே 3 சதவீதம், 4 சதவீத டன்னுகக் குறைந் தது. 1968-ல் ஏராளமான நெசவு ஆலைகள் மூடப்பட்ட தால், துணிகளின் அளிப்பு பெரிதும் குறைந்தது: உள் நாட்டிலேயே துணித் தட்டுப்பாடு ஏற்பட்டதால், ஏற்றுமதியும் குறைந்தது, இதனால், குறித்த அயல்நாட்டுச் செலாவணியைப் பெற முடியவில்லை:

தலா துணியின் அளிப்பு

(மீட்டர்களில்)

வருடம்	பருத்தித் துணி	மனித சக்தியால் செய்யப்பட்ட இழைத் துணிகள்	மொத்தம்
1951	10·99	——	10·99
1956	14·71	——	14·71
1961	14·74	1·15	15·89
1966	13·78	1·63	15·41
1967	13·37	1·72	15·09

ஆதாரம் :—'காமர்ஸ்' வருடாந்திர அறிக்கை—1968.

இந்தியப் பருத்தி நெசவுத் தொழிலின் வளர்ச்சி

ஜனவரி 1-ம் தேதியில் இருந்தவாறு	ஆலைகளின் எண்ணிக்கை	பொருத்தப்பட்ட நூற்புக் கதிர்கள் (Spindles) (மில்லியனில்)
1948	356	10·1
1951	378	11·0
1956	412	12·1
1961	479	13·7
1966	575	16·1
1968	635	17·1

ஆதாரம் :—'காமர்ஸ்' வருடாந்திர அறிக்கை—1968.

சென்ற பத்து ஆண்டுகள் இத்தொழிலின் சோதனைக் காலமாகும். 1962 அக்டோபர்–நவம்பர் மாத சைனாவின் எல்லை ஆக்கிரமிப்பு முதல் இத்தொழிலின் வளர்ச்சி தடைப்பட்டது. சீனாவின் படையெடுப்பால் இந்தியாவில் புதுப் பண வீக்கம் ஏற்பட்டது. நாட்டில் வரிச் சுமையும் அதிகரித்தது. 1965-ன் இந்தோ—பாகிஸ்தான் சச்சரவுகளும் நாட்டில் பண வீக்கத்தையும் வரிப் பளுவையும் அதிகப்படுத்தின. ஒரு பக்கம் பண வீக்கமும் மறு பக்கம் தொழில் பின்னிறக்கமும் (Recession) ஏற்பட்டு, பருத்தி நெசவுத் தொழில் கட்டுக்கடங்காமல் சீர்குலைந்தது. இதன் முக்கிய காரணங்களாவன:— (1) 1966-ல் பருத்திப் பயிர் விளைச்சல் குறைந்தது. (2) அக்டோபர் 1964-லிருந்து மே 1968 வரைக்கும் துணி உற்பத்தியில் தீவிரமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. (3) சுங்க வரிச் சுமை அதிகரித்தது. (4) உள்நாட்டுத் தேவை குறைந்து ஏற்றுமதியும் குறைந்தது. பொருள்களின் விலைகள் கட்டுப்படுத்தப்பட்டதால், உற்பத்தியாளர்கள் உற்பத்திச் செலவைப் பெற இயலவில்லை. லாபத்தின் அளவு குறைந்ததால், அநேக பருத்தி நெசவு ஆலைகள் மூடப்பட்டு பலர் வேலை இழந்தனர். இதைச் சில புள்ளி விவரங்கள் மூலம் விளக்கலாம். 1963-க்கும் ஆகஸ்டு 1968-க்கும்

இடைப்பட்ட காலத்தில் பருத்தி விலைகள் 40 சதவீதம் அதிகரித்தன. கூலிகள் அதிகரித்தன. பம்பாய், அஹமதாபாத், டில்லி ஆகிய இடங்களில் கூலிகள் 60 சதவீதமும் தமிழ்நாட்டில் 41 சதவீதமும் உயர்ந்தன. துணி உற்பத்திச் செலவில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பு 40 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டது. துணிகளில் விலைகள் ஏறக்குறைய 18 சதவீதம் மட்டுமே அதிகரித்தன. ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி 256 மொத்த பருத்தி ஆலை நிறுவனங்களில், 1960—61-முதல் 1965—66 வரை 123 ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது.

பருத்தி நெசவுத் தொழிலின் உற்பத்தி

(மில்லியன் மீட்டர்களில்)

வருடம்	துணி உற்பத்தி		
	ஆலைத் தொழில் துறை	பரவலாக்கப்பட்ட தொழில்துறை	மொத்தம்
1951	3727	1013	4740
1956	4852	1663	6515
1961	4701	2372	7073
1966	4239	3097	7336
1967	4097	3179	7276
1968	4366	3530	7896
1969	4168	3538	7706
1970	4170 (மதிப்பீடு)	3600(மதிப்பீடு)	7770(மதிப்பீடு)

ஆதாரம் :— (1) "காமர்ஸ்"[2] வருடாந்திர அறிக்கை—1968
(2) "காமர்ஸ்" வருடாந்திர அறிக்கை—1970

முறுக்கிழை உற்பத்தி
(Yarn Production)

காலண்டர் ஆண்டு	முறுக்கிழை உற்பத்தி மில்லியன் கிலோ கிராம்களில்
1967	896
1968	961
1969	951
1970	965 (மதிப்பீடு)

ஆதாரம் :—"காமர்ஸ்" வருடாந்திர அறிக்கை—1970.

தீர்வுகள் : மேற்கண்ட அட்டவணைகளின் மூலம் 1969-ல் ஆலைகளில் பருத்தித் துணி உற்பத்தி 4366 மில்லியன் மீட்டரிலிருந்து 4168 மில்லியன் மீட்டர்களாகக் குறைந்தது. மேலும், முறுக்கிழைகளின் உற்பத்தியும் 1969-ல் 961 மில்லியன் கிலோ கிராம்களாக இருந்தது, 951 மில்லியன் கிலோ கிராம்களாகக் குறைந்தது. பருத்தித் துணி ஆலைகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதை நிவர்த்தி செய்வதற்காகச் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1968 ஏப்ரல் மாதத்தில் விலைக்கட்டுப்பாட்டின் அளவை அரசு குறைத்தது. முன்பு உற்பத்தி செய்யப்பட்ட துணிகளில் 40 சதவீதம் விலைக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கி இருந்தது; ஆனால் ஏப்ரல் 1968 லிருந்து மொத்த உற்பத்தியில் 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மேலும், சுங்க வரிகள் செலுத்துவதிலும் விலக்கு அளிக்கப்பட்டது. நெருக்கடியில் உயிர் பிழைக்கும் தகுதியும் லாபத்தைப் பெறக்கூடிய நிலையையும் ஏற்படுத்தினால்தான், இத் தொழிலின் சீரமைப்புக்குத் தேவையான நிதி வசதியை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற முடியும். தற்போது நிதி நிறுவனங்கள் இத் தொழில்களுக்குக் கடன் கொடுக்கத் தயங்குகின்றன. ஏனெனில், பருத்தித் துணி ஆலைகள் திறமை குறைந்து செயல் புரிந்து வருகின்றன. இத் தொழிலில் லாபத்தின் அளவைப் பெருக்க உற்பத்திச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும், அல்லது விலைகள் சற்று அதிகமாக்கப் படவேண்டும்; அல்லது வரிப்பளு குறைக்கப்பட

வேண்டும். உற்பத்திச் செலவுகளைக் குறைப்பது இயலாத காரியம். ஏனெனில், நாட்டில் பணவீக்கம் அதிகமாய் உள்ளது. பொருளின் விலைகளையும் அதிகரிக்க இயலாது. பொருளின் விலைகள் உயர்ந்தால் நுகர்வோர் புறக்கணிப்பு அதிகமாகும்.

இப்பிரச்சினைகளுக்குத் தகுந்த பரிகாரம் பருத்தி விளைச்சலை அதிகரிப்பதுதான். இந்தியப் பருத்தி ஆலைகள் சங்கம் (Indian Cottonmills Federation) நடத்திக் காட்டிய சோதனைகளின்படி விஞ்ஞான முறையில் நீர்ப்பாசனமும் உரங்களும், கிருமிநாசினிகளும் பயன்படுத்தப்பட்டால் ஓர் ஏக்கர் நிலத்தில் பருத்திப்பயிர் விளைச்சல் 50 விருந்து 60 சதவீதம் அதிகரிப்பது நாடு முழுவதும் நடத்திக் காண்பிக்கப்பட்டது. ஆனால், இம்முறையில் உற்பத்தி அதிகரிக்க, காலதாமதம் ஏற்படும். எனவே துணி, முறுக்கிழை ஆகியவற்றின் மேல் விதிக்கப்படும் சுங்க வரியைக் குறைத்தால் இத்தொழில் சீரடைய வாய்ப்புக் கிடைக்கும்.

இத் தொழிலின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகத்தான் அரசுக்கு அறிவுரை கூற, 1958-ல் D. S. ஜோஷி (துணித் தொழில் ஆணையாளர்) அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டது. துணிகளின்மேல் விதிக்கப்படும் சுங்க வரியைக் குறைக்க வேண்டுமென்று இக்குழு ஆலோசனை கூறியது. ஏற்றுமதிக்காக, துணிகளை உற்பத்தி செய்வதற்காக 3000 தானுக இயங்கும் தறிகளை அமைக்கவும் அது கருத்து தெரிவித்தது. நவீனப்படுத்துதல், சீரமைப்பு ஆகிய பிரச்சினைகளைப் பற்றிச் சரியான முடிவுகள் எடுக்கப்படவில்லை. இக்குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை அரசு அமுலாக்கியது.

பருத்தித் தொழிலை நவீனப்படுத்துவதற்காகவும் விரைவான வளர்ச்சி பெறச் செய்யவும் மனுபாய் ஷா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்துள்ளது. "மிகப் பழைமையான இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்திசெய்யும் தொழில்கள் படிப்படியாக ஆலைகளை நவீனப்படுத்த, தவணை முறையில் இயந்திரங்களைப் பெற மத்திய அரசு, ரிசர்வ்வங்கி ஆகியவைகள் வணிகவங்கிகளுடன் ஆலோசித்து நிதி உதவி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். பேரளவில் இயந்திரங்களை நவீனப் படுத்த விரும்பும் தொழில்களுக்கு மாநில அரசாங்கங்களின் காப்புநிதியுடன் 15 அல்லது 20 ஆண்டுகளுக்குத் தொழில் நிதிக் கழகம், தொழில் வளர்ச்சி

வங்கி, பட்டியலிலுள்ள வங்கிகள் ஆகியவைகள் நிதி உதவி செய்ய வேண்டும். இந்திய வருமானவரிச் சட்டத்தின் 23-A பிரிவின் அடிப்படையில் பருத்தி நெசவுத்தொழில் முதலிடம் பெற்ற தொழிலாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டும்.'' இவ்வாறு இக்குழு கருத்து தெரிவித்தது. 1969-70ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் பருத்தி நெசவுத் தொழிலை முதலிடம் பெற்ற ஒரு தொழிலாக அரசு சேர்த்துக் கொண்டது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் (1969-74) அறிக்கையின்படி ஆலைத்தொழில் துறையில் 1973–74-ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட வேண்டிய பருத்தித் துணியின் அளவு 5100 மில்லியன் மீட்டர்களாகக் குறிக்கப்பட்டுள்ளது. அரசால் நிர்வகிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட பலம் பொருந்திய ஆலைகளை நவீனப்படுத்தவும், சீரமைக்கவும் புதிய துணிக்கழகம் ஒன்றை நிறுவ அரசு கருதியுள்ளது. தென்னிந்தியாவில் சக்தியற்ற நிலையிலுள்ள ஆலைகளை அரசே எடுத்து நிர்வகிக்கத் தீர்மானித்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

2. இரும்பு எஃகுத் தொழில்

இரும்புத் தொழில் இந்தியாவில் தனியார் துறையில் உள்நாட்டு மூலதனத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. முதலாவதாக, 1907-ல் பீஹார் மாநிலத்திலுள்ள சாக்ச்சி என்னும் இடத்தில் டாடா இரும்பு, எஃகு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவின் இரும்பு, எஃகுத் தொழிலின் வளர்ச்சிக்கு இதுவே ஆரம்ப கட்டமாய் அமைந்தது. அதன் பிறகு மேலும் இரு எஃகு நிறுவகங்கள் ஏற்படுத்தப்பட்டன; ஒன்று 1908-ல் வங்காளத்தில் உள்ள ஹிராபுர் என்னுமிடத்தில் தோன்றிய இந்திய இரும்பு எஃகு நிறுவனமாகும்; மற்றொன்று 1923-ல் மைசூர் மாநிலத்திலுள்ள பத்ராவதி என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மைசூர் மாநில எஃகுத் தொழில் என்ற மைசூர் இரும்பு எஃகுத் தொழிலாகும். இரும்பு எஃகுத் தொழில் இந்தியாவில் 1922-ம் ஆண்டுவரை சீராக வளர்ந்து வந்தது. ஆனால், 1922–23-ல் இத் தொழிலுக்குக் கடும் போட்டி ஏற்பட்டதால், அரசு பாதுகாப்பு கொடுக்க வேண்டியசூழ்நிலை ஏற்பட்டது. அதனால் 1924-ல் அரசு இந்திய இரும்பு எஃகுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளித்தது. இத்தொழில் பாதுகாப்பு 1947-ம் ஆண்டு வரைக்கும் அமுலில் இருந்தது.

திட்ட கால வளர்ச்சி

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் இரும்பு எஃகுத் தொழில் மிக இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்கு

கிறது. அதனால்தான், இரண்டாம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில் கனரகத் தொழில்களுக்கு முதலிடம் அளிக்கப் பட்டு ஏராளமான பணம் முதலீடு செய்யப்பட்டது. மற்ற கன ரகத் தொழில்களுக்குத் தேவையான இரும்பு எஃகுப் பொருள் களை இத்தொழில்தான் அளிக்க வேண்டுமாதலாலும், இந்தி யாவின் விரைவான தொழில்மயத்திற்கும் இத் தொழிலின் சேவை அடிப்படையாக விளங்குவதாலும் இரண்டாம் திட்டத் தில் இத்தொழில் முதலிடம் பெற்றது. இரண்டாம், மூன்றும் திட்டகாலத்தில் எஃகு ஆக்கசக்தி நான்கு மடங்காகப் பெருகி, ஆண்டுக்கு 6 மில்லியன் டன் இரும்புப்பாளங்கள் உற்பத்தி செய்யப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப் பட்டது. மூன்றும் திட்டகால இறுதியில் ஆண்டுக்கு எஃகுத் தேவை 6.9 மில்லியன் எஃகு என்று தீர்மானிக்கப் பட்டது. எதிர்பார்க்கப்பட்ட 6 மில்லியன் டன் எஃகுப் பாளங்கள் உண்மையில் உற்பத்தி செய்யப்பட்டன. ஏனென்றால், பொதுத்துறையில் மூன்று எஃகு ஆலைகள் நிறுவப்பட்டன. ஒவ்வொன்றும் ஒரு மில்லி யன் டன்எஃகு உற்பத்தி செய்யும் சக்தி கொண்டவைகளாகும். இவைகள் 1955-59 வரையுமுள்ள காலப்பகுதியில் ரூர்கேலா, பிலாய், துர்காபூர் என்ற இடங்களில் மேற்கு ஜெர்மனி, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உதவியால் முறையே அமைக் கப்பட்டன. இத்துடன் தனியார் துறையிலும் எஃகு உற்பத்தி இருமடங்காய் உயர்ந்தது. டாடா இரும்பு எஃகு நிறுவனம் 1 மில்லியன் டன்னிலிருந்து 2 மில்லியன் டன்னுக எஃகு உற்பத் தியைப் பெருக்கியது. இந்திய இரும்பு எஃகு நிறுவனம் 500,000 டன்னிலிருந்து 1 மில்லியன் டன்னுக எஃகு உற்பத் தியை அதிகரித்தது. ''ஹிந்துஸ்தான் எஃகு'' என்ற பெயரால் பொதுத்துறையிலுள்ள எஃகு ஆலைகள் எல்லாம் ஒன்று சேர்ந் துள்ளன. 1956-ம் ஆண்டு வரைக்கும் எஃகு உற்பத்தி இந்தி யாவில் குறைந்திருந்தது. அதன் பிறகு எஃகுத் தொழில் சீராக வளர்ச்சியடைந்ததை கீழ்க்கண்ட அட்டவணை உணர்த்து கிறது.

எஃகுத் தொழிலின் உர்பத்தி

மில்லியன் டன்களில்

	1950·51	1955-56	1960-61	1965-66	1966-67
இரும்பு பாளங்கள்	1·7	2·0	4·3	7·1	7·0
எஃகு வார்ப்புக் கட்டிகள்	1·5	1·7	3·4	6·5	6·6
முடிவு நிலை எஃகு	1·0	1·3	2·4	4·5	4·4

மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்தொழிலின் ஆக்க சக்தியை 4·2 மில்லியன் டன் ஆண்டொன்றுக்கு அதிகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதாவது பிலாய் ஆலையின் உற்பத்தியை 1 மில்லியன் டன்னிலிருந்து 2·5 மில்லியன் டன்னுகவும், துர்காபூர் ஆலையினது 1 மில்லியன் டன்னிலிருந்து 1·8 மில்லியன் டன்னுகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. மேலும், 1·7 மில்லியன் டன் ஆரம்ப ஆக்க சக்தியுடைய ஒரு புது எஃகு ஆலையை, பொகாரோ என்னுமிடத்தில் நிறுவவும் கருத்து தெரிவிக்கப்பட்டது. தனியார் துறையில் இந்திய இரும்பு எஃகு நிறுவனம் தன் சக்தியை 3,00,000 டன் ஆண்டொன்றுக்கு அதிகரிக்கவும் முயற்சித்தது. ஆனுல், இக்குறியீடுகள் சாதிக்கப்படவில்லை. ஏனெனில், ஏற்கனவே இருந்த ஆலைகளின் உற்பத்திப் பெருக்க செயல்முறைகளில் காலதாமதம் ஏற்பட்டது. மேலும், பொகாரோ எஃகு ஆலைக்கு அமெரிக்க நாடு நிதி உதவி அளிக்காததால், மூன்ரும் திட்ட காலத்தில் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. தற்போது ரஷ்யா இந்திய அரசிற்கு பொகாரோ ஆலையைஅமைக்க உதவிசெய்ய முன்வந்துள்ளது.

தற்போது நம் நாட்டில் பொதுத்துறையிலும் தனியார் துறையிலுமாகச் சேர்ந்து மொத்தம் ஏறக்குறைய ஆண்டுக்கு 9·19 மில்லியன் டன் வார்ப்பு எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது. அதன் விவரம் வருமாறு :—

வார்ப்பு எஃகு (மில்லியன் டன்களில்)

இருக்கும் சக்தி		
	டாடா எஃகு	2·0
	இந்திய எஃகு	1·0
	பிலாய்	2·5
	துர்காபூர்	1·6
	ரூர்கேலா	1·8
	மின் உலை	0·1
	மொத்தம்	9·0
அதிகரிக்கும் சக்தி		
	பிலாயின் பெருக்கம்	1·7
	பொகாரோவின் முதலாவது இரண்டாவது கட்டம்	4·0
	இந்திய எஃகின் பெருக்கம்	0·3
	புதிய எஃகு ஆலைகள் சேலம், விசாகப்பட்டினம், ஹோஸ்பேட்	4·0
	அதிகரிக்கும் சக்தி மொத்தம்	10·0
	இருக்கும் சக்தி	9·0
	மொத்தம்	19·0

அதிகரிக்கும் ஆக்க சக்தியான 10 மில்லியன் டன்களில் 8 மில்லியன் டன் பொகாரோ ஆலையினாலும் மூன்று புதிய எஃகு ஆலைகளாலும் கிடைக்கும். உள்நாட்டு இயந்திரங்களைக் கொண்டே இந்த மூன்று புதிய ஆலைகளும் செயல் புரியும். இவ்வாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை இத்தியாவில் ராஞ்சி என்னுமிடத்திலுள்ள கனரகப் பொறித் தொழில் கழகம் (Heavy Engineering Corporation) வழங்கும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1973—74-ம் ஆண்டில் ஆண்டுக்கு 10·8 மில்லியன் டன் வார்ப்பு எஃகு உற்பத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நான்காம் திட்ட காலத்தில் எஃகு உற்பத்தியைப் பெருக்க மொத்தம் ரூ. 818 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 520 கோடி ஏற்கனவே இருக்கும் திட்டங்களைத் தொடர்ந்து அமுலாக்கவும் ரூ. 298 கோடி புதிய திட்டங்களுக்காகவும் செலவு செய்யப்படும். பொகாரோ எஃகு ஆலைக்கு மட்டும் ரூ. 622 கோடி செலவிடப்படும்,

பிரச்சினைகள்

இரும்பு எஃகுத் தொழிலின் வளர்ந்துவரும் பிரச்சினைகளில் சில வருமாறு :—

(1) கட்டுப்பாட்டுப் பிரச்சினை

வெகு நாட்களாகவே இரும்பு எஃகுத் தொழில் அரசால் ஒழுங்குப்படுத்தப்பட்டு வந்தது. அரசு விலைக் கட்டுப்பாட்டையும் பகிர்வுக் கட்டுப்பாட்டையும் மேற்கொண்டு வந்தது. இரண்டு மட்டங்களில் இந்திய எஃகுப் பொருளின் விலைகள் கட்டுப்படுத்தப்பட்டன. டாடா இரும்பு எஃகு நிறுவனம், இந்திய இரும்பு எஃகு நிறுவனம் ஆகிய இரு முதன்மையான தனியார் துறையிலுள்ள எஃகு உற்பத்தியாளர்களிடமிருந்து "கட்டுப்படுத்தப்பட்ட விலையில்" அரசு எஃகுப் பொருளை விலைக்கு வாங்கியது. அவ்வாறு குறைந்த விலையில் வாங்கி அதிக "விற்பனை விலைக்கு" எஃகுப் பொருளை அரசு விற்று வந்தது.

"விற்பனை விலைக்கும் (Selling Price) கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கும்(Retention Price)" இடையே உள்ள வேறுபாட்டினால் கிடைக்கும் தொகை, எஃகு விலைச் சமப்படுத்தும் நிதிக்கு (Steel Equalisation Fund)க் கொடுக்கப்பட்டது. இந்நிதியில் பெருகும் தொகை வெளிநாட்டு இரும்பு, எஃகு ஆகியவற்றை

இறக்குமதி செய்யவும் இந்திய எஃகுத் தொழிலை நவீனப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது. இந்நிதி ஏற்படுத்தப்பட்டதால் வெளிநாட்டு எஃகிற்கும் இந்திய எஃகிற்கும் இடையே இருந்த விலை வேறுபாடு குறைந்து இந்திய எஃகு உற்பத்தியாளர்கள் மிதமிஞ்சிய லாபம் பெறுவது தடுக்கப்பட்டது. ஆனால், வெகு நாட்களாகவே எஃகு உற்பத்தியாளர்கள் அரசின் விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கையைக் குறைகூறி வந்தனர். அரசின் விலைகள் மாறாமல் நிரந்தரமாக இருந்ததால், உற்பத்தியாளர்களுக்கு மிகக் குறைந்த லாபம்தான் கிடைத்ததாகக் குற்றம் சாட்டினர். எனவே, எஃகுக் கட்டுப்பாட்டுச் சம்பந்தமான எல்லா வகைப் பிரச்சினைகளையும் ஆராய டாக்டர் K. N. ராஜ் அவர்கள் தலைமையில் செப்டம்பர் 1962-ல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்டோபர் 1963-ல் இக்குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது.

இக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் வருமாறு:— (1) இத்தொழிலின் பிரதிநிதிகளையும் இரும்பு எஃகுக் கட்டுப்பாட்டாளரைத் தலைவராகவும் கொண்ட கூட்டு ஆலைக் குழு ஒன்றை ஏற்படுத்துதல். (2) சுங்க வரிக் குழு எஃகின் விலையைத் தீர்மானிப்பதற்குப் பதிலாக கூட்டு ஆலைக் குழு விலையைத் தீர்மானித்தல். (3) படிப்படியாக எஃகுக் கட்டுப்பாட்டை நீக்குதல். அதாவது முதலிடம் அளிக்கப்படாத துறைகளுக்கு எஃகு அளிக்கும்போது கட்டுப்பாட்டை நீக்கியும், பாதுகாப்பு, நிலக்கரி, எஃகு, எண்ணெய், கனரக இயந்திரம், வேளாண்மை, போக்குவரத்து போன்ற முதலிடம் பெற்ற துறைகளுக்கு எஃகு அளிக்கும்போது கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைத்தது. (4) உற்பத்தியாளர்களுக்கு அதிக விலையையும் தீர்மானிக்க இக்குழு கருத்துத் தெரிவித்தது. உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும் மிதமிஞ்சிய லாபத்தை அரசு சுங்க வரிகள் மூலம் எடுத்துக்கொள்ளலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. இதனால் நடுவர்களுக்குக் கிடைக்கும் மிதமிஞ்சிய லாபம் குறைந்து அரசுக்கு வருமானம் அதிகரிக்கும்.

இக்குழுவின் பரிந்துரைகளை ஒப்புக்கொண்டு மார்ச் 1, 1964-ல் பலவகை எஃகுப் பொருள்களின்மீது இருந்த விலை மற்றும் பகிர்வுக் கட்டுப்பாட்டை நீக்க அரசு தீர்மானித்தது. மொத்த எஃகு உற்பத்தியில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி கட்டுப்பாடு நீக்கப்பட்ட எஃகு வகையைச் சேர்ந்தது. கட்டுப்பாட்டு விலை, விற்பனை விலை என்ற இரு வகை விலைகள் இருப்

பதை நீக்கும் பொருட்டு எஃகு, விலைச் சமப்படுத்தும் நிதியையும் நீக்க அரசு தீர்மானித்தது. ஆனால், மேற்குறிப்பிட்ட இரு முக்கிய ஆலைகளாகிய டாடா எஃகு, இந்திய எஃகு ஆகியவைகள் கடந்த காலத்தில் சேர்ந்த தொகையின்மூலம் தொடர்ந்து இந்நிதியிலிருந்து நிதி வசதி பெற அனுமதிக்கப்பட்டது. ஓரளவு கட்டுப்பாட்டு நீக்கம் மேற்கொள்ளப்பட்ட பின், 1964-ல் எல்லாவகை எஃகு உற்பத்தியைத் திட்டமிட்டு வளர்ச்சியடையச் செய்ய அரசால் ஒரு கூட்டு ஆலைக் குழு நிறுவப்பட்டது. கூட்டு ஆலைக் குழுவில் இத்தொழிலின் பிரதிநிதிகளும் இரும்பு எஃகு கட்டுப்பாட்டாளரும் அங்கத்தினராவர். இக்குழு அமைக்கப்பட்ட பின் எல்லாவகை எஃகுப் பொருள்களின்மேல் இருந்த விலை, பகிர்வுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. இக்குழு தான் இனி நாட்டிலுள்ள எல்லாவகை எஃகுப் பொருள்களின் விலைகளையும் பகிர்வையும் தீர்மானிக்க வேண்டும்,

(2) நிலக்கரியைச் சிக்கனப்படுத்துதல்

தற்போது உலோகத் தொழிலுக்குரிய நிலக்கரியின் உற்பத்தி 10 முதல் 11 மில்லியன் டன்கள் ஆகும். ஆனால், இரும்பு எஃகுத் தொழில்கள் உபயோகிப்பது சுமார் 5 மில்லியன் டன்களாகும். எனவே, சுமார் 5 முதல் 6 மில்லியன் டன்கள் பயன்படுத்தப்படாமலோ அல்லது வீணாகவோ போகிறது. இரும்பு எஃகுத் தொழிலின் வளர்ச்சிக்கு இந்த நிலக்கரி இன்றியமையாததால் இதைப் பாதுகாக்காவிட்டால் வருங்காலத்தில் உலோகத் தொழிலுக்குரிய நிலக்கரியின் பற்றுக்குறை அதிகரிக்கும்.

(3) தொழில் பின்னிறக்கமும் (Recession) அதன் விளைவுகளும்

சமீபத்தில் இந்தியாவில் ஏற்பட்ட தொழில் பின்னிறக்கம் இந்திய இரும்பு எஃகுத் தொழில்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. இப்பின்னிறக்கம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. ஆரம்பத்தில் இப்பின்னிறக்கத்தின் விளைவால் எஃகுக்கும் எஃகுப் பொருள்களுக்கும் தேவை வெகுவாகக் குறைந்தது. இதனால் பொதுத்துறையிலுள்ள இரும்பு எஃகுத் தொழில்களின் ஆக்க சக்தியை முழுவதுமாகப் பயன்படுத்த இயலவில்லை. இதனால், உற்பத்தியின் அளவு குறைக்கப்பட்டு பலர் வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தனியார் துறையில் அதிர்ஷ்டவசமாக இரு பெரிய தொழில்களும் உற்பத்தியின் அளவை அதிகப்படுத்தியே வைக்க வாய்ப்பு கிடைத்

தது. அப்படியே கொஞ்சம் உற்பத்தி குறைந்திருந்தாலும் அது தொழில் தகராறுகளால்தான் ஏற்பட்டிருக்கும். 1967—68-ல் பொதுத்துறையிலுள்ள ஹிந்துஸ்தான் எஃகு அதன் மொத்த ஆக்க சக்தி வீதத்தில் 69 சதவீதத்தை மட்டும்தான் பயன்படுத்த முடிந்தது. விற்கப்படக்கூடிய எஃகின் உற்பத்தியின் அளவு உண்மையில் 2·56 மில்லியன் டன்னுக 1966—67-ல் இருந்தது, 2·42 மில்லியன் டன்னுக 1967—68-ல் குறைந்தது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த பிறகு மூன்று ஆண்டுகளுக்கு மேல் பொருளாதாரத் திட்டமானது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததால், இரும்பு எஃகுத் தொழில் இந்தியாவில் வளர்ச்சியடையவில்லை. திட்டமானது நிறுத்திவைக்கப்பட்டிருந்ததால் பொதுத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தள்ளிப்போடப்பட்டன. இரும்புத் தொழில் வளர்ச்சிக்கான செயல்முறைகள் வேகம் குறைந்தன. இதனுல் பிலாய், துர்காபூர் எஃகு ஆலைகளின் எஃகுப் பொருள்களின் தேவை குறைந்தது. வளர்ச்சித் திட்டங்கள் நிறுத்தப்பட்ட உடன் இவ்விரு பெரிய ஆலைகளின் பொருள்கள் விற்பனையாகாமல் மிஞ்சிக் கிடந்தன. நாட்டின் மொத்த எஃகு ஆக்க சக்தியில் இன்று 40 சதவீதம் இவ்விரு பெரிய ஆலைகளில் உள்ளது. பொறி இயல் துறைத் தொழில்கள் இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழில்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட தொழில் பின்னிறக்கம் எஃகுத் தொழிலின் வளர்ச்சிக்கான செயல் திட்டங்களைப் பெரிதும் பாதித்தது. பத்து ஆண்டுகளுக்கு முன் ஹிந்துஸ்தான் எஃகுத் தொழில் செயல் புரிய ஆரம்பித்ததிலிருந்து பின்னிறக்க காலம் வரையிலும் மொத்தத்தில் ரூ. 120 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்நஷ்ட மேற்பட பல காரணங்கள் இருந்தாலும் இயந்திரங்களின் அதிகமான தேய்மானமும் அதிக வட்டித் தொகையும் முக்கியமான காரணங்களாகும். தேவையில் ஏற்பட்ட வீழ்ச்சியால்தான் பொதுத் துறை எஃகு நிறுவனங்கள் பெரும் நஷ்டத்தைப் பெற்றன. நாட்டில் உற்பத்தியாகும் எஃகில் 50 சதவீதத்திற்கு மேல் வாங்கிக்கொள்ளும் அரசு வாங்குவதை ஒரேயடியாகக் குறைத்துக் கொண்டால் இத்தகைய நஷ்டங்கள் நாட்டில் ஏற்படும்.

(4) தொழில் அமைதியின்மை

தொழில் அமைதியின்மையால் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுவதால், தொழில் அமைதியை உருவாக்க வேண்டுவது அவசியமாகிறது. ஒரு தொழிற் சங்க அமைப்புக்குள்ளேயே சச்சரவு ஏற்படுவதாலும் ஒரு தொழிற் சங்கத்திற்கும் மற்ற

தொழிற் சங்கங்களுக்கிடையேயும் போட்டி ஏற்படுவதாலும் தொழில் அமைதி குலைகிறது. சமீபத்தில் ஹிந்துஸ்தான் எஃகு நிறுவனம் தொழிலாளர்களுக்குள் ஒழுங்கை நிலைநிறுத்தவும் அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(5) தரமுடைய கச்சாப் பொருள்களின் தட்டுப்பாடு

ஆக்க சக்தியைப் பெருக்குவதற்காக, தொழில் உற்பத்தியைச் சீர்படுத்துவதோடு தரமுடைய கச்சாப் பொருள்கள் தேவையான அளவு அளிக்கப்பட வேண்டும். வருடாந்திர எஃகு உற்பத்தி சுமார் ஒரு மில்லியன் டன்களாக இருக்கும் போது இந்திய இரு பெரும் ஆலைகளாகிய டாடா எஃகும் இந்திய எஃகும் ஏராளமான எஃகு மூலப் பொருள்களை அளித்து வந்தன. ஆக்க சக்தி பெருகத் தொடங்கியதுடன் நிலக்கரியின் தேவை அதிகரித்ததால் குறைந்த தரமுடைய நிலக்கரி உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டது. சிறந்த தரமுடைய நிலக்கரி தேவைப்படுவதால் நிலக்கரியைக் கழுவி உயர்ந்த ரகமாக்கி உற்பத்திக்கு அளிக்கவேண்டுவது இன்றியமையாததாகும். இதைப் போலவே இரும்புக்கனியை உயர்ந்த ரக இரும்பாக மாற்றி எஃகு உற்பத்திக்குக் கிடைக்கச் செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே, சீரான எஃகுத் தொழில் வளர்ச்சிக்கு மூலப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்கித் தேவைக்கு ஏற்றாற்போல் அளிப்பையும் பெருக்க வேண்டுவது அவசியமாகும்.

(6) ஏற்றுமதிப் பிரச்சினை

ஹிந்துஸ்தான் எஃகு நிறுவனம் ஆகிய எஃகுத் தொழில்களில் காணப்படும் முக்கிய பிரச்சினை எஃகுப் பொருளின் மொத்த உற்பத்தியைப் பெருக்குதலும் திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்துவதுமேயாகும். இக்குறிக்கோள்களை அடைய ஏற்கனவே சில வகைகள் கையாளப்பட்டன. இந்திய எஃகுத் தொழிலின் வருங்கால சீரான வளர்ச்சியை நிர்வாகத்தின் விரைவான நடவடிக்கைகளால் உழைப்பின் மொத்த உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் மேலும் பெருக்க முடியும். குறைந்த தரமுடைய நிலக்கரி, இரும்பு ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் குறைகளைப் போக்க, தொழில் நுட்ப முறையில் மாறுதல்களைப் புகுத்த வேண்டுவதும் அவசியமாகும். இத்தொழிலின் வளர்ச்சியை அதன் ஏற்றுமதியின் மதிப்பு மூலம் அறிய

லாம். ஹிந்துஸ்தான் எஃகு நிறுவனத்தின் ஏற்றுமதி 1964—65-ல் ரூ. 14 மில்லியனாக இருந்தது 1967—68-ல் ரூ. 309 மில்லியனாக அதிகரித்தது. 1968—69-ல் அது ரூ. 400 மில்லியனாக அதிகரிக்குமென்றும் கருதப்பட்டது. சூடான், கானா, ஈரான், துருக்கி, நியூஜிலாந்து, சிலோன், ரஷியா போன்ற நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து, தயாரிக்கப்பட்ட எஃகுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஹிந்துஸ்தான் எஃகு நிறுவனம் சமீப காலத்தில் ஏராளமான வார்ப்பு இரும்பை ஏற்றுமதி செய்து வருகிறது. ஆனால், அரசின் உதவிக் கொடைகளினால் இத் தொழில் வளர்ச்சி பெருகுவதால் இத்தொழிலின் உற்பத்தித் திறனை வெகுவாகப் பாராட்ட இயலவில்லை.

ஏற்றுமதித் துறையில் நிரந்தர விற்பனை முறையைக் கையாள ஹிந்துஸ்தான் எஃகு நிறுவனம் போன்றவைகள் திறமையைப் பெருக்க வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். பன்னாட்டு வாணிபத்தில் இந்திய எஃகுப் பொருள்கள் சிறப்பான முறையில் விற்கப்பட வேண்டுமெனில், மேல்நாடுகளில் பின்பற்றப்படும் தொழில் நுட்பமுறை முன்னேற்றங்களை இந்தியாவிலும் கையாள வகை செய்யவேண்டும். மேலும், உற்பத்தியைப் பரவலாக்கிப் புதிய பொருள்கள் உற்பத்தி செய்யும்முறைகளை ஆராய வேண்டும்.

3. சணல் தொழில்

சணல் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுள் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது. உலக சணல் உற்பத்தியில் ஏறக்குறைய 40 சதவித சணல் உற்பத்தி இந்தியாவிலேயே உள்ளது. சணல் பொருள்கள் இந்தியாவின் ஏற்றுமதிப் பட்டியலில் பண்டைக் காலந்தொட்டு தொடர்ந்து இருந்துவரும் ஏற்றுமதிப் பொருள்களாகும். நாட்டின் மொத்த அயல்நாட்டுச் செலாவணி வருவாயில் 25 சதவீதம் சணல் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலமாகத் தான் கிடைக்கிறது. சணல் உற்பத்தி செய்யப்படும் ஆலைகளில் ஏறக்குறைய 250,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். மேலும், சுமார் 4 மில்லியன் பேர்கள் சணல் பயிரிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

வளர்ச்சி : மேற்கு வங்காளத்தில் கச்சாச் சணல் ஏராளமாகக் கிடைப்பதால் கல்கத்தாவில் சணல் தொழில்கள் பெருகியுள்ளன. கச்சாப் பொருள்கள் அதிக அளவில் கிடைப்பதாலும் நிர்வாக நடுவர்களிடமிருந்து சுலபமாய் நிதி வசதி பெற முடிவதாலும் துறைமுக வசதிகள் இருப்பதாலும் அரசின் தொழிற்

பாதுகாப்பு இன்றி, சுதந்திரம் அடைவதற்கு முன்பே சணல் தொழில் இந்தியாவில் வளர்ச்சியுற்றது. 1930-ல் ஏற்பட்ட பெரிய தொழில் மந்த காலத்தில் இந்தியச் சணல் பொருள்களுக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து தேவை வெகுவாய் குறைந்ததால், இந்தியச் சணல் தொழிலின் வளர்ச்சி குன்றியது. ஆனால், இரண்டாவது உலக மகாயுத்த காலத்திலிருந்து இந்திய நாடு இந்தியா, பாகிஸ்தான் என்று 1947-ல் இரண்டாகப் பிரிக்கப்பட்ட வரை சணல் தொழில் இந்தியாவில் திருப்திகரமான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. நாடு சுதந்தரம் பெற்ற பின், சணல் ஆலைகளில் பெரும்பாலானவை இந்திய எல்லைக்குள் அமைய, சணல் பயிராகும் நிலங்களில் 80 சதவீதம் துரதிர்ஷ்டவசமாக, பாகிஸ்தான் எல்லைக்குள்ளேயே அமைந்து விட்டது. இதனால், கச்சாச் சணலை ஏற்றுமதி செய்துவந்த இந்தியா, சுதந்திரம் பெற்றபின் இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் இருந்து வருகிறது. சணல் தட்டுப்பாடு பெருகிக் கொண்டே சென்ற காரணத்தால், பாகிஸ்தான், தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து இந்தியா சணலை இறக்குமதி செய்து வருகிறது. மேலும் உள்நாட்டுச் சணல் உற்பத்தியைப் பெருக்க அரசு உதவிக் கொடைகளை அளித்து வருகிறது.

சென்ற இருபது ஆண்டுகளாகச் சணல் தொழில் நிலையாய் வளர்ச்சியடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதல் திட்ட காலத்தில் (1951–56) சணல் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரிகள் கூடுமானவரை குறைக்கப்பட்டன. ஆகஸ்டு 1955–ல் பாகிஸ்தான் தன் ரூபாயின் மதிப்பைக் குறைத்ததால், பாகிஸ்தான் சணல் தொழில் பெரும் நன்மை அடைவதை ஈடு செய்ய, இந்திய சணல் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரிகள் முழுவதுமாக நீக்கப்பட்டன.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட கால (1956--1961) முற்பகுதியில் சணல் தொழில் பெரிதும் தளர்ச்சி அடைந்தது. ஒரு புறம் கச்சாச் சணலின் விலைஅதிகரித்ததோடு, மறுபுறம்ஏராளமான சணல் பொருள்கள் விற்கப்படாமல் சந்தையில் குவிந்து கிடந்தன. ஆனால், 1958, 1959-ல் கச்சாச் சணலின் அளிப்பில் முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும், இந்தியச் சணல் பொருள்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல தேவையேற்பட்டது. இக்காலத்தில் சில ஆலைகளில் இயந்திரங்கள் நவீனப்படுத்தப்பட்டன. 1960-ல் உள்நாட்டில் கச்சாச் சணலின் உற்பத்தி குறைந்தது. இச்சமயத்தைப் பயன்படுத்தி யூக வணிகர்கள் கச்சாச் சணலைப் பதுக்கி வைத்ததால் விலை அதிகரித்தது.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட கால முற்பகுதியாகிய 1961–62, 1963-64-ல் கச்சாச் சணலின் அளிப்பு அதிகரித்தது. வெளிநாடுகளிலிருந்து இந்தியச் சணல் பொருள்களுக்குத் தேவையும் பெருகியது. இத்திட்ட காலத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளில் சணலின் அளிப்பு குறைந்தது. ஜூன் 6, 1966-ல் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதிலிருந்து ஓர் ஆண்டு வரைக்கும் இந்திய ஏற்றுமதி அதிகரிக்கவில்லை. எதிர்பார்த்ததற்கு மாருக, சணல் பொருள்களின் ஏற்றுமதி குறைந்தது. சமீபத்தில் மத்திய அரசு சணல் தொழிலுக்கு ஏற்றுமதி வரி குறைப்பு போன்ற பல சலுகைகளை அளித்து வருகிறது. ஏப்ரல் 1968-லிருந்து சணல் ஏற்றுமதித்துறையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

பிரச்சினைகள்

(1) கச்சாப் பொருள்களின் தட்டுப்பாடு

இந்தியநாடு இந்தியா, பாகிஸ்தான் என்று 1947-ல் இரண்டாகப் பிரிக்கப்பட்டதிலிருந்து சணல் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்றபின் சணல் பயிராகும் பகுதிகளெல்லாம் பாகிஸ்தானிலும் சணல் ஆலைகளில் பெரும்பான்மையானவை இந்தியாவிலும் சேர்ந்தன. அதனால், உள்நாட்டிலேயே சணல் விளைச்சலை அதிகரிக்க அரசு பல சலுகைகளைச்செய்து கொடுத்தும் இன்னும் பாகிஸ்தான், தாய்லாந்து ஆகியநாடுகளின் பெருந்தன்மையை நம்பியே இந்தியச் சணல் தொழில் அமைந்துள்ளது. சில சமயங்களில் சணல் விளைச்சல் பேரளவில் அதிகரித்தும் சில காலங்களில் மிகக் குறைந்தும் இருப்பதை, சென்ற மூன்றுஐந்தாண்டுத் திட்டகாலத்திலிருந்து அறியலாம்.

(2) ஏற்றுமதிப் பிரச்சினை

பண்டைக்காலந் தொட்டு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த பொருள்களில் சணல் பொருள்கள் பெரும் பங்கைப் பெற்று வந்தன. ஆனால், தற்போது இந்தியச் சணல் ஏற்றுமதி செய்யப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் முக்கியகாரணங்களாவன: (1)இந்தியக் கச்சாப் பொருள்களின் விலை மிக அதிகமாக இருப்பதால், சணல் பொருள்களின் விலை அதிகமாகிப் பன்னாட்டுவாணிபச் சந்தையில்இந்தியப் பொருள்களுக்குத் தேவை குறைந்துள்ளது. (2) இந்தியச் சணல் பொருள்களுக்குப் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து

போட்டி கடுமையாக அதிகரித்துள்ளது. (3) சணல் பொருள்களுக்குப் பதிலாக, பல சுவர்கொண்ட காகிதப் பைகள், பிளாஸ்டிக் பைகள் போன்ற பதிலீட்டுப் பொருள்கள் பெருகியுள்ளன. இந்தியச் சணல் பொருள்களின் விலை மற்ற நாடுகளின் பொருள்களைவிட அதிகமாக இருப்பதால், பன்னாட்டுச் சந்தையில் இந்தியப் பொருள்கள் விலை போவதில்லை. ஆகையால், சணல் விளைச்சல் வீதத்தை அதிகரித்தும் ஆலையை நவீனப்படுத்தியும் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். பாகிஸ்தானில் உள்ள சணல் ஆலைகள் மிகக் குறைந்த விலைக்குக் கச்சாச் சணலைப் பெற்று இயந்திரங்களை நவீனப்படுத்திக் குறைந்த செலவில் சணல் பொருள்களைத் தயாரிக்கின்றன. வெகு நாட்களாக இந்தியாவிலிருந்து சணல் பைகளை இறக்குமதி செய்து வந்த ரஷ்யா இப்போது பாகிஸ்தானிடமிருந்து இறக்குமதி செய்து வருகிறது. இதனால், மொத்தத்தில் ரூ. 8·3 கோடி 1966-ல் இந்தியாவுக்கு நஷ்டமேற்பட்டது. மேலும், இதுவரை சணல் பைகள் ஆகியவற்றை உபயோகித்து வந்த நாடுகள் இப்போது தங்கள் தேவைகளைக் குறைத்துள்ளன. பொருள்களை மொத்தமாக, பெருமளவில் ஏற்றுமதி செய்து விடுவதால், சணல் பைகளின் உபயோகம் குறைந்து விடுகிறது. பதிலீட்டுப் பொருள்களும் கிடைப்பதால், சணல் பொருள்களின் தேவை குறைந்துள்ளது.

(3) ஆலைகளில் நவீன முறையின்மை

இந்தியச் சணல் பொருள்களின் விலைஅதிகமாயிருப்பதற்கு ஒரு காரணம் இந்தியச் சணல் தொழில் இன்னும் சீரமைக்கப் படாமலும் நவீனப்படுத்தப்படாமலும் இருந்து வருவதாகும். பெரும்பாலான ஆலைகள் இன்னும் மிகப் பழைய, தேய்ந்து போன இயந்திரங்களைக் கொண்டே செயல் படுவதால், ஓர் இயந்திரத்திலிருந்து கிடைக்கும் மொத்த உற்பத்தி இந்தியாவில் மிகக் குறைந்துள்ளது. இதனால்தான், பாகிஸ்தான் போன்றநாடுகளின் சணல் பொருள்களுடன் இந்தியப்பொருள்கள் போட்டியிட, சக்தியற்று உள்ளன. இவ்வாறு உற்பத்தி வீதம் குறைந்திருப்பதால் தான், நிதி உதவியும் இத் தொழிலுக்கு அதிகமாகக் கிடைக்காமல் முதலீடும் குறைந்துள்ளது. பலம் வாய்ந்த இயந்திரங்களை நவீனப் படுத்த வசதிகொண்ட ஆலைகள் மட்டுமே உற்பத்தி செய்ய அனுமதிக்க வேண்டும். அப்போதுதான், குறைந்த விலைக்குப் பொருள்களை விற்க முடியும். தென் ஆப்பிரிக்கா, பிரேசில், ஜப்பான் போன்ற நாடுகள் சமீபத்தில் தங்கள் சணல் தொழிலை நவீனப்படுத்தியும் சீரமைத்

தும் குறைந்த செலவில் சணல் பொருள்களைத் தயாரித்து வருகின்றன.

(4) ஏற்றுமதி

இந்தியக் கோணிப்பைகளின் ஏற்றுமதி பெரிதும் குறைந்து விட்டது. சணல் துணிகளின் ஏற்றுமதி 1957-ல் 4,45,000 டன்களாக இருந்தது; 1966-ல் 1,73,000 டன்களாகக் குறைந்துள்ளது. இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பா, கானடா, ஆப்பிரிக்கா, ரஷ்யா, தூரக்கிழக்கு நாடுகள் ஆகிய நாடுகளுக்கு இந்தியா முரட்டுச் சணல்துணியை ஏற்றுமதி செய்து வந்தது. ஆனால், இப்போது இச்சந்தையை முழுவதுமாக இந்தியா இழந்து விட்டது. பாகிஸ்தானின் கடுமையான போட்டியினால் இந்தியாவின் ஏற்றுமதி குறைந்து வருவதைக் கீழ்க்கண்ட அட்டவணை தெளிவு படுத்தும்.

உலக சணல் ஏற்றுமதியின் பகிர்வு சதவீதம்

காலம்	உலக சணல் ஏற்றுமதியில் பங்கு		
	இந்தியா	பாகிஸ்தான்	மற்ற நாடுகள்
1951-60 (சராசரி)	80·9	6·7	12·4
1961	73·1	19·7	7·2
1964	64·8	16.5	18·7
1965	69·4	21·1	9·5
1966	60·1	2[illegible]·2	10·7
1967	61.0	28·9	10·1

ஆதாரம் :—மத்திய புள்ளி விவர அலுவலகம், கராச்சி.

அரசின் கொள்கை :

மே மாதம் 1954-ல் திரு. K.R.P. அய்யங்கார் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட சணல் விசாரணைக் குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதன் பரிந்துரைகளில் முக்கியமானவை வருமாறு :

(1) சணல் தொழில் வளர்ச்சி சபையை ஏற்படுத்துதல்

(2) அதிகமாகப் பயன்படுத்தப் படாத ஆக்க சக்தி தொழிலில் இருப்பதால் புதிய சணல்ஆலைகளை அமைக்கும் பணியைச் சில காலத்திற்குத் தள்ளிப் போடுதல்.

(3) சணல் தொழிலை நவீனப் படுத்துதல்

(4) கூடுமானவரை கச்சாப் பொருளில் தன்னிறைவு பெறுதல்.

(5) மண்டல முறையை ஏற்படுத்துதலும் கச்சாச் சணலின் குறைந்த பட்ச விலைகளை நிர்ணயித்தலும்

(6) வரிச்சலுகைகளின் மூலமாக இத்தொழிலுக்கு அரசு பாதுகாப்பு அளித்தல். இப்பரிந்துரைகளை முழுவதுமாக அரசு ஏற்றுக் கொண்டது. முக்கியமாக, புதிய சணல்ஆலைகளை அமைப்பதை சில காலத்திற்குத் தள்ளிவைக்க அரசு ஒப்புதல் அளித்தது. சணல் ஏற்றுமதியைப் பெருக்க வழி கூறுவதற்காக அமைக்கப்பட்ட திரு ஸ்ரீவத்ஸவா குழு ஆகஸ்டு 1963ல் தன் அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. மாநில வேளாண்மைத் துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க சணல் வளர்ச்சி மன்றம் ஒன்றை அமைக்குமாறு இக்குழு கருத்து தெரிவித்தது. சணல் தொழிலுக்குச் சிறந்த தரமான சணல் தேவையான அளவு கிடைக்கச் செய்யும் நம்பிக்கையோடு இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

எதிர்கால வளர்ச்சி

நான்காவது ஐந்தாண்டுத்திட்டம் தீட்டப்பட்ட பொழுது சணல் தொழிலின் எதிர்கால வளர்ச்சி பற்றி அறிய ஓர் ஆராய்ச்சிக் குழுவை அரசு ஏற்படுத்தியது. அக்குழுவின் கருத்துப்படி, 1973-74-ல் சணல் பொருள்களின் ஏற்றுமதி 9 லட்சம் டன்களுக்கு மேல் அதிகரிக்காது. செயற்கைக் கலவைப் பொருள்களின் கடுமையான போட்டியினலும் பாகிஸ்தானின் பேரளவு உற்பத்தியாலும் இந்திய ஏற்றுமதி இலக்குகள் குறைந்து உள்ளன. ஆனல், உள் நாட்டுத் தேவை 4 லட்சம் டன்னிலிருந்து 6 லட்சம் டன்னுக அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. கச்சாச் சணலில் தன்னிறைவு பெறுவதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டும். தரமான கச்சாச் சணலின் தட்டுப்பாடு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து

வருகிறது. உயர் தரமுடைய சணல் பயிரிடப்பட்டுக் குறைந்த விலைக்குக் கிடைக்கச்செய்தால், உலகம் முழுவதிலும் தேவைப் படுகிற புதியரக செயற்கைச் சணல் பொருள்களை உற்பத்தி செய்து பெருமளவில் ஏற்றுமதி செய்ய சிறந்த வாய்ப்பு கிடைக்கும். எனவே, உயர்தரமுடைய சணலைப் பயிரிட்டுஅதன் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்தியச் சணல் தொழிலுக்குத் தேவைப்படும் தரமான 12 லட்சம் சணல் கட்டுகளுக்குப் பதிலாக 9 லட்சம் சணல்கட்டுகள் தான் இப்போது இந்தியாவில் கிடைக்கின்றன. உயர்தர சணலின் தேவை 15 லட்சம் கட்டுகளாக வரும் நாட்களில் அதிகரிக்கும். இதனுல் அயல் நாடுகளை நம்ப வேண்டிய நிலை இன்னும் அதிகரிக்கும். எனவே, உள்நாட்டில் உயர்தர சணலை உற்பத்தி செய்து அதிக லாபத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

பாகிஸ்தானின் கடும் போட்டியிலிருந்து வெற்றி பெற நம் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். அதற்கு நம் இயந் திரங்கள் நவீனப் படுத்தப்படவேண்டும். அடுத்து, வெளி நாடுகளில் பெரிதும் தேவைப்படும் புது நோக்குடைய சணல் பொருள்களை உற்பத்தி செய்வதில் அக்கரை காட்டவேண்டும். சணல் ஆலைகள் நவீன முறைகளை மேற்கொள்ள முன்பு தங்கள் சொந்த நிதியையே நம்பி இருந்தனர். ஆனுல், 1955ம் ஆண்டி லிருந்து சணல் ஆலைகளை நவீனப்படுத்த தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம் நிதி உதவி அளித்துவருகிறது. மார்ச் 1966 வரைக்கும் இக்கழகம் இத்தொழிலுக்கு ரூ. 7·5 கோடி அளித் துள்ளது.

பாகிஸ்தானின் போட்டியைவிட, பதிலீட்டுப் பொருள் களின்பெருக்கம் இந்தியச் சணல் தொழில் வளர்ச்சிக்கு பெருந் தடையாய் உள்ளது. புதுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு, சணல் தொழில் முன்னேற அரசு பெரும் ஊக்கம் அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். முக்கியமாக, வரிச் சலுகைகளை அளித்து உற்பத்திச் செலவுகளைக் குறைக்க வகை செய்யவேண்டும். உண்மையில், 1969–70-ன் வரவு-செலவுத் திட்டத்தில் சணல் உற்பத்திப் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரியைக் குறைத்து, இச்சணல் தொழிலை முதலிடம் பெற்ற தொழில்களுடன் சேர்த்து வளர்ச்சி உதவிக் கொடைகளையும் கொடுக்க அரசு முன்வந்துள்ளது.

சணல் செய்பொருள் உற்பத்தியின் பெருக்கம்

ஆயிரம் டன்களில்

வருடம்	உற்பத்தி
1960	1088
1961	970
1962	1236
1964	1324
1965	1335
1966	1399
1967	1238

ஆதாரம்: இந்தியச் சணல் உற்பத்தியாளர் சங்க ஆண்டு அறிக்கை (1951–67)

4. சிமெண்டுத் தொழில்

1914-ல் போர்பந்தர் என்னுமிடத்தில் இந்தியச் சிமெண்டு நிறுவனம் முதன்முதலில் தொடங்கப்பட்டது. 1924-ல் இந்தியாவில் பத்து சிமெண்டுத் தொழிற்சாலைகள் மட்டும்தான் இருந்தன. இத்தொழிலின் வளர்ச்சிக்காக, சுங்க வரி வாரியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1924-ல் இவ்வாரியத்தின் பரிந்துரையின் பேரில் இறக்குமதி செய்யப்படும் ஒரு டன் சிமெண்டுக்கு ரூ. 9 சுங்க வரி விதிக்கப்பட்டது. 1930-ல் சிமெண்டு விற்பனை நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, சிமெண்டு பகிர்வு சமமாக இருக்க, அளவுமுறை (Quota System)யும் உட்புகுத்தப்பட்டது. இரண்டாம் யுத்தகாலத்தில் இத்தொழில் சிறந்த முன்னேற்றமடைந்தது. 1936-ல் நான்கு மிகப் பெரிய சிமெண்டுத் தொழிற்சாலைகள் ஒருங்கு சேர்ந்து "இணைந்த சிமெண்டு நிறுவனம்" (Associated Cement Companies) அமைக்கப்பட்டது. 1937-ல் டால்மியா கூட்டு நிறுவனம் சிமெண்டு உற்பத்தி செய்தது. இத்தொழிலில் மத்தியமயமாக்கப்பட்ட தொழிலுரிமை பெரிதும் காணப்படுகிறது. தற்போது செயல்புரிந்துவரும் 29 ஆலைகளில், 13 சிமெண்டு ஆலைகள் "இணைந்த சிமெண்டு நிறுவனத்தாலும், 6 ஆலைகள் டால்மியா–ஜெயின் தொழில் நிறு

வனத்தாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 1968-ல் சுமார் 12 மில்லியன் டன் சிமெண்டை இத்தொழில்கள் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. இன்று சிமெண்டுத் தொழில் 58,000 தொழிலாளர்களுக்குமேல் வேலைவாய்ப்பு அளித்துவருவதோடு ரூ. 50 கோடியை ஆண்டுதோறும் அரசுக்கு நேர்முக வரிகள் மூலம் வருவாயாகக் கொடுத்துவருகிறது.

திட்ட கால வளர்ச்சி

இந்தியா சுதந்திரம் பெற்றபின், இந்தொழிலின் வளர்ச்சி வெகுவாகப் பெருகியது. 1947--57-க்கு இடைப்பட்ட பத்து ஆண்டு காலத்தில் இத்தொழில் உயர்ந்த வளர்ச்சி விதத்தைப் பெற்று ஆண்டுக்கு 15 சதவீத வளர்ச்சியைப் பெற முடிந்தது. இதற்கு அடுத்த பத்து ஆண்டு காலத்தில் இத்தொழில்தளர்ச்சி அடைந்தது. 1957–67-க்கு இடைப்பட்ட காலத்தில் வருடாந்திர வளர்ச்சி வீதம் 6·5 சதவீதம் தான் இருந்தது. நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றுவரை இத்தொழில் சீராக வளர்ந்து ஆண்டுக்கு சராசரி வளர்ச்சி வீதம் 9 சதவீதத்திற்கும் அதிகமாகப் பெறமுடிந்தது. இருப்பினும், இத்தொழில் பெருக்கத்திற்குத் தேவையான மூலப் பொருள்களின் தட்டுப்பாட்டினால் இரண்டாம் மூன்றும் திட்ட காலத்தில், இச்சிமெண்டுத் தொழில் கணக்கிட்டபடி, இலக்குகளைச் சாதிக்க இயலவில்லை. நான்காம் ஐந்தாண்டுத் திட்ட நகலின்படி 18·0 மில்லியன் டன் சிமெண்டு ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. 1937 முதல் இத்தொழிலின் வளர்ச்சியை கீழ்க்கண்ட அட்டவணை விளக்குகிறது.

(மில்லியன் டன்களில்)

ஆண்டு	உற்பத்தி ஆக்கத் திறன்	உண்மை உற்பத்தி
1937	1·5	1·1
1946	2·6	2·0
1950–51	3·3	2·7
1955–56	4·9	4·6
1960–61	9·4	7·9
1965–66	11·6	10·8
1966–67	11·8	11·1
1967–68	12·3	11·3
1968–69 (மதிப்பு)	15·0	12·5

ஆதாரம்: வாணிபம் வருடாந்திர வெளியீடு–1968.–ப.142.

பிரச்சினைகள்

(1) விலைக் கட்டுப்பாடு

கடந்த 25 ஆண்டுகளாக, சிமெண்டின் விலையும், பகிர்வும் அரசின் ஏதேனும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது. முன்பு இத்தொழிலுக்கான விலைகளை அரசு தீர்மானித்தது. இவ்வாறு அரசு சுயேச்சையாய் விலைகளைத் தீர்மானிப்பதால் சுங்க வரிக் குழு தீர்மானித்த விலையைக் காட்டிலும் அரசின் விலை மிகக் குறைந்திருந்தது. சுங்க வரிக் குழு, உண்மையான உற்பத்திச் செலவின் அடிப்படையில் விலைகள் தீர்மானிக்கும் கொள்கைதான் சிறந்தது என்று கருத்துத் தெரிவித்தது. இக்குழு எல்லாவகைச் சிமெண்டுத் தொழில்களும் முதலீடு செய்த தொகையிலிருந்து 14 சதவீதத்திற்குள் லாபம் பெறக்கூடிய கொள்கையைச் சிபாரிசு செய்தது. அரசின் ஒரே வகையான விலைக் கொள்கையினால் திறமையுடைய தொழில்களுக்கு ஊக்கமும் லாபமும் குறைந்ததால் இத்தொழிலின் வளர்ச்சி குன்றியது. எனவே, அரசு குறிப்பிட்ட காலத்திற்கு அதிக செலவுகளைக் கொண்ட தொழில் பகுதிகளுக்கு வேறுபட்ட விலைகளைத் தீர்மானித்தது. ஆனால், இக்கொள்கையும் சிறப்பானதாக அமையவில்லை. ஏனெனில், மூலப் பொருள்களின் தர வேறுபாட்டாலும், போக்குவரத்துச் செலவில் ஏற்படும் மாறுபாட்டாலும் உற்பத்திச் செலவு ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒவ்வொருவிதமாக இருந்தது. எனவே, ஒரேவகை விலையானது பல்வேறு நிறுவனங்களைப் பெரிதும் பாதித்தது. அரசின் கருத்துப்படி சிமெண்டின் விலை உயர்வு இரு முக்கிய காரணங்களால் அனுமதிக்கப்பட முடியவில்லை. (1) சிமெண்டு உபயோகிப்பவர்களை அதிக விலையினின்றும் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகிறது. (2) சிமெண்டு மிக இன்றியமையாத ஒரு மூலப் பொருளாக உள்ளது. அதன் விலை மாற்றத்தால் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் மேற்கொள்ளப்படும் அநேக கட்டிடம் கட்டும் திட்டங்களின் செலவு அதிகரிக்கும். உற்பத்திச் செலவு அதிகரித்த போதிலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை விலை மாற்றத்தை மேற்கொள்வது நல்லது என்று 1961-ல் சுங்க வரிக் குழு கருதியது. ஆனால், அரசோ ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை விலை மாற்றத்தை விரும்பியது. சிமெண்டுத் தொழிலில் செலவு அதிகரிக்கும் பிரச்சினையும் குறைந்து செல்வு. உற்பத்தியும் சாதாரணமாய் காணப்படும் ஒன்றாகும். இத்தகைய பிரச்சினைகளைக் கருதி ஜனவரி 1, 1966-ல் சிமெண்டு விலை, பகிர்வு ஆகியவைகளின்மேல் உள்ள

கட்டுப்பாடுகளை அரசு நீக்கியது. அங்கீகரிக்கப்பட்ட விலைகளில் அரசுக்கு மட்டும் சிமெண்டு விற்கப்பட்டது. மொத்த சிமெண்டு உற்பத்தியில் 50 சதவீதத்தைத் திட்டங்களை நிறைவேற்றஅரசே வாங்கிக்கொள்கிறது. ஆனால், கட்டுப்பாடு நீக்கம் அநேக குறைபாடுகளை ஏற்படுத்தியதால், ஜனவரி 1, 1968-ல் மீண்டும் விலை, பகிர்வுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது. உற்பத்திச் செலவில் ஏற்படும் வேறுபாட்டின் அடிப்படையில் விலைகள் தீர்மானிக்கும் முறையும் மறுபடியும் உட்புகுந்தப்பட்டது. அரசின் நடவடிக்கைகளால் உற்பத்திச் செலவு உயர்வதால் கட்டுப்பாட்டு விலையும் அதிகரிக்கப்பட வேண்டுமென்று அரசிடம் இத்தொழிலதிபர்கள் வேண்டினர். இவ்வேண்டுகோளை அரசு தீவிரமாகப் பரிசீலித்து ஏப்ரல் 16, 1969-ல் ஒரே வகை கட்டுப்பாட்டு விலையாக ஒரு டன்னுக்கு ரூ. 100 என்று தீர்மானிக்கப்பட்டது. கட்டுப்பாட்டால் சிமெண்டு உற்பத்தியில் பிராந்தியங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு ஏற்படுவதால் அதை நீக்குவதே சிறந்ததாகும். தற்போது சிமெண்டும் சுலபமாகக் கிடைப்பதால் கட்டுப்பாட்டு நீக்கம் அவசியமாகிறது. அரசும் ஜனவரி 1, 1970-ல் கட்டுப்பாட்டை நீக்கிவிட எண்ணியது வரவேற்கத்தக்கதாகும்.

(2) முதல் தட்டுப்பாடு

கட்டுப்பாட்டின் மூலம் அரசு குறைந்த விலைகளைத் தீர்மானிப்பதால் உற்பத்திச் செலவு அதிகரித்து இருக்கும் நிலையில் இத்தொழிலில் லாபம் மிகக் குறைவாக உள்ளது. லாபம் குறைந்தால் தொழிலில் முதலீடு பெருக வாய்ப்பில்லாமல் தொழிலின் வளர்ச்சி தடைபடுகிறது. லாபம் குறைந்த தொழிலாக அமைந்திருப்பதால் முதல் அங்காடியிலிருந்து முதலைக் கடனாகப் பெறத்தக்க சக்தி இத்தொழிலுக்கு இல்லை. ரிசர்வ் வங்கியின் கணக்கீட்டுப்படி 1962–63-ல் சிமெண்டுத் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து 9·4 சதவீத லாபம் தான் கிடைத்திருக்கிறது. இந்த லாப வீதம் மற்ற முதல் செறிவுத் தொழில்களில் முதலீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து கிடைக்கும் லாபத்தைக் காட்டிலும் மிகக் குறைவானதாகும். இந்நிலையை மாற்றவேண்டுவது மிகவும் அவசியமாகும்.

(3) தொழில் செறிவு

இந்தியச் சிமெண்டுத் தொழில் ஒரு தலைப்பட்ட வளர்ச்சியைப் பெற்றுள்ளது. சில மாநிலங்களில் மட்டுமே இத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், சிமெண்டுத் தேவை

யானது எல்லாப் பகுதிகளிலும் காணப்படுவதாகும். மேற்கு வங்காளம், அஸ்ஸாம், மஹாராஷ்டிரம், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் சிமெண்டுத் தொழிற்சாலைகளே இல்லை. எனவே, தொழிற்சாலைகள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். ஆனால், சில மாநிலங்களில் சுண்ணாம்பு மற்றும் வேறு மூலப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆனால், நிலக்கரிக்கனி கிடைப்ப தில்லை. எப்படியும், அதிக விலை கொடுத்து நிலக்கரி வாங்கும் புதிய ஆலைப் பகுதிகளுக்குத் தேவையான நிலக்கரியைக் கிடைக்கச் செய்ய வகைசெய்ய வேண்டும்.

(4) ஆக்க சக்தியைப் பயன்படுத்த இயலாமை

இந்தியச் சிமெண்டுத் தொழில் மொத்த ஆக்க சக்தியில் 80 சதவீதத்தை மட்டும்தான் பயன் படுத்த முடிகிறது. சுமார் 20 சதவீத ஆக்க சக்தி வீணடிக்கப் படுகிறது. இதன் முக்கிய காரணங்கள் வருமாறு :—(1) சில பகுதிகளில் நிலக்கரி கிடைக்காமை (2) சிமெண்டை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல போதிய ரயில் பெட்டி வண்டிகள் இல்லாமை (3) மின் சக்தியின் பற்றுக்குறை ஆகியவைகளாகும். சமீபத்தில் ஏற்பட்ட தொழில் பின்னிறக்கமும் முழு அளவில் ஆக்க சக்தியைப் பயன் படுத்த வசதியளிக்க வில்லை. இருப்பினும், அரசின் தேவை குறைப்பு தனியார் துறையின் தேவை அதிகரிப்பால் ஈடு செய்யப் பட்டு விட்டது. வேளாண்மைத்துறையும் முன்னேற்ற மடைந்து வருவதால், சிமெண்டின் தேவை நாட்டில் பெருகி வருகிறது. பொதுவாக, மற்ற வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் தலா சிமெண்டு நுகர்வு மிகவும் குறைவு என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறியலாம்.

தலா சிமெண்டு நுகர்வு (1966)

நாடு	தலா நுகர்வு (கிலோ கிராம்களில்)
சுவிட்ஜர்லாந்து	715
மேற்கு ஜெர்மனி	563
ஸ்வீடன்	481
பெல்ஜியம்	463
பிரான்ஸ்	457
இத்தாலி	426
ஜப்பான்	365
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	342
ஐக்கிய இங்கிலாந்து	305
இந்தியா	22

ஆதாரம் :—“வாணிபம்” வருடாந்திர வெளியீடு—1968, —ப. 144.

வருங்கால வளர்ச்சி:

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வந்ததும் கட்டிட வேலைகள் நாட்டில் பெருகு மாதலால், சிமெண்டின் தேவை நாட்டில் இன்னும் அதிகரிக்கும். தற்போதுள்ள 22 கி. கிராம் தலா சிமெண்டு நுகர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். உள் நாட்டுத்தேவையைப் பூர்த்தி செய்வதோடு ஏற்று மதிக்காகவும் இத் தொழில் பெரிதும் முயன்று வருவது போற் றத்தக்கதாகும். 1968-ம் ஆண்டில் ஏறக்குறைய மூன்று லட்சம் டன் சிமெண்டு சிலோன், பாரசீக வளைகுடா நாடுகள் ஆகிய வற்றிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், மேலும் பெரும் அளவில் ஏற்றமதி செய்ய, போதிய போட்டியைச் சமாளிக்கும் திறமை இந்தியத் தொழில்களிடம் இல்லை. இதன் காரணம் உற்பத்திச் செலவு இந்தியாவில் அதிகமாக இருப்பது தான். இருப்பினும், சிமெண்டுத் தொழிலுக்குத் தேவையான தொழில் நுட்ப இயந்திரங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவதால், அயல்நாட்டுச் செலாவணி பெரிதும் சேமிக்கப் படுகிறது. சிமெண்டுத் தயாரிப்பாளர்களே இந்தியாவில் தங்களுக்குத் தேவையான இயந்திரங்களையும் தயாரித்து வருகின்றனர். சிமெண்டு ஆகியவற்றைப் பற்றி ஆராய்ச்சி நடந்த நாடு முழு வதும் சுமார் 36 ஆராய்ச்சி கூடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. பல்வேறு ஆராய்ச்சி கூடங்களின் முடிவை ஒருங்கிணைத்து ஆராய இந்தியச் சிமெண்டு ஆராய்ச்சி கூடம் ஒன்றை ஏழு ஆண்டுகளுக்குமுன் சிமெண்டு உற்பத்தியாளர்கள் சங்கம் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாராய்ச்சி கூடத்திற்கு விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சி சபையும் உதவி புரிந்து வருகிறது.

(5) சர்க்கரைத் தொழில்

வளர்ச்சி :—இந்தியப் பேரளவுத் தொழில்களில் சர்க்கரைத் தொழிலும் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இந்திய வேளாண்மைத்துறையில் ஏற்படும் மாறுதலுக்கேற்பவும் கரும்பு விளைச்சலுக் கேற்றபடியும் சர்க்கரைத் தொழிலின் வளர்ச்சி மாறுபட்டு விளங்குகிறது. சர்க்கரைத் தொழிலுக்கு 1932 ல் தொழிற் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. அப்போது முதல் இந்தியாவில் சர்க்கரைத் தொழில் சீராக வளர ஆரம்பித்தது. 1950 வரைக்கும் தொழிற் பாதுகாப்புஅளிக்கப்பட்டது. இரண் டாம் யுத்த காலத்தில் சர்க்கரைத் தொழில் நல்ல வளர்ச்சி பெற்றது. நேச நாடுகளிடமிருந்து இந்தியச் சர்க்கரையின் தேவை மிகுந்தது. ஆனால், உள் நாட்டில் போக்கு வரத்து

வசதியின்மையாலும் சர்க்கரைச் சரக்கைப் பதுக்கிவைக்கச் சிலர் முயன்றதாலும் சர்க்கரைப்பஞ்சம் ஏற்பட்டது. இந்நிலையைச் சமாளிக்க அரசு கட்டுப்பாட்டு முறையைப் புகுத்தியும் பயனில்லாது போயிற்று. திறமையற்ற பலவீனமான நிர்வாக முறையால் கட்டுப்பாட்டை அமுல் நடத்த இயலாது எனவே, 1952-ல் சர்க்கரை மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதும் அதன் தேவை பெருகியது. தேவைப் பெருக்கம் இத்தொழிலின் வளர்ச்சியையும் அதிகரித்தது. வெளிநாடுகளிலிருந்து உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டது. 1953 முதல் 1956 வரை சர்க்கரைத் தொழில் வெகுவாக வளர்ந்தது. ஆனால், 1957, 1958-ல் சர்க்கரை உற்பத்தி குறைந்து தொழில் வளர்ச்சி குறைந்தது. அதன்பின், 1959 லிருந்து உற்பத்தியின் அளவு பெருகியது.

இரண்டாம் ஐந்தாண்டுத்திட்ட இறுதியில் சர்க்கரை உற்பத்தியின் அளவு பெருகி 3 மில்லியன் டன் இலக்கைத் தாண்டியது. மூன்றும் திட்ட காலத்தில் சர்க்கரைத் தொழிலின் வளர்ச்சி குறைந்தது. ஆனால், சர்க்கரையின் தேவை நாட்டில் அதிகரித்தது. இந்நிலையைச் சமாளிக்க ஏப்ரல் 1969 லிருந்து கட்டுப்பாடு உட்புகுத்தப்பட்டது.

சமீப காலத்திற்கு முன்பு சர்க்கரைத் தொழில் வட இந்தியாவில் மட்டும் தழைத்தோங்கி இருந்தது. முக்கியமாக, உத்தரப் பிரதேசம், பீஹார் போன்ற வட இந்திய மாநிலங்களில் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் சர்க்கரை உற்பத்தி 85 சதவீதத்திற்குமேல் இருந்தது. ஆனால், இப்போது தென் இந்திய மாநிலங்களிலும் சர்க்கரை ஆலைகள் தோன்றியுள்ளன. முக்கியமாக, தமிழ் நாடு, மைசூர், ஆந்திரப் பிரதேசம், பம்பாய் ஆகிய மாநிலங்களில் சர்க்கரை ஆலைகள் ஏராளமாய் இருக்கின்றன. தென் இந்தியச் சர்க்கரை ஆலைகள் அதிக உற்பத்தித் திறனுடன் செயல்புரிந்து வருகின்றன. தென் இந்தியாவில் உற்பத்திச் செலவும் குறைவாய் உள்ளது. இதன் காரணங்கள் வருமாறு :- தென் இந்தியாவில் உள்ள சர்க்கரை ஆலைகள் சொந்த பண்ணைகள் வைத்து கரும்பு பயிர் செய்து வருகின்றன. மேலும் இப்பகுதிகளில் விளையும் கரும்பில் சர்க்கரைச் சாறு அதிகமாயும் உள்ளது. இத் தொழிலின் துணை மூலப் பொருள்கள் (By-Products) தென் பகுதிகளில் மிகச் சிக்கனமாய் ஆலைகளில் பயன்படுத்தப் படுகின்றன.

பிரச்சினைகள் :

(1) கரும்பு தட்டுப்பாடு :

வட இந்தியாவில் கரும்பு பற்றாக்குறையால் பிரச்சினை மேலோங்கி வருகிறது. உத்தரப் பிரதேசத்திலும் பீஹாரிலும் சர்க்கரை ஆலைகள் அதிகம் இருப்பதால், அங்கு கரும்புக்குப் போட்டி அதிகமாக உள்ளது. கர் (Gur), கண்டசாரி (Khanda-sari) போன்ற நாட்டுச் சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைப் பகுதிகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே மூலப்பொருளாகிய கரும்புக்குப் போட்டி கடுமையாக உள்ளது. சர்க்கரை ஆலைகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு கரும்புவிற்கப்படும் போது அத்தகைய கட்டுப்பாடு இன்றி, கரும்பு நாட்டுச் சர்க்கரை உற்பத்தியாளர்களுக்கு விற்கப்படுகிறது. கரும்பு பயிரிடுபவர்கள் அதிகவிலைக்கு லாபத்துடன் கர், கண்டசாரி உற்பத்தி செய்யும் ஆலைப்பகுதிகளுக்கு, கரும்பை விற்று விடுகின்றனர். பாதகமான காலச் சூழ்நிலையால் மூன்றும் திட்ட காலத்தின் போது கரும்பு உற்பத்தி நாட்டில் குறைந்தது. இதனால், கரும்புத்தட்டுப்பாடு அதிகரித்தது. சர்க்கரை, கர், கண்டசாரி தொழில்களுக்குக் கரும்பின் அளிப்பு சமமாய் அமைய, சர்க்கரைத் தொழிலுக்கு அளிக்கப்பட்ட கரும்பின் விலையை அரசு அதிகரித்தது. கர், கண்டசாரி ஆகிய தொழில்களுக்கு அளிக்கப்பட்ட கரும்பின் விலையையும் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்தது.

(2) நவீனப்படுத்த இயலாமை

வெகு நாட்களாகவே அரசு உதவிக் கொடைகளைக் கொடுத்து சர்க்கரை ஏற்றுமதியைப் பரிபாலித்து வந்தது. ஆனால், சர்க்கரைத் தொழில் போட்டியைத் தாங்கும் திறமையைப் பெற்றால்தான் ஏற்றுமதியின் அளவைப் பெருக்க முடியும். எனவே, இந்தியச் சர்க்கரை ஆலைகள் இயந்திரங்களை நவீனப் படுத்தினால் உற்பத்திச் செலவைக் குறைத்து குறைந்த விலையில் சர்க்கரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இயலும். தேசிய வளர்ச்சிசபை(National Development Council)இந்தியச் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்த குறைந்தது ரூ. 60 கோடி தேவைப்படும் என்று மதிப்பிட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இந்த ஆலைகளிடம் காப்புநிதியும் இல்லை. எனவே, தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம் பருத்தி துணி ஆலைகளுக்கு நிதி

உதவி கொடுத்து உதவுவது போல், சர்க்கரை ஆலைகளுக்கும் நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும்.

(3) கட்டுப்பாடு

இந்தியச் சர்க்கரைத் தொழில் எப்பொழுதுமே அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 7 ஆண்டுகள் சர்க்கரையின் மீது அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. ஏப்ரல் 1963-ல் கட்டுப்பாடு மீண்டும் கொண்டு வரப்பட்டு 1966–67 வரைக்கும் தீவிரமாக அமுலில் இருந்தது. இக்காலத்தில் கரும்பு விளைச்சல் பெரிதும் குறைந்தது. 1965–66ல் இருந்ததைவிட, 1966–67-ல் கரும்பு உற்பத்தி 22·5 சதவீதம் குறைந்தது. மேலும், கர், கண்டசாரி உற்பத்திக்காக, கரும்பு பெருமளவில் பயன்படுத்தப்பட்டதால், சர்க்கரை உற்பத்தி நாட்டில் குறைந்தது. 1965–66-ல் இருந்ததைவிட 1967–68-ல் சர்க்கரை உற்பத்தி 39 சதவீதம் குறைந்தது. 1966–67-ல் 22·6 லட்சம் டன்களாக, சர்க்கரை உற்பத்தி குறைந்தது. 1967-68-ல் கர், கண்டசாரி ஆகியவைகளின் உற்பத்தியால் சர்க்கரை உற்பத்தி 15 லட்சம் டன்களுக்கும் குறைந்தது. முழுவதுமாகக் கட்டுப்பாட்டை நீக்கினுல் சில இடங்களில் கட்டுப்பாட்டு விலையில் சர்க்கரை விற்கப்படுவது பாதிக்கப்படும். எனவே, ஆகஸ்டு 1967-ல் ஒரு பகுதி கட்டுப்பாடு நீக்கம் (Partial Decontrol) அமுலில் வந்தது. பகுதிக் கட்டுப்பாடு நீக்கத்தால் சர்க்கரை ஆலைகள் நாட்டுச் சர்க்கரை உற்பத்தியாளர்களுடன் சுதந்திரமாய்ப் போட்டியிட்டு கரும்பைப் பெற முயன்றன. போட்டியின் காரணத்தினுல் ஒரு குவிண்டால் கரும்பின் விலை ரூ. 16 வரை அதிகரித்தது. Dr S. R. சென் அவர்களைத் தலைவராகக் கொண்ட சர்க்கரை விசாரணைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில்தான் பகுதிக் கட்டுப்பாடு நீக்கம் அமுல் படுத்தப்பட்டது.

இக்குழுவின் மற்ற பரிந்துரைகள் வருமாறு :—சர்க்கரை ஏற்றுமதியைப் பெருக்கத் தேவையான வழிவகைகளை மேற்கொள்ளுதல், உள்நாட்டுச் சர்க்கரைப் பகிர்வை இந்திய உணவுக் கார்ப்பரேஷன் மேற்கொள்ளச் செய்தல், சர்க்கரை ஏற்றுமதிப் பணியை, தேசியத் தொழில் கார்ப்பரேஷனிடம் ஒப்படைத்தல் ஆகியவைகளாகும்.

(4) ஏற்றுமதிப் பிரச்சினை

கியூபா நாட்டுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட அரசியல் கருத்து வேறுபாடுகளால் கியூபா

வின் சர்க்கரை அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படவில்லை. இதனால், இந்திய சர்க்கரையின் தேவை அமெரிக்காவில் பெருகியது. ஆனால் உள்நாட்டில் உற்பத்திச்செலவு அதிகரிப்பு ஏற்றுமதிக்குப் பெரும் தடையாய் இருந்தது. அதனால், அரசு ஏராளமான உதவிக் கொடைகளைக் கொடுத்து ஏற்றுமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. உள்நாட்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரித்ததால் சர்க்கரையின் தேவையும் பெருகியது. எனவே; நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் ஒரு பகுதியை ஏற்றுமதிக்காக ஒதுக்குவதா அல்லது உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வைத்துக்கொள்வதா என்ற பிரச்சினை இன்னும் தீரவில்லை.

அரசின் கொள்கை

பகுதிக் கட்டுப்பாடு நீக்கம் மிகவும் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தியது. சர்க்கரை ஆலைகள் கர், கண்டசாரி ஆலைகளுடன் போட்டியிட்டு, போட்டி விலையில் கரும்பைப் பெற முடிந்தது. கரும்பு பயிரிடுபவர்களும் சர்க்கரைத் தொழில் சரித்திரத்திலேயே காணமுடியாத அளவு, அதிக விலைகளால் லாபமடைந்தனர். அதைவிட முக்கியமாக அரசின் சர்க்கரைக் கொள்கை கரும்புக்குப் பதில் வேறு பயிர்களை நிலத்தில் பயிரிட வகைசெய்யவில்லை. கரும்பில் அதிக லாபம் கிடைப்பதால் மற்ற பயிர்களைப் பயிரிட யாரும் விரும்பவில்லை. செப்டம்பர் 28, 1968-ல் அரசு புதிய சர்க்கரைக் கொள்கையை அறிவித்தது. அதன்படி கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய சர்க்கரையின் அளவு 60 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. அதாவது கட்டுப்பாட்டுக்குள் அடங்காத சர்க்கரையின் அளவு 40 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மாநில அரசுகளின் பரிந்துரைகளின் பேரில் இக்கொள்கை மத்திய அரசால் அமுலாக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் மாநிலங்களில் அரசின் நடுவர்களின் மூலம் சர்க்கரையை விநியோகம் செய்யவேண்டும் என்பதாகும். சர்க்கரைக் கொள்கையை அமைக்கும்போது கவனிக்கவேண்டியவைகள் சில உண்டு. சர்க்கரை, கர், கண்டசாரி ஆகியவைகளின் விலைகள் சமமாக மாறுவதில்லை. உதாரணமாக, சர்க்கரை விலை குறைந்தால் கர், கண்டசாரி ஆகியவைகளின் தேவை குறைவதில்லை.

சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க, சுங்க வரிகளில் கொஞ்சம் கழிவு அளிப்பது நல்லது. இதையே திரு. சென் சர்க்கரை விசாரணைக் குழுவும், முழு ஆக்க சக்தியைப் பயன்படுத்து

வதற்கு ஊக்கமளிக்க, சுங்க வரியில் தள்ளுபடி அளிப்பது விரும்பத்தக்கது என்று சிபாரிசு செய்தது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் வளர்ச்சி :

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1·5 மில்லியன் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று இலக்கு தீர்மானிக்கப்பட்டது. இத்திட்ட கால இறுதியில் உற்பத்தியான சர்க்கரை 1·86 மில்லியன் டன்களாகும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கரை உற்பத்தி இலக்கு 2·25 மில்லியன் டன்என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், உண்மையில் உற்பத்தியின் அளவு 3 மில்லியன் டன்களைவிட அதிகமாய் இருந்தது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் சர்க்கரை உற்பத்தி 3·5 மில்லியன் டன்களாகும் நான்காம் ஐந்தாண்டுத் திட்ட இலக்கு 4·70 மில்லியன் டன்களாகும். திட்டகால சர்க்கரை உற்பத்தியைத் தெளிவாகக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம் :

சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி

(லட்சம் டன்களில்)

வருடம்	உற்பத்தி
1950–51	11·3
1955–56	18·9
1960–61	30·3
1961–62	27·1
1965–66	35·1
1966–67	22·0
1967–68	22·0

இந்தியாவில் ஓர் ஏக்கர் கரும்பு விளைச்சலும் ஓர் ஏக்கர் சர்க்கரை உற்பத்தியும் மற்ற நாடுகளைவிட மிகக் குறைவு என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்குகிறது.

ஓர் ஏக்கர் சர்க்கரை உற்பத்தி ஒப்பீடு (1961-62)

நாடு	ஓர் ஏக்கரில் கரும்பு விளைச்சல் (டன்களில்)	ஓர் ஏக்கரில் சர்க்கரை உற்பத்தி (டன்களில்)
ஹவாய்	80·4	9·17
எகிப்து	39·4	4·27
இந்தோனேஷியா	33·7	3·44
ஆஸ்திரேலியா	24·9	3·67
இந்தியா	17·1	1·68

29. சிற்றளவுத் தொழில்களின் வளர்ச்சி

சிற்றளவுத் தொழில்களும் குடிசைத் தொழில்களும் இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. சிற்றளவுத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றிற்குப் பல்வேறு இலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. ஒரு தொழிலின் அளவைத் தீர்மானிக்க முதலிடப்பட்ட முதல் தொகை, பணி புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை நிர்வாகம், அமைப்பு ஆகியவற்றின் சிறப்பியல்புகளை, வருடாந்திர நடப்பு முதலின் மதிப்பு ஆகியவற்றை அறிய வேண்டும். இந்திய அரசின் இலக்கணப்படி, "மொத்த குறித்த முதல் ரூ. 5 லட்சமோ அல்லது அதற்குக் குறைவாகவோ உள்ள தொழில் சிற்றளவுத் தொழிலாகும்". மத்திய சிற்றளவுத் தொழிற் சபையின் பரிந்துரைகளின்படி சமீபத்தில் சிற்றளவுத் தொழில்களின் இலக்கணம் மாறியுள்ளது. திருத்தியுள்ள இலக்கணப்படி ஒரு சிற்றளவுத் தொழில், வேலையில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாது முதல் தொகை முதலீடு ரூ. 7·5 லட்சத்திற்கு மேற்படாத தொழிலாகும். முதல் தொகை முதலீடு (Capital Investment) என்பது இயந்திரங்கள், இயந்திர அமைப்புக்கள் போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்ட தொகையைக் குறிப்பிடுகிறது. அரசு குறிப்பிடப்பட்டுள்ள பெரிய தொழில்களில் பதிறும் சிற்றளவுத் தொழில்கள் என்று அழைக்கப்படவேண்டுமானால் அவைகளின் முதல்தொகை ரூ. 10 லட்சத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டும். சிற்றளவுத் தொழில்களின் பொது இலக்கணம் ஏராளமான பல்வேறு வகைத் தொழில்களை உள்ளடக்குகிறது. சிறிய தொழில்களை மூன்று பெரிய வகைகளாகப் பிரிக்கலாம்.

முதலாவதாக, பழங்கால முறையில் பழமைப் பொருள்களை உற்பத்தி செய்யும் குடிசைத் தொழில்கள் முதல்வகையாகும். இவ்வகைக் குடிசைத் தொழில்கள் கிராமங்களில் கூலியாள்கள் சிலரைக் கொண்டோ அல்லது கூலியாள்கள் இல்லாமல் வீட்டிலுள்ள குடும்பத்தினரால் மட்டுமோ நடைபெறுவதாகும். அத்தகைய தொழில்கள் கச்சாப் பொருள்களை உள்ளூரிலிருந்தே பெற்றுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன; உள்ளூர்ச் சந்தையாகிய கிராமங்களிலேயே அப்பொருள்கள் விற்கப்படுகின்றன. அத்தொழில்களின் பொருள்கள் கதர்த் துணி, கைத்தறித்துணி போன்றவைகளாகும். இரண்டாம் வகைச் சிற்றளவுத் தொழில்கள் தற்கால முறைப்படி பொருள்களை உற்பத்தி செய்யும் சிறிய தொழில் நிறுவனங்களாகும். இவைகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் மருந்துவர் வெப்பமானி, மின்சார இஸ்திரிப் பெட்டி, இரும்பு அடுப்புகள், எழுதுகோல்கள், முடி திருத்தும் கத்திகள், தையல் மிஷின், உலோகப் பாத்திரங்கள், சிறிய இயந்திரங்கள், கருவிகள், கண் கண்ணாடி சட்டங்கள் போன்றவைகளாகும். அத்தகைய தொழில்கள் பொதுவாக, நகரங்களிலும் மாநகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அவைகள் கூலியாள்களை வேலைக்கு அமர்த்தியும் ரசாயனப் பொருள்கள், எஃகு போன்ற கச்சாப் பொருள்களை வெளியூர்களிலிருந்து பெறுகின்றனர். மூன்றும் வகைத் தொழில்கள் பழங்கால முறைகளைப் பயன்படுத்தி தற்காலத்திய பொருள்களை உற்பத்தி செய்யும் நடுநிலைத் தொழில்களாகும். இத்தொழில்கள் தட்டுமுட்டுப் பொருள்கள், கால் பாத அணிகள், செங்கல்கள், மெழுகுவர்த்தி போன்றவைகளை உற்பத்தி செய்கின்றன.

இந்தியச் சிற்றளவுத் தொழில்களின் முக்கியத்துவம்

சிற்றளவுத் தொழில்களும் நாட்டின் பேரளவுத் தொழில்களைப் போல் முக்கியத்துவம் வாய்ந்து விளங்குகின்றன. மூன்றும் திட்ட கால இறுதியில், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேற்பார்வையில் இருந்துவரும் சிற்றளவுத் தொழில்கள் சுமார் 27 லட்சம் பேரை வேலைக்கு அமர்த்தி, சுமார் ரூ. 390 கோடி முதலீடு செய்து ரூ. 2400 கோடி மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்தன. 1968-ன் வருடாந்திர ''வாணிகம்'' (Commerce Annual Number)பத்திரிகை இதை விளக்கியுள்ளது. பொதுவாக, மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிற்றளவுத் தொழில்களின் வளர்ச்சி 50 சதவீதம் அதிகரித்தபோது பேரளவுத் தொழில்களின் வளர்ச்சி 47 சதவீதம்தான் அதி

கரித்தது. ஒதுக்கப்பட்ட சிலவகை பொருள்கள் சிற்றளவுத் தொழில்களால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன, உதாரணமாக, மருத்துவர் வெப்பமானிகள், அளவைப் பட்டைகள் (Scales) போன்ற பொருள்கள் சிற்றளவுத் தொழில்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சார இஸ்திரிப் பெட்டி, அடுப்புகள், எழுதுகோல்கள் போன்ற பொருள்களில் 80 சதவீதம் இத்துறைதான் உற்பத்தி செய்கிறது.

சிற்றளவுத் தொழில்களின் பயன் :

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் சிற்றளவுத் தொழில்கள் இன்றியமையாதவைகளாய் அமைந்து சிறந்த பங்கினைப் பெற்று செயல்புரியப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

(1) வேலை வாய்ப்பு

பொதுவாக, சிறிய தொழில்கள் உற்பத்தியில் உழைப்புச் செறிவு முறைகளையே (Labour-Intensive Techniques) பயன்படுத்துகின்றன. இம்முறையில் குறைந்த முதல் தேவைப்படுவதோடு, அதிக உழைப்பாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. இதனால், அதிகப் பொருள்களை உற்பத்தி செய்யவும் முடியும். இந்தியா போன்ற ஏழை நாடுகளில் முதல் பற்றுக்குறை இருப்பதாலும், உழைப்பாளர்கள் ஏராளமாகக் கிடைப்பதாலும் இம்முறையே மிகவும் பொருத்தமானதாக உள்ளது. நாட்டில் தொழில்மயமானது வேகப்படுத்தப்பட, பேரளவுத் தொழில்களின் வளர்ச்சி மிகவும் தேவைப்படுகிறது. அதே நேரத்தில் ஏராளமான நுகர்ச்சிப் பொருள்களும் தேவைப்படுவதால், சிறிய தொழில்கள் குறைந்த முதலைக்கொண்டு உற்பத்தியை அதிகரித்து வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்கின்றன. இதனால், நாட்டில் தீராப் பிரச்சினையாக இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவேனும் போக்கமுடியும். இதனால், உழைப்பாளர்களுக்கு நிரந்தர வேலைகளை ஏற்படுத்தவும் வசதி ஏற்படுகிறது.

(2) சமூகப் பிரச்சினைகள்

பேரளவுத் தொழில்களுக்குக் கிடைக்கும் லாபத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறிய தொழில்களுக்குக் கிட்டும் லாபம் சிறிதளவேயாகும். அதனால், ஒரு சில பணக்காரர்கள் கையிலேயே பொருளாதார சக்தி சென்று குவிய இயலாது. சிற்

றளவுத் தொழில்களின் உரிமையாளர்கள் தொழிலாளர்களைச் சுரண்டிப் பிழைக்கவும் முடியாது. சிறிய தொழில் நிறுவனங்களால், சுரண்டல், ஒரு சிலரிடம் பொருளாதார சக்தி குவிதல் போன்ற சமூகப் பிரச்சினைகள் நீக்கப்படுகின்றன. மேலும், மக்களிடம் வாங்கும் திறன் (Purchasing Power) மிகவும் பரவலாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தேசிய வருமானம் எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சிற்றளவுத் தொழில்கள் நுகர்ச்சிப் பொருள்களுக்கு ஏற்படும் அதிகத் தேவையைச் சரி செய்ய முடியும்.

(3) அரசியல் நன்மைகள்

சிற்றளவுத் தொழில்கள் மக்களாட்சி வாழ்க்கை முறையை நாட்டில் உறுதியுடன் கைக்கொள்ள உதவி புரிகின்றன. ஏனென்றால், சிறிய தொழில்களின் தத்துவத்தின்படி, இவைகளில் ஏராளமானவர்கள் தாங்களே சுயவேலையை (Self-Employment)ப் பெறுகின்றனர். சுயவேலையில் ஈடுபட்டவர்கள், கம்யூனிஸ முறையைப் பின்பற்றும் தொழிற்சங்கங்கள் தங்களை ஆட்டிப்படைக்க அனுமதிப்பதில்லை. எனவே, கம்யூனிஸம் நாட்டிற்குள் புகாமல் தடுக்க, சிறுதொழில்கள் இன்றியமையாதவைகளாகும்.

(4) முதல் உற்பத்தி விகிதம்
(Capital–Output Ratio)

சிற்றளவுத் தொழில்களில் தேவைப்படும் தலா முதல் தொகையானது பேரளவுத் தொழில்களின் தலா முதல் தொகை (Capital per person)யைவிடக் குறைவாகும். மேலும், தொழிற்சாலை கட்டிடம், தொழிலாளர் இடவசதி, போக்குவரத்து வசதிகள் போன்ற செலவினங்களைக் குறிக்கும் முதல் செலவானது சிறிய தொழில்களில், பேரளவுத் தொழில்களில் இருப்பதை விடக் குறைவானதாகும்.

(5) தொழில் பரவலாக்கல்

பேரளவுத் தொழில்களால் ஏராளமான தீமைகளும் உண்டு. ஒரே இடத்தில் இத்தொழில்கள் மட்டுமீறி ஆரம்பிக்கப்படுவதால் இடநெருக்கடி, சுகாதாரமின்மைபோன்ற துன்பங்கள் ஏற்படுவதோடு, நகரங்களில் அழுக்கும், ஏழ்மை, இல்லங்களும், கடைகளும் தோன்றுகின்றன. மேலும், இந்நெருக்கடியின் காரணத்தால் பொருள்களின் விலைகள், கூலிகள், வாரங்கள்,

வட்டித் தொகை போன்றவைகள் அளவுக்குமீறி அதிகமாகின்றன. ஆனால், சிற்றளவுத் தொழில்கள் பரவலாகப் பல்வேறு இடங்களில் தோன்றுவதால், திட்டமற்ற நகர்ப்புறப் பிரச்சினைகளில் சில குறைகின்றன. கிராமப் பொருளாதாரத்துடன் பேரளவுத் தொழில்களையும் ஒருங்கிணைக்கச் சிற்றளவுத் தொழில்கள் உதவுகின்றன.

(6) மறைந்துள்ள மனித சக்தியும் திறனும்

சிற்றளவுத் தொழில்கள் நாட்டில் மறைந்து இருக்கும் சேமிப்பையும், மக்களின் தொழில் திறனையும் வெளிப்படுத்திப் பெரும் பயன் ஏற்படச் செய்யமுடியும். மக்களின் சேமிப்பையும் திறமையையும் உற்பத்திக்காகப் பயன்படுத்தாவிட்டால் அது வீணடிக்கப்படுகிறது. ஏராளமான மக்களிடம் தொழில் திறனும்,புத்தாக்க எண்ணங்களும் மறைந்து தேங்கிக்கிடக்கின்றன. இவற்றைச் சிற்றளவுத் தொழில்களின்மூலம் உற்பத்தியில் பயன்படுத்தினால், நாட்டின் முன்னேற்றம் பெருகும்.

சிற்றளவுத் தொழில்களின் பிரச்சினைகள்

சிறு தொழில்களில் உற்பத்திக் குறைவு ஏற்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் அவைகள் துணைபுரிய முடியாமைக்குப் பல காரணங்கள் உண்டு. இத்தொழில்கள் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் வளரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இத்தொழில்களின் சில முக்கியப் பிரச்சினைகள் பின் வருமாறு :—

(1) கச்சாப் பொருளுக்கும் ஆக்க சக்திக்கும் தட்டுப்பாடு

சிறு தொழில்கள் தங்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் வேண்டிய அளவு, வேண்டிய நேரத்தில் கிடைக்காமல் மிகவும் இன்னலுற வேண்டிய நிலை உள்ளது. இத் தொழில்கள் பேரளவுத் தொழில்களுடன் கடும் போட்டியிட்டு, கச்சாப் பொருள்களையும், உற்பத்தியில் சில பொருள்களையும் உற்பத்தி செய்யும் உரிமையையும் பெற்று வருகின்றன. அநேக சிற்றளவுத் தொழில்களின் உற்பத்தியாளர்கள் அதிக விலை கொடுத்துக் கச்சாப் பொருள்களை நடுவர்களிடமிருந்து கடன் வசதிபெற்று வாங்கவேண்டி உள்ளது. எனவே, சில உற்பத்தியாளர்கள் அதிக விலைகொடுத்து உற்பத்திப் பொருள்களைப் பெறமுடியாமல் குறைந்த விலை உள்ள மட்டரகப் பொருள்களை உபயோகித்து நுகர்ச்சிப் பொருள்களைஉற்பத்தி செய்கிறார்கள்.

இதனால், பொருள்களின் தரம் குறைந்து விலையும் குறைவதால் உற்பத்தியாளருக்கு லாபமும் குறைந்து தொழில் மந்த நிலை அடைய வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால்தான், மத்திய அரசின் கச்சாப்பொருள் வினியோகக் கொள்கை குறை கூறப்பட்டது. உதாரணமாக, எஃகுப் பொருளானது குறைந்த விலைக்கு கட்டுப்பாட்டுடன் பேரளவுத் தொழில்களுக்கு அனுமதிச்சீட்டின் பேரில் வழங்கப்படுகிறது. சிற்றளவுத் தொழில்களுக்கு கிடைக்கும் எஃகுப்பொருளின் அளவு குறைவானதாகும். இதனால் சிற்றளவுத் தொழில்களின் இரும்புப் பொருள்களின் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, தையல் கருவிகள் மோட்டார் இலை ஸ்பிரிங், விவசாயக் கருவிகள், சைக்கிள்கள் ஆகியவற்றின் பகுதிகளின் உற்பத்தி எஃகுத் தட்டுப்பாட்டின் காரணத்தால் மிகவும் குறைந்துள்ளது. அதனால்தான் "சிறிய தொழில்களின் சீரான வளர்ச்சியானது பெரும்பாலும், கிடைக்கும் கச்சாப் பொருள்களை ஒரே விலையில் சமமாகப் பகிர்ந்தளிப்பதில்தான் உள்ளது" என உலகத் திட்ட நிபுணர் குழுவும் (International Planning Team) எடுத்துக் கூறி உள்ளது. கச்சாப் பொருள்களின் தட்டுப்பாட்டினால் சிறிய தொழில்களின் தொடர்ந்த உற்பத்தி வேலை அடிக்கடி நிறுத்தப்படுகிறது. இதுபோக, மற்றொரு பிரச்சினை உற்பத்திக்குத் தேவையான மின்சக்தியின் அளிப்பில் தட்டுப்பாடும், கிடைப் பருமையுமாகும். அநேக கிராமங்களில் மின்சக்தியின் அளிப்பு போதாமல் உற்பத்தி குறைகிறது. சிற்றளவுத் தொழில்களின் உற்பத்தி அளவும் சக்தியும் குறைவது, மின்சக்தியின் அளிப்பில் ஏற்படும் தட்டுப்பாட்டினாலும் அடிக்கடி மின்சக்தி அளிப்பின் நேரத்தில் மாற்றத்தாலும், மின்கட்டண வீதம் அதிகமாக இருப்பதாலுமேயாகும். இதனால், சிற்றளவுத் தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் உற்பத்திச் செலவு அதிகமாய்ச் சிக்கனமற்ற நிலை ஏற்படுகிறது.

(2) அதிக உற்பத்திச் செலவு

சிறிய தொழில்கள் இன்னும் மிகப் பழைய உற்பத்தி முறையையே பின்பற்றி வருவதால், பொருள்களின் தரமும் அளவும் குறைந்தே காணப்படுகிறது. முக்கியமாக, பழைமை முறையைப் பின்பற்றும் தொழில்களும், நடுத்தர நிலைத் தொழில்களும் தற்காலத்திய விஞ்ஞானத் தொழில் நுட்ப உற்பத்திக்கேற்ப தங்கள் உற்பத்தி முறையில் எந்த மாறுதல்களையும் செய்யாமல் இருப்பதால் உற்பத்திச் செலவு அதிகமாய் உள்ளது. இதன் முக்கிய காரணம் இத்தொழிலை நடத்துபவர்

களில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்களாவர். இதனுல், இவர்களுக்குத் தற்காலத்திய உற்பத்தி முறைகள், தொழில் நிர்வாகி விற்பனை வகைகள் போன்றவைகள் தெரியாததால் அதிகச் செலவை ஏற்படுத்தும் உற்பத்தி முறைகளையே பின்பற்றுகிருர்கள். வாடிக்கைதாரர்களை வசீகரிக்கக்கூடிய புதிய ரகங்களை உட்புகுத்துவதில் அதிக ஆர்வமும் இவர்களிடம் இல்லை. அதிக உற்பத்திச் செலவினுல் சந்தையில் போட்டியிடும் திறமையும் குறைகிறது. அரசாங்கத்தின் ஆதரிப்பினுலும் பாதுகாப்பினுலும் எப்படியோ இத்தொழில்கள் இருந்து வருகின்றன. அவர்களுடைய நீண்டகால வளர்ச்சிக்கு அவர்களே தங்கள்பலத்தால் வேரூன்றி நிற்குமளவுக்குச் சக்தி பெறவேண்டும். ஜப்பான், சுவிட்ஜர்லாந்து போன்ற நாடுகளில் சிற்றளவுத் தொழில் பிரிவுகள் எவ்வாறு அமைக்கப்பட்டுச் செயல் புரிகின்றன என்பதை நம் சிற்றளவுத் தொழில்கள் படித்து அறிந்துதங்களுடைய போட்டித்திறனையும் உற்பத்தி முறைகளையும் சீர்ப்படுத்தி உற்பத்திச் செலவைக் குறைக்க முயற்சிக்க வேண்டும்.

(3) நிதி வசதியின்மை

சிற்றளவுத் தொழில் நடத்துபவர்களிடம் தேவையான அளவு நிதிவசதி இல்லாமையால், பிற்பட்ட உற்பத்தி முறைகளையே கையாண்டு வருகின்றனர். மேலும், இத்தொழில்களுக்குக் கிடைக்கும் தொழில் நிதிக் கழகங்களின் காலநிதி உதவி மிகக் குறைவானதாகும். சிறிய தொழில் நடத்துபவர்கள் இக்கழகங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய கடன் பத்திரங்களைக் கொடுத்து கடன்வாங்க தகுதியில்லாதவர்களாயிருக்கின்றனர். ஆகவே, சிறிய தொழிலதிபர்கள் அடிக்கடி வட்டித்தரகர்களிடமும், மத்தியஸ்தர்களிடமும், குறைந்த விலைக்குப் பொருள் வாங்கித் தொழில் நடத்துபவர்களிடமும் சென்று மிதமிஞ்சிய வட்டிக்குக் கடன் வாங்கித் தங்கள் சிறிய தொழிலை நடத்துகிருர்கள். வட்டிக்காரர்களுக்கு வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க வசதியில்லாமல் மிகக் குறைந்த விலைக்குத் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை அவசரமாய் விற்றுவிட்டுக் கடன்காரர்களுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு நஷ்டமடைவதே இவர்கள் வழக்கமாய் உள்ளது.

(4) திறமையற்ற விற்பனை, போக்குவரத்து வசதிகள்

நன்ருக வளர்க்கப்பட்ட விற்பனைச் சங்கமோ அல்லது அமைப்போ இல்லாத காரணத்தால் சிற்றளவுத் தொழில்கள்

தங்கள் பொருள்களைச் சீரான முறையில் விற்பனை செய்யப் பல இன்னல்கள் உள்ளன. விற்பனைச் சேவை வசதி (Marketing facilities) இல்லாததால் பொருள்களின் தர அளவுப்பாடு குறைவதோடு அவசரமாகக் குறைந்த விலைக்குத் தொழில் நடத்துபவர்களிடமே பொருள்கள் விற்கப்பட்டு விடுகின்றன. குறைந்தவிலைக்கு பொருள்களைவாங்கித் தங்களுக்கு மிதமிஞ்சிய லாபத்துடன் தொழில் புரிபவர்கள் (Traders) அதிக விலைக்கு விற்கிறார்கள். மேலும் கிராமங்களில் போக்குவரத்து வசதி குறைந்திருப்பதால், கிராமங்களிலேயே மத்தியஸ்தர்களிடமோ தொழில் புரிபவர்களிடமோ பொருள்கள் விற்கப்பட்டு விடுகின்றன. நகரங்களில் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்க வசதி இல்லாமல் போகிறது. அவ்வாறே நகரங்களுக்குப் பொருள்கள் கொண்டுவரப்பட்டால் அதிகப் போக்குவரத்துச் செலவினால் பொருளின் விலை அதிகமாய் விடுகிறது. இந்நிலையில் பேரளவுத் தொழில்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் இவ்விருவகைப் பொருள்களுக்கும் போட்டி அதிகமாகிறது. பேரளவுத் தொழில்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் குறைந்த விலைக்கு விற்கப்படுவதன் காரணங்கள் சிறந்த நிதி வசதி, விற்பனை அமைப்புக்கள், குறைந்த செலவில் கச்சாப் பொருள்கள், மின்வசதி கிடைத்தல் போன்றவைகளேயாகும். அதனால், பேரளவுத் தொழில்கள் சிற்றளவுத் தொழில்களைக் காட்டிலும் பிரச்னைகள் குறைந்து எப்போதும் மேல்நிலையில் உள்ளன.

சிற்றளவு குடிசைத் தொழில்களின் அரசுக் கொள்கை

இந்தியப் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்த வேண்டிய காரணத்தால் அரசு சிறுதொழில்களின் முக்கியத்துவத்தை அறிந்து தேவையானவற்றைச் செயலாற்றி வருகிறது.

1955-ம் ஆண்டில் சிறுதொழில்கள் குடிசைத் தொழில்கள் குழு (Karve committee) தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதன் பரிந்துரைகளில் தலையானது திட்டமிட்ட வளர்ச்சிப் பருவத்தினால் பழங்கால கிராமிய, சிறு தொழில்களில் நுட்பத் தொழிலால் வேலையின்மை ஏற்படக்கூடாது என்பதாகும். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி முறையின்போது இத்தொழில்களில் அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த வசதிகளை ஏற்படுத்தினால், கிராமங்களின் வேலையின்மை, வேலைக் குறைவு (underemployment) போன்ற பிரச்னைகளைத் தீர்க்க முடியும்

என்று இக்குழு வலியுறுத்திக் கூறியுள்ளது. மேலும், பரவலாக்கப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஒப்பற்ற சூழ்நிலையையும் இதன் மூலம் ஏற்படுத்த வேண்டும் என்றும் எடுத்துரைத்துள்ளது. வேலை வாய்ப்பு வசதிகளைப் பாதிக்காத அளவு சிறு தொழில்களின் உற்பத்தி முறைகளையும் சீர்படுத்திக்கொள்ளலாம் என்றும் இக்குழு பரிந்துள்ளது.

அடுத்தபடியாக, பேரளவு நுகர்ச்சிப் பொருள் தொழில்களின் வளர்ச்சியின் அளவில் ஒரு அதிகபட்ச எல்லையைப் புகுத்திச் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு வித்திட வேண்டுமென்றும் இக்குழு வலியுறுத்தியது. இவ்வாறு செய்வதால், சிறு தொழில்களின் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் இத்தொழில்கள் உற்பத்தி செய்யும் நுகர்ச்சிப் பொருள்களுக்குத் தேவையை அதிகரிக்க வழி கிடைக்கும். இதன் மூலம் சிறு தொழில்களின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்க முடியும். பருத்தி ஆடை நெய்தல், கைக்குத்தல் அரிசி போன்ற உற்பத்தித் துறைகள் சிறு தொழில்களுக்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இக்குழு தன் கருத்தைத் தெரிவித்தது மேலும், பொருளாதார வாழ்க்கை பரவலாக்கப்பட்டு கூட்டுறவு முறையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டால் சிறு தொழில்களின் வளர்ச்சி மிகும். பொருள்களை வாங்கவும் விற்கவும் கூட்டுறவு நிறுவகங்களைப் பயன்படுத்துதல் சிறந்ததாக விளங்கும். மாநில நிதிக்கழகம் சிறு தொழில்களுக்கு நீண்டகால நடுத்தர நிதி உதவி செய்ய ஒருதனி பகுதியைஏற்படுத்திஉதவி புரிய வேண்டும். இந்திய ரிசர்வ் வங்கியும் இவ்வகையில் தன் பொறுப்பை அதிகமாக்கிக்கொண்டு உதவி புரிய வேண்டும். சிறு தொழில்களுக்காக மத்திய அரசு ஒரு தனி அமைச்சரகத்தையும் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு கார்வே குழுவானது தன் அறிக்கையில் கூறியுள்ளது. இக்குழுவின் கருத்துப்படி சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பும் பேரளவுத் தொழில்களின் மேல் ஒரு தடுப்பு எல்லையும் ஏற்படுத்த வேண்டுமென்பது சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு நீண்ட காலத்தில் நன்மை பயப்பது கடினமாகும்.

1954-ம் ஆண்டில் போர்டு என்பவர் ஏற்படுத்திய நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட பன்னாட்டுத் திட்டக்குழு (International Planning Team) சிறு தொழில்களின் பிரச்னைகளை நன்றாக ஆராய்ந்து தன் அறிக்கையை வெளிப்படுத்தியது. சிறு தொழில்களின் உற்பத்தித் திறனையும், விற்பனை முறையையும் சீர்படுத்தத் தனி நிறுவனங்களை ஏற்படுத்தினால், இத்தொழில்கள் நன்றாக வளரும் என்று இக்குழு கருதியது.

இத் தொழில்களினுல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கும் இத்தொழில்களுக்குத் தேவைப்படும் கச்சாப் பொருள்களை கொள்முதல் செய்வதற்கும் கூட்டுறவு அமைப்புகளையே ஏற்படுத்துவது சிறந்தது என்றும் இக்குழு எண்ணியது. சிறுதொழில்களின் பொருள்களின் தேவையைப் பற்றிய உண்மை நிலையை அறிந்து உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தை அளிக்கவும் தனிப்பட்ட விற்பனைச் சேவைக்கழகம் (Marketing Service Corporation) ஒன்றை மத்திய அரசு நிறுவினுல் சிறு தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றும் இக்குழு ஆலோசனைகூறியது. இந்த அனைத்துலகக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு நான்கு பல்பயன் பிராந்தியத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள், ஒரு தேசிய சிறு தொழில் கழகம், ஒரு விற்பனைச் சேவை நிறுவனம் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது.

திட்ட காலத்தில் சிறு தொழில்களுக்கு அரசின் உதவி

நாட்டின் சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல தடுப்பு முறையான (Negative), ஆக்கமுறையான (Positive) வழிகளைக் கையாண்டது. ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் இத்தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத் தொழில்களின் வளர்ச்சித்திட்டங்களின் முக்கிய குறிக்கோள்களாக அமைந்தது; வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், திறன், முதல் ஆகிய வளங்களைச் சேகரித்தல், தேசிய வருமானத்தைச் சரிசமமாகப் பகிர்ந்து அளித்தல் போன்றவைகளாகும்.

முதல் ஐந்தாண்டுக் காலத்தில் செய்த உதவி

சிற்றளவுத் தொழில்; குடிசைத் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக முதல் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ரூ. 49 கோடி செலவிடப்பட்டது. இக்காலத்தில் அரசு மேற்கொண்ட தடுப்புக் கொள்கைகள் பின்வருமாறு :

(1) வேறுபட்ட வரிவீதம்

பேரளவுத் தொழில்கள் சிற்றளவுத் தொழில்களோடு ı ாட்டியிடுவதைத் தடுக்க அரசு பேரளவுத் தொழில்களின் மேல் அதிக வரிகளை விதித்தது.

(2.) உதவிக் கொடை

சில பேரளவுத் தொழில்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மேல் அரசு வரி விதித்துத் தொகையைப் பெறுகிறது. இத் தொகையைப் போட்டியினால் அல்லலுறும் சிறு தொழில்களுக்குக் கழிவுப் பணமாகவோ உதவிக் கொடையாகவோ அரசு கொடுத்துப் பாதுகாத்து வருகிறது. உண்மையில் ஆலைத்துணிகளின் உற்பத்தியின் மேல் இடப்பட்ட வரித் தொகையை, அரசுகைத்தறித்துணி, கதர்த்துணி ஆகியவற்றின் உற்பத்திக்கு உதவிக்கொடையாகக் கொடுத்து உதவி வருகிறது.

(3) பொருள் ஒதுக்கீடு

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு பொருள்களின் தேவை மிகுகிறது. அரசின் முதலீட்டின் காரணமாக, இக் காலங்களில் மக்களிடம் வாங்கும்சக்தி அதிகரிப்பதால் பொருள்களுக்குத் தேவை அதிகமாகிறது. அதிகமாகும் தேவையைப் பூர்த்தி செய்ய சிற்றளவுத் தொழில்களுக்குச் சில பொருள்கள் உற்பத்திசெய்ய ஒதுக்கீடு செய்யப் படுகிறது. பருத்தித்துணி ஆலைகள், செருப்பு வகைகள் உற்பத்தி செய்யும் தொழில்கள் போன்ற பேரளவுத் தொழில்களின் உற்பத்திச் சக்தியை முழுவதும் பயன்படுத்த அரசு அனுமதிப்பதில்லை. அதற்குப் பதிலாகக் கூடுதல் பொருள் தேவைகளைச் சிறு தொழில்களே உற்பத்தி செய்ய அரசு அனுமதித்தது. இப்போதும் 55 வகைப் பொருள்கள் சிறுதொழில்களின் உற்பத்திக்காகவே தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 44 பொருள்கள் சிறு தொழில்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எஃகு சக்கையில் 25% சிறுதொழில்களுக்குக் கச்சாப் பொருளாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் அரசிடம் கேட்கப்பட்டு வருகிறது.

(4) சிறுதொழில் பொருள்களை வாங்குதல்

மத்திய அரசுக்குத் தேவையான ஏராளமான பொருள்கள் சிறுதொழில்களின்மூலமாகவே வாங்கப்படுகிறது. முக்கியமாக, பாதுகாப்புத்துறை, பொதுத்துறை அலுவலகங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான பொருள்களைப் பேரளவுத் தொழில்களின் மூலமாகப் பெறுமல் சிறு தொழில்களின் மூலமாகவே அரசு வாங்கி வருகிறது.

இத்தகைய தடுப்பு முறைகள் இச்சிற்றளவுத் தொழில் களுக்கு என்றும் உணவு ஊட்டுவதுபோல் அமைந்து இவை களின் உற்பத்தித்திறனிலும் அமைப்புமுறையிலும்முன்னேற்றம் பெருமளவில்காணப்படாமையால் அரசு இம்முறைகளைப் படிப் படியாகக் குறைத்துவருகிறது. மேலும், இத் தொழில்களின் வளர்ச்சிக்காக அரசு மேற்கொண்ட ஆக்க முறைகள் பின் வருமாறு :

(1) அனைத்திந்திய வாரியங்கள்

ஒரு குறித்த வகைச் சிற்றளவுத் தொழில்களின் உதவிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைய அரசு ஏராளமான வாரியங்களை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாரியங்களாவன : அனைத்திந்தியக் கைத்தறிவாரியம். அனைத்திந்தியக் கதர், குடி சைத்தொழில்கள் வாரியம், அனைத்திந்திய கைவினைத் தொழில் வாரியம், மத்திய பட்டு வாரியம், கயிறு வாரியம், சிற்றளவுத் தொழில்கள் வாரியம் ஆகியவைகளாகும். நாட்டில் சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க இவ்வாரியங்கள் பயன்படுகின்றன. இந்தியாவின் பெரிய நகரங்களிலும் வெளி நாடுகளிலும் இத் தொழில்களின் பொருள்களின் விற்பனை செய்ய விற்பனை நிலையங்களை ஏற்படுத்த இவ்வாரியங்கள் உதவி புரிந்துள்ளன.

(2) தேசிய சிறு தொழில்கள் கழகம்

1955–ம் ஆண்டு இக்கழகத்திற்கு ரூ. 10 லட்சத்தை (பின்பு ரூ. 50 லட்சமாக அதிகரிக்கப்பட்டது) பங்கு முதலாக அரசு அளித்தது. இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாவன: (1) சிறுதொழில் பகுதிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களில் பெரும் பகுதியை அரசு வாங்க உதவி செய்தல். (2) அர சாங்கப் பொருள் தேவை உத்தரவுகளுக் கேற்றாற்போல, சிறு தொழில்கள் உற்பத்தி மேற்கொள்ள அவைகளுக்கு நிதி உதவி, நுட்ப உதவி முதலியவைகளை மேற்கொள்ளுதல். (3) சிறு தொழில்களுக்கும் பேரளவுத் தொழில்களுக்குமிடையே ஒற்றுமை ஏற்படுத்தி, சிறு தொழில்கள் பேரளவுத் தொழில் களுக்குத் தேவையான சில கருவிகளை உற்பத்தி செய்து அளிக்கவும், இவ்விரு தொழில்களுக்கிடையே இருக்கும் போட்டியைக் குறைக்கவும் இக்கழகம் உதவிபுரிகிறது. (4) விற் பனைச் செயல் புரிய உதவி புரிந்தும், தவணையில் பொருள் வாங்கும் திட்டத்தின் அடிப்படையில் இயந்திரம் ஆகியவற்றை வுளித்தும் வருகிறது.

(3) தொழில் விரிவுபடுத்தும் சேவை

சிறு தொழில் நடத்துபவர்கள் அதிகச்சம்பளம் கொடுத்து ஆலோசகர்களையும் தொழில் நுட்ப நிபுணர்களையும் வேலைக்கு வைத்துக்கொள்ள இயலாது. இக்குறையைப் போக்க அரசே சிறு தொழில்களுக்குக் கட்டணமேதுமின்றி நுட்ப, நிர்வாகச் சேவைகளைப் புரிய தொழில் அகலப்படுத்தும் பணி நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. இப்பணியானது 16 சிறு தொழில்கள் பணி பயிற்சி நிலையங்கள், 5 கிளை நிலையங்கள், 60-க்கும் மேற்பட்ட மத்திய நிலையங்கள் ஆகியவைகளின் மூலம் செய்யப்பட்டு வருகிறது. தொழில் விரிவு படுத்தும் சேவையானது சிறுதொழில்களுக்குத் தற்காலத்திய உற்பத்தி முறைகளைப்பற்றி ஆலோசனை கூறும். உற்பத்தி மத்தியகங்கள் (Production-centres) மூலமாகவும் செய்யப்பட்டு வருகிறது.

(4) தொழிற் பேட்டைகள்

சிறிய தொழில்களுக்குத் தேவையான கட்டிடவசதிகளுடன் கூடிய ஏராளமான தொழிற் பேட்டைகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்தொழிற் பேட்டைகளில் ஏராளமான சிறு தொழில்கள் ஏற்பட்டு இவைகள் அனைத்தும் ஓரினமாக ஓரே இடத்தில் அமைந்துள்ளதால் மின்சார அளிப்பு, தண்ணீர், வாயு, நீராவி போன்ற பொதுச்சேவைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு சிறுதொழில்களை முன்னேற்ற முடியும். இவ்விடங்களில் இருக்கும் தொழில் நிலைமையில், வேலையளிப்போர்-தொழிலாளி ஆகிய இருவருடைய தொடர்பு சீரான முறையில் இருக்கிறது. இப்பேட்டைகளுக்குள்ளேயே வீடுகள், பள்ளிக்கூடங்கள், மற்றும் தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகள் அமைந்து இருப்பதால், தொழிலாளர்களின் உழைப்புத்திறன் பெருகுவதோடு சேரிகள் ஏற்படாமல் தடுக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாறு நாட்டில் தொழிற் பேட்டைகள் அதிகம் ஏற்பட்டால், "தொழிலாளர்களின் சிரிப்பில் இறைவனைக் காண முடியும்", என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழி உண்மையாகும்.

(5) தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

இரண்டாவது, மூன்றாவது திட்டகாலத்தில் சிற்றளவு குடிசைத் தொழில்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டது. குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களாகவோ அல்லது விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களாகவோ மாற்றிக்

கொள்ளப்பட வகை செய்யப்பட்டது. இச்சங்கங்கள் அரசால் நீண்ட காலம் பாதுகாக்கப்பட்டு உதவி செய்யப்பட இயலாத தாகும். உதவித்தொகைகள் தொழில்களின் திறமைகளைக் குறைப்பவைகளாகவும் வளர்ச்சியைப் பாதிப்பவைகளாகவும் விளங்குகின்றன. அரசின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கூட்டுறவு அமைப்புக்கள் சிறப்பாய்ப் பணிபுரிகின்றன.

(6) வெளிநாட்டுத் தொழில் ஒத்துழைப்பு

சிறு தொழில்களின் வெகுவான வளர்ச்சிக்கு அயல்நாடு களின் தொழில் ஒத்துழைப்பைப் பெற அரசு முயற்சித்து வரு கிறது. ஏற்கனவே, ராஜ்கோட் என்ற இடத்தில் தொழிற்பேட் டையை அமைக்க, அமெரிக்க நுட்பத் தொழில் ஒத்துழைப்புக் குழுவின் சேவையை அரசு பெற்றுள்ளது. டில்லிக்கு அருகில் ஓக்லா (Okhla) என்ற இடத்தில் இந்தோ-ஜெர்மானிய இயந் திரக் கருவி மத்திய நிலையம் ஒன்றையும் ஜெர்மனி நாட்டுத் தொழில் ஒத்துழைப்பின் அடிப்படையில் ஏற்படுத்தி யுள்ளது. மற்ற பொருள்களையும் உற்பத்தி செய்ய பல்வேறு நாடுகளின் தொழில் ஒத்துழைப்பை அரசு நாடியிருக்கிறது. உதாரணமாக, கடிகாரங்கள் உற்பத்திக்கு ஸ்விட்ஜர்லாந்தின் ஒத்துழைப்பை யும், மிகச் சிறியகருவிகள் உற்பத்திக்குப் பிரான்சு நாட்டையும், தொழில் பட்டரை, பொறிஇயல் மத்திய நிலையம் ஆகியவற்றை அமைக்க ஜப்பானையும் இந்திய அரசு நாடியுள்ளது.

இரண்டாம் திட்ட கால அரசின் உதவி

சிற்றளவு, குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வெகுவான வளர்ச்சிக்காக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 180 கோடி செலவழிக்கப்பட்டது. இத்திட்ட கால சிறு தொழில்களின் வளர்ச்சிக்கான செயல் திட்டங்கள், 1956-ன் தொழில் கொள்கைத் தீர்மானம், 1955-ன் கார்வே கமிட்டியின் அறிக்கை ஆகியவைகளின் கருத்தின் அடிப்படையில், தீட்டப் பட்டன. 1956-ன் தீர்மானம், இந்தியப் பொருளாதார வளர்ச் சியில் சிறு தொழில்களின் பங்கை மிகவும் வலியுறுத்திச் சிறப் பான குறிப்புரை செய்திருந்தது. அதுபோலவே, கார்வே குழு வும், கிராமங்களில் வேலையின்மையை நீக்கவும், வேலைக்குறை வுப் பிரச்சினையைத் தீர்க்கவும், இரண்டாம் திட்ட காலத்தில் ஏற்படும் நுகர்ச்சிப் பொருள்களின் தேவையைப் பூர்த்தி செய் யவும் சிற்றளவு குடிசைத் தொழில்கள் ஆகியவைகளின் முக் கியத்துவத்தைப் பெரிதும், வலியுறுத்தியுள்ளது. இந்தியப்

பொருளாதாரத்தில் தொழில்மயம் வேகமாக ஏற்படுவதற்காக, ஏராளமான முதலீடு, பேரளவுத் தொழில்களில் முதல் செறிவு முறையைப் பின்பற்றி, செய்துவிட்டு மீதி இருக்கும் முதலீட்டுத் தொகையை சிறுதொழில் வளர்ச்சிக்காக அரசு ஒதுக்கியது. முதல் செறிவுத் தொழில்களில் (Capital Intensive Industries) ஏராளமான பணத்தை முதலீடு செய்தபின் மீதி இருக்கும் சிறு தொகையை நுகர்ச்சிப் பொருள் தொழில்களின் வளர்ச்சிக்காக அரசு பயன்படுத்தியது. ஆனால், இத்திட்ட காலத்தில் அரசு பலவகை உதவிகளை சிற்றளவுத் தொழில்களுக்குச் செய்தும் நுகர்ச்சிப் பொருள்கள் தேவையான அளவு மக்களுக்குக் கிடைக்கவில்லை. சிற்றளவுத் தொழில்கள் இக்காலத்தில் திற மையுடன் செயலாற்றவில்லை.

மூன்றும் திட்ட கால சிறுதொழில் வளர்ச்சி

சிற்றளவுத் தொழில்களின் வளர்ச்சிக்காக மூன்றும் திட்ட காலத்தில் பொதுத்துறையில் ரூ. 265 கோடியும் தனியார் துறை யில் ரூ, 275 கோடியுமாக மொத்தம் ரூ. 540 கோடி ரூபாய் செல வழிக்கப்பட்டது. சிறு தொழில், குடிசைத் தொழில் ஆகியவற் றிற்கான செயல்திட்டங்களை அமுலாக்கும்போது கருத்தில் வைக்கப்பட்ட சிறப்பான குறிக்கோள்களாவன :—(1) தொழி லாளர்களின் உற்பத்தியின் அளவில் பெருக்கம், குறைந்த உற் பத்திச் செலவு ஆகியவற்றை அடைய முயற்சித்தல். (2) உதவிக் கொடைகள், விற்பனைத் தள்ளுபடி போன்ற சலுகைகளை அரசு படிப்படியாக குறைத்தல் (3) கிராமப் புறங்களிலும் சிறு நகரங்களிலும் இத்தொழில்களின் வளர்ச்சி பெருகுமாறு வகை செய்தல். (4) பேரளவுத் தொழில்களுக்குத் துணையாக இருக்கும் வகையில் சிற்றளவுத் தொழில்களின் வளர்ச்சியைப் பெருக்கு தல் போன்றவைகளாகும். தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் மேற்கொண்ட முதலீட்டின் காரணத்தால் சிற் றளவு, குடிசைத் தொழில்களில் ஏறக்குறைய 8 மில்லியன் தொழிலாளர்களுக்குப் பகுதி–நேர "முழுமையான" வேலை வாய்ப்பு கிடைத்தது. 6·3 லட்ச உழைப்பாளர்களுக்கு அதிக மாக முழுநேர வேலை வாய்ப்பும் கிடைத்தது. 1960–1965 காலத் திற்குள் கைத்தறிகள், இயந்திரத் தறிகள் ஆகியவைகளால் உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளின் உற்பத்தி 2013 மில்லி யன் மீட்டரிலிருந்து 3056 மில்லியன் மீட்டர்களாக அதிகரித் துள்ளது போற்றத்தக்கதாகும்.

நான்காம் திட்ட கால அரசின் சிறு தொழில் கொள்கை

நான்காம் திட்ட காலத்தில் சிற்றளவு குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக தனியார் துறையில் ரூ. 500 கோடியும் பொதுத்துறையில் ரூ. 370 கோடியும் செலவு செய்யப்படலாமென்று ஆலோசிக்கப்பட்டுள்ளது. ஆனால், சமீபத்தில் வந்துள்ள அறிக்கைகளின்படி மொத்தம் ரூ. 1400 கோடி வரைக்கும் செலவழிக்க வகை செய்யப்பட்டுள்ளது. திட்டத்தின் அறிக்கையில் குறிக்கப்பட்ட ரூ. 200 கோடி போக மீதி ரூ, 1200 கோடியை ரிசர்வ் வங்கியும், வணிக வங்கிகளும் சிறுதொழில்களின் வளர்ச்சிக்காகக் கொடுக்கத் தயாராய் இருக்கின்றன. இத்தொழில்களின் வளர்ச்சிக்கான செயல் திட்டங்களின் சிறப்பான நோக்கங்களாவன :— (1) சிறுதொழில்களின் உற்பத்தி முறைகளைப்படிப்படியாகச் சீர்ப்படுத்துதல், (2) தொழில்களைப் பரவலாக்கும் திட்டத்தையும் படிப்படியாக அதிகரித்தல், (3) வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை முன்னேற்றமடையச் செய்தல் ஆகியவைகளாகும். முக்கியமாக, சிறுதொழில்கள் தற்காலத்திய நுட்பமுறை உற்பத்தி வகைகளைக் கையாண்டு முன்னேற்றமடைந்து பேரளவுத் தொழில்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து அவைகளுடன் ஒருங்கிணைந்து வளரச் செய்வதே அரசின் முக்கிய குறிக்கோளாகும்.

இத்திட்ட காலத்தின் இறுதியில் பரவலாக்கப்பட்ட துறையைச் சேர்ந்த கைத்தறி, இயந்திரத்தறி, கதர் ஆகிய தொழில்களால் உற்பத்தி செய்யப்படக்கூடிய துணிவகைகளின் உற்பத்தியின் நோக்க மதிப்பு 4572 மில்லியன் மீட்டர்களாகும். 1965—66-ல் இதன் மதிப்பிடப்பட்ட உற்பத்தி 3146 மில்லியன் மீட்டர்களாக இருந்தன. சிறுதொழில்களின் செயல்திட்டத்தின் அடிப்படையில் 1965–66-ல் சிறுதொழில்களின் மதிப்பிடப்பட்ட உற்பத்தியின் மொத்த மதிப்பு ரூ. 3670 கோடியாகும். நான்காம் திட்ட முடிவில் இதைவிட அதிக மதிப்புடைய உற்பத்தியின் அளவை அரசு எதிர்பார்க்கிறது. 1965–66-ல் எல்லாவகைச் சிறு தொழில்களாலும் ஏறத்குறைய 58 லட்சம் உழைப்பாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடிந்தது. 1969–70-ல் ஏறக்குறைய 65 லட்ச தொழிலாளர்களுக்கு சிறுதொழில்கள் மொத்த வேலை வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன. 1965–66-ல் ஏற்படுத்தப்பட்ட 300 தொழிற்பேட்டைகளுக்கு மேல் நான்காம் திட்ட காலத்தில் 250 புதிய தொழில் பேட்டைகளையும் ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. நான்காம் திட்ட காலத்தில்

1963-ல் ஆலைகளில் அமைந்த வேலைவாய்ப்பு, முதலீடு, உற்பத்தி ஆகியவற்றின் மதிப்பு

	சிறியதொழில்கள்	நடுத்தர தொழில்கள்	பெரிய தொழில்கள்	மொத்தம்
ஆலைகளின் எண்ணிக்கை	41851	2063	1293	45207
வேலை செய்பவர்கள் (லட்சங்களில்)	14·62	6·58	19·96	41·16
நிரந்தர முதல் (கோடி ரூபாய்களில்)	257·3	231·7	2672·2	3161·2
மொத்த உற்பத்தியின் மதிப்பு (கோடி ரூபாய்களில்)	1681·2	949·5	3125·1	5755·8
செய்பொருள் உற்பத்தியால் சேகரிக்கப்பட்ட மதிப்பு (கோடி ரூபாய்களில்)	303·0	217·1	929·2	1449·3

ஆதாரம்: 1963-ன் வருடாந்திர தொழில்களின் கணக்கீடு.

பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் செலவிடப்போகும் தொகையின் மூலம் சிறுதொழில்களால் 11 மில்லியன் தொழிலாளர்களுக்கு பகுதி நேர வேலைவாய்ப்பும் 16 மில்லியன் ஆட்களுக்கு முழுநேர வேலைவசதியும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிற்றளவு குடிசைத் தொழில்களைப் பரவலாக்கும் திட்டமும் சிற்றளவுத் தொழில்களைப் பேரளவுத் தொழில்களுடன் ஒருங்கிணைந்து செயல்படச் செய்யும் கொள்கையும் திறம்பட செயல் நடத்தப்பட்டால் நான்காம் திட்ட காலத்திற்குள் சிறுதொழில் துறையின் வருடாந்திர வளர்ச்சி வீதம் இரு மடங்கு ஆகுமென்பது வெள்ளிடை மலையாகும்.

சிறிய தொழில்களில் முதல், வேலை வாய்ப்பு, உற்பத்தியின் அளவு

(எண்கள் ரூபாய்களில்)

	முதல் தொகையின் அளவுப்படி தொழில்துறைகள்		
	சிறிய தொழில்	நடுத்தரத் தொழில்	பெரிய தொழில்
1. ஒரு தொழிலாளருக்கு நிரந்தர முதல்	1,757	3,521	13,386
2. உற்பத்தியில் ஓர் அலகு வேலையால் சேர்க்கப்பட்ட மதிப்பு	2,072	3,299	4.655
3. உற்பத்தியில் ஓர் அலகு நிரந்தர மூலதனத்தால் சேர்க்கப் பட்ட மதிப்பு	1·177	0·937	0·348

ஆதாரம்: 1967ன் ஹிந்து பத்திரிகையின் தொழில்களின் கணக்கீடு.

மேற்கண்ட அட்டவணைப்படி சிறிய தொழில்களின் மூலம் குறைந்த நிரந்தர முதலால் பெரும் அளவில் வேலை வாய்ப்பு

களைப் பெருக்க முடியும் என்பதை அறியலாம். அட்டவணைப்படி சிறிய தொழில்களில் வேலை உற்பத்தி விகிதம்(Employment-output Ratio) மிகக் குறைந்துள்ளது. ஆனால், சிற்றளவு நடுத்தரத் தொழில்களில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் ஆக்க சக்தி, குறைந்த நிரந்தர முதல் கொண்டு, பேரளவுத் தொழில்களில் இருப்பதைக் காட்டிலும் முறையே எட்டு, நான்கு மடங்கு அதிகமாக உள்ளது என்பதைக் குறிப்பிடவே மேற்கண்ட அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. சிற்றளவுத் தொழில்களில் மிகக் குறைந்த தொழில் உற்பத்தி இருப்பது உண்மை. இருந்த போதிலும், பேரளவுத் தொழில்களில் இருக்கும் முதல் உற்பத்தி விகிதங் (Capital output ratios)களைக் காட்டிலும், சிற்றளவு, நடுத்தரத் தொழில்களில் முறையே 3½, 2½ மடங்கு அதிகமாக முதல் உற்பத்தி விகிதங்கள் அமைந்திருப்பது அதிசயிக்கத்தக்க ஒன்றாகும்.

முடிவுரை: இந்தியப் பொருளாதாரத்தில் சிறு தொழில்களுக்கு ஒரு நிலையான இடம் கிடைத்தே ஆகவேண்டும். ஏனெனில், வளர்ந்து வருகின்ற வேலையின்மைச் சிக்கலை உழைப்புச் செறிவுள்ள சிறு தொழில்களின் மூலம் தான் தீர்க்க முடியும். உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தொழில் நுணுக்க வளர்ச்சி மாற்றம் பெற்ற சிறு தொழில்களின் வளர்ச்சி இந்தியாவுக்கு இன்றியமையாததாகும்.

30. இந்திய அரசின் தொழிற் கொள்கை

இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்ட காலத்தில் மிகவும் தடுக்கப்பட்ட வளர்ச்சியாக அமைந்திருந்தது. அதனால், இந்தியாவின் தொழில் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு வளர்ச்சி குன்றி இருந்தது. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி அந்நாட்டு அரசின் தொழிற் கொள்கையைத்தான் அடிப்படையாகக் கொண்டது. ஜப்பான் நாட்டின் அதிசயிக்கத்தக்க தொழில் வளர்ச்சிக்கு ஜப்பான் அரசின் தொழிற்கொள்கையும் பாதுகாப்பு முறைகளுமே காரணமாய் உள்ளன. வளர்ச்சி குறைந்த ஏழ்மை நாடுகளில் அரசு கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, நீதி போன்ற பொதுநலத்துறைகளை மட்டும் கவனித்துப் பொருளாதாரத்துறையில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி வந்தால் நாடு ஏழ்மை நிலையிலிருந்து வளர்ச்சி பெறுவது கடினம். எனவே, அரசே முழுமையான தொழிலதிபராக அரும்பணியாற்றப் பங்கேற்று, தொழில் வளர்ச்சியைப் பெருக்க முதலீடு; உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றின் அளவை அதிகரித்து ஏழ்மையைப் போக்கி வாழ்க்கைத்தரம் உயர வகை செய்ய வேண்டும். ஆனால், ஆங்கில அரசு இந்தியத் தொழில் வளர்ச்சிக்குத் தங்கள் ஆட்சியின் இறுதிக்காலம்வரை ஒரு கொள்கையும் வழிவகையும் மேற்கொள்ளவில்லை. நாட்டைத் தொழில் மயமாக்க சில முயற்சிகள் எடுப்பதாக இறுதிக்காலத்தில் பாசாங்கு செய்தது. இந்தியாவில் கிடைக்கும் இயற்கை வளங்களின் அளவைக் கணக்கிடவும் நாட்டைத் தொழில்மயமாக்க மேற்கொள்ளக்கூடிய பணிகளின் வசதி, வாய்ப்பு ஆகியவைகளை அறியவும் 1916ல் தொழிற்குழு (Industrial Commission) ஒன்றை இந்திய அரசு நியமித்தது. ஆனால், இக்குழுவின் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படவில்லை.

விடுதலைக்கு முன்பு: இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது இங்கிலாந்து போரிட்டது. அக்காலத்தில் ஏராளமான உணவுப் பொருள்களையும் இன்றியமையாத பொருள்களையும் அயல்நாடுகளிலிருந்தும் தன் காலனிகளிலிருந்தும் பெறவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. அப்போதுதான், இங்கிலாந்துக்கு இந்தியா போன்ற காலனி நாடுகளைத் தொழில் பலம் பொருந்திய நாடுகளாக்க வேண்டும் என்ற கவனம் ஏற்பட்டது. அதன்படி, 1940–ல் விஞ்ஞான, தொழில் ஆராய்ச்சி மன்றம் (Board of Scientific and Industrial Research) ஒன்றை அரசு அமைந்தது. மத்தியில் திட்டம், புனரமைப்புத் துறையையும் ஏற்படுத்தி நாட்டில் தொழில் மயமேற்படத் தேவையான திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டது. ஆனால், அதற்குள் 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி முதல் இந்தியா சுதந்திரம் பெற்றதால், நாமே நம் தொழில் வளர்ச்சியைப் பெருக்க தொழிற் கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் வரைய, பொன்னான வாய்ப்புக் கிடைத்தது.

விளக்கம்: அரசின் தொழிற்கொள்கை என்பது நாட்டின் புதுத் தொழில்களை ஏற்படுத்தியும் இருந்துவரும் தொழில்களைப் பெருக்கியும் தொழில் வளர்ச்சிக்காக அரசு மேற்கொள்ளும் கொள்கைகளாகும். இதில் தொழிற்கொள்கை, சுங்கவரிக் கொள்கை, இந்தியத் தொழில்களில் அயல்நாடுகளின் முதலீடு பற்றிய அரசின் கொள்கை போன்றவைகளும் அடங்கும். இந்தியாவில் இதுகாறும் இரு முக்கிய தொழிற் கொள்கைகள் 1948, 1956 ஆகிய ஆண்டுகளில் அமுலில் வந்தன. முதற் கொள்கைத் தீர்மானம் 1948 முதல் 1956 வரையிலும் 8 ஆண்டுகள் கையாளப்பட்டது. இரண்டாம் தொழிற்கொள்கைத் தீர்மானம் 1956-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இப்போதும் இருந்து வருகிறது.

I. 1948-ன் தொழிற்கொள்கைத் தீர்மானம்

சுதந்திரம் பெற்ற பின் நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கி நாட்டு வருவாயைப் பெரும் அளவில் அதிகரித்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பெரிதும் விரும்பியது. இதனால் 1948-ம் ஆண்டு ஒரு தொழிற்கொள்கையை ஏற்படுத்து அதில் கீழ்க்கண்ட குறிக்கோள்களையும் குறிப்பிட்டது.

குறிக்கோள்கள்

(1) மக்களுக்கு நீதி, சமவாய்ப்புக்கள் ஆகியவை பூரணமாக உறுதியாக்கப்படும் நிலையை ஏற்படுத்தும் சமூக ஒழுங்கை அமைத்தல்.

(2) நாட்டிலுள்ள மறைந்து கிடக்கும் வளங்களைத் தேடி எடுத்து அவற்றைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தில் அதிவேகமான உயர்வைப் பெறுதல்.

(3) உற்பத்தியின் அளவைப் பெருக்குதல்.

(4) சமுதாய முன்னேற்றத்திற்காகச் சேவை செய்ய வேலைகளை ஏற்படுத்தி எல்லோருக்கும் வேலைவாய்ப்புகளை அளித்தல். நாட்டில் விரைவான தொழில் மயத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் மொத்த செல்வத்தை அதிகரிப்பதே முக்கிய கடமையாக இக்குறிக்கோள்கள் வலியுறுத்தின. இக்குறிக்கோள்களைச் சாதிக்க மேற்கொண்ட வகைகள் வருமாறு :

(1) பேரளவுத் தொழில்கள்

நாட்டிலுள்ள பெரிய தொழில்கள் நான்கு முக்கியமான வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

முதல்வகைத் தொழில்களில் போர்த் தளவாடங்கள், அணுசக்தி உற்பத்தி கட்டுப்பாடு, இருப்புப்பாதை போக்குவரத்து ஆகிய தொழில்கள் சேர்க்கப்பட்டு அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

இரண்டாம் வகைத் தொழில்களில் (1) நிலக்கரி, (2)இரும்பு எஃகு, (3) விமானங்கள் கட்டுதல், (4) கப்பல் கட்டுதல், (5) தொலைபேசிகள், தந்தி, கம்பியில்லாத் தந்தி ஆகியவற்றிற்குத் தேவையான கருவிகள் (6) சுரங்க எண்ணெய் போன்ற தொழில்கள் சேர்க்கப்பட்டு வருங்காலத்தில் அரசே இவற்றை ஆரம்பித்து நிர்வகிக்கவும் வகை செய்யப்பட்டது. 1948-ல் தனியாரிடமிருந்த இத் தொழில்கள் மேலும் பத்து ஆண்டுகள் தனியாரிடமே இருக்கவும் பத்து ஆண்டுகளில் நல்ல வளர்ச்சியும் பெருக்கமும் பெற்றபின் அரசே இவற்றை நாட்டுடைமையாக்கவும் இத்தீர்மானம் வகை செய்தது.

மூன்றும்வகைத் தொழில்களில் உப்பு, மோட்டார் வாகனங்கள், விவசாயக் கருவிகள், மின்பொறியியல், கனரக எந்திரக் கருவிகள், உரங்கள், மின் ரசாயனத் தொழில்கள், ரப்பர்த் தொழில்கள், பருத்தி, கம்பளித் துணிகள், சிமிண்டு, சர்க்கரை, காகிதம், பாதுகாப்புக்குத் தேவையான தொழில்கள் போன்றவைகள் சேர்க்கப்பட்டன. மாநில அரசுகளோடு கலந்தாலோசித்து மத்திய அரசு இத்தொழில்களைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வகை செய்யப்பட்டது.

நான்காம் வகைத்தொழில்களில் முதல் மூன்று வகைகளில் சேராத இதர தொழில்கள் அமைந்து தனியார் துறைக்கோ தனிநபர்களுக்கோ கூட்டுறவு நிறுவனங்களுக்கோ கொடுக்கப் பட்டது. ஆனால், இந்த நான்காம் வகைத் தொழில்களிலும் அரசு படிப்படியாகப் பங்குபெற இத்தீர்மானம் வகை செய்தது. முக்கியமாக, இன்றியமையாத மருத்துவப் பொருள்கள், உரங் கள் போன்ற தொழில்களில் அரசும் பங்கு பெற்று உற்பத்தி செய்ய வழி செய்யப்பட்டது.

(2) சிற்றளவுத் தொழில்கள்

இத்தொழில் தீர்மானம் குடிசைத்தொழில் சிற்றளவுத் தொழில் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நன்றாக அறிந்து அவைகள் உள்நாட்டு வளங்களைச் சிறந்த முறையில் பயன் படுத்துவதற்கு இன்றியமையாதவைகள் என்றும் கருதப்பட் டன. இன்றியமையாத நுகர்வுப் பொருள்களில் தன்னிறைவு பெற இத் தொழில்கள் உகந்தவைகளாதலால், இவற்றின் வளர்ச்சிக்கு அரசு துணை செய்யவும் உதவி புரியவும் வகை செய்யப்பட்டது.

(3) தொழில் நிர்வாக உறவு

நாட்டிலுள்ள பல்வேறு தொழில்களில் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கு மிடையே சுமுக உறவுகள் ஏற்பட வேண் டியதன் அவசியத்தை இத்தீர்மானம் மிகவும் வலியுறுத்தியது. நாட்டில் தொழில் வளர்ச்சியின் பெருக்கத்தின் விகிதத்திற் கேற்ப,தொழிலாளர்களின் பங்கை அதிகரிக்கவும் கருத்து தெரி விக்கப்பட்டது. தொழிலாளர்களின் நிலைமைகளைச் சீர்திருத் தவும் அவர்களுக்கு நீதியான கூலிகள் கொடுக்கப்படவும் சட்டமியற்றப்பட வேண்டுமென்றும் கருதப்பட்டது.

(4) அயல்நாட்டு மூலதனம்

இந்தியத் தொழில் வளர்ச்சியில் அயல்நாட்டு மூலதனத் தின்முக்கியத்துவம் மிகவும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், அது இந்தியத் தொழில்களின் மேல் அதிக ஆதிக்கம் செலுத்துவ தைத் தவிர்க்க வழி செய்யப்பட்டது. மேலும், இந்தியாவிலுள்ள அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களில் படிப்படியாக இந்திய நுட்பத்தொழில் வல்லாளர்களையும்,மேலாளர்களையும்வேலைக்கு எடுக்க இத்தீர்மானம் வழி வகுத்தது.

மதிப்பீடு: இத்தொழிற் கொள்கையால் நாட்டில் இரு முக்கிய துறைகள் ஏற்பட்டன. பொதுத்துறை, தனியார்துறை என்று தொழில் இருவகையாகப் பிரிக்கப்பட்டு, இரு வகைத் துறைகளுக்கும் தனித்தனியாக வளர்ச்சித் துறைகள் ஒதுக்கப் பட்டு, தொழில் சம வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது. இதனால், முதன் முதலாக இந்தியாவில் கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy) ஏற்பட வாய்ப்புக் கிடைத்தது. இதன் அடிப்படையில் நாட்டில் சமுதாய சமதர்ம பாணியில் பொருளாதார வளர்ச்சி பெற நாடு முதல் கட்டத்தைப் பெற்றுள்ளது என்று பொது வுடைமை வாதிகள் இக் கொள்கையைப் புகழ்ந்தனர். ஆனால், அரசு தனியார் தொழில்களின் உரிமையைப் பாதிக்கும் முறை யில் கொள்கையை அமைத்துள்ளது என்று முதலாளிகள் குற்றம் சாட்டினர். K.T. ஷா போன்ற சில பொருளாதார நிபு ணர்கள் அரசின் தொழில் கொள்கையில் ஏராளமானவைகள் விடப்பட்டும் சேர்க்கப்பட்டும் உள்ளன என்று குறை கூறினர். தொழிற் கொள்கை விளக்கத்தில் கூறப்பட்டுள்ளபடியே எல்லா வற்றிலும் உறுதியாக அரசு திட்டங்களைச் செயல்படுத்தவில்லை. உதாரணமாக, நான்காம் வகையைச் சேர்ந்த தொழில் களில் பலவற்றை அரசு நாட்டுடைமையாக்கிறது. 1948-ல் இந்திய ரிசர்வ் வங்கியும் 1953-ல் ஆகாயப் போக்குவரத்தும் 1955-ல் இம்பீரியல் வங்கியும், 1956-ல் ஆயுள்காப்பீட்டுத் தொழி லும் நாட்டுடைமையாக்கப்பட்டன. மாநில அரசுகளும் மத்திய அரசைப் பின்பற்றிப் பெரும்பாலான மாநிலங்களில் மின்சக்தி நிறுவனங்கள், சாலைப்போக்கு வரத்து நிறுவகங்கள் ஆகிய வற்றை நாட்டுடைமையாக்கின. சில மாநிலங்கள் தனியார் துறைக்குப் பொதுவாக ஒதுக்கப்பட்ட காகிதம், சிமிண்டு, அலுமினியம் போன்ற தொழில்களைத் தாங்களே ஆரம்பிக்கலா யின. எஃகுத் தொழில் நாட்டுடைமையாகலாம் என்ற பயத் தின் காரணமாய், இத்தொழிலில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டு உற்பத்தியின் அதிகரிப்பும் குறைந்தது. அதனால், இத்தொழிற் கொள்கை தொழில்மயத்திற்குத் தேவையான எதிர் நோக்கு குன்றி அமைந்தது.

1951-ன் தொழில்கள் (வளர்ச்சி ஒழுங்கு) சட்டம்

1941-ன் அரசின் தொழிற் கொள்கைத் தீர்மானத்தின்படி தனியார் துறையிலுள்ள தொழில்களை, அரசு பொது நலனுக் காகக் கட்டுப்படுத்தவும் ஒழுங்கு படுத்தவும் வகை செய்யப் பட்ட காரணத்தால், அதைச் செயல் படுத்தும் முகத்தான் 1951-ல் தொழில்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்கு) சட்டம்

(Industries Development and Regulation Act) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் முதற்பட்டியலில் அரசால் ஒழுங்கு படுத்தப் பட்டு வளர்ச்சியடையச் செய்ய ஏராளமான தொழில்கள் குறிப் பிடப்பட்டன. இச்சட்டத்தின் முக்கிய ஷரத்துக்களாவன:—

(1) ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பட்டியலிலுள்ள எல்லா தொழில்களும் அரசிடம் பதிவு செய்யப்படவேண்டும்.

(2) உற்பத்தியின் அளவைப் பெருக்க எண்ணி ஆக்க சக்தியைப் பயன்படுத்த விரும்பும் புதிய தொழில்களும், ஏற் கனவே இருந்து வரும் தொழில்களும் அரசிடமிருந்து அனுமதி (Licence) பெறவேண்டும்.

(3) உற்பத்தியின் அளவு குறைந்து காணப்படும் அல்லது உற்பத்தியின் தரம் குறைந்து விளங்கும் தொழில் நிறுவனங் களின் விபரங்களை அரசாங்கம் ஆராயலாம்.

(4) தொழிலின் நிலையை ஆராய்ந்தபின், ஒரு தொழில் நிறுவனம் அரசின் கொள்கைகளுக்கு மாருகச் செயல்படுமே யாளுல், அத்தொழிலின் நிர்வாகத்தை அரசே எடுத்துக் கொள்ள அதிகாரமும் கொடுக்கப்பட்டது.

1951-ம் ஆண்டின் இச்சட்டத்தின்படி அரசு தொழில்களை ஒழுங்கு படுத்தி வளரச் செய்ய ஒரு மத்திய ஆலோசனைச் சபையை ஏற்படுத்தியது. இச்சபையில் முதலாளிகள், தொழி லாளர்கள், நுகர்வோர்கள், கச்சாப் பொருள்கள் உற்பத்தி யாளர்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகள் சேர்ந்து அரசுக்குத் தேவையானவற்றை அறிவுறுத்தி வருகிறது. வெவ்வேறு தொழில்களுக்கு அறிவுரை வழங்க வளர்ச்சிச் சபைகளையும் (Development Councils) அனுமதி வழங்கும் குழு (Licencing Committee) ஆகிய இரண்டு குழுக்களையும் ஏற்படுத்த இச்சட் டம் அரசுக்கு அதிகாரமளித்தது.

(1) வளர்ச்சி சபைகள்

இச்சபைகள் "தனியார் நிறுவனங்களின் பாதுகாப் பாளர்கள்" என்று கருதப்படுகின்றனர். இவைகளின் தலை யாய கடமை பொதுமக்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கு மிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தி, இத் தொழில்கள் திட்டமிட்ட முறைப்படி நாட்டில் தொழில் மயம் ஏற்பட சேவை செய்கின்றனவா என்பதைக் கண்காணிப்பதே ஆகும். இதற்காக, இத்தொழில்களின் உற்பத்தி குறியீடுகள், திறமை

யின் அளவு, கச்சாப் பொருள்களின் வினியோகம் கட்டுப்பாடு, விஞ்ஞான, தொழில் ஆராய்ச்சியை அதிகப்படுத்தல், தொழில்களைப் பரவலாக்குதல் வேண்டி அறிவுறுத்தல் போன்றவற்றை அஃவப்போது அரசுக்கு எடுத்துக்கூறிப் பரிந்துரைத்தல் ஆகிய தொண்டினையும் இச்சபைகள் ஆற்றி வருகின்றன.

(2) அனுமதி வழங்கும் குழு

அனுமதி வழங்கும் இக்குழு திட்டக்குழு, சம்பந்தப் பட்ட அமைச்சரகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டதாகும். இக்குழுவின் இன்றியமையாத கடமை, நாட்டில் ஒரு தலைப்பட்ட (Lopsided) தொழில் அமைப்பு நிலை மாறி, சம அளவு தொழில் வளர்ச்சியோடு தொழில் மயம் ஏற்பட வழி வகுப்பதாகும். எனவே, ஏற்கனவே இருந்து வரும் பெரிய தொழில்களும், புதிதாகத் தோன்றும் தொழில்களும் இக்குழுவிடம் அனுமதி பெற்றபின்பேதான் தொழில் புரிய முடியும். நாட்டின் சம அளவு வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இக்குழு, தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத தொழில்களுக்கு அனுமதி கொடுக்க மறுக்கலாம். ஒரு தொழிலில் அதிகப்படியான ஆக்கசக்தி தேவையில்லைஎன்று இக்குழு கருதினால், ஆக்க சக்தியைப் பெருக்குவதற்காகத் தொழில்கள் அனுப்பும் விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. ஆரம்பத்தில், ரூ. 10 லட்சத்திற்கு மேல் நிரந்தரச் சொத்துகளைக் கொண்ட தொழில்கள் முழுவதும் அனுமதி பெற வேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. 1963-ம் ஆண்டிலிருந்து இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு ரூ. 25 லட்சம் நிரந்தரச் சொத்துக்களைக் கொண்ட தொழில் நிறுவனங்கள் மட்டுமே அனுமதி பெற்று வருகின்றன.

II. 1956-ன் தொழில் கொள்கைத் தீர்மானம்

ஏப்ரல் 1956-ல் மத்திய அரசு 1951-ம் ஆண்டு தயாரித்து அமுலில் இருந்த தொழிற் கொள்கையைக் கீழ்க்கண்ட காரணங்களுக்காக மாற்றி அமைத்தது.

(a) 1950-ல் இந்திய அரசியல் சட்டம் சில அடிப்படை உரிமைகளைக் கொடுத்து அரசின் நெறிமுறைக் கோட்பாட்டினையும் (Directive principles of State policy) தெளிவாக விளக்கியது.

(b) அரசு திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியைப் பின்பற்றி முதல் ஐந்தாண்டுத் திட்டமும் முடிவுற்றது.

(c) நாடாளுமன்றமும் நாட்டின் பொருளாதார, சமூகக் கொள்கைகளைச் சாதிக்கும் நோக்கத்துடன் நாட்டின் சமதர்ம சமுதாயத்தை (Socialistic pattern of Society) அமைக்க ஆதரவு கொடுத்தது.

(d) மிகப் பேராவலுடைய இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் மக்கள் முன் வைக்கப்பட்டது.

(e) மேலும் தொழில்கள் நாட்டுடைமையாக்கப் படலாம் என்ற பயத்தினைப் போக்க வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டது.

இத்தொழிற் கொள்கையின் குறிக்கோள்

1956-ன் தொழிற் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :— (a) நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கி அதிவேகமாக நாடு தொழில் மயமாக முயலுதல். (b) கனரக, நடுத்தர வகை ஆகிய தொழில்களின் வளர்ச்சியை அதிகரித்தல். (c) பொதுத்துறையின் அளவினையும் பங்கினையும் பெருக்குதல். (d) வளர்ந்துவரும் பெரிய தொழில் நிறுவனத் துறையை மேலும் வளர்த்தல். (e) வருமானத்திலும் செல்வத்திலும் ஏற்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல். (f) மேலும் ஒரு சிலரிடமே பொருளாதார சக்தி சென்று குவிவதையும் தனியார் சர்வாதீனத் தொழில் அதிகரிப்பதையும் தடுத்து நிறுத்துதல் ஆகியவைகளாகும். இக்குறிக்கோள்களைச் சாதிக்கும் முகத்தான் நாட்டின் தொழில் மயத்தைப் பெருக்குவதற்காகக் கீழ்க்கண்ட கோட்பாடுகளை அரசு ஏற்படுத்தியது.

1. பேரளவுத் தொழில்களின் பகுப்பு

இந்தியாவின் பெரிய தொழில்கள் மூன்று வகைகளாக மறுபடியும் பிரிக்கப்பட்டன. முதல்வகைத் தொழில்களில் 17 தொழில்கள் சேர்க்கப்பட்டு அவைகள் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வளர்ந்துவரும். இவ்வகையில் சேர்க்கப்பட்ட தொழில்களில் முக்கியமானவை போர்த் தடவாளங்கள், அணு சக்தி, இரும்பு, எஃகு, கனரக வார்ப்புகள் பாளங்கள், கனரக ஆலைகளும் இயந்திரங்களும், கனரக மின் ஆலை, நிலக்கரி, சுரங்க எண்ணெய், ஆகாயவிமானம், ஆகாயவிமானப் போக்குவரத்து, இருப்புப் பாதைப் போக்குவரத்து, கப்பல் கட்டுதல், தொலைபேசி, தந்தி சாதனங்கள், மின்சார உற்பத்தி வினியோகம் போன்றவைகளாகும். இரண்டாவது வகையில் கீழ்க்காணும் 12 தொழில்கள் சேர்க்கப்பட்டு அவைகள் படிப்படியாய்

இந்திய அரசால் சொந்தமாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும். சிற்றளவான கனிப்பொருள்கள் நீங்க, மற்ற எல்லா கனிப்பொருள்களும், அலுமினியம், இயந்திரக் கருவிகள், ரசாயனத் தொழில்களுக்குத் தேவையான அடிப்படை, நடுத்தரவகைப் பொருள்கள், நோயை எதிர்க்கும் மருந்துகள் (Antibiotics) மற்ற இன்றியமையாத மருந்துச் சரக்கு, உரவகைகள், ரப்பர்த் தொழில், சாலைப் போக்குவரத்து, கடல்போக்குவரத்து போன்றவைகள்.

மூன்றும் வகைப் பிரிவில் எஞ்சியுள்ள தொழில்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டு, அவைகள் கூட்டுறவுத்துறை உள்பட்ட தனியார் துறைக்குப் பொதுவாக விட்டுவிடப்பட்டது. திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் குறிக்கோளின் அடிப்படையில் இத்தொழில்கள் நிதி, மின்சக்தி, போக்குவரத்து போன்ற வசதிகள் அளிக்கப்பட்டு விரைவில் வளர்ச்சி பெற அரசு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும். இருந்தபோதிலும் இந்தப் பட்டியலிலுள்ள தொழில்களில் பொதுத்துறையும் பங்கு பெற அரசுக்கு உரிமை அளிக்கப்பட்டது.

2. சிற்றளவுத் தொழில்கள்

1956-ன் தொழிற் கொள்கையிலும் இச்சிறு தொழில்களின் இன்றியமையாத சேவை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இத்தொழில்கள் நாட்டில் மறைந்து கிடக்கும் வளங்களைச் சமமாகப் பயன்படுத்தவும், வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க வழிவகுக்கவும், நாட்டு வருவாயைச் சமமாக எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கவும் அவசியம் தேவைப்படுகின்றன என்பதை அரசு அறிந்தது. இத்தொழில்கள் தங்கள் சுய ஆதரவிலும் சுய சக்தியிலும் வளர்ந்து உற்பத்தியில் தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு பெருகவேண்டுமெனவும் இத்தீர்மானம் வற்புறுத்தியது. இத்தொழில்கள் பேரளவுத் தொழில்களின் துணைத் தொழில்களாய்ச் சரியாகப் பொருந்தி இணையுமாறு ஆக்கவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. அதாவது பொது உற்பத்தி செயல்முறைகளை (Common Production Programmes) இத்தொழில்கள் பெருக்கவேண்டியதன் அவசியம் விளக்கப்பட்டது.

3. தொழிலாளர் நிர்வாக உறவு

நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே சமாதானத் தொழில் உறவுகள் ஏற்பட வகை செய்யப்பட வேண்டுமென்று மீண்டும் இத்தீர்மானம் வலியுறுத்தியது. தொழிலாளர்கள் உற்பத்தியின் அளவைப் பெருக்கித் தங்கள் திறமையையும் அதிகரிக்கச் செய்யத் தூண்டுகோள்களை அதிகரிக்கப்பட

வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறுவதையும் அதிகரிக்கவேண்டும் என்று கருதப்பட்டது.

4. பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்

இந்தியத் தொழில் அமைப்பு ஒருதலைப்பட்ட வளர்ச்சியைக்கொண்டதாக இருப்பதால், சில மாநிலங்களைக் கொண்ட பிராந்தியங்கள் வளர்ச்சியுற்று முன்னேறியவைகளாகவும் மற்றவைகள்வளர்ச்சி குன்றிப் பின் தங்கிய நிலையிலும் இருக்கின்றன. மஹாராஷ்டிரம், குஜராட்டியம், மேற்கு வங்காளம், பஞ்சாப், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் வளர்ச்சியடைந்தவைகளாகும் மத்தியப் பிரதேசம், ஆந்திரம், ஒரிஸ்ஸா, ராஜஸ்தானம் போன்ற மாநிலங்கள் வளர்ச்சி குறைந்தும் உள்ளன. பிற்பட்ட பிராந்தியங்களில் தொழில்மயமேற்பட, குறைந்த கட்டணத்தில் மின்சக்தி, போக்குவரத்து போன்ற வசதிகளை அரசுஅளிக்க வேண்டுமென இத்தீர்மானம் அறிவுரை கூறியது. ஆனல். இம்மாநிலங்களில் தொழில்கள் ஏற்பட மற்ற வசதிகள் இருக்கவேண்டியது அவசியமாகும். சுருங்கக்கூறின், இத்தீர்மானம் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை அகற்ற ஒரு திட்டம் தீட்டியது.

5. நிர்வாகஸ்தர்களும் நுட்ப வேலையாட்களும்

வளர்ந்துவரும் தொழில் துறையின் தேவைக்கேற்ப நாட்டில் நிர்வாக நிபுணர்களும் நுட்ப வேலையாளர்களும் அதிக அளவில் அளிக்கப்பட வேண்டிய சூழ்நிலையை இத்தீர்மானம் எடுத்துரைத்தது. இப்பணியாளர்களின் தட்டுப்பாட்டை நீக்க, தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் பயிற்சித் திட்டங்களை அமைக்கவும் இத்தீர்மானம் வலியுறுத்தியது.

6. பொதுத்துறை நிறுவனங்களை நிர்வகித்தல்

பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சி பெருகி வருவதால், இவற்றைச் சிறப்பாக நிர்வகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் லாபத்தையும் குறிக்கோளாகக் கொண்டு முன்னேற வேண்டுமென்று இத்தீர்மானம் கருத்துத் தெரிவித்தது. லாபம் அதிகமாகக் கிடைத்தால்தான் இத்தொழில்களில் முதலீடு பெருகி வளர்ச்சியின் அளவும் பெருக நல்ல வாய்ப்பு கிடைக்கும் என்றும் கருதப்பட்டது.

மதிப்பீடு : 1956-ன் தொழில் கொள்கைத் தீர்மானம் 1948-ன் தீர்மானத்தைக் காட்டிலும் பலவகைகளில் சிறப்பான அம்சங்களைக் கொண்டதெனச் சிலர் கருதினர். முதலாவதாக, பொதுத் துறைத் தொழில்கள் 9-லிருந்து 29-ஆக அதிகரித்துப் பெருகின. இரண்டாவதாக, 1956-ன் தீர்மானம் 1948-ன் தீர்மானத்தைக் காட்டிலும் மாற்றிக்கொள்ளத்தக்க முறையில் அமைந்தது. மூன்று பிரிவுகளாகத் தொழில்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும், இவற்றில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டன. பொதுத்துறையும் தனியார் துறையும் சம அளவுடனும், அந்தஸ்துடனும் வளர்ச்சி பெற வாய்ப்பளிக்கப்பட்டது. தனியார் துறையிலிருக்கும் தொழில்களுக்கும் பொதுத்துறையிலிருக்கும் நிறுவனங்களுக்கு மிடையே அரசு பேதங்காட்டவில்லை. மூன்றாவதாக, 1956-ன் கொள்கை தனியார் துறையிலிருக்கும் தொழில்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனல், 1948-ன் கொள்கையில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த தொழில்கள் நாட்டுடைமையாக்கப்படலாம் என்ற பயம் பரவலாக இருந்து வந்தது. நான்காவதாக, 1956-ன் தீர்மானம் தொழிலாளர்கள் ஒன்று சேரவும் தாங்கள் பணிபுரியும் தொழில்களின் நிர்வாகத்தில் அதிகத் தொடர்பு கொண்டு கலந்து கொள்ளவும் வகை செய்தது பாராட்டிற்குரியதாகும். இறுதியாக, சிற்றளவுத் தொழில்கள் நுட்ப உற்பத்தி முறையைக் கையாண்டு மேம்பாடடைய வேண்டியதன் அவசியத்தையும் இக்கொள்கை வற்புறுத்தியது போற்றற்குரியதாகும்.

திறனாய்வு : தற்போது அமுலில் இருக்கும் 1956-ன் தொழிற் கொள்கைத் தீர்மானம் அநேக வரவேற்கத்தக்க அம்சங்களைப் பெற்றிருந்தாலும், அதில் பல குறைகளையும் சிலர் எடுத்துரைத்தனர். இக்குறைகள் பின்வருமாறு :—

1. 1956-ன் தீர்மானம் தனியார் துறையின் அளவையும் வாய்ப்பையும் குறைத்து பொதுத்துறையின் அளவை அதிகரித்ததாகக் குறை கூறப்பட்டது. இக்கொள்கைத் தீர்மானத்தைத் தொழில் துறைச் சமுதாயம் பேருரிமைப் பத்திரமாகப் (Magna Charta) போற்றிச் சிறந்த வரவேற்பை அளிக்கும்படி அரசு கூறியது. தொழில் வளர்ச்சிக்காக எந்த தொழில் நிறுவனத்தையும் அரசு கைப்பற்றக்கூடிய உரிமையை இத்தீர்மானம் கொடுத்ததைச் சிலர் குறை கூறினர்.

2. தொழில்களைப் பிரிக்கும்போது அரசு மாற்றிக்கொள்ளத்தக்க கொள்கையைப் பெரும்பாலும் தனியார் துறையைக் காட்டிலும் பொதுத் துறையிலேதான் மேற்கொண்டது. உதாரணமாக, B பிரிவில் பதிவு செய்யப்பட்ட பொதுத் தொழில்

களுக்குத் தனியார் தொழில்கள் துணையாக இருந்து செயல்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. தனியார் துறைப் பிரிவிலும் அரசு தேவையான தொழில்கள் ஏற்படுத்த உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

3. பொதுத் துறைத் தொழில்களை விரிவுபடுத்திக் கொண்டே சென்றால், அது நாட்டில் பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தி ஏற்கனவே பெரும் நெருக்கடியில் இருக்கும் அரசின் நிதி, நிர்வாகம் ஆகிய வளங்களின் மேல் மேற்கொண்டு பெருஞ்சுமையை ஏற்படுத்தும் என்று, உலக வங்கியின் தலைவர் யூஜின்பிளாக் அறிவுறுத்தினர். இதற்காக மேற்கொண்டு வரிகளை அதிகப்படுத்தாவிட்டால் நாட்டில் பற்றாக்குறை நிதியாக்கமும் பணவீக்கமும் ஏற்படும்.

4. இத்தொழில் தீர்மானத்தின் அடிப்படையில் பொதுத் துறை நிறுவனங்கள் மட்டும் பெருமளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தனியார் துறை இரண்டாம் இடத்தைத்தான் பெற முடிந்தது. முதலாண்டுத் திட்ட காலத்தில் தனியார் தொழில்கள் போற்றத்தக்க முறையில் செயலாற்றியும் அவைகளுக்கு இரண்டாம், மூன்றும் திட்ட காலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய அளவு தரப்படாதது பெருங்குறையே என்று சிலர் கருதினர்.

இக்கொள்கையின் சிறப்பு: 1956-ன் தொழிற்கொள்கைத் தீர்மானம் பலவகைகளில் குறை கூறப்பட்டாலும் உண்மையில் அது இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பொருளாதார அரசியல் சட்டம் என அழைக்கப்படுகிறது. இத்தீர்மானம் அரசின் நெறிமுறைக் கோட்பாட்டினை, தொழில் வளர்ச்சிக்கேற்பவும் மக்களின் நல்வாழ்வின் அடிப்படையில் இலக்கணம் கூறியது. இப்பொருளாதார அரசியல் சட்டத்தின் அம்சங்கள் இரண்டாம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்முறைகளில் பிரதிபலிப்பதைக் காணலாம். முதல்வகையைச் சேர்ந்த பட்டியல் Aயில் சேர்க்கப்பட்ட நிலக்கரி, இரும்பு, எஃகு, உற்பத்தி ஆக்க சக்தி போன்ற தொழில்கள் நாட்டுடைமையாக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, அரசு அவற்றிற்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து அவற்றின் பெருக்கத்திற்கு வழிமுறைகளை மேற்கொள்ளுகிறது. உலக வங்கியிடமிருந்து இத்தொழில்கள் நிதி உதவி பெற அரசு பேருதவி புரிந்தது. அரசும் தன் பணியைச் செவ்வனே செய்ய, பிலாய், துர்காபூர், ரூர்கேலா ஆகிய மூன்று எஃகு ஆலைகளை ஏற்படுத்தி எஃகு உற்பத்தியை நாட்டில் அதிகரித்தது. இரண்டாம்

வகையைச் சேர்ந்த பட்டியல் Bயில் இடம் பெற்ற தொழில்கள் நாட்டுடைமையாக்கப்படலாம் என்ற அச்சம் நீக்கப்பட்டது. தனியார் துறைத் தொழில்களில், இரண்டாம் வகையைச் சேர்ந்த பல தொழில்கள் அயல் நாட்டு நிறுவனங்களின் கூட்டு உற்பத்தியில் பல தொழில்களைப் பெருக்கின. மூன்றும் பிரிவைச் சேர்ந்த தொழில்களில் ரூ. 50 கோடிக்கும்மேல் வைப்புகளாகக் கொண்ட வணிக வங்கிகள் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும், உறுதியும் அளித்திட நாட்டுடைமையாக்கப்பட்டன. சமீபத்தில் பொதுக் காப்பீட்டுத் தொழிலும் நாட்டுடைமையாக்கப்பட்டது. அயல்நாட்டு வாணிபத்துறை போன்ற தொழில்கள் நாட்டுடைமையாக்கப்படாமல் அரசின் சமூகக் கட்டுப்பாட்டுக்கு இணங்கிச் செயல் புரிந்து வருகின்றன. இந்த 1956-ன் தொழிற் கொள்கைத் தீர்மானம் கருத்தில் தீவிரமானதாகக் காணப்பட்டாலும், செயலில் நடு நிலை தவறுத நாயும் உண்மையானதாயும் மாறியது. எனவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் இந்தத் தீர்மானத்தையே அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டதாகும்.

முடிவாக, மத்திய அரசின் தொழில் அமைச்சரகம் குறிப்பிட்டபடி இத்தீர்மானத்தில் திருத்தியமைக்கப்பட வேண்டிய சில குறைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை இக்கொள்கையின் குறிக்கோள்களைச் செயல்படுத்தும்போது ஏற்படும் முரண்பாடுகளைப் போக்கத் தகுந்த வழிமுறைகளை இத்தீர்மானம் அறிவிக்காததாகும். விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற ஒரு பக்கமும் சமதர்ம சமுதாயத்தை அமைக்க மற்றொருபுறமும் செயல்படும்போது சில இன்னல்கள் ஏற்படுகின்றன. பேரளவுத் தொழில்களுக்கும் சிற்றளவுத் தொழில்களுக்குமிடையே உள்ள சச்சரவுகளைப் பூரணமாகத் தீர்க்க வழி காணப்படவில்லை. அயல்நாட்டு மூலதனத்தைப் பெரும் விஷயத்தில் இத்தீர்மானம் மௌனம் சாதித்தது. இரண்டு கருத்துக்களையும் தொழில் அமைச்சரகம் தெரிவித்தது. தொழில்களின் உற்பத்தி செலவைக்குறைக்கத்தொழில் ஆராய்ச்சியை விரிவுபடுத்தவேண்டும். அடுத்தபடியாக, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

நான்காம் திட்ட காலத் தொழிற் கொள்கை

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கொள்கையும் 1956-ன் தொழிற் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் தொடர்ந்து செயல்படும். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்

தின் தொழில் வளர்ச்சியின் பரந்த குறிக்கோள், ஒரு பக்கத்தில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நுகர்வுப் பொருள்களின் அளிப்பைப் பெருக்குதலும் மற்றொரு பக்கத்தில் முதல் பொருள்கள், நடுத்தர நிலைப் பொருள்கள் ஆகியவற்றை அளிக்கவல்ல அடிப்படை கனரகத் தொழில்களைப் பெருக்கு தலையாகும். இதன்மூலம் சுய நம்பிக்கையும் உறுதியும் பெற வேண்டுமென்ற நோக்கத்தையும் சாதிக்க வகை செய்யப் பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில் கண்ட தொழில்களின் பட்டியலின் அடிப்படையில் பொதுத்துறையும் தனியார் துறையும் நான்காம் திட்டத்தில் பங்கு பெற்றுச் செயலாற்ற வேண்டும். அடிப் படைத் தொழில்களும் நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களும் பொதுத்துறையில் இருக்கும் இத்தொழில்களின் வளர்ச்சிக்கு அரசு வகை செய்யும். தனியார் துறைக்கு ஒதுக் கப்பட்ட தொழில் துறையில் வளர்ச்சி பெருகச் செய்யவேண் டியது தனியாரின் பணியாகும். நான்காம் திட்ட கால தொழிற் கொள்கை நாட்டில் ஒருபுறம் தொழில்களின் வளர்ச்சி விரை வாகப் பரவலாக்கப்படவும் மற்றொருபுறம் வெளிநாட்டு உதவி யின்றி அதிவிரைவான தொழில்மய மேற்படச் செய்யவும் வகை செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

31. திட்ட கால இந்தியத் தொழில் வளர்ச்சி

1951 லிருந்து இந்தியப் பொருளாதாரத் திட்ட காலம் சிறப்புடன் தோற்றுவிக்கப்பட்டது. அன்று முதல் நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டுமென்ற உறுதி கொண்டு பல வழிகளிலும் அரசு முயன்று வருகிறது. சுதந்திரம் பெற்றபின் பல பிரச்சினைகளோடு நிதித்தட்டுப்பாட்டுப் பிரச்சினையும் பெரிதும் துன்புறுத்தியதால் முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு முதலிடம் அளிக்கப்படவில்லை. ஆனால், இரண்டாம் திட்ட காலத்திலிருந்து இந்தியத் தொழில் வளர்ச்சி தடைகளைத் தகர்த்தெறிந்து சிறப்பாக வளர்ந்து வருகிறது, சென்ற பத்து ஆண்டுகளாக இந்தியத் தொழில்கள் பெற்றுள்ள பெருக்கமும் வளர்ச்சியும் மிகவும் சிறப்பானதாகும். எனவே, இவ்வளர்ச்சியை உண்மைத் தொழிற்புரட்சி என்றும் வர்ணிக்கலாம். அடுத்தடுத்து அமுலாக்கப்பட்ட ஐந்தாண்டுத்திட்டங்களில் ஏற்பட்ட இந்தியத்தொழில் வளர்ச்சி சுருக்கமாகக் கீழே ஆராயப்பட்டுள்ளது.

முதல் திட்ட கால வளர்ச்சி

முதல் திட்டம் அளவில் சிறியதாக இருந்தாலும், நிதித் தட்டுப்பாட்டினாலும், வேளாண்மை வளர்ச்சியின் அவசியமும் அவசரமும் தவிர்க்க முடியாத நிலையில் இருந்ததாலும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிக முதலீட்டுப் பணம் ஒதுக்கப்பட வில்லை. தொழில் மயம் ஏற்பட வேண்டுமென்ற குறிக்கோளோடு மின்சக்தி, நீர்ப்பாசனம் போன்றஅடிப்படைப் பணிகளைஅமைத்து, பிற்காலத் தொழில் வளர்ச்சிக்கு முதல் திட்டம் அடிக்கல் நாட்டியது. இந்தியத் தொழில் வளர்ச்சி பரவலாக்கப்பட வேண்டு மென்றும் நுகர்ச்சிப் பொருள் தொழில்களே வளருவதால் ஏற்பட்டுள்ள ஒரு

தலைப்பட்ட வளர்ச்சியைச் சரி செய்ய வேண்டுமென்றும் முதல் திட்டம் பெரிதும் வலியுறுத்தியது.

சிறப்பிடம் பெற்ற தொழில் துறைகள்

1948-ம் ஆண்டின் தொழிற்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு திட்டக்குழு தொழில்களின் முக்கியத்துவத்தின்படி முந்துரிமைகளை (Priorities) வரிசைப்படுத்தியது.

1. பருத்தித் துணிகள், சர்க்கரை, சோப்பு, வனஸ்பதி, வர்ணங்கள் போன்ற நுகர்வுப் பொருள் தொழில்களில் இருக்கும் உற்பத்தித் திறனையும் சக்தியையும் முழுவதுமாகப் பயன்படுத்துதல்.

2. இருப்பு, எஃகு, அலுமினியம், சிமெண்டு, உரங்கள், கனரக ரசாயனப் பொருள், இயந்திரக்கருவிகள் போன்ற முதல் உற்பத்திப் பொருள் தொழில்களின் ஆக்க சக்தியைப் பெருக்குதல்.

3. ஏற்கனவே ஒரு பகுதி முதலீடு செய்யப்பட்ட தொழில் பகுதிகளை முழுமையாக வளரச் செய்தல்.

4. மேலும், தற்போது இருக்கும் தொழில் உற்பத்தியின் குறைகளைச் சீர்படுத்தி முடிந்தவரையில், தொழில் அமைப்பிற்கு சிறந்த ஆதரவும் பலமும் அளிக்க வல்ல புது இயந்திர அமைப்புக்களை ஏற்படுத்துதல். உதாரணமாக, ஜிப்சம் என்னும் பொருளிலிருந்து சல்பர் என்னும் பொருளையும், ரசாயனக் கூழிலிருந்து ரேயான் என்ற பொருளையும் உற்பத்தி செய்தலாகும்.

நிதி முதலீடு: மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக ரூ. 233 கோடி தனியார் துறையிலும் ரூ. 60 கோடி பொதுத்துறையிலுமாக, மொத்தம் ரூ. 293கோடி பேரளவுத்தொழில்களில்முதலீடு செய்யப்பட்டது. சிற்றளவு, குடிசைத் தொழில்களுக்கு ரூ. 49 கோடி என்று குறிக்கப்பட்டது. எல்லா வகைத் தொழில்களுக்கும் சுரங்கத் தொழில், ஆராய்ச்சித் துறை ஆகியவற்றிற்குமாக மொத்தம் ரூ. 188 கோடி பொதுத் துறையில் அளிக்கப்பட்டது. ஆனால், ரூ. 100 கோடி மட்டும்தான் செலவு செய்யப்பட்டது. தொழில் வளர்ச்சிக்குத் தனியார் துறையில் ரூ. 463 கோடி அளிக்கப்பட்டது. ஆனால், ரூ. 340 கோடி மட்டும்தான் இத்திட்ட காலத்தில் செலவு செய்யப்பட்டது. ஆரம்ப சிக்கல்களாலும், நிர்வாகத் தடங்கல்களாலும் செலவில் துண்டுவிழ நேர்ந்தது.

சாதனைகள் : முதலாண்டு காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளின் முடிவால் தொழில் உற்பத்தி ஆண்டுக்கு 7 சதவீதம் என்ற வீதத்தில் வளர்ச்சியடைந்தது.

தொழில் உற்பத்தியின் குறியீட்டு எண்

(1950-51—100)

தொழில் வகை	1955 முதல் 1956 வரை
1. எல்லாத் தொழில்களுக்கும் பொதுவான குறியீட்டு எண்	139
2. பருத்தித்துணி வகைகள்	128
3. இரும்பு, எஃகுப் பொருள்கள்	122
4. எல்லா வகை இயந்திரம்	192
5. ரசாயனப் பொருள்கள்	179

ஆதாரம் : மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்—ப. 39.

இருக்கும் ஆக்கசக்தியை முழுவதுமாகப் பயன் படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு முதல் திட்டம் தீட்டப்பட்ட போதிலும், தொழில் உற்பத்தி பொதுவான குறியீட்டு எண் 5–ஆண்டு காலத்தில் 39 சதவீதமாக அதிகரித்தது மிகச் சிறந்த சாதனையாகும்.

பருத்தித் துணிவகைகள், இரும்பு எஃகுப் பொருள்கள் ஆகியவற்றின் முன்னேற்றம் முறையே 28 சதவீதம் 22 சதவீதம் ஆகும்.

இரண்டாவதாக, முதல் திட்ட காலத்தில் ஏராளமான அரசுத் தொழில்களும் ஏற்பட்டன. சிந்திரி உரஆலை, சித்தரஞ்சன் ரயில் இஞ்சின்ஆலை, இந்தியத் தொலை பேசி தொழிற்சாலைகள், புகைவண்டிப் பெட்டி தொழிற்சாலை, பென்சிலின் மருந்து தொழிற்சாலை ஆகிய தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. இது தவிர, உத்தரப் பிரதேசத்திலுள்ள இயந்திரக் கருவி ஆலை, சிமெண்டு தொழிற்சாலை, நேபா தொழிற்சாலை, பீஹாரிலுள்ள

சூபர் பாஸ்பேட் தொழிற்சாலை ஆகியவைகள் முழுமை நிலை எய்தின. மூன்று எஃகு இயந்திரத் தொழில் அமைப்புத்தொழிற் சாலைகளை ஏற்படுத்த ஆயத்த வேலைகள் முடிவடைந்தன. மைசூர் இரும்பு எஃகு வேலைத் தொழில் வளர்ச்சிக்கான வழி களும் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. எனவே, முதல் திட்டம் தொழில் முன்னேற்றத்திற்குக் கூடியமட்டும் முயற் சித்தது.

மூன்ருவதாக, தனியார் துறையிலும்சில புதிய பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. உதாரணமாக, மின் மாற்றுக் கருவிகள், தையல் இயந்திரங்கள், காகிதம், காஸ்டிக் சோடா, ரேயான், அலுமினியம் போன்ற பழைமைப்பாங்கற்ற பொருள் களின் உற்பத்தி இத்திட்ட காலத்தில் ஏற்பட்டது.

நான்காவதாக, தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத பொது நோக்குடைய சில பணிகளும் இத்திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. மின் சக்தி, போக்கு வரத்து வசதி போன்றவற்றின் பெருக்கத்தினுல் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பொது நோக்குடைய வசதிகளின் அமைப்பு (Infrastructure) நாட்டில் ஏற்படுத்தப்பட்டது.

இறுதியாக, சிறுதொழில் வளர்ச்சிக்காக அரசு பல முக்கிய தடுப்பு முறைகளைக் கையாண்டது. வேட்டித்துணி, சேலைத் துணி ஆகியவற்றின் உற்பத்தியை, கைத்தறித் தொழில்களுக் காக ஒதுக்கியது. பேரளவுத் தொழில்களை உறுதியிழக்கச் செய்ய அவற்ருல் உற்பத்தியான பொருள்களின் மேல் வரி (Cess) விதிக்கப்பட்டது. இந்த வரியின் மூலம் கிடைத்த தொகையைச் சிற்றளவுத் தொழில், குடிசைத்தொழில்ஆகியவற் றிற்கு உதவிக் கொடையாக அளிக்கப்பட்டது. விளையாட்டுப் போட்டிக்கான பொருள்கள், கரும்பலகைகள், எழுதுபென்சில் கள், எழுதுமை, மெழுகுவத்திகள் போன்ற பொருள்களின் உற்பத்தியைச் சிறு தொழில்களுக்காக அரசு ஒதுக்கியது.

இரண்டாம் திட்ட கால வளர்ச்சி

1956-ம் ஆண்டின் தொழிற் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் பொதுத்துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தொழில்மயம் நாட்டில் ஏற்படும் வகையில் இரண் டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் செயல்முறைகள் அமைந்தன. இரண்டாம் திட்டம் உண்மையில் தொழில் திட்டம் என்று அழைக்கப்படுவது முறையாகும். தொழில் மயம் ஏற்பட இத்

திட்டம் மிகப் பெரும் செயல்களைச் செய்யப் பொறுப்பேற்றது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பலம் பொருந்திய அஸ்திவாரத்தை இத்திட்டம் ஏற்படுத்தி ஏராளமான கனரக, அடிப்படைத் தொழில்களை நாட்டில் ஏற்பட காரணமாய் அமைந்தது.

நிதி முதலீடு : பொதுத்துறையில் தொழில் வளர்ச்சிக்காக மொத்த செலவுத் தொகை ரூ. 890 கோடி அதாவது மொத்தத் திட்ட செலவில் 18·5 சதவீதம் செலவு செய்யலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. இதில் ரூ. 200 கோடி சிற்றளவு குடிசைத் தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

தொழில்களின் இரண்டாம் திட்ட கால உண்மைச் செலவும் முதலீடும்

ரூபாய் கோடிகளில்

தொழில்கள்	மொத்த முதலீடு		
	பொதுத்துறை	தனியார்துறை	மொத்தம்
1. அமைக்கப்பட்ட தொழில், கனிப் பொருள்களுக்காக	870	675	1545
2. சிற்றளவு, குடிசைத்தொழில்கள்	90	175	265
மொத்தம்	960	850	1810

ஆதாரம் :—மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்—ப. 59.

அமைக்கப்பட்டு வளர்ச்சியடைந்த பொதுத்துறைத் தொழில்களின்மேல் செலவழிக்கப்பட்ட மொத்த தொகையாகிய ரூ. 900 கோடியில் முதலீட்டுக்கான செலவு ரூ. 870 கோடியாகும். தனியார் துறையில் எதிர்பார்க்கப்பட்ட செலவைவிட அதிகமாக இரண்டாம் திட்ட காலத்தில் மொத்தம் ரூ. 675 கோடி முதலீடு செய்யப்பட்டது. அதே போன்று தனியார் துறையிலும் பொதுத்துறையிலுமாகச் சேர்ந்து சிறுதொழில், குடிசைத் தொழில் ஆகியவற்றிற்கு மொத்தம் ரூ. 265 கோடி செலவு செய்யப்பட்டது. எனவே, தொழில்களின்மேல் இரண்டாம் திட்ட

காலத்தில் எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து மொத்தம் ரூ. 1810 கோடி செலவு செய்யப்பட்டது. அது இரண்டாம் திட்ட கால மொத்த முதலீட்டுத் தொகையில் 27 சதவீதமாகும்.

சிறப்பிடம் பெற்ற தொழில் துறைகள்

இரண்டாம் திட்ட காலத்தில் எந்த முறையில் தொழில் அமைப்பும் முறையும் அமைய வேண்டுமென்று ஆராய்ந்து அதற்கேற்றாற்போல் தொழில்களுக்கு வரிசைப்படி முதலிடம் கொடுக்கப்பட்டது பின்வருமாறு :—

(1) கனரக ரசாயனத்தொழில், இரும்பு எஃகுத் தொழில் ஆகியவற்றின் உற்பத்தியின் அளவை அதிகரித்தலும், கனரக பொறிஇயல் தொழில்கள், கனரக இயந்திரங்கள் தயாரிக்கும் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சியைப் பெருக்குவதும் முதல் குறிக்கோளாகக் கருதப்பட்டது.

(2) அலுமினியம், சிமெண்டு, ரசாயனக் கூழ், இன்றியமையாத மருந்துகள் போன்ற உற்பத்திப் பொருள்கள், மற்ற வளர்ச்சிக்கு இன்றியமையாத பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழில்களின் ஆக்க சக்தியைப் பெருக்குதல்.

(3) சணல், பருத்தித்துணி வகைகள், சர்க்கரை போன்ற ஏற்கனவே வளர்ந்துவரும் முக்கியமான நாட்டின் தொழில்களின் சாதனங்களை மாற்றியமைத்து நவீனப்படுத்துதல்.

(4) முடியக்கூடிய ஆக்க சக்திக்கும் ஏற்படும் உற்பத்திக்குமிடையே உள்ள பிளவைக் கொண்டிருக்கும் தொழில்களில் இருந்துவரும் நிறுவப்பட்ட ஆக்க சக்தியை முற்றிலுமாகப் பயன்படுத்துதல்.

(5) பொது உற்பத்தி ஆக்க வகைகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு நுகர்வுப் பொருள் தொழில்களின் ஆக்க சக்தியைப் பெருக்கி பரவலாக்கப்பட்ட சிறு தொழில்களின் உற்பத்தி எல்லைகளைத் (Production Targets) தீர்மானித்தல் போன்ற இச்செயல்களுக்கு வரிசைப்படி முதலிடம் கொடுக்கப்பட்டது.

சாதனைகள் : இரண்டாம் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான அரும்பணி மூன்று எஃகு இயந்திர அமைப்புத் தொழில்களை ஏற்படுத்தியதாகும். அந்த மூன்று எஃகு ஆலைகளாவன :— பீஹாரில் ரூ. 128 கோடி மதிப்புடைய செலவுடன் ஏற்படுத்தப்பட்ட (1) ரூர்கேலா எஃகு ஆலை,

ரூ. 110 கோடி மதிப்புடைய செலவுடன் மத்திய பிரதேசத்தில் அமைக்கப்பட்ட (2) பிலாய் எஃகு ஆலை, ரூ, 115 கோடி மதிப்புடைய செலவுடன் மேற்கு வங்காளத்தில் தோற்றுவிக்கப்பட்ட துர்காபூர் எஃகு ஆலை. இந்த ஆலைகள் பொதுத்துறையில் ஒவ்வொன்றும் 1 மில்லியன் டன் இரும்பு வார்ப்பு ஆக்க சக்தியுடன் 350,000 டன் ஆலைத்தர இரும்பைத் தயாரிக்க வல்லவைகளாய் உள்ளன. இந்த மூன்று ஆலைகளுடன், மைசூர் இரும்பு எஃகுத் தொழில் வேலைகளின் ஆக்க சக்தியும் அதிகரிக்கப்பட முயற்சிக்கப்பட்டது.

தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட மற்ற செயல் வகைகள் பின்வருமாறு :—

மின்சக்தியாக்கச் சாதனங்களை உற்பத்தி செய்தல், ஹிந்துஸ்தான் இயந்திர கருவிகள் தொழிலைப் பெருக்குதல், ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழில், சித்தரஞ்சன் ரயில் இயந்திரங்கள் தயாரிக்கும் ஆலை போன்ற பொதுத்துறை கனரகத் தொழில்களும், லேசான, நடுத்தர அளவுடைய தொழில்களும் போற்றத்தக்க முறையில் முன்னேற்றமடைந்தன.

தொழில் உற்பத்தியின் குறியீட்டு எண் 1955—56-ல் 139 ஆக இருந்தது 1960—61-ல் 194-ஆக உயர்ந்தது.

தொழில் உற்பத்தியின் குறியீட்டு எண்

(1950–51–100).

தொழில்கள்	1955-56	1960–61
பொதுவான குறியீட்டு எண்	139	194
பருத்தித் துணி வகைகள்	128	133
இரும்பு	122	238
எல்லாவகை இயந்திரங்கள்	192	503
ரசாயனப் பொருள்கள்	179	288

ஆதாரம்: "மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்"—ப. 39.

இரண்டாம் திட்ட காலத்தில் செய்யப்பட்ட முதலீட்டுத் தொகையில் பெரும் பகுதி கனரக, அடிப்படைத் தொழில்களின் மேல் செலவிடப்பட்டது. எஃகு வார்ப்பு உற்பத்தி 1950–51–ல் 1·4 மில்லியன் டன் ஆக இருந்தது 1960-61ல் 3·5 மில்லியன் டன் ஆக உயர்ந்தது. விவசாயம், போக்குவரத்து, ரசாயனப் பொருள்கள், துணிவகை, சணல் போன்ற தொழில் ஆகிய துறைகளுக்குப் பயன்படக்கூடிய இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் மிகச் சிறந்த முறையில் பெருகின. சணல், பருத்தித் துணிகள், சர்க்கரை போன்ற தொழில்களில் நவீன உற்பத்தி முறையும் சீரமைப்பும் பெருமளவில் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்ட காலத்தில் புதுமைப் பாங்குடைய பொருள் வகைகளாகிய தொழில் நீராவி ஆலைகள் (Industrial boilers) மாவரைக்கும் எந்திரங்கள், விவசாயக் கருவிகள், ஸ்கூட்டர்கள் போன்றவைகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன. நுகர்ச்சிப் பொருள்களாகிய துணிவகைகள், சர்க்கரை போன்றவைகளும், நீடித்த நுகர்வுப் பொருள்களாகிய ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், மின்விளக்குகள், தையல் இயந்திரங்கள் போன்றவைகளும் இக்காலத்தில் பேரளவில் உற்பத்தி செய்யப்பட்டன. சிறிய தொழிலதிபர்கள் இக்காலத்தில் ஏராளமாகத் தோன்றினர். 1000 சிறிய தொழிற்கூடங்களைக் கொண்ட ஏறக்குறைய 60 தொழிற் பேட்டைகள் ஏற்படுத்தப் பட்டன. இவ்வாறு தொழிற்பேட்டைகளை ஏற்படுத்திக் கூடுமானவரை நகரங்களிலும் ஊர்களிலும் ஏற்படும் மக்கள் குவியலைக் குறைக்க அரசு முயற்சித்து வருகிறது. முதன் முதலாக, சிறு தொழில்களின் நுட்ப, நிதி, விற்பனை போன்ற பிரச்னையைத் தீர்க்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதற்காகச் சிறு தொழில்கள் பணி பயிற்சி நிலையங்களும், நாட்டின் சிறு தொழில்களின் கழகங்களும் இத்திட்ட காலத்தில் அமைக்கப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக, அயல்நாட்டுச் செலாவணிச் சிக்கல் ஏற்பட்டதால், அநேக செயல் திட்டங்கள் இத் திட்ட காலத்தில் தள்ளிப் போடப்பட்டன. இவ்வாறு திட்டங்களைத் தள்ளிப்போடாமல் இருந்தால், தொழில் மயத்தின் முன்னேற்றம் ஏற்பட்ட அளவைக் காட்டிலும் மிக அதிகமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மூன்றும் திட்ட காலத் தொழில் வளர்ச்சி : மூன்றும் திட்ட காலத்தில் நாட்டில் தொழில் பெருக்கம் ஏற்பட மேற்கொண்ட செயல்வகைகளும் 1956ன் தொழிற்கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையிலேதான் அமைக்கப்பட்டன.

முதலிடம் பெற்ற தொழில் துறைகள்

(1) அயல் நாட்டுச் செலாவணி நெருக்கடியால் 1957-58-ல் தள்ளிவைக்கப்பட்ட தொழில்களையோ அல்லது இரண்டாம் திட்ட காலத்தில் தொடர்ந்து செயல்முறையில் வளர்ந்துவந்த தொழில் திட்டங்களையோ மூன்றும் திட்ட காலத்தில் முழுவது மாக முடிக்க முயற்சித்தல்.

(2) கனரகப் பொறியியல், இயந்திரம் கட்டுதல், இரும்புக் கருவிகள் போன்ற தொழில்களின் ஆக்க சக்தியைப்பரவலாக்கி வளர்ச்சி பெருகும்படி செய்தலும், உரங்கள், பெட்ரோல் எண்ணெய்ப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும் அதிகரித்தல்.

(3) இன்றியமையாத அடிப்படைக் கச்சாப் பொருள்களை யும் உற்பத்தி அல்லது முதல் பொருள்களாகிய அலுமினியம், தாதுப் பொருள் எண்ணெய்கள், கரைக்கும் கூழ், அடிப்படை ரசாயனப் பொருள்கள் போன்றவைகளின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(4) உற்பத்தி செய்யப்படும் அளவுக்கும் உற்பத்தி செய்ய முடியக்கூடிய ஆக்கசக்திக்கும் இடையே உள்ள பிளவைச் சரி செய்து நிலைநாட்டப்பட்ட ஆக்கசக்தியை முழுவதுமாகப் பயன் படுத்தல்.

(5) முக்கியமான மருந்து வகைகள், காகிதம், துணி, சர்க்கரை, மரக்கரி எண்ணெய்கள், வீடு கட்டத் தேவையான பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் உள்நாட்டுத் தொழில்களின் உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவைகள் மூன்றும் திட்ட கால முந்துரிமைகள் ஆகும்.

செயல் திட்டங்கள் : தொழில் உற்பத்திப் பெருக்கக் குறியீடு (Target) ஆண்டுக்கு 11 சதவீதம் என்ற வீதத்தில் அல்லது மூன்றும் திட்ட காலத்தில் 70 சதவீதம் என்று தீர்மானிக்கப் பட்டது. இரும்பு எஃகு இயந்திரங்கள், ரசாயனப் பொருள்கள் போன்றவைகளைத் தயாரிக்கும் தொழில்களின் உற்பத்தியில் எதிர்பார்க்கப்பட்ட 70 சதவீதத்தைக் காட்டிலும் அதிகமாகப் போற்றத்தக்க வகையில் உற்பத்திப் பெருக்கம் காணப்பட்டது. சுயவலிமையுடைய பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பெரும் அளவுக்கு இக்குறிப்பிட்ட தொழில்களின் குறியீடுகள்

குறிக்கப்பட்டன. அவற்றைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

தொழில் உற்பத்தியின் குறியீட்டு எண்.
(1950-51 – 100)

தொழில் வகைகள்	1960-61	1965-66	திட்ட காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி சதவீதத்தில்
பொதுவான குறியீட்டு எண்	194	329	70
இரும்பு, எஃகு	238	637	168
எல்லாவகை இயந்திரங்கள்	503	1224	143
ரசாயனப் பொருள்கள்	288	720	150
பருத்தித் துணிகள்	133	157	11

மேற்குறிப்பிட்ட நோக்க மதிப்புகளைத் திட்ட காலத்தில் சாதிக்க ரூ. 2000 கோடி மொத்த முதலீடு செய்யப்பட்டதில் ரூ. 1·330 கோடி பொதுத் துறைக்காக ஒதுக்கப்பட்டது. சிறு தொழில்களுக்காக இத்திட்டகாலத்தில் தடுப்பு முறைகளுக்குப் பதிலாக ஆக்கமுறையான வழிகளில் வளர்ச்சியடையச் செய்ய கீழ்க்கண்ட குறிக்கோள்கள் கையாளப்பட்டன.

(1) ஆக்கமுறை உதவிகளாகிய தொழிலாளர் திறமையை அதிகரித்தல், நுட்ப முறை பற்றி ஆலோசனை கூறுதல், சிறந்த சாதனங்கள் நிதி உதவி ஆகியவற்றின் மூலம் உழைப்பாளர்களின் உற்பத்தியின் அளவைப் பெருக்கி உற்பத்திச் செலவைக் குறைத்தல்.

(2) நிதிக்கொடைகள், விற்பனைத் தள்ளுபடிகள், பாதுகாக்கப்பட்ட சந்தைகள் ஆகிய உதவிகளின் பங்கைச் சிறுகச்சிறுகக் குறைத்து, சிறு தொழில்கள் தங்கள் சுயபலத்துடனும் வசதிகள், சாதனங்கள் ஆகியவற்றுலும் வளர்ச்சியடையச் செய்தல்.

(3) கிராமப்புறங்களிலும் சிற்றூர்களிலும் சிறு தொழில்களில் வளர்ச்சியைப் பெருக்குதல்.

(4) பேரளவுத் தொழில்களுக்குத் துணைத் தொழில்களாய் அமைந்து உதவியளிக்கும் வகையில் சிற்றளவுத்தொழில்களின் வளர்ச்சியை அதிகரித்தல்.

(5) கூட்டுறவுத் திட்ட முறைகளில் கைவினைஞர்களையும், தொழிலாளர்களையும் ஒன்று சேர்த்து உற்பத்தியைப் பெருக்கு தல் போன்ற நோக்கங்களாகும்.

நிதி முதலீடு: சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக மூன்றும் திட்ட காலத்தில் ரூ. 264 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இத் தொழில்களுக்கு வங்கிகள் கொடுக்கும் நிதி உதவிக்கு அரசு காப்புறுதியளிக்க செயல் திட்டங்கள் வரையப்பட்டன. நாட்டுச் சிறு தொழில் கழகம் இத்தொழில்கள் தங்கள் இயந்திரங்களை யும் சாதனங்களையும் நவீனப்படுத்த தவணை முறையில் இயந் திரங்கள் விற்கும் திட்டத்தை விரிவு படுத்தியது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இத்தொழில்களைப் பரவலாக்கும் முகத்தான் 300 தொழிற்பேட்டைகளையும் ஏற்படுத்த இத்திட்டம் வகை செய்தது போற்றற்குரியது ஆகும்.

சாதனைகள்: 1965-66ல் இறக்குமதித் தடுப்பு முறைகளால் கச்சாப் பொருள்களுக்குக்கிடைப்பருமை ஏற்பட்டதால்தொழில் உற்பத்தி இவ்வாண்டில் பெருகவில்லை. அதன் பிறகு வருடத் திற்கு 7முதல் 8 சதவீதம் வளர்ச்சி என்ற வீதத்தில் தொழில் உற்பத்தி மூன்றும் திட்ட காலத்தில் பெருகியது. ஒவ்வோர் ஆண்டும் ஏற்பட்ட உண்மை வளர்ச்சி வருமாறு:—

வருடங்கள்	வளர்ச்சி வீதம் (சதவீதங்களில்)
1961-62	7
1962-63	7·7
1963-64	8·5
1964-65	7
1965-1966	4

இவ்வளர்ச்சி வீதமானது எதிர்ப்பார்க்கப்பட்ட 11 சதவீத வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் குறைவு. தொழில் உற்பத்தியின் பொது குறியீட்டு எண்ணோடு ஒப்பிடும் போது, முதல் பொருள் அல்லது உற்பத்திப் பொருள் தொழில்களிலும் அடிப் படைத் தொழில்களிலும் உற்பத்தியின் அளவு போற்றத்தக்க முறையில் அதிகமாக இருந்தது. இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில்கள், கனரக பொறி இயல் தொழில்கள் போன்ற பொதுத்துறை நிறுவகங்கள் உற்பத்தியின் அளவை அதிகரித்தன. அலுமினியம், இயந்திரக் கருவிகள், பயிரிடும் இயந்திர சாதனங்கள், இரும்பு வார்ப்பும் காய்ச்சி அடித்தலும், காகிதம், காகிதக் கூழ் போன்றவற்றை உற்பத்தி செய்யும் தனியார் துறைத் தொழில் நிறுவகங்களும் உற்பத்தியின் அளவைப் பெருக்கி முன்னேற்ற மடைந்தன. மூன்றும் திட்ட காலத்தில் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட தொழில்கள், சுரங்கத்தொழில் ஆகியவற்றுக்கான மொத்த நிதித் தொகை ரூ. 300 கோடியாக மாற்றியமைக்கப்பட்டது. இத்தொகையில் ரூ. 1700 கோடி பொதுத்துறையிலும் ரூ. 1300 கோடி தனியார் துறையிலும் செலவு செய்யப்பட ஒதுக்கப்பட்டது. இத்திட்ட காலத்தில் வாடகை கார் மீட்டர்கள், கண்ணாடி பாளங்கள், தாளகை இயங்கும் பட்டரைகள், உஷ்ணக் கட்டுப்பாட்டுக் கருவிகள் போன்ற புதுவகைப் பொருள்கள் வணிகவிற்பனைக்காக பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இதே போன்று ஏராளமான புது வகைக் கச்சாப் பொருள்களும் இத்திட்ட காலத்தில் பயன்படுத்தப் பட்டன. இத்திட்ட காலத்தில் ஏற்பட்ட குறுகிய முன்னேற்றத்திற்கான காரணங்களில் மின்சக்தி, போக்குவரத்து வசதி, எரிபொருள், இன்றியமையாத கச்சாப் பொருள்கள் உள்உறுப்புகள் போன்றவைகள் தேவையான அளவு கிடைக்காமையும் ஆக்கசக்தியை முழு அளவில் பெரிய தொழில்கள் பயன் படுத்தாமையுமேயாகும். ஆக்க சக்தியைக் குறைந்த அளவில் பயன் படுத்தியதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

(1) அயல் நாட்டுச் செலாவணிகிடைக்காமையால் தேவையானவற்றை வெளிநாடுகளிலிருந்து பெற இயலாமை.

(2) இன்றியமையாத உற்பத்திப் பொருள்கள் கிடைக்காமல் தொழில்கள் முழுஅளவில் உற்பத்தி செய்ய வசதியின்மை.

(3) உள் உறுப்புகள், உதிரி உறுப்புகள் போன்றவைகளின் பற்றாக்குறை.

இத்தகைய காரணங்களால் இத்திட்ட காலத்தில் தொழில் வளர்ச்சி தடைப்பட்டது. நான்காம் ஐந்தாண்டுத் திட்ட

காலத்தில் இத்தடைகளைத் தகர்த்தெறிய விடாமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நான்காம் திட்டத் தொழில் வளர்ச்சி

இரண்டாம், மூன்றும் திட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைகளைத் தொடர்ந்து நான்காம் திட்டத்திலும் செயல் படுத்தினாலும் நுகர்வுப் பொருள் தொழில்களின் வளர்ச்சிக்கே நான்காம் திட்ட காலத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மக்கள்தொகை அதிகரிப்பால் நுகர்வுப் பொருள்களின் தேவை இத்திட்டகாலத்தில் பெருகியதால், இப்பொருள்களின் உற்பத்தியின் அளவை அதிகரிப்பதே முக்கிய நோக்கமாகக் கருதப்பட்டது. மேலும், சுய நம்பிக்கையும் தன்னிறைவும் விரைவில் பெருகுவதற்காக முதல் பொருள்கள் நடுத்தரவகைப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் அடிப்படை, கனரகத் தொழில்களின் உற்பத்தியைப் பெருக்குவது பரவலான குறிக்கோளாகக் கருதப்பட்டது. முதன் முறையாக, வேளாண்மைத் துறையுடன் தொழில் துறையும் இணைந்து செயல்படும் நிலையைத் திட்டக் குழு வலியுறுத்தியுள்ளது. உரங்கள், பூச்சி மருந்துகள் பண்ணைச் சாதனங்கள், மற்றும் முதலீட்டுப் பொருள்கள் போன்ற விவசாய உள்ளீடு (inputs) முதல் பொருள்களை உற்பத்தி செய்யும் சில தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயத் துறைக்கும் தொழில் துறைக்கும் இடையே ஒருங்கிணைப்பு ஏற்படலாமென்று கருதப்படுகிறது. தொழில் அமைப்பில் தற்போது இருந்து வரும் பிளவைத் தடுத்துக் குறைகளை நிவர்த்தி செய்யும் செயல் முறைகளும் இக்காலத்தில் மேற்கொள்ளப்படும். இறக்குமதி பதிலீட்டு முறை (import-substitution) யை வெற்றிகரமாக விரிவாக்க வசதிகள் செய்யப்படும். வளர்ந்து வரும் ஏற்றுமதித் தொழிலின் வளர்ச்சியை நிலை நிறுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொழில்களின் ஆக்க சக்தியை அதிகரித்தலும் ஒரு நோக்கமாகக் கருதப்பட்டுள்ளது. பொருளாதார நுட்ப அடிப்படையில் தொழில்களைப் பரவலாக்கிப் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்காக வகை செய்தலையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

முதலிடம் பெற்றுள்ள தொழில்கள்

(1) வேளாண்மைக்குத் தேவையான உள்ளீடு முதல் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்.

(2) எஃகு, அலுமினியம், துத்தநாகம் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் உலோகத் தொழில்கள், இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில்கள் ஆகியவை.

(3) தொழில் ரசாயனப் பொருள்கள், பெட்ரோல் எண்ணெய், நிலக்கரி, இரும்பு எஃகு வார்ப்புகள், சிமெண்டு ஆகிய பொருள்களை உள்ளடக்கிய நடுத்தரவகைப் பொருள்கள்.

(4) சர்க்கரை, துணி, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாத நுகர்வுப் பொருள் தொழில்கள் ஆகியவை.

நான்காம் திட்ட காலத்தில் தொழில் வளர்சிக்காக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் வருமாறு:—

(a) முதலீட்டைச் சரியான முறையில் சமப்படுத்துவதன் மூலம் இருந்துவரும் தொழில் ஆக்க சக்தியை முழுமையாகப் பயன் படுத்தல்.

(b) மூன்றும் திட்டகாலத்திலிருந்து தொடர்ந்துகொண்டு வரப்படும் திட்டங்களைச் சீக்கிரத்தில் முடித்து விடுதல்.

(c) விவசாயத் தொழில்களை வளர்த்து வேளாண்மைக்குத் தேவையான தொழில் உள்ளீடு (input) முதல் பொருள்களை உற்பத்தி செய்தல்.

(d) இருந்து வரும் தொழில் பகுதிகளைப் பெருக்குதல்.

நிதிமுதலீடு:—நான்காம் திட்ட காலத்தில் அமைக்கப்பட்ட தொழில்கள், சுரங்கத் தொழில்கள் ஆகியவற்றிற்காக பொதுத் துறையில் மொத்தம் ரூ. 3090 கோடியும் தனியார் துறையில் ரூ. 2150 கோடியுமாக மொத்தம் ரூ. 5240 கோடி அதாவது மொத்த நிதித் தொகையில் 21·5 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. குடிசைத் தொழில்கள் சிறு தொழில்கள் ஆகியவற்றிற்காக இத்திட்டகாலத்தில் பொதுத்துறையில் மொத்தம் ரூ, 295 கோடியும் தனியார் துறையில் ரூ. 500 கோடியுமாக மொத்தம் ரூ. 795 கோடி அதாவது மொத்த நிதித்தொகையில் (Total Outlay) 3·3 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உற்பத்திக் குறியீடு
(Production Targets)

பொருள் வகைகள்	அலகுகள்	1968–69 மதிப்பிடப்பட்ட	1973–74 குறியீடு
எஃகு வார்ப்புக் கட்டிகள் அல்லது பாளங்கள்	மில்லியன் டன்களில்	6·5	10·8
இயந்திரக் கருவிகள்	ரூபாய் கோடிகளில்	25·0	65·0
சிமெண்டு	மில்லியன் டன்களில்	12·5	18·0
(ஆலைகளில் செய்யப் பட்ட) துணி	மில்லியன் மீட்டர்களில்	4400·0	5100·0

இத்திட்ட காலத் தொழில் செயல் முறைகளை அமுலாக்க முயலும்போது ஏராளமான சிக்கல்கள் தோன்றும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், மேற்காணும் பரந்த கருத்துக்கள் அனைத்தும் செயல் எண்ணங்களாகவே காணப்படுகின்றன. மூன்றும் திட்ட காலத்திலும் பெரும் செயல்திட்டங்கள் தீட்டப்பட்டும் அவைகள் முழு அளவில் வெற்றி பெற இயலவில்லை. மூன்றும் திட்ட காலத்தில் பொதுத்துறைத் தொழில் நிறுவனங்களின் செயல் ஆற்றல் அவ்வளவு திருப்திகரமாய் அமையவில்லை என்பதைஅவற்றின் சாதனைகள் மூலம் அறிகிறோம். திட்ட காலத் தொழில் முன்னேற்றத்தில் தொடர்ந்து அடிப்படை, கனரகத் தொழில்களே முக்கியத்துவம் பெற்று வலியுறுத்தப்பட்டு வருகின்றன. தன்னிறைவு பெறும் நோக்கத்தில் வெற்றி பெறவும் நாட்டை வெகுசீக்கிரத்தில் தொழில்மயமாகும் நிலைக்கு அழைத்துச் செல்லவும் இத்தொழில்களின் வளர்ச்சி இன்றியமையாததாகும். நான்காம் திட்ட தொழில் கொள்கையில் காணப்படும் ஒரு குறையாதெனில் இன்றியமையாத நுகர்வுப் பொருள்களுக்குக் குறைந்த முக்கியத்துவமும் முதலீடும் கொடுக்கப்பட்டுள்ளதுமேயாகும். நுகர்வுப் பொருள்களின் தேவை அதிகமாகி பணவீக்கம் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கின்றதால்,

துணி, சர்க்கரை, மருந்துகள் போன்ற இன்றியமையாத நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியையும் அளிப்பையும் பெருக்க நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வகைசெய்ய வேண்டும்.

இந்தியத் தொழில் உற்பத்திப் பெருக்கத்தின் சில அறிகுறிகள்

1. உற்பத்திப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் (1950-51—'60-'61)
(Progress in Producer Goods Production)

பொருள்	அலகு	1950—51	1960—61
எஃகுப் பாளங்கள்	மில்லியன் டன்களில்	1·4	3·5
அலுமினியம்	'000 டன்களில்	3·7	18·5
டீஸல் இயந்திரங்கள்	ஆயிரங்களில்	5·5	40·0
நைட்ரஜன் உரங்கள்	'000 டன்களில்	9·0	110·0
சிமெண்டு	மில்லியன் டன்களில்	2·7	8·5
நிலக்கரி	மில்லியன் டன்களில்	32·0	55·0
இரும்புத்தாது	மில்லியன் டன்களில்	3·0	10·5

ஆதாரம்:—மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை—1961.

2. நுகர்வுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் (1950-51 to 1960-61)

(Progress in Consumer Goods Production)

பொருள்	அலகு	1950–51	1960–61
பருத்தி நெசவு—ஆலைத் துணி	மில்லியன் கெஜங்களில்	3720·0	5127·0
சர்க்கரை	மில்லியன் டன்களில்	1·1	3·0
காகிதமும் காகித அட்டையும்	'000 டன்களில்	114·0	350·0
சைக்கிள்கள்	ஆயிரங்களில்	101·0	1050·0
மோட்டார் வாகனங்கள்	எண்ணிக்கை	16,500·0	53,500·0

ஆதாரம் .— மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை

முடிவுரை : மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் முதல் பொருள்கள், நுகர்வுப் பொருள்கள் ஆகியவைகளின் உற்பத்தி வளர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல், இவ் வளர்ச்சி. வேகமாகப் பெருகிவரும் மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. நாட்டில் செயல் படுத்தப்பட்டுள்ள தொழில் வளர்ச்சித் திட்டங்கள் பொருள் உற்பத்தியையோ அல்லது வேலை வாய்ப்பையோ போதுமான அளவு வளர்ச்சியடையச் செய்யவில்லை. எனவே, தொழில் வளர்ச்சியை வேகப்படுத்தி வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யத்தக்க செயல்திட்டங்களை ஆராய்ந்து, அவற்றை அமுலாக்க வேண்டியது இன்றியமையாததாகும். அதேபோல், பொருளாதார சக்தி ஒரு சிலரிடம் குவிவதையும், சர்வாதீன சக்திகள் வளர்வதையும் ஆராய்ந்து அவற்றை ஒழுங்குபடுத்தாவிட்டால் நாம் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதில் காலதாமதம் ஏற்படும்.

32. தொழில் நிதி நிறுவனங்கள்

இந்தியாவின் தொழில்துறை வெகு காலமாகப் போதிய நிதி வசதியின்மையால் தடைப்பட்டு முன்னேற்றமின்றி இருந்து வந்தது; இந்தியத் தொழில் வளர்ச்சிக்குப் பொதுவாக இரு வகை முதல் தேவைப்படுகிறது. முதலாவதாக, நீண்டகால நிலைத்த முதல் (Fixed Capital) கட்டிடங்கள் கட்டவும், இயந்திரங்கள், கருவிகள் போன்றவைகளை வாங்கவும் தேவைப்படுகிறது. இரண்டாவதாக, குறுகிய கால நடைமுறை முதல் (Working Capital) கச்சாப் பொருள்களை வாங்கவும், கூலி கொடுப்பதற்கும் இருப்புச் சரக்குகளை வைத்திருப்பதற்காகவும் இன்றியமையாததாக அமைகிறது. தொழில்களின் வளர்ச்சி நீண்ட கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முதல் சந்தையின் வளர்ச்சியையும் குறுகிய கால நிதி வசதியை அளிக்கும் பணச் சந்தையின் அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. இச்சந்தைகளில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளால் சிறுதொழில்களும் பேரளவு உற்பத்தியை மேற்கொள்ளும் கனரகத் தொழிற்சாலைகளும் தேவையான நிதி வசதியைப் பெற இயலவில்லை. சமீப காலத்தில் அரசு இந்நிதித் துறைப் பிரச்சினையைத் தீர்க்கும் முகத்தான் சில தொழில் நிதி நிறுவனங்களை ஏற்படுத்தி, இவ்விருவகை தொழில்களுக்கும் நிதி வசதி அளித்து வருகிறது. முதலில், சிறிய, நடுத்தர அளவு தொழில்களுக்கு நிதி வசதி செய்யும் நிறுவனங்களைக் கவனிப்போம்.

I. சிறு தொழில்களுக்கு நிதி வசதி

சிற்றளவு உற்பத்தியாளருக்கு இயந்திரங்கள் வாங்கவும் கச்சாப் பொருள்களைப் பெறவும் உற்பத்திச் செலவுகளுக்காகவும் நிதி தேவைப்படுகிறது. நடுத்தர அளவு உற்பத்தியாளருக்கும் இயந்திரங்களை வாங்கவும் இயந்திர சாதனங்களை அமைக்கவும் உற்பத்திச் செலவுகளைச் சரி செய்வதற்காகவும்,

முடிவுற்றநிலைப்பொருள்களை இறுதியில் விற்கவும் பெருமளவில் நிதி வசதி தேவைப்படுகிறது. கிராமங்களில் லேவாதேவிக் காரர்கள் (Money lenders) மூலமாக மட்டுமே அதிக வட்டிக்குப் பணம் கிடைக்கிறது. நகர்ப்புறங்களில் மூலதனம் சீரான முறை யில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, உள்நாட்டுப் பாங்கர்கள் (Indegenous Bankers) அதிக வட்டிக்கு ஏராளமான பணத்தைக் கடனாகக் கொடுக்கிறார்கள். வணிக வங்கிகளும் இத்தொழில்களுக்குக் கடன் வசதி அளித்து வருகின்றன.

நிதி கிடைக்கும் வகைகள் : முதலாவதாக, சிறிய நடுத்தர தொழில்கள் கூட்டுறவுத்தொழிற்சங்கங்கள்மூலமாகவும் அமைக் கப்படுகின்றன. இச்சங்கங்கள் போதிய நிதி வசதியையும் இத் தொழில்களுக்குக் கொடுத்து உதவுகின்றன; கச்சாப்பொருள் கள், தேவையான உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றை அளிப்பதோடு, இத்தொழிற்சங்கங்கள் நிதி உதவியையும் செய்துவருகின்றன. கைத்தறித் தொழில், மண்பாண்டத்தொழில், தோல் பதனிடும் தொழில் போன்றவைகள் தொழில் கூட்டுறவுச் சங்கங்களால் பெரும் பயனைப் பெற்றுள்ளன. இச்சங்கங்கள் மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து நிதி வசதியைப் பெறு கின்றன.

இரண்டாவதாக, ஒவ்வொரு மாநிலமும் சிற்றளவு, நடுநிலை கிராமப்புறத் தொழில்களுக்கு நிதி வசதி அளித்து வருகிறது. ஒவ்வொரு மாநிலமும் தன் தொழில் துறையின் மூலமாக இத்தகைய தொழில்களுக்கு நிதி வசதி அளித்து வருகிறது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 13 கோடியும் மூன் றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 17 கோடியும் சிற்றளவு தொழில்களுக்காக மாநிலங்கள் கொடுத்து உதவியுள்ளன.

மூன்றாவதாக, இந்தியாவின் ஸ்டேட் பாங்க் சிற்றளவுத் தொழில்களுக்குப் பெருமளவு நிதி வசதி செய்து வருகிறது. இந்தியாவின் ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து மாதிரித் திட்டம் (Pilot Scheme) ஒன்றை ஸ்டேட் வங்கி தயாரித்தது. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள், வணிக வங்கிகள், மாநில நிதி நிறுவனங்கள் ஆகியவைகளின் நிதித்துறை நடவடிக்கை களை ஒருங்கிணைத்து இவைகள் சிற்றளவுத் தொழில்களுக்குத் தேவையான நிதிவசதி அளிக்க ஸ்டேட் பாங்க் வகை செய்தது. 1970 மார்ச்மாத முடிவில் ஸ்டேட் பாங்கும் அதன் துணை வங்கி களும் ரூ. 120 கோடிக்குமேல் இத்தொழில்களுக்குக் கடன் வசதி அளித்துள்ளன.

நான்காவதாக, ரிசர்வ் வங்கியின் உத்தரவாதத்திட்டத்தின் அடிப்படையிலும் சிற்றளவுத் தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் 95 நிதி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 7 ஆண்டு கால வரையறையுடைய கடன் வசதி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் சிறு தொழில்களுக்கு அதிக நிதி உதவி செய்வதற்காக, ரிசர்வ் வங்கிஉத்தரவாதக் கட்டணத்தைப் பெயரளவுத் தொகையாக வைத்திருக்கிறது. 1967க்கும்-68-க்கும் இடையில் மொத்தம் ரூ. 102 கோடி கடன் பணத்திற்கு உத்தரவாதம் செய்யப்பட்டது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலமாகிய ஜூலை 1960யிலிருந்து ஜூன் 1968 வரைக்கும் ரூ. 260 கோடிக்கு ரிசர்வ் வங்கி உத்தரவாதம் அளித்தது.

ஐந்தாவதாக, சிறு தொழில்களுக்கு நிதி உதவிஅளிக்கவும் இத்தொழில்களின் பொருள்களுக்கு நல்ல சந்தையை ஏற்படுத்தவும் பிப்ரவரி 1955ம் ஆண்டு ரூ. 20 லட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் தேசிய சிறு தொழில் நிறுவனம் (National Small Industries Corporation) ஒன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் சிறு தொழில்களின் பொருள்களுக்கு அரசாங்கத் தேவை உத்தரவுகளைப் பெற்றுப் பொருள்களை அரசுக்கு விற்று வருகிறது. அரசின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு ஆக்கம் பெருக, உற்பத்திச் செலவுக்கான நிதி வசதியையும் இக்கார்ப்பரேஷன் அளிக்கிறது. சிறு தொழில்களுக்கும் பேரளவுத் தொழில்களுக்கும் இடையே சரிசம நிலை ஏற்படுத்திப் பேரளவுத் தொழில்களுக்குத் தேவையான துணைப் பொருள்கள், இயந்திரங்களின் பகுதிகள் ஆகியவற்றைச் சிற்றளவுத் தொழில்கள் உற்பத்தி செய்யவும் இக்கார்ப்பரேஷன் வகை செய்கிறது. தவணை முறையில் இயந்திரங்கள்,மற்ற சாதனங்கள் ஆகியவைகளைச்சிற்றளவுத்தொழில்களுக்குக் கொடுத்தும் உதவுகிறது. 1966-67ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட ரூ. 2·8 கோடி மதிப்புள்ள இயந்திரங்களைத் தவணை முறையில் சிற்றளவுத் தொழில்களுக்குக் கொடுத்து உதவியுள்ளது. இவ்வகை நிதி வசதி போக மற்ற வகையிலும் இத்தொழில்களுக்கு நிதி உதவி கிடைத்து வருகிறது. மாநில நிதி கார்ப்பரேஷன்களும் இவ்வகைத் தொழில்களுக்கு நிதி வசதி அளித்து வருகின்றன.

II. பேரளவுத் தொழில்களுக்கு நிதி வசதி

ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில் இந்தியா தொழில்மயமாகும் சூழ்நிலையில் பேரளவுத் தொழில்களுக்குநிதி

வசதியளித்தல் பெரும் பிரச்சினையாக உள்ளது. தொழில்களில் ஏற்படும் இடர், நஷ்டம் ஆகியவைகளின் காரணமாக அரசோ வணிக வங்கிகளோ சுலபமாக கடன் வசதி அளிக்க முன்வருவதில்லை. ஆகையால், உற்பத்தியாளர்கள் மிக அதிக வட்டிக்குப் பணத்தை லேவாதேவிக்காரர்களிடமிருந்து பெறவேண்டியுள்ளது. இதில் பல இன்னல்கள் இருப்பதால், நிர்வாகப் பதிலாட்களிடமிருந்து (Managing Agents) உற்பத்தியாளர்கள் கடன் உதவி பெறுகிறார்கள். இதனால்தான், இந்தியக் கடன் அளிப்பு முறையில் ஓர் இடைவெளி காணப்படுகிறது. அரசு ஏற்படுத்திய தனி கடன் நிறுவனங்கள் இவ்விடைவெளியைப் பூர்த்தி செய்து பேரளவுத் தொழில்களுக்குக் குறுகிய, நீண்டகால நிதி அளிக்கின்றன. இச்சிறப்பு நிறுவனங்கள் வளர்ச்சி வங்கிகள் (Development Banks) என்றும் அழைக்கப்படுகின்றன.

1. தொழில் நிதிக் கழகம்
(Industrial Finance Corporation)

தொழில் நிதிக் கார்ப்பரேஷன் என்பது நாடாளுமன்றத்தின் ஒரு சட்டத்தால் 1948-ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி ஒரு பங்குதாரர்களின்கழகமாகத் தொடங்கப்பட்டது. அரசாங்கமும் இந்திய ரிசர்வ் வங்கியும் இக்கழகத்தின் பேரளவு பங்குதாரர்கள். இக்கழகத்தின் பங்குகளைப் பட்டியலிலுள்ள வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற காப்பீட்டு நிறுவனங்கள் வாங்கியுள்ளன. இக்கழகத்தின் பங்குகள் மத்திய அரசின் உத்தரவாதமுடையவைகளாகும். இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 கோடிகளாகும், இது 20,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அளிக்கப்பட்ட பங்கும் ரூ. 5000 மதிப்புடையதாக விளங்குகிறது. இக்கழகம் தனக்குத் தேவையான நிதி வளங்களைப் பெற, தன் பத்திரங்களை விற்று அளிக்கப்பட்ட மூலதனத்தைக் காட்டிலும் 5 மடங்கு வரை அதிகமாக நிதி பெறலாம். இது மக்களிடமிருந்து பெறும் வைப்புகள் மூலமாகவும் நிதி பெறுகிறது. ஐந்து ஆண்டுகள் கழிந்தபின் வைப்புப் பணம் திருப்பித் தரப்படுகிறது. இதன் கடன் பத்திரங்களும் மத்திய அரசின் உத்தரவாதம் பெற்றவைகளாகும்.

நிர்வாகம் :— தொழில் நிதிக் கழகம் 12 இயக்குநர்களைக் கொண்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. 12 இயக்குநர்களில் மூவரை மத்திய அரசு நியமனம் செய்கிறது. இருவரை இந்திய ரிசர்வ் வங்கி நியமிக்கிறது. பட்டியலிடப்பட்ட வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் போன்ற மற்ற பங்குதாரர்களில்

அறுவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மத்திய அரசால் ஒரு நிர்வாக இயக்குநரும் நியமிக்கப்படுகிறார். நிர்வாக இயக்குநரே செயல்முறைக் குழுவின் தலைவராகவும் இருக்கிறார்.

பணிகள் :—இக்கழகம் மூன்று முக்கிய பணிகளைப் புரிந்து வருகிறது. இதனால் பேரளவுத் தொழில்கள் வளர நல்ல வாய்ப்பு கிடைக்கிறது.

(1) இக்கழகம் தொழில் நிறுவனங்களால் வாங்கப்பட்ட கடன் தொகைகளுக்கு உத்தரவாதம் கொடுக்கிறது. இவ்வகைக் கடன் 25 ஆண்டுகளுக்குள் திருப்பித் தரப்பட வேண்டும்.

(2) தொழில் நிறுவனங்களுக்கு நேரிடையாகக் கடன் பணமும் முன் பணமும் அளிக்கிறது. இவ்வகைக் கடன் பணமும் 25 ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். இக்கழகம் தொழில் நிறுவனங்களின் கடன் பத்திரங்களின் பேரில் கடன் கொடுக்கிறது.

(3) இக்கழகம் தொழில் நிறுவனங்கள் அளிக்கும் இருப்புச் சரக்குகள், பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கடன் பொருள் காப்பீடு (Underwriting) செய்கிறது. ஆனால், இருப்புச் சரக்குகள் கைக்கு வந்த 7 நாட்களுக்குள் இக்கழகத்தால் தீர்வு செய்யப்பட வேண்டும்.

தேசீய முக்கியத்துவம் வாய்ந்த பேரளவுத்தொழில்களுக்கு இக்கழகம் முதலிடம் அளித்து நிதி உதவி செய்து வருகிறது. இக்கழகம் பொது வரையறுக்கப்பட்ட பங்குக் கம்பெனிகளுக்கு மட்டும் நீண்ட கால நிதி வசதி செய்து வருகிறது. இக்கழகம் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனிகளுக்கும், கூட்டு நிறுவனங்களுக்கும், அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனங்களுக்கும் கடன் வசதி கொடுப்பதில்லை. 1948-ம் ஆண்டு சட்டப்படி இக்கழகம் தொழில் நிறுவனங்களின் பங்குகள் அல்லது கடன் பத்திரங்களின் பேரில் நேரிடையாகக் கடன் கொடுப்பதில்லை. ஆனால், தொழில் நிறுவனங்களின் சரக்குகள் பங்கு, பத்திரங்களின் பேரில் இக்கழகம் கடன் காப்பீடு செய்கிறது.

தொழில் நிதிச் சட்டம் 1953-ம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டதால், கப்பல் தொழிலுக்கும் நிதி உதவியை இக்கழகம் கொடுக்கிறது. தனிப்பட்ட கடன் வசதியின் அளவும் ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக அதிகரிக்கப்பட்டது. இச்சட்டத்தினால் இக்கழகம் உலக வங்கியிடமிருந்து 18 மில்லியன்

கடன் உதவி பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டத்தின்மூலம் இக்கழகம் ரிசர்வ் வங்கியிடமிருந்து 18 மாதங்களுக்குள் திருப்பிக் கொடுக்கத்தக்க கடனாக ரூ. 3 கோடி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். 1953—1955 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்ட சட்டங்களின்மூலம் இக்கழகம் அதிகமான நிதி வசதியைத் தொழில் நிறுவனங்களுக்கு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1953 முதல் 1954 வரை இக்கழகம் ஏறக்குறைய ரூ. 5 கோடி நிதி உதவி அளித்திருக்கின்றது. 1965—66-ல் இது ரூ. 28 கோடியாக அதிகரித்துள்ளது. இக்கழகம் முதல்நிலை மூலதனம் (Equity Capital) தொழில் நிறுவனங்களுக்குக் கொடுப்பதில்லை. ஆகையால், 1960-ல் தொழில் நிதி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி இக்கழகம் நேரிடையாகத் தொழில் நிறுவனங்களின் பங்குகள் சரக்குகள் ஆகியவற்றின் மேல் கடன் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

குறைபாடுகள் : இக்கழகத்தின் நடவடிக்கைகளில் சில குறைகள் காணப்பட்டன. முதலாவதாக, இக்கழகம் மிக அதிக வட்டியான $7\frac{1}{2}$ சதவீதம் வரை வசூலிக்கிறது என்று குறை கூறப்பட்டது. ஆனால், இக்கழகமே அதிக வட்டிக்குப் பணம் கடனாக வாங்குகிறது. இரண்டாவதாக, இக்கழகம் கடன் தொகையைக் கொடுப்பதில் மிகவும் தாமதம் ஏற்படுவதோடு, கடனானது விருப்பப்பட்டவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது என்றும் குறை கூறப்பட்டது. சர்க்கரை ஆலைகளுக்கும், பருத்தித் துணி தொழிற்சாலைகளுக்குமே அதிகம் கடன் உதவி செய்யப்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது. மூன்றாவதாக, கடன் கொடுக்கப்படும்போது சொத்துக்களின் அடமானத்துடன் நிர்வாகப் பதிலாள்கூட, கடனுக்குஉத்தரவாதம்கொடுக்க வேண்டுமென்பது சரியில்லை என்று கருதப்படுகிறது. ஆனால், இடர் முதலியவற்றை இக்கழகத்துடன் நிர்வாக முகவர்களும் பகிர்ந்துகொள்ளுவது நல்லது என்றே அவ்வாறு செய்யப்படுகிறது. இக்குறைகளை நிவர்த்தி செய்ய, திருமதி சுசேதா கிருபளானி அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. 1953-ல் மே அக்குழு அறிவித்த அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு முழு நேரத் தலைவரையும் தொழில்நுட்ப ஆராய்ச்சி கூடத்தையும் அறிவுரையாளர்களையும் மத்திய அரசு நிறுவியது. 1969-ம் ஆண்டு வரையிலும் மொத்தம் ரூ. 300 கோடி வரைக்கும் இக்கழகம் நிதி உதவி செய்துள்ளது, சில குறைகளிருப்பினும் இக்கழகம் மிகச் சிறந்த முறையில் பேரளவுத் தொழில்களுக்கு நல்ல ஊக்கமும், ஆக்கமும் தந்து தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து வருகிறது.

2. மாநில நிதிக் கழகங்கள்
(State Finance Corporations)

இந்தியப்பொருளாதார வளர்ச்சியில் சிற்றளவுத் தொழில்கள் மிக முக்கிய பங்கினைப் பெற்றுள்ளன. ஆனால், இத்தொழில்களின் மிகப் பெரும் பிரச்சினை தேவையான அளவு நிதி உதவி கிடைக்காமையே ஆகும். தொழில்நிதிக் கார்ப்பரேஷன் நீண்ட காலக் கடன் உதவியை வரையறுக்கப்பட்ட பெரியபொதுக் கம்பெனிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அளித்து வருகிறது, ஆனால், சிற்றளவு நடுத்தர அளவு தொழில்களுக்குத் தேவையான நிதி உதவி செய்வதற்காக ஒவ்வொரு மாநில அரசாங்கமும் ஒரு மாநில நிதிக் கார்ப்பரேஷனை நிறுவ வேண்டுமென்று கூறப்பட்டது. எனவே, எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தக் கூடிய மாநில நிதிக் கழகங்கள் சட்டம் ஒன்றை 1951-ல் மத்திய அரசு ஏற்படுத்தியது. சிற்றளவு, நடுத்தர அளவு தொழில்களுக்குத் தேவையான நிதி உதவியில் ஏற்பட்ட பற்றாக்குறை இம்மாநில நிதிக் கழகங்களின் பணியினால் ஒவ்வொரு மாநிலத்திலும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. நாகாலாந்து தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் இக்கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இக்கழகம் ‘‘வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷன்’’ என்ற பெயரில் உள்ளது.

மூலதனம்: ஒரு மாநில நிதிக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் அந்தந்த மாநில அரசால் குறைந்த பட்சம் ரூ. 50 லட்சமாகவும் அதிகபட்சம் ரூ. 5 கோடியாகவும் குறிக்கப்பட்டுள்ளது. அதன் பங்குகள் சம மதிப்புடையவைகளாகப் பிரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இப்பங்குகளை முறையே மாநில அரசுகள், இந்திய ரிசர்வ் வங்கி, பட்டியலிலுள்ள வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் போன்ற நிதி நிறுவனங்கள் வாங்கிக் கொள்ளுகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியானது ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில நிதிக் கழகங்கள் ஏற்படுத்தப்பட உறுதுணையாய் இருந்து, இவைகளின் பங்குகளில் பெரும் பகுதியையும் வாங்கிக் கொள்கிறது. இக்கழகங்களின் பங்குகளுக்கு மாநில அரசு உத்தர வாதம் அளிக்கிறது. ஒரு மாநில நிதிக் கழகம் அதிக அளவு நிதி வசதிபெற, கடன் பத்திரங்களை விற்க வசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு பெறும் நிதியின் அளவு அந்த கழகத்தின் மூலதனம், இருப்புநிதி ஆகியவைகளின் அளவைப்போல் ஐந்து மடங்குவரைதான் அதிகரிக்கப்படலாம்.

ஒரு கழகம் ஐந்து வருடம் முடிந்து திருப்பித் தரத்தக்க நிலை யுடைய பொதுவைப்பு நிதிகளையும் பெறலாம். இதனால் ஒரு கழகத்தின் மொத்த நிதி வளம் அதிகரிக்கிறது.

நிர்வாகம் : ஒரு மாநில நிதிக்கழகமும் தொழில் நிதிக் கழகத்தைப் போலவே நிர்வகிக்கப்படுகிறது. ஒரு மாநில நிதிக் கழகம் 10 இயக்குநர்களைக் கொண்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப் படுகிறது. ஒவ்வொரு மாநில அரசும் ஒரு நிர்வாக இயக்குநர் மூன்று மற்ற இயக்குநர்கள் ஆகியோரை நியமிக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி, தொழில் நிதிக் கழகம், பட்டியலிலுள்ள வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் முறையே ஒரு இயக்குநரை ஒவ்வொன்றுக்கு நியமனம் செய்கின்றன. மற்ற பங்குதாரர்கள் ஓர் இயக்குநரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இக்கழகம் ஒரு மாநிலத்திற்குள் பல இடங்களில் தன் கிளை அலுவலகங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

சேவை: ஒரு மாநில நிதிக்கழகமானது எல்லாவகை சிறிய, நடுத்தர அளவு தொழில்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. இதன் அடிப்படையில் ஒரு மாநில நிதிக்கழகம் தொழில் நிதிக் கழகத்தைக் காட்டிலும் அதிக அளவு நிதி நடவடிக்கைகளையும் பணிகளையும் செய்து வருகிறது. ஒரு மாநில நிதிக் கழகத்தின் முக்கிய பணிகளாவன:—

(1) தொழில் நிறுவனங்கள் பெறும் 20 ஆண்டுகளுக்குள் திருப்பித்தரத்தக்க கடன்களுக்கு மாநில நிதிக் கழகம் பூரண உத்தரவாதம் அளிகிக்றது:

(2) தொழில் நிறுவகங்களின் இருப்புச் சரக்குகள், பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இக் கழகம் கடன் காப்புறுதி (Uuderwriting) செய்கிறது.

(3) தொழில் நிறுவனங்களுக்கு 20 ஆண்டு காலத்திற்கு மேற்படாத வகையில் இக்கழகம் கடனும் முன்பணமும் அளித்து வருகிறது.

(4) இக்கழகம் தொழில்களின்குறுகியகாலக் கடன்பத்திரங்களின் மேல் நிதிஉதவி செய்கிறது. இக்கழகம் கம்பெனிகளின் பங்குகளின் பேரில் நேரிடையாகக் கடன் கொடுப்பதில்லை.

மாநில நிதிக் கழகத்திற்கும் தொழில் நிதிக் கழகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு :—

மாநில நிதிக்கழகங்கள் பலவழிகளில் தொழில் நிதிக்கழகங்களைப் போலவே இருக்கின்றன. ஆனால், இவ்விரு கழகங்

களுக்கிடையில் சில முக்கிய வேற்றுமைகளும் காணப்படுகின்றன. அம்முக்கிய வேறுபாடுகளாவன:—

(1) தொழில் நிதிக்கழகம் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பெனிகளுக்கு நிதி வசதி செய்கிறது. ஆனால், மாநில நிதிக் கழகம் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனிகளுக்கும், கூட்டாளித் தொழில்களுக்கும், தனிநபர் நிறுவனங்களுக்கும் நிதி உதவி செய்து வருகிறது.

(2) தொழில் நிதிக் கழகத்தின் பங்கு முதலுக்குப் பொது மக்கள் தொகை வழங்குவது இல்லை. ஆனால், மாநில நிதிக் கழகத்தின் பங்கு முதலுக்கு அதன் மொத்த தொகையில் 25 சதவீதம் வரைக்கும் பொதுமக்கள் தொகை வழங்குகின்றனர்.

(3) மாநில நிதிக்கழகம் அதிக பட்சம் 20 ஆண்டு காலம் வரைக்கும் கடன் உதவி செய்யலாம் அல்லது கடன்களுக்கு உத்தரவாதம் கொடுக்கலாம் அல்லது கடன் பத்திரங்களின் பேரில் தொகை வழங்கலாம். ஆனால், தொழில் நிதிக் கழகம் 25 ஆண்டுகாலம் வரைக்கும் நிதி உதவி செய்கிறது.

(4) மாநில நிதிக் கழகம் கொடுக்கக் கூடிய நிதி உதவி அதிகபட்சம்ரூ.10 லட்சமாகக்குறிக்கப்பட்டிருக்க, தொழில் நிதிக் கழகம் அதிக பட்சம் ரூ. 1 கோடி வரைக்கும் கடன் அளிக்கிறது. மேலும், மத்திய அரசின் அனுமதியின் பேரில் தொழில் நிதிக் கழகம் ரூ. 1 கோடிக்கு மேலும் கடன் உதவி செய்யலாம்.

மாநில நிதிக் கழகங்களின் சாதனையும் குறைபாடுகளும்

1966-67ம் ஆண்டு முடிய இக்கழகங்கள் எல்லாம் சேர்ந்து மொத்தமாக, கடன்கள் ஒப்புதல் அளித்த தொகை ரூ. 143 கோடிகளாகும். 1962-ம் ஆண்டு மாநில நிதிக் கழகச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு மேலும் சில அதிகாரங்கள் இக்கழகத்திற்குக் கொடுக்கப்பட்டன. தொழில் நிறுவனங்கள் வணிக வங்கிகளிட மிருந்தோ அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்தோ பெறும் கடனுக்கு இக்கழகம் உத்தரவாதம்கொடுக்க வகை செய்யப்பட்டது. இக்கழகம் பொதுக் கம்பெனிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் கொடுக்கும் தொகையின் அதிகபட்ச அளவு ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ. 20 லட்சமாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, சிற்றளவு, நடுத்தர அளவு தொழில்களுக்கு மூன்றுவகை முதல் தேவைப்படுகிறது. (1) ஆரம்பகால முதல் (Equity Capital) (2) கடன் முதல் (3) நடப்பு முதல்ஆகியவைகளாகும். ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட மாநில நிதிக் கழகங்களில் பெரும்பாலானவை, முக்கியமாக

அதிக அளவு கடன்முதலையும் சிறிதளவு நடப்பு முதலையும் அளிக்கின்றன. ஆரம்பகால முதலைக் கடனாகக் கொடுப்பதே இல்லை. சிறிய தொழில்களுக்கு கடன் முதலுடன் நடப்பு முதலும் அதிகம் தேவைப்படுகிறது. மத்திய நிலைத் தொழில்களாகிய உற்பத்தித் தொழில்கள், சுத்தப்படுத்தும் தொழில்கள் (Processing Industries) ஆகியவற்றிற்கும் துணிவகை, பொறி இயல், ரசாயனத் தொழில்கள் போன்றவற்றிற்கும் அதிக நிதி உதவியை இக் கழகம் செய்துள்ளது. ஆனால், இந்த அளவுக்கு சிறு தொழில்களுக்கு நிதி வசதி அளிக்கப்படவில்லை. இதன் காரணம் சிறு தொழில்களில் இடர் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அவைகளின் தவணை வைப்புத்தொகை போதுமானதாக இல்லாமையால் அத்தொகை கடனுக்கு ஈடாக அமைய முடியவில்லை. மேலும், சிறு தொழிலகங்கள் நடைமுறையில் இருக்கும் தணிக்கை (Auditing), கணக்கு வைப்பு முறை (Accounting) ஆகியவற்றைப் பின்பற்றுவதில்லை. ஆனால், இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில்கள் இன்றியமையாத பங்கினைப் பெற்றுள்ளதால், இக்கழகங்கள் இத்தொழில்களுக்குக் கடன் கொடுக்கும் கொள்கையைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

இக்கழகம் கடன் வாங்குபவர்களிடமிருந்து அதிக கட்டணம் வசூலிக்கிறது. ஒரு வருடத்திற்கு 8 முதல் 9 சதவீதம் வரைக்கும் வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் வாங்கும் நிறுவனங்கள் கடன் தொகையில் 3 சதவீதம் வரைக்கும் ஏற்படும் பதிவுக் கட்டணங்கள் பத்திரச் செலவுகள் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். இதனால் கடன் பெற ஏற்படும் செலவு 10 சதவீதம் அல்லது 11 சதவீதம் ஆண்டுக்கு அதிகமாகிறது. இத்தொகையைக் கொடுத்து சிறிய தொழிலகங்கள் கடன் உதவி பெற இயலாமல் போகிறது. ஆகையால், பஞ்சாப் போன்ற மாநிலங்களின் அரசாங்கங்கள் பதிவுக் கட்டணம், முத்திரைக் காகித வரி ஆகியவற்றில் சலுகைகள் காட்டி வருகின்றன. தற்போது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒன்றாக 18 மாநில நிதிக் கழகங்கள் இருக்கின்றன. 1966-67-ல் ரூ. 20 கோடியும் 1967-68ல் ரூ. 18·8 கோடியும் கடனாக இக்கழகங்கள் அளித்துள்ளன.

3. தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம்
(National Industrial Development Corporation)

தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம் அக்டோபர் 1954-ம் ஆண்டு மத்திய அரசால் குறிப்பாக, பின்தங்கிய பகுதிகளில் திட்டமிட்ட முன்னேற்றத்தையும் சம அளவு தொழில் வளர்ச்சியையும் பெறும் நோக்கோடு துவக்கப்பட்டது. இக்கழகத்தின்

மூலதனம் முழுவதும் அரசாலேயே கொடுக்கப்பட்டுள்ளது. சம அளவு தொழில் வளர்ச்சி பெறும் நோக்குடன் தனியார் தொழிலதிபர்கள் அக்கறை கொள்ளாத தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியைப் பெருக்க இக்கழகம் முயற்சிக்கிறது. சில சமயங்களில் இக்கழகமே தனியார் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டு அவைகள் லாபம் பெற்று வளர்ச்சியடையும் நிலை வரைக்கும் பாதுகாத்து வருகிறது. இக்கழகம் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1 கோடியும், ரூ. 10 லட்சம் அளிக்கப்பட்ட மூலதனமும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய பணிகளாவன: (1) வளரும் புதிய தொழில்களுக்குத் தேவையான திட்டங்களை வரைதல். (2) ஆலோசனை கூறும் பணியை மேற்கொள்ளுதல். (3) சில குறிப்பிட்ட தொழில்கள், பருத்தித் துணி நெசவுத் தொழில், சணல் தொழில் ஆகியவைகளை நவீனப்படுத்த இக்கழகம் நிதி வசதி அளிக்கிறது. ஆனால், உண்மையில் தற்போது இக்கழகம் சீரமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிதி உதவி அளிக்க இயலவில்லை. மார்ச் 1967-வரைக்கும் இக்கழகம் ரூ. 18 கோடி நிதி உதவியாக தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து உதவியது.

4. இந்தியத் தொழிற் கடன்—முதலீட்டுக் கழகம்
(Industrial Credit and Investment Corporation of India)

இந்தியத் தொழிற்கடன்—முதலீட்டுக் கழகம் 1954-ல் அமெரிக்கா அரசு, உலக வங்கி ஆகியவைகளின் மூவர் தூதுக் குழுவின் ஆலோசனையால் அமைக்கப்பட்டது. இக்கழகம் ரூ. 25 கோடி அனுமதித்த மூலதனத்துடன் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனியாக, ஜனவரி 1955-ல் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் அமெரிக்கத் தொழில்நுட்பக் கூட்டுறவு நிர்வாகம் (U. S. Technical Co-operation Administration) உலக வங்கி ஆகியவைகளிலிருந்து நிதி உதவி பெற்றது. இக்கழகம் உலக வங்கியிடமிருந்து வாங்கும் கடனுக்கு இந்திய அரசு உறுதி அளிக்கிறது.

சேவை: இந்தியத் தொழிற்கடன்-முதலீட்டுக் கழகம் தொழில்களின் நீண்டகால நிதித் தேவைகளைப் பூர்த்திசெய்து வருகிறது. தொழில் நிறுவனங்களின் சரக்குகள், பங்குகள், பத்திரங்கள் ஆகியவைகளின் அடிப்படையில் கடன் காப்புறுதி (Underwriting) செய்து வருகிறது. புதிதாக அமைக்கப்பட்ட தொழில்களுக்கு இக்கழகம் ஆரம்பகால மூலதனத்தில் (Equity Capital) ஒரு பகுதியைக் கடனாகக் கொடுக்கிறது.

முக்கியத்துவம்: இந்தியத் தொழிற்கடன்-முதலீட்டுக் கழகம் இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு இரு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. முதலாவதாக, தொழில் நிறுவனங் களுக்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படும் ஆரம்ப கால முதலை (Equity Capital) இக்கழகம் கூடுமான வரையில் கொடுத்து உதவுகிறது. இரண்டாவதாக, இந்தியத் தொழில் களுக்கு இக்கழகம் அயல்நாட்டுச் செலாவணி கிடைக்கச் செய்ய வகை செய்கிறது. இந்தியத் தொழில் நிறுவனங்கள் அயல்நாடு களிலிருந்து இன்றியமையாத முதல் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இது அயல்நாட்டுப் பணத்தில் கடன் கொடுத்து உதவி புரிகிறது. இக்கழகம் 1955–ல் ஆரம்பிக்கப்பட்டதிலி ருந்து மார்ச் 1968 வரைக்கும் மொத்தம் 466 கம்பெனிகளுக்கு ரூ. 202 கோடி கடன் வழங்கியுள்ளது. நிர்வாக முகவர் முறை முழுவதுமாக எடுக்கப்பட்டு வருகிறபடியால், இக்கழகம் அதிக பலம் பெற்று தொழில் நிதி உதவியைப் பெருக்குவதில் முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது.

5. மறு நிதிக் கழகம்
(Refinance Corporation)

ஆகஸ்டு 1956-ம் ஆண்டு ஏற்பட்ட பொதுக்கடன் 480 (P. L. 480)ன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அமெ ரிக்க அரசுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் முடிவாக மறு நிதிக் கழகம் அமைக்கப்பட்டது. இந்தப் பொதுக்கடன் 480ன் உடன்படிக்கை ரூபாய் பணம் கொடுத்து கோதுமை மற் றும் இதர விவசாயப் பொருள்களை அமெரிக்காவிடமிருந்து இந்தியா பெற வகை செய்தது. இந்தப் பொதுக் கடன் 480ன் ஒப்பந்தப்படி இந்தியாவிற்கு விற்கப்பட்ட பொருள்களினால் ஏற்பட்ட மொத்த நிதியாக 55 மில்லியன் மதிப்புடைய இந்திய ரூபாய்களை இந்தியாவில் இருக்கும் தனியார் துறை தொழில் களுக்கு மறு கடனாக அமெரிக்கா கொடுத்தது. அப்பணத்தை தொழில்களுக்குக் கடனாக வழங்க ஜூன் 1958-ல் மறு நிதிக் கழகம் தோன்றியது.

மூலதனம் :—இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25 கோடியாகும். இக்கழகத்தின் பங்கு முதல் கூட்டாக இந் திய ரிசர்வ் வங்கி, உயிர் காப்பீட்டுக் கழகம் மற்றும் 15 பெரிய வணிக வங்கிகள் அளித்தன. இக்கழகத்தின் அளிக்கப்பட்ட முதலாகிய ரூ. 12·5 கோடியுடன் பொதுக்கடன் 480ன் அடிப் படையில் கிடைத்த ரூ. 26 கோடியும் சேர்த்துக்கொள்ளப்பட் டது. இக்கழகம் வணிக வங்கிகள், நிதி நிலையங்கள் தொழில்

நிறுவகங்களுக்குக் கொடுத்த கடனுக்கு ஈடாக மறுகடன் வசதி செய்து வந்தது. உற்பத்தியைப் பெருக்கும் நோக்கோடு வாங்கப்படும் கடன்களுக்கு இக்கழகம் முதலிடம் கொடுத்து வந்தது. இக்கழகமானது பொதுவாக மறுகடன் வசதியை அதிக பட்சம் ரூ. 50 லட்சம் வரைக்கும் 7 ஆண்டுகளுக்குக் கொடுத்து வந்தது.

சேவை : இக்கழகமானது தனியார் துறையில் இருக்கும் தொழில்களுக்கு மறு கடன் வசதியைக் கொடுக்கும் குறிக்கோளோடு ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், தனியார் துறையில் இருக்கும் தொழில்களுக்கு நிறுவக நிதியை அளிப்பதில் ஏற்பட்டிருக்கும் இடைவெளியைப் பூர்த்தி செய்வதே பிரதான நோக்கமாக இருந்தது. செப்டம்பர் 1964-ல் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அமைக்கப்பட்டபொழுது மறுநிதிக் கழகமானது அத்துடன் இணைக்கப்பட்டது. மறுநிதிக் கழகம் செய்து வந்த பணிகள், தற்போது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆற்றி வருகிறது. இவ்வங்கியானது மறுகடன் உதவியை ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 100 லட்சமாக அதிகரித்துள்ளது.

6. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி
(Industrial Development Bank of India)

முக்கியத்துவம் : இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி 1947-ம் ஆண்டிலிருந்து தொழில்களுக்கு நீண்டகால நிதி உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட தனி நிறுவனங்களின் வரிசையில் கடைசியாக அமைக்கப்பட்டதாகும். இவ்வங்கி ஒரு முக்கியமான குறிக்கோள்களுடன் ஜூலை 1-ம் தேதி 1964-ல் நடுத்தர, நீண்ட கால நிதி உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். முதலாவதாக, இந்தியத் தொழில்மயத்தின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏராளமான நிதி வசதி செய்ய இவ்வங்கி ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவதாக, தொழில் வளர்ச்சிக்கு கடன் அளித்துவரும் எல்லா வகை நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்துச் சீராக்க இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியானது ரூ. 50 கோடி முதல், ரூ. 100 கோடியாகப்பட்டது. இவ்வங்கியின் அளிக்கப்பட்ட மூலதனம் தற்போது ரூ. 20 கோடியாகும். இவ்வங்கி இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்வகிக்கப்பட்டு ரிசர்வ் வங்கிக்குத் துணை வங்கியாக இருந்துவருகிறது. இவ்வங்கி தன் நிதி வசதியை அதிகப்படுத்துவதற்குப் போதிய அளவு தொகையை மத்திய அரசு, ரிசர்வ் வங்கி ஆகியவைகளிலிருந்து கடன் வாங்குகிறது. ஒரு நிர்வாகிகள் குழுவினுல் இந்தியத்

தொழில் வளர்ச்சி வங்கி நிர்வகிக்கப்படுகிறது. ரிசர்வ் வங்கியின் ஆளுநர் (Governer), துணை ஆளுநர் முறையே தொழில் வளர்ச்சி வங்கியின் தலைவர், துணைத் தலைவர் ஆவர்.

சேவை : இவ்வங்கியின் பிரதான பணி பொருள் உற்பத்தித் துறை, சுரங்கத் தொழில், சுத்தப்படுத்தும் தொழில், கப்பல் போக்குவரத்துத்துறை போன்றவைகளுக்கு நிதி வசதி அளித்தலாகும். தனியார் தொழில்கள் பொதுத்துறை தொழில்கள் ஆகியவைகளுக்கு இவ்வங்கி நிதி அளிக்கிறது. நிதி உதவி நேரிடையாகவோ அல்லது குறிப்பிட்ட சில நிதி நிறுவனங்களின் மூலமாகவோ கொடுக்கப்படுகிறது. (1) வளர்ச்சி வங்கி தொழில் நிறுவனங்களுக்கு நேரிடையாகக் கடன் உதவி செய்கிறது. இவ்வங்கி நிறுவனங்களின் கடன் பத்திரங்கள், சரக்குகள், பங்குகள் ஆகியவைகளின் ஈட்டின்பேரில் கடன் அளிக்கிறது. கடன் காப்புறுதியும் செய்கிறது. பட்டியலிலுள்ள வணிக வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கிகள், தொழில் நிதிக் கழகம் மற்றும் இதர நிதி நிறுவனங்களிலிருந்து தொழில் நிறுவனங்கள் பெற்ற கடனுக்கு இத்தொழில் வளர்ச்சி வங்கி உறுதி அளிக்கிறது. (2) இவ்வளர்ச்சி வங்கி தொழில் நிறுவனங்களுக்கு மறைமுகமாக நிதி உதவி செய்கிறது. தொழில் நிதிக் கழகம், மாநில நிதிக் கழகங்கள் போன்ற நிறுவனங்களால் தொழில் நிறுவனங்களுக்குக் கொடுத்த கடனுக்கு ஈடாக மூன்று முதல் இருபத்தைந்து ஆண்டுகள் இவ்வங்கி மறுநிதி உதவி செய்கிறது. தொழில் நிறுவனங்களுக்கு வங்கிகள் அல்லது மாநிலக்கூட்டுறவு வங்கிகள்கொடுக்கும் கடனுக்கு ஈடாக மூன்று முதல் 10 ஆண்டுகள் இவ்வங்கி மறுநிதி அளித்து உதவி செய்கிறது. இவ்வங்கி அதிகபட்சம் பத்து ஆண்டுகள் வரைக்கும் ஏற்றுமதிக் கடன் மறுநிதி அளிக்கும் உதவியும் செய்கிறது. செப்டம்பர் 1-ம் தேதி 1964-ல் இந்திய மறு நிதிக் கழகம் வளர்ச்சி வங்கியுடன் இணைக்கப்பட்டது. இவ்வளர்ச்சி வங்கி, மறு நிதிக் கழகத்தின் சேவைகளைச் செயலாற்றப் பொறுப்பு எடுத்துக் கொண்டது. ஒரு தொழில் நிறுவனத்திற்கு அளிக்கும் மறுநிதி உதவியை ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 100 லட்சமாக அதிகரித்தது. மறுநிதி வசதி அளிக்கப்படும்போது பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதித் துறைகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இன்றியமையாத நுகர்ச்சிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும், வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கும் இவ்வங்கியானது கடன் கொடுப்பதில் முக்கியத்துவம் அளிக்கிறது.

நடவடிக்கைகள் : இவ்வளர்ச்சி வங்கி ஜூலை 1964-ல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மார்ச் 1968 வரையிலும் ரூ. 200 கோடி நிதிஉதவி செய்துள்ளது. நேரிடையாக, 1967—68-ல் இவ்வங்கி தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 37 கோடி கடன் உதவிக்கு அனுமதி வழங்கி ரூ. 51 கோடியைப் பங்கிட்டுள்ளது. இவ்வங்கியானது சாதாரணமாக, கடன் வாங்க இயலாத தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்ய ஒரு வளர்ச்சி உதவி நிதியை (Development Assistance Fund) ஏற்படுத்தியுள்ளது. இவ்வங்கி இவ்வகையில் 1964—65-ம் ஆண்டில் குஜராத் மாநில உர உற்பத்தி நிறுவனத்திற்கு ரூ. 14 கோடி வழங்கியுள்ளது. இவ்வங்கி சிறந்த சில திட்டங்களையும் புதிதாக உட்புகுத்தி அதன்மூலம் தவணை உண்டியல்களை மறு கழிவு செய்தும், உறுதிமொழிக் கடன் பத்திரங்களின் ஈட்டின் பேரில் கடன் கொடுத்தும் வருகிறது. இவ்விதமாக, இத்தொழில் வளர்ச்சி வங்கி ஏழு ஆண்டுகளாகச் சிறந்த முறையில் செயலாற்றி நடுத்தர, நீண்டகால கடன் உதவிகளைத் தொழில் நிறுவனங்களுக்கு அளித்து வருகிறது.

7. இந்திய யூனிட் டிரஸ்ட்
(Unit Trust of India)

இந்திய யூனிட் டிரஸ்ட் டிசம்பர் 1963-ல் நிறைவேறிய இந்திய யூனிட் டிரஸ்ட் சட்டப்படி பிப்ரவரி 1964-ல் அமைக்கப்பட்டது. சமுதாயத்தின் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஏராளமான சிறிய முதலீட்டாளர்கள் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஆரம்ப முதலில் (Equity Capital) பணத்தை முதலீடு செய்யும் யூனிட் டிரஸ்ட் நிறுவப்பட்டது. யூனிட் டிரஸ்டின் ஆரம்ப முதல் ரூ. 5 கோடியாகும். இந்தத் தொகை முழுவதுமாக இந்திய ரிசர்வ் வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்திய மாநில வங்கி, பட்டியலிலுள்ள வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களால் அளிக்கப்பட்டுள்ளது. இந்த டிரஸ்டால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு யூனிட்டுகள் விற்கப்படுகின்றன. தனி மனிதர் வாங்கக்கூடிய யூனிட்டுகளின் எண்ணிக்கைக்கு எந்த எல்லையும் விதிக்கப்படவில்லை. ஒருவர் எவ்வளவு யூனிட்டுகளை வேண்டுமென்றாலும் வாங்கலாம்.

நிர்வாகம் : யூனிட் டிரஸ்ட் ஓர் அறக்காப்பாளர்கள் சபையால் (Board of Trustees) நிர்வகிக்கப்படுகிறது. இந்த டிரஸ்டின் தலைவரை ரிசர்வ் வங்கி நியமிக்கிறது. மற்ற நான்கு அறக்காப்பாளர்களையும் (Trustees) ரிசர்வ் வங்கியே நியமனம்

செய்கிறது. ஓர் அறக்காப்பாளர் மாநில வங்கியாலும் மற்றொருவர் ஆயுள் காப்புறுதிக் கழகத்தாலும் நியமிக்கப்படுகிறார்கள். மற்ற இரு அறக்காப்பாளர்களை டிரஸ்டுக்கு முதல் தொகை அளித்திருக்கும் இதர நிறுவகங்கள் தேர்ந்தெடுக்கின்றன. இந்த டிரஸ்டின் வருமானத்தின் மேல் விதிக்கப்படும் வருமானவரி, மேல்வரி (Super tax) மற்றும் இதர வரிகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

இந்த யூனிட் டிரஸ்ட் ரூ.10-க்குக் குறையாத ரூ.100-க்குஅதிகப்படாத முகமதிப்புக் கொண்ட ஒவ்வொரு யூனிட்டையும் அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப முதலாகிய ரூ. 5 கோடி, பொதுமக்களுக்கு யூனிட்டுகளை விற்கவும், யூனிட்டுகளை உண்டாக்கவும் அடிப்படையாய் அமைந்துள்ளது. யூனிட் உடையவர்கள் தனி நபர்களாய் இருந்தால் இந்த யூனிட்டை வாங்கிவைத்திருப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் ரூ. 1000 வரைக்கும் வருமான வரியிலிருந்தும் மேல்வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

யூனிட் டிரஸ்டின் குறிக்கோள்கள்

முதலாவதாக, நடுத்தர, குறைந்த வருமானம் பெறும் வகுப்பைச் சேர்ந்தவர்களின் சேமிப்பைத் தூண்டி சேகரித்தல் டிரஸ்டின் அடிப்படை நோக்கமாகும். இரண்டாவதாக, வேகமாக வளர்ந்துவரும் நாட்டின் தொழில் மயத்தின் முன்னேற்றத்திலும் அவர்கள் பங்கு பெற ஒரு நல்ல வாய்ப்பினை யூனிட் டிரஸ்ட் ஏற்படுத்துகிறது.

இக்குறிக்கோள்களை இந்தியயூனிட் டிரஸ்ட்திறம்படச் செயலாற்ற சில வழிகளைக் கையாளுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் சிறிய, பெரிய முதலீட்டாளர்களுக்கு (Investors) யூனிட்டுகளை விற்கிறது. யூனிட்டுகளைவிற்றுக் கிடைக்கும் பணத்தையும், ஆரம்ப முதல் தொகையாகிய ரூ. 5 கோடியையும் தொழில் நிறுவனங்களின் கடன் பத்திரங்களின் மேல் கடனுகக் கொடுத்து லாபம் பெறுகிறது. டிரஸ்டின் யூனிட்டுகளை வாங்கியவர்களுக்கு ஆதாயத்திலிருந்து இலாப ஈவு (Dividend) அளிக்கிறது.

யூனிட் டிரஸ்டின் நடவடிக்கைகள்

ரிசர்வ் வங்கியின் புள்ளி விவர அறிக்கையின்படி சம்பளமும், கூலியும் பெறுபவர்கள் (Salary and Wage-earners) டிசம்பர் 1966-ன் கணக்குப்படி விற்கப்பட்ட மொத்த யூனிட்டுகளில் 40

சதவீதத்தை வாங்கியுள்ளார்கள். டிரஸ்டிடம் வந்த விண்ணப்பங்களில் பாதிக்கு மேல் இவர்களிடமிருந்து வந்தவைகளாகும். அடுத்தபடியாக, மாணவர்களும், வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களும் விற்கப்பட்ட யூனிட்டுகளில் 18 சதவீதம் வாங்கியுள்ளனர். பெரும்பாலான யூனிட்டுகள் 10 லட்சம் மக்கள் தொகைக்கு மேல் கொண்ட ஐந்து பெரிய நகரங்களாகிய பம்பாய், கல்கத்தா, டில்லி, அஹமதாபாத், தமிழ்நாடு ஆகியவைகளில் விற்கப்பட்டுள்ளன. இந்த டிரஸ்டு ஆரம்பிக்கப்பட்ட முதலாண்டில் 1,35,000 விண்ணப்பங்களைப் பெற்றது. மொத்தம் ரூ. 19 கோடி தொகையை யூனிட் வாங்கியவர்களிடமிருந்து பெற்றது. ஆண்டு முடிவுறும் காலமாகிய ஜூன் 30, 1968-ல் விற்கப்பட்ட யூனிட்டுகளின் மொத்த மதிப்பு மட்டும் ரூ. 15·3 கோடியாகும். ஆனால், ஆரம்பத்திலிருந்து ஜூன் 1968 வரைக்கும் இந்தடிரஸ்டில் 22–லட்சம் பேர் யூனிட் வைத்திருந்தனர். தொகை ரூ. 41 கோடி இருந்தது.

இந்திய யூனிட் டிரஸ்டின் முதலீடு

முதலீடுகள்	ரூபாய் (கோடிகளில்)	சதவீதம்
சாதாரணப் பங்குகள்	18·0	38·3
உரிமைப் பங்குகள்	6·2	13·1
கடன் பத்திரங்கள்	16·0	34·0
பொதுக் கழகங்களின் ஒப்பந்தக் கடன் பத்திரங்கள்	0·9	1·9
அழைப்பு, தவணை வைப்புகள்	6·0	12·7
மொத்தம்	47·1	100·0

டிரஸ்டின் முதலீட்டுக் கொள்கையின் முக்கிய நோக்கம் நிலையான வருமானத்தைப் பெறுவதும் பாதுகாப்பான முதலீட்டை மேற்கொள்ளுவதுமே ஆகும். டிரஸ்டின் வருமானத்தில் 7–சதவீதம் என்ற வீதத்தில் யூனிட்வைத்திருப்பவர்களுக்கு 1967–68-ல் லாபம் பகிர்ந்தளிக்கப்பட்டது. யூனிட்டுகளின் விற்பனை விலை, மறு வாங்கல் (Repurchase) விலை டிரஸ்டின்

சட்டதிட்டத்தின்படி தீர்மானிக்கப்படுகிறது. இவ்விலைகளைத் தீர்மானிக்கும் போது தரகு, முத்திரை வரி போன்றவைகள் சேர்க்கப்படுகின்றன அல்லது கழிக்கப் படுகின்றன.

யூனிட்டுகளின் நன்மைகள்

யூனிட்டுகளில் முதலீடு செய்வது பாதுகாப்புடையதாகவும் இடர் குறைந்ததாகவும் உள்ளது. பல வகை கடன் பத்திரங்களின்மேல் இடர் பரந்து இருப்பதால், பொதுமக்கள் யூனிட்டுகளில் நம்பிக்கை வைக்க முடிகிறது. யூனிட் வாங்கியவர்களுக்கு நல்ல, நிலையான வருமானம் கிடைக்கிறது. மொத்த வருமானத்தில் 10–ல் 9 பகுதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. டிரஸ்டும் 6 சதவீதம் லாபம் பெற முடிகிறது. ரூ. 1000 வரைக்கும் பங்கு வாங்கும் ஒருவருக்கு வருமானவரி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. யூனிட்டுகள் எப்போதும் அதிக நீர்மை நிலைஉடையவைகளாய் உள்ளன. யூனிட் வாங்கியவர்கள் எப்போது வேண்டுமானாலும் அதை விற்றுப் பண மாக்கிக் கொள்ளலாம். டிரஸ்டு குறித்துள்ள விலைகளில் யூனிட்டுகளை டிரஸ்டிடமே கூட விற்று விடலாம்.

இந்திய யூனிட் டிரஸ்டு பெரிய நகரங்களில் வசிக்கும் நடுத்தர, குறைந்த வருமானம் பெறுவோரின் சேமிப்பைத் திரட்டுவதில் ஓரளவுவெற்றிகாண முடிந்தது. ஆனால், கிராமப்புறமக்களிடமிருந்து சேமிப்பைப் பெற இயலவில்லை. பொதுவாக, யூனிட்டுகளின் விற்பனை குறைந்து காணப்படுவதற்குச் சில காரணங்களும் உண்டு.

குறைந்த வளர்ச்சியின் காரணங்கள்

முதலாவதாக, யூனிட் டிரஸ்டிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகவும் குறைந்திருப்பதால் நடுத்தர குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்கள் சேமிப்புப் பணத்தை வங்கியல்லாத வேறு நிறுவனங்களுக்குக் கொடுத்து அதிக லாபத்தைப் பெறுகின்றனர். யூனிட் டிரஸ்டு கொடுக்கும் லாப ஈவு (Dividend) ஏறக்குறைய 7 சதவீதமாகும். ஆனால், வேறுவகை முதலீட்டால் அதிகலாபம் கிடைப்பதால் யூனிட் டிரஸ்டு மக்களின் சேமிப்பை இழக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது, ஏற்கனவே யூனிட்டுகளை வாங்கியவர்களும் அவற்றை விற்றுவிட்டு வேறுவகையில் முதலீட்டு லாப மடைகிறார்கள்.

இரண்டாவதாக, நடைமுறையில் யூனிட்டுகள் அதிக நீர்மை உடையவைகளாய் இல்லை. யூனிட் டிரஸ்டு உடனே யூனிட்டுகளைத் திரும்ப வாங்கிக் கொள்வதில்லை. யூனிட்டுகளைப் பணமாக மாற்ற நடைமுறையில் உடனே இயலாது. பொதுவாகப் பணத்தைத் திரும்பப்பெற ஒரு மாதகாலத்திற்கு மேல் ஆகிறது. ஒரு சிறந்த நடை முறைக்கொள்கையை ஏற்படுத்தினலன்றி இப்பிரச்சினையைத் தீர்க்க இயலாது. இந்திய யூனிட் டிரஸ்டின் முகவர்களாகிய பட்டியலிலுள்ள வங்கிகள், தபால் நிலையங்கள் போன்றவைகள் உண்மையான அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு பணத்தைத் திருப்பிக் கொடுக்க அனுமதிக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக, அறக்காப்பாளர்கள் சபையில் தற்போது இருக்கும் அங்கத்தினர்களுடன் யூனிட்தாரர்களின் வகுப்பிலிருந்து ஒருவரே இருவரே சேர்க்கப்பட்டால் பொதுமக்கள் யூனிட்டுகளில் முதலீடு செய்ய ஒரு தூண்டுதல் ஏற்படும்.

இறுதியாக, யூனிட்டிரஸ்டின் விளம்பர முறையும் பிரச்சாரமும் போதிய அளவு இல்லை. டிரஸ்டின் விளம்பரக் கொள்கை பல்வேறு துறைகளில் நன்ருக வழிகாட்டப்பட்டு நடத்தப்பட வேண்டும். முக்கியமான ஐந்து நகரங்களில் மட்டும் தான் இவைகள் விற்கப்பட்டிருப்பதால், கிராமங்களிலுள்ள நடுத்தர, குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும் இச் செய்தி கிட்டுமாறு செய்ய வேண்டும். யூனிட்டுகளை விற்பதற்காக முன்னேடி வங்கிகளின் 14,000 நிலையங்கள், அங்கீகாரம் பெற்ற தரகர்கள் 670 தனி நடுவர்கள் ஆகியோர்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

முடிவுரை : அதிக அளவு சேமிப்பைப் பெற, இந்திய யூனிட் டிரஸ்ட் முதலிடுவோரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் அளவுக்குப் பலரக யூனிட்டுகளை ஏற்படுத்த வேண்டும். விண்ணப்பங்களைப் பெற்று நற்சான்றிதழ்கள் அளிக்க ஏற்படும் காலதாமதத்தைக் குறைக்க முயற்சி எடுக்க வேண்டும். அப்போது ஏராளமான நடுத்தர, குறைந்த வருமான முடையவர்கள் தங்கள்சேமிப்பை யூனிட்டுகளில் முதலீடு செய்யவிரும்புவார்கள். இதனுல், இந்திய யூனிட் டிரஸ்ட் மேலும் சிறந்த முறையில் பணியாற்ற முடியும்.

தொழில் நிதிப் பிரச்சினை

தொழில் நிதி வசதியைப் பெருக்க ஏராளமான தொழில் நிதி நிறுவனங்களை ஏற்படுத்துவதால் மட்டும், தொழில் நிதிப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது. தொழில்களே தங்கள் திறமையால் தொழில் நிதியும் தொழில் வளர்ச்சியும் ஏற்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தொழில் நிறுவனங்களை மேம்படுத்துபவர்களின் (Promoters) சேவை பரந்த முறையில் அமைய வேண்டும். தொழில் நிறுவனங்களே தங்கள் நிதியைக் கொண்டே வளர்ச்சி பெற முயற்சி செய்யவேண்டும். இதற்குத் தொழில் நிறுவனங்களின் பொருளாதார வளமும் பலமும் இன்றியமையாததாகும். எதிர்கால லாப வாய்ப்பு, தொழிலதிபர்களின் எதிர் நோக்கு ஆகியவற்றைப் பொறுத்துத் தான் நிதி வசதி பெருகும். ஆனால், இவைகள் எல்லாமே இந்தியாவில் நிச்சயமற்றவைகளாய் இருப்பதால், தொழில் வளர்ச்சிப் பிரச்சினைகள் மேலோங்குகின்றன.

தீர்வுகள்: இப்பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியாவில் தேவையான அளவு நிதி உதவி அளிக்கத்தக்க முதல் அங்காடி (Capital Market)யின் சீரமைப்பு மிகவும் இன்றிமையாததாகும். ஒருங்கமைக்கப்பட்ட சக்தி வாய்ந்த முதலங்காடியால் தான் தனிமனிதர் சேமிப்பைச் சேகரித்து ஒருங்கிணைக்க இயலும். மூன்றும் திட்ட காலத்தில், கால நிதியளிக்கும் நிறுவனங்களால் மொத்தம் ரூ 306 கோடி தொழில் நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. இவ்வளவு கடன் உதவிகளைத் தொழில் நிதிக் கழகங்களும், வங்கியும் மேற்கொள்ளக் காரணம் இந்திய முதலங்காடி இன்னும் வளர்ச்சியடையாமல் இருப்பதேயாகும். முதலங்காடி மந்த நிலையில் இருப்பதால் தொழில் நிதி நிறுவனங்கள் தங்கள் நிதி வளங்களைத் தொடர்ந்து முதலீடு செய்ய இயலவில்லை.

இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு இன்றிமையாதது ஆரம்ப முதலாகும் (Equity Capital). ஒரு தொழிலின் ஆரம்பக் கட்டத்தில் இடர் இருப்பதால் ஆரம்ப முதலை, பங்குகளை விற்றுப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கிறது. உண்மையில் கடன் பத்திரங்களின் மூலம் பெற்ற முதல் 1964–ல் 11 கோடியிலிருந்து 1965-ல் ரூ. 21 கோடியாக உயர்ந்தது. தொழில் இயந்திரங்களின் சக்கரங்களைச் சுழற்றிவைக்கத் தேவைப்படும் எண்ணெயாக அமைவது தொழில் நிதியாகும். தங்களுக்குத் தேவையான

ஆயுள் இரத்தமாகிய நிதியை தொழில்கள் தாங்களே தங்கள் முயற்சியால் ஆக்க முடிந்தாலொழிய அவைகள் உயிர் பிழைப்பது கடினமாகி விடும்.

இறுதியாக, தொழில் நிதிப் பிரச்சினைக்குத் தீர்வு காண பொதுமக்களின் உண்மை சேமிப்பு பெருகி, தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரண்டிற்கும் நிதி கிடைக்கச் செய்ய வேண்டும். இந்தியத் தொழில்களின் வளர்ச்சி, மக்களின் சேமிப்பு மனப் பாங்கைப் பொறுத்ததாய் அமைகிறது. மேலும், நிதிப் பிரச்சினைதீர இந்திய முதலங்காடி புத்துயிர் பெற்று, புது பலத்துடன் வளர வேண்டும்.

மூன்றும் திட்ட காலத்தில் நிதி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவியும் அளிக்கப்பட்ட நிதி வசதியும்.

(ரூபாய் கோடிகளில்)

நிறுவனங்கள்	மொத்த நிதி உதவி	
	அங்கீகரிக்கப்பட்டது	கொடுக்கப்பட்டது
தொழில் வளர்ச்சி வங்கி	125·0	79·4
தொழில் நிதிக் கழகம்	151·0	90·4
தொழில் கடன், முதலீட்டுக் கழகம்	106·1	65·5
மாநில நிதிக் கழகங்கள்	99·2	67·0
சிறுதொழில் வளர்ச்சிக் கழகங்கள்	12·1	5·6
இந்திய யூனிட் டிரஸ்டு	11·1	9·5
ஆயுள் காப்பீட்டுக் கழகம்	68·9	46·5
மூன்றும் திட்ட கால நிதி உதவியின் மொத்தம்	573·4	363·9
இரண்டாம் திட்ட கால நிதி உதவியின் மொத்தம்	121·0	76·4

ஆதாரம் :—(1) தொழில் வளர்ச்சி வங்கியின் ஆண்டு அறிக்கைகள்

(2) ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் அறிக்கை.

BIBLIOGRAPHY

1. Agarwal, A. N. and Singh, S. O. : The Economics of Under Development.

2. Higgins, B : Economics of Development.

3. Lewis, W. A. : Theory of Economic Growth.

4. Hirshman, A.O: The Strategy of Economic Development.

5. Rostow, W. W. : Process of Economic Growth.

6. Kindleberger, C. P. : Economic Development.

7. Nurkse, R: Problems of Capital Formation in under developed Countries.

8. Reddaway, W. B : The Development of the Indian Economy.

9. Meir and Baldwin : Economic Development.

10. Planning Commission : The First, Second and Third Five Year Plans.

11. Fourth Five Year Plan : A Draft Outline.

12. First Report of the National Income Committee—1951.

13. Final Report of the National Income Committee—1954.

14. Alak Ghosh: Indian Economy.

15. Commerce : Annual Numbers—1960, 1968.

16. Agarwal : Indian Agriculture and its Problems.

17. Dantwala, M.L: India's Food Problem.

18. Battacharjee: Studies in Indian Agricultural Economics.

19. Khusro and Agarwal : Problems of Co-operative Farming in India.

20. Baljit Singh : Next Step in Village India.

21. Reserve Bank of India : Report on Currency and Finance—67-68, 68-69.

22. Krishnamachari, V. T : Community Development in India.

23. Rajeshwar Dayal : Community Development, Panchayati Raj and Sahkari Samaj.

24. Dutt and Sundharam : Indian Economy.

25. Kuchal, S. C: Industrial Economy of India.

26. Coale, A. J. and Hoover, E. M : Population Growth and Economic Development in Low Income Countries.

27. Agarwala, S. N : Indian's Po ulation.

கலைச்சொல் அகராதி

A

Abolishion of Zamindars	— ஜமீன்தாரி ஒழிப்பு
Abortion	— கருச்சிதைவு
Absentee land lord	— தலத்திலில்லா நிலக்கிழார்
Accelerated growth	— அதிவேக வளர்ச்சி
Accumulation of Capital	— முதல் திரட்சி
Age Distribution	— வயது பாகுபாடு
Agricultural Credit Societies	— வேளாண்மைக் கடன் சங்கங்கள்
Agricultural Depression	— வேளாண்மை மந்தம்
Agricultural Finance	— வேளாண்மை நிதி
Agricultural Holdings	— வேளாண்மை நில உடைமைகள்
Agricultural Marketing	— வேளாண்மை விற்பனை
Agricultural Non-credit Societies	— வேளாண்மை கடனல்லாத வேறு சங்கங்கள்
Agricultural Prices Commission	— வேளாண்மைப் பொருள் விலைகள் குழு
Agricultural Targets	— வேளாண்மை இலக்குகள்
Agro-Industries	— வேளாண்மை சார்ந்த தொழில்கள்
Agro-Industries Corporation	— வேளாண்மைத் தொழில் கழகம்
All India Handloom Board	— அனைத்திந்தியக் கைத்தறி வாரியம்
All India Rural Credit Survey	— அனைத்திந்தியக் கிராமக்கடன் ஆய்வு
Allocation of resources	— சாதனப் பங்கீடு
Applied Economic Research	— நடைமுறைப் பொருளாதார ஆய்வு

Arithmetical Progression	—	கூட்டெண் விகிதம்
Artisan	—	கைவினைஞன்
Authorised Capital	—	அனுமதிக்கப்பட்ட மூலதனம்

B

Backward Economy	—	பிற்பட்ட பொருளாதாரம்
Backlog of unemployment	—	வேலையின்மையின் எச்சநிலை
Balanced Growth	—	சமசீர் வளர்ச்சி
Balance of Payments, unfavourable	—	பாதக வாணிக செலுத்துநிலை
Bankrate	—	(மைய) வங்கிவீதம்
Base Prices	—	அடிப்படை ஆண்டு விலைகள்
Base year	—	அடிப்படை ஆண்டு
Big Push theory	—	பெரும் எழுச்சிக் கோட்பாடு
Birth Control	—	கருத்தடை
Birth rate	—	பிறப்பு வீதம்
Blackmarketing	—	கள்ளச்சந்தையில் விற்றல்
Block Development	—	வட்டார வளர்ச்சி
Budget	—	வரவு செலவுத் திட்டம்
Buffer Stock	—	சேர்த்து வைக்கப்பட்ட இருப்புச் சரக்கு.
By-products	—	துணைப் பொருள்கள்

C

Called up Capital	—	அழைக்கப்பட்ட மூலதனம்
Capital	—	முதல், மூலதனம்
Capital Deficiency	—	முதல் பற்றாக்குறை
Capital, subscribed	—	ஒப்பிய மூலதனம்
Capital, paid up	—	செலுத்தப்பட்ட மூலதனம்
Capital formation	—	முதலாக்கம், முதல்சேர்க்கை.
Capitalism	—	முதலாளித்துவம்
Capital goods	—	முதல் கருவிப் பொருள்கள்
Capital intensive technique	—	முதல் செறிவு முறை
Capital human	—	மனித முதல்
Capital Market	—	முதலங்காடி
Capital, private	—	தனியார் முதல்
Capital, real	—	உண்மை முதல்
Capital, social	—	சமுதாய முதல்

Capital output ratio	— முதல் உற்பத்தி விகிதம்
Cash crops	— வர்த்தகப் பயிர்கள்
Ceiling on land holdings	— நில உச்சவரம்பு
Central Statistical Organisation	— மையப்புள்ளிவிவர நிறுவனம்
Cerials	— தானிய வகைகள்
Chemical Fertilisers	— ரசாயன உரங்கள்
Chemicalisation	— ரசாயன உரமயம்
Commerce	— வாணிகம்
Commercial Banks	— வணிக வங்கிகள்
Communication	— தொடர்பு
Communism	— கம்யூனிசம், பொது உடைமை
Community Development Programme	— சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்
Community Project Administration	— சமுதாய அமைப்பு நிர்வாகம்
Compensation	— இழப்பீட்டுத் தொகை
Complementarity	— நிறைவுப்பாடு
Complementary Goods	— நிறைவு செய் பொருள்கள்
Complementarity of Demand	— நிறைவு செய்கின்ற தேவை
Compulsory Procurement	— கட்டாயக் கொள்முதல்
Conceptual Difficulties	— கருத்துவழி குறைபாடுகள்
Concentration of Economic Power	— பொருளாதார சக்தி குவிதல்
Consolidation of Holdings	— நில உடைமை ஒருங்கிணைப்பு
Contraceptives	— கருத்தடைக் கருவிகள்
Co-operation	— கூட்டுறவு
Co-operative Central Bank	— கூட்டுறவு மைய வங்கி
Co-operative Credit Society	— கூட்டுறவுக் கடன் சங்கம்
Co-operative Farming	— கூட்டுறவுப் பண்ணை
Co-operative Movement	— கூட்டுறவு இயக்கம்
Co-operative Processing	— கூட்டுறவு சுத்திகரிப்பு
Collective Farming	— கூட்டுப் பண்ணை
'Core' Industries	— பிரதானத் தொழில்கள்
Cost of living	— வாழ்க்கைச் செலவு
Cottage Industries	— குடிசைத் தொழில்கள்
Cotton Textile Industry	— பருத்தி நெசவுத் தொழில்
Current Prices	— நடப்பு விலைகள்

D

Data — அடிவிவரங்கள்
Death rate — இறப்பு வீதம்
Debentures — கடன் பத்திரங்கள்
Decontrol — கட்டுப்பாடு நீக்கம்
Decentralisation of Industries — தொழில்கள் பரவலாக்கல்
Deficit — பற்றுக்குறை
Deficit Economy — பற்றுக் குறைப் பொருளாதாரம்
Demographic Transition — மக்கள் தொகை மாற்றம்
Demonstration Effect — பரிசோதனை விளைவு
Democratic Decentralisation — பரவலான மக்களாட்சி
Density of Population — மக்கள் செறிவு
Development Commissioner — வளர்ச்சி ஆணையாளர்
Developing Economy — வளர்கின்ற பொருளாதாரம்
Directly Productive Activities — நேரடி ஆக்க நடவடிக்கைகள்
Discriminating Protection — தேர்ந்தளி தொழிற்காப்பு
Diseconomics — சிக்கனக் கேடுகள்
Distribution of Income — வருமானப் பங்கீடு
Disguised unemployment — உரு மறைந்த வேலையின்மை
Dividend — லாப ஈவு
Double cropping — இரு போக சாகுபடி
Dualistic economy — இரட்டைப் பொருளாதாரம்

E

Economic Development — பொருளாதார வளர்ச்சி
Economic Freedom — பொருளாதார சுதந்திரம்
Economic of scale — உற்பத்தி அளவுச் சிக்கனங்கள்
Economic inequality — பொருளாதார ஏற்றத்தாழ்வு
Employment — வேலை, வேலை வாய்ப்பு
Employment, full — முழு வேலை நிலை, நிறை வேலை வாய்ப்பு
Emigration — வெளிநாடுகளில் குடியேறுதல்
Empirical data — அனுபவபூர்வமான விவரங்கள்

Entreprencurial ability	—	தொழிலதிபரின் திறன்
Equity Capital	—	ஆரம்ப முதல்
Expectation of life	—	சராசரி ஆயுட்காலம்
Expenditure Method	—	செலவு முறை
Exploitation	—	சுரண்டல்
Exploitation of Agricultural workers	—	வேளாண்மைத் தொழிலாளர்கள் சுரண்டப்படல்
Extensive Cultivation	—	பரந்த வேளாண்மை முறை, அகல உழும் முறை
External Economics	—	புறச் சிக்கனங்கள்

F

Fair Price Shops	—	நியாய விலைக் கடைகள்
Family-holding	—	ஒரு குடும்பத்தினர் நில உடைமை
Family Planning Clinics	—	குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள்
Famine Enquiry Commission	—	பஞ்ச விசாரணைக் குழு
Farm	—	பண்ணை
Farming, mixed	—	கலப்புப் பண்ணை
Fertility rates	—	பிறப்பு வீதம்
Financial Stability	—	நிதித்துறை சமநிலை
Fiscal Policy	—	நிதிவழிக் கொள்கை
Fixed Capital	—	நிரந்தர முதல்
Floating of loans	—	கடன் எழுப்புதல்
Food Corporation of India	—	இந்திய உணவு கார்ப்பரேஷன்
Food Crops	—	உணவுப் பயிர்கள்
Food-grains Enquiry Committee	—	உணவு தானிய விசாரணைக் குழு
Food Zones	—	உணவு மண்டலங்கள்
Ford Foundation Team	—	போர்டு நிறுவன குழு
Foreign Collaboration	—	வெளிநாட்டவர் ஒத்துழைப்பு
Foreign Trade	—	வெளி நாட்டு வர்த்தகம்

G

Geometrical Progression	—	பெருக்கல் விகிதம்
Gestation period	—	முதலீட்டுக்கும் உற்பத்திக்கும் இடைப்பட்ட காலம்

Green Revolution — பசுமைப் புரட்சி
Gross National Product — மொத்த தேசிய உற்பத்தி
Grow Mord Food Campaign — அதிக உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டம்
Growth of population — மக்கள் பெருக்கம்
Guarenteed prices — உறுதி செய்யப்பட்டவிலைகள்

H

Handicraft — கைவினைத் தொழில்
Hoarding of foodgrains — உணவு தானியங்களைப் பதுக்கல்
Horizontal combination — படுக்கிடைத் தொகுப்பு
High-yielding varieties of seeds — அதிக விளைச்சல் ரக விதைகள்
Human Capital — மனித மூலதனம்

I

Illiteracy — கல்வியறிவின்மை
Immigration — உள்நாட்டுக் குடிபெயர்ச்சி
Immobile — பெயர்ச்சியின்மை
Implementation — அமுலாக்கல்
Improved seeds — சீரான விதைகள்
Improvident maternity — மூன்றுக்கு மேல் குழந்தை பிறப்பு
Incentive — ஊக்கம், தூண்டுகோல்
Income Method — வருவாய் முறை
Index Number — குறியீட்டு எண்
Index of National Income — தேசிய வருமானக் குறியீட்டு எண்
Indivisibility of Demand — பல்நோக்கு தேவை, பூரணத் தேவை
Inducement to invest — முதலீடு செய்யத் தூண்டுதல்
Industrial Co-operatives — தொழில் கூட்டுறவுச்சங்கங்கள்
Industrial Credit and Investment Corporation of India — இந்தியத் தொழிற்கடன், முதலீட்டுக் கழகம்
Industrial Estate — தொழிற்பேட்டை
Industrial Extension Service — தொழில் விரிவாக்கப் பணி

Industrial Finance Corporation	—	தொழில் நிதிக் கழகம்
Industrial Policy Resolution	—	தொழிற்கொள்கைத் தீர்மானம்
Industrialisation	—	தொழில்மயமாக்கல்
Inequality of Income	—	வருமான ஏற்றத்தாழ்வு
Infant Mortality	—	குழந்தை இறப்பு
Infra-structure	—	மனித நலனை மேம்படுத்தும் துறைகள்
Inputs	—	உள்ளிடுகள்
Iron and Steel Industry	—	இரும்பு எஃகுத் தொழில்
Insecticides	—	கிருமிநாசினிகள்
Institutional factors	—	நிறுவன முறைக் காரணிகள்
Integrated Scheme of Rural Credit	—	ஒருங்கிணைந்த கிராமக்கடன் திட்டம்
Intensive Cultivation	—	செறிவு சாகுபடி முறை, ஆழ உழும் முறை
Intensive Agricultural District Programme	—	மாவட்ட தீவிர வேளாண்மைத் திட்டம்
Intensive Family Planning	—	தீவிர குடும்ப நலத் திட்டம்
Inter-locking of Directors	—	தொழில்களில் இயக்குநர்கள் ஒருங்கிணைதல்
Intermediaries	—	நடுவர்கள்
Intermediate Goods	—	நடுத்தர நிலைப் பொருள்கள், இடைநிலைப் பண்டங்கள்
International Perspective Planning Team	—	பன்னாட்டு எதிர்நோக்குத் திட்டக் குழு
Inventory Method	—	சரக்கு உற்பத்திப் பட்டியல் முறை

J

Jagirdari System	—	ஜாகிர்தாரி முறை
Joint Co-operatives	—	இணை கூட்டுறவுச் சங்கங்கள்
Joint Cultivation	—	இணைந்த சாகுபடி
Joint Family System	—	கூட்டுக் குடும்ப முறை
Joint Stock Company	—	கூட்டுப் பங்கு நிறுவனம்
Jute Industry	—	சணல் தொழில்

L

Labour Intensive Technique	—	உழைப்புச் செறிவு முறை
Land Alienation Act	—	நிலப் பராதீனச் சட்டம்

Laissez Faire — தலையிடாமை
Land Holdings — நில உடைமைகள்
Land Improvement Act — நிலச் சீரமைப்புச்சட்டம்
Land Mortgage Bank — நில அடமான வங்கி
Land Reclamation — நிலச் சீரமைப்பு
Land Reforms — நிலச் சீர்திருத்தங்கள்
Land Tenure — நில உரிமை முறை
Large-Scale Industries — பேரளவுத் தொழில்கள்
Licence — உரிமம்
Limitted Liability — வரையறுக்கப்பட்ட பொறுப்பு
Literacy Distribution — கல்வி கற்றோர் பாகுபாடு
Live-Stock — கால்நடைகள்
Local Authorities — உள்ளூர் அதிகாரிகள்
Loop — லூப் வளையம்
Lopsided growth — ஒருதலைப்பட்ட வளர்ச்சி

M

Mahalwari Settlement — மஹல்வாரி நிலவரி முறை
Malnutrition — சத்து குறைந்த உணவு
Managing Agency System — பதிலாள் நிருவக முறை
Marketing Co-operatives — விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்
Market Imperfections — அங்காடிச் சீர்கேடுகள்
Marginal Productivity — இறுதிநிலை உற்பத்தித்திறன்
Marketable Surplus — விற்பனை எச்சம்
Mechanisation — எந்திரமயம்
Mixed Economy — கூட்டுப் பொருளாதாரம்
Minor Irrigation Programmes — சிறுநீர்ப் பாசனத்திட்டங்கள்
Modernisation — நவீனப்படுத்தல்
Money Lender — லேவா தேவிக்காரர்
Money Market — பண அங்காடி
Monetary Policy — பணவழிக் கொள்கை
Multi-Purpose Programme — பல் நோக்குத் திட்டங்கள்

N

National Co-operative Development and Warehousing Board — தேசிய கூட்டுறவு வளர்ச்சி, கிட்டங்கி நிறுவனம்
National Extension Services — தேசிய விரிவாக்கப் பணிகள்
National Food Policy — தேசிய உணவுக் கொள்கை

National DevelopmentCouncil— தேசிய பொருளாதார வளர்ச்சி சபை
National Income Committee — தேசிய வருவாய்க் குழு
National Small Industries Corporation — தேசிய சிறு தொழில்கள் கழகம்
National Sample Survey — தேசிய மாதிரி கணக்கீடு
Net National Product — நிகர தேசிய உற்பத்தி
Net Output Method — நிகர உற்பத்தி முறை
New Strategy — புதுமை உற்பத்திக் கொள்கை
Non-Food Crops — உணவு அல்லாத வேறு பயிர்கள்
Non-Monetised Sector — கட்டுக்கோப்பற்ற பொருளாதாரத்துறை

O

Objective — குறிக்கோள்; நோக்கம்
Occupational Distribution — தொழில் பாகுபாடு
Optimum Population — உத்தமஅளவு மக்கள்தொகை
Organisational Factors — அமைப்பு முறைக் காரணிகள்
Output — உற்பத்தி
Overpopulation — மக்கள்தொகை மிகுதி

P

Package Programmes — தீவிர சாகுபடித் திட்டங்கள்
Paid-up Capital — செலுத்தப்பட்ட முதல்
Panchayati Raj — பஞ்சாயத்து ஆட்சி
Percapita Consumption — சராசரி தனிநபர் நுகர்வு
Percapita Income — தலா வருவாய்
Permanent Settlement — நிரந்தர நிலவரி வசூல்முறை
Planning from Above — மேல் மட்ட திட்டம்
Planning from Below — கீழ்மட்ட திட்டம்
Plant Protection — பயிர் பாதுகாப்பு
P. L. 480 Food Imports — பொதுக்கடன் 480-ன் ஒப்பந்தப்படி உணவு இறக்குமதி
Population Census — மக்கள் தொகைக் கணக்கீடு
Population Explosion — மக்கள் தொகை எழுச்சி
Population Growth — மக்கள் தொகை வளர்ச்சி
Poverty Line — ஏழ்மை எல்லை
Poultry-Farming — கோழிப் பண்ணை
Pressure of Population — மக்கள் தொகை அழுத்தம்
Price Control — விலைக்கட்டுப்பாடு
Price—Spread — விலை வேறுபாடு
Primary — முதன்மையான
Primary Credit Society — முதல்நிலை கடன் சங்கம்
Primary Industries — மூலத் தொழில்கள்

Primary Occupation — முதல் நிலைத் தொழில்
Primary Production — முதல்நிலை உற்பத்தி; மூலப் பொருள் உற்பத்தி
Private Corporate Sector — தனியார் தொழில் துறை
Processing — பக்குவப்படுத்தல்
Product Reservation — உற்பத்திப் பொருள் ஒதுக்கீடு
Productivity Per Acre — ஓர் ஏக்கர் நில உற்பத்தித் திறன்
Production Targets — உற்பத்தி இலக்குகள்.
Productivity per Worker — ஓர் உழைப்பாளி உற்பத்தித் திறன்
Profession — சுய தொழில்; சுயபணிகள்
Profiteering — கொள்ளை விலையில் விற்றல்
Progress — முன்னேற்றம்
Public Administration — பொது நிர்வாகம்
Public Sector Projects — பொதுத் துறைத் திட்டங்கள்
Pulses — பருப்பு வகைகள்
Purchasing power — வாங்கும் திறன்

R

Raw Materials — மூலப் பொருள்கள்
Rehabilisation Grants — புனரமைப்பு மானியங்கள்
Regulated Markets — ஒழுங்குபடுத்தப்பட்ட அங்காடிகள்
Rental Incomes — நிலவார வருமானங்கள்
Reserve Bank of India — இந்திய ரிசர்வ் வங்கி
Reserve Fund — ஒதுக்கு நிதி, இருப்புநிதி
Retail Price — சில்லரை விலை
Right of Resumption — நிலக்கிழார் நிலத்தைத் திரும்பப் பெறும் உரிமை
Rotation of Crops — மாற்றுப் பயிர் முறை
Rural Credit — கிராமக் கடன்
Ruralisation — கிராம மயம்
Rural Indebtedness — கிராமக்கடன்
Rural Vs. Urban Distribution — கிராம-நகர மக்கள் பாகுபாடு
Ryotwari System — ரயத்து வாரி முறை

S

Saving—Income Ratio — சேமிப்பு வருவாய் விகிதம்
Savings-Investment Ratio — சேமிப்பு முதலீடு விகிதம்
Security of Tenure — குத்தகைப் பாதுகாப்பு
Secondary Occupation — இரண்டாம் நிலைத் தொழில்
Selective Credit Controls — தேர்ந்த கடன் கட்டுப்பாடுகள்

Self-Propelling	—	சுய இயக்க முள்ள
Self-Sufficiency	—	தன்னிறைவு
Self-Sustaining Economy	—	சுய வலிமையுள்ள பொருளாதாரம்
Service Co-operatives	—	பணி கூட்டுறவுச் சங்கங்கள்
Service Institutes	—	பணி நிலையங்கள்
Sex Ratio	—	ஆண் பெண் விகிதம்
Simultaniety of Investment	—	ஒரே சமய முதலீடுகள்
Small-Scale Industries	—	சிற்றளவுத் தொழில்கள்
Socialisation	—	சமூக மயம்
Social Justice	—	சமூக நீதி
Social Overhead Capital	—	சமூக நலனை மேம்படுத்தும் மூலதனம்
Soil Conservation	—	நிலப்பாதுகாப்பு
Speculation	—	யூக வணிகம்
Standard of Living	—	வாழ்க்கைத்தரம்
State Bank of India	—	இந்திய ஸ்டேட் வங்கி
Standard Acre	—	நிலையான ஏக்கர் நிலம்
Stagnation in Exports	—	ஏற்றுமதியில் தேக்கம்
State Co-operative Bank	—	மாநிலக் கூட்டுறவு வங்கி
State Finance Corporation	—	மாநில நிதிக்கழகம்
State Trading Corporation	—	அரசு வர்த்தக கழகம்,
Statistical Difficulties	—	புள்ளிவிவரக் குறைபாடுகள்
Stabilisation of Prices	—	விலைகளை நிலை பேறுக்கல்
Sterilisation	—	கருத்தடை அறுவை சிகிச்சை
Subsidy	—	உதவிக் கொடை
Subsidriary Industries	—	துணைத் தொழில்கள்
Subsistence Secter	—	உயிர் வாழ்வுத் துறை
Sugar Industry	—	சர்க்கரைத் தொழில்

T

Tariff	—	சுங்க வரி
Technological Factors	—	தொழில்நுட்ப வழிக் காரணிகள்
Tenancy Legislation	—	நிலக்குத்தகைச் சீரமைப்புச் சட்டங்கள்
Tenants	—	குத்தகை தாரர்கள்
Tenure	—	குத்தகைக் காலம்

Tertiary Occupation — மூன்றும் நிலைத் தொழிலும் பணிகளும்
Trade — வர்த்தகம்
Transport and Communication — போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்
Tubectomy — பெண் அறுவை கருத்தடை சிகிச்சை

U

Unbalanced Growth — சமசீரில்லா வளர்ச்சி
Underemployment — வேலைக் குறைவு
Underdeveloped Economy — வளர்ச்சி குறைந்த பொருளாதாரம்
Underdevelopment Equilebrium — வளர்ச்சி குறைந்த சமநிலை
Underpopulation — குறைந்த மக்கள் தொகை
Underwriting of Shares — பங்குகளுக்குக் காப்புறுதி அளித்தல்
Unemployment — வேலையின்மை
Unlimitted Liability — வரையறுக்கப்படாத பொறுப்பு
Unorganised Sector — அமைப்பற்ற துறை
Urbanisation — நகரமயம்
Universal Marriage — கட்டாயத் திருமண முறை

V

Vasectomy — ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை
Viable Societies — வலிமை வாய்ந்த சங்கங்கள்
Vicious Circle of poverty — வறுமையின் நச்சு வட்டம்
Vocational Education — தொழில் முறைக் கல்வி

W

Wholesale Price — மொத்த விலை
Wholesaler — மொத்த விற்பனையாளர்
Working Capital — நடப்பு மூலதனம் நடை முறை முதல்

Z

Zamindary System — ஜமீன்தாரி முறை